ஓம் குஹப்ரஹ்மணே நம :

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத வைதிகசைவ சித்தாந்த ஞானபானு

பாம்பன் :

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

திருப்பா வென்னு மூலமும்,
திட்ப மென்னு முரையும்

முதல் புத்தகம்

மகாதேஜோ மண்டல வெளியீடு
திருவான்மியூர், சென்னை - 600 041.

2024

நூற்சிறப்பு

நேரிசை வெண்பா

எழுத்திறைபோ லக்கலந்தெல் லாமியக்கா நிற்கு
முழுத்தலைவன் மார்க்க முழுதும் – வழுத்திக்
கருப்பா சயவல்ல கண்டக்கைப் போட்டுந்
திருப்பா வெனுமதுரத் தேன்.

முதற் பதிப்பு	-	1899	- 500 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு	-	1920	- 150 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	-	1974	- 500 பிரதிகள்
நான்காம் பதிப்பு	-	2000	= 1000 பிரதிகள்
ஐந்தாம் பதிப்பு	-	2017	- 300 பிரதிகள்
ஆறாம் பதிப்பு	-	2023	- 300 பிரதிகள்

விலை : ரூ. 250/-

அச்சிட்டோர் : அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,
9, அய்யா தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014
போன் : 9884076145 / 148 E-mail : deepblues05@gmail.com

முதற்புத்தகம்

இதனுளடங்கியவை

எண்.	விடயம்		பக்கம்
1.	நூற்சிறப்பு – வெண்பா	...	(ii)
2.	நூன்முகம்	...	1
3.	திருப்பாமூலமுந் திட்பமென்னுமுரையும்	...	20
4.	வேதாந்த சித்தாந்த சமரசபடம்	...	104
5.	திருப்பத்தட்டவணை	...	(iii)
6.	பதிப்புரை	...	(iv)
7.	நூற்சிறப்பு முன்னுரை	...	(v)
8.	அணிந்துரை	...	(xii)
9.	திருப்பாட்டு முதற்குறிப்பகராதி	...	(xv)
10.	மேற்கோட் பனுவல்களின் பெயர்கள்	...	(xvi)
11.	விடயங்களும் பக்கங்களும்	...	(xxi)

திருப்பத்தட்டவணை

திருப்பத் தெண்.	திருப்பத்தின் பெயர்		பக்கம்
	கடவுள் வணக்கம்	...	20
1.	கருணைக்குகப்பிரமம்	...	99
2.	ஆனந்த பூர்த்தியுரம்	...	124
3.	திவ்விய சுப்பிரமணியம்	...	163
4.	பரிபூரணானந்தம்	...	201

குருவருள்

4-ம் பதிப்பின் பதிப்புரை

திருப்பா எனும் அதியற்புத ஞான சாத்திரத்தை சுத்தாத் வைத வைதிக சைவ சித்தாந்த ஞான பானுவாம் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தேனீ பல மலர்களினின்றும் மதுரத் தேனை சேகரிப்பது போல வேதம், ஆகமம், சைவத் திருமுறைகள், ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் போன்ற அருள் நெறிச் செல்வர்கள் ஆக்கிய ஞான சாத்திரங்கள் அனைத்தையும் துல்லியமாக ஆராய்ந்து, சைவ நெறியார்கள் கொள்ள வேண்டியது சுத்த அத்வைத வைதிக சைவ சித்தாந்த மார்க்கம் தான் என்றும், ஏக தெய்வ - ஏக மூர்த்த வழிபாடே இதயார்ச்சனைக்கு உகந்தது என்றும், அறுமுகச்சிவ வழிபாடே மிகச் சிறந்த முறையென்றும், இவ்வழிச் செல்லோர் சிவசாயுச்சிய பதவியை இப்பிறவியிலேயே எளிதில் எய்தலாம் என்றும் சாதித்துள்ளார்கள்.

தமிழில் இந்நூல் போன்ற சைவ சாத்திர நூல் ஒன்று உலகம் தோன்றிய நாள் முதல் இதுகாறும் ஆக்கப் பட்டதில்லை எனலாம். ஸ்ரீமத் சுவாமிகள் அருளிச்செய்த அனைத்து நூல்களும் வேதமேயாகும். பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம் ஆகிய நூல்களுக்கு பிறரைக் கொண்டு கருத்துரை பெற்று, விசேடவிளக்க உரை மட்டுமே தாங்கள் அருளிய ஸ்ரீமத் சுவாமிகள் இந்நூலின் முதல் **43** பாக்களுக்கு தாங்களே விசேடஉரையுடன் கருத்துரையும் வேதத் தமிழால் திட்பம் என்னும் பெயரில் அருளியது இந்நூலின் பெருமையை எடுத்துக் காட்டும். இது முதற்புத்தகமாக தனியே அச்சிடப்பட்டுள்ளது. மொத்தம் **1100** பாக்களைக் கொண்டது இந்நூல். மிகுதியுள்ள **1057** பாக்களுக்கு உரை இல்லாதது பெரும் குறையாக இருந்தது. இந்நூலின் தத்துவங்களையும், பொருளையும் உரையின்றிப் புரிந்து கொள்வது இயலாத ஒன்றாகும். நமது சுவாமிகள் மீது மிகவும் ஈடுபாடு கொண்டொழுகும் மயவிஞ்ஞான கலாநிதி பேராசிரியர் டாக்டர் சபாரத்தினம் அவர்கள் இந்த **1057** பாக்களுக்கும் மிக அழகிய முறையில் சற்குரு மானச சௌரப மாருதம் என்னும் பெயரில் உரை எழுதி வழங்கியுள்ளார்கள். இது மாபெரும் சிவ புண்ணியமாகும். டெல்லி அன்பர் டாக்டர் M. குப்புசாமி அவர்கள் அணிந்துரை வழங்கிஉள்ளார்கள்.

திருப்பரங்கிரி - பாம்பன் நகர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் ஆலய கர்த்தா ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திர சுவாமிகள் இந்த ஞான நூலினை வெளியிடும் பணியில் பெரும் பங்கு கொண்டுள்ளாகள். மற்றும் இந்நூல் வெளியீட்டில் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பேரன்பர்கள் திருவாளர்கள், சத்குரு. V. திருஞானம், அவரது சோதரர்கள், ப. வேணுகோபாலன், த. இராஜரத்தினம், G. ஜானகிராமன், A. கதிர்வேலு ஆகியோர்களுக்கும் குருவருளும் திருவருளும் சித்திக்க விழைகிறேன்.

ஆத்திக அன்பர்களும், அறுமுகப்பரமன் பக்தர்களும், ஸ்ரீமத்சுவாமிகள் அடியார்களும் இந்நூலின் பெருமையுணர்ந்து பக்தியோடு பூசித்துப் பொருள் உணர்ந்து படித்துப் பாரெல்லாம் போற்ற வாழ்ந்து பர முத்தி பெற்றுய்வார்களாக.

குமர குரு இல்லம்
27, புஷ்பாவதி அம்மாள் வீதி
சென்னை - 600 033.
போன் : 4893298

அடியார்க்கடியேன்
N. ஜெயராமன்

குருவருள்

திருப்பா

நூற்சிறப்பு முன்னுரை

மயவிஞ்ஞான கலாநிதி

பேராசிரியர். Dr. S.P. சபாரத்தினம்

இயக்குநர். இந்தியப்பண்பாட்டு ஆய்வுநிறுவனம். சென்னை.

உயர்ச்சியும் தனிச்சிறப்பும் வாய்ந்த ஆன்மிக விஞ்ஞானம். திருஞானசம்பந்தப் பெருமானால் 'திருநெறி' எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெறி எனப்படும் ஓர் உயர்தனிச் செந்நெறி, ஆகமசித்தாந்த நெறியே. ஆகம சித்தாந்தம் என்பதும் சைவசித்தாந்தம் என்பதும் ஒன்றேதான் எனினும் 'சைவசித்தாந்தம்' இன்றைய காலகட்டத்தில் பல பேத உணர்வுகளுக்கு இடம் கொடுத்துத் திசைமாறிச் சென்றுவிட்ட காரணத்தால், விஞ்ஞானக் கொள்கை சிதைவுறாமல் பொலிவும் மலர்ச்சியும் பொருந்தப் பெற்றதாக உள்ள தனித்தமிழ்மரபை நான் ஆகம சித்தாந்தம் என்ற பெயராலேயே குறிப்பிட விரும்புகிறேன். ஆகமசித்தாந்த நுட்பங்கள் அனைத்தையும் சித்தாந்த சாத்திரங்கள் முழுமையாக வெளிப் படுத்துகின்றன என்று கூறுவதற்கில்லை. இக்குறையை பூரணமாக நிவர்த்தி செய்த சிவபுண்ணியப் பெருமையும் சீர்த்தியும் சற்குரு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளையே சேரும். சுவாமிகள் அருளியுள்ள பரிபூரணானந்த போதம், தகராலயரகசியம், திருப்பா என்னும் மூன்று திருமுறைகளும் இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கும் சைவ உலகிற்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வைரக் கிரீடங்கள் ஆகும். இம்மூன்றனுள் திருப்பா என்பது தன்னிகரில்லாத் தகவும் தரமும் வாய்க்கப் பெற்றது. ஒரு முழுமையான, மாசு கலவாத, சிவசுக மயமான ஆன்மிக வாழ்க்கைநிலையை அனுபவிக்க விரும்புவோர் வேறொன்றையும் பயிலாது திருப்பா என்னும் நூல் ஒன்றைமட்டும் பயின்று உணர்ந்து பக்குவமும் அனுபவமும் பெற்றாலே போதுமானது. இவ்வாறு கூறும்போது சுவாமிகளில் மற்றைய நூல்களைப் பயில வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறுவதாகக் கொள்ளக் கூடாது. திருப்பா எனும் நூல் ஒன்றை உணர்வதையே குறிக்கோளாகக் கொண்டு, சுவாமிகளின் ஏனைய நூல்களைப்பயின்று அதற்கேற்ற தகுதியும் மன வளமும் வாய்க்கப் பெற்றவராக நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

சிவபெருமானுக்குரிய ஆகமவடிவம், சைவாகம நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. காமிகம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களுள் எந்த எந்த ஆகமம், சிவவடிவத்தில் எந்த எந்த அங்கமாக அமைந்துள்ளது என்பதை விளக்கமாக உணர்ந்து கொண்டு, ஆகமத்திருமேனி தாங்கிய சிவபரம்பொருளை வழிபடுதல் சிவவழிபாட்டின் இன்றியமையாத அங்கமாகும். இத்தகைய ஆகமத்திருமேனியில், மகுடம் என்னும் ஆகமம் மணிமகுடமாக விளங்குகிறது எனப் பல ஆகமங்களும் கூறுகின்றன. சற்குரு பாம்பன் சுவாமிகளுக்குரிய திருமேனியையும் இவ்வாறு ஆறுமண்டலத் திருமுறைகளின் சொரூபமாக நாம் தியானிப்போமானால், அத்திருமேனிக்குரிய மணிமகுடமாகத் திருப்பா என்னும் செழுந்தமிழ்மறை சிறப்புறப் பொலிகின்றது என அனுபவபூர்வமாக உரைக்கலாம்.

இத்திருநூல்கள் சுவாமிகளால் அருளப்பட்டு, நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், தமிழ்மக்கள் குறிப்பாகத் தமிழ் அறிஞர்கள் இவ்நூறை உணர வேண்டிய அளவுக்கு உணர்ந்துள்ளனரா எனும் கேள்வி எழுமாயின், இல்லை என்றுதான் பதிலுரைக்க வேண்டிவருகின்றது. தனித்தமிழ் பற்றி வறட்டுக்கூச்சல் போடுவோர், இவற்றைத் தொட்டேனும் பார்த்திருப்பார்களா? சுவாமிகளின் நூல்களில் வாய்மைத்தமிழின் வளப்பசும் தென்றல் எந்த அளவுக்கு மணம் வீசி அலைபாய்கிறது என்பதை உணர ஓரளவேனும் முயன்றிருப்பார்களா?

ஆய்தல் என்பது வேறு, உணர்தல் என்பது வேறு. Analytical and research - oriented reading of a text is different from the actual and intuitional realisation of the message of that text. திருக்குறள், ஆராயப்பட்டுள்ள அளவுக்கு நன்கு உணரப்படவில்லை எனக் கூறலாம். ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு வடமொழி-தென்மொழி இரண்டின் எல்லைகளையும் உணர்ந்திருந்த என் தீக்ஷா குருநாதர்,

> "மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
> உற்றார்க் குடம்பு மிகை"

என்னும் திருக்குறளைப் பத்து விதங்களில் பிரித்துக்காட்டி தத்துவரூபம் முதல் சிவபோகம்வரை எண்ணப்படும் தசகாரியங்களை இந்தக் குறள் எவ்வாறு பிரதிபலித்துக் காட்டுகிறது என்பதை விளக்கினார். அந்த விளக்கவுரை, பரிமேலழகர் உரை முதலான வேறு எந்த உரைகளிலும் காணப்படாத ஒன்று. என் ஆசிரியர் பிரான், எடுத்துரைத்த அத்தனை விளக்கங்களும் இன்னும் என் உள்ளத்தின் ஆழ்தளத்தில் பதிந்துள்ளன. அவர் கூறிய உரை உணர்வுரை; ஆய்வுரை அன்று, ஆய்தலைக் காட்டிலும் உணர்தல் முக்கியம். சிவஞானபோதம் மொழிபெயர்ப்பா, மூலமா என ஆய்வதைக் காட்டிலும் சிவஞானபோதம் என்ன கூறுகிறது என்பதை உணர்தலே முக்கியம். இக்கருத்து சுவாமிகளின் நூல்களுக்கு மிகமிக நன்றாகப் பொருந்தும்.

இலக்கியச் செறிவு, தத்துவச் செறிவு, இறையருட் செறிவு முதலான அனைத்துவிதமான செறிவுகளும் நிரம்பப் பெற்றுள்ள சுவாமிகளின் திருநூல்கள், உணரவேண்டிய முறைப்படி அடியார் பெருமக்களால் உணரப்படவேண்டும். முழுமை முருகு அல்லது முருக முழுமை என்பதைச் சுவாமிகளின் அருள்வாசகங்கள் வாயிலாக நமக்குச் சொந்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு சொந்தப் படுத்திக் கொள்வதுதான் உண்மையிலேயே யோகம் அல்லது தவம் எனக் கூறவேண்டும். சொந்தப் படுத்திக் கொள்வதற்கு, குறுகிய மனப்பான்மையையும் பேத உணர்வுகளையும் களைந்தெறிந்துவிட்ட எல்லோர்க்கும் உரிமை உண்டு.

சுவாமிகள் அருளியுள்ள திருப்பா, சுவாமிகளின் ஆறுமண்டலம் எனப் பெயரிய நூல்மண்டலத்துள் ஐந்தாவது மண்டலமாகத் திகழ்வது. கடவுள் வணக்கப் பாடல்கள் மூன்று, 110 திருப்பதிகங்கள், முதல் நான்கு திருப்பதிகங்களுக்கு சுவாமிகளே வரைந்துள்ள வேதாகமசாரமயமான விரிவான விளக்க உரை, 109 ஆம் பதிகத்தின் ஏழாவது பாடலுக்குரிய விளக்கக்கட்டுரை

108ஆம் பதிகத்தின் மூன்றாவது, நான்காவது பாடல்களுக்கு வரைந்துள்ள பெருமிறைக் கவியுரை, அரிதின் உணர்ந்து ஞானபோனகம் பெறக்கூடிய வகையில் சுவாமிகளே வரைந்துள்ள அரிய பெரிய குறிப்புரைகள் தனியே ஒருநூலாக அச்சிட்டு வெளியிடும் அளவுக்குத் தகவும் தரமும் செறிந்த சுவாமிகளின் நூன்முகம் - இவை அனைத்தையும் கொண்டு.

"ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பிற் சென்னிப்பொற்ப"

என நக்கீரனார் காட்டும் அறுமுகப் பரமனின் திருமுடி போன்று தனிப்பெரும் நிலையில் தனியாப் பேரொளி கொண்டு விளங்குவது திருப்பா.

தாம் அருளிய நூன்முகத்தில் திருப்பா என்பது பற்றிச் சுவாமிகளே கூறும் விளக்கம் நன்கு உணரத்தக்கது.

"திருப்பா என்பது மேம்பட்ட பாக்களினால் ஆகிய நூலைக்குறித்தலால் அடையடுத்த சுருவியாகுபெயராம்; 'பா' என்னும் முதற்சுருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலிற்காதலின். அன்மொழித் தொகையாகக் கொண்டு மேம்பட்ட பாக்களை உடைய நூலென நுவலினுமாம். திருப்பா = மேன்மையாகிய பாட்டு எனிற் பண்புத்தொகையும் மேன்மையுடைய பாட்டு எனின் இரண்டனுருபும் பயனும் தொக்க தொகையுமாம். திரு+பா எனப்பிரிக்க திரு=மேம்பாடு என்னும் பொருளைப்பயக்குமோ ரடைமொழி. அந்த மேம்பாடு - அழகுடன் ஆக்கப்பட்டு முழுமுதற்கடவுள் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் சுடரும் தன்னை, ஒதுவார் உணர்தற்பொருட்டு, எல்லா எழுத்துக்களிலும் விராய்நிற்கும் அகரம்போல எப்பொருளிலும் கலந்துநின்று யாவையும் இயக்காநின்ற அக்கடவுள் என்னும் வத்துநிச்சயம் இவ்வாறு கோடற்பாலதன்றாம்; இவ்வாறு கோடற் பாலதாம்; ஆமதனை அடைதற்குரிய பூர்த்திமார்க்கமும் இன்னதாம் எனப்புகழ்ந்து தான் கூறுமதராலே, சுருப்பப்பையுள்படும் கையாறு என்னும் கைப்பினைப் பாறச்செய் பேரின்பம் என்னும் தேறலை அளித்திடலாம்."

சுவாமிகள் இங்கே குறிப்பிடும் 'மேன்மை' என்பது, தத்துவமயமாகவும் தத்துவ எல்லையைக் கடந்தும் சர்வவியாபகப் பொருளாக விளங்கும் சண்முகத் திருவருள் விலாஸம்.

சுவாமிகள் இத்திருநூலை இயற்றும்போது எத்தகைய மனோ பாவனையோடு விளங்கி இருக்கக் கூடும் என்பதை ஓரளவு நன்கு உணரமுடிகிறது. வேதங்களின் முடிபான பொருள் இதுதான் என்பதை விளக்கிக் காட்டி வேதநெறியைச் செம்மைப்படுத்திய தென்னாட்டு முனிபுங்கவர்களால் இயற்றப்பட்ட 108 உபநிடதங்களின் கருத்துக்களைப்பற்றிய தெளிவான சிந்தனை:- ஸ்காந்தபுராணம் முதலான பெரிய புராணங்களில் இடம்பெற்றுள்ள ஞானமண மயமான அருள்நிகழ்ச்சிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைப்பற்றிய சிந்தனை:- தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலானவற்றில் காணப்படும் கட்டுக் கோப்பான தமிழ் அமைப்பு முறை பற்றிய சிந்தனை, - பன்னிரு

திருமுறைகள், சித்தாந்த நூல்கள் முதலானவை வெளிப்படுத்தும் ஆன்மவிஞ்ஞானக் கோட்பாடுகளைப் பற்றிய சிந்தனை:- என மெய்ஞ்ஞான சிந்தனாயோக மகாபாவனையில் தம்மை இருத்திக் கொண்டு சுவாமிகள் இந்நூலை இயற்றியருளியுள்ளார்கள்.

"புவனமீது பன்மரபினார்" எனும் 77 ஆம் பதிகத்தைப் பாடும்போதும்,

"வண்மை இருக்கின் ஐதரேய மகாவாக்கியமம் பரப்பிரமம்
ஒண்மை ஞான சொருபமென்றே உணர்த்த அதற்கோர் முரணாக
வெண்மை எனுமஞ் ஞத்துவமும் மேவும் அதுவென் பதை மறுத்தவ்
வுண்மை யுடையெம் பெருமாற்கன் புறுவார் சரண்எம் சிரமேலே"
(49 ஆம்பதிகம். 1)

என்பது முதலான பாடல்களைப் பாடும் போதும் சுவாமிகள் வேத - உபநிடதங்களின் சாரம் பற்றிய சிந்தனையில் இருந்திருக்கிறார்கள்.

"ஆரணத்தில் ஆகமத்தில் ஏனையருள் முறைகளிலோர்
அருவுருவு நாமநடு அந்தமாதி
நீரணவும் குறிநிறமொன் றில்லறிவு மயமாக
நிறைககன மேபிரமம் என்றல் போலச்
சீர்அவிரு மைப்படிந்த கண்ணாள் என் றெழுந்தவொரு
செய்யுள்; திரு மாலுமெனும் தூக்கிவற்றால்
பூரணஞ்சொல் கடவுளியா ததுநீயென் றிறைஞ்செனது
புகர்துமிக்க நினைதியொரு கருணைத் தேவே"

- என்னும் பாடலைப்பாடும் பொழுது சுவாமிகள் ஆரணம், ஆகமம் என்னும் இவற்றோடு திருமுறைகளைப்பற்றிய ஆழ்ந்த பாவனையிலும் இருந்துள்ளார். "மைபடிந்த கண்ணாளும்" எனத் தொடங்கும் தேவாரப்பாடலும் "திருமாலும்" எனத்தொடங்கும் திருவாசகப்பாடலும் சுவாமிகள் உள்ளத்தே தோன்றி பிரம்ம விளக்கம் தருவதை இங்கே காணலாம்.

"சீரிய திருவிற் கோலவம் பதிகத் தேயிரு மூன்றினும் ஒற்றி
ஊரினப் பதிகம் பத்தினும் பொழிலோர் ஓங்குகோ கரணவாறினுமா
ஆரியன் ஞானப் பாலறா வாயன் ஆகமச் சிறப்பெடுத் ததிர்த்த
காரியம் தேரா துளறுநர்க் கியாது கழறுவேன் என்குரு மணியே"

"திருவிடை மருதூர்ப் பதிகநான் கதிலே தேசிக நாவர சுகளும்
மருவடர் கானப் பேர்திரு வாரூர் மண்டலி கயிலைகட்குரிய
துரிசறு பதிகம் எட்டொரா றெட்டிற் சுந்தர ரும்பதிநாலைப்
பொருளுற விதந்து சொனதறி யார்க்கென் புகலுவேன்
என்குருமணியே"
- குருமணி : 3,4

- இவ்வாறு சுவாமிகள் திருமுறைப் பொருள்மயமாகத் தம்மை இருத்திக்கொண்டு சைவ ஆகமங்களைப் பற்றி எந்த எந்தத் தேவாரப்பாடல் கூறுகின்றன என்பதைப் பற்றிய கணிப்பினைக் காட்டுகின்றார்கள்.

திருப்பா என்னும் ஒப்பிலாத் திருமுறையுள் 93 முதல் 110 வரை உள்ள 18 பதிகங்களும் பதினெட்டு சிவாகமங்களுக்கு நிகர் எனக் கூறலாம். சைவாகம யோகபாத ஞானபாதப் பொருள்மயமாகத் தம் சிந்தனையை நிறுத்திக் கொண்டு சுவாமிகள் இத்திருப்பதிகங்களை அருளியுள்ளார்கள். இந்தப்பதிகங்களின் பொருளை ஐயமற உணர்பவர்களே சைவசித்தாந்தம் பற்றிப் பேசத் தகுதி உடையோராவர். இந்தப் பதிகங்களை முறைப்படி வெளியிடுபவர்களே தமிழ்வளர்ச்சிக்கு உண்மையானதும் உரியதுமான தொண்டாற்றியவர்களாவர்.

மேலும் திருப்பா நூலின் சீர்த்தியுணர விழைவோர் அமைதிகாத்து, மனத்தையும் தேகத்தையும் தூய்மைப்படுத்திக்கொண்டு, நூல் முழுவதையும் சுருத்தூன்றிப் பயில்வாராக.

பதிநூல் எனப்படும் சைவாகமங்களின் யோக-ஞானப் பிழிவாக இத் திருநூல் விளங்குவதால். இது சைவாகமங்களைப் போன்றே பூஜிப்பதற்குத் தகுதிபெரிதும் உடையதாகிறது.

> *"சிறந்த மேற்கோள் முதலிய நயப்போடும்கூடிய இந்நூலினைப்*
> *படித்தலினால் முன்மொழிந்தவாறு உண்மை உணரப்பெறீஇ*
> *உய்திபெறலாம். பாடல்களைப் பத்திமையிற் பாராயணம்*
> *செய்தலினால் சண்முக சிவகிருபை சாரப் பெறலாம்.*
> *காலிரண்டும் கையிரண்டும் கழீஇ ஆசமனமும் செய்தல் என்னும்*
> *பஞ்சசுத்தி செய்துகொண்ட பின்னர்ப் பீடத்தில் இரீஇ*
> *அலர்சார்த்திப் பூசித்தலினால் அவனைப்பூசித்த படியாம்"*

எனச் சுவாமிகள் நூன்முகத்தில் கூறியுள்ளமை, அடியார் அனைவராலும் சிரத்தையுடனும் பக்தியுடனும் கடைப்பிடிக்கத் தக்கது. இவ்வாறு கடைப்பிடிப்பார்,

> *"அனித்த மான ஊனாளும் இருப்பதாக வேநாசி*
> *அடைத்து வாயு ஓடாத வகைசாதித்*
> *தவத்தி லேகு வால்மூலி புசித்து வாடும் ஆயாச*
> *அசட்டு யோகி யாகாமல் மலமாயை*
> *செனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார*
> *சிரத்தை யாகி யான்வேறென் உடல் வேறு*
> *செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யாம னோதீத*
> *சிவச்சொரூப மாயோகி என, ஆள்வாய்"*

என, அருணகிரிப்பெருமான் விழைவுக்கு உகந்த வண்ணம் உத்தம சிவஞான யோகியாக வாழும் மாபெரும் பேற்றைப்பெறுவர்.

பதிநூற்கு நிகரான முதுநூல் இதற்கு, ஐந்தாம் திருப்பத்து முதல் உள்ள அனைத்துப் பதிகங்களுக்கும் உரிய கருத்துரையை எழுதும் அரும்பெரும் பேறு அடியேற்கு வாய்த்தமை, வற்றாக் கருணைவள்ளலான வடிவேற் பரமனின் திருவருள் விளைவேயாம். பரமனின் திருவருள் அடியார்கள் வழியன்றோ கிடைக்கும்! வணக்கத்திற்குரிய திரு. N.ஜெயராமன் அவர்களின் அன்புக்

கட்டளையாக, அறுமுக வள்ளலின் கருணையானது வடிவம் கொண்டு வாய்த்தது. இவருக்கும் திரு. வி. திருஞானம் சகோதரர்கள், திரு. ப. வேணு கோபாலன், திரு. த. ராஜரத்தினம், திரு. A. கதிர்வேலு, திரு. G. ஜானகிராமன் முதலான அன்பர்களுக்கும் நன்றிப்பெருக்கும் அன்புப்பெருக்கும் விரவிப்பொங்கும் என் உள்ளத்துணர்வுகளைக் காணிக்கை ஆக்குகிறேன்.

மதுரை - திருப்பரங்கிரி ஸ்ரீமத்பாம்பன் சுவாமிகள் திருக்கோவிலை நிர்வகித்து வரும் ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திர சுவாமிகள் இந்த ஞானநூல் வெளியீட்டில் பெரும்பங்கு கொண்டுள்ளார்கள். அவர்களுக்குக் குருவருளும் திருவருளும் சித்திக்குமாறு இறைஞ்சுகின்றேன்.

பல சைவாகமங்களை சமஸ்கிருத மொழியிலிருந்து ஆங்கில மொழியில் பெயர்த்துள்ள அடியேற்கு, சுவாமிகளின் இத்திருநூலுக்கு உரை வரைதல் என்பது துணிச்சலான செயலாகவே தோன்றியது. ஒரு நியாயமான அச்ச உணர்வுடன்தான் உரை எழுதும் பணியில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன். சுவாமிகளின் திருவுள்ளப் பாங்கு அறிந்து, சத்தியம் பிறழாது உரை எழுதுதல் எளிதான செயலன்று. இந்த அச்சத்தை நிவர்த்தித்துக்கொள்ள, நான் ஒவ்வொரு முறையும் உரை எழுதத் தொடங்கும் முன்னர், இந்நூலின் "தெய்வம்" எனும் திருப்பத்தின் இறுதியில் சுவாமிகள், சந்தப்பிரவாகமாகத் தமிழில் அருளியுள்ள அதி உன்னதமான உரைச்செய்யுளையும் ஒரு முறை ஆழ்ந்து பயின்று, உரை எழுதக் கூடிய மனப்பாங்கையும், ஞான பலத்தையும் பெற்றுக் கொள்வது வழக்கமாகியது. சுவாமிகள் அருளியுள்ள முருகமுதன்மையாகிய பெருமணம் கமழும் முத்துத்தமிழ் வாசகக் கோவையை அன்பர்களும் நாடோறும் ஓதிப்பயன்பெறுவார்களாக.

"பூவெலாம் போற்றொரு பொருளாய், பொதுவெலாம் இலங்கொரு தெருளாய் தேவெலாம் ஏத்தொரு தேவாய் **சிவம்எனும் பெரும்பெயர் இயவுளாய்** தாவெலாம் தபுத்தருள் இறையாய், தனிச்சுகம் இசைத்தருள் விபுவாய் இதரமே யாதும் இலதாய், யாதினும் உடங்கியைந்துளதாய் விதரணப் புத்தேள் புணரியாய், விகிருத வினைக்கட்டிலாததாய் உதரமுற்றுதியா நலத்ததாய் ஒளிவெளி என்ன இருப்பதாய் மோனமாடுடையர்காண் திருவாய் மோகமால் உடையர்காண்பரிதாய் வானநாடுடையார் மாண்பிற்றாய் மனதுரைக் கடங்கா மகிமைத்தாய் ஞானமே தனாது வடிவிற்றாய் நடுவெளிக் குகையில் அவிர்முத்தாய் நாகுமூப் பணவா வாழ்விற்றாய் நசையுநர்ப் புரந்தருள் உண்மைத்தாய் பாகினும் இனிதாய் உளதாய், பரசெம தாசையின் அமுதாய் யோகிகள் குரங்கவுட் படுவதாய், யுகளமன் றொன்றெனப் படுவதாய் ஆமயம் இல்லோர் அணங்காய் அறிவினுக் காரோர் அறிவாய் ஓமெனும் ஒருசொற் பொருளாய், உயிரினுக் காரோர் உயிராய் பாமரம் செகுக்கும் பரமாய், பவக்கடல் கடத்தும் கலமாய் நனவினர் அறியா நிலையிற்றாய், நாதநாதாந்தத் தகைமைத்தாய் கனவினர் காணாக் கரையிற்றாய், கருள்நிலைக் கெட்டாக் கதழ்விற்றாய் சினவு நீரே இல்லதாய் சிவாக்கிரம் எனவே உள்ளதாய் அன்பருக் கருளும் அன்பிற்றாய், அளப்பில் இயற்கை நிறைவிற்றாய், தன்பணை அறியாத் தனியாய், சகச சித் தாந்தக் கனியாய் இன்பருள் இயற்கை இன்பாய், எமைக்கொள் விழுப்ப அன்பாய் அன்னையாய் அணைத்தருள் செயற்கைத்தாய்,

அளிவலைப் படுமோர் இயற்கைத்தாய் கன்னலின் இனிக்கும் மாகண்டாய், கருத்தினைக் கவரு மாநன்காய் யாதினுமேயொரு வன்மைத்தாய், யாதினுமேயொரு பெருமைத்தாய் யாதினு மேயொரு நுண்மைத்தாய் என்றுமோர் படித்தெனப் படுவதாய் இரண்டினு மேம்பட்டிடுவதாய் மன்றிடை இயங்கி இயக்குவதாய் வரதசாகரமா யிருப்பதுமாய் நன்றினும் நலம்சால் ஒன்றாய் நகுமொளிப் பிழம்பா நன்றாய் மாதவர் மாமகத்துவமாய் மறைமுடி வோதுதத்துவமாய் ஆதரவாம் பரப் பிரமமாய் ஆபத்திற்குதவோம் பிரமமாய் தீதெலாம் சீத்தருள் முதலாய் திருப்புகழ்தெரித்தான் தெய்வமாய் வயங்கும் அவ்வொருதிரு முருகனாகிய செவ்வேள்பரமன் திருவருள் துணைகொண்டு ஒல்லுமாறு கடைப்பிடித்துய்க"

சைவாகமங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் மாபெரும் பணியில், மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களின் ஆதரவால் என்னை ஈடுபடுத்திக்கொண்ட பிறகு, ஆகமங்களை விரிவாகவும் ஆழ்ந்தும் பயிலும் அரிய பேறு செவ்வனே வாய்த்தது. சில படலங்களை மொழிபெயர்க்கும் போது, "இந்த அரியபெரிய உண்மைகளைத் தமிழ்நாட்டுத் "தத்துவவித்தகர்கள்" எப்பொழுது உணர்ந்துகொள்ளப் போகின்றார்கள்" எனக் கவல்வதுண்டு. இதுகாறும் தமிழில் வெளிப்படுத்தப்படாத சித்தாந்தக் கோட்பாடுகள் ஆயிரக் கணக்கில் ஆகமங்களில் இடம்கொண்டு மிளிர்கின்றன. அந்தக் கோட்பாடுகளைப் பற்றிய தெளிவான சிந்தனை அடியேற்கு வாய்த்திருக்காவிட்டால், திருப்பா நூலின் பலபாடல்களுக்குரிய உண்மைப்பொருள் எனக்கு நன்கு விளங்கிஇருக்காது. ஆகமங்களைப் பற்றிய முழுமையான பயிற்சி வாய்த்துள்ள நிலையில் திருப்பா நூலுக்குக் கருத்துரை எழுதும் வாய்ப்பு கிடைத்துள்ளமை உண்மையிலேயே சுவாமிகளின் திருக்கருணை என்றே கருதுகிறேன்.

ஓர் ஆலயத்தைத் தூர இருந்துகொண்டு சுட்டிக்காட்டுவது போன்றது கருத்துரை. ஆலயத்துக்கு உள்ளே சென்று இறையனுபவம் பெறவேண்டியது அடியார் பொறுப்பு. கருத்துரை, பாடலின் மையக்கருத்தை மட்டுமே சுட்டிக்காட்டும். மற்றப்படி, சுவாமிகளின் திருவுள்ளக் கிடக்கையை, அவர் அருளியுள்ள பாடல்களை மீண்டும் மீண்டும் பயில்வதன் மூலம் நன்கு உணர்ந்து கொண்டு அந்த உள்ளத்தோடு ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டியது அடியார்களின் கடப்பாடு. வள்ளிப்பெருமாட்டியின் இதயம், முருகப்பெருமானின் திருமுகம் போன்று விளங்குவது என அருணகிரிப்பெருமான் கந்தர் அந்தாதியில் கூறுவார். அதுபோன்று முருகப்பரமனின் திரு உள்ளம் எதைப்போன்றது என்றால், சுவாமிகளின் இதயத்தைப் போன்றது எனக் கூறலாம். அந்த இதயக் கோயிலுக்கு உள்ளே அடியார்கள் பயபக்தியுடன் பிரவேசிக்க இந்தக் கருத்துரை துணைநிற்கும் எனக் கூறி, இப்பணியில் என்னை ஈடுபடுத்திய திருவருளுக்கும் அடியார் அனைவர்க்கும் என் நன்றியையும் கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

S. P. சபாரத்தினம்.

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருப்பா

அணிந்துரை

டாக்டர். M. குப்புசுவாமி, புதுடெல்லி

அடிமடக்குக்கட்டளைக்கலித்துறை

திருப்பாற் கடலிருப் பானும் தளரத் தமியருளத்
திருப்பான் அவிர்சடை யீசனன் றேபுறத் தோர்நெறியும்
திருப்பா தருள்நிலைக் கேநமை ஈர்க்கும் தலைவனெனத்
திருப்பா இசைத்தாண்ட தென்பாம்ப ணண்ணலைத் தேர்மின்களே.

உலகின்கண் வழங்கிவரும் பல்வேறுசமயங்கட் கெல்லாம் தோற்றுவாயாக அமைந்துள்ளது சைவநெறியே எனும்முடி பு பெற்றுள்ளமை நாம் அறியலானோம். காலத்தால் முற்பட்டதாயிருப்ப தோடல்லாமல், இதன் கண்விளக்கப் பெறாஉம் பேருண்மைகளெல்லாம் அறிவியல் நோக்கிற்கு மிக உகந்தனவாய், யாவரும் ஏற்றுப்போற்றும் பெற்றியனவாய் அமைந்துள்ளதுவுங் காண்கின்றோ மன்றோ? இதுவே திருநெறி என ஆன்றோர்களால் பண்டு தொட்டே சைவசமயம். சிறப்பித்து ஓதப்பெற்று வருவதாயிற்று. "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியா" ச் சிவனடியார் பலரும் காலப் போக்கில் அவ்வப்போது இறையருளால் மெய்யுணர்வு மேலோங்கப் பெற்று மேன்மேலும் அருள் விளக்கங்கள் தந்து, ஆன்மாக்கள் கடைத்தேற வழிவகைகள் காட்டி வந்துள்ளனர்.

வாழையடி வாழையாக வளர்ந்தோங்கிவரும் இத்திருக் கூட்டத்தில், அண்மைக்காலத்து வாழ்ந்த சிவனடியார் வரிசையில் தலையாய இடத்து வைத்துப் போற்றப் பெறும் பேரருளாளர் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவர். சீரிய சிவப்பணிகள் பல இடைவிடாது ஆற்றிய இப்பெருமான் சமயகுரவர் நால்வரோடும் ஸ்ரீமத் அருணகிரிநாதப் பெருந்தகையோடும் ஒக்கவைத்து எண்ணப்படும் தகவுடையார்.

அறிதற்கரியவேதாகமப் பெருநூல்கள் யாவற்றையும் குமார பரமேஸ்வரன் திருவருளால் ஓதாமலே உணர்ந்தறிந்து சைவநெறியின் சிறப்பினையும் சிவபெருமான்றன் முழுமுதற்றன்மையினையும் யாவரும் எளிதின் தெரிந்துய்யுமாறு பலநுட்பமான விளக்கங்கள் வரைந்துதவியுள்ளார்கள். பண்டைக்கால உரைகள் எல்லாவற்றையும் சீர்துக்கி ஆய்ந்து, அவற்றின் மெய்ப்பொருளை ஐயம்திரிபற எடுத்தோதியுள்ளார்கள். வடமொழியறிய மாட்டாத பலரும் தேரும் வண்ணம் சுவாமிகள் தீந்தமிழ்ப் பாடல்கள் வாயிலாய் வேதாகம சாரத்தினை வழங்கியருளியுள்ளார்கள். வடமொழி மேற்கோள்களுக்கெல்லாம் அவ்வவ்விடத்தே தமிழ்மொழி பெயர்ப்பும்

தந்தருளியுள்ளார்கள். முந்தைய நூல்களில் தெளிவுறச் சொல்லப் பெறாத செய்திகள் சுவாமிகள் நூல்களில் சிறப்புற விரித் தோதப் பட்டுள்ளமை காண்கின்றோம்.

ஐம்முகச்சிவமும் அறுமுகச்சிவமும் ஒரு பொருளே என்பதை விளக்குதற்பொருட்டு, ஸ்ரீமத் சுவாமிகள் ஸ்காந்த புராணம் (யுத்தகாண்டம், 16ம் அத்தியாயம்), காஞ்சிப்புராணம் முதலிய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டியுள்ள நலம் கிடைத்தற்கரியவோர் அறிவுவிளக்கப் பேழை என்றே கோடல் வேண்டும். சைவப்பேரருளாளர்களெல்லாம் மேற்கொண்டொழுக வேண்டிய நெறி சுத்தாத்துவிதவைதிக சைவ சித்தாந்தமே எனத் தொன்னூல்கள் பலவற்றிலிருந்து ஸ்ரீமத் சுவாமிகள் எடுத்துக் காட்டியருளியது போல் பிறர் எவரும் இதுகாறும் காட்டினாரல்லர்.

ஸ்ரீமத் அருணகிரிநாதப் பெருந்தகையின் திருப்புகழ், கந்தரனுபூதி முதலிய நூல்கள் தேவார மாதி நூல்களைப் போலவே சைவசித்தாந்தப் பெருநெறியினை நன்றாக நிலைபெறநாட்டியுள்ளன. இருப்பினும் இற்றை நாட்சைவநெறி ஆசிரியர் பலர் இதனை விரிவாக எடுத்துக் காட்டிக் கையாளாமல் இருக்கின்றனரே எனவும் இரங்குகின்றார்கள்.

பன்னிருதிருமுறைகளிலிருந்தும் உபநிடத்துக்கள் ஆகமங்கள் பலவற்றிலிருந்தும் மேற்கோள்கள் காட்டிக் கடவுளின் உண்மைநிலை யாது என்பதைத் திருப்பாவில் விளக்கியுள்ளார்கள். புறவழிபாடு, இதயார்ச்சனம் இவற்றால் வரும் பயன்கள் எத்தகையன என்று உபநிடத்துக்கள் வாயிலாய்த்துலக்கியுள்ளார்கள். 'இலிங்கம்' என்பதனைப் பலர் தவறாகப் பொருள்கொண்டு உரைத்தலைக் கண்டித்து உண்மை விளக்கியுள்ளார்கள். சில சித்தர் இலக்கியங்கள் குழூஉக்குறியாக வரைந்து காட்டும் செய்திகளை மக்கள் பலர் தவறாக உட்கொண்டு அலமருதல் பற்றியும் எழுதியுள்ளார்கள். மலம், மூத்திரம் இவற்றையுண்டு மேல்நிலையெய்த எண்ணியிருப்போரைக் கண்டித்துள்ளார்கள்.

மூவகைமுத்தி பற்றிச் சுவாமிகள் அருளியுள்ள "குழைத்தபத்துக் கூறுமாப்போல்" என்னும் திருமுகம் திருப்பாவில் சேர்க்கப்பட்டுள்ளது. இதுவே முடிந்த முடிபு எனப்பல்லோராலும் ஏத்தப்படும்வகையில் இவ்விளக்கவுரை அமைந்துள்ளது. தூலபஞ்சாட்சரம், சூக்குமபஞ்சாட்சரம், பற்றிய சுவாமிகள் தெளிவுரை சால நன்றாயிற்று. இன்னும் இவைபோல்வன மிகப்பல.

நூல்களையெல்லாம் நடுநிலை நின்று ஆய்தல் வேண்டுமென்றும், காலத்தாற் பிற்பட்டவை என்பதற்காக மட்டும் அண்மைக்கால நூல்களைப்புறக்கணிக்கலாகாது என்றும் அறிவுறுத்தியுள்ளார்கள். தேவ குருவாகிய வியாழன், அசுரகுரு சுக்கிராச்சாரியார், இன்னும் இவரனைய குருமார்கள் ஒரொருகால் தத்தம் மாணாக்கர்களைத்தவறான வழிகளில் திருப்பி, வன்முறையில் இறங்கச் செய்த வரலாற்றினைச் சுட்டிக்காட்டி, முருகப் பெருமானின் உண்மையான அடியார்களை எவரும் இங்ஙனம் மருட்கையூட்ட வல்லவராகார் என்றும் அருளியுள்ளமை, பெருமானின் மருங்கோடா

நெஞ்சினையும் திட்ப நுட்ப முதிர்ச்சியினையும் காட்டா நிற்கின்றன என்னல் தகும். பரசமயக் கோளரி எனத்திருஞான சம்பந்தர் போற்றப்படுவது போலவே, சுவாமிகளும் புறவினத்தார் செய்யும் மருள்களை யெல்லாம் எடுத்துக்காட்டி மறுத்துள்ளமையால், மாற்றுநெறி வென்ற மாண்பினர் என ஏத்தப்பெறும் தகவினர். சைவரனைவரும் ஒன்றியிருந்து பணி செய்தல் வேண்டுமென்றும், ஒருசில சிறு கருத்துவேறுபாடுகள் தம்மிடையே எழின், அவற்றிற்காக ஒருவரையொருவர் பழித்துரைக்கலாகா தென்றும் அறிவுறுத்து வாராயினர்.

இப்பெருமானார் அருளிய திருப்பா எனும் விழுமிய சைவ நன்னூலினைச் சிவநெறிச் செல்வரும், சைவர்கட்கெல்லாம் நல்வழி காட்டும் பணியைத்தமது கடனாகக் கொண்டவரும், கைம்மாறு கருதாத் தவச்சீலருமாகிய திரு. N. ஜெயராமன் அவர்கள் இதுபோது மறுபதிப்புச் செய்து வெளியிடுகிறார்கள். ஏற்கனவே சுவாமிகளின் நூல்கள் பலவற்றையும் நிறையன்புடன் அச்சிட்டு வழங்கிவரும் இப் பெரியார் திருமுருகப் பெருமான்றன் அருளாலும், சுவாமிகள் தோன்றாத் துணையாய் நின்றுதவும் ஊக்கத்தினாலும் நீடுவாழ்ந்து மேலும்பல திருப்பணிகள் செய்தோங்குவார்களாக. அன்பர்கள் பலரும் திருப்பா என்னும் கிடைத்தற்கரிய இந்நூலினைப் பயின்று, மெய்யுணர்வு மேலோங்கப் பெற்றுப் பேரின்பம் பெறுவார்களாக.

இந்நூல் வெளியீட்டினுக்குப் பெருமளவில் பொருளுதவியும், ஆக்கமும் ஊக்கமும் அளித்தும், மதுரை திருப்பரங்கிரி பாம்பன் சுவாமிகள் திரு ஆலயத்தையும் மற்றும் பல தொண்டு நிறுவனங்களையும் நிர்வகித்தும் வருபவர்கள் ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திர சுவாமிகள் ஆவர். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் மீதுள்ள ஈடுபாட்டினாலேயே துறவு பூண்டவர்கள் இவர்கள். அன்னார்க்குக் குருவருளும் திருவருளும் எஞ்ஞான்றும் முன்னின்றருள்க.

பணியா ரகலப் பொருப்பகத் தான்மங்கை பாகனடி
பணியா தவர்மடம் போக்குவான் வேண்டிப் பரனையுன்னும்
பணியார்த் தெழுந்த பெருமகார் செய்திருப் பாவினைக்காப்
பணியாக் கொளவினை பாறுமன் றேபவம் போயறவே.

குகமயம்

குரு வணக்கம்

வேதக் கலையும் சித்தாந்த மேன்மைக்கலையும் நன்குணர்ந்து
பேதக் கலைகள் தகர்த் தெறிந்த பேரானந்தப் பெருவாழ்வே
நாதத் தமிழில் குகமேன்மை நாட்டி நிறுத்தும் சிவகுருவே
பாதத் துணைகள் எமக்கருள்வாய் பாம்பன் குமரகுருமணியே.

Dr. S.P. சபாரத்தினம்

முதற்புத்தகம்

திருப்பாட்டு முதற்குறிப்பகராதி

திருப்பத் தெண்	திருப்பாட் டெண்	முதற்குறிப்பு	பக்கம்	திருப்பத் தெண்	திருப்பாட் டெண்	முதற்குறிப்பு	பக்கம்
		அ				**தூ**	
3	7	அத்துவித	180	க.வ.	3	தூர்த்தகுண	26
4	9	அவிவேக	230			**தொ**	
		ஆ		4	8	தொட்டதே	229
3	4	ஆரணத்து	171			**தோ**	
		இ		1	10	தோலென்பு	122
1	5	இதுகாறு	107			**நி**	
2	8	இந்திரிய	150	3	2	நின்மல	167
4	6	இழுதையா	223			**நீ**	
		உ		4	5	நீயெமது	222
2	4	உணர்வுவினை	131			**நூ**	
4	1	உததிவளை	201	3	9	நூலெனும்	197
1	7	உயிர்களை	114			**ப**	
3	3	உயிர்நிலை	169	க.வ.	2	பன்மதத்	24
2	1	உலகாக	124			**பா**	
		எ		2	6	பாசமென்	141
4	7	எம்பேரி	227	க.வ.	1	பாராதி	20
1	2	எழுமொரு	100	2	7	பார்வை	144
		ஒ				**பு**	
3	10	ஒன்றெனும	198	4	2	புரிவுநனி	209
		க		2	5	புவனமெவை	139
2	3	கண்டெரிபுயு	130	1	4	புன்மனப்	106
2	2	கருப்பாச	127			**பூ**	
1	3	கற்றவர்கள்	105	4	4	பூவுழி	219
		கு				**மா**	
4	10	குத்திமிசை	232	2	10	மானவ	161
		சீ				**மு**	
3	1	சீராரருட்	163	1	8	முண்டமுண்	116
		சு		3	8	முந்தைநா	182
1	1	சுருதியின்	99	3	5	முன்னிலை	174
		தா				**யா**	
2	9	தாமச	153	1	9	யாப்பூரி	121
3	6	தாம்புரண	178			**வ**	
		து		4	3	வஞ்சவினை	211
1	6	துடவை	112				

திருப்பாவுரை

அனந்தச்ருதி ஸ்ம்ருதி புராணேதிஹாஸாதி பிரமாணங்களோடு
இரண்டுபுத்தக வடிவாகப் பிரகாசிக்கின்ற
இவ்வரிய பெரிய நூன்மூலத்திலு முரையிலு மெடுத்துக்காட்டப்பட்ட

பனுவல்கள்

நூற்றெட்டுபநிஷதக் கோவையைச்
சேர்ந்த உபநிஷதங்கள்

அ

1. அதர்வசிகோபநிஷத்
2. அதர்வசிரோபநிஷத்
3. அம்ருதபிந்தூபநிஷத்
4. அக்ஷமாலிகோபநிஷத்

ஆ

5. ஆத்மபோதோபநிஷத்

ஈ

6. ஈசாவாஸ்யோபநிஷத்

ஐ

7. ஐதரேயாரண்யகோபநிஷத் (ஐதரேயம்)

க

8. கடோபநிஷத்
9. கர்ப்போபநிஷத்

கா

10. காலாக்நிருத்ரோபநிஷத்

கை

11. கைவல்யோபநிஷத்

கோ

12. கோபாலதாபிந்யுபநிஷத்

கௌ

13. கௌஷீதகிப்ராஹ்மணோபநிஷத்

ச

14. சரபோபநிஷத்

சா

15. சாண்டில்யோபநிஷத்
16. சாந்தோக்யோபநிஷத்
17. சாரீரகோபநிஷத்

சு

18. சுகரஹஸ்யோபநிஷத்
19. சுவேதாச்வதரோபநிஷத்

ஜா

20. ஜாபால்யுபநிஷத்

ஸ

21. ஸக்ந்யாஸோபநிஷத்
22. ஸர்வஸாரோபநிஷத்

த

23. தக்ஷிணாமூர்த்யுபநிஷத்
24. தலவகாரமெனுங்கேநோபநிஷத்

தி

25. திரிபுராதாபிந்யுபநிஷத்

து

26. துரியாதீதாவதூதோபநிஷத்

தே

27. தேஜோபிந்தூபநிஷத்

தை

28. தைத்திரீயோபநிஷத்

நா

29. நாரதபரிவ்ராஜகோபநிஷத்

நி

30. நிராலம்போபநிஷத்
31. நிருஸிம்ஹோத்தரதாபிந்யுபநிஷத்

ப

32. பஸ்மஜாபாலோபநிஷத்
33. பஞ்சப்ரஹ்மோபநிஷத்

எடுத்துக்காட்டப்பட்ட பனுவல்கள்

பி

34 பிரச்நோபநிஷத்
35. பிரஹ்மோபநிஷத்
36. பிருஹஜ்ஜாபாலோபநிஷத்
37. பிருஹதாரண்யகோபநிஷத் (யஜுர்வேதகாண்வசாகை)

பை

38. பைங்கலோபநிஷத்

ம

39. மண்டலப்ராஹ்மணோபநிஷத்
40. மஹோபநிஷத்

மா

41. மாண்டூக்யோபநிஷத்

மு

42. முக்திகோபநிஷத்
43. முண்டகோபநிஷத்

மை

44. மைத்ராயண்யுபநிஷத்
45. மைத்ரேயோபநிஷத்

யோ

46. யோககுண்டல்யுபநிஷத்
47. யோகசிகோபநிஷத்
48. யோகதத்வோபநிஷத்

ரா

49. ராமதாபிந்யுபநிஷத்
50. ராமரஹஸ்யோபநிஷத்

ரு

51. ருத்ராக்ஷஜாபாலோபநிஷத்

வ

52. வஜ்ரஸூசிகோபநிஷத்
53. வராஹோபநிஷத்

வா

54 வாசுதேவோபநிஷத்

வேதபாகங்கள்

55. ருக்வேதம்
56. தைத்திரீயாருணசாகைநாராயணம்
57. ஸாமவேதம்

ஆகமங்கள்

58. காமிகம்
59. காரணம்
60. கிரணம்
61. குமாரதந்த்ரம் (உபாகமம்)
62. ஸர்வஜ்ஞநாகோத்தரம்
63. சிந்தியவிசுவசாதாக்கியம்
64. சிவதருமோத்தரம் (சருவோத்தாகம வழிவந்த உபாகமம்)
65. சுப்ரபேதம் (ஸுப்ரபேதம்)
66. சுவாயம்புவம் (ஸ்வயம்பு-சொயம்பு)
67. தேவிகாலோத்தரம் (தமிழ்)
68. நிசுவாசகாரிகை
69. பௌஷ்கரம் (பாரமேச்வராகம உபபேதம்)
70. மகுடம்
71. மிருகேந்த்ரம் (காமிகாகமவழிவந்த உபபேதம்)
72. மிருகேந்த்ராகம வியாக்கியானம்
73. வாதுளோத்தர சூத்தாக்யம்

ஸ்மிருதி

74. சாதாதப ஸ்மிருதி

புராணேதிஹாஸங்கள்

75. அக்னிபுராணம் (வடமொழி)
76. இலிங்கபுராணம் (வடமொழி)
77. இலிங்கபுரணம் (தென்மொழி)
78. கூர்மபுராணம் (வடமொழி)
79. கூர்மபுராணம் (தென்மொழி)
80. மச்சபுராணம் (வடமொழி)
81. சைவபுராணம் :—
    கைலாஸஸம்ஹிதை
    ஞானசங்ஹிதை
    தருமசங்ஹிதை
    வாயுசங்ஹிதை (வடமொழி)
    வாயுசங்ஹிதை (தென்மொழி)
82. ஸ்காந்தபுராணம் : —
    சம்பவகாண்டம்
    தக்ஷகாண்டம்
    யுத்தகாண்டம்
    தேவகாண்டம்
    வீரமாஹேந்த்ரகாண்டம்
    உபதேசகாண்டம்
83. கந்தபுராணம் (தென்மொழி)
84. காசிகாண்டம் (தமிழ் மொழி பெயர்ப்பு)
85. சூதசங்ஹிதை (தமிழ் மொழி பெயர்ப்பு)

எடுத்துக்காட்டப்பட்ட பனுவல்கள்

86. பிரமாண்டபுராணம்
87. சிவகீதை (பாத்மபுராணத்தது)
88. பார்க்கவபுராணமெனும் விநாயக புராணம்
89. மஹாபாரதம் (வியாசர் - வடமொழி)
90. பாரதம் (வில்லிபுத்தூரார் – தென் மொழி)
91. ஹரிவம்சம்
92. சிவரகசியம் (மஹேந்திரகாண்டம்)
93. சிவரகசிய ரிபுகீதை
94. வால்மீக ராமாயணம்
95. கம்பராமாயணம்
96. ஹாலாஸ்ய மாஹாத்ம்யம்
97. மதுரைத் திருவிளையாடற்புராணம்
98. சிதம்பரபுராணம் (தமிழ்)
99. காஞ்சிப்புராணம்
100. திருச்செந்தூர்ப்புராணம்
101. திருநெல்வேலித் தலபுராணம்
102. பழநித் தலபுராணம்
103. சுசீந்திரத் தலபுராணம்
104. வேதகிரி மாண்மியம்
105. தணிகைப்புராணம்
106. வில்வாரண்ய மாஹாத்ம்யம் (வைணவர்)
107. சித்திரகூடபுராணம் (வைணவர்)
108. திருவாதவூரர் புராணம்
109. பெரியபுராணம் : —
திருஞானசம்பந்தமூர்த்திகள் புராணம்
திருநாவுக்கரசுகள் புராணம்
சுந்தரமூர்த்திகள் புராணம்
தடுத்தாட்கொண்ட புராணம்
வயர்கோன் கலிக்காம நாயனர் புராணம்
சாக்கியநாயனர் புராணம்
110. திருமுறைகண்ட புராணம்
111. ஷண்முக ஸஹஸ்ரநாமம்

ஸூத்ரங்கள்

112. சிவஸூத்ரம் (சிவபெருமான்)
113. பிரஹ்மஸூத்ரம் (வியாசமுனிவர்)
114. போதாயநக்ருஹ்யஸூத்ரம்

பாஷ்யங்கள்

115. நீலகண்டபாஷ்யம் (சைவபாடியம்)
116. சங்கரபாஷ்யம்
117. இராமாநுசபாடியம்
118. மத்துவபாடியம்
119. சிவாக்கிரயோகிகளது சிவஜ்ஞான போதபாஷ்யம் (= வியாக்கியானம்)

தமிழ்மறைகள்

120. திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கு
121. திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கு
122. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு
123. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கு

அருணகிரிநாத சுவாமிகள் திருவாக்குக்கள்

124. திருப்புகழ்
125. கந்தரந்தாதி
126. கந்தரலங்காரம்
127. கந்தரனுபூதி

சிவஜ்ஞானபோதமுதலியன

128. சிவஜ்ஞானபோதம் (வடமொழி)
129. சிவஞானபோதம் (மூலம்)
130. ஷை வார்த்திகமெனும் பொழிப்பு
131. ஷை த்ராவிடமாபாடியம்
132. சிவஞானசித்தியார்
133. ஷை உரை (பொழிப்புரையின்படி பதவுரை)
134. ஞானப்பிரகாசருரை
135. சிவாக்கிரயோகியுரை
136. சிவப்பிரகாசம்
137. ஷை உரை (இலக்கணம் - சிதம்பர நாதமுனிவர்)
138. திருவருட்பயன்
139. உண்மைநெறிவிளக்கம்
140. உண்மைவிளக்கம்
141. திருக்களிற்றுப்படியார்
142. ஷை உரை
143. சங்கற்பநிராகரணம்

திருமந்திரநூன் முதலியன

144. திருமந்திரம்
145. திருவிசைப்பா (திருமாளிகைத் தேவர்)
146. மூதுரை
147. நல்வழி

எடுத்துக்காட்டப்பட்ட பனுவல்கள்

148. ஆத்திசூடி
149. கொன்றைவேந்தன்
150. திருக்குறள் (திருவள்ளுவதேவர்)
151. கோபப்பிரசாதம் (நக்கீரனார்)
152. ஒழிவிலொடுக்கம்
153. தத்துவப்பிரகாசம்
154. சிவதத்துவவிவேகம்
155. கௌடபாதகாரிகை
156. சோமவாரகற்பம்
157. அவிரோதவுந்தியார்
158. சூத்தசாதகம் (குபாரதேவர்)
159. சித்தாந்தசிகாமணி
160. சித்தாந்தப்பிரகாசிகை (தமிழ்)
161. சித்தாந்தசாராவளி வியாக்கியானம்
162. திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா
163. திருச்செந்தினிரோட்டகம்
164. பட்டினத்தடிகள்பாடல்
165. தாயுமானசுவாமிகள் பாடல்
166. கோடிக்கரை ஞானியார் பாட்டு
167. அருணையசுவாமிகள் பாட்டு
168. சைதன்னியானந்தசுவாமிகள் பாட்டு
169. சித்தர் நூல்கள்
170. பஞ்சாமிர்தவண்ணம்
171. குமரவேள்பதிற்றுப் பத்தந்தாதி
172. சைவசமயசாரம்
173. காலாயிரப்பிரபந்த விசாரம்
174. பரிபூரணானந்தபோதம்
175. சிவசூரியப்பிரகாசம் (பரிபூரணானந்தபோதவுரை)
176. தகராலயரகசியம்
177. சதானந்தசாகரம் (தகராலயரகசியவுரை)
178. குமரகுருதாசசுவாமிகள் பாடல். இதன்கட் பஞ்ச விஞ்சதியதிக சதபங்கியு முளது
179. திருவலங்கற்றிரட்டு — முதலாங்கண்டம் இரண்டாங்கண்டம்
180. திருத்தொடையல
181. அனவரதபாராயணஷ்டகம்
182. காசியாத்திரை
183. தங்க ஆனந்தக்களிப்பு
184. சஷ்டி வகுப்பு

(பாம்பன் : குமரகுருதாசசுவாமிகள்)

185. சண்முக கவசம்
186. கந்தகோட்ட மும்மணிக் கோவை
187. ஞானவாக்கியம்
188. கந்தரொலியலந்தாதி
189. சுகப்பிரம வருட்பத்து
190. சுவலீரர் சுவரத்தினக் கலி விருத்தம்
191. திருத்தல தரிசன காலங்களிற் பாடிய கட்டளைக் கலித் துறைகள்
192. கனவதிகாரம் (செக்கர்வேள் செம்மாப்பு)
193. சேந்தன் செந்தமிழ்
194. வேத வியாசம்
195. சீவயாதனவியாசம்
196. திருப்பா
197. திட்பம் (சாரூ - பாடல்கட் குரை)
198. டை திருப்பாவில் மற்றைப் பாக்கட்குக் குறிப்புரை

(பாம்பன் : குமரகுருதாசசுவாமிகள்)

199. திருமுருகாற்றுப்படை (நக்கீரனார்)
200. பொருநராற்றுப்படை (மூடத் தாமக்கண்ணியார்)
201. முல்லைப்பாட்டு (கப்பூதனார்)
202. குறிஞ்சிப்பாட்டு (கபிலர்)
203. மலைபடுகடாம்(பெருங்கௌசிகனார்)
204. மதுரைக்காஞ்சி (மாங்குடி மருதனார்)
205. பஞ்சதசப்பிரகரணம்
206. பிரபோதசந்திரோதயம்
207. வாசுதேவமனனம்
208. பக்தவிஜயம்
209. சாங்கியம் (கபிலர்)
210. யோகம் (பதஞ்சலியார்)
211. ஆழ்வாராசாரியர்கள் வைபவம் (தென்கலை வைணவச் சுவடியாகிய இது, பத்தி - ரா. வேங்கடகிருஷ்ண சாமி நாயுடென்பாராற் சென்னை : ஸ்ரீ கிகேதந முத்ராக்ஷர சாலையில் உகo - பக்கங்களில் 1902-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது)
212. தனிப்பாடற்றிரட்டு
213. நடேசப்பெருமான் திருக்கைச் சிட்டு (பெற்றான் சாம்பான் விடயம்)

எடுத்துக்காட்டப்பட்ட பனுவல்கள்

214. 'நமப்பார்வதீ பதயே'
215. சைவர்செய்யுள் ப - சருஉ
216. பதனாறு பேறு ப - ருகூச, ருகூரு
217. மத்தேயு (கூ-ஆம் அதிகாரம்)
218. இண்டியன் இன்ஸெக்ட் லைஃப்
219. யாப்பருங்கல விருத்தி
220. தொல்காப்பியம்
221. ஷை உரை (நச்சினார்க்கினியர்)
222. நன்னூல்
223. தண்டியலங்காரவுரை
224. பட்டோசி வியாகரணம்
225. பிரயோக விவேகம்

நிகண்டுகள்

226. அமரஸிம்ஹம்
227. பர்யாயார்ணவம்
228. நாநார்த்த ரத்நமாலை
229. சப்த ரத்நாகரம்
230. விச்வப்ரகாசம்

(வடமொழி)

231. சேந்தன்றிவாகரம் (சே - திவாகரம்)
232. பிங்கலநிகண்டு (பிங்கலந்தை)
233. சூடாமணி நிகண்டு :—

ககரவெதுகை
ஙகரவெதுகை
ஞகரவெதுகை
டகரவெதுகை
ணகரவெதுகை
தகரவெதுகை
நகரவெதுகை
யகரவெதுகை
ரகரவெதுகை
லகரவெதுகை
வகரவெதுகை
ழகரவெதுகை
ளகரவெதுகை
றகரவெதுகை
னகரவெதுகை

234. உரிச்சொல் நிகண்டு
235. அகராதி

மைத்ராயண்யுபநிஷத் :—இது வங்காளதேசத்துப்பிரதி. இதன் பெயர் "மைத்ர்யுபநிஷத்" எனவும் வழங்கப்படுகிறது.

வடநூல்களின் பெயர்முதற்க ணுள்ள மெய்யெழுத்துக்கள் தமிழ் வழக்கிற்கியைய உயிர்மெய் யெழுத்துக்களாக வரையப்பட்டன.

முதற்புத்தகத்திற்போந்த லிடயங்களும், அவை நிலேபெற்ற பக்கங்களும்

திருப்பா மூலம் பாடப்பட்ட காலம் பக்கம் - 1.

திருப்பாவென்பதன் பொருள் விவரம் ப - 1.

சிறப்புச்செய்யுளாயுள்ள ஒரு வெண்பாவின் பொருள் ப - 1, 2.

பாவென்பதன் பொருள் ப - 2.

திருப்பா அழகுடனுக்கப்பட்டமையும், ஓசை பூட்டப்பட்டவாறும், சத்தபேதம் 67 - என்பது முதலியனவும் ப - 2, 3.

எளிய நடையில் யாக்கப்பட்ட தமிழ்ப் பயிற்சியினிழிவு ப - 3.

தமிழ்ச் சந்தப் பாட்டுகளிற் கத்தக் கடவுளது திருவுள்ள மிக்க விருப்புடைத்து ப - 3, 4.

திருப்பாவி னுரை "நிட்பம்" எனும் பெயர் பெறீஇய காரணம் ப - 4.

யுத்தி வாதத்தோடுங் கூடிய பல வுரைகளும் பாஷ்யங்களுமே பல மதங்களாகக் காணப்படுகின்றன வாகலின், நூலாசிரியனே உரையாசிரியனுமாதல் பெரிதும் விரும்பத் தக்கதெனுந் துணிபு ப - 5, 6.

அழுக்காறுடை யொருசார்ச் சைவர் செய்கை ப - 6, 7.

வைணவரைத் தண்டித்த தீர்ப்பையுடைய C.C. கம்பர் விவரம் ப - 6.

வேதம், தமிழ்வேதம், திராவிடவேதம், சத்தியவேத மென்பன பற்றிய விகழ்ச்சி ப - 7.

வேதமெனுஞ் சொற்பொருள் ப - 8.

அபரவித்தையும், பரவித்தையும் ப - 9.

ஈவன் முத்தனும் பாடல் பாடுவன் ப - 9.

எக்கலேக்குஞ் சண்முகசிவன் றெய்வம்; அவன் எல்லா வுலகத்தாருக்குங் கடவுளென்பது ப - 12.

கிரேக்கர்களின் அரசனை அலெக்ஸாந்தரே 'ஸ்கந்தர்', சைவர் தெய்வமாகிய மகாதேவனும் அவன் மகன் கந்தனும் மனிதரே, மீனாக்ஷி மகன் கந்தனெனு மொரு மனிதனுடம்பு அடக்கப்பட்ட இடமே திருப்பரங்குன்ற மென்பன முதலிய அசப்பியக் கூற்றுக்களே மறுத்தல் ப - 12, 13.

அசப்பியர்கள், வேதாகம புராணேதிகாசாதி பனுவல்களிலும் பல சில மாற்றினர், நுழைத்தன ராகலின் முக்குநூல்கள் சொரூபக்கேடடைந்துளவென்பது ப - 13.

இவ்விந்து தேயத்திற் படித்தவர்களுள்ளும் பலர் பொய் புகறலிற் பெரியராயிருக்தனரென்பது ப - 13, 14.

தெய்வத்தாற் காக்கப்படா வொருபடித்த மானவனுக்கு இப்பூமி கீக்கமே பக்தவிடுதலேயென்று கூறலாம் ப - 14.

இந்நூலாய திருப்பாவினேப் பாராயணஞ் செய்தலினலும், பீடத்திரீ இப் பூசித்தலினலு மெய்துகலம் ப - 14.

சாதிச் சண்டையினுற் றம்மை யுயர்த்திக் கொள்வோர் சூறுவதிய தென்பதும், அவ்வுயர்வுடைமை பயன்படா தென்பது மூணரற் கொரு நுட்பமும், வேறு சிலவும் ப - 15.

மதக்கூட்டங்களின் சிறுமை பெருமை பற்றி ஐரோப்பிய ரபிப்பிராயம் ப - 15.

பிராமணனெவான் யாவனென்ற லறிய வேண்டுமாயின் இந்நூல் 77 - ஆம் பத்தை நோக்கலாம் ப - 15.

கிறிஸ்துமதம் யாண்டும் பரவுதற்கு ஆங் கிலமொழி விருத்தியுங் காரணமா மென்பதும், விவரமும் ப - 16.

தமிழிற் புதுமொழிகள் சேலாலுண்டாம் பயன் ப - 16, 17.

விடயங்களும், பக்கங்களும்

1914 - ஆம் வருடங்காறும் வழங்கப்பட்ட பாடைகள் 3500 - ல் அதிகமுப் வழங்கப் படுவன ஏழு ப - 16.

தமிழ்பேசு மாக்கர் ஏறக்குறைய ஒன்ற ரைக்கோடி யென்றலின், தமிழே குறை நிலை நிற்கின்றது ப - 16.

தலைவன தருளற்புதமுங் கண்டு கூறு முன்னையு முட்கொண்டிலகுவது தமிழ் வேதமே யென்பது மதன் சிறப் பும் ப - 17.

"நமः" ஆர்ந்த கடவுணமார்ச்சன முத லியவற்றிற்கு வடமொழி முக்கியவுதவி யாய் நிற்பதாகலின், தென் மொழி வட மொழியெனு மிருதிறமுக் தமிழர் கொண் டுய்பவரா வர்; இங்ஙனமே வடமொழியினருங் கொண்டுய்திபெறல் தருதித்து ப - 17.

மறையவனுகிய சுக்தரப்பெருமா னருளிய திருத்தொண்டத் தொகையினை ஈண்டு நோக்கவேண்டும் ப - 17.

வடமொழியுங் கற்றதமிழர் இருவிழியு முடையரை யொப்பர் ப - 17.

வித்தை 14 - னு ளொன்முய சைமினி மீமாஞ்சை பிரமாணமாதல் ஏற்புடை யளவிலேயே யென்பது ப - 17.

அவ்வித்தைகளு ளொன்முய தருக்க நூலும் பிரமாணமாத லேற்புடை யளவிலென்பது சூருதியிலும் பெறலாம் ப - 18.

கடவுளுடைய திருவாக்கின் முன்னே தருக்க நூலிற் கியாதொரு செயலுமின் றென்பதே யிந்நூலாசிரியர் துணிபு ப - 18.

அதிவாத தருக்க மிவ்வாறிருக்கு மென்பது ப - 18.

இந்நூலாசிரியரது முடிவான சித்தாந்தம் ப - 18.

வணக்க முதலிய மூவகை மங்கலமும் இந் நூற்க ணடங்கி யிருக்கின்றன வென் பது ப - 19.

சிவசுவாமியைத் தியானிப்பாம் ப - 21.

ஆன்மதத்துவவித்தியாதத்துவ சுத்ததத்துவ விவரங்களும், மேதை முதலிய 16 - கலை களின் பெயர்களும் ப - 21.

மகாமாயையின் சிறப்பு ப - 22.

கருவி 38 - ங்கடத்துள பொருளே பரம்; அது சுப்பிரமணிய மென்பது ப - 22.

கருவி 28 - ம் ஆகமத்திற் கூறப்பட்ட படி யே வேதத்துங் கூறப்பட்டனவென்பது ப - 22.

சச்சிதானந்த விலக்கணம் வேறு வேருகப் பிரிக்கப்படா வொன்று ப - 23.

ஞாதுரு, ஞானம், ஞேயமென்னுக் திரிபுடி ப - 23.

அஹங்கார மமகாரமென்னு மிரண்டினை யுஞ் செருக்கென்பது ப - 23.

செல்வ மென்பதன் பொருள் ப - 23.

வடமொழியினை இருந்த படியாகவுக் தமிழ் வழக்கிற்கியையவுங் கூறலாம் ப - 23.

தாராள மென்பதன் பொருள் ப - 23.

எங்கு நிறைவாயவிர் சுகட்பிரம மென் பதை யெண்ணுதெண்ணி யிறைஞ்சல் செய்வாம் ப - 24.

சிருட்டி முதலிய ஐம்பெருக் தொழில் களுஞ் சத்தியோசாதாதி ஐக்து திரு முகங்களாலு நடை பெறுமென்பது ப - 24.

தடத்தலக்கண சொரூபலக்கண விவரம் ப - 26.

சொரூபலக்கண மொன்றின் கண்ணேயே கடவுளை வைத்துத் துதித்தலும், வேண் டலும், வேண்டுமா றுணர்த்தலும், ஆசி ரியனுய் வெளிப்பட்டரு ளன்புணர்த்த லுமே இந்நூற் குடன்பாடாம் ப - 26.

வைதிக சைவ மென்னும் பிரயோகம் ஆக மோக்தமே யென்பது ப - 27.

சைவமென்னும் வடமொழி சிவசம்பந்த மென்னும் பொருண்மைத்து ப - 27.

சுப்பிரமணியத்தின் றிருப்பெயர் சிவம், சிவன், பரமசிவன், சதாசிவனெனவுங் கூறப்படற்குரிய பிரமாணங்கள் ப - 27, 29.

சுப்பிரமணியனை வழிபடு சமயஞ் சிவசமய மென்பதும், அவ்வழிபாடுடையார் யாவ

ரும் வைதிக சைவரெனப்படுவரே யன்றிக் கௌமாரரெனப்படா ரென்பதும் ப - 27.

கௌமாரசமயம் இன்னதன்மைத்தென்பது ப - 27.

அணுசதாசிவர் முதலியோர்க்குஞ் சுப்பிரமணியங்கடவுளாதலினது முதற் கடவுளாம் ப - 27.

பிரமமென்னுஞ் சத்தமே சிவனெனவும், மகாதேவனெனவும்; "சுப்ரஹ்மண்ய" என்னுந் திருப்பெயரிற் 'ப்ரஹ்ம' எனவுகிற்பதாயிற்று ப - 29.

கிகண்டு வழக்குச் சாலுமளவே சாலும் ப - 29.

சுப்பிரமணியனது பரமாற்புத வுறையுளான பாரமேசுவர வடிவமும், பரத்துவமும் ப - 30, 31, 32, 35, 36, 38, 41, 52.

சுப்பிரமணியனது அளவிலாத் தேஜோமண்டலத்திற் பிரமவிட்டுணுக்கண் முதலிய தேவசிரேட்ட ரனேகரும் ஆயிரத்திலோரமிசவளவே யறிந்தனர் ப - 31.

அத் தேஜோமண்டல சுப்பிரமணியனெருவனையே வழிபடுஉம் அடியாரனேகரும் மஹாதேஜோ மண்டலத்தாராவரென்பது ப - 31.

சுப்பிரமணியன், பிரமா முதலிய மூவரினுமேம்பட்ட சதுர்த்தப் பொருள் ப - 31, 50.

யான் யோகவிற் பிரணவப் பொருளையறிந்தனை; நின்னல் அகத்தியனுக்கு முபதேசிக்கப்படும் இப்பிரணவ பரம்பரை இடையிறவின்றி இனி விளங்குமென்று குமாரனே நோக்கி உமாகாந்தனுரைத்தனன் ப - 32, 55.

குகனது பரமாற்புத வலியை யாவரேயறியவல்லாரென்பது ப - 32.

பரப்பிரமமே குழவிப்பான்மைகொண்டு திருவிளையாடல் பல புரிந்தது ப - 33.

பார்வதிநாதன் ஐம்முகச்சிவனென்பதும், பார்வதிநந்தனன் அறுமுகச் சிவனென்பதும், அறுமுகச் சிவன் சிருட்டியாதியைந்தொழில்களையும் விளையாட்டாகவே புரியுந்தலைவனென்பதும் ப - 33.

தேவயானையே உமையவள் ப - 34.

பிருகற்பதிபகவான் முருகனுகிய முதல்வன் பாற் சரணடைந்தமையும், ஆன்மகோடிகட்குப் பூரணானுக்கிரகம் புரிபொருட்டு ஈசன் அறுமுக னென ஐம்முக னென மிளிர்கின்றமையும், பேதப் படுத்தலொண்ணுமையும் ப - 34, 35.

பாலசுப்பிரமணியம் பல குழவிகளாயும் வேறு பல வடிவங்களாயு நின்று பற்பல திருவிளையாடல் புரிந்த நிறமும், அவற்றுட் காதண்டமொன்றாகி மிக்க கிழவனுய் நின்றமையும் ப - 33.

குமாரநாதன் கொண்ட வடிவங்கள், ஒவ்வோரற்புதத்தனவே யன்றி ஒன்றின் விகாரமாம் பரிணமதேகமன்று ப - 37.

அவன் செயல்கள், கற்றுக் கொண்டியற்று வித்தைகளுட் சேரா ஈசுரப் பிரபாவமாம் ப - 37.

அவன் சூரபன்மனைப் போருக்கழைத்து வேறல் கொண்டதும் ஒரு விளையாட்டேயாம் ப - 37.

சுருதியி லுளதும், சண்முகனுடைய ஸஹஸ்ரநாமத் தொன்று முளதுமாய "ஸத்ய ஸங்கல்பன்" என்பதன் பொருள் ப - 37.

சிவனுக்கு வேறுகச் சத்தியைப் பிரித்தல் பிழையாதல்போல ஐம்முகனையு மறுமுகனையும் பிரித்துப் பெருமை சிறுமை பேசுதல் பிழையாம் ப - 38, 39.

சிவன்கட் டோன்றினமையிற் படைக்கலத்தரசு பெற்றமையிற் சிவனுக்குக் குமாரன் சமமாகானென்பதன் மறுப்பு ப - 38.

கௌமாரபுவனந் தாழ்நிலைத்தென்பதன் மறுப்பு ப - 37.

திருக் கழுக்குன்றத்துக் கழுகுகளின் வரலாறு ப - 38.

சிவலிங்காகாரம் அருவுருவாயுளது ப - 39.

சோமாற்கந்த மூர்த்தவண்மை ப - 39.

குமாரனது கட்டளையினுலேயே நான்முகன் முதலிய மூவருந் தத்தந் தொழில்களைச் செய்கின்றனர் ப - 40.

யாவையு நடாத்து காலஞ் சுப்பிரமணியன் கைவசத்துளது ப - 40.

முருகனே யறிக்துய்தனீத்துத் துக்கங்கடத் தல் கூடாதெனுஞ் சித்தாந்தம் ப - 40.

முருகன் அழிவிலான் அடியார்க்கிரங்கி யருள்வோன் எல்லாப் பாவங்களையும் எருக்கி யருள்வோ னென்பதும், அவன் சூரபதுமன் பிறக்கு முன்னரேயேயுள்ள அனாதி சித்தியமூர்த்தியென்பதும் ப - 40.

சகலாதன், சருவாண்டாதிபதி, காலரூபி, யோகாதிபதி, சாந்தன், சருவஞான இருதயன், மிக்க பரிசுத்தன், சத்திய ஞானானந்தசொரூபி, பராபரன், பரப் பிரமம், உமாசங்கர ராசைக்குரிய மூர்த்தி, ஈசன், சருவேசனெனவுங் குமாரபிரான் படிக்கப்பட்டனன் ப - 41.

குமாரபிரான் பிருதிவிமுதலிய அட்ட மூர்த்தியுமாயுளன் ப - 41.

கந்தன் திருமேனியிலேயே சகல அண்டங் களுந் தோன்றி யடங்குகின்றன ப - 41.

முருகவேள், மூங்கையாகச் சபிக்கப்பட் டனனென்பதன் மறுப்பு ப - 41.

சத்திசபிக்கப்பட்டாளென்பதுஞ் சழக்கு ரையாம் ப - 41.

சத்தியோடு சிவனுஞ் சபிக்கப்பட்டன னெனும் அசப்பியக் கதைகள் ப - 42.

குமாரன் சிகண்டருத்திரனுக்குச் சமமாக லாம், மகேசனுக்குஞ் சதாசிவனுக்குஞ் சமமாதல் கூடாதென்பதன் மறுப்பு ப - 42.

யாவுங் குமாரனுடைய மகிமையே, அஃ தென்னுல் விரித்துக் கூறற்கு 600 - கோடி வருடமும் போதாமே யென் றெழுந்த திருவாக்குப் பார்வதிபதி யினதே ப - 43.

முருகனைப் பரிவார தேவதை யென்றிழித் துரையாடலை மறுத்தல் ப - 44.

குமார காமார்த்தம் முதலியன ப - 44.

கந்தபிரான் உலகை வலம் வந்ததனுண்மை ப - 44.

அனேகேசுரவாதம் பிடியா தொருதெய்வத் திலையே சரணமாக வடைதலும், வழி படலுமே சிறந்த கொள்கை ப - 45, 46.

வடமொழிமறையுங் தென்மொழிமறையு மொருதெய்வ வழிபாடே சிறப்பிற் போதிக்கின்றன ப - 45, 48, 47.

பல மூர்த்தி வழிபாடு பந்தமே ப - 47.

ஒவ்வொரு கன்மங்களிலும் இறைவனை யேவுதல் அவனது மாண்புணரா மாலைத் தாம் ப - 47.

ஆசிரியன் சீடனுக்குச் சிவோபாசனையை நல்கியருண்முறைமை ப - 47.

குருவையும் அடியவரையும் வணங்குதல் பரம்பொருள் வணக்கமா யெண்ணப் படும் ப - 48.

பசுவர்க்கப் பல தேவமூர்த்திகளையும், பதி யாயுள்ள மூர்த்தியையும் ஒன்றுக விர விக்கொண் டாராதிப்பார் புண்ணியஞ் சிறப்புடைத்தன்று ப - 48.

ஈசனுக்குச் சமமாக விட்டுணு முதலிய தேவர்களைக் கூறுண்ணுது ப - 49.

உன்மனு லோகத்திற்கு மேலாகவுளது சிறந்த சிவலோக மாகலின் இதன் மேற்றுக வெவ்வுலகுமின்று ; இது சோமலோக மென்றும், அப்பிராகிருத கைலாயமென்றும், நித்திய மென்றுங் கூறப்படும் ப - 49, 50, 54, 55.

உன்மனு வென்னுங்கலை பிரமாக்திரத் திற்கு மேலாகக் கூறப்படு விவரம் ப - 49.

சைவமார்க்கந் தடைதணந்த சிருபா மார்க்கமா மென்பதற்குரிய ஏது ப - 50.

லோகண்டனையறிக்தவன் மிருத்யுவைத் தாண்டுகின்றனன் ; விடுதலைக்கு வேறு வழியின்று ப - 51.

தக்ஷிணமூர்த்தி யறிவிக்கவன்றே சனகாதி முனிவ ரறிக்தனர் ; ' காண்பாரார் கண் ணுதலாய் காட்டாக்காலே ' என்பதனுட மப்பொருட்டன்றேவென்பது ப - 51.

ஐம்முகச் சிவனது திருநாமத்தை யுச்ச ரித்தே அவனை முன்னிகின்றே சுவாணு பவச் செல்வர்க ளாயினமைக்குச் சான்றுயுள்ளார் திருப்பெயர்கள் ப - 51.

அறுமுகச்சிவனை முன்னிகின்றே சுவா ணுபவச் செல்வர்க ளாயினமைக்குச் சான்றுயுள்ளார் திருப்பெயர்கள் ப - 51.

மேலுஞ் சிவனே முன்னிகின்ற பெரியார் பெயர்கள் ப - 52.

புருவமத்தியிற் காணப்படுமொளி பாஞ் சோதியன்று ப - 51.

கிர்க்குண உபாசனே செய்கின்றுஞ் சொரு பத்தைத் தியானிக்கின்றுமெனப் பூதா காசத்தைப் பாவித்தன் முறையுமன்று ; அருணெறியுமன்று ப - 52.

இறைவன் திருமேனி அல்லது திருவடி யைப் பாவித்துத் தியானித்தலே யுய்திக் குரியதென வலியுறுத்தல் ப - 52.

கடவுள் சொரூபம் யாண்டு முண் மையின் அஃதுருவுடைச்சிவர்க ளடைதற்குரிய சன்னிதானமாகாது ; தடத்தமூர்த்தி யிருக்கையே சன்னிதானமாம் ப - 53.

கிறிஸ்தவர், முகம்மதியர், வைணவர், சைவர் முதலிய மதத்தினருட் சிலர் குழுமிக்குயிலு மொற்றுமை அனுட்டிப் புக் கையைாப் போலியேயாம் ப - 53.

ஐம்முகச் சிவன் ஆறுமுகச் சிவனென இரு மூர்த்திக ளியம்பப்படுதலின், ஒரு மூர்த்தி வழிபாடு யசங்களங் கூடுமெனு மாசங்கை நிவர்த்தி ப - 53, 54.

பிரமாணங்களுட் பரத்துவார்த்தத்திற் பொ துவாக வருஞ் சிவன் ஈசனென்பன முதலிய பெயர்கள் ஐம்முகனுக்கு மறு முகனுக்குங் கொள்ளப்படும் ப - 54.

வழிபடு தெய்வங் குமார மூர்த்தியா யிருப் பின் ஒல்லையி னெளிதினெளிதாக ஈறி லாக் கதியெய்து மெனற்காம் ஏதுக்கள் ப - 54 55, 56.

குமார மூர்த்தி தேவர்க்கெல்லாந் தேவ னென்பது — பிரமன், விட்டுணு, இந்தி ரன் முதலிய சிறந்த தேவர்கள் புரிந்த செய்கைகளானு முணரக் கிடக்கின் றது ப - 55.

முகம்மது மார்க்கத்தை யடைந்தாரே மோக்ஷமடை வார் ; ஏனையோர்க்கு மோக்ஷமேயின்று என முகம்மது மத நூல் கூறல்போல வேறு பல மத நூல் களுங் கூறும் ; இதுபோற் சைவ நூலுங் கூறுமென்பதைச் சைவருணர்ந்து பேசன் மரபு ப - 56, 57.

முக்குண மும்மூர்த்திகளு மொருவனும் இருமலப்பகுவர்க்கத்துமொருவனுமாய சிகண்டருத்திரனுடைய குமாரனே முருகனென்றும், அவ்வுருத்திரனுடைய தேவியே உமையென்னும் பார்வதி யென்றும், சிவாலயங்களெல்லாம் அவ் வுருத்திரனுக் கிருப்பிடமென்றும், தேவார திருவாசகாதி திருமுறைகளும் அவனையே பாடப்பட்ட பாட்டுக்களா மென்றும் பகரு மொருசார்ச் சைவர் கொள்கையினைப் பிரமாணங்களைக் கொண்டு மறுத்து உண்மை நாட்ட லும், மகேசுவரன் சதாசிவ னென்னு மூர்த்திகளைப்பற்றி விசாரணைபுரிதலும் ப - 58 முதல் 87 - வரையிலும்.

மகேச மூர்த்தம் உடு - ன் விவரம் ப - 74.

கைலாசம், மகா கைலாசம், மந்தரம், மகா மேரு, சக்கரவாளமாகிய இம் மலைகளி லுஞ் சிவலோகத்திலுங் தேவி கந்தன் விநாயகனென்னு மூர்த்திகளுடனுங் கணங்களுடனு மிருக்கின்ற ஈசன், எல்லா ஆன்மாக்களுக்கும் ஏற்புடை யனுக்கிரகம் புரிவான். நித்திய நிருவிகா யாட லயர்கின்றனன் ப - 82.

உமையோ டேய்த்துள்ள சிவனே சோ மன் ப - 82.

துவாதசாக்தம் உமாபதிவைகுந்தானமே ; இதன்கண் வித்தியாதத்துவ சிவதத்து வங்களெனும் கூ - ம் அடங்கலாமென் பது ப - 82, 83.

சொரூபலக்கண சிவமே தடத்தத்திரு மேனியு ளான்மாவா யிருப்பது ப - 83.

உரு அரு உருவருவென்னுந் திருமேனி களு ளைதனையு முடையானுயிருப்ப வனும் உமாபதியே யென்பது ப - 83.

சகங்களுக்கு அதிதேவதையா யுள்ள பராசத்தியே பார்வதி ப - 84.

நமச்சிவாய மகாமந்திர தெய்வம் பார்வதி பதியே ப - 84, 85.

திருகேதாரகமப் பிறழ்ச்சி ப - 85.

"சருவ வேதார்த்தத்தில் யான் திருத்தி யுடையவனுயிருக்கின்றேன்" என்று கைலாசபதி திருவாய் மலர்ந்தருளியது ப - 85.

வேத நிந்தை வேதாந்த நிந்தை வேத ஞானிநிந்தை குற்றமென்று சிவாகமங் தெளிக்கின்றது ப - 86.

வேதாந்தம் பூர்வபக்கமாமென்பது நவீன வெற்றுரையென காட்டப்படல் ப - 86.

மனுடர் சேய்களுங் கடவுட்சேயும் ப - 87.

முருகனுக்கு அரன்போதிப்பதிற் தூலனச் சம்பிரதாயமாய்த் தீட்டியுள்ள சொற்கோக்கொண்டு முருகனுக்கு அறியாமை கற்பிக்க முயலலவலமென்பது ப - 88.

முருகவேள் தேவராதனே புரிந்தனனென்னுந் தலபுராணக் கதைகளுமேற்புடையனவல்ல ப - 88.

திருப்புகழ் பாடுஞான்று இடையிடையே 'கோவிந்தம்' போட்டுக்கோடற்கொரு நியாயமுமின்று ப - 89.

அறுமுகன் றிருமேனியும் ஐம்முகன் றிருமேனியும் பிரணவமே யென்னுந் தாபனம் ப - 90 முதல் 93 வரையிலும்.

பிரணவத்தின் பெயர்கள் குடிலை முதலியன வென்பதும், விவரமும் ப - 90.

பிரமமந்திரமும், அங்கமந்திரமு மென்னும் கக - மந்திரவிவரம் ப - 92

மூர்த்திக்குச் சிற்சத்தியே திருமேனி யென்றல் பொருந்தாது ப - 92, 93, 94.

சுத்தமாயா தத்துவம் ஞ - ஞ் சைதன்னிய மெனவே கொளப்படு மென்றற் கேற்புடை நியாயம் ப - 93.

பஞ்சகிருத்திய ஈசுவரமுக மைந்திற்கு முரிய நிறங்கள் ப - 94.

சத்தி பேதங்கள் ப - 95.

நிஷ்களம், நிஷ்க்ரியம் என்பன யாங்ஙனங் கொள்ளத்தக்கன வென்பதும், உள்ளும் புறம்பு மொருதன்மை யென்பதும் ப - 95.

சிவன், பிருதிவி முதலிய எட்டு மூர்த்தங்களிலும் எட்டு நாமமுடையவனுய் நிற்கு நிலை ப - 96.

திருமேனிவாயிலாகவு மேற்புடைக்காரிய மிழைக்கப்படுமென்றல் கந்தபிரான் பிரமனிக்குட்டிய செய்தியினும் பெறப்படு மெனல் ப - 96.

திருமேனி விசேடம் ப - 98.

பிரணவத்திற்குஞ் சத்திக்குமுள்ள சம்பந்தத்தால் அவ்விரண்டு மொருபெயரால் வழங்கப்படல் ப - 97.

சொரூப சிவத்திற்குச் சத்தி சூக்குமமெனப்படு ஞான்று மந்திரந் தூலமாகலாம் ப - 97.

அகாராதி பிரணவமாத்திரை ஐந்தின் கண்ணவேயுந் தோன்றிய கலைகள் அறுபத்து நான்கு ப - 97, 98.

தாரகமென்பதன் பொருள் ப - 98.

பிரணவ நிந்தை இகத்தும் பரத்துங் கேடு பயக்கும் ப - 98.

வேதத்தின் பாகுபாடான கருமம், உபாசனை, ஞானமென்னு மூன்றனுள்ளும், ஆகமத்துச் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னு நான்கனுள்ளும் ஈற்றிலுள்ள ஞான மொன்றுதான் தூலசிரியர் கருத்திற்கு இஞ்ஞான்றியைந்ததென்பது ப - 99.

இரவு பகலில்லா நிலையே கலந்தருணிலை யென்றலும், விவரமும் ப - 100.

வாமம், ஜாகுளம் முதலிய அவைதிக ஆகமங்களு மூல ப - 100.

வேதாந்த சித்தாந்த சமரசமாட்டே வாதமில்லா மெளனந் தோன்றும்; அதுவே முடிவான வுண்மை ப - 101, 103.

உலகத் தோற்றுவாய்பற்றியும், இறுவாய்ப் பூரணனுபூதி பற்றியு மெழுவாதங்கள் உரைக்கடங்கா மெளனத்தி லடங்கற் பாலன ப - 103.

வேதாந்த சித்தாந்த சமரச மென்னுந் தாயுமானர் திருவாக்கிலே "சித்தாந்தம்" என்றது (தமிழ்ச்சிவஞான போத முதலிய நூ - நூல்களேயன்று:) ஆகமாந்தமே யென்னுந் தாபனம் ப - 101, 102.

உபநிடதப் போக்கினே யுட்கொண்ட நூல்களுக்குக் கூறியது கூறலென்னுங் குற்றமின்று ப - 102, 103.

சுத்தாத்துவைதமும், பெத்தாத்துவைதமும், பாவனாத்துவைதமும் ப - 107.

மனத்திற் பொருந்திய மாசு, திருவருளுக்கு முன்னுக நில்லாது ப - 108.

இருஷப்பற்றிய விசாரணை ப - 108 முதல் 112 - வரையிலும்

செம்பிற்களிம்பு போல்வது மலமென வேதமும் விளம்பினதும், ஆணவமலத்தின் பெயர்களும் ப - 110, 111.

ஈசனுடைய நிரோதான சத்தியே மோக்கமாகிய வீட்டிற்குக் கபாடமாகவுளது ப - 111.

துட்டரைத் தண்டித்தலுஞ் சிட்டரைக் காத்தலும் இறைவனீதியிலு முள்ளன ப - 118.

ஆன்மாக்களைப் பந்தத்தினின்று விடுதலை செய்யுங் காரியம் அனுக்கிரக வருட் சத்திக்கே யுரித்தென்றோது பிரமாணங்கள் ப - 114, 115.

விடுதலைப் படுவான் கடமை, உடல், பொருள், உயிரென்பன வொப்புவித்தடிமையாய் நிற்றல் ப - 115.

தகராலய ரகசியத்தை இறைவன் இந்நூலாசிரியர்க் கருள் புரிந்து மறைத்த கேத்திரம் ப - 117.

இருதயார்ச்சனத்தையே செய்தல்வேண்டும், வெளியர்ச்சனத்தைவிடல் வேண்டும் ப - 117, 119.

எண்குண விவரம் ப - 118, 119.

ஆன்மாவாகிய சுயம்புலிங்கத்திற் புரியும் பூசை சிறந்தது ப - 119, 120.

பிரமசரிய நியாயம்பற்றி யெழு மாசங்கை நிவர்த்தி ப - 120.

ஏறுதுறையு மிறங்குதுறையும் முத்தி நகரயாத்திரையிலுள ப - 121, 122.

தூல நீங்குமுன்னே ஜீவன்முத்த அதிகாரமும், அது நீங்கலுங் காலன்முத்த அதிகாரமுமாம் ப - 123.

சுவானுபூதியிற் றரிசிக்கப்படு பொருளின் இலக்கணத்தை அருணகிரி நாதரது வேதமெடுத் தறைதல் ப - 123.

குகனென்பதன் பொருள் ப - 124.

சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதமென்பனவும், "ஸஜாதி விஜாதி பேத ரஹிதம் ஸத்யம்" என்பதும் ப - 123.

ஆநந்தமெனவரைவதும், ஆனந்தமெனவரைவதும் ப - 127.

சச்சிதானந்தத்தில் 'ஆனந்தம்' இனைத்தென்பது ப - 128.

அணு பசுவும், சம்பு பசுவும் ப - 128.

உற்பத்தியிற்றானே நன்றுந் தீது மமைக்கப்பட்டன வென்றற் கேற்புடையுவமைகளும், கிரி சருப்ப நியாயமும் ப - 129, 130.

பூருவ புண்ணிய பலனை யனுபவிக்கப் பிறர்தார்க்கே கண் முதலிய விந்திரியங்கள் முத்தி நெறிக்குத் துணையாக நிற்கும் ப - 130, 143, 146.

பாவ புண்ணியங்கட்குப் பொறுப்புப் பொருள் சிவான்மாவே யென்னுமுடிவு வலியுறுத்தப்படலும், கடவுள் சத்தி ஆன்மசத்தி யெனப்படலும் ப - 132 முதல் 136 வரையிலும்

கோபுரத்தைக்காட்டி யிது செய்தவனிருத்தல் வேண்டுமென்னும் வழி உலகினைக் காட்டி யியற்றியானிருத்தல் வேண்டுமென்னும் அனுமான வளவை, பொருந்தாப் போலியென்றற் காம் வியவகாரத்தின்மீ தெய்து முண்மை ப - 134.

இப்புடவியி லுய்தற்குரிய நித்தியவுயிர்கள் இத்துணையவெனவேற்பட்டுளவாகலின், ஒருயிரேனும் பிறவாமுத்தி பெறுதென்னு முடிவினை மறுத்து அத்திறமுத்தி யுண்டெனல் ப - 137, 138.

பிரமா விட்டுணு உருத்திர னென்பார் இரார்; நினைப்பார் நினைப்பின் வண்ணம் அவர்களாகவும் பிரமமே தோன்றி மறையுமென்பார் மாற்றத்தை மறுத்து அவர்களுள ரென்பதைக்கண்டு கூறினர் திருவாக்காலே நிறுவுதல் ப - 138, 139.

இறந்தார் நன்மையின்பொருட் டியற்றும் உத்தரகிரியைகளைத் தடுத்தல் விவேகமாகமாட்டா தென்றற்காய வதிக்கூறல் ப - 138, 139.

எல்லா வுயிர்களும் பிறவாப் பேறடைந்தபின்றை இறைவன் யாதினைப்பன்? என்னுங் கடா, விடைபெறு கடாவாகா மடம்வரு மிடவையாம் ப - 139.

பசு, அணு வென்பவற்றின் பொருள் ப - 139.

கட்பு காலும், பகை நாட்களும் ப - 140.

சிற்றறிவி னிலக்கணமும், பேரறிவினிலக் கணமும் இனிது புலனுமாறு இருள், சந்திரன், நக்ஷத்திரம், சூரிய னென்பன வற்றை உவமை செய்தல் ப - 140.

மனம் அவாவடிவிற்று ப - 142.

நம்பெயராழியாமே நம் வடிவணைய விக்கிரக மொன்று இப்பொழுதே நாட்டியிட வேண்டும், பூசணைபுரிய வேண்டுமென் பார் கொள்கையும் பேராசையினுழிதரு தலேயாம் ப - 143.

அன்னியப்பண்ட அழிவெடுத்தியம்பல் ப - 142, 143.

கனவும், மனமும் ப - 145.

காண்டல், கேட்டல், மோத்தல், உண்டல், ஊறறிதல், நினைத்தலென அறுதிறங் கவர்த்து நிற்கு முணர்ச்சி, அதீததேவ வழிபாட்டினை முற்று முஞற்றவும் உலக காரியத்தைச் செவ்வனே செய்யவும் வலியற்றது ப - 147.

உலக இன்ப துன்ப நுகர்ச்சிகட்காம் புருட தத்துவ மெனுஞ் சிவகரண மடங் கிச் சிவகரணத்திகழ விராரெல்லாஞ் சுயகலப்பிரிய ரென்பதுண்மை. இவர், துறவிகளை யிழுக்கத்துட் படுத்துத் தம்மை யுயர்த்தியெழுது மிலிதங்கள் உபகார நூல்களாகா ப - 148.

இரத்தினக்கற்கள் சுமத்து விற்போன் அம்மிக்கல் சுமத்து வில்லானென்னும் உவமான வாயிலாகவுணர்த்து மோரறி வுடைமை ப - 148.

கற்றல், கேட்டல், தெய்வவழிபா டிஃதிஃ தெனச் சிலகரும முஞற்றன் முதலிய வுயர்கருமங்களையும் இம்மைப் பயனை யேனும் புகழ்மையினையேனுங் கருதி யியற்றுநர் மேலோராகார். அவற்றை யன்றி ஞ லியற்றுகரே மேலோரராவ ரென்பது முதலியன மிழற்றி நீத்தார் நினையுமெடுத்தோதல் ப - 148, 149.

மனம் வசப்படுமாயின் அருளும் வசப் படும் ப - 150.

சரியை, கிரியை, யோக மென்பவற்றின் விவரம் ப - 151.

ஆகம கருமாசாரியன்செய் தீக்ஷாவழியாக நிருவாணமென்னு மோக்ஷமடைத்து விட்டோமென இறுமாந்திருப்பார் கதி யிழுக்கத்துட் படுமாறு ப - 152, 153.

உணவு நியமத்தானே தாமசம் இராசசந் தணக்குந் தன்மையினாலும், பிராண வாயுவைத் தடுத்தன்முதலிய கருமங்களி னாலும் அக்குண விருத்தியாகு மனத் தின்வலி சிறிது குன்றுமே யன்றி உள்ளபடி யருள்வெளியி லொடுங்காது. ஒடுங்குமா றுஞற்று வது நிருவருட்கே யுரிமையென்றல் ப - 154.

கேசரி முதலிய முத்திரைகளின் விவரம் ப - 154.

உயிர் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மாறைத் தென்பதை யுவமானமுகத்தா னுணர்த்தல் ப - 155.

மாண்டுக்யோபநிஷத்தைத் தமிழின் மொழி பெயர்த்துக்கொண்டு சைவ சித்தாந்தந் தாபித்தல் ப - 155 முதல் 161 வரையிலும்.

நிருவருள் வெளியிலே தனது செயல் கெடநிற்றல் கடனென்பது, உண்மைச் சித்தாந்த மறியு மாற்றலில்லா தார்க்கு உரைக்கற்பாலது மன்று ப - 162.

போதாகாசத்திலே மனம் வாயுவைப் போலத் தோன்றவுள்ளது ப - 163.

முழுமோசமாதல் இன்னதென்பது ப - 163, 164, 166, 167.

ஈசன், தன்னை நினைப்பார் நினைப்பின் வண் ணம் அருள் புரிவோனுயுளன் ப - 164.

கூடிக்கலத்த லென்பதற்கு பொருள் புக றல் ப - 164, 165.

எஞ்ஞான்றும் தான் பிரமமென்றிருத்தன் முத்தியேதுவாமென மறைகூறுதல் பற்றியெழு மாசங்கைவிர்த்தியும், உன் மனிபாவம் இற்றென்பதும் ப - 164, 165.

இந் நிவர்த்தி முதலிய வறியாதாருட் சிலர், இத்திறச்சுருதிகளை ஏகான்மவாதேதர பநிடதங்களெனப் புத்துரை புனைந்து கழித்தல் நியாயமாக மாட்டாதென்று கோடன்மை பெடுத்துக்கூறல் ப - 164,165.

படைக்கலப் பயிற்சியினைச் சார்ந்த தேகாப் பியாசம் போல்வதே பிராணப்பியாசமு மென்றல் ப - 166.

சுத்தவத்து அசுத்தவத்து வாகாது ப - 168.

பரமான்மாவுக்கு வேருன சீவான்மா மாயையிற் கட்டுப்பட்டுளன்: மாயையைப் பிரகிருதியென்றும், மாயைக்குடையானே மகேசுரனென்றும் வேதம் விளம்புகின்றது ப - 168.

முத்தியிலு முப்பொருள்களுளவென்று சித்தாந்த சாத்திரம் முறையிடலும், அதுபற்றியெழு மாசங்கையிற் பாசம் ஆனந்தமயமாய் விடுமென்றலும், இவ்வுண்மையறியா மாக்களையர் வாதம் இறந்துபடாறு மேற்கோள் பலசாதித்தலும், இல்லது வாராது உள்ளது போகாதெனலு மேற்புடைமையில் வைத்தோதப்பட்டல் வேண்டுமென்றலும் ப - 169 முதல் 174 வரையிலும்.

அருணகிரிநாதர், சுவானுபூதிச் செல்வராயிருந்த தாயுமான சுவாமிகளாலும் போற்றப்பட்டார் ப - 174.

திரிபுடி விவரம் பற்றிய ஒரு பெரிய விசாரணே. இங்ஙனே வாக்கு, மனம், பிராணன், தேஜஸ், பரதேவதையென்பன ஒன்றிலொன்று பொடுங்கு மென்பது ப - 175, 176, 28.

ஓரான்மவாதஞ் சாதித்தற்கு ஒத்திடங் கொடாது ப - 176, 177.

செடிவிஞக்கஞ்சா வள்ளுடையர், எப்படியெப்படிக் கூறப்படவுள சென்றலே விளக்கல் ப - 177.

சுருதியிலுஞ் சொல்லப்பட்ட தேவான்மசத்தியை முன்னிட்டுக் கொள்ளா ஆன்மசத்தியினர் காரியம், அத்தேவான்ம சத்தியுடையார்பாற் பலிக்காது பிரமரி கொள்ளும் ப - 178.

பத்திகாண்டி ஞானகாண்டி யென்னும் வியவகாரத்தின் மீது "பத்திவலியிற் படுவோன்" என்றபடி அருணகிரிநாதருடைய அன்புவயப்பட்டவர் முன்வந்து நின்ற முதல்வனனுக் கிரகத்தால் எத்தனே விரைவில் அவர் அனுபூதிமானுயினு ரென்று அப்பத்தியின் மேம்பாடுணர்த்தல் ப - 179.

மெய்யடிய ரென்பதன் பொருளும், மோக்கம் அமிருத மெனப்படுவதும் ப - 179, 180.

துவிதம், ஏகம், அத்துவித மென்பன அரிசியையும், குழை கூழையும், பதச்சோற்றையுமொக்கும். இவற்றுள் துவித வாதம் பேதமெனவும், ஏகவாதம் அபேத மெனவும்படும். பிரமமே சிவனுயிற்றென்னும் இவ்வபேதம் பரிணுமவாதமா மாகலின் இது போதிக்கும் பசுநூல் திருமாளிகைத் தேவராலுர் தாயுமானுராலுங் கண்டிக்கப்பட்டது ப - 181.

பிடிவாதத்திற்குக் குரங்கின் பிள்ளேயினதியல்பினே யுவமித்தல் ப - 181, 182.

கல்லார், கன்னெறி முறைகளே மக்கட்குத் தொடக்கத்திற்ருனே கற்பித்தல் கலன் ப - 181.

காத்திகத்தை நோக்குஞான்று முதல்வனே முன்னிட்ட எந்த மார்க்கமும் உத்தம மேயாம் ப - 182, 188.

உலகாயதம், சாங்கியமென்பன முதலிய கிச்சயங்களேப் பற்றிய பெரிய விசாரணேயிற் பொருத்த முள்ள சிலவுவமைகளுங் காட்டப்படல் ப - 188 முதல் 185 வரையிலும்.

அவித்தை அனுதி யெனச் சுருதி கிளக்கு மாற்ருனே அஞ்ஞான மெய்திய வழி தெரியவில்லே யெனல் பெறப்படுகிறது ப - 183.

சுவானுபவத்தி லொன்ருகவே காணப்படல் ஏகபதார்த்த வாதத்துட்படாதென்பது பற்றியும், அனுபவத்தி லொன்ருகவே காணப்படினும் அனுபவஞ் செய்வோன் ஆண்டிருத்தல் வேண்டுமென்பது முதலியன பற்றியுநிகழ் பெரு விசாரணேயிலே கடவுள் விசாரணே, எந்த முடிவுக்கு மியைபுற (=முற்றும்) வந்து விடாதென்பது மேற்கோள்களோடு பெரிதுஞ் சாதிக்கப்படல் ப - 186 முதல் 198 வரையிலும்.

அனுபவம், சுவானுபவ மென்பவற்றினருத்தம் ப - 187.

பிரித்தறியக் கூடாதிலேயில் இரண்டும் பிரியாதிருக்கின்றன வென்பதை யறிந்து கூறலுங் கூடுமோ? எனக் கடாவி மறுக்கப்படுதலினுறுமொரு நியாயம் ப - 187, 189.

எல்லாம் ஒன்றெனற்கும், இரண்டெனற்கும், மூன்றெனற்கு மியைதல் காட்டல் ப - 188.

காட்சியிலுள்ள அசித்தைவிட்டுச் சித்துத் தனியிருக்குமென்ப தியையாது ப - 188.

கயிற்றினிடத்துண்டாம் பாம்புத்தோற்றவுவமை முற்றுவமையாகவே நின்று பிரமத்தை விகாரப் படுத்துமாறு காட்டல் ப - 189.

மோன முத்திரை ; மோனமே முடிவு என்றல் ப - 190, 191, 195.

அசப்பியமான கதைகளையுந் திவ்விய தெய்வ சரிதைகளாக ஏன்றுகோடன் மந்தமதிகள் செய்கையாம் ப - 190, 191.

யுத்திவாதத்திற் கெல்லையில்லை. (தருக்கமும் இதுவே) ப - 192.

கன்மமலம் அனாதி யெனப்படு நூல் வழக்கானே நாத்திகமு நவிலத்தக்க மாபாதக கன்மமும் பெறப்படு மாற்றானது கடவுளை யெதிர்க்குமொரு கடவுளுமாமன்றோ ? இதற்கு யுத்திவாதிக ளென்செயவுள ரென்பது ப - 192, 193.

சாத்திரக் குழுக்களை விட்டு, உண்மையாதோ அஃதுபாசிக்கத்தக்கதென்று சுருதி கூறுகின்றது ப - 192.

சண்டைகளையிறைவனே வரைந்து கொடுத்தனன், சொற்றன னென்பதை யிறைவனது மோன முத்திரையே மறுக்கும் ப - 192.

பல்லதரானும் ஆன்மாக்களை மயக்கி நிற்குமாயை, பல்புத்தக வடிவாகவு நின்று பெரிது மயக்குகின்ற தெனல் ப - 193.

வாக்கு வடிவாய பிரமாணத்திலுள்ளது அத்வைதமாகலின் அது, கரக்குறியானுணர்த்தப்பட்ட தெனற்கு மியைபுண்மை வாயாது ப - 194.

ஆகமம், அத்வைதத்தை யொன்றெனும் பொருளில்வைத் தோதியதும் பெறப்படுகின்றதே ப - 194.

மோன முத்திரை யுணர்த்து பொருள் ப - 194.

திருமந்திரம் வேதாகமங்கள் பொதுவுஞ் சிறப்பு மென்றதும், சிவப்பிரகாசம் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தமென்றது மொருபொரு ளாமாற்றானே இருதிற நூலுஞ் சூத்திரமும் பாடியமும் போலுள வென்றலு மறியப்படுவதாயிற்று ப - 198.

சுத்தாத்துவைத வுண்மை ப - 199, 194, 195, 107.

அகம்புற னொத்து நிற்கும் பருவத்திலே நிகழ் நிகழ்ச்சி யெட்டு வகைத்தென்பது ப - 200.

இராப்பக லற்ற இடம் ப - 202.

அபரசுப்பிரமணிய மூர்த்திகள் அனேகருளர் ப - 202.

திருஞான சம்பந்த சுவாமிகள், தம்மை முருகவேளென்று கூறிக்கொண்ட செய்தி, அவர் திருவாக்குக்களிற் பெறப்படவில்லை யென்றன் முதலியன ப - 203.

திருஞான சம்பந்த சுவாமிகளைத் திருமங்கையாழ்வார் சந்தித்த செய்தியே யின்றென்னு முண்மைக்குப் பிரபலப்பிரமாணம், அவ்வாழ்வாருடைய வித்தார சரித்திரமாயுள்ள வில்வாரண்ய மாஹாத்ம்யமென்னும் வைணவப்புத்தக மொன்றே போதும் ப - 207, 208.

அரியால் அரன்றிருவடி தேடப்பட்டதென்று திருஞானசம்பந்த சுவாமிகள் கூறுதல் வேத பரிபாலனமா மெனற்கு வேத வசனங் காட்டல் ப - 208, 209.

இறைவனை எந்தையே யென விளித்தலும், தன்னைப் பிள்ளையெனக் கூறிக்கோடலு மேற்புடையன ப - 210.

இல்லந்துறத்த லவசியமென்பதும், மண்பொன் பெண்ணென்னு மாசையினீங்காக் கோளுடையாரு ஞானிகளோ ? என்றிழித்துரையாடலும் ப - 210.

பஞ்சமகதியென்பதன் பொருள் புகன்று நாககதியைச் சேருமுயிர்கண் மனுடருட் பாவான்மாக்களே யென்றலும், போலிகள் பல பணித்து மனிதப் போலி குரங்கு, தேவப்போலி மனிதர், பரமான்மப்போலி சீவான்மாவென்றலும், மேற்கூறவேண்டுவ கூறி மஹாதேஜோமண்டலத்தார் கடன் இற்றென வுணர்த்தலும் ப - 212, 214, 216.

ஈசுரவழிபாடில்லாதான் சன்மத்திலே நீயை வை யென்னுஞ் சூருதிக் கூற்றிற்குப் பொருள்விரித்தலும், சங்கை நிவர்த்தியும் ப - 214.

புலனெறிப் போதனே பயன்படுமாறும், பயன்படாவாறு முவமானமுகத்தானுணர்த்தல் ப - 216.

உயிர் வேதனே பன்னிரண்டுங் கடந்த சாரூப்பிய சாயுச்சியங்களி னுண்மை ப - 216, 217.

சாரூப்பியாத்தமுள்ள பேறுகளே மதியாது சொரூபசாயுச்சியம் பெறற்குரியார், இவ்வுலக இச்சாவிலாசங்களிற் றலைப் படலுடையரா? அவை சிறுவரை குன்றிய நீரா? குருட்முதலாயினர்போலச் சிற்சில நீத்துநிற்குரா? என்னுமா சங்கை வழிப்பெறப்படு நியாயம் ப - 217.

இவ்வுலகினே யினியடையொண்ணு தென்னும் விரத்நிமேயினர்க்குக் கல்விக் கழகம், அறவளாகம், மடாலயம், தேவாலய மென்பனவற்றிலும் இச்சையிருத்தலாகாது; இருப்பின் மீளவு மவ்விடனடைதனேரும்; அவர் தமது பரலோக யாத்திரையிற் சில் பொழுது தாந் தங்குமிடனுகவிப் புடவியினே நிலைத்தல்வேண்டு மென்றற் கொரு வாய்மை வழங்கல் ப - 218.

பேரின்ப நெறிக்குரிய விசேடகபட நீக்கம் முதலிய உத்தம குணங்களெய்தினுஞ் சுவானுபவ ஐக்கியமில்லாமே அவ்வின்ப மெய்தாது; அது திருவருளாலதற் பாலது ப - 220, 221.

ஆஷாடபூதி சரிதையும், பொன்விரும்பினர் படும்பாடும் ப - 220, 221.

"வாதங்கள் சேரின்" என்றதில் வாதங்கள், தத்தஞ் சமயநூல் பிடித்துத் தருக்கித்துப் பேசு மதவாதங்களென்பதும், அவற்றின் பெயர்களும் ப - 221.

தெய்வம் யாங்ஙனம் வயங்குகிற்பது? யாதாயிருப்பது? எனுமாற்றுன் விவரமெடுத்துரைத்தல் ப - 223.

தேவர் முதலிய எழுவகைப் பிறப்பு ப - 223.

சாமானிய அருளும், விசேட அருளும் ப - 223.

இந்நூலாசிரியர்க்குற்றகல்வியறிவு முருகப் பெருமானது திருவாக்கமெனல் ப - 224.

யான் றிருவருளே விழைந்து பாடுவனவற்றைத் தொண்டர் முன்னே படித்துக் காட்டி ஞானம்பேசிச் சுகோதயத்தை நிலைவேன்: அது கிட்டாமை கருதி யுள் வாட்டமுறுவேன்: இதற்கேது நாம்புரி குற்றமாகலா மென்றெண்ணி முகமும் வாடகிற்பேன்: அச் செய்கைகட்குக் காரணமான என் புத்தியையும் வைது கொள்வேன்: பிதாவே! என்னே ஆண்டு கொள்ளென்று மழுவேன்: அழும்வாயினே யடக்கி மௌனமு முறுவேன். இப்படியெல்லாமாயினுந் திருவருளரங்கியருளாவிடின் யாதுசெய்ய மாட்டுவே னென்று நூலாசிரியர் இனைவு நுவன்ற வாற்றுற் பரமான்ம சத்தியினதனுக்கிரகத் தொழிலைச் சிவாண்மசத்தி செய்து கொளாதென்பது வலியுறுதல் ப - 224.

திரோதான நீக்கமே அணுக்கிரகம், அணுக்கிரகமே திரோதான நீக்கமாகலின் அணுக்கிரகமே பதிஞான மென்பது ப - 225.

இப்பதிஞானத்தானே அருணகிரிநாதருருமெய்தப்பெற்றன ரெனற்கு மேற்கோள் ப - 225.

அணுக்கிரகம் ஆரன்பு செய்யார்மாட்டாராது; அன்னேர்புரி தருமமுந் தவமுஞ் செபமுஞ் சமாதிஞானமும் பயன்படாவென் றிறைவனுகிய உமாபதி யோதியருளினன் ப - 225, 226.

இச்சித்தாந்தப், பன் மேற்கோள்களானும் வலியுறுத்தப்படல் ப - 225, 228.

பரமேசுர பத்நிமைவழி ஞானம் விழைய கில்லார் இதயமும் இல்லமும் பிசாசு வாழ் கடனும் படுகாடுமாமென்பதும், இன்னேரை நேசிக்கொணதென்பதும் ப - 227.

பரமேசுர பத்தியின் மாமாட்சியைப் பல்லாற்றுனும் மதனுறுத் தறிவுபோதித் தருனே இந்நூலுழை ஆங்காங்குக் காணவுளது ப - 227.

கடவுள் செயல்களே வியப்பினுட்படுத்துப் பாடற்கும் பணித்தற்குமாம் பிராரத்த

மெய்ஞ்ஞான அது, பாலிற் பழ கழுவி வீழ்த்தலையொக்கும் ப - 228.

கடவுள்பக்தி மெவ்வாற்றானும் வேண்டும் ப - 223.

களிம் பொரீஇயவழிச் செம்பு தங்கம்போலுதலாறு மலமொரீஇயவழிச் சிவன் சிவமென இலகும் ப - 228.

மலம், சகசபக்தமெனற்கும் அதன் நீக்கம் பக்தவிடுதலை யெனற்கு மெடுத்துக் காட்டப்படு முவமை பலவற்றுள்ளுஞ் செம்பே மிக்க பொருத்தமுடைத்தென்றதும், இவ்வுவமைச் சுருதியினையெடுத்துக் காட்டியதும் ப - 228, 229, 110.

இச் சூலாசிரியர், ஒரு காட்டகத்தே வைதிகிட்டை சாதித்த ஞான்று தம்மை யெழுந்து விடும்படி விதித்த கடவுளைச் சிந்தித்து எம் பகவரூள்ள தெய்வமே! நின் கருத்தென்னை? பட்டபாடெல்லாம் வீணைப்போமோ? என்று இனைவு கூறினமை ப - 230.

மாயைக்கு அருவங்கூறுமிடத்து விடய மனமேயாம். உருவ முதலியன கூறுமிடத்துப் பெண்கண் முதலிய பொருள்களே யாம். இத்திற மாயையினை நின்னருளின்றி வென்று விடுவலென்பது சொன் மாத்திரையாயொழியா தென் செய்யும் ப - 231.

மாயை, குணசாமியம் அவித்தை முதலிய அனேகாகார முடையாள்: சகதாகார மாகப் பரிணமித்துளா ளென்னுஞ் சுருதி ப - 231.

'பவிடியம்' என்னுஞ் சொற்பொருளிலக்கணம் ப - 232.

சிலர், தமதற்ப புத்தியினைக் கொண்டே பூதாதி, வைகாரிகம், தைசத மென்னும் அகங்கார மாயையினைக் கொன்று வாழ்வோமென்று சுவாசபக்தனம் புரிவர்; மல மூத்திரங்களை யருந்துவர்; கடவுட்டியானம் புரியா தழிதந்து சாவர் ப - 233.

ஈசுவரத்தியானமே எவ்விடத்தும் எக்காலத்தும் புரியத்தக்க "இலயயோகம்" எனவும், இலயயோகமென்பது "சித்தலயம்" (= மனோலயம்) என்றே கோடி முறை கூறப்பட்டுள தெனவுஞ் சுருதி சொற்றலை காட்டுமாற்றானே வேறு பிரமாணங்களு மெடுத்துக்காட்டிச் சங்கை நிவர்த்தி செய்தல் ப - 233, 234 235.

இத்த யோகமில்லா ஞானமும், ஞானமில்லாயோகமும் விடு பேற்றினை கல்கா என்னுஞ் சுருதி நியாய பரியாரால் இடைகாலத்தே பொறிக்கப்பட்ட புத்தகங்கள், மனோலயமென்றுப் பொருண்முறைமாற்றிப் போதிப்பனவாயின. இதனை, ஈசுர பத்தியில்லா வெளிறர் உணர்ந்தாரல்லர் ப - 235.

இவ்விலய யோகத்தினை ஓரிடத்திருந்து கொண்டே யருற்ற நினைவார் செய்யுமுறைமை முதலியன ப - 235.

இத் நியானயோகில் ஈசுரன் ஞானசாரியனாக வெளிப்படின் அவனது கட்டளையின் படி நடப்பது கடப்பாடாம்; இவ்வாசாரியனது திருவாய் மலரினின்று "யாமுன்னை யேன்று கொண்டாம்" என்னுந் திருமொழி தோன்றினும் உபாசகனது சனன மரணபயந் தீர்ந்து விட்டதாம்; இந்நிலையின் மாதவப் பேறுடையார் மனவருத்தம் யாதுந் தேடிக் கோடல் கூடாது; இறை திருநாமத்தையுந் நியானத்தையு முபதேசித்த குருபத்தி கேடடை யொண்ணுது; சாத்திய மாங்காறு மெவ்வகைப்பட்ட கூட்டத் தொடர்பு மிருத்தலாகா தென்னுந் நிவிடபோதனை ப - 235, 236.

உண்ணிலை நின்று செபிக்கும் மானச செபமந்திரமுந் நியானமுமே இனிது பலிக்கும். அருளே நாவாகத் திருமந்திரஞ் செபித்தலும், அருளே நினைவாகத் திருவேனி நியானித்தலு மெனப்படுமிச் செய்கை, 'முழுமனத்தோடொருங்குபற்றல்' என்பன முதலிய பல் பெயர்களும் பெறுமுமென் றவையற்றையெடுத்து விவரித்தல் ப - 236.

ஆண் பெண்ணென்னு மிருபாலாரும் விடுதலை நிமித்தம் இத்த யோகம் இனிது விழையத்தக்க வேரூபாயமாமென்றல் ப - 236.

மேலுறுவனவெல்லாம் கoஎ - ஆம் பத்து முதலியவற்றிற் கண்டுகொண் முன்ன மே சாலோக்கியத்தை (முதல்வனது) சாமோச்சாரண மொன் றினலேயே பெறலாம், சாமீப்பியத்தை எதிர்முக மான திருமேனித் தியான மொன்றினலேயே பெறலாம், சாரூப்பியத்தை இதய தாமரையிலே திருமேனி தியானிப்பதாய அத்துவைதோபாசனை யொன்றினலே யே பெறலாமென்பதூஉம், இவ் வொ ரோவொன்றும் பயன்படுமாறு மரண பரியந்த சாடோறுஞ் செய்யத்தக்கன வென்பதூஉ முணர்ந்து கொள வேண்டு மென்றல் ப - 283, 287.

இப் பரதகண்டத்தாருடைய மகா சம்பிர தாய கப்பிர மாணகன்ம முடிவும், விவாககன்ம முடிவு மொன்றுபட்ட பேரின்பமாமென முடித்துக் காட்டல் ப - 288, 289.

திருப்புகழ் தெரித்தான் றெய்வமாய் வயங் கும் அவ்வொரு திருமுருகனுகிய செவ் வேட் பரமன் றிருவருட்டுணை கொண்டு ஒல்லுமாறு கடைப்பிடித்துய்க வென் பது ப - 288, 289.

ஓம்
குமாரகுருப்யோ நம:

நூன்முகம்

திருப்பாவென்னும் பெயரிய இந்நூன் மூலப்பாட்டுக்கள் கடவுள் வணக்கமாக ௩-ம், நூலாக ௧௦௯௭-மாம். நூற்சிறப்பு வெண்பாவொன்றும் இவை கூட்டியுறழ ஆயிரத்து நூற்றொன்றும். இவைகள், யாந் துறவற நிலையடைந்த பின்றைக் கலியுகம் ௪௯௯௮-ஆம் ஆண்டென்பதற்கு நேராய சாலிவாகன சகாத்தம் ௧௮௧௯-லே துர்முகி வருடத்திலே ஆக்கப்பட்ட பரிபூரணானந்த போதம், கந்தரொலியலந்தாதி, குகப்பிரம வருட்பத்து, தகராலய ரகசியமென்னு நூல்கட்குப் பின்னர் எம்மாற் பாடப்பட்டனவாம். அக்காலம்—

"வெகுசனத் தொறுவொன்று சேரநன் மாமக
விழாவங் குடந்தையின்கண்
வியப்பா நடக்கவருள் செய்தெனையு மாண்டுற
விதித்து"

என்னும் விடயம் இந்நூல் ௬-ஆம் பத்திற் பெறப்படுதலின், அத்துர்முகி வருடத்து மாசி மாதத்தின் (கி. பி. 1897) எய்திய பன்னிரு மகாமக வெல்லையிற் போந்த புண்ணிய காலத்தானுமறியக் கிடக்கின்றது. 'திருப்பா' என்பது மேம்பட்ட பாக்களினாலாகிய நூலைக் குறித்தலால் அடையடுத்த கருவியாகுபெயராம்; 'பா' என்னும் முதற்கருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலிற்காதலின். அன்மொழித் தொகையாகக்கொண்டு மேம்பட்ட பாக்களையுடைய நூலென நுவலினுமாம். திருப்பா = மேன்மையாகிய பாட்டு எனிற் பண்புத் தொகையும், மேன்மையுடைய பாட்டு எனின் இரண்டனுருபும் பயனுந் தொக்க தொகையுமாம். திரு + பா எனப்பிரிக்க. திரு = 'மேம்பாடு' என்னும் பொருளைப்பயக்குமோரடைமொழி. அந்த மேம்பாடு— அழகுடனாக்கப்பட்டு முழுமுதற் கடவுட் டோத்திரமாகவுஞ் சாத்திரமாகவுஞ் சுடருந் தன்னை, ஓதுவாருணர்தற் பொருட்டு, எல்லா வெழுத்துக்களிலும் விராய் நிற்கும் அகரம் போல எப்பொருளிலுங் கலந்து நின்று யாவையு மியக்காநின்ற அக்கடவுளென்னும் வத்து நிச்சயம் இவ்வாறு கோடற்பாலதன்றாம்; இவ்வாறு கோடற்பாலதாம்: ஆமதனை யடைதற்குரிய பூர்த்தி மார்க்கமும் இன்னதாமெனப் புகழ்ந்து தான் கூறுமதரானே கருப்பப் பையுட்படுங் கையாறெனுங் கைப்பிளைப் பாறச்செய் பேரின்பமென்னுந் தேனை யளித்திடலாம். இதனை,

"எழுத்திறைபோ லக்கலந்தெல் லாமியக்கா நிற்கு
முழுத்தலைவன் மார்க்க முழுதும்—வழுத்திக்
கருப்பா சயவல்ல கண்டக்கைப் போட்டுந்
திருப்பா வெனுமதுரத் தேன்."

என்னும் இந்நூற் சிறப்புச் செய்யுளானு மறியலாம். 'தேன்' என்பது இன்சுவைப்பொரு ளாகலின் "இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தானே அது தமிழென்பதையு முணர்த்தி நிற்பதாயிற்றென்க. என்னை ? இந்நூற்பாட்டுக்க ளெல்லாந் தமிழாயிருத்தலின். நெசவு பாப்போற் செய்யப் படுதலிற் பா, ஆகு பெயராய்ப் பாட்டுக்காயிற்று. "பாவி நடத்தலிற் பாவே" என்றதூஉம் அப்பொருட்டில் வந்ததாம். பாவுதல் = பரப்புதல். இந்நூலகத்தே தரவு கொச்சகக்கலிப்பா, இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா, கட்டளைக் கலிப்பாவெனப் பாவறியப்படும். ஏனைய பாட்டுக்கள் பாவினமென வறியப்படும்.

"பாவொத்து, இனமா நடத்தலி னினமெனப் படுமே"

என்னும் விதிப்படி அப்பாப்போ னடைதரூஉம் இவ்வினத்தினையும், அப்பாவினை யும் பாவெனக் கோடல் இங்கு மரபாயிற்று. ஆதலினன்றே பிங்கலந்தைகண்டினரும்— "சொற்களைக் கொண்டு யாக்கப்பட்டனவும், செய்யப்பட்டனவும் பாடப்பட்டனவும் பாவெனவாம்" என்னும் பொருளுற வொருபொதுவிதியினை,

"தூக்கு மியாப்புஞ் செய்யுளுங் கவியும்
பாட்டுந் தொடர்பும் பாவென் றாகும்."

என்னுஞ் சூத்திரமாய்ச் செய்தனர். இப்பா, அழகுடனுக்கப்பட்டமை யாங்ஙனமெனின்,—சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், கவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலக மலியாமை, விழுமியது பயத்தல், விளங்குதாரணத்த தாதல் என்பழியென்க. ஓசையுடை மைதான் பாட்டகத்தினிது பொருந்துவது. ஓசை குறையினும் மிகினும் இயற்பாட் டாக மாட்டாது. அத்திறத்த ஓசையூட்டப்பட்ட பாட்டுக்களே இந்நூற்கணுள்ளன. அவற்றின் சந்தம்—கழிநெடிலடி யாகிய விருத்தங்களுள் அறுசீரிற் க-ம், எழுசீரிற் க0-ம், எண்சீரிற் க-ம், ஒன்பதின் சீரில் க-ம், பதின்சீரில் க-ம், பன்னிரு சீரின் கூ-ம், பதின்மூன்று சீரில் க-ம், பதினான்கு சீரில் ச-ம், பதினைறு சீரில் க-ம், கலிவிருத்தங்களுட் க0-ம், கலிவிலைத் துறைகளுள் டு-ப், வஞ்சி விருத்தம் க-ம், வஞ்சித்துறை க-ம், கலிப்பாக் களுட் கட்டளைக் கலிகளுள் க-ம், தரவுகொச்சகக் கலிகளுள் க-ம், இயற்றரவிணைக் கொச்சகக்கலி க-மாக (கூன) அறுபத்தேழு பேதங் கொளக் கிடக்கின்றன. எப்பெருங் காப்பியத்திலுஞ் சந்தம் கூ-பேதங்கட்கதிகங் காண்ட லரிதேயாக இந்நூல் இத்தனை அதிக சந்தங்களோடு நிலவுதலும், ஒன்பதின்சீர் பதின்சீர் விருத்தப் பத்துக்களும் கூன, கூஅ, க0டு-ஆம் பத்துக்களுந் தத்தம் வாய்பாடு பிறழாது ஒரோவொன்றும் பப்பத்து வண்ணக் குழிப்புப் பெற்றிருத்தலும், அஅ-ஆம் பத்து அவ்வாறே மூவகைக் குழிப்பும் வேறு சில ஒருவகைக் குழிப்பும் பெற்றிருத்தலும் இந்நூற்குப் பேரழகாம். உயிரோடும் உயிர்மெய்யோடு மனை குறிலுக்குக் குறிலும், நெடிலுக்கு நெடிலும், வல்லொற்றுக்கு வல்லொற்றும், மெல்லொற்றுக்கு மெல்லொற்றும், இடையொற்றுக் கிடையொற்றும் எதுகை மோனையோடுங் கூடிய நாலடியும் அளவாகப் பொருந்த எழுவாய்

பயனிலையேய வண்ணக் குழிப்புடைப் பரட்டுப்பாடுதல், கால்களிற் றண்பூட்டிக் கொண்டு மேளதாளங்கட்கியைய நடிப்பதொக்குமாகலின் எளிதன்றென்பதும் ஈங்குக் கருதிக் கோடற்பாற்றே. இச்சந்தங்க டெரிந்து படிக்கும் வன்மையின்மையினுலோ ?

"போனகான் முயலே பெரிதெனப் பேதிப் புலம்புதல் போல மூன்னுளில்
மானமின் றெழுதி வைத்தபுத் தகக்கோ மான்களே பெரியரென்றுயர்த்தி
ஏனவல் லவரை யிகழும்" [திருப்பா கூ0-சூ.]

தன்மை (= அழுக்காறு) தலைப்பட்டமையினுலோ ? திருநெல்வேலியி லுள்ள சைவப் புலவரொருவர், இப்புத்தகப் பாட்டுக்களின் நடைவறட்சியா யிருக்கின்ற தென்று எம்மையறிந்த வொருவர் பாற் கூறுவாராயினர். அவரும், அவர் போன்முரு முணருமாருகவே சந்தம் பற்றி யிங்ஙன முரைக்க வேண்டுவ வுரைத்தாம். பெரிதுங் கடின வசனமே போன்ற தொல்லோ ளகவற்பா முதலியவற்றிற் பயிற்சியுடையாரும், "ஆமப்பா" "கேளடா" என்னுஞ் சொற்களோப் போல அப்பாக் கிளவியும் அடாக் கிளவியு மலிந்துகிடக்க எளியநடையில் யாக்கப்பட்ட செய்யுள்களோடு பழகினரும், பவளக்கொடிமாலை எணியேற்றம் நல்ல தங்கைகதை முதலியன பயின்று வருவாரும் இந்நூற் சந்தங்களைத் தெரிதற்கும் படித்தற்கும் ஆற்றலற்றவரேயாவர். அகவற்பா வற்புடைமையின் யாருமாக்கல் கூடும். வெண்டளை தெரிந்தாருள் வெண்பாவும் யாரு மாக்கல் கூடும். இன்னோசையுடைப் பாவினங்கள் அங்ஙனங் கூடுவவல்ல. இவ்வோசை யுடைப் பாடல்கள் இஃதிஃதாகலா மென்பது தேர்ந்து அவைகளிலேயே பாடப்பட்ட (கச்சியப்ப சிவாசாரியர்) கந்த புராணத்தையும், கம்பராமாயணத்தையுந் தொல்காப்பிய மாக்கியோர் கண்ணுற்றிருப்பின், அப்பாவின விவரங் காட்டற்குரிய இலக்கணம் அக்காப்பியத்துள் அமைக்கும்வயா மிக்கு ஆக்காதும் போவரோ? என்பதூஉம் எமதுள்ளக் கிடக்கையே. பிற்றைஞான்று யாப்பருங்கலஞ் செய்தாரை மெச்சு கின்றனம். 'இச்சந்தத்திற் பாடுக' எனவெமக்குக் கனவிற் கூறியருளியவாறு மேலே ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி யாகிய விருத்த (வண்ணக்குழிப்புக்களுடை)க் கந்த சாமிப்பத்துப் பாடப்பட்டமையானும், கந்தக்கடவுளது செந்நோன்முட் பத்தியி லீடுபடு மெய்யுணர்வு முதலிய மேன்முணம் வாய்ந்த வேதியரிருவர், சந்தனசயிலமாகிய திருச்செந்தூர்க் கௌடமண்டபத்திற்கு மாலைப்போதுதோறும் போந்து வைகி எமது பஞ்சாமிர்த வண்ணத்தைப் பாராயணஞ் செய்து வருதலி லுடனிருந்து செவிமடுத்து வரும் எண்பது வயதின் மிக்க வொரு புண்ணியவதியாருடைய கண்கள் காணுமாறு சென்ற சித்தார்த்தி வருடத்துச் சித்திரை மாதத்தொரு குருவாரத்திரவு ஆறுகடி கைக்கு மேலும், மறுகாட் சுக்கிரவாரத்திரவு இருபத்திமூன்று கடிகைக்குமேலும் உ0, உஉ-பிராயமுடையாராய்க் காசிச் சிறுசெம்பொன்று கையிற்றிகழ வருவாராய்ச் சாக்கிரத்தில் வெளிப்பட்டு நின்று இருவராணும் பாராயணஞ் செய்யப்படுகின்ற இந்த வண்ணம் இயன்றவளவில் இன்னோசை யெழப் பாடப்படல் வேண்டும்; நீ அவர்கட்குச் சொல்; இவ்வண்ணம் எனக்குப் பிரீதியாயுளது; இஃதெங்கே பாராயணஞ் செய்யப் படுமோ அங்கே யான்வருவே னிருப்பேனெகலிற் கௌட மண்ட பத்திற்கு வந்தேன்; என்னுடைய இருக்கை இக்கலியாண மண்டபமும் வசந்த

மண்டபமும் கோவிலுமாமென்று ஆங்குள்ள வவற்றைச் சுட்டிக்காட்டி இறைவன் மறைக்தமையானுக் தமிழ்ச் சக்தப் பாட்டுக்களில் அவனது திருவுள்ளம் மிக்க விருப்புடைத் தென்பதனுடம் அறியப்படுவதாயிற்று. ஆகலினன்றே ஈசனுக்கு மனே ரம்மியத்தை விளைக்கும் இசைமுதலியன வுணர்த்து நூல், காந்தருவவேத மெனவுங் கழறப்படுவதாயிற்று. இது நிற்க.

திருப்பாவெனும் பெயரிய இந்நூலுரை யென்ன பெயர்த்தோ? எனின்,— பிரபல மேற்கோள் ஏது திருட்டாக்தானுபவ வாயிலாகக் குற்றமின்மையின் அலிவற நிற்றலானே 'நிட்பம்' என்னும் பெயர்த் தென்க. நிட்பம் = நிண்மை. (சாரு) காற்பத்து மூன்று திருப்பாட்டுக் கட்கே இவ்வுரை இஞ்ஞான் றெம்மாற் செய்யப் பட்டது. ஏனைய பாட்டுக்களுள் அரும்பத அருந்தொடர்கள், விடய விசேடமென்ன நோக்கி அவற்றிற்கியாமே சுருக்கப்புரையுஞ் செய்தனம். சிலபத்துக்களின் மேலும், சில பாட்டுக்களின் மேலும் உட்கிடை விளங்குமாறுகவுஞ் சில தெரித்தாம். "இழைத்த பாவம் வீட்டி" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டினுட் போந்த "சுழைத்தபத்துக் கூறுமா றிரண்டுமுண்டு" என்பது பற்றிக் கி. பி. 1899-ஆம் ஆண்டில் எம்மாற் செய்யப்பட்ட விசேட வுரையும், "தாளைக்கும் ஆளைக்கும் பூளைக்கு கடுச்சார்" என்னுமடியினை முதற்கட் கொண்டுள்ள திருப்பாட்டு மா விசித்திரகவி யென்பது நுதலி அதற்குக் கி. பி. 1913-ஆம் ஆண்டிற் பெருமிறைக்கவியுரை என எம்மாற் செய்யப்பட்ட விசேட வுரையும் இந்நூலோடே சேர்க்கப்பட்டுள. நிட்பத்தில் விசேடவுரைக்கு முன்னரே தொடக்கங்தோறும் பெரிய வெழுத்திடப்பெற்ற வுரை, சொல்லிற்கு நேராய பொருளாயிருத்தலிற் பதவுரை யெனவே கொள்ளப்படும். அங்ஙனம் பதப்பிரிவு செய்யாது நடை தந்துரைத்தமை படிப்பார்க்கினிது புலனுதற் பொருட்டேயாம். இப்பாட்டுக்களையும், பாட்டுக்களிலுறு சுருதி முதலிய காட்டுக் களையும், உரையிற்கோட லென்னும் உத்தியாற் கொள்ளப்படு பிற மேற்கோள் களையும், பதப்பிரிவுசெய்பு கொண்டு கூட்டிக்கொள் பதப்பொருள்களையும், ஆண்டரும் பதப்பொருள்கள் இவ்வுழி யிவ்வுழிப் பிறப்படுஉ மென்றற்காம் வடமொழி தென் மொழி நிகண்டுகள் காட்டப்பட்டிருத்தலையும், பழையதேயாயினும் புதுவதேயாயினும் 'உடன்படல்' என்னு மதத்தானியாய முள்வழியே அதற்குடன்படலையும், அஃதில் வழியே 'மறுத்தல்' என்னு மதத்தான் மறுத்தலையும், 'இருவர் மாறுகோ ளொருதலை துணிவு' என்னு மதத்தா னூலாசிரியர் கருத்தும் உரையாசிரியர் கருத்தும் ஒன்றற் கொன்று முரணிநிற்புழி நியாய வழியே ஒன்றினிடத்துத் துணிதலையும், 'தாஅனுட்டித் தனது நிறுப்பு' என்னு மதத்தா னியாய வழியே தானொரு பொருளை யெடுத்துக்காட்டி அதனை வருமிடந்தோறு நிறுத்தலையும், நிறுத்துமேல்வை தெளிவுற விரித்துக் கூறலையு நோக்கு நுணங்கியோர், எம்மையன்றி இந்நூற்குரை செவ்வே காண்பார் நேரா ரென்னு முண்மை கொள்வரெனல் வாய்ப்புடைத்தாம். இவ்வுண்மையினையும், ஒருவர் போனவழி யொருவர் போகாமையின் முற்றுமுரணுய் ஆங்காங்குச் சிலச்சில பலப்பல பேதப்பொருளவாய்ச் சிவஞானசித்தியார்க் கேற்பட்டவுரை (சூ) ஆறென்பதையும்,

இப்படியே வியாச மாமுனிவரது பிரஹ்மஸூத்ரத்திற் கேற்பட்ட பாஷ்யமும் உபநிஷதங்கட் கேற்பட்ட பாஷ்யமும் பகவற்கீதா பாஷ்யமும் பற்பலவா மென்ப தையும், திருவாசக வுரையும் பலவா மென்பதையு மொருசிறிதுங் கருதிப்பாராச் சைவரொருவர், எம்மன்பினர்பால் அவர் பாடலுக்கு (= திருப்பாவுக்கு) அவரே உரை செய்கின்றார், அதனைத் தான் நீயிரும் விரும்புவதென் றிழித்துக் கூறிய கூற்றினையு மிஞ்ஞான்று யாமறிந்து கொண்டாம். இச்சைவர், எம்பாலும் பத்தியுடையார் போலவே காணப்பட்டார்.

மேலே கூறிப் போந்தபடி பலவுரைகளும் பாஷ்யங்களு மேற்படுதலையும், அவை (தொல்லை நூலுரைகளுந் தத்தம் புதிய யுத்திகளும் விராய முடிபே யாதொரு கவின மதமெனக் கொளக் கிடக்குமாறு) பல மதங்களாகக் காணப்படுதலையு நோக்க, நூலாசிரியனே உரையாசிரியனு மாதல் ஐயந்திரிபற்ற நிலையிற்றும். அத்திறவுரையே பெரிதும் விரும்பத் தக்கதாமென யாம் இங்கொரு துணிவு கூறுகின்றும். இத்துணிவு, "வடநூலார் தாமே பதிகமு முரையுஞ் செய்வார்" எனப் பிரயோகவிவேக நூலுடையார் கூறுதல் கொண்டு மறியப்படுகின்றது. 'பதிகமும்' என்றமையின், ஆக்கியோரே பாயிரமுஞ் செய்வரென்பதூஉங் கொள்ளப்படுவதாயிற்று. பதிகம் = பாயிரம். ஈண்டு, ஏனையோ ருரையினின்றுஞ் சேடருரை தகுதித்தாமாயினும் அஃதும் ஆசிரியனுரை போல்வதன்று மென்க. என்னே? ஆசிரியற்குப் பிற்றைஞான்று சேடர் மதியு மதமுமாறுபடலுங் கூடுமாகலின். இங்ஙியாயத்தை ஏவரே மறுக்க வல்லார்? வடமொழிப் பயிற்சி சிறிதுமின்றித் தென்மொழியிற் சிறிது பயின்று தமிழுபாத்தியாய ராகிய சைவரொருவரால் இப்பாடன் மொழிகளுட் சில, நிகண்டுகளிலுள்ளனவல்ல; அகராதிகளிலுள்ளனவாமாகலிற் பாவலர் விரும்பாரென்று ஏம்பாட்டுக்கள் பழிக்கப் படுதலைச் சிதம்பர வாசமும் எம்மீது விசுவாசமு முடையராய்ச் சைவப் பெரியரு ளொருவராயிருந்த அய்யாக்கண்ணு ஓதுவார் எமக்குறிவித்தமையே — அரும்பதங்கள் இன்ன இன்ன நிகண்டினவென அவையற்றின் பெயர்களையும் உரையுழையாங் காட்டினமைக்குக் காரணமாம். அக்காட்டுக்கள், அவ்வுபாத்தியாயர் போன்முர்க்கும் பயன்படுமால். இங்ஙனங் கூறிப் போந்தவாறு எம்பாடலை, உரையை யிழுக்கத்துட் படுத்த முயன்முரெல்லாஞ் சைவராகவே காணப்பட்டாரென்க. இம்முயல்வில் வேறு சிலரு முள்ளாரெனலும் மிகையாகாதென்க. "நும்பாடல் குற்றங் குற்றமே" என்று புராணம் புகல்கின்றபடி முழுதொருங் குணர்ந்தோன் பாடற்குங் குற்றங் கூறிய புலவர் மதுரையம்பதியி லிருந்தமையானும், ஸ்ரீமத்-உமாபதி சிவாசாரியருடைய நூல்களைப் புதியனவென் றிகழ்வார் சிலர், அவர் காலத்து மிருந்தனரென்பது சிவப்பிரகாசத்தில் —

"தொன்மையவா மெனுமெவையு நன்முகா வின்று
தோன்றியதா லெனுமெவையும் தீதாகா"

எனவரு செய்யுட்பகுதியா லறியப்படுகின்றமையானும், வேறு சில செய்தி களானும் இழித்துரையாடுஞ் செய்கை தொன்று தொட்டு வருவதென்றே கொள்ளக்

கிடப்பதாம். இதன் காரணம் அழுக்காறென்றலே சாலும். இந்த ஆறு, சைவருள் ஒற்றுமையின்மையை யுண்டாக்குதற்கும், சமய விருத்தியைச் சுவட்டுதற்கும் முக்கிய வதுவாயுளது. இது, சைவ ரென்பார் பாலேயே நனிதோன்றி நிற்க கேர்ந்த ஊழ் யாதோ? என வினவுவார்க்கு யாம் யாது கூறவுள்ளோம்! சிவநிந்தை சிவனடியர் நிந்தை முதலியன செறித்துவரைக் தச்சிட்டு வெளியிடலாய வைணவப் பத்திரிகை கணிமித்தம் (இறைவன் திருவருளாலும், நீதிபதிகள் விசாரணையாலும் எமது பக்கத் திற்கே அனுகூலமாய் முடியுமாறு) எற்பட்ட வழக்குக்கள் பலவற்றுள்ளும் எம்மை வாதியாகக் கொண்டதும், அவ்வைணவர்களே யெதிரிகளாகக் கொண்டு தண்டித்த தீர்ப்பையுடையதுமாய திருக்கோயிலூர்—கனம் க-வது வகுப்புச் சப்டிவிஷனல் மாஜிஸ்த்திரேட் அவர்கள் கோர்ட்டு 1908-ஆம் வருடத்து C. C. No 112-ல் எமது பக்கத்திற்கு விரோதமாய்ப் பொருளலது புகன்றருள்ளும் இடைபூறு முயன்றருள்ளுஞ் சிலர் சைவரெனவே காணப்பட்டார். இன்னேரை யெண்ணுக் தோறுங் காணுக் தோறும்—

"அளியிலா தவரைக் கண்டா லம்மகா மஞ்சு மாறே"

என்றருளிச் செய்தபடி யெமது நெஞ்சம் அஞ்சுவதாயிற்று. வைணவர், தமது மதவாதம் பயன்படாதென்னுங் கருத்தானே எம்மைக் கொல்வா னெண்ணுரு சூழ்ச்சி செய்தபோது ஆங்குதவி யுண்மையின் இஃதாவதன்றென் றெழிந்தமையும், பின்னர் அவர் சூனியகருமத்தால் அக்காரியஞ் செய்து விடலாமென அது செய் வாரைக் கொண்டு செய்வித்து ஒன்றும் பலியாதுகண் டோய்ந்தமையும் எம்பெருமான் முருகவேளின் கருணைக் காப்பென்றே யெண்ணினேம். ஓம். இவ்வேதுக்களால், உண்மைச் சைவர்க்கு வைணவருறவு உறவாகாவாறு போலச் சிவநின்ன காரண மாத்திரையே சைவரெனக் காணப்படுவா ருறவுமுறவாகாது. அவருறவு நெடுநாட் பழக்கத்தின் மீதே யுறுதியாதல் வேண்டும். நெடுநாட் பழக்கத் தறியப்பட்டாருள்ளுஞ் சிலர் மாறுதலடைதலுங் கூடும். என்னே? எழெட்டாண்டுகாறு மெம்மோடு நிகரி னேயமாயிருந் தெம்பாற் சடக்கரதீக்கையும் பெறீஇப் பதினைந்தாண்டுகட் கதிக மாகவே யெம்மைக் குருவாய்க் கொண்டு குலாயினரும், குமரவேள்பதிற்றுப்பத்தந்தாதி யென்னு மெமது பிரபந்தத்தி லவர்க்குற்ற வல்ல லொழித்தருள்வா னிறைவனை வேண்டுதல் செய்து பாடிய—

"காவெ னக்கரு தென்னை யாள்சிவ கந்த னேயுனை யேபெரும்
தேவெ னக்கரு துள்ளொ டன்பு சிறந்த சிலமு மோங்கவே
ஓவெ னக்கரு தோர்பி ரப்பையு லுடைய நாயக மீண்டுறு
தாவி னைக்களை யருள்பு ரிந்துயர் தயவில் வைத்தினி தாள்வையே."

என்னும் பாட்டின்கண் வைக்கப்பட்ட வபிதானமுடையருமான பிரப்பை-உடையநாயகம் பிள்ளை யென்பாரும், அவர் மகன் முதலியோரு மெமக்கு மெஞ்சார் பினர்க்கு மெத்திறவெத்திறத் துன்பு புரிய வேண்டுமோ வத்திற வத்திறத் துன்பு புரிந்து மகிழ்ந்து வாழ்வாராயினு ராகலின். தாபத நிலைபுக்க எஞ்சரித்திரத்துள்

இதுவே கண்ணேக்க முடையாரா னனி நோக்கத்தக்கது. இனியர் போல்வார் பெற்றியிலே எத்தகைய விவேகியுமறிந்து கோடல் ஒல்லுவதோ ! ஒல்லுவதோ !! ஆ அ ! மாண் மதியுடையீர் ! கூறுமின். பொதுவகையில் "எவரையு கம் பொண்ணுது" என்பது, அரசுகவர்வராரற் குடும்பத்தோடு கொல்லப்பட்ட ருஷ்ய சக்கரவர்த்தி நிகோலஸின் வாக்கியம். மதிப்புக்குரிய இஃதும் இங்குக் கருதிக்கொள்ளத்தக்கதே. அவ்வழுக்காற்றுச் சைவருளொரு சாரார், திருஞான சம்பந்தர் முதலிய ஆசாரியர் திருவாக்குக்கள் தமிழ் வேதம், திராவிட வேதமென வழங்கப்படலொப்ப அருணகிரியார் பாடல்களும் வழங்கப்படல் கூடாதென்று கூறி வழங்கி வருதலையு மெதிர்க்கின்றனர். இவர், வைணவ ஆழ்வார் பாடல்கள் திராவிட வேத மெனவும், முகம்மதியர் கொரான் வேத மெனவும், கிறிஸ்தவர் சாத்திரம் சத்திய வேதம் வேதமெனவும் வழங்கப் படுதலை யறிந்திருப்பாரோ ? அறியாதிருப்பரோ ? என்னும் ஆசங்கை தோன்றுகின்றது. அறியாதிருப்பா ரென்பதெய்தின் அவர் மடவோராவர். என் ? இத்தேச மெங்கணுந் தெரிந்த செய்தியாகலின். மடவோர் கூற்றை மறைத்திருவர் பொருட் படுத்தார். அறிந்திருப்பா ரென்ப தெய்தின் அவர் அழுக்காற்றின்கட் படுவோரே யாவர். என் ? வைணவர் முதலினோர் கொள்கையை விடுத்து அருணகிரிநாதர் திருவாக்குக்களும் வேதமே யென்பதை யெதிர்க்கின்றனராகலின். அழுக்காறு பாவப்பிரவாகமாம். அதன்கண் வீழ்ந்து கிடக்க விரும்புகரெல்லாம் அப்படியே கிடக்கட்டும். மேல், வடமொழி வேததெய்வம் வேதாரணியத்திற் சிவாராதனை செய்து தன்னலடைக்கப்பட்ட திருக்கோயிற் கதவத்தைத் திருநாவுக்கரசுகளின் திருவாக்குத் திறந்தமையானும், திருஞான சம்பந்தரின் திருவாக்கு அடைக்கவுந் திறக்கவுஞ் செய்தமையானும் அவைகள் வேதமாகலாம் ; அன்னணம் யாதுமாற்ற அருணகிரியார் பாடல்கள் அங்ஙனமாதல் ஒல்லுமோ ? எனின்,—நுவலும். இக்கடாவானது அடைக்கப்பட்ட திருக்கதவத்தைத் திறத்தன்மட்டுஞ் செய்த திருவாக்குத் திறத்தலு மடைத்தலுஞ்செய்த திருவாக்கிற்குக் கீழ்ப்பட்டிழிவெய்துமாதலின் அதனையும் வேதமென்பது பேரியாமென்றும், சுந்தரப் பெருமான் திருவாக்கும் மணிவாசகப் பெருமான் திருவாக்கும் அங்ஙனமொன்று முரற்குமையின் அவற்றையும் வேதமென்ப தமையாதென்றும், அக்கதவக் திறத்தலையு மடைத்தலையுஞ் செய்த திருப்பதிகங்களுள்ள திருமுறைகளின் மற்றைப் பதிகங்களையும் வேதமென லொல்லாதென்றுஞ் சாதிக்கும் அதிவியாத்தி தோடத்ததாம். ஆகவே இது, மனமொருங்கி யாராய்ந்து மானமுறவோது நுண்ணியர் கூற்றேடுவைத் தெண்ணப் படுவதன்றென வொதுக்கப்படுவதாம். இந்நூற் கடவுள் வணக்கத்து கூ - ன் உரைக்கட்போந்த (உ) எடுத்துக்காட்டி லுள்ளபடி வேதமானது இளம்பூரணனது திருவாக்கா யிருத்தலினுலும், அவ்வாக்கோடுங்கூடிய வப்பூரணனைச் சம்பந்தாண்டான் வாத காலத்திலே திருவண்ணுமலையிலே ஒரு கற்கம்பத்தினை யழைத்துப் பிரபுடதேவ மகாராசசாவின் கண்களுங் காண்பா னிழைத்தது அவ்வருணகிரி நாதனுர் திருவாக்காயிருத்தலினுலும் அவர் வாக்கு வேதமாதல் மெய்யீடுறும். இப்படி வனையாசிரியர் செய்யாமை கருதியும், சம்பந்தமூர்த்திகள் உமாதேவியின் திருப்பா லருந்தினமையை

எரிக்தெஞ்சிய என்பையுஞ் சாம்பரையும் பெண்ணுக்கினமையை மற்றை யாசிரியர் புரியாமை கருதியும், சுக்காமூர்த்திகள் சிவபெருமானேத் தூதிடை விடுத்தாங்கு ஏனேயாசிரியர் செய்யாமை கருதியும், அருணகிரி நாத மூர்த்திகள் குமாரபிரான்பாற் றீக்கைபெற்றவாறு திருவாதவூ ரடிகள் சிவபிரான்பாற் றீக்கைபெற்றுச் சிடாரய மாண்பு ஊமைப்பெண்ணேப் பேசுமாறிழைத்த வுக்க மென்பன மற்றை யாசிரியர்க்கு நேராமை கருதியும், வேறுபல கருதியும் ஒருவரை யுயர்த்தலு மொருவரை யிழித்த லும் விவேகர் செய்கையாக மாட்டா. மற்றியாதாம்? எனின்,—பெரியாரை யிகழும் பெருநவை துண்ணென வெழுமா றிழைப்பதாம். சேறலும் மீடலுமில்லா வாக்க மளிக்குந்திருவருள் எங்கெங்குகின் றெஃதெஃ திழைக்க வேண்டுமோ அங்கங்குகின் றஃதஃ திழைக்குமாற்றுல் அவரெல்லாரும், அவரொத்த வேறு பெரியாரும் அவ்வருட் செல்வர்களே யாவரென்பதே இங்ஙனந் தெள்ளிதிற் கொள்ளக்கிடப்பதாம். இது விடுத்து அகஞ்சென்றவாறெல்லாம் இகழல் அவ்வருளே யிகழ்வதாகவே முடியும். பாடல்களுள், பாடினேருடைய பசுத்தன்மையும், பதித்தன்மையுங் காணப் படுகின்றன வாகலின், இது பதிவாக்கு, இது பசுவாக்கென இங்ஙனம் பிதற்றத் துணிதலும் அருணிலேயறியார் கூற்றேயாம். பசுகரணம் பதிகரணமா மென்பதூஉம், அங்ஙன மாகா இருமல உருத்திரரும் ஒருமல சதாசிவருமாகிய மேலோருமே பசுக்களெனப் படுவரென்பதூஉம், ஆனிலே—

> "சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" எனவும்,
> "செறிவற் றுலகோ டுறைசிற் தையுமற்
> றறிவற் றறியா மையுமற் றதுவே"

எனவும் வருவனவற்றுனும் பிறவற்றுனும் அறியப்படுமென்பதூஉம், இவ ரறிவிற்குப் புலனுங்கொல்லோ! அழுக்காற்றினர் இவ்வுண்மை யுணர்ந்து வாளா விருப்பது நலனும். சம்பக்தமூர்த்திகள், என்பையுஞ் சாம்பரையும் மகடூ வாக்கி யருளிய திறங் கருதும்போது சங்கற்ப மாத்திரையே உலகிருட்டி புரிந்த விசுவா மித்திரரையு நுதலிக்கொள்வதோடு இத்திற வற்புதங்கள் பலவுக் திருவருள் வலிமையேயென்று சாதிக்கின்ற இந்நூற் ககூ-ஆம் பத்தையும் உய்த்துணர வேண்டும்.

வேதமென்னும் வடமொழி 'வித்' என்னுக் தாதுவினின்று தோன்றிற்று. அது, (வித்தை =) ஞானமெனும் பொருண்மைத்து. இது பேணிய நூல்கட்கு "வேதம்" என்னும்பெயர் பிற்றைஞான் றளிக்கப்பட்டதென்ப துண்மை. அந்தஞானம், ஒருவன் திருவருளாற் றன்னேயுக் தலிவனேயு மறியுமறிவாம். அவ்வாறறிந்தார் கூறு வனவும், அறிவார் பொருட்டு முற்றறிவுடைய முதல்வன் சூத்திரம்போன் மந்திரம் போன் மொழிந்தனவும் மொழிவனவுமா யுள்ளவெல்லாம் வேதமெனப்படு மென வடமொழிமறை, வாக்கிய ரூபமான தனது சொரூபத்தா லுணர்த்தி நின்றுங்குக் தென்மொழி மறையு முணர்த்தி கிற்குமென்பது கற்றல் கேட்டல்களிற் றலேப்பட்டார் யாவரானுங் கொள்ளப்படுவதாம். அறிந்தாருமைக் தலிவனேயிருந்து சாற்றியருளின னென்பதூஉம் இங்ஙன மாவதாம். இவ்வாறன்றி வேத முதலிய அபரவித்தையினு

லறியப்பட்ட தலைவனைத் தனக்கனுக்கிரகித் தருளுமாறு பிரார்த்தித்துப் பாடுதலும், தன்னெளிமையெல்லாமெடுத் தங்ஙனேதுதலும், அனுக்கிரகித்த வகையினையெடுத் தறைதலும், துதித்தலும், பரவித்தையாகிய அனுபவங்களின் முனந்தமாய்ப் பாடுதலு மாகிய பத்திரசமும் முத்திரசமும் பழுத்தொழுக நிலவுவனவும் வேதமெனப்படும் வழக்கினை முந்தை ஆரணியக உபநிடதங்களினுலேயே உணர்ந்து கொள்ளலாம். அனுபவ ஞானியாகிய சேன்முத்தன் பாடுவனென்பதை,

(ஊரோநோகாதாரோநீ காரமேவயுரை வம்மாரதரே।
வாததாரோமாயதாலெ ।

இமாம் லோகாம் காமான்னீகாம ரூப்யது ஸஞ்சரன்।
ஏதந்ஸாமகாயன் நாஸ்தே।)

"அறிந்தவன் தான் விரும்பினவுடன் கிடைக்கும் அன்னத்துடனும் உருவத் துடனு மேய்ந்து இவ்வுலகின்கட் சஞ்சரித்துக்கொண்டு யாண்டுஞ் சமமாயுளதைப் பாடிக்கொண் டிருக்கின்றனன்." என்று தைத்திரீயோபநிஷத்தின் பிருகுவல்லி யின் கo - ஆம் அனுவாகமும்,

"சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

என்று வாதவூரடிகளது தமிழ்மறையுஞ் சாற்றுதலிற் பெறுதும். இவ்வாருக இருமொழி மறைகளு மியம்புதலின், இங்ஙனமாதலெல்லாம் வேதமெனு நிருணயத் துறுகின்றன. வடமொழியேயன்றித் தமிழிலும் வேதமிருத்தல் வேண்டுமென்னுங் கருத்தானே ஐம்முகச் சிவத்துதி ஞானமாயுள்ள திருஞான சம்பந்தர் முதலிய ஆசிரியன்மார் பாடல்களைப் பிற்றை ஞான்று தமிழ் வேதமென வழங்கச் செய்தவாறு அறுமுகச் சிவத்துதி ஞானமாயுள்ள அருணகிரிநாதர் பாடல்களையும் இஞ்ஞான்று வழங்கச் செய்தல் ஏற்புடைத்தேயாம். ஆலயங்களும், ஆகம கன்மங்களும், மந்திராதிகளும் இருவேறு வகையாகவும் வழங்கப்படுமுறை கருதுக. அழுக்காற்றுச் சைவர் இவ்வேற்புடைமை கருதாதொழியினும் நீடுநினை அறுமுகச்சிவ பத்தியுடைச் சைவ ரனைவரும் அது கருதி கடக்கவே கடமைப்பட்டுள்ளார்; அல்லார்கேண்மை கொள்ளாருமவரே.

இத்தென்னுட்டில் வடமொழித் துவேஷமுடையார் பலருளர். அவருட் சைவரென்பாருமுளர். அவருளொரு சாரார் "அகத்தியனெடுரைத்த தமிழ்" என்றபடி அகத்தியனுர்க்குத் தமிழறிவுறுத்த தமிழ்த் தெய்வமே முருகனெனப்படுவோன்: அவன் வடமொழி நூல்களுட் போதருஞ் சுப்பிரமணியனல்லன்: வடமொழியாரியர் கொணர்ந்த அந்தச் சுப்பிரமணியனுக்கே வல்லி தேவசேனையென்னுங் காதலிகளிருவருளர்: முருகனுக்கு ஒரு காதலியுமில்லை: அவன் எவர் குமாரனுமல்லன் அவனொரு தனிக்கடவுளென்றும், மற்றொருசாரார் மேலே கூறியவாறே கூறி முருகன் சரன்கட் டோன்றினவனு யிருக்கலாம்: அவ்வீசன் றிருவாலவாய் அவிர்சடைக் கடவுளாதல் வேண்டுமென்றுஞ் சொற்றுத் திரிகின்றனர். இத்திரிவார் கூற்றுக்கள், தமிழர்க்குத்

தமிழ்ப் பெயரேய்ந்த தெய்வம் யாது? எனக் கடாய்வாதிக்குநர் வாதிற்கு ஆற்றாதிடையு நிலைநின் றெழுகின்றனவென்றே யெண்ணுகின்றேம் யாம். அற்றேல், வேதத்துட் பல சரிதங்களுண்மையான் அச்சரிதங்கட்குப் பின்னே தான் வேதமாக்கப்பட்டதா மாகலின், அஃதனாதி, சுயம்புவென்னுஞ் சைமினியார் கொள்கை அவலமென்பார் தீர்வைக் கொருசிறிது மாற்றாதிடை தலி னின்றுகொண்டு அச்சரிதமெல்லாம் அருத்த வாதமாகக் கற்பித்துக் கூறிய பொய்யேயாமெனப் பொறித்தார் செய்கையினை யிவர் செய்கையும் பொருந்தும். அற்றன்றெனக் கூறிக் கூறியன சாதிக்கப் புகின் அதுபற்றி யொரு சிறிது விசாரிப்பாம்.— இவர் கூற்றுக்கள் அருணகிரிநாத முனீந்திரர் முதலியோரையும் அவமானப்படுத்துவன வாகும். இவை, கடவுளால் உலகமொழுங் காகப் படைக்கப்பட்டது மில்லை: நடத்தப்படவுமில்லை யென்று சில போலி யேதுக் களால் அக்கடவுளினுந் தன்னை யுயர்த்திக்கொள்வான் கூற்றுக்கு முயர்வுடைத்தோ? ஒப்புடைத்தோ? எனத் துணிதன் மனமொருங்கி யாராய்வார் மாட்டேயாம். அம்முனீந்திரர் அனுபூதிமானாய்நின் றருளிய இறுதிநூலில்—

" 'குமரன் கிரிரா சகுமா ரிமகன்'
'வேதா கமஞா னவிநோ தமனோ
தீதாசு ரலோ கசிகா மணியே'
'சங்கிரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லகிருபா கரனே'
'கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவசங் கரதே சிகனே'
'தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா' "

எனவும், திருப்புகழில்—

" பழநிமலை மேனின்ற சுப்ரமணி யாவமரர்—பெருமாளே "

எனவும் வருவனவற்றை யுய்த்துணர்க. தமிழ்ச்சங்கத் தலைவர்—நக்கீரனார் நூல்களுள், திருமுருகாற்றுப்படையெனவு மொன்று வழங்கப்படுகிறது. அதன் பெயராலேயே அது முருகப்பெருமானைப் பாடிய தென்பது மறியப்படுகிறது. அதன்கண்—

" 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'
'மந்திர விதியின் மரபுளி வழா அ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்'
'குறவர் மடமகள் கொடிபோ னுசிப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றேயாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்'
'மூன்று வகைக்குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவலப்.....பெரிதுவந்து
ஏரகத் துறைதலு முரியன்'

தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன்'
'நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமரீ செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றேர் கூற்றே'"

என வருவனவும், பிறவும் இவருய்த்துணர்ந்தவ ராவரோ!

வாணுதல்கணவன் = இந்திரன் மகள் தெய்வயானையார் திருமணாளன்.

மந்திரவிதியின் மரபுளிவழாஅ அந்தணர்வேள்வியோர்க் கும்மே யொரு முகம் = வேத மந்திர முறைமைபிடந்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களிலே திங்குவாராவண்ண நினையா நிற்கு மொருமுகம்.

அம்மூவிருமுகனும் = அந்த ஆறுமுகமும்.

நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை = இமயமலையுச்சியிலுள்ள சரவணப்பொய்கை.

ஐவருளொருவன் = அக்கினிதேவன்.

அறுவர்பயந்த = கார்த்திகைப்பெண்கள், தவங்கிடந்து தங்கண் முலைப்பாலருத்துமாறு செய்துகொண்ட.

ஆல்கெழு கடவுட்புதல்வன் = கல்லாலின்கீழிருந்த கடவுண்மகன்.

இவ்வுண்மையுணர்ந்தார் சுப்பிரமணியனுக்கு வேறாக முருகனுளனென்னும் அப்பேதசைவர் புகறலை யாங்ஙன் மதிப்பர்! அக் கக்கீரனாரால்க்கப்பட்ட கோபப்பிரசாதம் என்னுமொரு பிரபந்தத்தில் வடமொழிப் புராணசரிதம் பலவும் வந்துள்ளன. இச்செய்தி, இந்நூலகத்தே கூஉ-ஆம் பத்திலும் எடுத்துக்காட்டப்பட்டுளது. கோபப்பிரசாதமென்னும் அதன்பெயரே வடமொழியிலுந் தமிழர்க்கபிமான மிருத்தல் வேண்டுமென்பதை யினிது கற்பிக்கும். அறம், பொருள், இன்பம், வீடென்னு நான்கனுள் வீடுநீங்கலாக ஏனை மூன்றுமே தமிழுக்குரிய வென்னும் பொருளில்—

"அங்கிலை மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு மூரிய வென்ப."—(செய்யுளியல்-கoகூ)

என்று தொல்காப்பியனார் சூத்திரஞ்செய்தமையும், இச்சூத்திரம் பிடித்தே அக்காலத்துத் தமிழ்ப்புலவர்கள் வீட்டுநூல்கூறாது நடந்து கொண்டனரென்றற்குத் திருக்குறண் முப்பாலாகக் கூறப்பட்டது உதாரணமென்பதையு நச்சினார்க்கினியரது *தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத் தறியலாம். இவ்விவரமு மவருணரல்வேண்டுமே.

---

* மழைவை-மகாலிங்கையராற் பல் பிரதிகொண் டாராயப்பட்டுக் கல்விக் கடல் அச்சுக் கூடத்திற் சாலிவாகனஷ கள எo-ற் பதிப்பிக்கப்பட்ட பிரதி. "அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின்றன்மை தமிழாற்கூறார்" என்பதும் இச் சிறப்புப் பாயிரத் தெழுதப்பட்டுளது.

திருஞானசம்பந்தப் பெருமான்—

"மக்கி போற்றிரிந் தாரி யத்தொடு செந்த மிழ்ப்பய னறிகிலா
அக்தகர்"

என வறிவுறுத்தருளியதும் இங்குக்கருதல்வேண்டுமே. இத்திருவாக்கை மதியார் பிதற்றலே யாமொதுக்கி யொழித்தலு கியாயமன்றே. இமயமலைச் சிமையச் சரவணப் பொய்கையிற் சரவணபவனென வந்த சண்முகசிவனைத் தமிழொன்றற்கே தெய்மென்று கூறல்பரந்தவறிவுடையார் செய்கையாங்கொலோ! தமிழ் தென்மொழியெனவும், ஆரியம் வடமொழியெனவுங் கூறப்பட்டமைக்குப் பொருளென்கொலோ? எக்கலைக்கும் அச் சண்முகசிவன் றெய்வமென்றல் அவன் ஒங்காரத் திருமேனிய னென்பதனைனு மறியப்படும்.

"ஓமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமு கத்தளொன் றுமவன் றன்மையார் வகுப்பார்"

என்பது முதல்வன் புராணம். சண்முகசகச்சிரநாமத்தில் "வாகீசன்" எனவரு நிருப்பெயரும், அவன் வாக்குக்கெல்லாம் ஈசனென்னும் பொருடரு மாற்றுன் யாமெடுத்துக்கொண்ட பிரதிஞ்ஞையை மதுகைப்படுத்தும்

(ஸ ஏஷாநஷ்ஷ-டிதி-ஸ்ரீதா ஸீஷ்ஷ-ஷ்ஷ-டிஷ்டிதாகரம் ஷ்ரு ஷ்ரோயிவதிஃ)
"ஈசாநஸ் ஸர்வவித்யாநா மீச்வரஸ்ஸர்வபூதாநாம் ப்ரஹ்மாதிபதி ஃ"

என்னுஞ் சுருதி (=தைத்திரீயாருணசாகை நாராயணம்) வாக்கியங்களுஞ் இங்ஙனமே பொருளாதல் காண்க. "பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்— அண்டமுதலா னரன்சொன்ன வாறே" என்று திருமந்திரங் தெரித்தலு முணர்க. சண்முகசிவன் எக்கலைக்குந் தெய்வமென்றலின் அவன், எல்லாவுலகத்தார்க்குங் கடவுளென்றலும் நுனித்தகு புலவரா லுணரக்கிடப்பதாம்; கடவுள்வணக்கத்து கூ-ன் உரையினை நோக்குக.

"'வானவன் காண் வானவர்க்கு மேலா னுன்காண்
வடமொழியுந் தென்றமிழு மறைக ளுன்னும்
ஆனவன் காண்'
'ஆரியன் கண்டாய் தமிழுன் கண்டாய்'
'முத்தமிழு நான்மறையு மானுன் கண்டாய்
ஆலின்கிழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்'"

என்னுந் திருநாவுக்கரசுகளின் றிருவாக்குக்களை அவர் கண்டுணர்ந்து கழறுகின்றனரா? இந்தியாவின்மீது முதற்கட் படையெடுத்துவந்த கிரேக்கர்களின் அரசனை 'அலெக்ஸாந்தரே' இங்கே 'ஸ்கந்தர்' என்னும் தெய்வமாக வணங்கப்படு கின்றனனென்று யாழ்ப்பாணத்திருந்த கிறிஸ்தவப் பாதிரியா ரொருவரும், மகாதேவ னென்பானும் அவன் மகன் கந்தனென்பானும் வடநாட்டின்கட் பல்லாண்டுகட்கு முன்னம் பிரபல முடையராக விருந்தனர்; அன்றேரே இஞ்ஞான்று சைவதெய்வமாகப்

பூசிக்கப்படுகின்றனர்: அவர்கள் சந்ததியார் இன்னும் ஆண்டிருக்கின்றனரென்று தம்மைச் சைவரென்றுங் கூறிக்கொள். வேளாளரொருவரும் ஆங்கிலமொழியி லெழுதினர். இந்துக்கள் போற்றெடுப்ப இராமின்ற தேவர்களு ளொருவனுக்கு ஆறுமுகங்களுளவென்றலிற் பேய்களுள் அவனுமொருவ னுவான்போ லுமென்னும் ஐயப்பாட்டிற் கிறிஸ்தவரொருவரும், மீனாக்ஷிமகன் கத்தனென ஒரு மனிதனிருந்து மரணமாயினன்: அவனதுடல் அடக்கப்பட்ட விடமே திருப்பரங்குன்ற மென்னு நிருணயத்தே தன்மதியினை யுயர்த்திக்கொள்ளுங் தவவாய்ப்பின ரொருவருந் தென்மொழியிற் றெரித்தனர். தேவார திருவாசகங்களுந் திருப்புகழும் பிறவுமிருந்தும் இவ்வாறு தெரிப்பார் செய்கை வியப்பு விளைக்கின்றதாகலின் அசப்பியமான விவர் கூற்றை யெத்த முழுமகன் நப்புவான்கொல்! தம்மூடையிறுதிநாட்பயன் யாதாய் முடியுமென்பதை யொருசிறிது மெண்ணிப்பாரா விவர்க்கும், இன்னுமிவ ரொத்து வேறுசூழுவார்க்கும் மேலேகூறப்பட்ட பேதசைவர் எத்தணை மடங்கோ நலனுளரா யெண்ணப்படு கின்றனர். இவ்வசப்பிய நுவற்சியர் போல்வார்க்கு அத்தேவாராதி திருவாக்குக்களையுணரப் போதியபோதில்லையாயினும் அவர், இத் திருப்பா ககo-ஆம் பத்தில்—

> "மடமோட்டுங் கருணைதனை மறவேனெஞ் சளவளவு மாற்றூர் தூலைத்
> தொடமாட்டே னவருரைக்கு முரைகேளே னனியாயத் தொடக்கர் கோட்குட்
> படமாட்டே னருள்சுரந்த வினையவொரு மொழிப்பயனிற் படருநோக்கம்
> விடமாட்டே னினிதளித்தி யெனதுகுகப் பிரமமென விளங்கெம் மானே."

என வருமொரு திருப்பாட்டுப்பொருளினை யுணர்ந் துய்திபெறாஉ மெய்க்கெறி பற்றலாமன்றே. இக்காலத்த விவ்வசப்பியரினையார் மூற்காலத்துமிருந்து சிலபொறித் தனரென்பதூஉம், பண்டைவேதாகம புராணேதிகாசாதி பனுவல்களிலும் பல சில மாற்றினரென்பதூஉம், பற்பல நிற்சில நுழைத்தனரென்பதூஉம் இங்ஙனுணரக்கிடப் பனவே. அவருட் சைவத்தைப்பகைத்த வைணவரும், பௌத்தரும், சமணரு மிருந்தா ரென்றுங் கூறலாம். இவ்வாற்றான் அம் முத்துநூல்களின் சொரூபங் கேடடைந்துள தென்பது ஒருதலையாம். இஃது எஞ் சைவசமயசரபத்தாலு மறியப்படும். ஒரு கூட்டத்தாரைப்போன் மற்றொருகூட்டத்தாரும் உணர்விழந்து உணவுவிழைத்து சாதிபேதத்தோடு கற்பிக்கப்பட்ட நவீன விதிதங்களும் பலவாம். பாடியங்களோடுங் கூடிய மடத்துக் காரர்கள், அப்பாடியங்களே உலகு நம்புதலினன் மடவிருத்தியுண்டா மென்னுங் கருத்தானே அவையற்றிற்குப் பல மதிப்புக்கள் அருத்தவாதமாகக் கற்பித்தெழுதுபு தெய்வசன்னிதியில் ஒட்டும்போட்டுவைத்தன ரென்பது காணப் படுகின்றது. என்னே? அப்பாடியங்க ளொன்றற்கொன்று முரணை பொருள்களைக் கொண்டு முரணை வரலாறுகளோடிருத்தலின். பாடியம் = பாஷ்யம். இவற்றையெல்லா மூய்த்துணர் செவ்வி, இத்தேயத்திற் படித்தவர்களுள்ளும் பலர், யாதானுமோ ரபிமானத்தானே தம் மனச்சான்றிற்கு விரோதமாகப் பொய்புகறலிற் பெரியரா யிருந்தனரென்றல் வாய்ப்புடைத்தாகின்றது. இவ்வாய்ப்புடைமை கண்டுதானே,

தம் மதவெறி கொண்டுதானே இந்துக்கள் புத்தக மகத்துவங்கள் நம்பற்குரியன வல்ல வென்று மேனாட்டுப் பண்டிதரும் பகர்வாராயினர். அவர் நீர்வை, எல்லா நூல்களிலுஞ் செல்லாது. மனச்சான்று பேணுவார் மல்கு முற்காலம் போலல்லா விக்காலத்தே ஆன்மலாபங்கருதுநர், விழி கண்டுகலுழச் செவி கேட்டு ளொள்க மனம் வருந்தி மயங்கத் தோன்றிய இத்திறப் புத்தகபேதமும் மதபேதமும் பற்பலவாய்ச்செறிந்து பன்மாயாவிலாசச் சொற்போராட்டம் புரிதற் கின்றியமையா விடனுயியங்கு மிப்பூவுலகிலே திரிதரற்குப் பெரிதும் அஞ்சவேண்டியவரே. யாமுமஞ்சினேமாயினும் அவற்றினுட் பட்டுப்பிரமிகொள்ளாது ஆண்டவன் செவ்வேளாலே காக்கப்பட்டேம்; ஓம். "மடமோட்டுங் கருணைதனே" என்றற்றொடக்கத்த மேலேகாட்டப்பட்ட திருப் பாட்டை நோக்குக. இங்ஙனங் காக்கப்படா வொரு படித்தமானவனுக்கு இப்பூமி நீக்கமே பந்தவிடுதலையெனுப் பகரற் கெஞ்சித்தை சிறிது மஞ்சாதால்.

சிறந்த மேற்கோண் முதலிய வயப்போடுங்கூடிய இந்நூலினைப் படித்தலினுண் முன்மொழிந்தவா றுண்மையுணரப்பெறீஇ உய்தி பெறலாம். பாடல்களைப் பத்திமையிற் பாராயணஞ் செய்தலினுற் சண்முகசிவகிருபை சாரப்பெறலாம். காலிரண்டுங் கையிரண்டுங் கழீஇ ஆசமனமுஞ் செய்தலென்னும் பஞ்சசுத்தி செய்துகொண்ட பின்னர்ப் பீடத்தில் இரீஇ அலர் சார்த்திப் பூசித்தலினுல் அவனைப்பூசித்த படியாம். இவற்றுள் அவ்வழுக்காற்றுச்சைவர் படித்தன்மட்டுஞ் செய்வரென்றற்கு மிடனின்று.

"கற்றல் கேட்டலுடை யார்பெரியார்" எனவும்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு." எனவும்,

"தூற்பல கல்" எனவும்,

"தொன்மையவா மெனுமெவையு நன்றுகா வின்று
தோன்றியதா லெனுமெவையுந் தீதாகா" எனவும்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

எனவுமெழுந்த நியாயம், அன்னேர் கொள்கைக்குப் புறம்போந்து நின்று அவரது மூர்க்கசாடகங்கண்டு முறுவலிக்கும். இன்னும் எவரெவரெஃதெஃ தறிந்து கூறுவ ரெவ்வெக்கல்வி யெவ்வெவ்வளவினவா யெழுமோங்குமென்பன அவாய்க் கொண் டிராகின்ற இப்பரந்த நிலவுலகம், விவேகிகள் பலரையும் விரும்புகின்றதை யோர்ந்துகொண்ட மேனாடர், அவ்வத் தேயபாடைகளில் வெளி வருவனவெல்லாம் பெற்றுணர்ந்து பெருமதிஞ ராகின்றனர். இத்தேயத்தார் அது விடுத்து—

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரம்முங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிமின்"

என்று தமிழ்மறை யறிவுறுத்தவாறுங் கருதாமே சாதிச்சண்டையிற் றம்மை யுயர்த்திக் கோடலே சதானந்தமென வாணாளெழிக்குங் குறுமதிஞ ராகின்றனர். இவர், மணத்தானே களவானே எப்பெண்ணு மெவ்வாணேடுங் கலந்து கருப்பங்கோட லுண்மையிற் சாதி கிலேயாதென்னு நுட்பங் கருதகில்லாதுள்ளார். இந்நுட்பங் கருதாது உற்பவ சிரேட்ட இலிதம் ஈசுரவாக்கென வரையப்பட்டிருப்பினும் அதனை யாங்கொள்ளாம். உண்மையுணர்த்து மிலிகிதம் மனுடவாக்கென வரையப்பட்டி ருப்பினு மதுகோடும். இஃதெமது நடுவு நிலைமையாம். ஈசுரவாக்கென வெழுதப்பட் டிருத்தலினலேயே யாதானுமொரு சுவடி ஈசுரவாக்காய்விடாது. ஒரு சாதியிலும்வைத் தெண்ணப்படாத் தேவலோகத்தாரோடு இம்மானுட லோகத்தார் சம்பந்தப்பட்ட ஞான்றும் பிள்ளைகள் பிறந்தன: அவைகள் இவண் மானுடராகவே யிருந்தன: அவர்கள் வமிசமு முண்டென்னுஞ் சரிதைகளானும், யதுகுல உக்கிரசேனனுடைய மனைவி கருப்பத்தினின்று பிறந்த கஞ்சன் ஓரசுரனுக்கு உற்பத்தியானவனென்னும் வரலாற்றினும், கருப்பமடவர னிலைப்பின் வண்ணமுஞ் சுவுக்கு உருவம் குணமமையு மெனுமாற்றினுஞ் சாதி கிலேயாதென்பது மேலும் வலியுறும். ஆரியர்வேறு, திராவிடர் வேறென்றற்கு அவரவர் மண்டையோடுகளில் அடையாள முண்டென்னும் ஐரோப்பிய ராராய்ச்சியும் இங்குக்காட்டப்பட்ட கலப்பினிலையுதலின்றி நீக்கற்பாற்றே. சோதிடநூற்கட் குறிப்பிடு சாதி, தொழின் மரபின் மேற்று. பிறவுமன்ன. பிராமண னுவான் யாவனென்ற லறியவேண்டுமாயின் இந்நூல் எ-ஆம் பத்தை நோக்கலாம். கிற்க.

> "இங்கிலவுலகிற் கிறிஸ்தவர்கூட்டமே அதிகம்: இக்கூட்டத்தினும் பௌத்தர் கூட்டஞ் சிறிதுகுறைவு: அக்கூட்டத்தினு முகம்மதியர்கூட்டங் குறைந்தது: இக்குறைவினுங் குறைவுடைத்த இந்தக்கண் மதக்கூட்டம்: இக்குறைவும் நூற்றைம்பதாண்டுகட்கு ளின்மையுறலாம்."

என்று இற்றைக்கு ஐந்தாண்டுகட்கு முன்னே ஐரோப்பிய ரொருவர் (குறைத்து வருதலையுங் கூடிவருதலையுங் கணித்துக்) கூறுவாராயினர். சாதிச்சண்டை சமயச்சண்டைகள் புரியு மித்தேயத்தார் இதனையுங் கருதுவரோ! வரம்பற்ற சண்டைகளும் அழுக்காறுமே தத்தம்மத மனுட்டிப்பார் பலரையு மிழக்கும்படி செய்கின்றன வென்பதையும், அவ்வாறிழக்கப்பட்டார் தொகை மிக்கேமேலேகுறிப் பிட்டபடி மற்றைமதக் கூட்டமாய்ப்பெருகியுள்ளன, பெருகுகின்றன வென்பதையும், மேனளிருந்த புலவரைப் புகழ்தலிலேயே கின்றுவிடாது இந்காளுள்ள பொய்யில்புலவர் கனையும் புண்ணியர்கனையுமினிது புகழ்ந்து அவர்கட்கெவ்வாற்றினு மியன்றவுதவிய பர்ந்து நறிய போதனை நானனு கனி நிகழச்செய்வித்துப் பிறமதத் நிருப்பாரையுந் தஞ்சமயத்தில் ஆதரவோடு சாரச்செய்து சகோதரப் பான்மை பாராட்டத் தவறின், வைதிகசைவ சித்தாந்தசித்திரந் தீட்டப்பட்ட பெருஞ்சுவர் வெறுஞ்சுவராய் விடுபோழ்து அதிதாரமா யிராதென்பதையு மீண்டிவர்க் கறிவுறுத்துகின்றேம்; கடமைபற்றி. திருவருணேக்கம் இவர்க்குப் புலப்படாதாகலின் அதன்வரவு பாரா தனை முன்னிட்டு ஓல்லையில் இவருஞ் செய்யவேண்டுவ செய்யக் கடமைப்பட்டுள்ளாரே. கிறிஸ்துமதம் யாண்டும்

பம்பிப் பரவுதற்கு ஆங்கிலமொழி விருத்தியு மொருகாரணமாம். என்னை? அம்மொழிகள்—

கி. பி. 1657-ற்	...	...	கசுOOO,
1706-ல்	...	...	உOOOO,
1800-ல்	...	...	ரூOOOO,
1828-ல்	...	...	கO ரூOOO,
1830-ல்	...	...	கசுOOOO,
1894-ல் அச்சிடலாய அகராதியில்			கூகஅOOO,
1914-ல்	...	...	சரூOOOO,

என 1914-ற்றானே கணக்கிடப்பட் டுள்ளனவாகலின். இக்கணக்கில் (உரூள) இருநூற்றைம்பத்தே ழாண்டுகளுக் குள்ளே (கூகளOOO) காலிலட்சத்து முப்பத்தேழா யிரஞ் சொற்கள் சேர்ந்துள வென்பதறியப்படுகின்ற தன்றே? இப்படி யத்தமிழிற் சொற்கள்சேரத் தமிழர்கள் சம்மதிப்பரோ? ஒரு சொல்லேனுஞ் சேரச் சம்மதியா ரென்றே கூறலாம், கோணமையுண்மையின். ஒருபாத்தியாயர் செய்கையை முன்னரும் விளக்கினும். தமிழிற் புதுமொழிகள் சேரலாற் பயனென்? எனின்,—அறியாது கடாயினுய். இத்தமிழ் நாடல்லாத மற்றை நாடுகளிலுள்ள மரம், செடி, கொடி, புள், விலங்கு, நீர்வாழுயிர் முதலியவற்றின் பெயர்களும், நங்குள்ள பொருள்களுட் பலவற்றின் பெயர்களுந் தமிழ் நிகண்டுகளி லிலவாகலின் அவைகள் சேர்க்கப்பட்டுப் "பொருட் பெயர்த் தொகுதி"யும் இனிது விரிக்கப்படின் அவை, யாவையும் வருணித்துப்பாடும் பெரும்புலவர்கட்குப் பேருதவியாம்: நூல்களும் பலவேற்படும். இவை பயனுமென்க. 1914-ஆம் ஆண்டுகாறும் இவ்வுலகுழை வழங்கப்படுகின்ற பாடைகள் கூரOO-என்று கணக்கிடப் பட்டவற்றுட் கொன்னும் வழங்கப் படுகின்றவை எழென்பது மறியப்படுகின்றது. அவை:—

(க) ஆங்கிலம்	கசு - கோடி மக்களானும்,
(உ) ஜெர்மன்	கரூ - கோடி மக்களானும்,
(ங) ருஷ்யன்	கO - க்கோடி மக்களானும்,
(ச) ஃபிரென்சு	எ - கோடி மக்களானும்,
(ஞ) இத்தாலியும் (ட) ஸ்பானிஷ்டும்	ரு - கோடி மக்களானும்,

(எ) போர்த்துகீஸ் கூ - கோடி மக்களானும் பேசப் படுகின்றன வென்ப. தமிழ் பேசு மாந்தர் எறக்குறைய ஒன்றரைக்கோடி யென்ப. இவ்வாற்றானுந் தமிழ் தக்கவியா பகமின்றிக் குறை நிலைக்களத்தே நிற்றலறியப்படுகின்ற தன்றே? பாடை பதினெட் டேயென்று பண்டைப் பரதகண்ட சாத்திரங்கள் பகர்ந்தகாறுகடந்து எத்தனேயோ பாடைகளிஞ்ஞான்று காணப்படல், காலந்தோறுங் கன்மதன்மங்கள் வேறுபடு மென்பதைக் காட்டுகின்றதென்பதாமும், அவ்வேறுபாட்டிற் கியையப் பன் முகத்தாலும்

தமிழ் பல்குவழியினைத் தேடல்வேண்டு மென்பதூஉம், அப்பல்க லின்மையால் வட நாட்டிலும் மற்றைநாட்டிலுந் தமிழ்வேதப் பெருமையினையும் ஆக்கியவருளாளர் பெருமையினையு மறியாக்குறையானது வடமொழி பிறமொழி யென்பவற்றின் கண்ணவேயே விருப்பத்தையும் பிறமத வேட்கையையும் பெருமயக்கத்தையும் பெருக்கு கின்ற தென்பதூஉம், தமிழ்நலன் இற்றெனவறியாது இந்திமுதலிய வேறுபாடைகளை யிந்நாட்டகத்தும் விருத்திசெய்ய விழையும் வடநாடரது சுயநலத்தினை யாதரித்தல் தமிழர்கடன்மை யன்றென்பதூஉம், தலைவனதரு ளற்புதமும், கண்டுகூறுமுண்மையு முட்கொண்டிலகு தமிழ்வேதம் இனிது வியாபிக்கின் இந்நிலவுலகெங்கணுஞ் சைவ சமயமே தலைப்படு மென்பதூஉம், அஞ்ஞான்று ஆன்மலாப வவாவுடையா ரனைவரும் இவ்வுலகினை நேடாதிருக்க நியாயமின்றென்பதூஉம் இங்ஙனங் கொளக்கிடப்பனவாம். 'நமஃ' ஆர்ந்த கடவுளுடைய நாமார்ச்சனத்திற்கும் நாமமந்திர செபத்திற்கும் சத்திபீசமணைந்த மந்திர செபத்திற்கும் பிறமந்திரங்கட்கும் அங்கியைமுன்னிட் டுஞற்று உத்தர கிரியைக்கும் வடமொழியே முக்கியவுதவியாகவும், ஈசனுடைய திருச்செவி திருவுள்ளங்களை யினிது மகிழ்விக்குமாறு இன்னோசையும் உருக்கமு மியன்றவளவை பிறங்கப்பாடற்கும் பொருளறிதற்குந் தென்மொழியே முக்கியவுதவியாகவு மிருத்தலின் இவ்விருதிறமுந் தமிழர் கொண்டுய்பவரேயாவர். உருக்கமாகப் பாடு நயப்பிற்குத் தமிழே யுரியதாகும். நீ இழிகுலத்தான், யாம் உயர்குலத்தோமென்னுங் கருவப்பிணி நீங்குபு, கருணையுள்ள மோங்குபு, கறையில்கதி கருதுபு, தமிழ்நூலுமுணர் வடநூலபி மானிகளு முய்திபெறுபவரேயாவர்; மறையவனாகிய சுந்தரப்பெருமானருளிய திருத்தொண்டத் தொகையினை நோக்குக. வடமொழிகல்லாத் தமிழ்ப்புலவர்கள், தம் புலமைக்கு வேண்டப்படும் வடமொழிநூல்களின் வரலாறுகளும், நுதலியபொருள் களும் எத்திறத்தன வென்பனவற்று ளொன்றுமுள்ளபடி யறியாமே பலர் பலவாறு பகர்வன கேட்டும் பொறித்தன கண்டும் வரைந்த வழுக்கள் பலவுங் காணப்படுகின்றன வாகலின், வடமொழியுங் கற்றதமிழர் இருவிழியு முடையாரையொப்ப ரென்பாம். இதுபற்றியன்றே—

> "மந்தி போற்றிரிந் தாரி யத்தொடு செந்த மிழ்ப்பய னறிகிலா
> அந்தகர்"

என்னுந் திருவாக்கு மெழுந்துளது. சைமினியாரது மீமாஞ்சை யென்னும் வடநூலிற் சுருதி, இலிங்கம், வாக்கியம், பிரகரணம், தானம், நாமமென்னும் அறுவகையானே இதற்கிஃதங்கம், இதற்கிஃதங்கியென வறிதல்வேண்டும்: அவற்றுள் அங்கி தலைமைப்பொருளும், அங்கந் தலைமையில்பொருளு மாமெனக் கோடல்வேண்டு மென்பனமுதலிய பலவும் வரையப்பட்டுள. வாதிகளுட்சிலர், இவ்வகைகொண்டு வேதவாக்கியப் பொருளைத் தத்தம்பக்க லிழுத்துக்கொள்ளப் பார்ப்பர். பார்க்கு ஞான்று, அவ்வகையெல்லாமுணர்ந்து அவ்வப்பொருள்பொருந்த வேதவாக்கியங்கள் கிளக்கப்பட்டனவென்றற்கு ஒத்தின்றாகலிற் பின்னர்க்கற்பிக்கப்பட்ட இம்மொழிகளைக் கண்டு வைதிகசைவர் மயர்வுறல் கூடாதால். அம்மொழிகளிலும் உண்மைப்பொருட்

கேற்புடைமையில் வருதலே யாண்டு மெஞ்ஞான்றும் கோடற்பாற்று. அங்ஙனமே பதினைஞ்சு வித்தையு ளொன்முயுள்ள அந்தாலும் பிரமாணமாம்.

> "இப்பரமான்மா அளவையுட்படாதவன் : பிறப்பிலி : தருக்கத்தினால் இன்னீர்மைய னென நிச்சயிக்கப்பட்டாதவன் ; சித்திப்புக் கெட்டாதவன்."
>
> "அதிவாத தருக்கங்களை விடல்வேண்டும் : ஒருகாலியிலுஞ் சார்தல் கூடாது."
>
> "ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
> சோதிக்க வேண்டா"

என விருதிறமறையு மெடுத்துரைத்தலை இத்தூலின் "முக்தைகாளிற் சாருவாகனுலகாயதன்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரையி னுரைலாம். ஆண்டு வேறு பிரமாணங்களையுங் கண்ணுறலாம். இன்னனவு மிவட் கருதிக்கொள்ளத் தக்கனவே. ஏதுக்கள் = காரணங்கள். வித்தைகளுளொன்முய தருக்கதூலுள்ளும் உண்மைப்பொருட் கேற்புடைமையில் வருதலே கோடற்பாற்றென்பதைத் "தருக்கத் தினால் இன்னீர்மையனென நிச்சயிக்கப் படாதவன்" என்னு மறைமொழி காட்டியபடியு மோர்க. இயவுளுடைத் திருவாக்கின்முன்னே, திருவுளப்பாட்டின் முன்னே தருக்கதூலிற் கியாதொருசெயலு மின்றென்பதே ஈண்டெமது துணிபு. வீடுபேறு தன்னைதலா? பிறனைதலா? இருவரானுமாதலா? இருவரானுமாத லென்புழியும் இறை வனே யெல்லாம்வல்லா னென்றல் பொலிவெய்தாது ; அங்ஙனமாதருனே ? அப்பேறும் அகத்தும் புறத்துமுள்ள யாக்கையழிதலா ? யாக்கைமாறிடலும் யாண்டேனும் வசித்தலா ? ஆண்டுக்கற்போல கிற்றலா ? இருத்தலா ? கிடத்தலா ? இடையுறுது மேன்முகமாகச் செல்லலா ? வியாபித்தலா ? பிரகிருதியை விசாரித்துணர் புருடன் சுவரூபமாகத் தனித்து கிற்றலா ? மனோலயப்படுதலா ? அஞ்ஞான கீக்கமா ? ஆவரண கீக்கமா ? சத்துவகுணானுபவமா ? மூன்கீர்க்கட் குமிழி தகர்ந்தொடுங்கன் மான அந்தரான்மாவி லொடுங்குதலா ? யாண்டுமுள்ள பரமான்மாவி லடங்குதலா ? யாற்றுநீர் உவர்நீரிற் படிந்து உவராமாறு சிவகரணஞ் சிவகரணமாதலா ? சிவப்பொருளில் ஐக்கியமாதலா ? சிவனிலு முயர்வுடைமையாதலா ? சமமாதலா ? பசுகோய் கீக்கம் போற் றுன்பகீக்கமா ? இரும்புண்ட நீரென ஆன்மாவே அன்மையுறலா ? அழிதலா? அன்மையுற லென்புழியு மழியாதிருக்கு மென்புழியும் அத்திற வான்மாக்களைக் கண்டு கூறுவாரு முளரோ? கூறினரு முளரோ? அழியுமென்புழியும் அசித்தவசித்தென வழியா 'சித்தசித்தே ஆன்மா' என்பதெவன் ? என்னுங்கடாக்களையும் இவை போல்வன வற்றையு மேன்மேலு மெழுப்பிக்கொண் டேற்றபடி வாதம் புரிதலே அதிவாத தருக்கமாம்.

சுவானுபூதி கீத்துத் தன்னையே பெரியதெய்வமாகக் கூறிக்கொள்ளும் எகவாதமிழிந்தது ; ஆண்டா னடிமையாகக் கூறிக்கொள்ளுக் துவைதஞ் சிறந்தது ; இதினுஞ் சிறந்தது சம்பந்தப்பொருள் பயக்கும் அத்துவைதம் ; இதினுஞ் சிறந்தது இறைவனது மோனமுத்திரையினிறுத்த லெனு மெமது முடிவான சித்தாந்தம்,

இந்நூலுட்போந்த "முந்தைநாளிற் சாருவாக னுலகாயதன்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கட் டெளிவாக வுரைக்கப்பட்டதேயாம். இந்நூன்முழுதும் பரந்து கிடக்கும் பொருளுஞ் சுருங்கிநிற்கும் பொருளும் இதனையே கொண்டுளது.

நூலின் எழுவாய், இடைவாய், கடைவாயென்னு மூவிடத்தும் மங்கலம் வழங்கன் மரபாகலின் வணக்கம், உண்மைப்பொரு ளுரைத்தல், வாழ்த்தென்னு மூவகை மங்கலங்களுண் முதற்கட் கடவுள்வணக்கமும், கடைக்கண் வாழ்த்தும், இவற்றோடு அரிமா நோக்கெனச் சிவணிய நூன்முழுதும் உண்மைப்பொரு ளுரைத்தலுமாகிய மூவகைமங்கலமும் இந்நூற்கண் அடங்கி யிருக்குமா றறிக. வடநூலார் வணக்கத்தை நமஸ்காரமென்றும், உண்மைப்பொரு ளுரைத்தலை வஸ்து நிர்த்தேசமென்றும், வாழ்த்தை ஆசியென்றுங் கூறுப.

இந்நூ லுரைகளாய தமிழில், ஏற்புடைமைகருதி வடமொழிவழக்கிற் கியையவுந் தென்மொழி வழக்கிற் கியையவுஞ் சில வடசொற்கள் தெரிக்கப்பட்டுள.

ஸுப்ரஹ்மண்யோம்

புதுப்பாக்கமென்னுங்
குமாரபுரம், சென்னை.
26-7-1920.

இங்ஙனம்:
குமரகுருதாச சுவாமிகள்;
பாம்பன்.

க=1, உ=2, ந=3, ச=4, ரு=5,
சா=6, எ=7, அ=8, கா=9, கம் } 10, கமா = 100,
ய

கமா } 1000.
சா

உ

சிவமயம்

குஹப்ரஹ்மணே நமஃ

திருச்சிற்றம்பலம்

திருப்பாவும்
திட்பமென்னு முரையும்

கடவுள் வணக்கம்

பன்னிருசேர்க்கழிகெடிலவ்டியாசிரியவிருத்தம்.

பாராதி யைம்பூத மல்லாத தாயண்ட
பகிரண்ட மூலமான
பரவிந்து பரநாத நிலையைக் கடந்தரும்
பாவன வரூபவிரிவே
நாராக நிற்குமா மாயையை யகன்றதாய்
நாப்பணடி யீறற்றதாய்
நானென தெனாநெறிச் செல்வர்க்கம் பீரமாய்
நந்தறிரி பில்லாததாய்
நேராய வுவமான வுவமேய நீத்ததாய்
நின்மல வசங்கநபமாய்
நித்தபரி பூரண வகண்டதத் துவஞான
நிட்டையில் விளங்குநிலவாய்த்
தாராள மாய்முதிய முதனூ லிரண்டுமொரு
சம்மதங் கொண்டுமுடிவிற்
சாற்றுநற் சச்சிதா னந்தமா யுள்ளசிவ
சாமியைச் சிந்தைசெய்வாம். 1

உரை

நிலம் முதலிய ஐந்தபூதங்களு மல்லாததாய், பிரமாண்டத்திற்கும் அதற்கு வெளிப்பக்கத்து அண்டங்கட்குங் காரணமான பரவிந்து பரநாத மீலயிலைக் கடந்து சொலற்கரிய சுத்த அரூப (சிவசத்தி சார்ந்த தன்மையினுற்) சத்தி பிரபஞ்சமே தன்னிருபையாக நிற்கின்ற மகாமாயையை நீங்கினதாய், நடுவும் அடியு மில்லாததாய், நான் எனதென்னுஞ் செருக்கில்லா மார்க்கத்து ஐசுவரியவான்களுடைய கம்பீரமாய்,

உற்பத்தியும் வேறுபாடு மில்லாததாய், பொருத்தமாகிய உவமானமென்னும் அளவையாலளக்கப்படுஉம் உவமேய மில்லாததாய், களங்கப்பொரு ளெவற்றினுமிருந்தும் அக்களங்கஞ் சாரா ஏகாகாசமாய், எக்காலத்துங் குறைவற்ற பரிபூரண தத்துவஞான நிட்டையிற் பிரகாசிக்கும் பிரகாசமாய், பழமையான வேதம் சிவாகமமென்னும் முதனூலிரண்டுக் தடையிலாவொரு நிச்சயத்தைக் கொண்டு முடிவிலே (= ஞானப் பகுதியிலே) கூறியுள்ள சச்சிதானந்த வத்துவா யிராநின்ற சிவசுவாமியைத் தியானிப்பாம்.

பாராதி யைம்பூதமென்றது நிலம், நீர், தீ, காற்று, வெளி யென்னும் ஐம்பெரும் பூதங்களே. இவற்றையுங்கூறி " அண்டபகிரண்ட மூலமான பரவிந்து பரநாதகிலே " னன்றதனால், மேலைப் பூதம் - டு ; பூதாதி யகங்காரமுக் தாமசகுணமுங் கூடியவிடத்துத் தோன்றுஞ் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்னுக் தன்மாத்திரை - டு ; வைகாரிக அகங்காரமும் இராசச குணமுங் கூடியவிடத்துத் தோன்றும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்னுங் கன்மேந்திரியம் - டு ; தைசச அகங்காரமுஞ் சாத்துவிக குணமுங் கூடியவிடத்துத் தோன்று மனம் - க ; சுரோத்திரம், துவக்கு, சக்கு, சிகுவை, ஆக்கிராணமென்னு ஞானேந்திரியம் - டு ; சாத்துவிககுணம் மிக்கவிடத்துத் தோன்றும் புத்தி - க ; இப்புத்திபிற்றோன்றி மேலே கூறிப்போந்தவாறு மூவகையாகப் பகுக்கப்படும் அகங்காரம் - க ; முக்குணமுஞ் சமப்பட்டவிடத்துத் தோன்றுஞ் சித்தம் - க ஆக ஆன்மதத்துவம் உச - ம் ; இவை வெளிப்படற்கு நிலைக்களமாயுள்ள மகத் தத்துவமாகவும், மேலே கூறிப் போந்தவாறு பகுக்கப்படுங் குணத்தினை (வாசனையை யடக்கிக்கொண்ட அரும்புபோல்) வெளியிடா தடக்கியுள்ள அவ்வியத்தமாகவு மிராநின்ற பிரகிருதியும் ; இப்பிரகிருதி தோன்றற் காதாரமான கலையென்பது - க, இக்கலையிற்றோன்றும் வித்தை அராகமென்பன - உ, மேலைக் கலை தோன்று ஞான்றே அதனோடு தோன்றுங் காலம் நியதி யென்பன - உ, இவ்வைந்தினின்றுக் தோன்றும் புருடனென்பது - க, மேலைக் கலைக்குக் காரணமான மாயையென்பது - க ஆக வித்தியாதத்துவம் எ - ம் ; சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதமென்னுஞ் சுத்ததத்துவம் டு - ம் ; இவ்வைந்துந் தோன்றற்கு நிலைக்களமாயும், மேலே விளக்கப்பட்ட பிரகிருதியிலும் மாயையிலும் வியாபிக்கும் மேதை, ஆமாக்யம், விஷம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதை, நாதாக்தை, சத்தி, வியாபினி, சமனை, உன்மனை, வியோமரூபை, அனக்தை, அனுதை, அனுசிரிதையென்னும் பதினாறு கலைகளும் ஈண்டுக் கொளக்கிடக்கின்றன.

இங்கே, ஆன்மதத்துவம்-உச, வித்தியாதத்துவம்-எ, சுத்ததத்துவம்-டு எனக் குறிக்கப்பட்ட உட்கருவி மூப்பத்தாறையுங் கடந்துளதே சச்சிதானந்தப் பிரமமென்னுஞ் சிவம் : அதுவே பசு பாச மென்னு மிரண்டனையும் ஆளும் பதியென்பதை யுணர்த்தத்தக்க வத்து நிருணயமாகவும், அவ்வத்து வணக்கமாகவும் இத்திருப்பாட்டு அமைக்தவாறு மறிக. சொல்லற்கரிய சுத்த அரூப சிவசிற்சுத்திக்குத் தானுடம்

பாயிருக்குந் தன்மையாற் பிரபஞ்சமே தனது கிருபையாக நிற்கின்ற மகாமாயை யென்பார் "அரும்பாவன வருப விரிவே நாராகநிற்கு மா மாயை" என்றாரென்க. விரிவு = பிரபஞ்ச சத்தி. நார் = கிருபை, அன்பு.

சாமி-'ஸ்வாமி' என்பதன் விகாரம். இது, சுப்பிரமணியப் பெருமானுடைய திருநாமங்களு ளொன்றேயாக—"தேவஸேநாபதிச் சூர: ஸ்வாமி கஜமுகாநுஜ:" என்று அமரஸிம்ஹமென்னு நிகண்டு நிகழ்த்தலானும், அப்பெருமான் சிவகுருவாத லானும், ஸ்வாமியென்பதுங் குருவென்னும் பொருட் டாதலானும், மெய்ப்பொருள் சுப்பிரமணியமென வுணர்ந்து அப்பெருமானையே பாடும்பணிகொண்டு அனுபவஞானச் செல்வமுடையராய் நின்று அவ்வனுபூதி வாயிலாகவே பிறவாப்பேறு பெறீஇய அருணகிரிநாத முனீந்திரரை, இந்நூற்புலத்துள்ள ஒவ்வொரு பத்தின் ஈறுதோறும் வைத்துப் பாடியபடியே மற்றுந் தம்முடைய நூல் யாவற்றினும் பின்னாதல் முன்னாதல் வைத்துப் பாடும் வழக்கமுஞ் சிவமுஞ் சத்தியுங் கணபதியுஞ் சுப்பிரமணியமே யென்னும் விபூதி மறைமொழி வத்துநிச்சயம் நனிதிகழ அப்பெருமா னொருவனையே வழிபடுகடவுளாகக் கொண்ட நியாயமும் இந்நூலுரையாசிரியர்மாட்டுக் காணப்படுத லானும் அவ்வொருவனைத் தியானிப்பா மென்பதுகருதியே "சிவசாமியைச் சிந்தை செய்வாம்" என்று கூறினரென்பதூஉம் ஈண்டைக்குச் சாலுமென்க. இது, பின்வரு திருப்பாட்டுக்களானும் பெரிதும் வலியுறும். மேற்கூறிப்போந்த கருவி முப்பத் தாறையுங் கடந்துளபொருளே பரம்; அது சுப்பிரமணியமெனல் அவ்வருணகிரிநாத முனீந்திரர்க்கு முடம்பாடேயென்பது—

"ஆறாறி னதிகமக் ராய மனுதினம் - - - - -
காவேரி வடகரைச் சாமி மலையுறை—தம்பிரானே"

என்னுந் திருவாக்கா னுணர்ந்துகொள்க. முப்பத்தாறும் ஆகமத்திற் கூறப்பட்டபடி வேதத்துங் கூறப்பட்டன வெனற்காம் விவரமும், மேற்கோளுஞ் சைவசமயசாரபம், சிவசூரியப்பிரகாச மென்பவைகளிற் கண்டு கொளலாம். சிவமுஞ் சத்தியுங் கணபதியுஞ் சுப்பிரமணியமே யெனக் கொண்ட வத்துநிச்சயம் சச்சிதானந்த விலக்கணமென மகிழ்வேன் எனப் பத்துப்பிரபந்தத்துள் அனவரத பாராயணாஷ்ட கத்தில்—

"மன்றெனும் பதியுறை மழவிப முகவனு
நன்றெனும் பிரணவ வவனிளை ஞனுமறை
தொன்றெனும் பொருளெனச் சுடர்சிவ னுமுமையு
மொன்றெனும் பெரியவ ருயர்பதம் பணிவேன்." எனவும்,

"மாலொடு விதியறி யாதசெம் மரைமலர்க்
காலொடு நவிரமு மாரிறை களியுமை
வேலொடு வருகுக வேள்கள பமுகன்மெய்
வாலொடு மிளிரறி வினிதென மகிழ்வேன்."

எனவுங்கூறி ஈற்றுச்செய்யுட்கண், திருப்புகழ்க் கவிஞனாருடைய இறை என்னும் பொருளுறப் "புகழ்க்கவி யிறை" என முடிவு மொழிந்ததுங் காண்க. சச்சிதானந்த விலக்கணம்—வேறு வேறாகப் பிரிக்கப்படாவொன்றென்பதை அகலம், கனம், நீளமென்னும் விசேடவுவமான முகத்தானே சாதித்திடுதலை—

"மூவகை யென்று மொழிந்தவை மூடக லங்கன நீளமென்
றாவது றழ்ந்து பிறங்கிடு மாகலி னொன்றென நின்றிடும்"

என்னுந் தகராலயரகசியத் திருவிருத்த வாயிலாகவும், அதனுரை வாயிலாகவு மயிர்ப்பற வுணரலாம். "நான்" எனப்பட்டது ஞாதிருவாம். "எனது" எனப் பட்டதன்கண் ஞானம், ஞேயமென்னு மிரண்டும் அடங்கும். இவற்றினை முறையே காண்பான், காட்சி, காட்சிப்பொருளென்னுந் திரிபுடியென்ப. நானென்பதை 'அஹங்காரம்' என்றும், எனதென்பதை 'மமகாரம்' என்றும் வடநூலார் வழங்குப. நானெனதென்னு மிரண்டனையுஞ் 'செருக்கு' என்று திருவள்ளுவதேவர் தெரித்தனர்; "யானென தென்னுஞ் செருக்கு" எனநிகழ் திருக்குறளிற் காண்க. இப்பிரயோகம் சிவஞானபோதத்துங் காணப்படுகின்றது. வேதத்தின் பாகுபாடு கருமம் உபாசனை ஞானமெனவும், சிவாகமத்தின் பாகுபாடு சரியை கிரியை யோகம் ஞான மெனவுங் கொளக்கிடத்தலின் இறுதிக்கணுள்ள இருதிற ஞானங்களுமே "முடிவு" எனப்பட்டன.

செல்வமுடையார் "செல்வர்" எனப்பட்டனர். செல்வம்—எவர்பாலு நிலைத்திராது காலசக்கர கதிப்படி நீங்கிச் செல்லு நீர்த்தெனப் பொருள்படூஉங் காரணப்பெயர்; செல்-பகுதி, அம்-கருத்தாப் பொருள்விகுதி, வ்-இடைநிலை. இவ்விலக்கணமறியாது சம்பத்துடைமையென்னும் பொருளில்வரும் (ஸ்ரீஸம்) ஸ்ரீலம் என்னும் வடகிளவியின் விகாரமே 'செல்வம்' என்னலா மென்ப தேற்புடைத்தன்று. ஈண்டுச் 'செல்வர்' என்பதற்கு நானெனதென்னுஞ் செருக்கில்லா நல்வழியிற் செல்வார் (=நடப்பவர்) என்னும் பொருளுங் கொள்ளலாமாகலின், இஃது இரட்டுறமொழித லென்னும் உத்தியிலுறுவதுமாம்.

'நித்ய பரிபூர்ணம்' என்னும் வடமொழி "நித்த பரிபூரணம்" எனப்பட்டது; தமிழ்நூன் முடிபு. வடமொழியினைத் தமிழின் மொழிபெயர்த்தே கூறல் வேண்டு மென்பதின்றி இருந்தபடி யாகவும், தமிழ்நடை வழக்கிற் கியையு மாறாகவுங் கோடலா மென்பதை,

"செந்தமிழ்ச் செய்யு டெரிந்துணர்ந்து செந்தமிழ்க்கண்
வந்த வடமொழியை மாற்றாதே—சந்தம்
வழுவாமற் கொண்டியற்று மாண்பினார்க் குண்டோ
தழுவாமை நிற்குந் தமிழ்." என யாப்பருங்கல விருத்தியில் வரூஉம் வெண்பாவா னறிக.

தாராளம் - மிகுதியென்னும் பொருள் பயக்கத்தக்க வொருபதம். "தாராளமாய்நிற்க நிச்சிந்தை காட்டி" என்றார் சுவானுபூதிச் செல்வராய தாயுமான சுவாமிகளும்.

"எவ்வகைப்பெயரும்" என்னுந் தொல்காப்பிய விதிப்படி 'யாம்' என்னும் எழுவாய் தொக்குநின்றது. வருவனவற்றிற்கும் இவ்விதி கோட்டற்பாற்று.

"பார்" என்பது நிலமாகலின், நிலமென்னு மக்கல மொழியானே இத்தூல், தொடங்கப் பட்டதென்க. (க)

பன்மதத் தொறுவெலா மறுதியிட் டறைதரும்
பலபேத தெய்வமாகிப்
பகரும மதங்கட் கதீதநிலை யாகியொரு
பரிசின்றி நிகழ்வதாகிப்
புன்மதி யணுக்களுறழ் வுக்குறழ்வ தாகியெதிர்
போக்குவர வற்றதாகிப்
புகலரிய வண்டகோ டித்திரள்க ளைத்தனது
பூர்த்திநில வருள்வெளியிலே
வன்மையொடு வதியவைத் தைந்தொழிலு மவ்வருளின்
வலியா னடத்தியுனலும்
மறதியு மிலாதமலி சூனிய சிதாகாச
வத்துவா யனவரதமும்
என்மனசி லுள்ளகுரு தெய்வமா யெக்காலு
மேசற்ற வின்பமாகி
எங்குநிறை வாயவிர் குகப்பிரம மென்பதை
யெணாதெணி யிறைஞ்சல்செய்வாம். 2

பலவேறு வகைப்பட்ட மதக்கூட்டங்களெல்லாம் முடிவுபடுத் துரைக்கும் பற்பல தெய்வமாகியும், அவ்வாறுரைக்கும் அம்மதங்களுக்கு மெட்டா எல்லைப் பொருளாகியும், மாயையின் குணங்குறிக ளொன்றுமின்றிச் சுயமாய்ப் பிரகாசிப் பதாகியும், அற்பமதியுடைய ஆன்மகோடிகளி னறிவுக் கறிவாகி ஒப்பும் இறப்பும் உதிப்பு மில்லாததாகியும், அளவுபடுத்துரைத்தற் கொண்ணாப் பலகோடி அண்டத்திரள் களுந் தத்தம் நிலைபெயராது தங்கும்படி அவற்றினைத் தனது பூரணமாகப் பிரகாசிக் கின்ற திருவருள்விலாச வெளியிலே வைத்து, (சேதனமும் அசேதனமுமான அவை களின் பொருட்டுச் செய்யப்படுந்) தன்னுடைய ஐம்பெருந் தொழில்களையும் அவ்வரு ளின் வல்லமையால் நடக்குமாறுசெய்து நிலைத்தலும் மறத்தலுமில் (பாச) சூனிய பூரண ஞானாகாச வத்துவாகியும், எஞ்ஞான்றுமெனது மனத்தின் கண்ணே நியானித் தற்குள்ள குருவுந் தெய்வமு மாகியும், எக்காலத்துங் குற்றமற்ற ஆனந்தமாகியும் யாண்டும் பூரணமாய் மிளிர்கின்ற குகப் பிரம மென்னும் பெயரிய பொருளைச் சக நிலைவைக்கொண்டு நிலையாது பர நிலைவைக்கொண்டு நினைத்து வணங்குவாம்.

ஐம்பெருந் தொழில்களுட் சிருட்டி ஈசனுடைய சத்தியோசாத முகத்தானும், திதி வாமதேவ முகத்தானும், சங்காரம் அகோர முகத்தானும், திரோபவம் தற்புருட முகத்தானும், அனுக்கிரகம் ஈசானமுகத்தானு நடை பெறுமென்று ஸ்ரீமத் - சைவ மஹாபுராண வாயுசங்கிதை வழங்குகின்றது.

யாண்டும் நிறைந்துள்ள பிரமப்பொருளே ஆன்மாக்களின் இதயகமல 'குஹாவாஸி' யாயுமிருக்கின்ற காரணத்தான் அதனை, "எங்கு நிறைவாயவிர் குகப்பிரமம்" என்றல்—

(அணோரணீயாந்மஹதோ மஹீயானாத்மா
மஹாயாந்நிஹிதோவாஜ் ஜந்தோ: ।
அணோரணீயான் மஹதோ மஹீயா னாத்மா
குஹாயாந் நிஹிதோஸ்ய ஜந்தோ: ।)

"அணுவிலு மணுவாய்ப் பெரிதிலும் பெரிதாயுள்ள (பரம) ஆன்மா இச் செத்துவினது இதய குகையிலுளது" என்று தைத்தீரியாருணசாகை நாராயணமும், அதர்வணவேத சாரதபரிவ்ராஜகம், சரபம், யஜுர்வேத கடம், சுவேதாச்வதர மென்னும் உபநிஷதங்களும்,

"அணுவி லணுவென நிறைந்திட்டு நின்றவொரு—சம்ப்ரதாயம்"

என்று தமிழ்வேதத்துப் பழநித்திருப்புகழும் பகர்தலிற் பெறப்படுஉ மென்க. இப்பொருள், புராணரத்தினமாகிய ஸ்ரீமத்-மஹாஸ்காந்தத்தின் சம்பவகாண்டத்து கூடு-ஆம் அத்தியாயத்துப் கரு-ஆஞ் சுலோகம்—

(மஹேதிஹமஹாகாஸோ வெஷாதேஷ்வஹிவஸ்யதே ।
தஹிஷ்டோயம்மஹஸ்வேஷு குஹாசாஸ்ய குஹாரிகஸ்ஸோவஸ: ॥
குஹேதிதஹராகாசோ வேதாந்தேஷ்வஹிபட்யதே ।
தன்னிஷ்டோயம்குஹப்ரோக்தஸ் லர்வஹ்ருத்கமலாஸக: ।)

"வேத வேதாந்தங்களிலே தகராகாசங் குகையென்று கூறப்படுமன்றே: சகலப் பிராணிகளின் இதய கமலங்களாகிய அக்குகைகளில் வசித்திருப்போன் நின்மகனுகலின் அவன் (மஹ:) குகனெனப்படுகின்றனன்." என்று உமாதேவி முன்னிலைக்கண் உமாபதி யுரைத்தனனென்னும் பொருள் பயத்தலானும், மேலைக்காண்டத்து ஈற்று மொழிகள்—

(குஹாயாகதயத்ஸர்வம் ஸ்ருத்குஹஸ்தாயயோகிநாம் । ஜகாத ।)

"யோகிகளுடைய இதயாகாசத்தில் விளங்காகிற்குங் குகனுகிய பிரபு." என்று கைமிசாரணிய முனிவர்கட்குச் சூதமாமுனிவர் சொல்லியருளினரென அருத்தமுறுத லானு முறுதிப்படும். உபபுராணங்களு ளொன்றுய பார்க்கவ புராணமென்னும் விநாயக புராணம்—

"அசுரர் குலத்தை வேரோடு மடுபோ ராற்றி யறுத்தலினு
லசுரர் குலக லகனென்று மசைத்து மயின்மேற் சேவலுயர்த்
திசைகொண் டிடலான் மயூரே சனென்றுஞ் சேவற் கொடியனென்றும்
வசைமி லுயிருள் ளமுங்குகையும் வதியு மியல்பாற் குகனென்றும்."

என்று கூறுதலினும் அது காணப்படுகின்றதென்க. கடவுளிலக்கணம் தடத்தமென்றுஞ் சொரூபமென்றுஞ் சொல்லப்படும். அவற்றுட் சுவானுபூதியிற் காணப்படுஉம் ஏகபூரணம்போலாது பலவாய்ப் பிரிதுபொருளின் சார்பாயிருக்கும் பொதுவியல்பே தடத்தலக்கணமெனப்படும். தடத்தம் = அயலிடத்துளது. பொதுவியல்பல்லாத அவ்வேகபூரண வியற்கையாயிருக்குஞ் சிறப்பியல்பே சொரூபலக்கணமெனப்படும். இவ்விருவேறு வகையானுங் குகப்பிரமத்தைப் பாடித்துதித்துப் பன்னூல்க ளியற்றியருளும் ஆசிரியர், இத்தூலமுழை அச்சொரூபலக்கண மொன்றின் கண்ணேயே அக் கடவுளை வைத்துத் துதித்தல், வேண்டல், வேண்டுமாறுணர்த்தல், ஆசிரியனுய் வெளிப்பட்டரு ளன்புணர்த்த லென்பனவற்றைச் செய்தனரென்பதூஉம் உணரக் கிடக்கின்றதென்க. என்னை? வெளிமுகக் கோயில்களிலுள்ள மூர்த்தங்கள் குறிப்பிட்டேனும், மூர்த்திகளின் அணிகலம் படைக்கலம் ஊர்தி தேவி முதலியன குறிப்பிட்டேனுங் கூறவில்லையாகலின்.

தொறு = கூட்டம் ; பிங்கல நிகண்டு.
" அறைதரும் " என்பதிலே தா - துணைவினை.

உறழ்வு = உணர்வென்னும் அறிவு ; " உறழ்வே யிடையிடு முணர்வும் " என்பது சேந்தன் நிவாகரம்.

" உறழ்வதாகி " என்பதில் அது = பகுதிப் பொருள் விகுதி. (உ)

தூர்த்தகுண முள்ளவிப சாரிநடை யென்னவொரு
துறையின் றனந்ததெய்வந்
தொழுவழு வுறாதொருவ னுடலிலொரு சீவனே
தோய்ந்துநின் றிடுநீர்மைபோற்
சீர்த்தியுக மெங்கணும் பூர்த்திநிதி யாகவே
சின்மய வியோமவடிவாத்
திகழகண் டாகார சத்யசை தன்யபர
தெய்வத்தை யுய்யுமெல்லா
மூர்த்திகளு மேத்துபரி பக்குவங் கண்டவர்கண்
முன்னுமா றருளுமறிவின்
மூலமுத லைப்பொருவில் வைதிகசை வத்துழை
முதற்கடவு ளாயபொருளை
வார்த்தைமன தாலள விடற்கொணா வத்துவித
வாசா மகோசரத்தை
மாசற்ற சுத்தசிவ சுப்பிரமணி யத்தைநாம்
வந்தித்து வாழ்த்திவாழ்வாம். 3

பலபுருடரையும் விரும்புந் தூர்த்தகுணத்தையுடைய வியபிசாரினது நடையைப்போல், ஒரு தெய்வத்தை வழிபடு மார்க்கமின்றிப் பல தெய்வங்களையுங்

தொழுங்குற்றத்தை யடையாமல், ஒருவனதுடம்பினுள் ஒருயிரே பொருந்தியிருக்கின்ற தன்மை போலச் சிறப்புவாய்ந்த வுலகெங்கும் பூரணவைப்பேயாக ஞானமய ஆகாச சொரூபமேயாகப் பிரகாசிக்கும் அகண்டாகார சத்திய சைதன்னியமென்னும் பரதெய்வத்தினை, சிவதசையோடிருக்கின்ற யாவருக் துதிக்கும் பரிபாகத்தையறிந்து அவர்கள் சிந்தித்தவா றனுக்கிரகம் புரியுந் திருவருண் மூலமென்னுந் தலைமைப் பொருளை, இணையில்லாத வைதிகசைவ மார்க்கத்தின் முதற்கடவுளாகிய வத்துவை, வாக்காலும் மனத்தாலும் அளத்தற்கரிதான அத்துவித வாசாமகோசரத்தை, நின்மல சுத்த சிவசுப்பிரமணியத்தை யாம் வணங்கித் துதித்து வாழக்கடவோம்.

காமிகாகமத்து அக்கிகார்ய விதிபடலம்—

(ஆதௌவாகுண்டஸம்ஸ்காரம் குர்யாத்வைதிகசைவகம் !)

"வைதிக சைவனனவன் குண்டஸம்ஸ்காரத்தையேனுந் தொடக்கத்திற் செய்தல் வேண்டும்." என்று கூறுதலின் "வைதிக சைவம்" என்னும் பிரயோகம் ஈண்டுப் படைத்துமொழிதல் என்றென்க. சைவமென்னும் வடமொழி சிவசம்பந்தமென்னும் ஒண்பொருளுடைத்து. இதனை, 'நல்லான்றொடர்பு' என நவில்வது தேரிய தமிழாம். வைதிகநூலகத்தே சுப்பிரமணியஞ் சிவமென் றுணர்த்தப்படுமுண்மை—கந்தபிரானது வரலாற்று மகிமையினை முன்னர்க்கொண்டு சிவனுக்குங் கந்தனுக்கும் அபேதஞ் சாதித்தலின் முதன்மை படைத்ததாய்ப் புராணங்கட்கெல்லாம் பெரியதாய்ச் சுருதி மயத்ததாய் விளங்காநின்ற ஸ்ரீமத் - ஸ்காந்தம் சிவபுராண மெனப்படுதலினாலும், ஷண்முக ஸஹஸ்ரநாமத்துட் "சங்கரன்" என்னுந் திருநாமம் போந்த பின்னர்ச் "சிவன்" என்னுமொரு திருநாமமுந் தொடர்தலினாலும், பிற முறைகளாலும் பெறலாம். அருணகிரிநாதனார் தமிழ்வேதம், அடியிலெடுத்துக் காட்டப்படு வாக்கியங்களுட் "சிவசிவ" என்று குமாரனைக்கூறுதலும், "சிவசமய வறுமுகவ திருவேர கத்திலுறை — பெருமாளே" எனமுடிவதனுள் அவனது சமயஞ் சிவசமயமெனப்படுதலுங் காண்க. இவ்வாற்றுற் சுப்பிரமணியத்தை "வைதிக சைவத்துழை முதற்கடவுளாயபொருள்" என்று சொற்றது சால்பிற்றேயாம். முதற்கடவுள் = அணு சதாசிவர் முதலியோர்க்குங் கடவுள். இதனைச் சுப்பிரமணியோபாசகர் யாவரும் வைதிகசைவரெனப்படுவா ரென்க. ஆகலினன்றே குமாரகுருதாச சுவாமிகள்பாட லென்னும் பெயரிய கோசமொன்றில்—

"சைவமெனுஞ் சொற்சிவசம் பந்தமெனப் பொருடரற்கோர்
ஐயமிலை யாகலினுன் னடியேனஃ நின்றுலகிற்
சைவனெனச் சாற்றவொரு சற்றுமொவ்வா தெங்கோயாள்
தெய்வமுதால் சைவஞ்செய் சிவலோக சுந்தரனே."

என்பதுங் கூறப்பட்டுளதென்க. 'கௌமாரர்' என்று சொல்லிக் கோட லெம்மனோர் லென்றுகொள்ளப் படுவதன்று. என்னை? பரம சண்முகனுக்குப் பஞ்சமுகசிவன் சிடனெனப்படு மாற்றனே அச்சண்முகசிவன் மேலானவனென்பதே கௌமாரசமய மெனப்படுவதாகலின்; தனக் கொப்புயர்வில்லாதிருக்கு மொன்றே

இங்குறு கடவுளெனச் சொல்லிக் கொள்ளாதது யாதொரு சமயமெனப்படாதாகலின், சிவன் சேடனுனது சுவப் பிரயோசனமல்லாத பரப்பிரயோசனமாம்.

" சிவசிவ ஹரஹர தேவா நமோநம
தெரிசன பரகதி யானுய் நமோநம - - - -
திரிபுர மெரிசெய்த கோவே நமோநம
ஜெயஜெய ஹரஹர தேவர சுராதிபர்—தம்பிரானே "

என அருணகிரிநாதனுர் தமிழ் வேதம் (" அவருணகிரகனே " என்றற் றொடக் கத்துத் திருப்புகழ்த்துக்கில்) அறிவுறுத்தலுமோர்க.

ஈங்கெடாக் காட்டப்பட்ட புராண வகைப்பெயர், லஹஸ்ரநாமம், அருணகிரி நாதர் வாக்கு என்பனவோ குமாரமூர்த்தி சிவனென்றற்கு நிரப்பில் பிரமாணங்களா யெண்ணப்படுவன? என்னுங்கடா வெழுதருமாயின், அவ்வருணகிரிநாதர் திருவாக் கொன்று தானே ஈண்டுச்சாலும்; ஏனையவை அதிகமேயென நுவறல் விடையாம். என்னை? அவனெருவனையே வழிபட்டவனருளா லனுபூதியெய்தி யனுபூதி கூறி னராகலின். இந்நாதர் திருவாக்கின் மதிப்பிலிக ளுளராயின், அவருமுணர்தற் பொருட்டு வேறு சிலவுங் காட்டுதும். முதல்வன் புராணமாகிய ஸ்காந்த மஹா புராணம் சம்பவகாண்டத்து ஈக - ஆம் அத்தியாயத்தில்—

(அ) (அஜ்ஜவஜ்ஜஜ்ஜஷொவெய்யாஜவெஷ்டியெடியுதீவராஜ்ஜரா ।
ஸிவயம்ஷாஜவிஜ்ஞாய ஜ்ஞவாஜ்ஜயம்பாதிதஜ்ஜஃ ।
கயிதிஜ்ஜஷ்டிஜ்ஜஜஹாய வஜ்ஜவ்ரஜ்ஜஜ்ஜணஜ்ஜவாராவஸே ॥

சர்ம்மவர்மறுஷோவ்யோம வேஷ்டயேத்யதிபாஜ்ஜரா ।
சிவயம்த்வாமவிஜ்ஞாய துக்காந்தம்பாதிதர்மஃ ।
த்வபித்ருஷ்டேஜதக்நாத ஜ்ப்ரஹ்மண்யபராபரே ॥)

" மனிதர் தங்கையினுல் ஆகாயத்தை உரியாக வுரித்தெடுத்து உடையாக வுடுத்திக் கொள்வார்களாயிற் சிவனே! உன்னையறிந்து கொள்ளுவதை நீத்துத் துக்கத்தைக் கடப்பார்கள். சகரானுஜ சுப்பிரமணியனே! பராபரனுய வுன்னைத் தரிசித்து வணங்குகின்றனம்." என்று தேவர்கள் கூறி முருகப்பெருமானை வணங்கி னர்களென்றும், மேலைப்புராணம் யுத்த காண்டத்து உக - ஆம் அத்தியாயத்தில்—

(ஆ) (வராகூரதரஸிவம்வாதயி ஜ்ஞாநாரதத்வரா ஸவிணி ।
வெராதவாநுவாஸிஜ்ஞவரா உநாஜ்ஞஸ்தமஜ்ஞம்துவா ॥

ஸாகூரந்பரசிவம்ஸ்ய ஜ்ஞாநாரந்தல்வரூபிணம் ।
ப்ரோக்தவாம்பாலிசந்தல்மா ததபூதம்பலம்த்வயா ॥)

" சத்திய ஞானனந்த சொரூபியாயுள்ள இந்தச் சாகூரது பரமசிவனை ஒரினை ஞனென்று கூறினமையின் அதற் கேற்புடைப் (புத்திரர் முதலினோர் மடிந்த) பலனை

நீ ரனுபவிப்பவராயினீர்.'' என்று சிங்கமுகன் தன்முன்னேனும் ஆயிரத்தெட்டண் டாதிபதியு மான சூரபன்மனுக்குச் சொற்றன னென்றும், ஸ்ரீமத் - குமாரதந்த்ரம் மந்திரோத்தார படலத்தில் வருதியானத்தில் —

(இ) (ஸஹஸ்ரகுலஜாதாய யோகாய யோகாதிபதயே சாந்தாய
சாந்தஜநப்ரியாய சிவாய சிவதந்த்ராய ஷண்முகாய
ஸர்வஜ்ஞாநஸம்பூர்ணாய ஸ்கந்தாய ஸர்வாய
ஸ்ரீம்ஸ்ரீம் ஹ்ரீம்க்ஷம் மஹாஸ்ரவிகங்காலாய காலாக்நிரூபிணே
ஸஹஸ்ராஜாய ஸுப்ரஹ்மண்யாய நமஃ)

" ஸஹஸ்ரகுலமர்த்தநாய யோகாய யோகாதிபதயே சாந்தாய
சாந்தஜநப்ரியாய சிவாய சிவதந்த்ராய ஷண்முகாய
ஸர்வஜ்ஞாநஸம்பூர்ணாய ஸ்கந்தாய ஸ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம்
க்ஷம் குஹாரவி கங்காலாய காலாக்நிரூபிணே ஸஹஸ்ராஜாய
ஸுப்ரஹ்மண்யாய நமஃ "

என்றும், சுசீந்திரத்தலபுராணம் வேள்விமருச்சருக்கத்தில் —

(ஈ) ஏர கம்மெனும் வேள்வியங் கியது விதன்பாற்
சூர கந்தனை வேல்கொடு குடைந்தவோர் தோன்றல்
கார கம்பெறு கறுங்குழல் வல்லியைக் கலந்தே
சிர கம்பெற நின்றன னவன்சதா சிவனே."

என்று பரமசிவன் சான்முகவடிவினனுய்நின்று கவின்றருளினனென்றும் வழங்குகின்றமையிற் குமாரனைச் " சிவன் " எனச்சொற்றதும், " சாகூரது பரமசிவன்" எனப் பகர்ந்ததும், " சதாசிவன் " எனச் சாற்றினதுங் காண்க. ஆவதேதல், நிகண்டுகள் அறுமுகன் பெயர்த்தொகுதி கூறுமிடத்தே சிவனென்பதும் வைத்துக் கூருவாறெவன் ? எனின், — இது, வேத மாவாக்கியங்களிலும், பிரஹ்மஸூத்ராத்திலுந் செய்வப்பெயரா யெய்திய (ஸஜ) " ப்ரஹ்ம " சத்தத்தினை ஐம்முகன் பெயர்த்தொகுதியில் வைத்து அந்நிகண்டுகள் கூருவா றெக்குமாயினும், அத்தப்பிரம சத்தமே ஐம்முகன் பெயர் களுட் சிவனெனவும், மகாதேவனெனவும், அறுமுகனது " ஸுப்ரஹ்மண்யஃ " என்னும் பெயரிற் " ப்ரஹ்ம " எனவு நிற்பதாயிற்று. மற்றொன்று மூசைத்தும் — ஆன்மாக்களின் இதய குகைக்கண் வீற்றிருக்கின்ற பரப்பொருள் " குகன் " எனப் படுதலின் இப்பெயர், அறுமுகன் பெயர்த்தொகுதியி லுள்ளதுபோல ஐம்முகன் பெயர்த்தொகுதியில் இல்லாமை நோக்கி ஐம்முகனே, அக்குகையி லிலாதானென நிருணயித்தல் கூடுவதோ ? கூடாதாகலின் நிகண்டுவழக்குச் சாலுமளவே சாலுமென்க. ஸ்கந்த மஹாபுராண சம்பவ காண்டத்து நூக-ஆம் அத்தியாயத்தில் —

(உ) (ஸஹஸ்ரவாதாடவாடிஜுஷே ஸஹஸ்ரவொலிஜுஷ்டவகழே !
ஸஹஸ்ராணுலவஸீலாய நிலாஸுஸ்வெர்ஜாதாலிதஸே ॥

தூஸ்ரிஸ்ரஸ்ரூ ஹ்ரஸ்மீய ஸ்ரூமி ஹ்ரயஸ்ர தூயவெஸ்ரஸ்ரழி ।
வஸ்ரஜ்ரஸ்ரு கெஸ்ரஜ்ர தூஸ்ரஸ்ரகூ ஹ்ரஸ்ரஜ்ரஸ்ரஸ்ரஸ

பிரமன் வலப்பாரிசத்திலும், பாரதி வேதவாக்கிலும், இலக்குமி திருநிலையிலும், பிராணாதி பத்துவாயுவும் வாயுநிலையிலும், காலாக்கினிருத்திரன் சீற்றநிலையிலும், அக்கினிதேவன் சாடராக்கினியிலும், அனந்தாதி மா நாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓடதியனைத்தும் உரோமங்களிலும், அண்டகோடிகளெல்லாம் அவ்வுரோமங்களின் மேய பேன்முட்டை நிலையிலுமாகக் காணப்பட்டுச் சுடர்கோடி பகற்கதிரெனக் குளிர்கோடி இராக்கதிரென மிளிர்கோடி காலாக்கினியெனப் பிரகாசியாநின்ற தனது பரமாற்புதவுறையுளான அப்பாரமேசுவர வடிவினை அளப்பறு மகிமையுடைய அரகுமாரனாகிய சுப்பிரமணியன் காட்டியருளினன்: அவ்வடிவி னொளியினாற்றரிசித்த தேவர்களுடைய விழிகள் (கணப்போது) பார்வையின்றி மாழ்கின." (௨) "சுரர்களாகிய பிரமவிட்டுணுக்கண் முதலிய தேவசிரேட்டரனை வருங் கந்தபிரானாகிய அவனது அளவிலாத் தேஜோ மண்டலத்தில் ஆயிரத்தில் ஓரமிச வளவேயறிந்தனர் (= அதிகமறிய வலியிலராயினார்)." என்றும்,

இவ்வாறு ஆயிரத்தில் ஓரமிசத்தை அவனருளாற் காணுந் திவ்விய விழிகளைப் பெறீஇய (தெவாவிஷ்ணுபுரோகமாஃ - தேவாவிஷ்ணு புரோகமாஃ) விட்டுணுமுதலிய தேவர்கண் முழந்தாள்வரையிலுமுள்ள உரோமங்களுள் ஒரோவொன்றிலும் ஆயிரக் கணக்கான பலகோடி பேன் முட்டைகள் அடுக்கடுக்காய்ச் செறிவுற்றிருத்தலையும், பிரமாண்ட கோடிகளாம் அம் முட்டைகளுள் உலகங்களையும், அவையற்றுள் அதனை யதனைச்சார்ந்த இறப்பு நிகழ்வு வரவென்னுங் காலங்கட்குரிய பல்புவனங்களையும், மன்பதையினையும், பிரமவிட்டுணுக்கண் முதலிய தேவர்களையும், அவ்வவ் வாவரணங் களையுங் கண்ணுற்று ஆ! ஆ!! இவையென்னே! இஃதென்னே!! என இறும்பூதெய் திப் பெரிதும் அஞ்சி நின்று வேத வாக்கியங்களால் எண்ணிலாத தோத்திரங்களைச் செய்து வணங்கினார்களென்றும் வரு விவரங்களானே குமார பரத்துவங் கொன்னு நாட்டப்படுவதாயிற்று. யாவையு மடக்கிக்கொண்ட இப்பாரமேசுவர வடிவிற் பிரமனும் விட்டுணுவுங் காலாக்கினிருத்திரனு மடங்கி நிற்றலின், திரிமூர்த்திகளினு மேம்பட்ட சதுர்த்தப்பொருள் குமாரனென்பதூஉம், கூறிப்போந்த பாரமேசுவர வடிவிற்கு ஆன்மா சிவமென்றமையிற் குமாரன் சிவனென்பதூஉம் வச்சிரத்தாணுவாய் நாட்டப்படுவ வாயினவென்க. பிரமாண்ட கோடிகளெல்லாம் முழந்தாள் வரையிலு முள்ள உரோமங்களிற் செறிந்திருக்கக் கண்ணுற்றஞ்சிய அமரர்கள் ஆயிரத்தி லொரு கூறே தரிசிக்குமாறு நின்றருளிய அளவிலாத் (தெஜோமண்டல) தேஜோமண்டல இறைவனொருவனையே ஆசாரத்தோடு மன்போடும் வழிபடூஉம் அடியாரனைவரும் எத்தேசத்தாராய் எக்குலத்தாரா யிருப்பினும் அவர், "மஹாதேஜோ மண்டலத்தார்" ஆவராகலின், யாமவரை யிப்பெயர் தரித்துநிற்குங் கடன்மைக் குட்படுத்தியுள்ளேம். நிற்க. சீறுருவம் பேருருவமாகிப் பெயர்த்துஞ் சீறுருவமாதல் எதுபோலும்? என்னின்,—நாகபடம், பெருத்தொடுங்கும் பெற்றிபோலு மோரியற்கை யுடைத்தென்க. உருத்திரனே காலாக்கினிருத்திரனென்பது விளக்குமிடத்தினிது விளக்குதும். மேலைச்சம்பவ காண்டத்து ௩௪-ஆம் அத்தியாயத்தில் —

(எ) (ஸதாவியதொகம்நம் வெஸ்ஸிவ-கோத்ஸ்ஸ-ஸ்ஸ்தழி ।
கவ்யாயிகாரிணொமஹ்யா ஏததெவஹ்திமயொமிஷ-ா ।
தவொகயாயஹ்ரீக்ஷ ஸ-ஸ்தஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்யா ।
வஸவம்வரம்வரா-ரோவா விதெயா ஹ்ரிஹ்ரமவெஹவெஸ் ॥

மமாத்மாஸியதோ நாகம் வேத்ஸிபுத்ரார்த்தமர்புதம் ।
அஸ்யாதிகாரிஸ்ஸ்ஸ்கஸ்த்யா த்ருதேஸந்திநயோஷிஷ-ா ॥
தஸ்மைகதயஸம்யக்த்வ மமுமர்த்தம்மதாஜ்ஞயா ।
ஏவம்பரம்பராப்ராப்தா வித்யோச்சிந்நாவைபவேத் ॥)

"நிச்சயமாகவே நீ என்னன்மா (= சொரூபசிவம்): அற்புதலினன்றே அவ்வற்புதமான பிரணவப்பொருளினை யறிந்தனை: யோகிகளுள் அகத்தியனன்றி மற்றையர் இதற்கதிகாரிகளல்லர்: இப்பொருளினை அவ்வகத் தியனுக்கு நன்குபதேசித்தருள்வாய்: பின்னர் இவ்வித்தை இவ்வாறு பரம்பரைக் கிரமமாக வடையப்பட்டு இடையிறலின்றி விளங்கும்: இஃதெனதாணை," என்று முருகப்பெருமானை நோக்கி உமாகாந்த ஸுரைத்தனனெனவும், அம்முதல்வன்புராண யுத்தகாண்டத்து உசு-ஆம் அத்தியாயத்தில்—

(ஏ) (வாக்ஷாத்பரஸிவொஹ்யகம் கதஸ்தெதாஅமம்கரஃ ।
ஷண்-வாவ்யாம்கருக்வா தெவா ரக்ஷிதஸ்-ாமதஃ ॥

ஸாக்ஷாத்பரஸிவோஸ்மாகம் கர்த்தாநேதாசசங்கரஃ ।
ஷண்முகாக்யாம்க்ருத்வா தேவார்ரக்ஷிதமாகதஃ ॥

(ஐ) ஸவஸ்ரஸ்ஸ்ரயிவதள தகர்ஷ்ஷ மஸ்தெவாஸவாவதெ ।
ஸர்வாண்டாதிபதெள தஸ்மிந் குஹேபரமபாவதே ।

(ஒ) கொவிஜாதாதிதெவஸ்ய ஸம்ஸ்வாஸஸ்ஸ்ஸ்ஸ்ஸ்தழி ।
கோவிஜாதாதிதேவஸ்ய பலம்பரமமத்புதம் ।)

(எ) "தேவர்களாகிய கங்கருத்தாவும் கம்மை கடாத்துவோனுஞ் சுகல்குவோனுமாகிய சாக்ஷாது பரமசிவனே தேவர்கீளப் புரக்தருள் பொருட்டுச் சுயமாகவே ஆறுமுகனென்னும் பெயரைத் தரித்துக்கொண் டெழுந்தருளினன்." (ஐ) "மிக்க பரிசுத்தனுஞ் சருவாண்டாதிபதியுமாயுளன் குகன்." (ஒ) "அக்குகதேவனுடைய பரமாற்புதவலிமையை யாவரே யறியவல்லார்." என ஸ்ரீமத்-விட்டுணுமூர்த்தி இந்திரனுக்கெடுத்துரைத் தாசெனவும், அப்புராண சம்பவகாண்டத்து உசு-ஆம் அத்தியாயத்தில்—

(ஓ) (வாம்ஸ்ரொவதெதொஜ்ஞாஹாவஸ-ாமதழி ।
பரம்ப்ரஹ்மைவமதநோத் பாலபாவமுபாகதம் ।)

"பரப்பிரமமே குழவிப்பான்மை கொண்டு இப்படியெல்லாம் (பலப்பல திருவுருக்கள் காட்டிப் பலப்பல) திருவிளையாடல்கள் புரிந்தது." எனவும், மேலைக் காண்டத்து ௩௫-ஆம் அத்தியாயத்தில்—

(ஔ) (ஶிவோஹந்நிஷ்களஃபூர்ணஃ ஶக்திஸ்த்வமநபாயிநீ ।
ப்ரக்ருதிப்ரத்யயாகாராவாவாம்ஶப்தார்த்தகௌமதௌ ।
த்வம்ஶப்தோர்த்தோஸ்ம்யஹம்பத்ரே ஜகத்த்வம்பதிரஸ்ம்யஹம் ।
பஞ்சக்ருத்யபரச்சாஹம் பஞ்சவக்த்ரஸ்ஸதாசிவஃ ।
ஏகவக்த்ராஸிபஹுதா பிந்நாபிபரமேச்வரீ ।
த்வந்மயோமந்மயோயஸ்மாத் ஷட்வக்த்ர பரிகீர்த்திதஃ ।
பஞ்சக்ருத்யபரோயஞ்ச ப்ரபஞ்சஸ்யாஸ்யலீலயா ॥)

"யான் நிட்கள பூரணசிவன்: நீ அழிவிலாச்சத்தி: நாமிருவரும் பகுதியும் விகுதியும் போலவுஞ் சொல்லும் பொருளும் போலவும் பிரிப்பில் பொருளாய் மதிக்கவுள்ளோம். அங்ஙனம் நீ சொல்லும் யான்பொருளும், நீ சகமும் யான்பதியுமென வாவோம். யான் (சிருட்டி திதி சங்கார திரோபவ அனுக்கிரகமெனும்) ஐந்தொழிற்கதிபனும், ஐம்முகமுடையனுமாகிய சதாசிவன்: நீ பலவாறாக விருப்பினும் ஒரு முகமுடைப் பரமேசுவரி: குமாரன், உனது சுவரூபத்தையும் எனது சுவரூபத்தையுங் கொண்டுளோனாகலின் அவன், ஆறுமுகனெனப் படுகின்றனன்: இவன், பிரபஞ்ச காரியார்த்தம் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரியுந் தலைவனாயுளன்." என்று பரமேசுவரி முன்னிலைக்கட் பரமேசுவரன் பகர்ந்தனனெனவும் வருகின்ற இவைகளுங் குமாரபிரான் சிவனென்பதையும், அவன் ஐம்பெருந் தொழிற்கடவுளென்பதையும் மதுகைப்படுத்தும். இந்த (ஔ) எடுத்துக் காட்டில் நிட்கள பூரணசிவனுஞ் சிவசத்தியுமாகிய நாம் ஐந்து முகத்தோடும் ஒருமுகத்தோடு முளோமாயினும் பிரிப்பில் பொருளாவோமென்னு மோருண்மையினை உவமான முகத்தானு மினிது விளக்கி, அப்பிரிப்பின்மையே இந்த ஆறுமுகனாக நம்முன்னே காணப்படுகின்றதென்று பரமனுரைத்தருளினனெனல் பெறப்பட்டமையிற் பார்வதிநாதன் ஐம்முகச் சிவனென்பதும் பார்வதி நந்தனன் அறுமுகச்சிவனென்பதும் பெற்றாம். (ஏ) எடுத்துக் காட்டுழைச் "சாக்ஷாது பரமசிவனே தேவர்களைப் புரந்தருள் பொருட்டுச் சுயமாகவே ஆறுமுக

னென்னும் பெயரைத் தரித்துக் கொண்டெழுந்தருளினன்." எனவந்ததும், திருமந்திரத்தின் கூ-ஆக் தந்திரத்துழை—

"ஆறுமுகத்தி லதிபதி நானென்றுங்
கூறு சமய குருபர னானென்றுங்
தேறினர் தெற்குத் திருவம்ப லத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கி நின்றனே."

என வருவதும் இதனைத் தழுவி நிற்கின்றன வல்லவோ. இவையெல்லாமுய்த்துணர்ந்தே—

"அஞ்சுமுகன் காட்டாம லாறுமுகன் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெக்காளோ."

என்று ஸ்ரீமத் - தாயுமான முனிந்திரரும் கூறியருளினரெனத் தடாரி முழக்கல் சாலும் போலும். இப்பாடன்மாட்டே அஞ்சுமுகத் திருமேனியும் ஆறுமுகத் திருமேனியுஞ் சிவனெனும் பெயரை அவாய் நிற்றலின் ஐம்முகச்சிவனும் அறுமுகச் சிவனு மொருபொருளே யெனுந்துணிபு பெறப்படுகின்றது. இலிங்கபுராணம் உத்தரகாண்டத்துப் கo - ஆம் அத்தியாயத்தில்—

"தூவி மாமயி லூர்பவன் சுடர்மதி யணிந்தோன்
தேவ யானையே திருந்திழை யுமையவ ளாமால்"

என கவிறலு மிங்குக் கருதிக்கொளத் தக்கதே. இவ்வேதுக்களானே அன்புடையீர்! ஐம்முகச் சிவனென்றலும், அறுமுகச் சிவனென்றலும் யாம் படைத்து மொழிதலென்று நினையன்மினென வீங்கொரு தேற்றஞ் சொற்று மேலுங்கூறுவ கூறுதும். வேண்டுவார் தன்பொழித்து இன்பருணிமித்த மெழுந்தருளிய ஈசனே! நீயே பிஞகபாணியென, உமாசங்கரர் ஆசைக்குரிய சண்முகனென, இருநிற மூர்த்தியாயினையாகலின், இங்ஙனமுன்னைச் சரணடைகின்றேனென்று ஸ்ரீமத் - பிருகற்பதி பகவான் முருகனிய முதல்வன்பாற் சரண் புகுந்தசெய்தி—

(ஷடக்ஷராயைகவக்த்ராய நமஸ்தாக்ஷாதி நாகிநே ।
விஷ்ணோஸ்தாயஸுஸ்நேய ஸ்வாஹுஸ்கெஷ்வ தாயினே ॥
உமாஸம்கரயோரேக ப்ரேமபாஜநமூர்த்தயே ।
அநந்தமூர்த்தயேதுப்ய மகந்தாத்புதஹேதவே ॥
ஐமதீயவநஸ்ஸ்ரீஸ்ய ஜீயாஸ்-குதெஸஸாஸ்ரயெ ।
ஜகத்யவகமுத்திச்ய த்விதாபூதேசமாச்ரயே ।)

"'ஆறுமுகனுக்கு ஒருமுகனுக்குப் பிறைபாணிக்குப் பன்னிருதோள்களினையுடையானுக்குச் சௌமியகுண முடையானுக்குத் தன்னையருச்சிப்போர் சிந்தனையை நிறைவேற்று வோனுக்கு உமாசங்கரர் ஆசைக்குரிய முக்கிய மூர்த்திக்கு அந்தமிலா மூர்த்திக்கு அளவிலா அற்புத வதுவானவனுக்கு நமற்காரம்' 'சகத்தை யிரக்ஷிக்கும் பொருட்டு இருநிறமூர்த்தியாயிருக்கின்ற ஈசனைச் சரணடைகின்றேன்.'" என்னும் மேலைச் சம்பவகாண்டத்து கூ0 - ஆம் அத்தியாய மொழிகளிற் பெறப்படுகின்றது. இவ்வுண்மையினை, இத்தமிழுலக முணருமாறு—

"ஆறுமுகப் படுமுனிவ யைந்துமுகத் துடனிலவி யழியா நால்கள்
கூறுமுறைப் படியதன்பின் குறைவில்சிவ சத்தியொடுங் குறைவொன் றின்றி
ஈறுமுத லொருவிடனின் றுருக்காட்ட லுதியுன்னி யீசன் சேயென்
றூறில்லா துரைத்திடுத லுபசார மல்லால்வே றெழுங்குண் டோவே."

எனத் திருத்தொடையலில் எம்மாலுங் கூறப்பட்டது. இப்பிரமாணமும் யாமெடுத்துக்கொண்ட அவிரோத பரத்துவத்தைப் பிரதிட்டை செய்வதோடு ஐம்முகன் அறுமுகனென்னு மிருவருமே ஆன்ம கோடிகட்குப் பூரணனுக்கிரகம் புரிதற்குரியார்; இவர்களுட் பேதமின்றென வத்து நிச்சயஞ் செய்துகொண்டு முருகப் பெருமான்பாற் சரண்புகுதல் சிவகதிப் பெருவாழ்வினை நல்கு மென்பதைப் பிருகற்பதி வாயிலாக அறிவுறுப்பதாயிற்று. எண்ணே? ஐம்முகச் சிவனுடைய அமிசமூர்த்திகள் பலரிருப்ப; போந்த இருநிற மூர்த்திகளே குறிப்பிடப்பட்டமையின். எனதமிசம் நீயென்றேதாமே "நிச்சயமாகவே நீ யென்னன்மா (=சொரூப சிவம்) என்று ஐம்முகப்பெருமான் றிருவாய்மலர்ந்து கட்டுரைத்தமையு மிதனை யாதரிக்கின்றது; (எ) டுத்துக்காட்டினை நோக்க. இங்ஙனமாயின், ஐம்முகப்பெருமான் றிருமேனி யடியுண்ணலும் யாவுமடியுண்டவாறு அறுமுகப்பெருமான் றிருமேனி விடயத்து மாகாவாறென்? அறுமுகன்மேனி அடியுண்டமை—

(வதநாத்தரதெவஸ்ய ஹஸ்தாவித்தாஸ்தா।
பதநாத்தத்ரதேவஸ்ய பஸ்மபாவமிநாஸ்ததா।)

"(சூரனுற் சுப்பிரமணியன் றோள்களின் மீது பிரயோகிக்கப்பட்ட) அந்தப் பாணங்கள் அத்தேவனுடைய தோள்களில் வீழ்ந்து சாம்பராயின." என்பது யுத்த காண்டத்து கூஉ - ஆம் அத்தியாயத்திற் பெறப்படுகின்றதே யெனின்,—இவ்வண்ணமே ஐம்முகப்பெருமானடியுண்ட ஓரமையத்தும் யாவுமடியுண்டில வென்க. இச்செய்தி—

(தஸ்யோராவிவதிஸ்வேத திஸ்ராதஸ்வாநிஷ்டுபே।
ஸேணுதாஸமஸ்ரீவிரா உத்தநிகணாநுவஹுமிஹ॥
தஸ்யோரளிபதித்வைதச் சிலாதல்ஸுநிஷ்ட்டுரே।
ரேணுதாமகமச்சிக்ரா த்வமன்வஷ்மிகணுக்பஹுமிக்॥)

"(தேவேந்திரன் கினவியோச்சிய) அவ்வச்சிராயுதம், கைலாய வாயிலிற் பிரமதகண வடிவுகொடுநின்ற மகேசுரனுடைய கற்பாறைபோன் மிக்குறுதித்தாய மார்பில்

வீழ்தலும் அது, பன்னெருப்புப் பொறிகளே யுமிழ்த்துகொண்டு பூழியாய்ப் பறத்து போயிற்று." என்பது தகடிகாண்டத்து உஉ - ஆம் அத்தியாயத்திற் பெறப்படு கின்றது. அற்றேல், யாவுமடியுண்டன வென்பதனுண்மை யாதாம்? எனின்,— கவிறும். எல்லாவற்றிற்கும் ஆதாரம் யானே யெனுமோருண்மையினே ஆண்டுலகினர்க் கறிவுறுத்துவான் அவ்வடி யன்னணங் காட்டப்பட்டதாம். இங்ஙனமே, எஞ்சாப் பொருண்மையின் எல்லா அண்டகோடிகளும் என்மாட்டுள வென்பதனே மா விசுவரூப பாரமேசுவர வடிவின் முருகப்பெருமானுங் காட்டியருளினன். இரண்டுமொன்றே. வீராதிவீர விமல சுத்தா வீரபாகுதேவர் தரிசிக்குமாறு பெருமான் காட்டியருளிய பேருரு, எத்தகைய வியப்பிற்றென்பதை அத்தேவரெடுத்துக் கூறினரென்னுஞ் செய்தி யொன்றும்—

" அளவிலா வானன மளவிலா நீள்குழை
அளவிலா நீள்விழி யளவிலா காசிகள்
அளவிலா வுயர்கர மளவிலா நின்வடி
வளவிலா மறைகளா கமமூகா டரியதால்,"

என்னுந் திருச்செந்தூர்ப்புராணத் திருவிருத்தத்திற் பெறப் படுகின்றது. இதுவேயுமன்றி, பாலசுப்பிரமணியம் பல்குழவிகளாய் நின்று திருவிளையாடல் செய் தருளியநிறம், சம்பவகாண்டத்து உசு - ஆம் அத்தியாயத்தில்—

"ஒரு குழவி யோகநித்திரை செய்தது. ஒன்று அடிக்கடி ஆனந்தமாக முறுவலித்தது. ஒன்று பெரிது மழுதது. ஒன்று பெருந்தொனியெழக் கோடித்தது. ஒன்று கைகளைத்துக் கொண்டுங் கலுழ்ந்து கொண்டுமிருந்தது. ஒன்று காற்பெருவிரலைச் சுவைத்துக்கொண் டழுதது. ஒன்று கையிரண்டையுங் கூப்பி வாயில் வைத்துக் கொண்டது. ஒன்று மார்பினைகார்ந்தது. ஒன்று முழந்தாணிலம்படியத் தவழ்ந்தது. ஒன்று இரண்டுமூன்றடி நடந்து வீழ்ந்தது. ஒன்று சிறிதுதூரஞ் சென்று சமபூமி யினேயடைந்தது. ஒன்று தாய்கரம் பற்றிச் சமபூமி குறுகிற்று. ஒன்று வீழ்தலு மெழலுமாய்த் திரிந்தது. அடுத்த வொருகணப் போதிற்குள் ஒன்று அடிக்கடி யோடுவதாயிற்று. ஒன்று நடத்தலேயே செய்வதாயிற்று. ஒன்று ஒருதாளால், (தவறிப்பாய்ந்தெனத்) தத்தித் தத்திச் சென்றது. ஒன்று தம்மூண் மற்றொரு குழவி யோடு மல்லரைப் போலவும் யாட்டைப்போலவு நெற்றியான் மூட்டிக்கொள்வ தாயிற்று. பின்னை அவ்விரு குழவிகளும் மற்போர்புரிய லுற்றன. இவ்விதத்த பல பாலலீலைகளேப்பார்த்த விண்டு முதலிய தேவர்கள்—நாம் ஒரு குமாரனேயளிக்குமாறு ஈசனே யிரந்துநின்றோம்: ஈண்டெத்தனேயோ குமாரர்கள் வந்துளார்கள்: என்னென்ன வோ திருவிளையாடல்களும் புரிகிறார்கள். இனி, இவ்வுலகிற்கு எச்செளக்கிய மெய் தாதுபோமெனுக் கழிபேருவகையுற்றார்கள்." என வரக்காணலாம். இதற்குமேலும் அனந்தவடிவங்கள் கொடு அனந்தபாலலீலைகளே எல்லாவுலகங்களிலு மிழைத்த இளம் பெருமான், "தலேயெங்கு நரைத்துக் கண் காதுகண் மங்குதலுற்றுக் கரதண்ட மொன்றூன்றிவருமொரு கிழவன் போலாகித் தேவர்குடியிலாது பாழ்த்துக் கிடக்கின்ற

பட்டணங்களை முன்னிருந்தாங்காக்கிக் காத்தலிற் கவலை கொண்டவனெனவும் ஆங்குத் திரிதாகின்றனன்." என்பது மேலேக்காண்டத்து உகூ - ஆம் அத்தியாயம்—

(வ்ருஸ்ரூதிஸ்வஸ்திதாளஸ்பிரசீவஸ்ரு
ஶ்ரவிஷ்ரு ணீஸ்காரதாரூஶ்ரதயஷ்டிஸ்ரூஷ்டிஃ ।

"வ்ருத்தஃ க்வசித் பலிதமௌளிரதீவமந்த
த்ருஷ்டிச்ருதிஃ கரதலாத்ருதயஷ்டிமுஷ்டிஃ ।")

என்று கூறிச்சேறலி னறியப்படுகின்றது. விளைதத்தினும் விளைதமாய இத்திறத் திருவிளையாடல்களை எக்ஸ்ரகுமார னிழைத்தனன்? எச்சுரகுமாரன் செய்த னன்? திருவரு ளவாந்திருவுடையீர்! கூறுமின். இவ்விளையாடல்களுண் மிக்க கிழவனுயினமையை நோக்குழி, முதல்வன், சுத்தமாயைவாயிலாகப் பலவடிவங்கள் கோடலுண்டென்பது போதரப் பின்றைக் காட்டப்படு சுருதிகள் கூறியவாறே குமர னாதன் கொண்ட வடிவங்களோ பல; அப்பலவும் ஒவ்வோரற்புத மூர்த்தமாக வெண்ணப் படுவனவேயன்றித் தோன்றல், வளர்தல், திரிதல் (= பரிணமம்) முதலிய வெனப்படு மொன்றின் விகாரங்களாக வெண்ணப்படாவென்னுந் தீர்வையும், அவ் வற்புதச் செயல்கள்—கற்றுக்கொண்டுஞற்று வித்தைகளுள்வைத் தெண்ணப்படா ஈசுரப்பிரபாவ குணங்களாமென்பதுங் கொளக்கிடக்கின்றமையிற் சூரபன்மனைப் போருக்கழைத்திழைத்த பெரும்போரும் வரப்பிரசாத வலியோடு பொருது வேறல் கொண்ட ஒரு விளையாட்டாகவே கொள்ளப்படுமரோ. "ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரியுந் தலைவனுயுளன்." என்று பரமன் றிருவாய்மலர்ந்தருளிய கட்டுரையையும், சுருதி - சாந்தோக்யத்துட் போந்துள்ள 'இஃதிவ்வாறுகவென் றெண்ணுதன்மாத்திரையே எல்லாஞ்செய்யவல்லான்' என்னும் பொருட்பெயர் (வாகீ வஜூஷ்டுஃ) "ஸத்யஸங்கல்பஃ" என்பதுதானே ஷண்முகஸஹஸ்ரநாமத்துளு மொன் றுய்ப்படிக்கப்படுதலையு மிங்ஙனங் கருதவேண்டுமால். இதுநிற்க. மேலே போக்த (ஔ) எடுத்துக்காட்டில் ஐம்முகன் அறுமுகனென்னு மிருநிற மூர்த்தியையும் பிரித்து வேறுபடுத்த லொண்ணு தென்பது சிவசம்மதமெனல் பெறப்பட்டதை யொருசிறிது மூய்த்துணர கில்லா மக்களு ளொருசிலர், சிவன்கட்டோன்றினமையிற் படைக்கலத் தரசு பெற்றமையிற் சிவனுக்குக் குமாரன் சமமாகான்; சிவன்பெரியானென்றும், மற்றொருசிலர் பிரதிட்டாகலியிலுள்ள ஒசு - புவனங்களுள் (அவ்வியத்தப் பிரகிருதியி லுள்ள) ஒன்றே கௌமார மெனவிருத்தலிற் குமாரன் சூழ்கிலைத் தேவனென்றுங் கழறக்காண்கின்றனம். இவ்விருநிற மூர்த்திகளையு மிருமலப் பிரளயாகலரென்று கூறித்திரிவார்க்கு வேறுகவுள்ள இவ்விருவேறு வகைப்பட்டார்க்கு யாங்கூறத்தக்க தென்னே? இனையர் மதங்கள், மேலே கூறிப்போந்த பிரமாணங்களாய பெருவெருப்பில் வீழ் சிறு கீர்த்துளிகள் போலாமாயினுஞ் சிறிதுரைத்தும்—குணருத்திரமூர்த்தி பிரமதேவனது நெற்றியினின்று தோன்றினனென முந்துநூன் மொழிதருமாறு குமாரனும் உமாபதியினெற்றிக் கண்களினின்றும் வந்தனன்; அதனுல் யாதிழிவு?

சம்பவகாண்டத்து ஈகூ - ஆம் அத்தியாயம் கவிலுமாறு படைக்கலத்தரசை ஐம்முகப் பெருமான் ஆறுமுகப்பெருமாற் களித்தமை — அப்படைக்கலத் தரசிற்குரிய பரமன் வத்து அதனைப் பற்றுங்காறும் அது காக்குங் காரியம் ஐம்முகப்பெருமான்மாட் டிருந்ததென்பதையே யுறுதிப்படுத்தும்; என்னை? அப்படைக்கலத் தரசுகொண்டு அவ்வைம்முகப்பெருமான் சூரபன்மனைக் கோறல்புரிந்தானல்லன்; பிறதேவர்பாற் கொடுத்தும் அதுபுரிந்தானல்ல னகலின்; இங்ஙனம் யாதிழிவு? என்கின்றும் யாம். மிருகேந்த்ராகம அத்வப்ரகரணத்தில்—

(உ அ ஷா ப்ரம்வாரா ஹ்ரா)
ஹ உ வ ஹ்ர

"உச்சுஷ்மாச் சாம்பராச்சண்டா"

என்றற்றொடக்கத்ததாய் வரு சுலோகத்திற்குப் பட்டாராயணகண்டரியற்றிய வியாக்கியானத்துழை —

"அங்குள்ள (= சாந்திகலையின் ஈசுவர தத்துவத்திலுள்ள) ருத்ரகணங்களாவன — உச்சுஷ்மர், அம்பரர், சண்டர், மகாவீரியர் முதலானவர்கள். அவ்விடத்தில் நிக்குப்பாலகர்கள், தேவீ, ஸ்கந்தர், சண்டேசர், விருஷபேச்வரர் முதலானவர்கள்."

என்பனவெழுதப்பட்டனவே. இவற்றுட் கந்தனிருக்கை, பிரதிட்டாகலையிலுள தென்பதோ? சாந்திகலையிலுள தென்பதோ உண்மை? எனவுங் கடாவுகின்றும் யாம். நிக்குப்பாலகரென்றது இந்திரன் முதலாயினரை. இவருடையிருக்கை ஈசுவரதத்துவத் தின் கீழ்ப்பட்ட சுத்த வித்தியாதத்துவமென்று சித்தாந்தப்பிரகாசிகை யென்பது தெரிக்கின்றது. இவ்விரண்டனுள் எஃதுண்மையோ? சூரர்கட்குச் சுரேசன் காட்டி யருளிய பாரமேசுவர வடிவில் அடங்காப்புவன மின்றென்பதூஉம் இங்ஙன் மறக்கற் பாலதோ? இன்னுங் கௌமார புவனவுண்மை, (தகராலய ரகசியவுரையாய) சதானந்தசாகரத்தே தன்கு விளக்கியுள்ளாம். இங்கும் வந்துழி வந்துழிக் காணலாம். பிரிக்கொணாத் தெய்வத்திருவைப் பிரித்து இழிவுகூறுமிழவு, சிவாஞ்ஞையை மீறுதலாம். மீறிப் பயன்பெற்றார் சரிதமொன்று மிங்ஙனெடுத்துரைத்தல் பயனுடைத்தாம். வரு மாறு.— துவாபரயுகத்திற் சம்புகுத்தன் மாகுத்தனென்னு மிருவர் உருத்திரகோடி மலியிற் றவசிகளாய் வைகினர். ஒருநாண் முன்னைஞாயிய சம்புகுத்தன் சிவம் பெரி தென்றான். பின்னைஞாயிய மாகுத்தன் சத்திபெரிதென்றான். இருவர் வாதங்களையுங் கேட்டன்மாத்திரையே மற்றைமுனிவரும் அஞ்சுவாராயினர். கலாம் மேற்கொள்வ தாயிற்று. கலாய்த்து நிற்கு மிருவருந் திருக்கழுக்குன்றத்துச் சிவசன்னிதியண்ணி விவாதக்களை விளம்பினர். அவை கேட்ட ஈசன், சிவம் சத்தியெனப்படும் யாம், பொன்னும் பணியும் போலவும் மணியு மொளியும்போலவுந் தாதான்மியமாதலின் யீயிர் பிரித்துப் பேசவேண்டா வென்றறிவுறுத்தினன். அது செவிக்கொண்ட பின்னரும் இருவரும் தருக்கவிடுவாய் செய்திலர். உடனேயீசன் முன்னைஞாய நோக்கி நீ கழுகாகுக வெனச் சபித்தனன். உமாதேவி பின்னைஞாநோக்கி நீயுங்கழுகாகுக வெனச் சபித்தனள். அச்செவ்வி உண்ணடுங்கி யுருமுற்ற அவ்விருவேறுவாதிகளும்

அச்சாபக் கீருமாறு ஆயிடைப் பெருக்தவங்கிடந்து பிற்றைஞான்று கற்கதி புக்கன ரென்பதே. * வேதகிரிமான்மியங் காண்க. இச்சரிதம் சைவசாத்திரமே. இது, சத்தியையிழித்துக்கூறிச் சிவத்தையுயர்த்து மதத்திற்கும் யமனுயிருக்கின்றமையின், முருகப்பெருமானே யிழித்துக்கூறி அச்சிவத்தை யுயர்த்து மதத்திற்கும் யமனேயாம். இழித்துக் கூறுவார் யோக்கியதையும் முதல்வன்புராண யுத்தகாண்டத்துப் கசு - ஆம் அத்தியாயத்தில்—

(மாமெயகாளிகெயாதி காஃலிவாஸெஸ்வராஃ ।
நிமஃதெஃநிஸ்ரெஷ்ஷ உஃமோலிஹுதயாவிதுஃ ॥)

" காங்கேயகார்த்திகேயாதி காமபிஃ பரமேச்வராஃ ।
நிகத்யதேமுநிச்ரேஷ்டைர் மூடாபிஃஹுதயாவிதுஃ ॥"

எனப் படிக்கப்படுகின்றது. பொருள் :—" காங்கேயன் கார்த்திகேயன் முதலிய திருப்பெயர்கட்குப் பரமேசுவரனென்பதுதான் பொருளென்பது முனிச்சிரேட்டர் கொள்கை : மடவோர்தாம் பேதம் பேசுவர்." எனவாம். இம்முறை கொள்ளகில்லா நிழித்துரையாடு சிவத்துரோகிகள் கல்வி, அறிவு, மதி, மக்கண் முதலிய எல்லாச் செல்வமுமிழந்து துயருழந்தொழிவ ரென்பதூஉம் போந்த (ஆ) எடுத்துக்காட்டிலேயே பெறலாம். பிரமக்குழவியாகிய எம்பிரான் திருமுன்னர் அவனே தீத்தோதிய பிரமாவின் ஞானம், யாதாயிற்றென்பதை,

" எக்கலிக்கும் பூதங்க ளெவற்றினுக்கும் பிரமனுக்கு மீச னென்னத்
தக்கமுதல் பரப்பிரமஞ் சதாசிவனே மெனவேதஞ் சாற்றுமல்லால்
முக்கனல்சூழ் வேள்வியிற் சுப் பிரமணிய னேமெனவு முக்காற் கூறும்
இக்கருத்தையறியாதே யெவ்வாறு விடுவிப்பதியம்பு மின்னே."

என்று காஞ்சிப்புராணங் கழறுதலினும் பெறுக. இது, தேவர்களே நோக்கி உமாகாத னுரைத்தருளியது. சிவதத்துவத்தினின்றுஞ் சத்திதத்துவத்தை வேறுபடுத் துரைத்தலும் வியவகாரமாமேயன்றி உண்மையாக மாட்டாதென்றலு மிங்ஙனுணரப் படுகின்றது. இதனே, சிவதத்துவ சத்திதத்துவ சொரூபமாய் அருவுருவாயுள்ள சிவ லிங்காகாரமு முணர்த்தும். பிரிவுசெய் நிழிவுயர் வுரைக்கொண்ணுதென விங்கெடுத் துரைசெய்யொருபியாயம், பார்வதி, பார்வதிபதி ஆகிய இருவர்க்கு மிடையே கந்த னெழுந்தருளி யிருக்குஞ் சோமாற்கந்த மூர்த்தத்தானும் பெறலாம். ஸ + உமா + ஸ்கந் தன் எனப் பிரிக்கப்படும்.

" சிவஞ்சத்திக் கன்னியமாய்ச் சேயை யுரைப்போர்
பலம்பற்றிப் பாசறைகொள் வார்."

எனத் திருவலங்கற்றிரட்டிற் பல்சந்தப் பரிமளமாகிய உ - ஆங் கண்டத்தில் யாங் கூறியதும் எவ்வுண்மையாயிற் றென்பதை யெம்மதர் கருதுகர் இங்ஙனம்

* வேதகிரியில் இஞ்ஞான்று காணப்படு கழுகிரண்டும், இங்குப்போந்த சம்புகுத்தன் மாகுத்தனென்பார்க்குப் பின்னர்ப் பரமனது திருவாக்கை மறுத்ததோமுடைய பூடர, விருத்தா வென்பாரேயென இம்மான்மிய மியம்புதலிலும் இத்தால் ஈடு—டு - ற் காண்க.

உள்ளுன்றி யுணர்வராக. தகராலய ரகசியத்து "அத்துவாவெனு மாறையும்" என்றற்றொடக்கத்துச் செய்யுளுரைமாட் டெடாக் காட்டப்பட்ட சம்பவகாண்டத்து ரூடு - ஆம் அத்தியாயச் சுலோகங்கள்—

"குமாரனது கட்டளையினுலேயே நமன் பாவிகளே வாளுல்களில் நோய்களாலும் மரித்த பின்னை நரகயாதனைகளாலுந் தண்டிக்கின்றனன்; சுவப்பிரசாபதிகளோடுள்ள நான் முகன் சிருட்டி புரிகின்றனன்: நாராயணன் றிதிசெய்கின்றனன்: காலாக்கினி ருத்திரன் பிரளயகாலத்திற் சருவசக சங்காரம் உருற்றுகின்றனன்; பிரனுகளைச் சிருட்டிக்கின்றதுஞ் சங்கரிக்கின்றதுங் காலந்தான்: அக்காலமோ இச்சுப்பிரமணியன் வசத்திலுளதே."

என உமாபதி உமாதேவி முன்னிலைக்க ணுரைத்தருளின னென்று மொழிதரவிற் சுப்பிரமணியன் கைவசத்துள்ளகாலம், அவன் றிருவுள்ளத்தின்படி யாவையு நடாத்தும்; அவ்வுள்ளத்தின் ஆணைநெறி நிற்பார்பால் அவனு நிற்பனென்னுமுண்மை, ஒப்புயர் வற்ற சிவபெருமான் றிருவாக்கென வுணரெவன்றுன், இருமைக்குந் தணையாயுள்ள காலேசனுன முருகனுடைக் கடிதோன்கழல் கருதாதிருப்பன்! (அ) எடுத்துக்காட்டில் "மனிதர்கள் தங்கையினுல் ஆகாயத்தை உரியாகவுரித்தெடுத்து உடையாக வுடுஇக் கொள்வார்களாயிற் சிவனே (=முருகனே)! உன்னையறிந்து கொள்வதை நீத்துத் துக்கத்தைக் கடப்பார்கள்." எனவரு சித்தாந்தமும் இங்கு நுதலிக்கொள்ளத்தக்கதே. நுதலிக் கொள்வதோடு, ஸ்காந்த மஹாபுராண உபதேசகாண்டத்து ரூ - ஆம் அத்தியாயம்—

(ஊதூஊதாதெவுணைஊஹும் மகுவதுஸுவ்யயம் I
இத்யுக்த்வாதேப்ரணேமுஸ்தம் பக்தவத்ஸலமவ்யயம் I)

"இனையவாருகப் (பூதங்கள்) புகன்று அழிவிலானும் அடியார்க்கிரங்கி யருள் வோனு மாயுளானே (=முருகப் பெருமானே) வணங்கின." என்று கிளத்துமாற்றுனே அவன், அடியார்க்கிரங்கியருள் அழிவிலாப் பேராளனென்பதையும், மேலிக் காண்டத்து ஈ - ஆம் அத்தியாயம்—

(சுவதூஊஹோஹாதூம் வவஷவாவதிசுஞதம் I
அலதத்குஹமாஹாதம்யம் ஸர்வபாபஹிருந்தநம் I)

"எல்லாப் பாவங்களையும் எருக்கியருளத்தக்க குகனது மகிமையை (அகத்தியமா முனிவார் பிரபாகராசன் மக்களுட் சூரன் பதும னென்பார்க்கு முன்னெரு கற்பத் தில்) எடுத்துரைத்தனர்." என்று கிளக்குமாற்றுனே அவன், தன்னே கம்புவாருடைய சருவ பாவங்களுந் தணக்குமாறருள்புரி தலிவனென்பதையும், சூரபதுமனே மயிலுங் கோழியுமாக ஆண்டு கோடற்கு முன்னரேயே யுள்ள அநுதிசித்தியமூர்த்தியென்பதை யுங் கருதிக்கோடல் வேண்டும். குமாரனது கட்டளையினுலேயே நான்முகன் முதலிய மூவரும் தத்தந் தொழில்களைச் செய்கின்றன ரென்றமையின், இத்தப் பிரமாணத்துஞ் சுப்பிரமணியன் மூவரின் மேம்பட்ட சதுர்த்தப் பொருளென்பது பெறப்படுவதாயிற்று.

இவ்வாறு கூறியருளினவன் உமாபதியென்றவின் அவனுமப்பொருளே யாயினன். எடுத்துக் காட்டுக்களுள்—(அ) சகஸாதன், (ஐ) சருவாண்டாதிபதி, (இ) காலரூபி, யோகாதிபதி, சாந்தன், சருவஞான இருதயன், (ஐ) மிக்க பரிசுத்தன், (ஆ) சத்திய ஞானனந்த சொரூபி, (அ) பராபரன், (ஓ) பரப்பிரமமெனவும், பிருகற்பதி பகவான் மொழிகளுள் "உமாசங்கர ராசைக்குரிய முக்கியமூர்த்தி" "ஈசன்" எனவுங் குமார பிரான் கூறப்பட்டனனென்பதூஉம், மேலைப்புராண யுத்தகாண்டத்து ஊக - ஆம் அத்தியாயம்—

(தாதிவவ ுாணி வவெ ுபொ)
"தாதிஸ்வாணி ஸர்வேசோ"

என்று கூறிச்செல்வுழி அத்தப்பிரான் "சருவேசன்" என விளம்பப்பட்டனனென்பதூஉம், அவனது பராமேசுரப் பேருருவிற் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மாவென்னும் எட்டும் பெறப்படுதலின் அவன், அட்டமூர்த்தியுமாயுள னென்பதூஉம், மேலைப்புராண வீரமாஹேந்த்ர காண்டத்து ச - ஆம் அத்தியாயம்—

(கவ ுஜெஹொவ ுாதிம் யாஜ ுஸ்ரா நிவ ுாஜ ுயழி !
தஸ்யதேஹொமுத்பத்திம் யாத்யண்டாதிபுரஸ்ஸரம் !)

"சகல அண்டங்களும் (கந்தனுகிய) அவனது திருமேனியிலேயே தோன்றி அதன் கண்ணேயே அடங்குகின்றன." என்றோதுதல், வீரபாகுதேவர் சூரபன்மனுக் கெடுத்தியம்பிய வுண்மைகளு ளொன்றாயிருத்தலின் அவன், சிவத்தினின்றும் வேறு பிரிக்கப்படா வொப்புயர்வில் பரம்பொருளென்பதூஉம் பெற்றுமன்றே. இக்கே விளம்பப்பட்ட யாவையு முய்த்துணர்ந்தார் முன் "அருவரை நெஞ்சு போழ்ந்த வள்ளிலை வடிவேற்செங்கை—முருகனே வணிகர் தம்மின் மூங்கையா கென்றான்" என்னுமொரு தலபுராண விருத்தப் பகுதியின்படி பெருமான், சாபத்தினுட்படுத்தப் பட்ட ஓரான்மாவென்று கூறிக் கொண்டிருப்பார் கூற்றுந் தலைதூக்கி நிற்குமோ! இதுவேயு மன்றி அச்சாபக்கதையினை யேன்றுகொள வேண்டுமாயின், கந்தனை நடுவட் கொண்டுள்ள சோமாற்கந்தமூர்த்த சிவனுமாய்த் தனக்குங் குமாரனுக்கும் பேத மின்றென்ற சிவனுமாயுள்ளான் றன்னைத்தானே சபித்துக்கொண் டலக்கணுற்றனனு? அல்லது *அபரகுமாரர்களு ளொருவனைச் சபித்து நின்றனனு? என்னுங் கடாக்களும் பிறவு மெழுப்பிக்கோடல் வேண்டும். அக்கதைக்கண்ணே "விரதமு மறனு மின்றி மீன்படுத் திழிஞரான—பரதவர் மகளா கென்று பணித்தனன்" என்றபடி தேவியுஞ் சபிக்கப்பட்டா ளென்பது சத்தியின் பிரபாவமறியாச் சழக்குரையேயாம். அப்பிரபாவம், ஏற்புடைமையின் முன்னரும் வந்துளது. இன்னுமொரு வியவகாரமும் ஈங்குத் தொடுக்கற்பாற்றே. என்னெனின்,—சத்தியோடு சிவனுஞ் சபிக்கப்பட் டச்சாபமு

* அபரகுமாரராவார் யாவரென்பதும், அவரும் பலகோடியென்றற்குரிய மேற்கோளும் ச-ஆம் பத்தின் முதற்றிருப்பாட் டுரைக்கண் ணுணர்ந்து கொள்ளலாம்.

மனுபவித்தனன்; விருகாசுரனென்னும் பஸ்மாஸுரனுக்குப் பயந்து ஒரு செடியினுட் சிவ ஞெளித்துக்கொண்டனன்; திருமழிசையாழ்வானது காலின் நகக்கணழலாற் சிவன் றுரத்தப்பட்டனனென்னும் வைணவ புத்தக அசப்பியக் கதைகளையும் ஐம்முகச் சிவபத்தி யுடையா ரொப்பினன்றே அறுமுகச்சிவனை யிழித்துரையாடசப்பியக் கூற்றையும் அவனடிய ரொப்புவர். பேதசைவரும் இவனெண் கடவர்! இலிங்காங்க பகாங்க வுடம்பாட்டினரும் இவணெண்செய்வர்! இனியர்க்கு வேறுயுள்ள வொரு சார்ச்சைவர்—

"பகவற்குச் சேய்சிறிதென் பார்க்கு விகார
அகலிற்கு மைத்துமரு."

எனத் திருவலங்கற்றிரட்டின் வெள்ளியற்கண் யாமறிவுறுத்ததையுங் கருதிப் பாராதெழுந்து கந்தபுராணங் கழறுமாறு அரனுக்குக் குமாரன் சமமாயிருக்கலாம்; அவ்வரன் மும்மூர்த்திகளுளொருவனை சிகண்டருத்திரனுகலின் மகேசுரனுக்குஞ் சதாசிவனுக்குங் குமாரன் சமமாதல் கூடாதென்கின்றார். இக்கூற்று, சிருட்டிமுதலிய ஐம்பெருந்தொழில்களும் முருகப்பெருமானுடையனவென்றன் முதலிய பிரமாணங் களையும், அப்புராணம் குமாரசமத்துவ சிவனை மும்மூர்த்திகளு ளொருவனெனக் கூறிற்றில்லையென்பதையு மறியா இழிவினின் றெழுகின்றதாகலின் எம்மனோ ரிதனைச் சிறுவரையும் பொருட்படுத்தார். இதுவேயுமன்றி, மூலத்தானத்தே சதாசிவமூர்த்தியை யும், அம்மூர்த்திக்கு வலப்பால் விநாயகனையும், இடப்பால் வடிவேலனையும் பூசித்த பின்றை இரண்டாமாவரணத்திலே மகேசுரனெனும் அனந்தனை வணங்கல் வேண்டு மென்று ஸ்ரீமத் - சைவ மஹாபுராண வாயுசங்கிதை வழங்கலி யுளரின், குமாரனை யிழிவிற்படுத்த முயறல் பயன்படாது. அவ்வழங்கலி,

" 'உன்னற் கரிய சதாசிவமா மூர்த்தி யுறைவ தாயெண்ணி'
'வலப்பா லானை முகத்தவனை யிடப்பால் வடிவே லவன்றன்னை
நலத்தாற் பூசை யுறவாற்றி'
'இயம்புமிரண்டா மாவரணந் தன்னி லெழில்சே ரனந்தனைச்சேர்
வியன்கொள் சூக்கு மேசனைநாம் விளம்பு கின்ற சிவோத்தமனை
---------- அடைவிற் பூசை செயவேண்டும்'"

என் றுத்தரகாண்ட மியம்பிச்சேறலி னோர்க. இதுவேயுமன்றி, புராண ரத்தினமாகிய ஸ்ரீமத் - மஹாஸ்கந்தத்தின் சம்பவகாண்டத்து ஈசு - ஆம் அத்தி யாயத்துழை—

(யகூயகூஜமதயூஸ்ஹி ஞெவதிய-டிஜ்ஞாராதிஷ்ணு ।
வீய-டிஸ்ரீராயிகாகாஏஹி விடிஉயூஜூஞாகாதிகம்பிரெ ।
தகிவாவ-டிவாஏகூஜூஞாணி விஹாமிதிரிதிதிபிஷ்டிதம் ।
வாஸ்ஹிவெயூராஞாவிஹாமிதிவெத்த வாகூவயூஹாவதெஷ்ணி ।
தமகூயாம்விஷ்ணாஇகூாம் வதாடிகொபிஸாதெஞாவி ॥

யத்ரயத்ரஜகத்யஸ்மிந் தேவதிர்யங்நராதிஷு ।
வீர்யம்ஸ்ரீரதிகாகாந்திர் வித்யாஜ்ஞாநாதிகம்ப்ரியே ।
தத்ஸர்வமஸ்யதல்யாணி விபூதிரிதிநிச்சிதம் ।
ஸம்க்ஷிப்யோக்தாவிபூதிஸ்தே புத்ரஸ்யபுவநேச்வரி ।
நசக்யம்விஸ்தராத்வக்தும் வர்ஷகோடிசதைரபி ॥)

"பிரியமுள்ள கலியாணி! புவனேசுவரி! சகத்திடை வைகு தேவர், மனிதர், விருகம் முதலிய வுயிர்கண்மாட்டே வீரியம், செல்வம், காந்தி, கல்வி, அறிவென்பன வற்றுள் எத்துணையெத்துணை யுள்ளனவோ அவையனைத்தும் குமாரனுடைய மகிமையே யென்பது நிச்சயமென விங்ஙனஞ் சுருங்கச்சொன்னேன்; விரித்து விளம்பத்துணியின் நூறுகோடி வருடகாலத்தும் முடிவுபெறுதே." என இவ்வுலகுணர்த்துய்வான் உமாதேவி முன்னிலைக்கட் சிவபெருமான் றெரித்தருளிய திருமொழியாக வருதல், மன வாக்குக்களாலளக்கொணா மகிமையுடைப் பரம்பொருளே குமாரனெனும் வாய்மை யினை யுணர்த்துவ தாயிற்றென் றறிதற்காம் புண்ணிய மவர்க்கின்றென்று கூறலுமா மென்க. உண்மைச்சைவத் திருவாளர்காள்! இத்திருமொழியிற் போதரு பரம்பொரு ணீர்மைக்கும் மேற்முக வொருகடவு ணீர்மையினை எத்துண்மொழிக ளெடுத்துக்காட்ட வல்லும்! கன்குப்த்துணர்மின்கள். இத்திருமொழிப்பொருள் பிடித்தன்றே திருவலங் கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்து வெள்ளியற்கண்—

"தப்புரவு நாடுயிரே சுப்பிரமண் யத்தின்மேல்
எப்பிரம முள்ளதியம்பு."

எனவரு குறள் வெண்பாவும், வஞ்சியியற்கண்—

"பந்தக் கடமுறை பண்பிரே
சந்தக் கடமதி தந்தேயாள்
எந்தக் கடவுளு மென்கோள்போழ்
கந்தக் கடவுளே மிஞ்சாதே."

எனவரு வஞ்சிவிருத்தமும், கலியியற்கண்—

"சொக்க ரிக்குடி மக்க ளுக்குள துக்கமால்
பொக்கெ னக்கெட வக்கி புக்கெழு மக்கியாய்
நக்க டுக்கைகொ ணக்கர் பக்கந டக்குமா
உக்கி ரக்குக ளுக்கு மிக்கதி ருக்குமோ."

என்று (சீர்தோறு மிரண்டாமெழுத்துக் ககரவொற்றுயுறத் தொடுக்கப்பட்டு) வரு கலிவிருத்தமும், இவைபோல்வன பிறவு மெம்மாற் கூறப்பட்டன. சந்தக் கடம்=அழகியவுடம்பு; சந்தம்=அழகு. சொக்கு=அழகு. இதனையுடைய பொன்னுலகமே சொக்கரெனப்பட்டனர். "பொன்னுலகர்க்கும் இம்மண்ணுலகர்க்குமுள்ள துக்கம் பெருக்கெனவொழிய நக்கபிரா னுடைய அக்கினிக் கண்களிற் புகுந்து அறுசுடர்வடி வாகிச் சிறந்த கொன்றையந்தார்புனை அந்நக்கனருளி காரியச்சார்பாக நின்றருள் பேராற்றலுடைக் குகபிராற்கும் பெரியபொரு ளிருக்குமோ? இராது." என்பது கலி

நிலைத்துறையின் பொருளாம். பொருக்கெனவென்பது பொக்கெனவெனவும், அங்கி யென்பது அக்கியெனவும் விகாரப்பட்டன. அங்கி = அக்கினி. இன்னும், அறுமுக தூடணை ஐம்முக தூடணையாய் முடியுமெனு முண்மை புலங்கொளவறியாது சண்முக சிவத்துரோகியாகித் திருமயிலையிலிருந்த பேத சைவரொருவரும், அவரொத்த வேறு சிலரும் முருகணைப் பரிவாரதேவதையென வாய்கூசாது இழித்துக்கூறினமையும், கூறுகின்றமையு மெத்திற வுண்மையிலுள்ளனவாம்! கல்லியற்புலவர்காள்! உணர்மின். மேலும் அம்முருகன், சிகண்டருத்திரசன்னிதியிற் பரிவாரதேவதையா? சிவசன்னிதியிற் பரிவாரதேவதையா? சோமாற்கந்தமூர்த்த சிவனே தனக்குங் குமாரனுக்கும் பேதமின்றென்பதை மறந்து பரிவாரதேவதை யாயினனு? அவ்வாருனதும் பரிவார தேவதைகளோடு வைக்கப்பட்ட நடேசமூர்த்தம்போன்றதா? "மீனவர்சேணை காவல ராயினர்" என்றபடி வங்கியசேகர பாண்டியனுக்குச் சேணைத்தலைவனை நின்றமை போன்றதா? ஆன்மாக்களின் இருதய குகைகளிலிருக்குங் குகன் பரிவாரதேவதை யாயினு னென்பதெப்படி? சருவாண்ட கோடிகளெல்லாந் தாங்கியுள்ள நிருமேனிச் செவ்வேட்பரமன் பரிவாரதேவதை யாதருன் எவ்வாற்றுன்? அபர குமாரர்களு ளொருவன் அவ்வித தேவதையாயினனு? ஐம்முகனை நோக்கிச் "சதாசிவோம்" என்றொரு முறை கூறிய வேதம் அறுமுகனைநோக்கி மும்முறை "ஸுப்ரஹ்மண்யோம்" என்று கூறியவாறென்? என்னும் ஈட்டுவினாக்களும், உண்மை நாட்டு வினாக்களும் இங்ஙன் எஞ்சாதெழுமென்பதையும் அவரறிவரோ? இவற்றுட் சிலபற்றியும், குமார நாமார்த்தம் முதலிய வேறு சில வுண்மைகள் பற்றியுமுள்ள விசாரணை தகராலயரகசியச் செய்யுளுரைகளின் மாணப்பெரிதா யிருத்தலின் அவையற்றை ஆண்டுக்கண்டு தெளிய லாம். கறைமிடற்றுன், தன்னை வலம்வந்த கணேசனது திருவாய்க்கு உருசியாமொரு பழத்தினையும், சிவயோக ஞானிகள் சுவைக்கச்சுவைக்க இன்சுவை மல்குமா றவர்கட்கு ஒருகணப்போது ளுலகை வலம்வந்த வொருபழத்தினையுங் கொடுத்தனனென்றற் கேற்புடைக்கதையாலுங் கந்தபிரான்மாட் டோரிழிவுகாண்பரோ கர்த்தாரகசியங் கற்றுவல்லார். நிற்க. ஆர்வலர்பதியாகிய அரும்பொருளைப் பார்வதிபதியாகிய பரம் பொருளை உயிர்வருக்க சிகண்டருத்திரனென்னும் மலவாசக மொக்கை, இன்னுந் துண்டு துண்டாய்ப் பொடி பொடியாய்த் தவிடு தவிடாய் அணுவணுவாய்ப் பரமாணு வாய்ப் பறந்தொழியுமாறு நியாயதண்டத்தால் யாம் புடைத்தலை யிவ்வுரைக்கண்ணேயே இனிக்காணலாம். காண்பாக்கு, நுங்கடெய்வமே நங்கடெய்வமுமெனும் உட்டம் பாட்டினின் றுண்மையு மொண்மையு மவரம் அன்புடைச் சைவப்பெருமக்காள்! ஆசைப்படுமின்; அருளைப் புகழ்மின்.

(சிவ ஏகோத்யேயச் சிவம்கரஸ் ஸர்வமங்யத் பரித்யஜ்ய)

"அன்னியமான யாவையும்விட்டு(ச் சிவமென்னும் பெற்றியால்) மங்களத்தைச் செய்யுஞ் சிவனொருவனே நியானிக்கற்பாலன்" என அதர்வ சிகோபநிஷத்தும்,

(தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்ய த்யேயாந் விஷ்ணுவாதிகாந் ஸுராந் |
சிவஏவஸதாத்யேயஸ் ஸர்வஸம்ஸார மோசகஃ ||)

"சமுசார துக்கதாச முத்திப் பிராத்தியின் பொருட்டு விட்டுணு முதலிய சருவதேவர்களையும் விட்டு, எஞ்ஞான்றும் நியேயனுகவுள்ள சிவனியே நியானித்தல் வேண்டும்" என அதர்வவேத சரபோபநிஷத்தும்,

(ஸர்வதர்மாந் பரித்யஜ்ய நிர்மமோ நிரஹங்காரோபூத்வா
ப்ரஹ்மைகம் சரணமுபகம்ய தத்ஸ்வமஸி)

"எல்லாத் தருமங்களையும் விட்டு எனது நானென்பன இல்லாதவனுய்ப் பிரம மொன்றனியே சரணமாக வடைந்துளனுய் அது நீ ஆகின்றனை" என யஜுர்வேத நாலம்போபநிஷத்தும்,

"அரும்பவிழ் மலரோன் மாயனுதியர் வாழ்வெ லாமோர்
தரும்பென நினைக்கத் தக்க சுகவயி ராக முண்டாம்
விரும்புமற் றதனுற் சுத்த மெய்ச்சிவ ஞான முண்டாம்"

என ஸ்ரீமத் - ஸ்காந்தாந்தர்க்கத சூதசங்கிதையு நிகழ்த்து மதாரனே அனேகேசுர வாதம் பிடியா தொருதெய்வத்தினியே சரணமாக வடைதலும் வழிபடலும் விதி வழியேயுஞ் சிறந்தகொள்கையெனக் கோடும்: இக்கொள்கை, கற்புடை மகடூ நடையினைப்பொருந்தும்: இஃதொரீஇய பல தெய்வக்கொள்கை, இழிவின்பாற்படு வியபிசாரிநடையினைப் பொருந்தும்: இந்நடையாம் வழுவினை யாமுறல்வேண்டா வென்னுமொரு முடிபு முன்னுபு "விபசாரிநடை யென்னவொரு துறையின் றனந்த தெய்வந் தொழுவழு" என்பதியம்பப்பட்டது. பத்தவிடுதலை பெறுவாரெல்லாங் கோடற்பாலதாம் இச்சிறந்த கொள்கையினைத் திருஞானசம்பந்தப் பெருமான் றமிழ் மறை—

"----------சிற்றம்பலமேய
கருமா னுரியாடைக் கரைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணுதுள்ளமே"

எனவும், வாகீசப்பெருமான் றமிழ்மறை—

"'சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் றிருவடியே சேரப்பெற்றோம்'
'இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
பிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் கடுதறியைக் காண லாமே'"

எனவும், சுந்தரப்பெருமான் றமிழ்மறை—

"'மறிசே றங்கையனே மழபாடியுண் மாணிக்கமே
அறிவே நின்னையல்லா லிலியாரை நினைக்கேனே'
'சிந்தா யென்தைபிரான் றிருமேற்றளி யுறையும்
எந்தா யுன்னையல்லா லினியேத்த மாட்டேனே'"

எனவும், மணிவாசகப்பெருமான் றமிழ்மறை—

"கொள்ளேன் புரத்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லானரு கம்புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னீயல் லாதெங்க ளுத்தமனே."

எனவும், அருணகிரிநாதப்பெருமான் றமிழ்வேதம்—

"'உரிமை யடிமையுனீ யன்றிப்ர பஞ்சமதை—நம்புவேனே ----
பழநி மலையின்மிசை வந்துற்ற விந்திரர்கள்—தம்பிரானே'
'படிக்கின் றிலேபழ கித்திருநாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலேமுரு காவென் கிலேமுகி யாமலிட்டு
மிடிக்கின் றிலேபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலேநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.'
'-------தசைகொண்டு வேய்ந்த வகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே'"

எனவு மெடுத்துரைக்கின்றன. இன்னன பல்ல. வேதாகமங்களின் கருமப் பகுதிகள் பலதேவ வழிபாடு விதித்தலி மாந்தர்பற்றி மயங்கியுழிதரு துன்பொழியு மாறுகவும், அம்மயங்கியோ ரறியாதபடி மறைந்துகிடக்க மறையாகம முடிவிற்போதரு மொருதேவ வழிபாடாய சிவாராதனையையே மேற்கொள்ளுமாறுகவும் போந்த தமிழ் மறை மொழிகள் திருத்தமாக வெழுந்துள்ளன வென்பதைச் சைவரென்பாருட் பலரு மொருசிறிது முணர்ந்தாரல்லரென்பது அன்னவர் நடைவழியாகவே அறியப்படு கின்றது. அக்கருமப் பகுதிகளை முக்கியமெனக்கொண் முறைமையினலோ? அக் கருமவழியே ஊதியம் விழைதலோங்குற கிற்றலினலோ? அன்னன கிற்பாரது வன்போதக வாய்ப்படுதலினலோ? போந்த மறைமொழிகளை கம்பாப்பெற்றிமை பிறங்கி கிற்றலினலோ? வாய்ப்பின் வழிபடு தெய்வஞ் சிறுமைத்தேயாயினுங் "கூடிப் பிரியேல்" என்றபடி அதனை விடல் கூடாதென்னுங் கோட்பாட்டினலோ? அவ்வித தேவதையை விட்டக்கால் அது நம்மைக் கட்டப்படுத்து மென்னுங் கருங்கருத்தினலோ? பாழ்த்த வினைத்தொடர்பின் பகுவாய்ப்பட்டு கிற்றலினலோ? இவற்றுட் சிலவே பலவே சேர்ந்த பெற்றிமையினலோ? அவ்வுணராமை அவர்மாட் டொருவாதோங்குவ தாயிற்று. யாது செய்தும்! தனி விநாயகவணக்கமு மில்லாது தமிழ்மறை தொடங்கப் பட்டிருத்தலைமட்டுங் கருதினும் ஒருதெய்வவழிபா டறிவுறுத்தவா றுணரலாம். சிவ மெனும்பெய ரணைய எத்தெய்வ சம்பந்தமும், அப்பெயரணை தெய்வத்தோடு பிற தெய்வ சம்பந்தமு முடையோர், யாண்டு மெஞ்ஞான்றுஞ் சைவரெனப்படார். அவர், தம்மைச் சைவரென்றற் காசைப்படுவது முடவன் கொம்பின் றேறல் விரும்புதல் பொருவும். இது கிடக்க. இதயாம்பரத்திற் றியானம் ஒருமூர்த்தி பாவனையிலேயே கூடுமதனற் பலமூர்த்தி வழிபாடு பத்தமாம். ஆகலினன்றே மேலெடுத்துக் காட்டப் பட்ட வடமொழிமறை "சமுசாரதுக்க நாச முத்திப்பிராத்தியின்பொருட்டு விட்டுணு முதலிய சருவதேவர்களையும் விட்டு, எஞ்ஞான்றுஞ் சிவனையே தியானித்தல் வேண்டும்"

என்றும், தென்மொழிமறை "கொள்ளேன் புரத்தான் மாலயன் வாழ்வு" என்றுக் தெளிவாகப் போதிப்பன வாயின. இதனைற் பிரமவிட்டைவழி முத்தி சித்திக்தற் பொருட்டு விட்டுணுமுதலிய பெரியதேவர்களையு மீத்து கிற்றல், எவ்வாற்றானுங் குற்ற மாகாதென்பது செம்மையே யுணாக்கிடக்கின்றதன்றே. இப்படி கிற்கும் வயிராகம் (=வைராக்கியம்) உண்டாயினற்றான் ஞாயமெய்ஞ்ஞான முண்டாமென்று மேலே போந்த சூதசங்கிதைச் செய்யுட்பகுதி அறிவுறுக்கின்றது மிங்குய்த்துணாரற்பாற்றே. குமரகுருதாச சுவாமிகள்பாட லீற்றில் —

"வான மிடிந்து தலையில் விழும்படி வம்பு வந்தாலு மென்னை — அந்தக்
கான மயின்முரு கையன் றிருவருள் கைவிட மாட்டாதே."

என்றெழுந்த கட்டுரைப்பொருள் பொருந்த யாது துன்பெய்தினும் அஞ்சேன்: சிவபரம்பொரு ளொன்றனையே தியானிக்கக் கடவேன்: பிறிதோரின்பங் கனவிலும் விரும்பேனென்னுங் கருத்தானே பிறதெய்வ வழிபாடொழியாதான் பக்தவிடுதலை மார்க்கத்து முதற்படியினுங் கால்வையாது கிற்கின்றனனெனலின் அவனை, ஆசிரியன் றிருத்துமாறு திருத்தி, பிறதெய்வ வழிபா டான்மார்த்தமாகச் செய்வதில்லையென அவன் வாய்ப்பிரமாணமும் பெற்றே சிவோபாசனையை கல்கியருளல் வேண்டும். அங்ஙனந் திருந்தானையின் ஐயோ! என்றிரங்கி அவனைக் கழித்தலே கடமையென் றிங்ஙன்யாங் கழறலுமொரு கடமையேயாயிற்று; எக் தொடர்புடையாரு மவ் வண்ணமே புரிய வேண்டுமென்பது கருதியால். 'நீ யாருடைய பக்தன்'? என்னுங் கடாவுக்குப் பலதெய்வ வழிபாடுடையான் யாதனை விடையாக விறுப்பன்? மூகந்தான் காட்டுவன் போலும்! நோய்வாய்ப்பட்டு கிற்கு ஞான்று இழிதெய்வங்களைக் கும்பிட லும், பிரார்த்தனை புரிந்து காணிக்கையிடலுமாம் வழக்கம், தனது ஆன்மார்த்த பரம் பொருளை அவமானஞ்செய்தல் பொருவும்; அன்புத்தளருமாதலின் அவைசெய்யற்க வென்றலும் ஆசிரியன் சீடற்கோ தொள்ளுரைகளு ளொன்றும். குமரகுருதாச சுவாமிகள் பாடற்கண் —

"நோய்வந்த காலிலிற் பேய்களைக் கும்பிட்டு
நோன்மையை மறந்த துட்டன்"

எனவருதல் கண்ணுக. உண்டியுண்டு பசிப்பிணி யொழித்துக் கொள்வோன், ஏற்புடை மருந்துண் டெய்திய நோயினை யொழித்துக் கொள்ளாது இறைவனே நீக்கவேண்டுமென கிற்றலுக் தகுதியுடைத்தன்று. இன்னலங் கடலுட்பட்டார் பலரையு மெடுத்தருளிய மகிமையுடை "அண்டமா யவனியாகி" என்பதாதியாய் அகாராதி னகாராந்தக் தொடக்கமாய் வரூஉம் ஈ0-செய்யுளாகிய சண்முககவசம் நாளொன்றற்கு கூ-முறை படிக்கப்படு முறைமையிற் பரமமந்திர பரமௌடதமாம். ஒவ்வொரு கன்மத்திகளிலும் இறைவனையேவுதல் அவனது மாண்பினை யுணரா மாலைத்தாம். எவ்வாற்றானுந் தன்னை நீக்கிக்கொள்ளப்படாத் துன்பினையே நீக்குமா றிறைவன்பால் விண்ணப்பித்துக்கோடல் வேண்டும். விண்ணப்பித்துக்கொண்ட

வழியும் இறைவன் அவ்வாறு செய்யாதிருப்ப ஞயின் அது கருதி அவன்மீது குறை கூறுதலுங் கூடாது. இதுவே உழுவல்லன்பு : கடப்பாடு. மேலேப் பாடற்கண்—

" உன்மீது வைத்த நினைவான பற்றை யொருபோது மாற்ற நினையேன்
என்மீது வைத்த புரிவாமு னட்பு மிடையா திருக்க வொருகால்
என்மீது பட்ச மிலியா யெனைப்பெ ரிதுமீ மறக்க வரினும்
உன்மீது குற்ற முரையே னெனக்கு ஞணர்வாக வுற்ற குகனே."

என வருஉஞ் செய்யுளே யுய்த்துணர்க. உணர்த்தியவா றெருதெய்வ வழிபாடுடையோன் பிறதெய்வத் தொழலாகா தென்பதிங்ஙன் முடிபன்று : கட்புலனும் போது தொழலாம். என்னே ? மனுடரைவணங்கு மனுடன் றன்னினு மேம்பட்ட யாதொருதெய்வங் கண்டுத் தொழாமை அகத்தையின் பாற்படு மாகலின். மனுடர் வணக்கம் யாதுகருதி நிகழ்கின்றதோ ? அங்நிகழ்ச்சியினே யொட்டியே பிறதெய்வ வணக்கமு மெண்ணப்படுவ தன்றி ஆன்மார்த்த பரம்பொருள்வணக்கமா யெண்ணப்படாதென்க. உண்மை விளக்கம்— " உற்றுசான் லிங்க முயர்வேடம்— பற்றுக— முத்தித்தலிவர் முழுமலத்தை மோசிக்கும்— பத்திதனி னின்றிடுவர் பார் " என்றபடி சிவ குருவையுஞ் சிவனடியாரையும் வணங்குதல் அப்பரம்பொருள் வணக்கமா யெண்ணப்படும். இந்நிச்சயம் பற்றிய விரிவு மேற்கோள் பரிபூரணனந்த போதத் துறவற விளக்கப்படலத்துத் கூசு - ன் உரையுழி யோர்த்து கொள்ளலாம். மேலே, ' இதயாம்பரத்திற் றியானம் ஒரு மூர்த்தி பாவனையிலேயே கூடுமதனற் பல மூர்த்தி வழிபாடு பக்தமாம் ' என்றும். அவ் வொரு மூர்த்தியினுடைய பல மூர்த்தங்களையும் அங்ஙனம் வைத்துத் தியானித்தலுஞ் சாரூபகதியைத் தடுக்குமொரு பக்தமா மென்பதூஉம், வெளிமுகத்தே காணப்படு சிவசம்பந்தமான விம்பங்களைத் தன்னுடையுபாசனை மூர்த்தியின் ஒண்டிருமேனியே யெனப்பாவித்து உழுவலின் வணங்கல் இத்திறப் பக்தமாவதன் றென்பதூஉம், பசுவர்க்கத்துப் பலதேவ மூர்த்திகளையும் பதியாயுள்ள சிவமூர்த்தியையும் அறிவின்மையின் ஒன்றென விரவிக் கொண்டு வெளிமுக ஆராதனை புரிவோருடைய புண்ணியம் பொதுவதாயிருத்தலினுல் அவர் சிறந்த சிவலோககதியி லொன்றுமெய்தாமே பொதுத் தருமங்களைக் கருதிவரு தேவனை இந்திரனு ளளிக்கப்படு சுவர்க்கக்கதி யடைந்து மீளத்திரும்புவோராரவ ரென்பதூஉம் இங்ஙணுணர்ந்து கொள்ளத் தக்கனவே. ஸ்ரீமத் - ஸ்காந்த மஹாபுராண தகஷகாண்டத்தின் க-ஆம் அத்தியாயத்தில்—

(யஸ்ரீவெதஷஸாதஷஸ தொஷாஸ்ரீக்ஷதஷெதஷஸா ।
வதஷெஸ்ஷஷஸாவாவொ அஸகம்வ்விஸெகிவஷ்ஷு ।
வதஷஸிஸிவதாஷாஷஸெஸ்ய தெஷ்ஷ்ரீஜிஹி.தஷஷ்ஸாழி ।
ஸதஸ்ரீஸதஸ்யாஷுவ்வஸ்யாஸொ உ்ஷவ.ஷ்ஜீஷுவாவகஷி.ஷுணஃ ।
ஸிவஷஷவவதிஸ்ரீஷஷ்ஃ வஸவொவயஷெவஷஜி ॥

யச்சிவேகமைராகஸ்மாந் மோஹாந்நிக்ருதசேதஸா ।
வதத்யேஷமஹாபாபோ நரகம்ப்ரவிசேத்கலு ।
வதந்சிவதாஸாந்யே தேஷுப்ரீதிர்ஹிஜந்தராம் ।
சத்ருகர்யாந்ப்ரபச்யாமோ துர்புத்தீந்பாபகர்மிணः ।
சிவஏவபதிச்சம்புः பசவோவயமேவஹி ॥)

"புத்தி பேதுற்று விட்டுணு முதலிய வெங்கணீச் சிவனுக்குச் சமமாக யாவனுரைக்கின்றனனே அம் மாபாதகன், அருநரகேயனுபவிப்பான்: எங்கணீ அச்சிவனுக்கு அடியரென்றே யுரைக்கும் ஏனையோர்பால், யாங்கள் பெருநேயங் கூர்கின்றும்: மற்றைப்பாதகரைப்பகைஞராகவே நினைக்கின்றும்: சிவனுன சம்புவேபதி: யாங்களே பசுக்கள்." எனவும், சூத சங்கிதையின் பரமவிஞ்ஞான முரைத்தவத்தியாயச் செய்யுட்பகுதி—

"மாசில் வேத்தனைத் தாசனு மதிக்கின்வாழ் வண்டோ"

எனவும் வருவன கருதுக. ஈசனுக்குச் சமமாக விட்டுணு முதலிய தேவர்களைக் கூருண்ணுதென ஆசிரியனுணர்த்துதல் கண்டும் அது கூறுதன் 'மா பாதகம்' எனும் பொருளிலே மேலேத்தகுகாண்ட மொழிகள் பிரயோகிக்கப் பட்டுள வெனுக்தெளிவுங் கருதுக. அந்தச் சிறந்த சிவலோகம்— பிரகிருதி மாயையாய தூலப்பிரகிருதியையும், அசுத்த மாயையாய சூக்குமப்பிரகிருதியையுங் கடந்த வும்பரிலேயுள்ள ஒல்கா வொளிமய ஓங்கார சுத்தமாயையாய பரப்பிரகிருதியின் உச்சியில் விளங்கியிருப்பதாம். ஆகலி னிஃது அப்பிராகிருத கைலாய மெனவும் படும். இதன்மேற்றுக எவ்வுலகுமின்று. இதன்கணிருப்பன வெல்லாம் மிக்க தெய்வத் தன்மையவே. இவற்றை,

(தத்ரூர்த்வேதுதாலோகா தோஜோகஜோளகிகழி ।
மோஹோஹோயாய நித்யம்நிவஸதீஸ்வரः ।
தத்ரூர்த்வேதுதாலோகா ஒய்ம்பூவொதநிவத்துதெ ॥
ததூர்த்த்வமுன்மதாலோகாத் ஸோமலோ கமலெளகிகம் ।
ஸோமஸ்ஸோமயாயத்ர நித்யம்நிவஸதீச்வரः ।
ததூர்த்த்வமுன்மதாலோகாத் யம்ப்ராப்தோகதிர்த்ததே॥)

" உன்மனுலோகத்திற்கும் மேலாகவுள்ளது அந்த அலௌகிக சோமலோகம்: உமையோடேய்ந்து சோமனெனவிருக்கும் ஈசுவரன் எச் சோமலோகத்தில் வசிக்கின் றனனே அதுநித்தியம்: உன்மனுலோகத்திற்கும் மேலாயுள்ள அவ்வுலகத்தினை யடைந்துளோன் பிறவியினின்று நீங்கினவனுவன்" எனச் சைவமஹாபுராண வாயு சங்கிதையின் உத்தரபாக மோதுதலிற் பெறுக. 'உன்மனு' என்னுங்கலை — பிரம ரந்திரத்திற்கு மேலே கூறப்படு துவாதசாந்த அளவையினுள் அ - அங்குலத்தின் மீது ஈ - அங்குலங்காறுஞ் சொல்லப் படுவதாமென்னும் விவரம் பரிபூரணுனந்த போதத்துத் துறவற விளக்கப்படல அகலவுரை யொன்றின்கட் கண்டு கொளலாம். இது, மூத்தித்தானமே.

(வவலெவ்வம்வதழுயதூரவழாய்ஷம்
வூஜூலொகஉவிவா ஊழுதே
நமவாநரரவதழுதே நமவாநரரவதழுதே

ஸகல்வேவம்வர்த்தயம்யாவதாயுஷம்
ப்ரஹ்மலோக மபிஸம்பத்யதே
நசபுரராவர்த்ததே நசபுரராவர்த்ததே)

" அவன் இவ்விதமாக ஆயுள்காறுமிருந்து பிரமலோகத்தை யடைகின்றனன்; மீளத்திரும்புவானல்லன், மீளத்திரும்புவானல்லன்." எனச் சாந்தோக்யோபநிஷத்தின் இறுதிக்கட் படிக்கப்படு பிரமலோகமும் முடிவானபொருளில் இச்சிவலோகமே ஆம். இவ்வுலகம், கம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்றவாறு அர்ச்சிராதிமார்க்க வழிப்போந்தடையப்படுவதாம்; இதன் விசாரணை கொண்னும் பெரிதாமாகலின் அது, அப் பரிபூரணனந்தபோதத்துத் துறவறவிளக்கப் படலத்து மூதற்செய்யுள் அகலவுரையாயிருத்தலின் ஆண்டுக்கண்டு தெளிக. உலகல்லாத ஆன்மசொரூபத்தைச் சுவானுபூதிவாயிலாக அடையகில்லாச் சிவரூபவருக் தடத்தமூர்த்தியினுடைய சாலோக சாமீப சாரூப கதிகளு ளொன்றினை அவாஞ் சித்தமுடையராகவே கிற்பரென்பதும், அன்னேருடைய தவமிருந்தவாறு அவ்வக் கதியிற் சேர்த்தருள் கிருபையுஞ் சிவனைச் சிந்தித்து அகம்புற னென்னு மிருவகைப் பற்று மறகிற்பார்க்குச் சுவானுபவ வாயிலாகச் சொரூப சாயுச்சியத்தை யடைவிக்கு மாற்றலுங் கதிகாயகனுகிய அச்சிவனுக்கே யுள்ளனவென்பதும் இனிது புலப்படுகின்ற மையின் அவன், ஆன்மகோடிகளோயாளுந் தலைவனுகவும், அங்ஙனந் துட்டநிக்கிரக சிட்ட பரிபாலனுர்த்தம் அவற்றினை கடாத்தியருள் அரையனுகவும், சாயுச்சியந் தடையுண்டார்க்கெல்லாக் தனது சன்னிதிமாட்டுள்ள சிரிய செல்வங்களை யுதவி யுபகரிப்போனுகவும், பற்றற்றகெறி பற்றுகார்க்கு அச்சாயுச்சியமு மளித்தருள் ஆசாரியனுகவு மிருக்கின்றன னெனுந்தணிபு பெறப்படுதலின் இச் சைவமார்க்கந் தடைதணந்த கிருபாமார்க்க மாமென்ப தினிது நாட்டப்படும். இச்சரதம், இந்நூலகத்தும்—

" சிரா பருட்குரவ னுபதிறை யாயுகார்
செய்பவர்க் கெளிஞனுயும் "

என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டிற் கழறப்பட்டிருத்தல் காண்க. இச்சரத மறியாதாருட்சிலர், ஈசுவரவழிபா டெற்றிற்கு? மனத்தினையடக்கியிவ்வான்மாவை யறிதல்வேண்டு மென்கின்றனர். இவர்—

(கிரொஅதம நீலுகம்ஂவ்ரூபாதம்,
யூரகூரஃஈநிம-ழுஹ்திஹஂதயொநிம்
வஃவஃஷ்ஷாகூஂதிவஃஃவஃவஷ்ஷாகி।
ஜூாகூவாதம்ரூதஷ்ஷஃஷ்கிகாஅஃவஂயாவிஃஈதூயெ।

த்ரிலோசநம் நீலகண்டம்ப்ரசாந்தம்,
த்யாத்வாமுநிர்கச்சதி பூதயோநிம்
ஸமஸ்தஸாக்ஷிம்தமஸ: பரஸ்தாத் ।
ஜ்ஞாத்வாதம் ம்ருத்யுமத்யேதி நான்ய: பந்தா விமுக்தயே ।)

"மூக்கண்ணனுய், நீலகண்டனுய், மிக்கசாந்தனுய், பூதகாரணனுய், சமத்த சாக்ஷியா யுள்ளானே முனிவன்றியானித்து இருநோக்கடந் தெய்துகின்றனன்,—அவனே யறிந்து மிருத்தியுவைத் தாண்டுகின்றனன் : வீடுதலுக்கு வேறுவழியின்று." என்னும் யஜுர்வேத கைவல்யோபநிஷத் வாக்கியங்களின் பொருளேயேனுங் கேட்டுமிரார் போலும். 'விடுதலுக்கு வேறுவழியின்று' என்பதை யுய்த்துணர்க. தக்ஷிணமூர்த்தி யறிவிக்கவன்றே சனகாதி மாமுனிவ ரறிந்தனரென்பதையும், "காண்பாரார் கண்ணு தலாய்க் காட்டாக் காலே" யென்னுக் திருவாக்குமது வென்பதையும் மறவற்க. இறந்தாரை யெழுப்பன் முதலிய செந்தமி ழற்புதத் திருவாக்கினாய திருஞானசம்பந் தப் பெருந்தகை முதலாயினர் முன்னிலைக்கட் பிரசன்னமாய் நின்றருளிய தேவன் இச்சிவமூர்த்தியே யென்பது, அன்னேர் திருவாக்குக்களானுஞ் செவ்வனே புலப்படு கின்றமையின் அவன், அனாதி நித்தியனுயிருக்கின்றனன்; இறந்தானல்லன் பிறந்தானல் லன் இழிந்தானல்லன் மெலிந்தானல்லன்; நினைந்தார்க்கருள்வ னென்பது நிறம்பாத் தீர்வையாம். கொள்கைகளுள் யாது பேதமிருப்பினும் அவன் றிருநாமத்தை யுச்ச ரித்தே, அவனே முன்னிநின்றே அந்தச்சம்பந்தர் முதலிய சைவாசாரியர் நால்வரும், திருமூலநாயனரும், பட்டினத்தடிகள், பத்திரகிரியரையர், சிவவாக்கியர், தாயுமானர், சாந்தலிங்கர், குமாரதேவர், சிவப்பிரகாசசித்தர், கண்ணுடையவள்ளல், காசிக்குமா குருபார் முதலிய பெரியார்களும், சைவபாடிய நீலகண்டசிவாசாரியரும், உபமன் னியர் முதலிய மாமுனிவர் பலருஞ் சுவானுபவச் செல்வர்களாய் விளங்கினரன்றே? அறுமுகச்சிவனே முன்னிநின்ற அருளாளர் பல்லோருள்ளும் அகத்திய முனிவரர், பிருகற்பதி பகவான், பராசரர் புத்திரர்களாய தத்தர், அனந்தர், கந்தி, சதுர்முகர், சக்கரபாணி, மாலியென்னுஞ் சண்முனிவர், ஜாபாலி முதலிய மாமுனிவர் பலரும், அருணகிரிநாத சுவாமிகளும், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளும் அவ்வனுபவச் செல்வர்களேயன்றே? கல்லாழிலிகட்கு இத்திறன்று னெங்ஙனங் கொளவாய்க்கும்? ஈசனேயேனும் அவனருட்பிரசாத முடையாரையேனு முன்னிநிற்கும் இத்திறனுக்கு மூலங்களின் றிடையூறில்லாச் சுவானுபவஞ் செய்தார் தாம் யாவரோ? என்னுக் கடா வெழுதருமாயின், அதற்கொருவருமில ரென்பதனேயே அவர் விடையா யிருத மற்றென் செய்வரோ? இவருளொருசாரார், புருவமத்தியிற் சோதி காணப்படுகின்ற தாகலிற் பரஞ்சோதியாகிய ஆன்மாவை யாங் கண்டுகொண்டா மெனக் களியாட்டயர் கின்றார். அங்ஙன நோக்கு மிருவிழிகளிலு முள்ள உள்ளாடி யொளியே அன்னணங் காணப்படுவ தென்பதையும், உண்முகமல்லாப் புருவமத்தியாகிய வெளிமுகத்தே பரஞ்சோதி ஆன்மா விருத்தலும் வெளிப்படலும் எஞ்ஞான்றுமில வென்பதையும், புருவமத்தியினே நோக்குமான்மா அவ்விடத்திற்கு வேருகின்று நினைக்கின்றதாகலின்

அந்நோக்கு அன்னிய பாவனையின்பாற் படுமென்பதையு மறியா இளைஞராய் அவரிருக்கின்றனர்; அன்னணமே நிர்க்குண உபாசனைசெய்கின்றாஞ் சொரூபத்தைத் தியானிக்கின்றாமெனக் கண்டதையே கருது முருவமனத்தைக் கொண்டு கண்கூடாயுள்ள பூதாகாசத்தைப் பாவிப்பார்கதியு மாமென்க. சருவபூத பௌதிக அண்டமனைத்தும் முதல்வன் றிருவுருவி லடங்கியிருக்கின்றமையின் அவ்வுருவினைத் தியானித்தன் முதனிலைமனோலய விசேடமென்பதும், பிறவுஞ் சதானந்தசாகரத்தானு மிந்நூலானு முணர்ந்துகொள்ளாதாரும், "மற்றுப் பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமேமனம் பாவித்தேன்" என்பது சைவாசாரியன் றிருவாக்கென வறியப்பெறாதாரும் யாதுறுதி கொண்டுய்யவல்லார்! (உ) எடுத்துக்காட்டிற்போந்த பேருருவம் விருக்கமொக்கும். அதனைத்தந்த சீறுருவம் வித்தொக்கும். இலைகருதல் விருக்கங் கருதியதாகாது. வித்துக் கருதல் விருக்கங் கருதியதாம். உய்த்துணர்ந்து கொள்க. இன்னும், அறுபான்மும்மை நாயன்மாருள்ளே தேவாரம் பாடியருளிய ஆசிரியன்மாருந் திருமந்திரம்பாடியருளிய திருமூலநாயனாரு நீங்கலாக மற்றனைவரும், திருவிசைப்பாப் பாடியருளிய ஒன்பதின்மரும், நக்கீரர், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார், கந்தபுராணக் கக்சியப்ப சிவாசாரியர், சிவதருமோத்தர மறைஞானசம்பந்தர், துறைமங்கலம்-சிவப்பிரகாசர், வேல்ஐயர் முதலியோரும், வடநூல் வல்லாருள் அரதத்தர், அப்பயதீக்ஷிதர் முதலாயினாருஞ் சிவனை முன்னிநின்ற திருவுடையாரன்றோ? இவ்வாற்றாற் சிவமூர்த்தியினைச் சரணமாக வடையாதார், மேலே கூறிப் போந்த சாலோகாதி நாற்றிறக் கதிகளு ளொன்றனை யேனுமுறா இலம்பாடுடையரே யாவரென்றல் பெறப்படுவதாயிற்றால். ஆவதேல், யேசுகிறிஸ்து, முகம்மது முதலியோருடைய மதங்களிற் கடவுட்கு உருவமின்றென்னுங் கொள்கை பற்றினோருட்சிலர், பெரியராகவுங் காணப்படல் யாதாம்? பிறவெனின்,—அக்கிறிஸ்து அம்முகம்மது என்பாரையே அம்மத மூர்த்திகளாக வெண்ணும் வழி அவ்விருவருமடைந்த கதிகளை அம்மதத்தவரு மடைவராகலின் அன்னோர் வழிபாடுகள் பயன்படுவனவேயாம். முகம்மது நாமங்களையே முகம்மதியர் செபமாகச் செபிக்கின்றனர். உருவமின்மையோது மத நிரூபணாசாரியர், திருவருளற் புதம் பெறாச் சாமானியராயிருப்பின் அவர், அம்மதத்திற்கு அருண்மூர்த்தியாயிருத்தல் கூடாதாகலின் அவ்விதமதம் விரும்பத்தக்கதன்றாம் இது கருதியே காசியாத்திரையில் —

"நிதங்கட்ட மார்மதியா னேரில் புதிய
மதங்கட்டி யேயலையு மாக்காள்—இதங்கெட்ட
சிற்றறிவைப் பேரறிவாச் செய்யுங் குகேசனடி
பற்றுதிர்முன் னுலின் படி."

என்னுஞ் செய்யுளுந் தோன்றியுளது. பன்மதத்தினரு மொருசேரக்கூடிய குழுவொன்றுழை 'நம்மையும் பிறரையும் யாவையும் படைத்த நவைதபு தெய்வமொன்றே யுளது. இழிவு, சிறப்பெடுத்திசைத்து நம்மிற் றெய்வவாதம்புரிதலெற்றுக்கு? அஃதறியாமையாய் முடியுமாகலின், வாதநீத்து ஒற்றுமையுடனுய்யக் கடவோம்' என்னுமுரைக ளெழுப்பிக்கோடல் நறிய சமாதானத்தை நல்குகின்றதே;

ஈங்குச் சிவமூர்த்தி வழிபாடொன்றனையே விதந்து கோடல் சாலுமோ? எனின்,—தடைதணந்த கிருபாமார்க்கமாதலிற் சாலுமென்பதற்குரிய ஏது மேற்கோள் பலவும் மேலே வந்துள்ளன. குழுவினர் கிளத்து சமாதானம், தெய்வத்தின் சொரூபநிலையொன்றற்கே யாவதல்லது தடத்தத்திற் காவதன்று; சொரூபம் யாண்டு முண்மையினஃதுருவுடைச் சீவர்களடைதற்குரிய சன்னிதான மாகாதென்பதூஉம், தடத்தமூர்த்தியிருக்கையே சன்னிதானமா மென்பதூஉமறியப்படுதலின். ஆத்திக ரனைவர்க்கும் முற்றும் பொதுவாகாத அச்சமாதானம், பன்மதச் சண்டையிலுறு பகைமை, உவர்ப்புக்களை யொழித்து உலகநடையிற் சீவனஞ் செய்திருத்தற்குத் தேடிக்கொள்ளுமோருபாயமாகவே யெண்ணப்படும். இவ்வுபாயநுதலிப் பொதுமைபுகன்று கொள்வாருண் முகம்மதியர் தொழூஉம் ஆலயத்திற் கிறிஸ்தவரும், கிறிஸ்தவர் தொழூஉம் ஆலயத்தின் முகம்மதியருந் தொழக்காண்பதின்று. அங்ஙனமே சைவர், வைணவர், பிறர் செய்கையுமாம். முகம்மதியருடைய முண்டிதமுங் குறியுரி விடுவாய்செய்தலும் ஏனையர் செய்யாராகலி னவர்க்கு முகம்மதுமத வழிபாடுதான் யாங்ஙனங் கூடும்? ஏனையவுமன்ன. இவ்வேதுக்களானே அவரெல்லாங் குழுமிக்குயிலும் அவ்வொற்றுமை போலியேயென்றற் கிழுக்கென்னை? இன்றே. இப்போலிக்கண் வைகினாருண் முகம்மதியர் தமதிருக்கையினையடைதலுந் தங்கடவுள்காரியத்தே கருத்தாகித் தமது மதாசாரத்தையே அனுட்டிப்பர். அங்ஙனமே கிறிஸ்தவருமுஞற்றுவர்; பிறருமுஞற்றுவர். இச்செய்கை சால்புடைமையே. இதனையெஞ்சிந்தை பெரிதும் மதிக்கின்றது. அப்பிறருள், நலங்கிள ரெவ்வாசாரியர் முகத்தும் நலங்கிள ரெம்மூர்த்தி வழிபாட்டினையும் பெறாதிருக்கும் பிரமகூட்டத்தார் இச்சால்புடைமையினை அறியாதாரேயாவர். இன்னவர், வாளா நாட்போக்குதலை அப்போலியு நலியாது நனிதூண்டிநிற்கும்; அங்ஙனமவர் பாழ்த்த பதிதராயும்விடுவர்; நாத்திகத்திற்கும் ஆத்திகத்திற்கும் இடையிற் பட்டுப் பரகதியுமிழப்ப ரென்க. தம்மு ளொருசிறிது மொற்றுமையற்ற போலிச் சைவரும் இந்நியாய முணர்ந்து நடப்பர்கொலோ? வீரசைவமுந் தங்கடவுள் வழிபாடேயென மதியா ததனை யிழிவின்பாற்படுத்து மொருசார்ச் சைவர்க்குத்தான் யாம் யாதுகூறவுள்ளோம்! ஆத்திக நாத்திக விவரம், "முந்தைநாளில்" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுரையிற் கிளக்குதும். ஓவாப் பேரருளோங்கு தடத்தமூர்த்தி வழிபாடேய்ந்துள்ள மதமே மதம்; அஃதவ்வருள் பெறுங்காறும் வேண்டற்பாற்றென்பது—

"போத்துமர மாகளவும் புல்வேலி வேண்டுதல்போல்
ஆத்தனருள் காறுமத மாமே பரஞ்சோதீ." [௪௪௯]

என்னுங் காசியாத்திரைத் தூக்கி லறிவுறுக்கப்பட்டது. ஐம்முகச்சிவன் அறுமுகச்சிவனென இருமூர்த்திகளிருத்தலிற் சைவர்க்கு ஒரு மூர்த்திவழிபாடு யாங்ஙனங்கூடும்? தேவார திருவாசகங்கண் முதலியனவெனவும், திருப்புகழ் முதலியனவெனவும் பாடல்களும் இருவேறு வகைப்பட்டவா றெவன்? எனின்,—தங்கட்கனுக்கிரகித்தருளிய சிவமூர்த்திகளையே திருஞான சம்பந்தர் முதலினோர் புகழ்ந்து

பாடுவாராயினார். அவ்வாறே தமக்கனுக்கிரகித் தருளிய குமாரமூர்த்தியினையே அருணகிரிநாதர் புகழ்ந்து பாடுவாராயினார். இத்திறம் பற்றுதலே யேற்புடைமை யென்க. ஐம்முகச்சிவ பஞ்சாக்கர தீக்கையினைப் பெற்றுளோர் ஐம்முகச்சிவ மூர்த்தியையும், அறுமுகச்சிவ சடக்கர தீக்கையினைப் பெற்றுளோர் அறுமுகச்சிவ மூர்த்தியையுமே தியானிக்கத்தக்கவ ராவர். இத்தியான மூர்த்தி யிருவருள் எம்மூர்த்தி தமதுபாசனைக் குரியனோ அம் மூர்த்தியே மற்றொரு சிவமூர்த்தியு மாவனென ஆலயத்தும் வழிபடலாம். தீர்த்தமெல்லாந் தந் தெய்வப்பிரசாத தீர்த்தமேயாமென முழுகலாம். முதல்வன் புராணத்தில்—

" ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்று னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்."

என உமாதேவியைநோக்கி உமாபதி யுரைத்தனன் எனவருதல் கருதுக. கருது மாற்றானே பிரமாணங்களுட் பரத்துவார்த்தத்திற் பொதுவாக வரூஉஞ் சிவன் ஈச னென்பன முதலிய பெரும்பெயர்கள் ஐம்முகனுக்கும் அறுமுகனுக்குங் கொளப்படு மென்பது முணர்க. இவ்வாறு கோடலின் மனோலய மெய்துவான் இதயாம்பரத்தே யினிதுபுரி தியானமட்டும் முன்னோதியபடி யொருமூர்த்தி பாவனையாகவே யிருத்தல் வேண்டும். அம்மூர்த்தி, தீக்கையிற் பெறப்பட்ட மந்திரத்திற்குரிய தெய்வமேயென்க. இத்தெய்வம் எம்மை யாண்டருள் குமாரமூர்த்தியாயிருப்பின், இப் பிறப்பிற்றானே ஒல்லையி லெளிதினெளிதாக ஈறிலாக்கதி யெய்துமெனயாந் துணிவுரைகூறுவாம். என்னை ? முன்னர்க் கல்லாலந் தண்ணிழற்கண் எழுந்தருளிய தென்முகபரமாசாரிய மூர்த்தியே பின்னர்க் குமாரமூர்த்தி சன்னிதிமுன்னே சீடனாய்நின்றன னென்பதை நுனித்து நோக்கு ஞான்றும், ஸ்ரீமத் - ஸ்காந்தமஹாபுராண சம்பவ காண்டத்து ௩௫ - ஆம் அத்தியாயம்—

(ப்ராஹ்மணாநாமஹந்தேவ ஸ்ஸுதராம்மஸ்ஸுதஃப்ரியே ।
ஸுப்ரஹ்மண்யஸ்ஸமாக்யாத ஸ்ஸுராஸுரநமஸ்க்ருதஃ ॥
ப்ராஹ்மணாநாமஹந்தேவஸ் ஸுதராம்மத்ஸுதஃ ப்ரியே ।
ஸுப்ரஹ்மண்யஸ்ஸமாக்யாதஸ்ஸுராஸுரநமஸ்க்ருதஃ ॥)

" பிரிய நாயகி! பிராமணர்கட்கு (= பிரமத்தைத் தியானித்திருப்பார்க்கு) அல்லது வேதங்கட்கு யாம் முக்கிய தேவதையாகலின் யாம் பிரமணியமாவோம்; நங்குமாரன் அங்ஙனம் விசேடனாகலிற் சுராசுரர்களால் நமற்கரிக்கத்தக்க சுப்பிரமணிய னெனப்படுகின்றனன்" என்றுரைக்கு முரை பரமன் பார்வதிப்பிராட்டியைநோக்கிப் பகர்ந்த தென்பது கருதுஞான்றும் இக்குமாரமூர்த்தியே ஆசாரியர்க்கெல்லா மாசா ரியன்; தேவர்க்கெல்லாந்தேவன்; இனி, இம்மூர்த்தியை வழிபட்டு வாழ்மின் என உத்தர கைலாசபதி அறிவுறுத்தருளின னென்பதூஉம், தக்ஷிணகைலாசபதியாய அகத்திய மாமுனிவரர் குருவும் பீடுகெழு பிறர் குருவுங் குமாரனேயென்பதூஉம்

பெறப்படுதலின். குமாரமூர்த்தி தேவர்க்கெல்லாந் தேவனென்பது—அவன் சிங்கமுகாசுரனைக் கோறல்புரிவா னெழுந்தருள் செவ்வி "படைத்தற்றெழிலோன் கொடுவந்து வைத்த இரத்தின பாதுகைகளைத் திருவடி மலர்களிற் சேர்த்திய பின்றைக் காத்தற் றெழிலோனும் படைத்தற்றெழிலோனும் மணமரு மலர்மாரி சொரிந்தனர்: தேவேந்திரன் சாமரமிரட்டினன்: சந்திர சூரியர் தரளக்குடைகள் கவித்தனர்: அங்கிப்புத்தேள் தீவத்தி பிடித்தனன்: இயமன் வாளேந்தி நின்றனன்: நிருதி காகளமூதினன்: தோயப்புத்தேள் காளாஞ்சியேந்தினன்: குபேரன் வெற்றிஅப்பொற்பெட்டி தாங்கி வந்தனன்: ஈசானன் சூலஞ்சுமந்துநின்றனன்: மற்றைத்தேவர்கள் அழகிய ஆலவட்டங்க ளசைத்தனர்: பின்றைச் சேனானியாகிய அவனேறியுள்ள பெரிய தேரினை வாயுதேவன் சாரதியாகி நடாத்தினன்." என்னுஞ் செய்திகளானும் பெறப்படும். இவற்றை, யுத்தகாண்டத்து உடு - ஆம் அத்தியாயம்—

(சூ.நீதெஷ்டூணாஷ்டெஷ் வாஷ்டுகெணிதிக்குகெ ।)
"ஆநீதேப்ரஷ்மஷ்ரம்யே பாதுகேமணிசித்ரகே"

என்று கூறிச்சேறலினறிக. (எ) எடுத்துக்காட்டிற் பிரணவோபதேச பரம்பரை, குமரகுருவழியாய் விளங்குமென உமாபதியினுணை யெழுந்தது பெறப்படுதலிற் சிவயோக ஞானிகட்கு அக்குமரகுரு நோன்மூளன்றி வேறு பற்றுக்கோடு பயன்படாதென்பதூஉம் ஈண்டுக் கருதிக்கோடற்பாற்றே.

அற்றேல், அஃதங்ஙனமாக. மாந்தர், சிவபஞ்சாக்கரதீக்கை வழியே ஞானமெய்திய பின்னர்த்தான் சிவனடிசேர்வர்; அது மூடிவான வீடு பேறென்னும் பொருள் பயக்குமாறு சிவஞானசித்தியாரில்—

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவைபடைத்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலிகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளா மிகத்தெளிந்துஞ் சென்றுற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்."

என்னுஞ்செய்யுள் கூறப்பட்டிருப்பதென்னை? எனின்,—"யாமோதிய கல்வியு மெம்மறிவுந்—தாமேபெற வேலவர் தந்தது" என்று தமது திருவருட் செல்வத்தை வெளியிட்டருளிய அருணகிரிநாத முனீந்திரரும் இப்படியே—

"முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றெளியன் றெனநின் றதுவே."

என்றருளிச்செய்தனர். இஃது அச்சித்தியார்ச் செய்யுட் பொருளெல்லாந் தன்மாட்டடங்க நிற்றல் காண்க. இவ்விரண்டும் அவரவர் கொள்கையினை யுயர்த்துவ வாயினவேனும் மேலெடுத்துக்கிளந்த நியாயத்தால் அவ் வருணகிரிநாதனா ரருளிச் செய்த நிச்சயமே சிவமடையுந் தீவிரதரத்தார் பற்றற்பாலதா மென்பதேற்படும். தெய்வப் பெரும்புலவருஞ் சிவானுபவச் செல்வருமான அந்நாதனார், தம்முடைய ஆண்டவனது திருவாய்மலரிலிருந்து 'சும்மாவிரு சொல்லற' என்னுந் திருமொழித் தேறல் பிறந்த வளவிலே தமக் கப்பூரணானுபூதி யுண்டாயிற்றென்பது போதர,

"சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே"

என்றருளிச் செய்தமை கருதுக. இங்ஙனம், குமரகுருவி னனுக்கிரகம், எத்துணைச்சீக்கிரம் பலித்ததென்பதுவே நுண்ணியோ ருணரக்கிடக்கு நுட்பமுமா மென்க. அறியாரெல்லாமிங்ஙன மிழுக்கினா ரென்க. இன்னோரது எண்மை நுதலியே —

"ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே"

என்று பெரிது மிரங்கிக்கூறுவா ராயினார் அந்நாதனாரென்றுங் கூறுக. "முகம்மது மார்க்கத்தை யடைந்தாரே மோக்ஷமடைவார்; ஏனையோர்க்கு மோக்ஷமே யின்று" என முகம்மது மதத்தே கூறப்படுதன்மான வேறு பல மதங்களிலுங் கூறப் படுதலையு மிங்குக் கருதிக்கொண்டு ஓதன் மரபாமென்க. முழுதொருங் குணர்ந்தோனாய முருகப் பெருமாற் கடிமைப்பட்டு முழு விடுதலையின்பச் சுவையினைச் சுவைத்தறியா இழுக்கத்துட்படுவாருட் சிலர், நூற்றுப்பதினெட்டு உருத்திரரா யிராநின்ற இருமலப் பிரளயாகலருள் ஒரு சிரேட்டனாய் முக்குண மும்மூர்த்திகளு ளொருவனெனப்படு குணருத்திரனாயுள்ள சீகண்டருத்திரனுடைய குமாரனே முருகனெனப் படுவோ னென்று மலவாசகம் படித்தலும் பலர்காது புக்கதே. அரன் சீடனாயும் முருகன் குருவாயுநின்ற "சிஷ்யபாவ" வுண்மையுணராது அருவருப்புற்று அந்த அரனைத் தம் வழிபாட்டுச் சிவனினின்றும் விலக்கிக்கொள்ளும் பொருட்டுச் சிஷ்யபாவமானவன் பிரளயாகலரு ளொருவனான சீகண்டருத்திரனென்றும், அவனுடைய தேவியே உமையென்னும் பார்வதியென்றும், அவ்விருவருடைய குமாரனே முருகனென்றும் வரைந்து வைக்கலான புத்தகங்களையும், சர்வான்மசம்பு வென்பாரால் வடமொழியி லியற்றப்பட்ட சித்தாந்தப்பிரகாசிகை யென்பதன் றமிழ் மொழிபெயர்ப்பில் —

"குணதத்துவத்தி லிருக்கும் ஸ்ரீகண்டருத்திரர் மத்தியப்பிரளயம் வரையும் அதிகாரஞ்செய்து கொண்டிருந்து பின்பு அந்தப் பிரமவிட்டுணுக்களையும் ஒடுக்கிக் கொண்டு தாம் மிச்சிராத் துவாவில் அராகதத்துவத்தி லிருப்பர்."

என வரைந்துள்ள மொழிகளை ஆதாரமாகக் கொண்டு தூலப்பிரகிருதியி னுட்பட்ட இப்பூமியின்கண்ணவாய சிவாலயங்களெல்லாம் அந்தப் பிரளயாகலனுக் கிருப்பிடமாம்; தேவார திருவாசகாதி திருமுறைகளும் அவனையே பாடப்பட்ட

பாட்டுக்களாம் : திருஞானசம்பந்தர் முதலிய அறுபான்மும்மை நாயன்மார்க்கும் பிறர்க்கும் அனுக்கிரகஞ்செய்த கடவுளும் அத்தப் பிரளயாகலனேயாவனென்னும் பேரிழிவிற்றீட்டப்பட்ட வெழுத்துக்களையும் விழைத்து நிற்கும் வழியே அம் மலவாசக மெழுந்தது, எழுகின்ற தெனல் இனிது பொருந்துமென்பாம். பிரளயாகல னென்பதை யுறுதிப்படுத்திக்கொள்ள ஆகமவசனங்க ளுள்ளனவென்புழியும், மேன்மொழிந்தவாறு விலக்கிக்கொள்ளும் யோசனை யுடையாரது நுழைப்பு ; அப்பிரமாணம் ; அவைதிக மெனவே அவையற்றை யாமொதுக்குவாம்.

(க) (கூறுமிரு தொகுமவாறு தொகுதொகையொவியு ।
வகழுங்கழுஞ்சுத்தஞ்சொ ராஜ்ஞயாதளகோவனுள ॥
சுவாஞ்சாவ யுங்கொண்டார் :

காலாக்கிருத்ரோபகவாந்த் ஸருத்ரோபைரவோபிச ।
ஸர்வம்ஸம்ஹரதுச்சம்போ ராஜ்ஞயாதௌமஹாபலௌ ॥
அவாந்தராக்யஸம்ஹார:)

"மாபலமுடைய (குண) உருத்திரனென்னும் பெயரிய பகவானுகிய காலாக்கினி ருத்திரனும் பைரவனுஞ் சம்புவினதாஜ்ஞையினல் எல்லாப் பிரபஞ்சத்தையுஞ் சங்கரிக் கின்றனர் : இஃது அவாந்தரசங்காரம் (=மத்தியப் பிரளயம்) எனப்படும்." என்று ஸ்ரீமத் - ஸ்காந்தமஹாபுராண தகுகாண்டத்து உக - ஆம் அத்தியாயமும்,

(உ) (வகாரிவொவிநிதயுகவா நிழுகுவாவிவிருதः ।
சுவகொலிவாஸுவஹ தொகாதாவிகிஞுத ।
ரூதுவுஸுவவிவுஹா சுவுஷி ணுவுஜாவதிः ॥
ஸதாசிவோளிநித்யத்வாத் நிர்மலத்வாச்சஷிச்ருதः ।
த்வமேகோளிபரம்ப்ரஹ்ம ரேஹகாநாஸ்திகிஞ்சந ।
ருத்ரஸ்த்வம்பவளிப்ரஹ்மா த்வம்விஷ்ணுஸ்த்வம்ப்ரஜாபதிः ॥)

"நித்தியனு நின்மலனு மாயினமையின் நீ சதாசிவனெனப்படுகின்றனை : நீ ஒருவன் பரப்பிரமமன்றி வேறு சிறிது மின்றே : நீயே உருத்திரனுயு மிருக்கின்றனை : பிரமனு நீயே : விட்டுணுவு நீயே : பிரஜைகளுக்குப் பதியு நீயே" என்று பார்வதி கலியாணமாதற்கு முன்னே கைலாசபதியைச் சத்தவிருடிகளுந் துதித்து நின்றனரென்று மேலைப்புராண சம்பவகாண்டத்துப் கச - ஆம் அத்தியாயமும்,

(ஊ) (கூறுமிரு தொகுமவாறு வகழுவாவொவிதகுதுனிः ।
சுகுகுகொழிமணுவொவாகுதுதுவுவுவொலுதெதः ।
ரூதுணுவாவகவகவுவுவ தெவதெவவுவுவுநிழுபிழி ॥
காலாக்கிருத்ரோபகவாந் ஸர்வாதாரோமிதத்யுதिः ।
அகந்தகோடிகணபை ராத்மதுல்யபலோத்தததः ।
ருத்ராண்யாஸஹஸம்ப்ராப தேவதேவஸ்யஸந்நிதிம் ॥)

"சருவாதார பூதனாய் அளவிலாக்காந்தியனாயுள்ள காலாக்கினிருத்திர பகவானுந் தனக்குச் சமபல முடைய அனந்தகோடி கணாதிபர்களுடன் உருத்திராணியென்னுந் தன்பத்தினியோடு (பார்வதிகலியாணமகோற்சவ தரிசனார்த்தமாக) மகாதேவ சன்னிதியை யடைந்தனன்." என்று மேலைச் சம்பவகாண்டத்து உ௦ - ஆம் அத்தியாயமும்,

(௪) (தெவகாலாக்நிருத்ரோய தவமூர்த்திர்தயாநிதே ।
ஸம்ஹர்த்தாஜகதாமந்தே ஸர்வாதாரோமராக்ரணீ: ॥

தேவகாலாக்நிருத்ரோயந் தவமூர்த்திர்தயாநிதே ।
ஸம்ஹர்த்தாஜகதாமந்தே ஸர்வாதாரோமராக்ரணீ: ॥)

"தயாநிதியாய மகாதேவ! இம்மூர்த்திதாம் நினது வடிவுகொண்டவரும் முடிவிற் சருவசகங்களையு மழிப்பவருஞ் சருவ பிரபஞ்சாதார பூதருஞ் சருவதேவர்க்கும் முதன்மை படைத்தவருமான காலாக்கினி ருத்திரர்." என்று பார்வதியைத் திருமணம் புரிய வெழுந்தருளும் பரமனுக்கு நந்திதேவர் காட்டுமொழுங்கினின்று காட்டினரென்று மேலைச் சம்பவகாண்டத்து உக - ஆம் அத்தியாயமும் இயம்புமியவையானே சீடனாய் நின்றோன் பிரளயாகலரு ளொருவனல்லன்; சம்புசத்த வாச்சிய நின்மலனே யென்பதுணர்க. மும்மூர்த்திகளு ளொருவனான குணருத்திரமூர்த்தி—

(௫) (பாதாளநாமதோபாகே காலாக்நிர்ய: ப்ரதிஷ்டித: ।)

"பாதாளநாமதோபாகே காலாக்நிர்ய: ப்ரதிஷ்டித: ।"

என யஜுர்வேத யோகசிகோபநிஷத் கிளத்துகின்றபடி சத்த பாதாள முங்கடந்த அண்டகடாக வெளிக்கண்ணதாய காலாக்கினி ருத்திர புவனத்து மிருத்தலினாலும், யஜுர்வேத காலாக்நிருத்ரோபநிஷத் வாயிலாகத் திரிபுண்டாதாரண விதியினை யுபதேசித்த மூர்த்திபெயர்—

(௬) (ஸமவாநு காலாக்நி ருத்ர:)

"பகவாந் காலாக்நி ருத்ர:"

என வருதலினாலும் அம்மூர்த்தியினைக் காலாக்கினிருத்திர னென்று நவின்றது வைதிகமுறையி லேற்புடைத்தாகலின் இம்மூர்த்தி, குணருத்திரனின் வேறாவானல்லன்: இன்னு மிச்சித்தாந்தத்தை மதுகைப்படுத்தற்குப் போந்த (க) எடுத்துக்காட்டிற் காலாக்கினி ருத்திரனுக்கே 'ருத்ரன்' என்னும் பெயரும், இப்பெயரினன் பைரவனோடுகூடி எல்லாப் பிரபஞ்சத்தையுஞ் சங்கரிப்பது அவாந்தர சங்காரமென்னுஞ் செய்தியும், (௪) எடுத்துக்காட்டில் 'இவனே மகாதேவனுடைய வடிவு கொண்டவன் முடிவிற் சகங்களை யழிப்பவன் (விட்டுணு முதலிய) சருவ தேவர்க்கும் முதன்மைபடைத்தவன்' என்பனவும், முற்போந்த காட்டொன்றிற் குமாரனது கட்டளையினான் முத்தொழில் புரிவார் பெயர்களுள் நான்முகன் நாராயண னென்பன நவிலப்படுதலுடன் காலாக்கினி ருத்திர னென்பது நவிலப்படுதலு முள. (௫) எடுத்துக்காட்டில் இம்மூர்த்தி பத்தினி

பெயர் 'ருத்ராணீ' எனப்பட்ட தொன்றுமட்டுங் கருதினும் உருத்திரன்முன் காலாக் கினிருத்திர னெனப்பட்டன னென்பது போதரும். இம்மூர்த்தி (ஹரஃ) 'அரன்' எனப்படுதலை,

(எ) (உதீரயெஹரஹரி வாரிஜாஸநாதுக்ரஹம்
குர்வதிஸர்வதாயகே ।)

"இதிச்வரேஹரஹரி வாரிஜாஸநாதுக்ரஹம்
குர்வதிஸர்வதாயகே ।"

என்று மேலைச் சம்பவகாண்டம் உக - ஆம் அத்தியாயத் தறைதரலினறியலாம். பொருள் :—"இவ்வாறுகச் சருவதாயகனெய ஈசுவரன் அரன், அரி, (வாரிஜாஸநன் =) அயன் ஆகிய இவர்களே யனுக்கிரகித்தருளினன்." எனவாம். இவ்வனுக்கிரகம் பார்வதிப்பிராட்டியின் நிருக்கலியாணக்காட்சி கண்ணுறவந்த காலாக்கினிருத்திரன் முதலிய மும்மூர்த்திகட்கும் ஈசன் புரிந்ததாக வுளது. போந்த அரனென்னும் பெயர் உருத்திரமூர்த்திக்கும் பார்வதிபதிக்குமேயன்றி மற்றெவர்க்கு முரியதன்றென்பதூஉ மிங்ஙனுரைப்படு மாற்றுனே உருத்திரனே காலாக்கினிருத்திரனென்பது தெள்ளிதாம். இன்னும் இத்தெள்ளிது—மேலைச் சம்பவகாண்டமானது ஙசு - ஆம் அத்தியாயத்தில்—

(ஸநஜாதாஸுரா ரூணா மயம்காலாக்நிருத்ரஜே ।
ஸதாவிஷ்ணுச்சவிஷ்ணுநாம் சங்கசக்ராலிதாரிணாம் ॥
ப்ரஜாபதிநாம்ஸர்வேஷாம் ப்ரஹ்மாயம்ப்ரஹ்மணஸ்பதிஃ ।
மதாநாமபிஸர்வேஷாம் மதுஸ்ஸ்வாயம்புவோஹ்யயம் ।
இந்த்ரோயம் ஸர்வதேவாநாம்)

"அநந்தாதாஸ்சுருத்ராணு மயம்காலாக்நிருத்ரஜே ।
ஸதாவிஷ்ணுச்சவிஷ்ணுநாம் சங்கசக்ராலிதாரிணாம் ॥
ப்ரஜாபதிநாம்ஸர்வேஷாம் ப்ரஹ்மாயம்ப்ரஹ்மணஸ்பதிஃ ।
மதாநாமபிஸர்வேஷாம் மதுஸ்ஸ்வாயம்புவோஹ்யயம் ।
இந்த்ரோயம் ஸர்வதேவாநாம்"

எனத் தெரித்துச் சேறலினன் "எல்லாச் சிறப்புக்களுமார்ந்த இக் குமார மூர்த்தியே, அளப்பரு முருத்திரகோடிகளுட் காலாக்கினிருத்திரன் : சங்கசக்கர தாரிகளாய விட்டுணுக்களுண் மகாவிட்டுணு : பிரசாபதிகளுட் பிரமா : தேவர்களுள் இந்திரன் : மனுக்களுட் சுவாயம்புமனுவாவன்." என்பனவும் பிறவும் பெறு மாற்றுனும் பெறப்படுகிறது. குறிப்பாக வெடுத்த வினக்குழி, ஒவ்வொரு தொழுதி யுள்ளு முயர்வுடைமை யெடுத்தியம்பி அவையெல்லாங் குமாரமூர்த்தி யுடையனவே யெனச் சாதிக்கும் பார்வதிபதியின் நிருவாக்காயுள்ள இப்பிரமாணத்தே உருத்திரர்க ளாய (ககஅ) நூற்றுப்பதினெட்டுப் பெயர்களுள்ளே தானெரு தலைவனுப்ப் பசு வருக் கத்திற் பிரளயாகலராகிய உருத்திரர்களுக்குள்ளே தன்னின்மிக்கவரிலனுப் மிளிருஞ்

சிகண்டனே முத்தொழின்மூர்த்திகளு ளொருவனுயுளன் : அவனே காலாக்கினி ருத்திரனெனவுங் கழறப்படுவானுயின னெனவாம். பிருதிவிக்குப் பிரமாவும், அப்புவுக்கு விட்டுணுவும் அதிதேவதைக ளாயவாறு அக்கினிக்கு உருத்திரனும் அதிதேவதை யாயினமையின், அக்கினியின் பிரபாவகாரியம் பிரளயகாலத்தி னிகழ்வதொன்முகலின் அத்தேவனேக் " காலாக்கினி ருத்திரன் " என்றது மேற்புடைத்தேயாம். இஃது ஆகூ ழில்லா அடுகடுகிகர் கொடுமனனுடைய ராய்விற்கும் அண்ணிதாமோ? திருப்பாற் கடற்கட் பிறந்த மா விடத்தையுண்டு கண்டத்திருத்திய காரணத்தாற் பார்வதிபதிக்கு நீலகண்டமுண்மையின் அப்பெருமானுடைய அனந்த திருநாமங்களு ளொன்று 'சிகண்டன்' எனவும் வழங்கப்படுகிறது. சிகண்டம் நீலகண்டமென்பன வொரு பொருள. பார்வதிபதியினுடைய உரு, நாமம், தொழிலென்பனவற்றைத் தாங்கியுள்ள அவ்வுருத்திர மூர்த்திக்கும் இச் சிகண்டனெனும்பெய ரெய்துவ தேற்புடைத்தே. உருத் திரமூர்த்தியின் பெயர்கள் பார்வதிபதியின் பெயர்களால் விளங்கினுங் காலாக்கினி ருத்திரன், காலருத்திரன், பிரளயகாலருத்திரன், பிரளயகாலாக்கினிருத்திரன், சங்கார காலருத்திரன், நீலலோகிதருத்திரன், நீலருத்திரன், தாணுருத்திரன், உருத்திர னென்பன உரிமைப்பெயர்களாய் விளங்கும். ஸ்காந்த மஹாபுராணத்தின் உபதேசகாண்டத்து எடு - ஆம் அத்தியாயம்—

(அ) " ருத்ரமூர்த்தேச்சதங்ஙம தச்சிந்ஹம்தஸ்யசேஷ்டிதம் ।
ஸதாசிவஸ்யங்ஙம "

என்று கூறிச்சேறலின் '(உமாபதியாய) சதாசிவனுக்குரிய பெயருஞ் சின்ன மும் உருத்திரமூர்த்திக்கு முற்றன' என்பதூஉம் பெறப்படுதலிற் 'சின்னம்' என்பது இம்மூர்த்திபத்தினியின் பெயர்களேயுங் குறிக்குமாகலின் உமாதேவியின் திருப்பெயர்கள் உருத்திராணிக்கு முற்றனவெனல் கொளக்கிடக்கின்றது. ஆகலினன்றே பின்றைக் காட்டப்படு பிரமாணமொன்றன்கண் அவள்பெயர் 'அம்பிகை' யெனவும் படிக்கப் படுவதாயிற்று. உருத்திராணியென்னும் பெயர் உருத்திரையெனவும்படும். பார்வதிப் பிராட்டியின் திருக்கலியாண தரிசனத்திற்காகப் போந்தாருள் இக்காலாக்கினி ருத்திரரைக் கூறுகின்ற சம்பவகாண்டத்து உo - ஆம் அத்தியாயம் (ஜாடகெபஃ - ஹாடகேசஃ) ஜடகேசரையும், (கூஷாண்ஜ்மனவஃ - க்ருச்மாண்டகணபஃ) கணதிபரான கூசுமாண்டரையுங் கூறினமையின் அவ்வுருத்திரருக்கிருக்கை, காலாக்கினிருத்திர புவனமுமா மென்பதுங் கொளக்கிடக்கின்றது. இப்புவனம், பொன்மயமான கோடி யோசனை யளவுடைத்தென்றும், ஆண்டனேக வுருத்திரர் சூழ்தரக் காலாக்கினிருத்திரர் பிரகாசிக்கின்றனரென்றுங் கூறுகின்ற மிருகேந்த்ராகமம்—

(கூ) (லவஃஷாவ்வதிஃஹமிதாநாம் யஷ்டிஹ ஃஷ்ருதிதெஜஸி ।
ஹயஃஸிவஃஷ்ருதெபஃகத்ஸ்ரா ஸம்ஹ கர்ஃஷாதொஷிதெவ்ரஹோஃ ॥

ஸர்வாத்வவர்த்திபூதாநாம் யஸ்மிந்துத்வ்ருத்தேஜஸி ।
பயமுத்பந்யதேசக்த்யா ஸம்ஹர்த்ர்யாசோதிதேப்ரபோஃ ॥)

"அவ்வுருத்திரர், ஈசனுடைய சங்கார சத்தியினா னடாத்தப்பட்டு மிகுதேச சுடையவராம் போது அத்துவாக்களி லுள்ள எல்லாவுயிர்கட்கும் அச்சமுண்டாகிறது." என்றோதுமாற்றானும் மேலே விளக்கப்பட்ட அழிப்புத்தொழிலுடை யுருத்திரமூர்த்தி யிவரேயெனல் கொளக்கிடக்கின்றது. அவாந்தரசங்கார மேற்படுமுன்னர் உலகங்களை நடாத்து நிமித்தம் ஒவ்வோரமையம் அரிபிரமர்களோடிருக்குந் தன்மையால் இம் மூர்த்திக்கிருக்கை குணதத்துவமுமாம். அந் நடாத்துதல்—

(௧௦) (காலாக்நிருத்ரோபகவாந் ஸஹஸாலோககாலநஃ ।)

"காலாக்நிருத்ரோபகவாந் ஸஹஸாலோககாலநஃ ।"

என்று போந்த சம்பவகாண்டம் உக - ஆம் அத்தியாயத்திற் புகன்று போதலி னறியக்கிடக்கின்றது. இக்காட்டனைத்துங் கண்ணுற்ற பின்னரும் இம்மூர்த்தி மும் மூர்த்திகளுளொருவனான குணருத்திரனல்லன்; பார்வதிபதியே குணருத்திரனென்னு மொழியெழின் அது, கட்டுரையோடு கூடாதொழி யிழிமொழியாவது மன்றி நியாயப் பிரமாணமாகவே இன்னும் எம்மாற் காட்டப்படுவனவற்றோடும் முரணும். அவை :—

(௧௧) (அததேவாமஹாதேவ மம்பிகாபதிமவ்யயம் ।

அததேவாமஹாதேவ மம்பிகாபதிமவ்யயம் ।)

"பிற்றைஞான்று தேவர்கள், அம்பிகாபதியு மழிவிலியுமான மகாதேவனை (அஞ்சலித்து)" என மேலைச் சம்பவகாண்டத்து ௩௭ - ஆம் அத்தியாயமும்,

(௧௨) (இதாநீமபியோஸோமம் ஸஸ்கந்தஞ்ஜகதீச்வரம் ।

இதாநீமபியோஸோமம் ஸஸ்கந்தஞ்ஜகதீச்வரம் ।)

"இஞ்ஞான்றும் உமையோடுங் கந்தனோடுஞ் சார்ந்துள்ள சகதீசன்" என அக்காண்டத்து ௩௬-ஆம் அத்தியாயமும்,

(௧௩) (குணத்ரயபதாதீதஸ்தமஃபாரேப்ரதிஷ்டிதஃ ।

குணத்ரயபதாதீதஸ்தமஃபாரேப்ரதிஷ்டிதஃ ।)

"சாத்துவிகம் இராசசம் தாமசமென்னு முக்குணங்கட்கும் அதீதமானவன், தமசுக்கு அப்பாற்பட்டவன்." பார்வதியை மணம்புரிவோன் என்று அக்காண்டத்துப் கச - ஆம் அத்தியாயமும், பிறவுமாம். இங்ஙனம், பார்வதிப் பிராட்டியின் றிருநாமம்— 'அம்பிகை' எனவும், 'உமை' எனவும் பெறப்படுதலோடு அப்பிராட்டியின் பதி யாவான் அழிவிலி, மகாதேவன், சகதீசன், திரிகுணாதீதன், தமசிற்கப்பாலுளோ னென்றுங் கூறப்பட்டன னென்பதூஉம் பெற்றாம். அவ்வீசன் 'உமாபதி' எனவுங் கூறப்படுவனென்பது, "உமாபதியின்பால் வரலாபமடைந்த சூரன்முதலிய அசுரர், சுரர்க்குச்செய்யும் வாதை" என்னும் பொருளில்—

(கச) (ஸவை ரொவெமொ வரஹாஹ ஸாவதேஃ)

"ஸை ரோத்வேகோ வரலாபாதுமாபதேஃ"

என்றேநிச்செல் சம்பவகாண்டத்து எ - ஆம் அத்தியாயத்தும் பெறுதும். நிருணிதனென்றலிற் குணருத்திர னிவனல்லன்; மூக்குணமூர்த்திகட்கும் மேலாய் அவர்களையாளுஞ் சதுர்த்தப்பொருளாயுளோனென்பாம். இதுபற்றிய விவரச்சுருதி—

(கடு) (ஸவெதம்அதர்வசிரம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதித
மேகமாசாஸ்யம் பகவத்தம்சிவம்)

"அத்வைதம்சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதித
மேகமாசாஸ்யம் பகவத்தம்சிவம்"

என்பதாம். இது பஸ்மஜாபாலோபநிஷத்தது. இத்திறச்சுருதி பலவும் சைவ சமயசரபத்துக் கைவல்லியகாண்டத்து அ - ஆம் அத்தியாயத் தெடுத்துக்காட்டினும், சம்பவகாண்டத்து ஈடு - ஆம் அத்தியாயத்தே சதுர்த்தப்பொருள் உமாபதியென்று பெறப்படலும் முன்னம் போந்துளது. 'சதுர்த்தம்' என்பது, (பிரமன் விட்டுணு உருத்திரனெனும் மூவர்க்கும் மேலான) நான்காவதெனும் பொருண்மைத்து. இச் சதுர்த்தப்பொருள் உமாபதியே யென்பது—

(கசு) (உமாஸஹாயம்பரமேஸ்வரம் ப்ரபும் த்ரிலோசனம்
நீலகண்டம்ப்ரசாந்தம் । த்யாத்வாமுநிர்கச்சதி
பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸஃ பரஸ்தாத் ।
ஸப்ரஹ்மஸிவஸ்ஸேந்த்ரஸ் ஸோக்ஷரஃ பரமஸ்வராட் ।
ஸ்ரீவவிஷ்ணுஃ)

"பிரபுவாய் மூக்கண்ணனுய் நீலகண்டனுய் மிகு சாந்தனுய்ப் பூதகாரணனுய்ச் சமத்தசாக்ஷியாய் உமையோடு கூடினவனுயுள்ள பரமேசுவரனே முனிவன் றியானித்து, (தமஸ்) இருளுக்கடக் தெய்துகின்றனன். பரமேசுவரனுயுள்ள அவனே பிரமன், அவனே சிவன் (= குண ருத்திரன்), அவனே யிந்திரன், அவனே யழிவிலி, அவனே சுவராட்டு, அவனே விட்டுணு." என்னும் யஜுர்வேத கைவல்யோபநிஷத் மந்திரங்களானும் பெறப்படுவதாயிற்று. இங்ஙனமே பிரமன் விட்டுணு உருத்திரனென்னு மூவரும், இந்திரனும் உமாசகாயனது விபூதியிலுளாரென்பது கணித்தே அவனேபிரமனென்றன் முதலிய பிரயோகங்கள் போந்தன காண்க. நீலகண்டன் (= நீகண்டன்)

என்பது, சதுர்த்தப்பொருட்கே யுரியபெயராய் கிற்றலுமறிக. கான்முகனைத் தியானித்துப் பிருதிவியையும், காராயணனைத் தியானித்து அப்புவையும், முக்கண்ணுடையபுருத்திரனைத் தியானித்துத் தேயுவையும், மகேசுவரனைத் தியானித்து வாயுவையும் வெல்லலாமென்று கூறும் யஜுர்வேத யோகதத்வோபநிஷத், மேல் ஆகாசத்தை வெல்லுமாறு—

(கஎ) (சுகாபெவாய ஊபொவ்ய ஹகாபொவரிமம்காழி।
ஸிந்ஷுவம்ஹாஷெவம் வெ்யோகாரம்ஹஷாமிலழி।
ஸஷ்டிகவம்காரம் யுதவாதெந்ஷெவாழி।
வஹுவகுய தம்வாளய்ம் உபவாஹம்ரீதொஅதழி।
வவஷாய யுதாகாரம் வவஷுஹரிஷணஹரிஷிதழி।

உோயுதெஹம்வாஷம் வவஷுகாரணகாரணழி ா
ஆகாசேவாயுமாரோப்ய ஹகாரோபரிசங்கரம்।
பிந்துரூபம் மஹாதேவம் வ்யோமாகாரம் ஸதாசிவம்।
சுத்தஸ்படிகஸங்காசம் த்ருதபாலேந்துசேகரம்।
பஞ்சவக்த்ராயுதம்வைளம்யம் தசபாஹும்த்ரிலோசரம்।
ஸர்வாயுதத்ருதாகாரம் ஸர்வபூஷணபூஷிதம்।
உமார்த்ததேஹம்வரதம் ஸர்வகாரணகாரணம்॥)

"ஆகாசத்தில் வாயுவையேற்றி, 'ஹ' காரத்தின்மேற் பிந்துரூபனுய் மகாதேவனுய் ஆகாசவடிவினனுய்ச் சதாசிவனுய்ச் சுத்தபடிகம் போல் வானுய்ப் பாலசந்திரனைச் சென்னியிலணிந்தவனுய் ஐம்முகமுடையனுய்ச் சௌமியனுய்ப் பத்துக்கையு மூன்று கண்ணு முடையனுய்ச் சருவாயுததாரணனுய்ச் சருவாபரணமு மணிந்துளனுய் உமாதேவியைப் பாதித்திருமேனியிலுடையனுய் எல்லாக் காரணங்கட்குங் காரணனுயுள்ள சங்கரனே"த் தியானிக்கவென்று தெரிப்பதாயிற்று. இவ்விவரம், பிரமாவுக்கு விட்டுணு கூறுவதாயுளது. இச்சுருதிப் பிரமாணத்தானும் அச் சதுர்த்தப்பொருள், வியோம அதிதெய்வ சதாசிவனுக்குரிய ஆகாசமான ஐந்தாந்தானத்தும் வைக்கப்பட்டு, அஃதவ்வுமாபதியேயெனவும், சருவகாரண காரண னெனவும் பாத்துவக்தாபிக்கு மாற்றினினிது பெற்றும். உமார்த்த தேஹன் = உமையொரு கூறுடையான். இம்மூர்த்தியே தமிழ்மறை முதற்கண்ணே—

(கஅ) "தோடுடைய செவியன்"

எனக் கூறப்பட்டனன். தோடு = பெண்காதணி = ஓலை. இதனுல், தமிழ்மறையெங்கணும் வைத்து இனிது துதிக்கப்பட்ட தெய்வம் பார்வதி பதியேயன்றி வேறில்லையென்பாம். உரிய பிற காட்டுக்களும் வந்துழிவந்துழிக் காணலாம். மறை, 'உமாஸஹாயன்' என்றுரைத்தது—

(கக) (ஸாம்பஸ்ஹவெ.ழ்வுரெழ்வுரஃ - ஸாம்பஸ்ஸர்வேச்வரேச்வரஃ)

"அம்பிகையோடுள்ள சருவேசுவரன், ஈசுவரன்." என உபப்பிரங்கணத்தும் பெறப்படுகின்றது. இஃது உமாபதியுடைய நுதற்கண்களினின்று குமாரன் தேஜோரூபமாக வெளிப்பட்ட வமையம் விளம்பப்பட்ட தென்பதைச் சம்பவகாண்டத்து உரை யும் அத்தியாயத்திற் கண்டுகொள்க.

(உ0) (தாரோஹவ்ரூவதீவேம பஞ்சீரோநு,மிரிஜாவதிஃ ।
தாமாஷப்ருவதீமேவம் சக்திமாங்கிரிஜாபதிஃ ।

(உக) கணுகுயெகுயாஹரஷெ ஸுஹுவிஷுஷுஹொஷ்வாநு ।
உஹாஞுஞீஃம்பிகாணு வாஆஷெவீம்ஹாஷ்வாதீழி ॥
தாஷெவ்வம்யொஜ்யதத்தீ ஹுரஷிஷுக்ஷாஞுயாநுகுரோகு ।
காஷயெதிசிவாஜ்ஞாதாம் வஹாஜீபரிஷஹொஷ்வரீ ॥
தயெவ் தீஞுத்ஷுதாஉ்ய தஹுதீஷவிதாஉ்ரபிஃ ।
ஹுரஷிஷுக்ஷாஞுயமுணாநு காஷயாஹாஷதெஸ்ரீஹிஃ ॥

அண்டத்ரயேத்வயாஸ்ருஷ்டே ப்ரஹ்மவிஷ்ணுமஹேச்வராந் ।
மஹாலக்ஷ்மீமம்பிகாஞ்ச வாசார்த்தேவீம்ஸரஸ்வதீம் ॥
தாஸ்தைஸ்ஸம்யோஜ்யதத்பத்நீஸ் ஸ்ருஷ்டிரக்ஷாலயார்க்ரமாத் ।
காரயேதிசிவாஜ்ஞாந்தாம் வஹார்த்தீ சிரஜேச்வரீ ॥
ததைவந்நீந்த்ஸமுத்பாத்ய தச்சக்தீரபிதாந்ருஸிஃ ।
ஸ்ருஷ்டிரக்ஷாலயகுணைஃ காரயாமாஸதைஸ்த்ரிபிஃ ॥

(உட) ஷுஉ்ஸுதெஉ்ஷுதஹாஉ தஷ்ஹீஷ்ஹுதவ்யுஎஷ்டிதழி ।
வஹாபிவவ்யுஎஹாஉ நா நயொவி-உ்யுதெஷிடா ॥
சுதெய்ஷாஞாஉபிஷ்டாய உ்டாதீஷ்ஹுவ்யுஎபிவஃ ।
குஜ்ஞாவயதிதெஸுா ந ஷ்வுவ-ஹாநாஞொகுயஹாஉஷழி ॥
சுஹுதெவஹஷஷ்ஹொஹ ஞாவயொவி-உ்யுதெஷிடா ।
சுநஷுாஹொய்தீதெவஷ்டா நஞ்ஜ்ட-ஹாநாயயளபிவஃ ॥

ருத்ரமூர்த்தேச்சதக்ரம தச்சிஷ்நம்தஸ்யசேஷ்டிதம் ।
ஸதாசிவஸ்யயக்ரம நாநயோர்வித்யதேபிதா ॥
அங்யேஷாந்தாமதிஷ்டாய ததாதீஷ்டம்ஸ்வயம்சிவஃ ।
ஆஜ்ஞாபயதிசேசாநஸ் ஸர்வாநாலோக்யஸாதரம் ॥
அஹமேவஹரஸ்ஸோஹக் நாவயோர்வித்யதேபிதா ।
அநுசாஸ்யேதிதேவஸ்தா நந்தர்த்தாநாயயெளசிவஃ ॥

(உங) (சுழீகுஷ்ணெஷஃஉ்ஷுமிதா யெயஃம்பாஃஷஹஃஷுஹவா ।
தீவ்ஷுரெதிஷஃசவ்யாதா வுஷ்வாணெக்ஷுஷுகாஃஉ்ஷுகா ॥

அக்நிகுண்டேஸமுத்பூதா யேயமம்பாம்சஸம்பவா ।
த்ரிபுரேநிஸமாக்யாதா புஷ்பபாணேக்ஷுகார்முகா ॥)

(உ0) "சத்திமா ஞன (கிரிஜா பதிஃ =) பார்வதிபதி, (திரிபுரையாகிய) அச் சத்தியை நோக்கிக் கூறியருளல்" — (உக) "சத்தீ! இஞ்ஞான்று மின்னலுண்டாக்கப் பட்ட முத்திற அண்டத்திலும் பிரமவிட்டுணு (மஹேச்வர =) உருத்திரர்களையும்,

வாக்குத்தேவியாய சரசுவதி, மகாலக்குமி, (அம்பிகை =) உருத்திராணியென்பார் கீயுஞ் சிருட்டித்து மூறைப்படி நாயகன் நாயகியாகச் சேர்த்துச் சிருட்டி திதி சங்காரங்கள் ஒழுங்காக நடைபெறுமாறு செய்தியென ; அவ்வீசுவரியும் அச்சிவ கட்டளையிணைச் சிரமேற்கொண்டு அம்மூவரையுஞ் சிருட்டித்து அத்திற வலிமைகளையு மவர்கட்குப் பயிற்றுவித்துச் சிருட்டி திதி சங்காரங்களை அன்னோரானடாத்துவாளா யினள்." (உஉ) " சதாசிவனுடைய பெயரும், அடையாளமும், தொழிலும் உருத்திர மூர்த்திக்கும் போகதன : அவ்விருவர்க்கும் பேதமின்று : ஆயின், சிவன் மற்றையரினும் வேருனவனை யிருந்துகொண்டு வேண்டுவார் வேண்டுவதை யீந்தருள்கின்றனன். இங்ஙனம் ஈசானன் அத்தேவரினவரையுங் கண்ணுற்று, யானே (ஹரன் =) உருத்திரன் : உருத்திரனேயான் : இருவருக்கும் பேதமின்றெனக்கூறி ஆணைவழி நடக்கவென்றருஞ்ஞாபித்து மறைந்து சென்றனன்." (உஊ) " (சிவபிரானது சருவசங்கார ஓம) அக்கினி குண்டத்தினின்றும் (அம்பா =) பார்வதியின் அமிசமாய்த் தோன்றி மலர்க்கண கரும்புவில் என்பவற்றோடு மிளிரும் அச்சத்தியின் பெயர் திரிபுரை." என்று போந்த உபதேசகாண்டத்து எச-ஆம் அத்தியாய மியம்புகின்றது. இவ்வியம்புதலிற் 'சதாசிவன்' என்பதுமுதல் 'ஈந்தருள்கின்றனன்' என்பதீறுகவுள்ள கிளவிகள் புராணமுனிவர் கூறுவன வாயுள்ளன. இவ்வாற்றுணும்,

(உச) " ' ஆதி யும்மர னுயயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய பரமனென்
ரோதி யுட்குழைத் தேத்தவல் லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே.'

(உரி) ' பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம் ' "

என்று திருநாவுக்கரையனர் தமிழ்மறையும்,

(உகூ) " ' தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னுய்யின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை '

(உள) ' மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்தின் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின் தெளிவே சிவனே ' "

என்று மாணிக்கவாசகனர் தமிழ்மறையும் ஒதுமாற்றுணு மூவரினு மேம்பட்ட சதுர்த்தப்பொருள் பார்வதிபதியென அசையாமுனே யடிப்பது பெற்றும்.

(உஅ) (நமோஷ்டூமிதஃயெதஃஹ்ய் விஷ்டிஷ்டாயபரோரயெ ।
நமோஷ்டமூர்த்தயேதுப்ய மிஷ்டிக்காயயமாரயே ।)

"அட்டமூர்த்தீ! நினக்கு நமற்காரம் : தக்கயாகத்தைத் தடிந்தவனே! நமனைக் கொன்றவனே! நினக்கு நமற்காரம்." என்று விட்டுணு முதலிய தேவர்கள் மகாதேவனை வணங்கினரென்று மேலே காட்டப்பட்ட சம்பவகாண்டத்து எ-ஆம் அத்தியாயமும்,

(உகூ) (விஸாய-ஜாதமேகம்த்வாம் பஸுபாஸவிமோக்ஷகரம்ப்ரபும் ।
பஸுநாம்பதிமீசாநம் பசவஸ்மஃ ப்ரபோதவ ॥)

விசார்யாஜாதமேகம்த்வாம் பந்தமோக்ஷகரம்ப்ரபும் ।
பசூநாம்பதிமீசாநம் பசவஸ்மஃ ப்ரபோதவ ॥)

"பந்தத்தினின்று விடுதலைசெய் பிரபுவும், பசுக்கட்கெல்லாம் பதியும், ஈசானனும், பிறப்பிலியு மீயொருவனேயென விசாரித்தறிந்துகொண்ட யாங்கள், பிரபுவே! நினக்குட்பட்ட பசுக்களாயுள்ளோம்." என்றுபிரமதேவருடைய மானசபுத்திரர்களாய சனகாதிமுனிவர்கள் கைலாசம்போந்து பரமசிவ சன்னிதிமுன்னே நின்று கூறினரென்று அக் காண்டத்து கூ-ஆம் அத்தியாயமும், கல்லாலடிக்கண்ணே ஈசன் தக்ஷிணமூர்த்தியாகி யோகிருந்த ஞான்று—

(ஙஂ) (யேஷாம்யேஷாம்அஜோகேஷாம் யேயகுதாதகுஹாதே ।
ஹீவாம்ஹாவொததேஷாம்ஹி தத்தயக்வாஹுமாஅமே ॥)

யேஷாம்யேஷாம்சலோகேஷாம் யேயஆத்மாநஆஸதே ।
ஸ்த்ரீபும்பாவோகதேஷாம்ஹி தத்மயத்வாச்சராசரே ॥)

"சராசரப் பிரபஞ்சமா யுள்ள வெல்லாம் (ஆண்மாவில்=) சிவசொரூபத்திலிருக்கின்றமையின், ஓவ்வோருலக வுயிர்கட்கும் ஆண்பெண்ணென்னும் பான்மை யடங்கிவிட்டது." என்று அக்காண்டத்து எ-ஆம் அத்தியாயமும், பார்வதியைத் நிருமணம் புரிந்து கொள்வோ னியல்பினை யெடுத்துரைக்குமிடத்தே—

(ஙஎ) (ஸவஉவ்ருஷ்ஷ்டுரபம்ஹஃ வரிவஃணஉஷ்டுராசிவஃ ।
ஸர்வப்ரபுஸ்தராசம்புஃ பரிபூர்ணஸ் ஸதாசிவஃ ।)

"சருவப்பிரபுவும், சம்புவும், பரிபூரணனுமாயுள்ள சதாசிவன்." என்று மேலேக்காண்டத்துப் கஙூ-ஆம் அத்தியாயமும்,

(ஙஉ) (யஷ்மாத்பரங்நாப்யபரங் நாணீயாங்நோமஹாம்ஸ்ததா ।)

"தனக்கு மேலாக எப்பொருளுமிலான் : தன்னினு நுண்ணிதும் பெரிதுமிலா வொருவன்." என உமாதேவியை மணம்புரி சிவனைச் சுட்டிக்கூறினர், இவரானுக்குச் சத்தவிருடிகளுள் அங்கிராவெனும் பெயரினரென்று மேலேக்காண்டத்துப் கசு-ஆம் அத்தியாயமும்,

(கக) (ஸவ-ஸுகத-ஸ்ருஷ்டாவொ ஸாஷ்யகத-ஸ்ருஷ்டாரமிக் ।
ஸிவொஹெஷ்வரஸ்ஸம்ஹ நீ-ஸ்ரீவஷ்ணொ அமஃ ।
கஜய-ஸ்ரீவஸம்ஸ்ருஷ்ட வாஸ்துரூபாய ஸஹஃ ॥
ஸர்வகர்த்தாமஹாதேவோ காஸ்யகர்த்தாஸ்திருத்ரஸித் ।
ஸிவோமஹேச்வரச்சம்புர் நீலக்ரீவஸ் த்ரிலோசநஃ ।
அந்தர்யாமீபரம்ப்ரஹ்ம பராத்பரதரச்சஸஃ ॥)

"எல்லாரையும் படைத்தகருத்தா அம்மகாதேவன் : அவனேப்படைத்த கருத்தா யாண்டுமில்லை : மகேசுவர சம்புசத்த வாச்சியனும், நீலகண்டனும், முக்கண்ணனுப், சிவனெனப்படுவோனும், (எல்லா ஆன்மகோடிக ளகத்துமுள்ள) அந்தரியாமியும், பரப்பிரமமும், பராபரனெனப்படுவோனு மவனே." என்று தாக்ஷாயணி நாயகனுகிய பரமசிவனேச் சுட்டியுரைத்தனர், தக்கனுக்குத் தநீகிமுனிவரென்று தக்ஷகாண்டத்துப் கக-ஆம் அத்தியாயமும், (உ) எடுத்துக்காட்டில் "நீ யொருவன் பரப்பிரமமன்றி வேறு நிதுமின்றே" என்னுங் கௌசிகனேத் தருகின்ற கச-ஆம் அத்தியாயமும் பகர்ந்தவா றெல்லாங் கருதில், தடத்தலக்கணத்தாலுஞ் சொரூபலக்கணத்தாலும் பார்வதி பதிக்கு முயர்வாக ஒருதெய்வமில்லையெனுஞ் சித்தாந்தம் ஓவாது சித்திக்கின்றது. இன்னுமிச் சித்தாந்தம்—

(கச) (உமாபதயேநமஸ்தஸ்து பதயேநமோநமஃ
ஜகந்மாத்ரேவமஸ்தஸ்து ஜகதாம்பிதரௌநமஃ ।
ஹரிஷ்டிஸ்திதிநாஸேஷு ஹரயேஹரமூர்த்தயே ।
ஸர்வெஷாமெவ கர்த்ரேஸ்ரீ ஸர்வாயஸர்வவேதஸே ॥

உமாபதயேநமஃ பதயே நமோநமஃ
ஜகந்மாத்ரேநமஃ ஜகதாம்பிதரௌ நமஃ ।
ஹரிஸ்திதிலயேஷு ஹரயே ஹரமூர்த்தயே ।
ஸர்வேஷாமெவ கர்த்ரேஸ்ரீ ஸர்வாயஸர்வவேதஸே ॥)

"உமாபதிக்குப் பசுபதிக்கு நமற்காரம்: சத்தியவசனத்திற் சத்தியமாயுள்ள பரப்பிரமமும், கிருட்டிணபிங்கல நிறத்தோடுகூடிய புருடனும், ஊர்த்துவரேதசை யுடையவனும், விசுவரூபமுடையவனுமான நெற்றி விழியனுக்கு நமற்காரம்: எல்லா முருத்திரனே அத்திற வுருத்திரனுக்கு நமற்காரம்." என்று தைத்தீயாருணசாகை நாராயணம் கவிறவினலும்,

(கஞ) (நதஸ்யகச்சித்பதிரஸ்திலோகே நசேசிதாநைவ நதஸ்யலிங்கம் ।
நகாரணம்கரணதிபாதிபோ நசாஸ்யகச்சிஜ் ஜநிதாநசாதிபஃ ॥)

நதஸ்யகச்சித்பதிரஸ்திலோகே நசேசிதாநைவ நதஸ்யலிங்கம் ।
நகாரணம்கரணதிபாதிபோ நசாஸ்யகச்சிஜ் ஜநிதாநசாதிபஃ ॥)

" அவ்வுருத்திரனுக்கு மேலான பதியுமில்லை : காப்பவனுமில்லை : உற்பத்தித் தானமுமில்லை : அவனே காரணன் ; கரணதிபதிகட்கு மதிபன் : அவனே யுண்டுபண்ணு பவனும் அவனுக்கதிபனுமில்லை." என்று பஞ்சருத்ரோபநிஷத்தி லொன்றுயுள்ள சுவேதாச்வதரஞ் சொல்லலினாலும்,

(ஈ.சு) (ஸஹ²ஸ்ரொஹ²ரோதா ஈஶ²ரஸ்தெஜ²வதீ)
" பஹு²ஸோபமாகர முமாம்ஹைமவதீ "

என்று இளத்துந் தலவகாரமெனுங் கேநோபநிஷத்தில் இந்திரன் முதலிய தேவர்களது அறிவின கருவத்தை யடக்கவேண்டுமென அக்கினி வாயுவென்பார் முன்னிலைக்கண்ணே எரிக்கவு மசைக்கவு மொண்ணு வொருதரும்பினை யெறிந்து நின்று மறைந்த யக்ஷவடிவுளானையே சருவசத்தியுடைப் " பிரமம் " என்று (*அவ்வடி வுடையானேடு வந்து ஆகாசத்தே பிரகாசித்துக்கொண்டிருந்த) ஹைமவதியான உமையவள் இந்திரனுக்கறிவித்து மறைத்தனளென வியம்பொரு செய்தியில்—அந்த ஹைமவதி (= பார்வதி), பிரமமெனப்படுவது தன்கணவனுகிய சிவனேயென வறிவுறுத்த ; அத்தேவர்களு மறிந்தார்களென்பதற்கு மூரிய உபப்பிருங்கணம்—

(ஈ.எ) " காரணக் கடவுள் யாவன்மற் றெனக்குக்
கணவரு ளியாரோன் யாவன்
ஆரண முணராண் யாவன்மற் றவனே
யாகிய வியக்கனுய் வந்தான் "

என்றியம்பிச் செல்லுஞ் சூதசங்கிதையின் சாம சாகோபநிடத தாற்பரிய வத்தியாயத்திற் (பார்வதி திருவாக்காகப்) பெறப்படுதலினாலும் மதகையுறுகின்றது. இத்தரும்பின் செய்தியாலும் யாவும் பார்வதிபதி செயலெனல் சித்திப்பதாயிற்று. காட்டு உஅ-ற் போந்த அட்டமூர்த்த விவரம் முன்னரேயே கூறியாயிற்று. பத்தர்க ளுடைய இன்னலொழித்தருளலின் இறைவனுக்கு (ருத்ரஃ) உருத்திரனென்னு மொரு பெயர் யோகமாகவும் ருடியாகவு மெய்திற்றெனத் தகூஉகாண்டத்துப் கூ-ஆம் அத்தியாயம் பகர்தலினால் ஈச-ஆங் காட்டுழை உருத்திரனெனவந்ததஞ் சிவபெருமான் திருப்பெயரேயாம். இப்பெயரே மூவருள் அழிப்புத்தொழின் மூர்த்திக்கு மெய்திற்றால். இவ்வாறெய்தினமை நுதலியே அந்தச் சமத்துவராகித துரியமூர்த்தியினை மகாதேவ் னென வழுத்தாநின்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்—

(ஈ.அ) (ஸஹாஸ்ர ஶீர்ஷ²ஃ) " மஹாருத்ரஃ "

என்று மியம்புவ தாயிற்றென்ற லியைபு. விட்டுணு வராகமாகியும் பிரமா அமிசமாகியும் அடிமுடிதேடி யறியாவண்ணஞ் சோதித்தானுவாய் நிமிர்ந்துநின்ற

*இச்செய்தி, " உம்பர்மீதே, கொன்றைவேணியன்ற னேர்பா லுறைதருகுவதற் கெங்கை—மன்றலங் கோதை வல்லி மற்றவர் காண வந்தாள் " என்னும் வாயுசங்கிதைச் செய்யுட்பகுதி யாலு மறியப்படும்.

ஈசன் இவனே : இவ்வீசனுக்கு நும்புத்திரியாகிய உமையைப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுமினென்று ஏழிருடிகளு ளொருவராய அங்கிரா மலையரசனுக்குக் கூறியசெய்தியும் மேலேபோந்த சம்பவகாண்டத்துப் கக-ஆம் அத்தியாயம்—

(௩௯) (நயத்பாதௌவராஹேண சக்யதே)

"நயத்பாதௌவராஹேண சக்யதே"

என்றியம்பிச்செல்வுழி யறியப்படுகின்றது. விட்டுணுவும் பிரமாவும் அடிமுடி தேடி யறியாவாறு சோதிலிங்கமாய் நின்றவன் உமாதேவியை மணம்புரிவோனென வறியப்படும் இச்செய்தியைச் சைவபுராண வாயுசங்கிதையின் உத்தரபாகத்து உஎ-ஆம் அத்தியாயமும் —

"உறைதரு சிவன்றன் வலமிட முளத்தின் மற்றிவ ரடைவினி லுதித்தார்
முறையின்முத் தொழிலு மியற்றுவ ரிவரு ளுருத்திரன் முதன்மையா யுறைவான்
மற்றிவர் தமக்கு மேலதா யுறைந்து வயங்கியே மன்னலாற் சிவனை
உற்றுயர் பரம காரண மென்றே யுரைப்பரா லுரைத்தவை யெல்லாந்
தெற்றெனத் தெளியா ராகியே நிற்பச் சிறந்தநான் காமறை சிவனே
இற்றைநா ளிந்த விலிங்கமா யெழுந்தா னுமதுளந் தெருட்டவென் றதுவே."

என்று கூறுவதாயிற்று. அவ்விலிங்கந்தன்னில் அவ்வரி பிரமர்கள் சிவனையும் உமாதேவியையுந் தரிசித்தனரென்பதாக "மேலோர், ஊக்கியே யுணருஞ் சிவனையு முமையா டன்னையு முணர்ந்துறக் கண்டார்" என்றும் அவ்வத்தியாயங் கூறிற்றால். இவ்வாற்றானும்,

(௪௦) "வேதமடி யுண்டன விரிந்தபல வாகம
விதங்களடி யுண்ட னவொரைம்
பூதமடி யுண்டன விநாழிகை முதற்புகல்செய்
பொழுதொடு சலிப்பில் பொருளின்
பேதமடி யுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலர சன்றன் மகளார்
நாதனம லன்சமர வேடவடி வங்கொடு
நரன்கையடி யுண்ட பொழுதே."

எனப் பாரதம் பகர்கின்றபடி வேடவடிவில் அருச்சுனன்கை வில்லடி பட்டஞான்றும், பிட்டுக்கு மண்சுமந்தவடிவிற் பிரம்படி பட்டஞான்றும், பிராட்டி திருக்கைகளாற் றிருக்கண்கள் புதைக்கப்பட்டஞான்றும் (காட்டு ௩௦- லுள்ளவாறு) தக்ஷிணாமூர்த்தியாய் யோகிருந்தஞான்றும் பார்வதிபதியின் பரிபூரண வியாபகத் தன்மை வெளிப்பட்டுளது. இதனையே—எடுத்துக்காட்டுக்களுள்—(௩௫) காரணனென, (௧௭) சருவகாரணகாரணனென, (௩௪) விசுவரூபனென, (௨௮) அட்டமூர்த்தியென, (௩௩) அந்தரியாமி யென, (௩௧) பரிபூரணனென வருவனவும், சம்பவகாண்டத்து ௩௫-ஆம் அத்தியாயத்தில்—

(சக) (ஸிவொஹந்நிஷ்ஷ வ்யேண-ஃ
நக்ஷ
சிவோஹந்நிஷ்கள பூர்ண:)

"யான் நிட்கள பூரணசிவன்" என மலைமகளே கோக்கி மலைமகண்மணாளன் வழங்கினனென வருவதும், பிறவும் உறுதிப்படுத்தும். இவ்வாற்றானும் மேலே கூறிப் போந்தபடி பார்வதிபதிக்கு மேலாக ஒரு தெய்வமில்லையென்னுஞ் சித்தாந்த மெறுழுறு கின்றதன்றே.

ஆயின், பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவனென்னும் பெயரிய ஐவருள் உருத்திரனுட், உருத்திரனின் மேம்பட்ட மகேசுவரனும், சதாசிவனும் யாவரெனின்,—சோறும்.

உருத்திர னெனப்படுவோன் குணருத்திரனே. இம்மூர்த்தி விருத்தாந்தம் முன்னரேயே கூறியாயிற்று; மறவற்க. மகேசுவர னெனப்படுவோன் அட்ட வித்தி யேசுவரருண் முதன்மை படைத்தவனும் ஈசுவரதத்துவ வாசியுமான அனந்த னென்பதும், சதாசிவ னெனப்படுவோன் சாதாக்கியதத்துவ வாசியான அணுசதாசிவ னென்பதும் ஆகமநூல்களிற் பெறப்படுகின்றன. பிரமன்முதலிய ஐவரும் பிருதி வியாதி பஞ்சபூதங்கட்கு அதிதேவதைக ளென வைதிக நூல்கள் வழங்குகின்றன; கள-ஆம் எடுத்துக்காட்டாய சுருதியைக் கருதுக. படைப்பு முதலிய பஞ்சகிருத்தியம் புரியுமாறு பராசத்தியே வாமையாய்ப் பிருதிவிமயியாயும், சேட்டையாய்ச் சலரூபிணி யாயும், ரௌத்திரியாய் அக்கினி ரூபையாயும், காளியாய் வாயுவாகாரையாயும், கலவி கரணியாய் ஆகாசரூபையாயு நிற்கின்றனளென்றல் பொருந்தச் சித்தாந்தசாராவளியின் ஞானபாத வியாக்கியானத்தே வரையப்பட்டமையு மிதனைத் தழுவிக்கொள்வதாகவே யுளது. பூதமைந்தும் மேலே கூறப்பட்ட உமாபதியின் அட்டமூர்த்தங்களுள் அடங்கு வனவாம். பிரமன்முதலிய மூர்த்தி ஐவரும் அணுக்களேயல்லாற் சிவனுகிய சம்புவல்லர். சம்புவாகிய பார்வதிபதியின் றிருப்பெயர்களேயே அம் மகேசுவர சதாசிவர்களும் பெற்றுள்ளார். அவ்விருவர்வதிக்துள்ள தத்துவத்தானங்களும் அப்பதியின் ஆளுகை யிலேயே யுள்ளன. அவரு மப்பதிக்குடம்பாக வுள்ளார். ஆகலினன்றே அப்பதியினே அப்பெயர்கள் பிடித்தும் விளக்கக் காண்கின்றனம் வைதிக சாத்திரங்கள். யாங்ஙனம்? எனின்,—எடுத்துக்காட்டுக்களுள்—(எ) (ககூ) ஈசுவரன், (ககூ) சருவேசுவரன், (கஉ) சகதீசன், (ககு) பரமேசுவரன், (உ உ) (உகூ) ஈசானன், (உசு) ஈசன், (ஙூ) மகேசுவர னெனவும், (உ) (ஃ) (கஎ) (உஉ) (ஙக) சதாசிவனெனவும், (உஉ) சிவனெனவும் வயங்கு முறையினென்க. இப்பெயர்களோடு வேறு பல்பெயர்களும் விளங்கக் கூறுதல்—

(சஉ) (ஸிவ:வயுரவதிஷ்டாம் ஷ்டாகயுக்தாந்து மொவய:।
பூதஸ்ஜொவிஷ்ணுவாக்ஷோ நீலகண்ட்ஸ்தொஉமொவய:॥
ஹவொஹமெ.ஸஉஹாதொவொ ஹமொவயு உ உசாவதி:।
வஸவாதீ நிகாரோதி வஜ்ரிவ்யாதஸ்ஜாவதெ:॥

சிவஃ பசுபதிச்சம்புச் சங்கரச்சந்த்ரசேகரஃ ।
ம்ருத்யுஞ்ஜயோ விரூபாக்ஷோ நீலகண்டோமஹேச்வரஃ ॥
பவோபர்க்கோமஹாதேவோ ஹரோருத்ரஉமாபதிஃ ।
ஏவமாதீநிகாமாநி ஸ்கந்திவ்யாந்யுமாபதேஃ ॥)

"சிவன், பசுபதி, சம்பு, சங்கரன், சந்திரசேகரன், மிருத்யுஞ்சயன், விரூபாக்கன், நீலகண்டன், மகேசுவரன், பவன், பர்க்கன், மகாதேவன், அரன், உருத்திரன், உமாபதியென்பனமுதலிய திவ்விய நாமங்கள் உமாபதிக்குள்ளன." என ஸ்காந்த மஹாபுராண உபதேசகாண்டத்து உரு-ஆம் அத்தியாய மியம்பலிற் பெறப்படுகின்றது. இத்திற நாமாதி யாவும் உமாபதி யொருவனுக்கேயுளவென்பது நூலியே வடமொழி நிகண்டினரும்—

(சக) "சம்பு, ஈசன், பசுபதி, சிவன், சூலி, மஹேச்வரன், ஈச்வரன், சர்வன், ஈசாநன், சங்கரன், சந்த்ரசேகரன், பூதேசன், கண்டபரசு, கிரீசன், கிரிசன், ம்ருடன், ம்ருத்யுஞ்ஜயன், க்ருத்திவாஸன், பிநாகி, ப்ரமதாதிபன், உக்ரன், கபர்த்தி, ஸ்ரீகண்டன், சிதிகண்டன், கபாலப்ருத், வாமதேவன், மஹாதேவன், விரூபாக்ஷன், த்ரிலோசகன், க்ருசாநுரேதஸ், ஸர்வஜ்ஞன், தூர்ஜடி, ஹரன், ம்ருடஹரன், பர்க்கன், த்ரியம்பகன், த்ரிபுராந்தகன், கங்காதரன், அந்தகரிபு, க்ரதுத்வம்ஸி, வ்ருஷபத்வஜன், வ்யோமகேசன், பவன், பீமன், ஸ்தாணு, ருத்ரன், உமாபதி, அஷ்டமூர்த்தி, மஹாகாலன், மஹாடன்."

என்னும் பெயர்கள் கூறுவாராயினர். "பார்வதிபதியே பரமேசுவரன்" என்னும்பொருள் போதர—

(சச) (வாரிதுயபாவுஷாதராயாம் வாவுதயாம்வாமதெஷ்வரஃ ।)
"பரிசர்யாப்ரலக்காயாம் பார்வத்யாம் பரமேச்வரஃ ।"

என்று சம்பவகாண்டத்து உள-ஆம் அத்தியாயங் கழறுதலியு மீண்டுக் கருதிக் கோடல் வேண்டும். இப்படி யொருபெருந்தெய்வ முடிவுகோடலே உலகெலா மேன்றுகொள் கடவுணிலையாம். இங்ஙிலையினின்றும் வேறுபடல் சைவமாகாது. அவ்வணு மகேசனுகிய அனந்தனுக்கும் அணுசதாசிவனுக்கும் ஆணவமலமிருத்தலின் அவர்கள் செய்தொழில்கள் அவர்கட்குச் சுதந்திரமாகாமே அவர்களே கடாத்து நின்மல சிவனொருவனுக்கே சுதந்திரமாமென்பதூஉம் ஈண்டு நிச்சயிக்கற்பாற்றே. என்னே? "அனந்தாதி வித்தியேசுரர் முதலிய அதிகாரிகட்குச் சருவஞ்ஞத்துவாதி நீர்மையிருப்பினும் மலாமிசமிருத்தலின் அதனினின்றுமவர்களே விடுதலே செய்சத்தி மோசிகை யெனப்படுகின்றது: அத்தானமும் மோசகமெனப்படுகின்றது." எனும் பொருளில்—

(சரு) (வாவ-ஜ்ஞாவாதியொமெவி நியொஜ்யக்ஷேராம்ஸதஃ ।
வ்யாவ்ருத்தத்ருய்யாவாவ்ய மொசிகாதத்வதஸ்ததஃ ।)
"ஸர்வஜ்ஞத்வாதியோகேபி நியோஜ்யத்வம் மலாம்சதஃ ।
ப்ரமார்ஷ்டிதத்யதாஸ்ய மோசிகாதந்பதஞ்சதத் ॥"

என்னுஞ் சுலோகம் மிருகேந்த்ராகம அத்வப்ரகரணத்திலும், "மந்திரேசுரர் மந்திரமகேசுரர் அணுசதாசிவர் முதலிய அபரமுத்தர்க்கு" என வரையப்பட்ட பொருளில்—

(சசு) "வித்தைகள் வித்தையீசர் சதாசிவ ரென்றி வர்க்கு"

என்னுஞ் சொற்றொடர் சிவஞானசித்தியார் க-ஆஞ் சூத்திரத்து உடு-லும்,

(சஎ) "இந்தச் சதாசிவ தத்துவத்திலே அட்சர சொரூபமாய்ச் சகளமாயிருக்கிற அபரநாதமும் அபரவிந்துவும் அணுசதாசிவர்களுட னடங்கும்."

என்னுங் கிளவிகள் சிவப்பிரகாசத்து உ-ஆஞ் சூத்திரத்து ஊ-ன் விசேடவுரையிலும் பிரயோகிக்கப்பட் டிருக்கின்றமையின்; அயன், அரி, உருத்திரன், மகேசுவரனென்பாரும் மாய்வாரென்றோது வாயுசங்கிதையின் பூருவகாண்டத்து கூ-ஆம் அத்தியாயம்—

"மறிமா னேந்து சதாசிவனு மாய்வான் சிவன்ற னேர்பகலில்"

என்று கூறுகின்றமையின், உமாபதியி னுருவுடையான் அணுசதாசிவனென்பது கருதி 'மறிமானேந்து சதாசிவன்' எனுந்தொடர் பிரயோகிக்கப்பட்டதுபோலும். அநந்தனுக்கு முயர்வுளதாக அணுசதாசிவன் கூறப்படுவன்.

"கறைமலர்க் கமலத் தயனரி வார்ந்த களிர்சடை யுருத்திர னென்றுங்
குறைவற வுறையு மகேச்சுரன் மறைகள் கொழித்திடுஞ் சதாசிவ னென்றும்
அறைதரு மைந்து மூர்த்தமுண் டாமர லண்ணலுக் கன்றியும் வேறுப்
உறைதரு பஞ்சப் பிரமமென் றைந்து மூர்த்தமுண் டவையெடுத் துரைப்பாம்."

என்றும்,

"நிலவொளி மணிக ணூலினிற் கோத்த வைத்தென நிகழ்த்துபே ருலகம்
மலிமகள் பாக னட்டமூர்த் திகளின் மன்னிடும்"

என்றும் போந்த வாயுசங்கிதை பஞ்சப்பிரமவட்டமூர்த்த முரைத்த வத்தியாயத்தே பகர்கின்றபடி இவர்களே யாள்வோனும் அன்னவர் தொழின்முறையிற் சம்புமகேசுவரனெனவும், சம்புசதாசிவனெனவுங் கூறப்படுவனுமினும் பொருள் வேறுபாடின்றி விளங்குவன். ஆகலின், உருத்திரன் மகாருத்திரனெனினும், ஈசன் மகேசுவரனெனினும், சதாசிவன் சிவனெனினும் விகற்பில்லையாம்.

(சஅ) (ஸுவட்டமக்வா,தஹொஸுவஸ்ரீ காயிஷ்டாதம்விஹம்தஸ்ரீதே।
ஸர்வகத்வாம்மஹேசஸ்ய நாதிஷ்டாநம்விஹம்யதே।)

'மகேசசத்தவாச்சியனுக்கு மேலாக ஒரு பரிபூரணனிலன்' என்னும் பொருளிலே "மகேசன் சருவவியாபியாதலின் யாவையும் அதிட்டியாதிரான்." என்னும் மிருகேந்த்ராகம பாசலக்ஷணப்ரகரண மொழிகளும், எடுத்துக்காட்டு

உஉ-ற் பார்வதிபதியினையே குறித்துச் "சதாசிவன்" "சிவன்" "ஈசானன்" எனவரு பெயர்களும், ௩௪-ல் அவ்வுமாபதியினையே குறித்து, (ஸர்வோவைருத்ரஃ) "எல்லாம் உருத்திரனே" எனவரு சுருதிவசனமும் இதனை ஆதரிக்கின்றன. இப்பெயர்கள் பற்றி முன்னருங்கூறுமியைபில் யாஞ்சிறிது கூறினாமன்றே. பிரமவிட்டுணு உருத்திரர் கட்குரிய ஊர்திகள், உறையுள்கள், சென்று மீடல் விளக்குஞ் சரித்திரங்கள் பண்டைப்பனுவல்களில் யாம் படித்துணரக் கிடக்கின்றபடி அவ்வனந்தன் அணுசதா சிவனென்னும் பெயரினர்க்குங் கிடக்கக் கண்டிலம்; பார்வதி மகா திருக்கலியாண மகோற்சவங் காண்பான் வந்த எண்ணிலாத் தெய்வப் பெயர்களுள் இவர்கள் பெயர்கள் இலவாகலின், இவ்விருவருண்மை தத்துவார்த்தமாய் வாயுவைப் போலும் ஆகாயத்தைப்போலு மிருக்குங்கொல்? மற்றெத்திறமா யிருக்குங்கொல்? என்னும் ஆசங்கையில் யாமொன்று மறியக்கூடவில்லை; அவ்வுமாபதி திருவுள்ளமே யறிந்திருக்கலாம். மேல், அவ்விவரங்காட்டுஞ் சாத்திரங்கள், ஈசுவர சாதாக்கிய தத்துவத்தானங்களி லிருக்கலாமென வொரு சமாதானஞ் சாற்ற வெனினும், அம் மூர்த்திகளின் பதங்களடைதற்கு இஃதிஃதாமென்னுந் தீக்ஷைகளையும், கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரமென்னும் ஆறத்துவாக்களையு மெடுத்துரைக்கும் ஆகமம், அவர் சரித்திராதி விவரமட்டுமே கூறாதிருக்க நியாயமுண்டோ? எனக் கடாவி அது மறுக்கப்படும். இதுவேயுமன்றி, உருவருவ சாதாக்கிய சதாசிவ வடிவாஞ் சிவலிங்கத் தினையும், அதிரகசிய துவாதசாந்த நிலயத்தினையு மெடுத்தியம்புமாறு இங்குலாத்தருநூல் அச்சரித்திராதி விவரமட்டுங் கூறிற்றிலை யென்றக்கால் அது பொருந்துமதர் யாண்டை யது? என்றுங்கடாவி மறுக்கப்படும். பார்வதிபதிக்கு வேறாயொரு பெரிய சிவ மூர்த்தியை வைக்க அவாக்கொள்வார் கூற்றும் இம்மறுப்பின்கட்பட்டொழிவதேயாம். அவர், போந்த காட்டுக்களுள்—௩, ௪, கக, கஎ, ௪உ-ன் "மகாதேவன்" எ-ற் "சருவ நாயகன்" கஎ-ற் "சருவகாரண காரணன்" கக௬-ற் "சமத்தசாக்ஷி" உ௬-ன் "முதல் வன்மூர்த்தி" உ௦-ற் "சத்திமான்" ௩௬-ற் "பிரமம்" ௩௩, ௩௪-ற் "பரப்பிரமம்" ௩௩-ற் "பராபரன்" "அந்தரியாமி" க௫-ல் "அத்வைதம் சதுர்த்தம் சிவம்" உ-ல் "நீ ஒருவன் பரப்பிரமமன்றி வேறுசிறிது மின்றே." ௩உ-ல் "தனக்கு மேலாக எப்பொருளுமிலான்: தன்னினு நுண்ணிதும் பெரிதுமிலா வொருவன்." ௩௩-ல் "எல்லாரையும் படைத்த கருத்தா அம்மகாதேவன்: அவனைப்படைத்த கருத்தா யாண்டுமில்லை." ௩௫-ல் "அவ்வுருத் திரனுக்கு மேலான பதியுமில்லை: காப்பவனுமில்லை: உற்பத்தித் தானமுமில்லை: அவனை யுண்டுபண்ணுபவனும் அவனுக்கதிபனுமில்லை." உ௬-ற் "பந்தத்தினின்று விடுதலைசெய் பிரபுவும், பசுக்கட்கெல்லாம் பதியும், ஈசானனும், பிறப்பிலியு நீ ஒருவனேயென விசாரித்தறிந்துகொண்ட யாங்கள், பிரபுவே! நினக்குட்பட்ட பசுக்களாயுள்ளோம்." என்பன தூக்கியுணர்ந் துய்திபெறூஉமதர் பற்றுவாராக. இவ்வாற்றான், வேதம் உபப் பிருங்கணம் முதலிய பிரமாணங்களிற் கண்ணுறப்படுகின்ற நிக்கிரக அனுக்கிரக சரித்திரமனைத்தும் ஸ்ரீமத்-பார்வதிநாதனுடைய மா மகிமையி லுள்ளனவென்பது தெள்ளிதாம். இதனை, ஸ்ரீமத்-ஸ்காந்த மஹாபுராண உபதேசகாண்டத்துத் கூ௦-ஆம் அத்தியாயம்—

(சகூ) (சூத்ரநாமுஹவாத்யாந்து லிங்கோத்பவஉதாஹ்ருதஃ ।)

"ஆத்மநாமுத்பவார்த்தந்து லிங்கோத்பவஉதாஹ்ருதஃ ।"

என்ப தெழுவாயாக,

(தஸ்மாதேதாமஹேசஸ்ய மூர்த்தயஃபஞ்சவிஞ்சதிஃ ।)

"தஸ்மாதேதாமஹேசஸ்ய மூர்த்தயஃபஞ்சவிஞ்சதிஃ ।"

என்ப திறுவாயாகப் பன்னும் பாங்கரிலே

(க) இலிங்கோற்பவம்,
(உ) சுகாசனம் (= உமாதேவியை மணம்புரிய விரும்பல்),
(௩) உமாசகம்,
(௪) கலியாணசுந்தரம்,
(௫) அருத்தநாரீசுவரம்,
(௬) சோமாற்கந்தம்,
(௭) சக்கரப்பிரதானம்,
(௮) திரிமூர்த்தி,
(௯) அனாதி யரியருத்தம்,
(௧௦) தக்ஷிணாமூர்த்தம்,
(௧௧) பிக்ஷாடனம்,
(௧௨) கங்காளம்,
(௧௩) காமசங்காரம்,
(௧௪) காலசங்காரம்,
(௧௫) சலந்தரசங்காரம்.
(௧௬) திரிபுரசங்காரம்,
(௧௭) சரபம்,
(௧௮) நீலகண்டம்,
(௧௯) திரிபாதம்,
(௨௦) ஏகபாதம்,
(௨௧) பைரவம்,
(௨௨) விருடபாரூடம்,
(௨௩) சந்திரசேகரம்,
(௨௪) நிருத்தம் (= ஒருகாறூக்கியாடு நடனம்),
(௨௫) கங்காதரம்

என்னும் இருபத்தைந்தும் மகேசமூர்த்தங்களென விதிக்குமாற்றானு முணரலாம். இவ்விருபத்தைந்தனுள் ௪, ௮, ௧௭, ௧௯, ௨௧-ல் உள்ளன நீக்கிக் கசாரி,

வீரபத்திரம், கிராதம், சண்டேசானுக்கிரகம், விக்கினப் பிரசாதமென்பன கூட்டி வாதுளோத்தர சுத்தாக்ய தத்வபேத படலம் வழங்குகின்றது. உமாபதியின் அளப்பிலா மகிமையுஞ் செயலு மிங்ஙனமாத லுண்மையின், மேலேபோந்த மிருகேந்த்ராகம உபோத்காதப்ரகரணத்தில்—

(அ) (தெஹ்யோவமதஸ்தூகுஜ்யோதி ஜ்வாலாலீடஸ்மரத்ருமம் ।
ததாவுமாபதிர்மஹ்யம் ஸஹஸ்ரைர்பவனம்மிதைஃ ॥)

"தேப்யோவகத்யத்ருக்ஜ்யோதி ஜ்வாலாலீடஸ்மரத்ருமம் ।
ததாவுமாபதிர்மஹ்யம் ஸஹஸ்ரைர்பவனம்மிதைஃ ॥"

"நேத்ராக்கியால் மன்மதனை யெரித்த உமாபதிதேவர் அந்த அனந்தாதிகளிடத்தில், (காமிகாகம மாகிய) இதையுபதேசம்பெற்றுக்கொண்டு பதினாயிரங் கிரந்தமாகச் சுருக்கி எனக் குபதேசித்தார்."

என்று பரத்துவாசரென்னும் மா இருடியைநோக்கி யிந்திரனியம்பினனென் னுஞ் சுலோகமு முரையும், இவ்வாகமத்திற்கு மூலாகமமெனப்படு காமிக தந்த்ராவதார படலத்திற் கௌசிகர் முதலிய மா இருடிகள், சிவ முகோற்பவ சாத்திரமாகிய ஆகமத் தைத் தங்கட்குக் கூறியருளல் வேண்டுமென விண்ணப்பித்துக்கொண்ட போது அவ்வாறருளிச் செய்தவர்—

(இ) (கைலாஸதக்ஷிணைஸ்ருங்மை நாநாஸ்சர்யஸமன்விதே ।
ப்ரவ்ருத்தவடவ்ருக்ஷாத்தச் சாயாச்சன்நேதிவிஸ்தருதே ।
வ்யாக்ரசர்மபரீதாநே பீடேரத்நோபசோபிதே ।
தேவதாநவகந்தர்வ ஸித்தவித்யாதராதிபிஃ ।
ஸேவ்யமாநம்மஹாதேவம் ஸ்ரீகண்டம் விச்வநாயகம் ।
---------- ஈச முமாபதிம் ॥)

"கைலாச தக்ஷிணசிகரத்திற் பற்பல ஆச்சரியத்துட னேய்ந்தோங்கிய ஆலமர நீழலினன் மூடுண்டதாய்ப் பெரிதுமகன்றதாய்ப் புலியதள் விரிக்கப்பட்டதாய் இரத்தி னங்கண் மிளிர்வனவாயுள்ள பீடத்தின்கண் அமரர், அசுரர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலினோர் தன்னைச் சேவிக்க மகாதேவன், சிகண்டன், விசுவநாயகன், ஈசன், உமாபதியென்னும் பெயர்கள் பிரகாசிக்க எழுந்தருளினனென்." என வுணர்த்து தலும், சிவாக்கிர யோகிகளது சிவஜ்ஞானபோத வியாக்கியானத்தில்—

(உ) (ப்ரத்யேகஷ்டாவிஂஶதி ஸம்ஹிதாதீதவத்ஸ்ரீ வித்யேசைஃ
ஸ்ரீகண்டாதிக்ரமேணாவதாரஃ

ப்ரத்யேகமஷ்டாவிஞ்சதி ஸம்ஹிதாதீதவத்பிர் வித்யேசைஃ
ஸ்ரீகண்டாதிக்ரமேணாவதாரஃ)

"(மஹௌகிகக்கிரமமாவது) தனித்தனி இருபத்தெட்டுச் சங்கிதைகளையும் ஓதிய வித்தியேசரால் ஸ்ரீகண்டர் முதலியோரின் முறையால் அவதரித்தல்." என்னும் வடமொழிகளுந் தமிழ்மொழிபெயர்ப்பும், சர்வான்ம சம்பு வென்பாரால் வடமொழியி லியற்றப்பட்ட சித்தாந்தப்பிரகாசிகை யென்பதன் றமிழ் மொழிபெயர்ப்பில்—

(எ) "ஆணவம் கன்மம் என்னும் இருமலம் உள்ள பிரளயாகலருள் மலபரிபாகம் உடையோராய் நிரதிகரணராய்ப் பரமசிவன் அனுக்கிரகம் செய்யப்பெற்றவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரர். இவருள்" "ஸ்ரீகண்ட உருத்திரர் மத்தியப் பிரளய காலத்தில் அராகதத்துவத்திலிருப்பர். பின்பு படைப்புக்காலத்தில் அசுத்தாத்துவாக்களைப் (=பிரகிருதியிலுள்ளவைகளை) படைத்துப் பிரமாவும் விண்டுவுஞ் செய்யுஞ் சிருட்டிகளை அதிட்டித்து நின்று கீழ்ப்பட்ட புவனேசுரரையும் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் பிரமாண்டம் முதலிய அண்டங்களையும் உண்டாக்குவர்." "நூறு உருத்திரர் பாஞ்ச பௌதிகமான பிரமாண்டத்திற்குக் காவலாயிருப்பர்." பிரமவிட்டுணுக்க ளுடனே கூட குணதத்துவத்திலிருக்கும் ஸ்ரீகண்ட உருத்திரர் மத்தியப்பிரளயம் வரையும் அதிகாரஞ் செய்து கொண்டிருந்து பின்பு அந்தப் பிரம விட்டுணுக்களையும் ஒடுக்கிக்கொண்டு தாம் மிச்சிராத்துவாவில் (=அசுத்தமாயையில்) அராகதத்துவத்திலிருப்பர். இவரோடேகூட வீரபத்திரரும் இருப்பர். பிரகிருதி மத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். கலைமத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர்." "இந்த நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் மலபரிபாகத்தால் தீக்கைபெற்றுப் பரமசிவனருளாற் பதங்களைப்பெற்றவர்." "வித்தியேசுரர் சரீரம் வைந்தவம் (=சுத்தமாயை). நூற்றுப்பதினெட்டு உருத்திரர் சரீரம் மாயேயம் (=அசுத்தமாயை)." "சமயதீக்கை பெற்றோர் உருத்திரபதமடைவர். விசேடதீக்கை பெற்றோர் மகேசுரபதமடைவர்."

என்னு மாற்றங்களும், தமிழ்ச் சிவஞானபோத மாபாடிய மென்பதிற் "சங்கார காரணனாயுள்ள முதலை" என்பது நுதலிச் செய்தவுரையில்—

(ஐ) "அயன்மாலொடுங்கூடக் குணதத்துவத்தில் வைகிப் பிரகிருதி புவனாந்தஞ் சங்கரிக்குங் குணிருத்திரனை யன்று." "பசுவர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குவமுடையவன் சீகண்டருத்திரன் என்றுஞ் சைவாகமங்களெல்லாம் ஓதுதலின் மகேசுரமூர்த்தி இறுவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்திரவடிவம் ஏனையவை அன்னவல்ல." "சீகண்டருத்திரன் அயன்மா லிருவர்க்கு மேலாய்ச் சைவத்தி னெய்திச் சமயதீக்கை பெற்றோரால் வழிபடுகடவு ளாயினான்."

என்னுந் தொடர்களும், சிவஞான சித்தியார் சுபக்கத்தில்—

(ஒ) "கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாரு

னெண்ணிவேண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்."

என்னுஞ் செய்யுட்கட்போந்த தக்ஷிணாமூர்த்தம், காமசங்காரம், உமாசகம், கலியாணசுந்தரமென்னு மூர்த்தங்கள் திரிமூர்த்திகளுளொருவரான சீகண்டருத்திரருடையனவேயெனக்கொண் டெழுதிய வுரையில்—

"சீகண்டருத்திரர்க் குரிய வடிவங்களும் பெயர்களுந் தொழில்களும் முதல்வனுக்கும் ஒப்பவுளவென்பது வாயுசங்கிதையுட் கூறப்படுதலின், ஈண்டுக்கூறியனவெல்லாம் முதல்வனுக்குரியனவேயாமெனக் கொள்க. அற்றாகலினன்றே ஈண்டுக்கூறிய வடிவங்களெல்லாம் மகேசுரமூர்த்த மிருபத்தைந்த னுள்வைத் தெண்ணப்பட்டன."

என்னுங் கிளவிகளுந் தீட்டப்பட்டிருக்குமா றெவன்? எனின்,—கூறுதும். தக்ஷிணாமூர்த்தியா யெழுந்தருளினவனே காமநாச மூர்த்தியுங் கலியாணசுந்தர மூர்த்தியு மாயினன். அத் தக்ஷிணாமூர்த்தியின் பரிபூரண வியாபகத்தன்மை, ௩௦-ஆங் காட்டுழை உணரக்கிடக்கின்றது. இதனையும், பிற காட்டுக்களையும் ஒருப்பட்ட வுள்ளத்தோடாயு முண்மையுணர்வினர் அம் மிருகேந்திரக் கூற்றினையும், ஏனையவற்றுட் பார்வதிபதியை யிழுக்கத்துட்படுத் துரைப்பனவற்றையும் யாங்ஙன மொப்புவர்! ஒப்பார், ஒப்பார், ஒருஞான்று மொப்பாரென்க. காட்டு ௪௮-ன் அடிப்புடை— "பார்வதிபதிக்கு வேறாயொருபெரிய சிவமூர்த்தியை வைக்க அவரக்கொள்வார் கூற்றும் இம் மறுப்பின்கட்பட் டொழிவதேயாம்" என யாம் முடிவு மொழிந்து "சருவகாரண காரணன்" "சமத்த சாக்ஷி" "முதல்வன் மூர்த்தி" "சத்திமான்" "அந்தரியாமி" "அத்வைதம் சதுர்த்தம் சிவம்" "நீ ஒருவன் பரப்பிரமமன்றி வேறு சிறிதுமின்றே" "தனக்கு மேலாக எப்பொருளுமிலான்: தன்னினு நுண்ணிதும் பெரிதுமிலா வொருவன்." "எல்லாரையும் படைத்த கருத்தா அம்மகாதேவன்: அவனைப் படைத்த கருத்தா யாண்டுமில்லை" என்பனவும் பிறவுந் தூக்கி யுணருமாறு கூறியுள்ளன யாவையும் ஈண்டும் ஞாபகப் படுத்தினாம். (அ) அம் மிருகேந்த்ராகமம்—

(ஜ்வலல்லலாடத்ருக்தக்த ஸ்மரம்ருத்யுயசோப்ரு தஃ ।
புரீயசோவதீஸர்வ ரத்நஜாருத்ரஸேவிதா ॥)

"சொலிக்கின்ற நெற்றி விழியினால் (ஸ்மரஃ =) மன்மதனையும், (ம்ருத்யுஃ =) யமனையு மெரித்துப் பெருமைபெற்ற ஈசானனுடைய யசோவதியென்னும் பட்டணம், எல்லா இரத்தினங்களு மிழைக்கப்பட் டுருத்திரர்கள் சேவிக்கவுள்ளது." என அத்வப்ரகரணத் தறைதலிற் காமசங்கார காலசங்கார மூர்த்திகளைத் திக்குப்பாலகரு ளொருவரான ஈசானரென்று கூறுவதாயிற்று. இந்த "ஈசானர், சூரபன்மன் விரும்பாக் காலத்தும் பற்பல வின்பப்பொருள்களா னவனை யுபசரித்துக்கொண்டு எஞ்ஞான்றும் வாயில் காப்போராய கணங்களுடன் சேவை செய்கின்றனர்." என்பதை,

(சுவ்ரயி-ஃதொவ்ஃதெமஸாஹொ ஃதாஹாஹொறவ்ஊவ்ஹ்ஃ: ।
சுதாஹொசுவ்ஹறஹாஸாவொஃழ்ஃ ஃமஃணவெஸ்ஹவ்ஸவ்ஃழ்ஹா ॥
அப்ரார்த்திதோஸ்ய சேசாநோ ஸாகாபோகஸ்ஊகப்ரதஃ ।
அங்வாள்தேத்வங்வஹம்த்வார்ஸ்தைர் கணைஸ்ஸஹஸர்வதா ॥)

என்னுஞ் சம்பவகாண்டத்து டு-ஆம் அத்தியாயச் சுலோகத்தினறியலாம். இவ்வீசானர், திருமுருகப்பெருமா னெழுத்தருள் செவ்வி சூலமேந்திச்செல் பணியு முடையா ரென்பதற்குரிய மேற்கோளும் மேலே வந்துளதால். இவ்வாறு, அனக்தன் பால் ஆகமங் கேட்டுக்கொண்டவ னென்று கூறிக்கொள்ளப்பட்ட உமாபதி, தண்ணி யிழிநிலைப்படுத் தோதத்தான் இந்திரற்கு இவ்வாகம முபதேசித்தான்போலும்! எத்தற வுண்மை! வண்மை!! ஒண்மை!!! ஐம்முகப் பெருமானையும் அறுமுகப்பெருமானையும் பசுவர்க்கத்தில் வைத்துக்கூறி மேலொருசிவன் கோடற்கு இவ்வாகமக்கூற்றுக்களே முதற்கண் எற்பட்டனவாகலாம். என்னே? ஆகமங்களுண் முதற்கணிற்குங் காமிகத் தினை இது சார்ந்ததாயிருத்தலின். ஈங்குக் காட்டப்பட்ட சுலோகங்களையும், வேறு சில மாற்றங்களையு நுதலியே சிமார்த்தர், அதனபாட ஆகமங்கள் பிரமாணமல்ல வென்கின்றனர் போலும். அவர்சொற் செல்லுமளவே செல்லுமன்றி ஏற்புடைய வற்றிற் செல்லாது. இனி, (இ) அக்காமிகக் கூற்றினையும் விசாரிப்பாம். காமிகாதி உஅ - ஆகமங்களையும் மேலுள்ள சிவன், தனக்குச் செவியறிவுறுத்தருளினனென்று உமாபதி கூறிய செய்தி அங்ஙனமொன்றுமின்று; அவ்வாகமங்கள் சதாசிவனுடைய ஈசானமுகத்திற் றோன்றினவென்ப தங்ஙனுண்டு. சதாசிவசத்த வாச்சியனும் ஐம் முகத்திருமேனியனுமாயுள்ளோன், பாலசந்திர சேகர உமாபதியேயென்றற்காம் பிரமாணம் கள-ஆங் காட்டும், வேறு சிலவுமாமாகலின் அவ்வாகமங்கடோன்றிய முகம், உமாபதியுடையதேயெனக் கோடலாம். இதன்கணுள்ள சம்புசத்தத்திற் சூரியோனும் உமாபதியே யெனற்கு ஊக, ஊஊ, சஉ, சஊ-ஆங் காட்டுக்களுமுள. இவ்வதர்விடுத்து வேறு கூறினே அது, போந்த பரத்துவப் பிரமாணங்களோடு முரணும். வாயுசங்கிதை யின் உத்தரகாண்டத்தில் "உற்றகம் மாக மத்தை யுணர்தலே ஞான மாகும்" எனவரு செய்யுட்பகுதியில் உமாபதியின் றிருவாக்காக 'நம் ஆகமம்' எனவருவது யார் பாலிருந்தும் பெறப்படாத நமது சொந்த ஆகமமெனும் பொருள் பயத்தலும் இங்குச் சிந்திக்கற்பாற்றே. இவ்வாகமம் தத்துவார்த்த ஞான நூலேயன்றிக் கன்மநூலன்று; 'ஞானமாகும்' என்றலின். (உ) சிவாக்கிர யோகிகளது வியாக்கியானத்திலும், (எ) சித்தாந்தப் பிரகாசிகை யென்பதிலும் போந்த விடயங்கள், அந்தக் காமிக உபாகமத்தை யும், அதனே முன்னிட்டுவந்த வேறுசில ஆகம வசனங்களையுங் கதானுகத நியாயமாகத் தழீஇ வந்தனவா யெண்ணப்படும். ஆயினும் இவற்றுட்போந்த சேகண்டருத்திரரை, மூவருண் முதன்மைபடைத்த குணருத்திர மூர்த்தியெனக்கொளின் விரோதமின்றும். வேறுகொளின் விரோதமாம். காலாக்கினிருத்திரர் நிரிபுண்டர தாரண விதியினைப் போதித்தா ரென்று (சு) சுருதி கூறலுமிக்கொள்கையினே ஆதரிக்கும். பவளவாய் மணிப் பார்வதிபதி மலமிலான், மாயா குணமிலா னென்பதை, எடுத்துக்காட்டு உ-ல்

"நின்மலன்" சை-ல் "அமலன்" கூ-ல் "தமசுக்கு அப்பாற்பட்டோன்" "நிர்குணாதீதன்" என்றுள்ளனவே காட்டும்; வேறுபிறவுங் காட்டும். இச் சிவபெருமான் திருமேனி மாயேயமன்று, பிரணவமேயென்பது பின்றை விளக்கப்படும்: ஆண்டுக் கண்டு தெளியலாம். பிரமாவும் விண்டுவுஞ் செய்யுஞ் சிருட்டிகளே அதிட்டித்து நிற்போன் உருத்திரனெனினும், மகாருத்திரனெனினும் விரோதமின்றும். என்னே? அவ்விருநிற மூர்த்திகட்கும் வடிவு, பெயர், தொழிலென்பன அபேதமாகவே கொளக்கிடத்தலின். இச் சித்தாந்தப்பிரகாசிகை யென்பதிலே—

> "சுத்தவித்தியா தத்துவத்தில் ..... நந்திமுதலிய கணநாதர் எண்மரும், இந்திரன் முதலிய உலகபாலகரும், வச்சிரம் முதலிய இவர்கள் ஆயுதமுமிருக்கும்."

என்னு மொழிகள் வரையப்பட்டன. இன்ணம் நந்திதேவரை ஒரு மல விஞ்ஞானகலரென நவில்வோர், அத்தேவருடைய தலைமைக்கடவுளாய பார்வதிபதியை இருமலப் பிரளயாகலரென வரைசெய்துரைத்தா ரென்பதுதான் யாங்ஙனம் பொருந்தும்! ஈண்டக் கணநாதர் வேறெனுங் கூற்று மெழும்போலும். ஆயின், அவருடைய வரலாறு எப்புராணத்துளதுகொல்? எனுங்கடாவு மெழுமன்றே. எப்படியாயினும் பார்வதிபதியின் திருச்சன்னிதியி லிருக்கின்ற திருநந்திதேவரை விஞ்ஞானகலரென்பது வழாத் தீர்வையேயாம். இது நிற்க. (ஐ) மாபாடியம் (ஒ) சித்தியாருரை யென்பவற்றேய்ந்த செய்திகள், மேலே கூறிப்போந்த சித்தாந்தப்பிரகாசிகை மிருகேந்திர மென்பன பிடித்துத் தெரிக்கப்பட்டனவெனவே இங்ஙன் யாம் நிச்சயிக்கின்றும். என்னே? அவற்றுள்,

> காமசங்கார மூர்த்தி,
> கரசசங்கார மூர்த்தி,
> சிகண்டன், ஸ்ரீ கண்ட உருத்திரன்,
> பிரமவிட்டுணுக்களே யதிட்டித்திருத்தலின் மும்மூர்த்திகளுளொருவன்,
> சுணைதத்தவத்தி லிருப்பவன்,
> இருமலப் பிரளயாகலருட் பரிபாக முடையராய்ச் சிவானுக்கிரகம் பெற்ற ககஉ - உருத்திரரு ளொருவன்,
> சமயதீக்கை பெற்றோர் உருத்திரபதமடைவர்

எனக் காணப்படுவனவே இப்பாடியத்தும், இவ்வுரையகத்துங் குணிருத்திரன், பசுவர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குவமுடையவன், சிகண்டருத்திரன், சமயதீக்கை பெற்றோரால் வழிபடு கடவுள், சிகண்டருத்திரனுக்குரிய தக்ஷிணமூர்த்தம், காமசங்காரம், உமாசகம், கலியாணசுந்தரமென்னும் வடிவங்களும் எனவியையுமாறு தெரிக்கப்பட்டமையின். சருவகாரணகாரணனுயுள்ள பார்வதிபதியைப் பசுவர்க்கத்திற் பிரளயாகலரு ளொருவனுக வரைந்தமை கருதி, எங்கெஞ்சம் பெரிதும் வருந்துகின்றது:

அஞ்சுகின்றது: யாதுசெய்தும்! சிமார்த்தருள் வடநூல் வல்லாராய்த் தென்னூலு முணர்ந்தாராய்ச் சிவபத்தி மீக்கொண்டாரா யிருந்தவொருவர், இற்றைக் கிருபதாண்டு கட்கு முன்னே இச் சென்னையிற்செய்த தமது பிரசங்க ஆரம்பத்தே "நமப்பார்வதீ பதயே" என மங்களகர மதுரம் பழுத்துத் தேன்றுளிக்க வழுத்தியதைத்தானே தத்தம் பிரசங்க முதலிய முக்கிய காரியங்களின் எழுவாய், இடைவாய், கடைவாயென்னு மூவிடத்தும் அனேகர் கூறிக்கோடலையும் யாம் இஞ்ஞான்றுங் காண்கின்றனம். மைத்த மனத்தால் அதனையும் பொச்சாந்து இருட்டறையின் மலடுகறந் தெய்ப்பார் போன்று தாங்கற்ற நரிநயப்பு வழியேநின்று பார்வதிபதியைப் பசுவர்க்க இருமலப் பிரளயாகலரு ளொருவனென வாய்கூசாது கூறுவாருமுளரே. அவர் தம்மைச் சைவரென்றுங் கூறிக்கொள்கின்றனரே! சைவரென்னுமுயர்வு அந் "நமப்பார்வதீ பதயே" என்னு மங்கலமொழி மந்திரத்தினை முன்னங் கொடுவந்த முனிவர்க் கன்றோ சாலும்; முருகவேள் பத்தியு மங்ஙனமுண்டாம்.

'மலாமிசமுடைய அனந்தன்' என்னு மகேசுரனுக்கும் மேலாகச் சாதாக்கிய சதாசிவ னிருக்கின்றனனெனச் சாத்திரஞ்சாற்ற; "மகேசுரமூர்த்தி இறுவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்திரவடிவம் ஏனையவை அன்னவல்ல" என்று முடிவு மொழிந்து கோடலாற்றான் யாது பயன்? இருமலத்தினின்றுமெடுத்து ஒரு மலத்தில் வைத்திடலே பயன்போலும். "சீகண்டருத்திரர்க்குரிய வடிவங்களும் பெயர்களுந் தொழில்களும் முதல்வனுக்கும் ஒப்பவுளவென்பது வாயுசங்கிதையுட் கூறப்படுதலின்" என்பதையும் விசாரிப்பாம். முதல்வனென்றது மகேசுவரனாதல் வேண்டும்; "ஈண்டுக் கூறிய வடிவங்களெல்லாம் மகேசுரமூர்த்த மிருபத்தைந்தனுள் வைத் தெண்ணப் பட்டன" என்னுந்தொடரு மங்ஙனுளதால். சதாசிவனிருத்தலின் மகேசுரனைக் கூறிக்கோடல் எப்பயனதாமென்பதூஉம் மேலே கூறியாயிற்று. இம்மகேசுவர சதாசிவர்களும் மாய்வார்களென்று வாயுசங்கிதை வழங்குதலை அவ்வுரையாசிரியர் கண்டிது கூறினரோ? காணாது கூறினரோ? என்னும் ஐயமுந்தோன்றுகின்றது. இதுவேயுமன்றி, உருத்திரனுக்கு மகேசுவரனுடைய பெயருஞ் சின்னமு மெய்தியன வென்னும் பொருள் பயவாமே சதாசிவனுடைய பெயருஞ்சின்னமு மெய்தியன வென்னும் பொருள் பயக்கின்ற ௮-ஆங் காட்டின் முன்னே—'மகேசுரமூர்த்தி இறுவாயான திருமேனியே சிவனுக்குச் சுதந்திரவடிவம் ஏனையவை அன்னவல்ல' என்னும் அம்முடிவு பயன்படாதொழிதலுங் காண்க. சதாசிவப்பெயரைச் சொந்த மாகவுடைய பார்வதிபதியின் பெயரும் அடையாளமும் பெற்றவுருத்திரனே உளன்; அனந்தப்பெயரிற்குரிய மகேசுரனுடைய பெயர் முதலியனபெற்ற வுருத்திரன் இலன்; அனந்தனைச் சதாசிவனென நவிறலும் வழக்கின்க ணின்றென்பனவே இங்கே நுட்பமாக வுணரக்கிடப்பன. இன்னும், காட்டு ௨௨-ற் சதாசிவனுடைய ஆக்குவய மும், அடையாளமும், தொழிலும் உருத்திர மூர்த்திக்கு மெய்தின: அவ்விருவர்க்கும் பேதமின்று என உபப்பிருங்கண முரைத்தவாறும், காட்டு ௨௦-ற் போந்த (கிரிஜா பதிஃ=) பார்வதிபதி, தேவரனைவரையு நோக்கி யானே உருத்திரன்: உருத்திரனே யான்;

இருவர்க்கும் பேதமின்றெனக் கூறி ஆணைவழி நடக்கவென் றுணர்ந்தாபித்து மறைத்து சென்றனனென்னுஞ் செய்தி அங்ஙனம் பெறப்பட்டவாறு முய்த்துணர்வார்க்குப் பார்வதிபதியின் வடிவமும் பெயரும் தொழிலுமுடையோனே குணருத்திரனென்பது இனிது புலனும். காமனையெரித்துக் கலியாணசுந்தரனுமான பார்வதிநாயகனே இக் குணருத்திரத் தானத்தில் வைத்துக்கூறுந் சித்தியாருரை மீண்டுப் பொருந்துமாறு கண்டிலம்; "இருவருக்கும் பேதமின்று" எனக்கூறியருளினவன் பார்வதிபதியாதல் கண்ணுக. வாயுசங்கிதை வழங்கலு மிதற்கு வேருகாது. என்னே? அதன் பூர்வபாகத்துப் கக-ஆம் அத்தியாயத்திற் போந்த 'மஹேச்வரன்' என்னும்பெயர் பார்வதிபதியினதாதலின். இப்பெயர் பார்வதிபதிக்கு மேலாயுள்ள அனந்தனுக்கே கோடல்வேண்டு மென்னுங் கருத்தான் வரையப்பட்ட அவ்வுரைப்பொருள், அவ்வத்தி யாயச் சுலோகங்களுள்—

(வனவംகலெஷ்கலெஷ் ஸுஸ்விஷ்ணுஹெஸ்வராः ।
வாஸுதெணஜாயதெ வாஸுதெவஜயெஷிணः ॥
ஏவம்கல்பேஷ்கல்பேஷ் ப்ரஹ்மவிஷ்ணுமஹேச்வராः ।
பரம்பரேணஜாயந்தே பரம்பரஜயைஷிணः ॥)

"இவ்விதமாகக் கற்பந்தோறும் பிரமா, விட்டுணு, மகேசுவரர்கள் ஒருவரை யொருவர் வேறல்கொள்ளவெண்ணி ஒருவர்பாலொருவ ருதிக்கின்றனர்." என வருதலே மறுக்கும். என்னே? மூவருளொருவனை குணருத்திரனும் மகேசுவர னெனப்பட்டமையின். இம்மூவரும் உமாபதியின் றிருமேனியினின்று முதித்தவ ரென்பது இச்சங்கிதையிலும் போதரல் காட்டு கூகூன் அடிப்புடை நோக்கியறிக. இதுவேயுமன்றி, தமிழ்மொழி பெயர்ப்பாயுள்ள வாயுசங்கிதை பூருவகாண்டத்து ஆ-ஆம் அத்தியாயத்தில், மலைமகண் மணாளன்முன் மும்மூர்த்திகட்கும் படைப்பு முதலிய முத்தொழிலும் அருள்புரிவன் : அவனே யனைவர்க்குங் கடவுளென்ப துணர்த்துவான்—

"வந்தே யுதித்த மூவர்க்கு மாரு நின்ற முத்தொழிலுஞ்
சந்தார் புளக முலையுமையா டலைவனைய சிவன்றனே
கந்தா வருளா லருள்புரிவா னுடி யுணர்வா னுக்தெரியிற்
கந்தார் களிற்றி னுரிபோர்த்த வவனே யெவர்க்குங் கடவுளே."

என்று கூறுதலு முணர்ந்துகொள்க. அவ்வுரை இவ் வாயுசங்கிதை பிடித்த மையின், ஆகமத்திலுரைக்கிசைவ நில்லாபோலும். மகேசமூர்த்தம் இருபத்தைந்தும் பார்வதிபதி யுடையனவென்பதை மேலே பிரமாணங்கொடே காட்டி நிறுவினும். இப்பதியின் ஆர்ந்த அதிகாரத்தானமும், ஆன்மகோடிகளை யருணிலைநிறுவி யாளுந் தானமும்,

(அகீ ஐமணவெவ்வாலுஷ் ஷெவிஷ்டவிதாயகெः ।
கெலுவொஅதயாதது ஷோகெலுவவவுதெ ।

ஸதஸெஅஹோரஸோள அகண்டாடீரளதஸா ।
ஸிவலொகெஅவாஸ்திஸ்ய ஸதாதகாரவ்யஸ்ரூவழி ।
கணேஷ்டிதவ்யாதிதாரீபஸ: ஸ்ரீதஸ்வாணுஸிவாதய: ॥
சக்ரீடதணபைஸ்ஸார்த்தம் தேவீஸ்கந்தவிநாயகை: ।
கைலாஸேசததாதத்ர மஹாகைலாஸபர்வதே ।
மந்தரேசமஹாமேரொள சக்ரவாளகிரௌததா ।
சிவலோகேசளாம்பித்யம் தத்ரதத்ரா ப்யநுக்ரஹம் ।
குர்வந்ஸ்ஸர்வாத்மகாமீச: ஸ்திதஸ் ஸ்தாணுர்ஜகன்மய: ॥)

"(ஆங்காங்குறூஉம் அண்டங்களிலும்), கைலாசம், மகாகைலாசம், மந்தரம், மகாமேரு, சக்கரவாளமாகிய இம்மலைகளிலும், சிவலோகத்திலுமிருந்துகொண்டு ஆங்காங்குள்ள எல்லா ஆன்மாக்களுக்கும் அனுக்கிரகம் புரிபவனும்சலனமற்ற நிலையினனும்சருவ பிரபஞ்ச சொரூபியாயிராநின்ற ஈசன், தேவி கந்தன் விநாயகனாகிய இவர்களுடனும் கணங்களுடனு நித்தியமான திருவிளையாடல் புரிகின்றனன்." என ஸ்ரீமத்-ஸ்காந்தமஹாபுராண உபதேசகாண்டத்து சூக-ஆம் அத்தியாயம் ஒதழியுணரக் கிடக்கின்றன. இப்பிரமாணத்தே போந்த சிவலோகம், தூலப்பிரகிருதியையுஞ் சூக்குமப்பிரகிருதியையுங் கடந்த வும்பரிலேயுள்ள ஒல்காவொளிமய ஓங்கார பரப்பிரகிருதியின் உச்சியில் விளங்கியிருப்பதாமென முன்னரேயே யாங்கூறி, (தகி-ஞ்-சுவஸ்-தூரொகாதொஉலொகஉலௌகிகழ ।) "தனுர்த்வமும்மகாலோகாத் ஸோமலோகமலௌகிகம் ।" என்றற்றொடக்கத்த அந்த வாயுசங்கிதைப் பிரமாணமொன்றுங் காட்டினும். இப்பிரமாணத்துழை "உமையோடேய்ந்து சோமனெனவிருக்கும் ஈசுவரன் எச்சோமலோகத்தில் வசிக்கின்றனனே அது நித்தியம் உன்மனு லோகத்திற்கு மேலதாய அவ்வுலகத்தினே அடைந்தோன் பிறவியினின்று நீங்கினவனுவன்." என வருவதும், உமையோடேய்ந்துள்ள சிவனே சோமனென்பதாகச் சோமவார கற்பத்தில்—

"உமையுட னொன்றி யுறுஞ்சிவன் சோமன்"

என வருவதுங் கண்ணுறப்படுதலினாலும், 'உன்மனு' என்னுங்கலை பிரமந்திரத்திற்கு மேலே கூறப்படு துவாதசாந்தத் திருத்தலினாலும் இவ் வுலகின் மேற்றாக எவ்வுலகுமில்லை யென்றே கூறல்வேண்டும். இவ்வித உன்னதத் தானத்துறூஉ முமாகாந்தனே, இடைமாயை கடைமாயைகளிலேயே வைத்துவிட லேற்புடைத்தாமோ? பின்றைக் காட்டப்படுஉம் பிரமாணங்களின்படி உமாபதி திருமேனியுங் குமாரன் திருமேனியும் பிரணவமென நிறுவப்படுதலின் இம்மூர்த்திகட் கிருக்கை, இடைப்படு கடைப்படு மாயைக் கண்ணேயேயென வரைசெய் தோதுரைதான் எவ்வாற்றானேயுமால்! காட்டு ஏக-ல் "யான் கிட்களை பூரண சிவன்" என மா பெருங்கருணை மலைமகண்மணாளன் திருவாக் கிருத்தலுங் கருதுக. துவாதசாந்தத்தலமெனப்படுவதாய்,

"அங்கயற் கண்ணி தன்னெடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே."

எனத் தமிழ்மறை சாற்றுகின்றபடி மீனாக்ஷிசுந்தரேசுரர் வைகொரு நிவ்விய சன்னிதியா யமிர் திருவாலவாயும் துவாதசாந்தமானது உமாபதி வைகுந் தானமே

யென்பதை யுறுதிப்படுத்தும். விராட்புருடனது சிரசு சத்தியலோகமாம். இச்சிரசி னடுவணுள்ளது பிரமரந்திரமாம். இதற்கு மேற் பன்னீரங்குலத்தின்மிசை, பன்னப் படுவது துவாதசாந்தமாம். சத்தியலோக வாசியான பிரமதேவர் குணதத்துவத்தி லிருப்பவரென்பது நூல்களிற் பெறப்படுதலின் ஆன்மதத்துவம் உ௪-ம் அந்தப்பிரம ரந்திரங்காறுமுள்ள வெல்லைக்க ணடங்குமாகலின் மேலுள்ள பன்னீரங்குல அளவை களே வித்தியாதத்துவம்-எ, சிவதத்துவம்-௫ என்னும் பன்னிரு தத்துவங்களாக வைத்துக் கொள்ளப்பட்டன வென்பதூஉம் இஞ்ஞான் றெமதுள்ளத்தே யுதிக்கின்றது. இது, வேதாகம முடிபிற்கு முரண்செய்யாதரண்செய்யும். மண்டலப்ராஹ்மணோபநிஷத்—

(ஶீஷோபரி ஶாதஶாந்தாந்தாதஜ்யோதிஃபஶ்யதி
சீர்ஷோபரி த்வாதசாங்குலமாந ஜ்யோதிஃ பச்யதி)

"சிரசின்மிசைப் பன்னீரங்குல வொளி காணப்படுகிறது" என்னுமாற்றானும், நிருஸிம்ஹோத்தரதாபிந்யுபநிஷத்—

(அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ,
உகாரம்விஷ்ணும்ஹ்ருதயே,
மகாரம்ருத்ரம் ப்ருமத்யே,
ஓங்காரம்ஸர்வேச்வரம் த்வாதசாந்தே,
ஸம்பூஜ்ய)

"அகாரவாச்சிய பிரமனை நாபியிடையும், உகாரவாச்சிய விட்டுணுவை இதயத் திடையும், மகாரவாச்சிய உருத்திரனைப் புருவமத்தியிடையும், ஓங்காரவாச்சிய சருவே சுரனைத் துவாதசாந்தத்திடையும் பூசனை புரிந்து" எனுமாற்றானும் வேதமுடிபறிக. இம்முடிபினே ௩௬ - தத்துவங்களும் பீடமாக அதன்மிசை வீற்றிருக்கும் பரம்பொருள் தடத்தலக்கண உமாபதி யென்பதூஉம், அத்தத்துவங்களைக் கடந்துள்ள தன்மையின் அதிநுண் பொருட் சிதாகாசமாய் யாண்டும் பிறங்கியிருப்பது சொரூபலக்கண சிவ மாதலின் அதுவே தடத்தத் திருமேனியினுள் ஆன்மாவா யிருப்பதென்பதூஉம் பெறுக. ஏற்புடைமையின் உருவம், அருவம், உருவருவமென்னுந் திருமேனிகளு ளெதனையு முடையானாயிருப்பவனும் அத்தடத்தலக்கண பரமனேயென்க. இச்செய்தியினை,

"மாங்குயிற் கிளவி மலைமகள் பங்கன் மரைமல ரடியடைந் திடுவார்
அறைந்திடு தூலஞ் சூக்குமம் பரமென்றன்னவன் றனக்குமூன் றுருவஞ்
சிறந்திடுந் தூல நம்மையே முதலாந் தேவர்நன் குணர்வர்சூக் குமந்தான்
நிறைந்திடும் யோகம் வல்லவ ருணர்வர் நிகழ்த்திடற் கரியதாம் பரந்தான்
திறம்பலில் சைவ ஞானமன் னினராற் றீதற வுணர்ந்திடப் படுமால்."

என்று பேசுத்த வாயுசங்கிதை பூருவகாண்டத்துளி வழங்கலானும் பெறலாம். மேலே கூறிப்போந்த கைலாசத்தானே மூவரு ளொருவனுய குணரூத்திர மூர்த்திக்கும் ஓரிருக்கையா யுளதென்பது—

(ததஃவாஷ்ஷுவுஷாம்கஷ்ய ஷ்ரஹ்மசாரீண்யவர்த்தத ।
விம்காக்ஷஸ்தபஸஃ க்ஷேத்ரம் பலவாந்நீலலோஹிதஃ ॥

ததஃ பார்ச்வேவ்ருஷாங்கஸ்ய ப்ரஹ்மசாரீண்யவர்த்தத ।
பிங்காக்ஷஸ்தபஸஃ க்ஷேத்ரம் பலவாந்நீலலோஹிதஃ ॥)

"சிவபெருமாற் கொருபுறத்தே கின்ற பிரமசாரி (= திருவிகற்ப ஞானத்தாற் பெண்ணுசையில்) யும், பிங்கலகேத்திரனும், தவசிற்குத்தானமானவனும், பலவானு மாகிய நீலலோகிதன் (என்னுமுருத்திரன்) வந்தனன்." என்று மஹாபாரதம் பகரு மாற்முற் பெறப்படுகின்றது. இது, இருட்டிஞர்ச்சுன நிருவரும் பாசுபதாத்திரம் பெறுகிமித்தம் கைலாசமடைந்த வமையத்தது. ஸ்காந்தமஹாபுராண சம்பவ காண்டத்து கூ-ஆம் அத்தியாயம்—

(யாஸஸ்தெஷ்வதெவஸ்ய ஸரீரஸ்யிதெவதிழ ।
ஜ்ஞாநமிச்சாக்ரியாஸர்வம் மஸ்தஸ்யா இதம்ந்மஃ ॥

யாசக்திர்தேவதேவஸ்ய சரீரமதிதைவதம் ।
ஜ்ஞாநமிச்சாக்ரியாஸர்வம் மஸ்தஸ்யா இதம்ந்மஃ ॥)

"தேவதேவனுடைய சரீரமாகிய சகங்களுக்கு அதிதேவதையாய் ஞானம், இச்சை, கிரியை, மனமென்பனவா யுள்ள பராசத்தி யெதுவோ அந்தவனக்கு நமற்காரம்." என்று தங்கட்குத் தவத்தின்வாயிலாக *மூன்று கண்களோடு நான்கு தோள்களோடு மானச சரசின் உற்பலபுட்பத்தினின்று கிடைத்த சீர்த்த திருவுடைப் பெண்குழவியினை நோக்கி மலையரசனும் அவன்பத்தினியு முரைத்தார்களென்று கூறுதலின் அவ்வுமாதேவி பாராசத்தியேயென்பதும், மேலைச் சம்பவகாண்டத்து எ-ஆம் அத்தியாயம்—

(நமஸ்ஸிவாயவ்ரஹ்மவெஷ்ணுராணாம் த்ரியம்பகாயத்ரிவ்ருராஜகாய ।
மஹேஷ்வராயாஷ்வவிஞாதஹாஜாம் ஹிதப்ரதாயாஸ்துமோநமஸ்தே ॥

நமச்சிவாயப்ரபவேஷ்ணுராணும் த்ரியம்பகாயத்ரிபுராந்தகாய ।
மஹேச்வராயாஸ்த்வகிலாத்மபாஜாம் ஹிதப்ரதாயாஸ்துமோநமஸ்தே ॥)

"நமச்சிவாய மந்திரத்திற்குந் தேவர்கட்கும் பிரபுவே! நினக்கு நமற்காரம்: மூக்கண்ணனே! திரிபுராந்தகனே! மகேசுவரனே! நன்மையினை நல்குவோனே! நினக்கு நமற்காரம்." என்று விட்டுணு முதலிய பெரிய தேவர்கள் மிழற்றிக் கைலாச பதியை வணங்கினரென்று வழங்கலின் நமச்சிவாய மகாமந்திரதெய்வம் அவ்வுமாபதியே

*ஒருகண்ணும் இருதோளும் பின்னர் மறைந்துவிட்டன.

யென்பதும் பெறப்படுவவாயின. ஈண்டுக் கூறிப்போந்த எவ்வாற்றானும் பொய்தழாச் சைவசித்தாந்த சமய தெய்வம் பார்வதிபதியே யென இங்கும் வற்புறுத்துகின்றனம். இனி, இவ்வாறு உமாபதியினையே பெரிய கடவுளாகக் கூறுதல் வைதிக நூல்களா யிருக்கின்றமையின், இந்நூல்கள்—

(ப்ரணேத்ருஸர்வாவேதித்வாந் நஸ்புடோவஸ்துஸங்க்ரஹஃ ।
உபாயாஸ்ஸபலாஸ்தத்வச் சைவேஸர்வமிதம்பரம் ॥)

"(வேதாந்தம், சாங்கியம், சதசத்வாத ஆருகதம், பதார்த்தவாத கணாதம் முதலிய மதங்களைச் செய்த) அவர்கண் முற்றுணர்வினரல்லராகலின் அவையற்றுள், வத்துநிச்சயம் உபாயம் பயனென்பன குறைந்திருக்கும் : பரனாற் செய்யப்பட்ட இச் சைவ நூலுழை அவை நிரம்பி யிருக்கும்." என்று மிருகேந்த்ராகமம் பரமோக்ஷ நிராஸப்ரகரணத் துரைத்தலிற் பூருவபக்க முடிவுடையன வெனப்படாவோ? எனின்,—சோறும். பிரதம ஆகமமென வந்த இம்மிருகேந்த்ரம்—முன்னர் (அ) மன்மதனையெரித்தவன் உமாபதியென வோதிவிட்டுப் பின்னர் மன்மதனையும் யமனையுமெரித்தவன் திக்குப் பாலகரு ளொருவனான ஈசானனென் றோதினமையின் அதன் பிறழ்ச்சியையும், பிரதம ஆகமவழியே வேறு சில ஆகமங்களுஞ்சேறல் கூடு மென்பதையும் யாம் முன்னரேயே வெளிப்படுத்தினாமாகலின் இவ்விடயத்தே சித் தாந்தங்காண்டல் யாதாம்! தான், உயர்வில் வைத்தோதுங் கடவுளர்கட்கு ஒருமகிமைச் சரித்திரமு முரையாதிருந்துகொண்டு, 'வத்து நிச்சயம்' 'உபாயம்' 'பயன்' என்பன ஆகமத்தி னிரம்பியிருக்குமென்றல் பெருநகைப்புக்கிடனாம். சைவரென்பார், தாமே உவந்து படிப்பனவும், இவை சிவமகிமையென வேணவாவோடு பிறர்க்கெடுத்தெடுத் துரைப்பனவும் பார்வதி சங்கர குமாரர்களுடைய பரமாற்புதம் பல துறுமியுள்ள வைதிகநூல்க ளல்லவோ?

(ஸவ-வெதாந்தத்ருப்தோஸ்மி - ஸர்வவேதாந்தத்ருப்தோஸ்மி)

"சருவ வேதாந்தத்தில் யான் திருத்தி யுடையவனா யிருக்கின்றேன்" என்று கைலாசபதி திருவாய்மலர்ந்தருளியது சாமவேத மைத்ரேயோபநிஷத்துளிப் பெறப் படுகின்றது. இத்திருவாக்கின் முன்னே வேதாந்தத்தை யிழிவிற்படுத்தற்கெழுந்த அவ்வாகமவசன மென்செயவுளதோ? ஆகமத்தில் வத்துநிச்சய நிரம்பியிருப்பிற் சைவர், குணருத்திரனுக்கும் மகாருத்திரனுக்கும் உருமுதலிய சமத்துவஞ் சாதிப்பான் வைதிக நூலாய வாயு சங்கிதை வாக்கியம் பிடிப்பர்கொலோ? இவை கிடக்க. மகுடாகமம் —

(வெதாந்தார்த்தமிதம்ஜ்ஞாநம் ஸித்தாந்தம்பரமம்சுபம் ।
வேதாந்தார்த்தமிதம்ஜ்ஞாநம் ஸித்தாந்தம்பரமம்சுபம் ।)

"வேதாந்தப் பொருளாய ஞானம் பரமசுபமாகிய சித்தாந்தம்." என்றும், ஸுப்ரபேதாகமம்—

(ஸித்தாந்தம்வெதஸாரத்வாத் - ஸித்தாந்தம்வேதஸாரத்வாத் ।)

"சித்தாந்தம் வேதசாரமா யிருக்கின்றமையின்" என்றும், சிவதருமோத்தர மெனுமாகமம்—

"வேதநிக் தகனே புன்மை விடக்குணும் புலைய னுவான்
வேதகல் லந்த நிந்தன் வெவ்வினை வேட னுவான்
வேதக ஞானி நிந்தை விளம்பினன் பித்த னுவான்"

என்றும், சிவப்பிரகாசம் (பாயிரத்தில்)—

"வீடு வைதிகசைவம் பகரும்"

என்றும், திருமந்திரம்—

"'வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே'
'நாத னுரையினை நாடி நிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே'"

என்றுங் கூறு நிருணயங்களானே வேதாந்தமாகிய வேதஞானகாண்டம் சருவஞ்ஞர்வாக் கன்றென்றமை உயிர்பெறுமாறும் யாங்ஙனம்? வேதநிந்தகர், வேதாந்தநிந்தகர், வேதஞானிநிந்தகராய இன்னோரைடை பிறப்புக்கள் இன்னதின்ன தென்பனவும் மேலேபோந்த சிவதருமோத்தரத் தூக்குழைப் பெற்றுமன்றே. இழித் துக்கூறலு நிந்தையின்பாற்படும். வேதநிந்தை வேதோபப்பிருங்கணத்தையும் பற்றும். வேதாந்தமும், ஆகமாந்தமுமாகிய இரண்டும் "பெரியோர்க்கு அபேதம்" என்று நிருமந்திரந் தெரித்தமையின் வேதாந்தத்தை யிழுக்கத்துட்படுத்துவார் யாவ ரென்பதூஉ முணர்க்கிடக்கின்றது. "நாதனுரை" என்றமையின் வேதாந்தம், முற்றுணர்வுடைச் சிவனதனுக்கிரக வழி வந்ததென்பதுஞ் சித்திக்கின்றது; அச் சிவன்—"யான் நிட்களபூரண சிவன்" என்று சொற்ற மகிமகண் மணுளனே யென்றதூஉங் காட்டு சகற் பெறப்படுவதாயிற்றுல். இத்திற வேதுக்களால் வேதாந் தம் பூருவ பக்கமா மென்பது நவீன வெற்றுரையெனவே காட்டப்படும். சாங்கியாதி மதங்கணீப்பற்றி யாமிங்குக் கவனிக்கத் தகுநித்தாய தொன்றுமின்று. பாஞ்ச ராத்திராபிமானம் வழா வைணவரும், ஏகான்மவாதிகளுள்ளே தகுநூல் விசாரந் தழாச் சிலருமே பார்வதிநாதனீ முக்குணமூர்த்திகளு ளொருவனெனக் கூறிக்கொள் இழிவழக்கறிந்தார் பலரும் பெருவியப்புறச் சைவாகமமு மதுகூறுவ தாயிற்றெனற் கிடனுள்ள இவ்வாகமக்கூற்று, பல்லாற்றுனும் பழுதுபட் டப்பிரமாணமா யொழிந்தவா நீண்டுக் கண்டாமன்றே. இன்னும், பார்வதிநாதன் பரம்பொருளல்ல னெனப் பிதற்றும் எப்புத்தகத்தையுஞ் சித்தநிருவுடைத் திருஞானசம்பந்தப் பெருக் தகை முதலியோர் நிருவாக்காயுள்ள தமிழ்மறையும், பிறமுறைகளும் எதிர்த்துச் சவட்டவே யுள்ளன; காண்க. எப்படிச் சவட்டினும் யாதுறுதி காட்டினும் ஆகமந் தழுவியவழியே பார்வதி கணவனைப் பசுவர்க்கப் பிரளயாகலனெனக் கோடலே எங்கடன்மையென அவைதிகப் பிரவர்த்தகர்களின் ஆவேச மல வாசகம்

மேலுமெழின், கூறத்தக்க நியாயமென்னே? தக்கன் கொள்கையினைச் சாருமவர் பெறத்தக்க கூலி பெறட்டும். அக்கூலி, சிவத்துரோக சிவதூடண அநிபாதகப் பயனுமாதலின், அன்னவரதர் பற்றுதிருத்தல் எம்மதர் பிடிப்பார் கடனும். என்னே? அளப்பறு கருணையங்கடலாய், அனந்த சத்தியுடைய அமலனுய், எஞ்ஞான்று மினி யின்றியவிர் பரம்பொருளாய், எம்மை ஆண்டருள்வானுய் யாண்டும் பிறங்கியுள்ள அறுமுகச்சிவனையும், ஐம்முகச்சிவனையும் இழித்துரையாடலே அவர் கொள்கையி ஞண்மையாகலின். கந்தகோட்ட மும்மணிக்கோவையில்—

"அளியான் மனுடர்சே யாமொருவ னம்பி
வினியா வியன்பெறலிங் குண்டேற்—களிகழியா
ஓர்கடவுட் சேய்கம்பி யார்கெடுவா ரோய்வினருள்
கூர்கந்த கோட்ட குகா."

என்வரு செய்யுட்பொருளை விரித்துணர்ந்து கோடலும் விவேகமாகும். பொருள்:—"முடிவிலா அன்பினைப் பெருக்கியருள் கந்தகோட்டத்தில் வைகியுள்ள குகனே! மனிதர் மகனுகிய வொருவனை அன்பினல் விரும்பி அழியாப் பெருமையினைப் பெறல் இப் புடவியிலே யுண்மையெனின், இன்பு தனவா வொப்பற்ற கடவுண்மகனுகிய உன்னை விரும்பி எவர்கெடுவார்" [ஒருவருங்கெடார்] எனவாம். "ஓர் கடவுட்சேய்" என்றது திருமுருகாற்றுப்படைக்கண் "ஆல்கெழு கடவுட்புதல்வ" என்றதுபோனின் றது. இராமர், கிருட்டிணர், விசுவாமித்திரர், சமதக்கினி, பண்டைப் பாடியகாரர்கள், புத்தர், வர்த்தமானமகாவீரர், திருவள்ளுவர், யேசுகிறிஸ்து, முகம்மதுநபி முதலிஞ ராகிய பலரும் "மனுடர்சேய்" என்றநில்வைத் தெண்ணப்படுவர். உருவுடை முருகனை நம்புதலால் யாது பயனெனக் கொடுவாய் தருவார்க் கறிவுறுத்துவான் இம்நியம்பப்பட்டதாம். ஒருவன், தன்னை யெத்துணை மகிமைப்படுத்திக்கொள்ளினும் மனிதன் மனிதனே யாவன்; தேவன் தேவனேயாவன்; உரிமையால். அடைய வேண்டிய ஆன்மலாபத்தை முன்னிப் பரம்பன் நகரை விட்டேக யாம் முயறலும் சுக்கிர வாரமாகிய அன்று மாலைக்காலத்தே மேல்வீட்டுமீது "அஃதென்ன லியலாதா?" என்னும் ஆன்ற அருட்டிரு மொழியானே எம்மைத் தடுத்தருளிய இறைவனது முற்றுணர்வையும், முழுவலிமையையும், முட்டில் கருணையையும் அவன்திருவடிமலர்க் கன்பில்லா வன்னெஞ்சங்களோ வறியும்! இக் நூலகத்தும்—

"முத லாயி ருக்குமூனை பீர மற்றமத மார்க்கிகள்
காம நித்துகனி யுய்வ தோவெனெரு நஞ்ச மானகுக தெய்வமே
சரத மாயதக ராலை யத்திலவிர் சருவ பூரணசு யம்புவே."

எனவருதல் கருதுக. அங்ஙிகழ்ச்சியினை இவ்வுலகறியுமாறு திருவலங்கற் நிரட்டின் உ - ஆங் கண்டத்து *வெள்ளியற்கண்—

---

*வெள்ளியல் = வெள்ளையியல் (= வெண்பாவியல்); "ஒருபொருணுதவிய வெள்ளடியியலாற் நிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே." என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'வெள்ளடி' என்றதற்கு "வெள்ளையடி." என நச்சினர்க்கினியத்தில் உரைசெய்யப்பட் டிருத்தலுங்காண்க. "இயற்றனை வெள்ளடி." என யாப்பருங்கலக்காரிகையினரும் இளத்தினர்.

" என்ன லியலாதா வெண்ணுவது போற்செயவென்
றன்னா ஞறுகி சொன்ன வள்ளிலேவேன் — மன்ஞர்வின்
எக்காள் வருமோ வினி. "

எனவரு செய்யுளகத்துந் தெரித்துள்ளாம். ஆன்மலாப போதகஞ் செய்வார், உலகர் எளிதிலுணருமாறு கடாவிடையாக இனிதுணர்த்திச்சேறல் தொன்னெறி வழக்காதலானும், அங்ஙனங் கேட்போனுஞ் சொல்வோனுஞ் சிறந்தவராயிருப்பின் நூனன்கு மதிக்கப்படுமெனு மதராலும் யாதானுமொரு சைவநூற்புலங் கேட்போன் முருகனெனவுஞ் சொல்வோன் அரனெனவுஞ் சைவர் சம்பிரதாயமாய்த் தீட்டியிருப்ப ரதுகொடே முருகனுக்கு அறியாமை சமர்ப்பிக்கத் துணிதலு மறிவுடைமையாகாது. என்னே ? சருவ கலாகாயகமான ஓங்கார வாசகத்திற்கு (ஓங்காரத் திருமேனியனும்) அம்முருகன் வாச்சியனென்பதாகச் சாமவேதம் " ஸுப்ரஹ்மண்யோம் " என மும்முறை முழங்குகின்றதற்கேற்ப " ' ஓமெனப்படுங் குடிலையே யொப்பிலா முருகன் — மாமுகத்துளொன் முமவன் றன்மையார் வகுப்பார் ' ' ஏதமில் குழவி போல்வான் யாவையுமுணர்ந்தான் ' ' எல்லா மாயமுமியற்றவல்லான் வரம்பிலா வறிவன் ' "

(* ஸுப்ரஹ்மண்யம்ப்ரணம்யாஹம் ஸர்வஜ்ஞம்ஸர்வகம்ஸதா ।
ஸுப்ரஹ்மண்யம்ப்ரணம்யாஹம் ஸர்வஜ்ஞம்ஸர்வகம்ஸதா ।)

" யாவுமறிந்தோனும், யாண்டுமெஞ்ஞான்றுஞ் செல்வோனுமாகிய சுப்பிரமணியன்." என (உபப்ருஂஹணம் - உபப்ரும்ஹணம்) உபப்பிருங்கணமும், (ஜ்ஞவாந் மாஹு:) " பகவாக்குஹ: " என ருக்வேத அக்ஷமாலிகோபநிஷத்தும் அறிவுறுக்கின்றனவாகலின். இங்ஙனம், கேட்டுத் தெளிவோன் முனத்தே முருகப்பெருமான் பெயரைவைத்தலும் ஏற்புடைத்தன்றென்பதறியக்கிடக்குஞ் செய்தியின்மேல், பரமகுமாரனுடைய உரூபகதியுற்ற அபரகுமாரர் கேட்டுத் தெளிந்திருக்கலாமெனத் துணிதல் ஓராறு ஏற்புடைத் தாகலாம். சில தலபுராணங்களுள் அப்பெருமான் ஆராதனை புரிந்தனனென்பதாகப் பொறிக்கப்பட்ட கதைகளுமிப்படியே யேற்புடையன வல்லவென்க. அல்லவென்னு மிதனை,

(ஸுவர்ணாக்ஷ்யுபயோஸ்துல்ய யெதேஷ்டாயுதஸாதனே ।
த்ரிதசைரபிதேவக்ஷ்யா மத்ப்ரியார்ஹத்வமிப்ரியாச்சதே ।
அஸ்யாங்க்ரியுக்மயோர்பக்தா யேமர்த்ப்யா தரணீதலே ।
த்ரிதசைரபிதேவக்ஷ்யா மத்ப்ரியார்ஹத்வமிப்ரியாச்சதே ।)

" இவ்வுலகின்கண்ணே (சண்முகத்திருவுரு வுடைய) இம்மூர்த்தியின் றிருவடிகளிற் பத்திபண்ணுஞ செவரோ வவர், தேவர்களானும் வணங்கத்தக்கவரும், எனக்கு முனக்கும் பிரீதியுள்ளவருமாவர்." என்று பரமசிவன் பார்வதியை நோக்கிப் பகர்ந்த தீர்வையாக வருஉம் சம்பவகாண்டத்து கூடு-ஆம் அத்தியாய மாற்றங்கள்

*சம்பவகாண்டப் பிரதம அத்தியாயம்.

வலியுறுத்துமென்க. 'எனக்கு முனக்கும் பிரீதியுள்ளவருமாவர்' என்னுந் திருவாக் கைச் சைவராயுள்ளார் உய்த்துணர்ந் துண்மைகடைப்பிடித் துய்வாராக. தேவகாண் டத்து ⑫-ஆம் அத்தியாயத்தில்—

(வியுமயதா நிதெவ்ஹ விஷ்ணவெழுவதிதி,
உதிஉம்
விதாயதாநிதேப்ரஹ்ம விஷ்ணுபூர்வைச்சவந்திதம்,
மத்பதம்)

"பிரம விட்டுணு முதலிய தேவர்களால் வணங்கத்தக்க (குகனுகிய) எனது பதவி" எனவருவதாஉ மீண்டுக்கருது மவனடியவர், திருப்புகழ் பாடுஞான்று இடை யிடையே விண்டு சமத்துவக் தொனிக்கக் 'கோவிந்தம்' போட்டுக்கோடற் கொரு கியாயமும்ன்று. அத் திருப்புகழகத்தும்—

"'திருமருவு புயனயனெ டபிராவ தக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்கரம முற்றுவளர்
சிவசமய வறுமுகவ திருவேர கத்திலுறை—பெருமாளே'

'அரிப்பிரம ரளப்பரிய பதக்கமலம்—அருள்வாயே'"

என வருவனவற்றை யுய்த்துணராமையும், ஒரு மூர்த்தி வழிபாட்டின் மாட்சி யிற்றென வுணராமையும் அங்ஙகழ்ச்சிக்கேது வாகவின் அதனை வரைக. திருமருவு புயன் = விட்டுணு. தலம் மகிமைத்தேயெனத் தாபித்துக்கொள்வான் சிலகதைகளை வரைந்து, இவை கைலிசாரணியத்துச் சௌனகாதி இருடிகட்குச் சூதமாமுனிவராற் சொல்லப்பட்டனவென் றெழுதியிருத்தலும், அவ்விருடிகட்கு அம்முனிவராற் சொல் லப்பட்டு உபப்பிருங்கணமாகவுள்ள புராணங்களுள் அவையில்லாதன வாதலும், இருப்பினும் அவை கிகழ்ந்த கிலைக்களம் வேறெனக்காணப்படலுமே அத்தலபுராணங் கள் கவினமென்பதை காட்டும். உமாதேவி, சிவபிரானைக்கணவன் முறையில் வணங்கிய சரிதைகாணப்படுமாறு கந்தபிரான் பிதாமுறையில் வணங்கிய சரிதையுங் காணப்படு மாதலின்றுகொளத் தக்கதேயாம். மனைவியர் கணவரைத்தொழலும், மகார் பிதாமாதாக்களைத் தொழலும் அபிவிருத்தியாமாறு செய்யப்பட்ட இவ்வணக் கங்கள், சிவபிரான் கல்லாலடிக்கண் யோகிருந்ததுபோன்ற பரப்பிரயோசனமேயாம். இத்திறவியைபின்றிக் குமாரபிரானது மகிமைக்கும் பரத்துவத்திற்கும் விரோதமாக அபத்தியு மறியாமையுக்தலைப்படு கிலைகின்று கூறப்பட்ட வனைத்து மெம்மனோராற் கனையப்படுவனவேயாம். போந்த மூர்த்தியினது திருமேனி யாதென வொருவிசாரணை செய்தலும் இங்ஙனேற்புடைத் தாகவின் அது செய்தும். அதர்வணவேத பஸ்மஜாபாலோபநிஷத்—

(கெனுவஸ்மிவாவாஹ ஸொஜ்ஜாபதிர்முவிணம்
உஹாதெவ்ஸ்யெ கூதபெவாம)

"கைலாஸ சிகராவாஸ மோங்கார ஸ்வரூபிணம்
மஹாதேவ முமார்த்த க்ருதசேகரம்"

என்றும், அதர்வணவேத மாண்டூக்யோபநிஷத்—

(சிவோத்வைத ஏவமோங்கார)

"அத்வைதனா யுள்ள சிவனே ஓங்காரம்" என்றும், அதர்வண வேத முண்டகோபநிஷத்—

(ஓமித்யேதத், ஏதத்யேவாக்ஷரம் ப்ரஹ்ம)

"ஓமென்னு மிப்பிரணவாக்ஷரமே பிரமம்" என்றும், வாயுசங்கிதை—

"துறந்தோர் குடிலை சிவனுருவ மென்றே யுணர்ந்து சொல்லுவார்"

என்றும், கந்தபுராணம் —

"'ஓமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றாமவன் றன்மையார் வகுப்பார்'

'முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருகன்'"

என்றும், ஷண்முகஸஹஸ்ரநாமம் அங்கந்யாஸங் கூறுமிடத்தே—

"சம் ஓங்காரஸ்வரூபாய ஓஜோதராய ஓஜஸ்விநேநமஃ"

என்றுங் கூறுதல்கொண்டு அம்மேனி ஓங்காரமென்னும் பிரணவமென நிச்சயிக்கப்படுவதாம். இதன் பெயர் 'குடிலை' என்றுங் கூறப்படுமாகலின் வாயுசங்கிதையுங் கந்தபுராணமுங் குடிலையென்று கழறுவவாயின. இன்னுமிதன் பெயர்—குண்டலி, பிரமம், பரம், சிவம், மாமாயை, மாயை, மாயேயம், நாதம், விந்து, வைந்தவமெனவு நுவலப்படும். ஆகலினன்றே அத்திருமேனி—

(உத்ரோமாயாஹிஃ வ்ரூரூவ ஸம்யதெ
இந்த்ரோமாயாபிஃ புருரூப ஈயதே)

"முதல்வன் மாயை வாயிலாகப் பலவுருவங்கள் கொண்டனனெனல் காணப்படுகின்றது" என யஜுர்வேத பிருஹதாரண்யகோபநிஷத்தும்,

(ஸ்ரீரெஹிரஂரைஃ வ்ரூரூவ உக்ரஃ
ஸ்திரேபிரங்கைஃ புருரூப உக்ரஃ)

"உக்கிரன் உறுதியாய அங்கங்களோடு பலவுருவ முடையன்" என ருக்வேதமும்,

(ஸஹுரூபஃ) "பஹுரூபன்"

என்று ஷண்முக ஸஹஸ்ரநாமமும்,

"குணங்களைக் கடந்தோ யெனினு மாயையினைத்
தோய்தலாற் குணமுடை யவன்போல்
அணங்கொரு பாலுங் கறைமிடற் றழகு
மம்பக மூன்றுமா முருக்கொண்
டிணங்குறு நாமஞ் சிவன்"

என்று (மா வித்துவசிரோமணியாய அப்பயதீக்ஷிதரால் வடமொழியிலியற்றப் பட்டுத் தமிழின் மொழிபெயர்க்கப்பட்ட தெனவுள்ள) சிவதத்துவ விவேகமுங் கூறுமாற்றானே மாயை, அதுபலவென வழங்கப்படுவதாயிற்று. இன்னணம் வழங்கப் படினும் அது, சுத்தமாயை பிரணவமாயை யெனப்படுதலே தெளிவுடைமையாம். இந்திரனென்பது தலைவனென்னும் பொருளுடைத்து. அஃதிங்கே முதற்கடவுளை யுணர்த்துவதாயிற் றாகலிற் சசிமணாள னதன்பொருளாவா னல்லன். உக்கிரன் சிவனென்பது (உக்ரஃ கபர்த்தீ ஸ்ரீகண்டஃ) "உக்ரஃ கபர்த்தீ ஸ்ரீகண்டஃ" என அமரஸிம்ஹ மெனு நிகண்டு நிகழ்த்துதலிற் பெறப்படும். நீலகண்ட சிவாசாரியரும் பிரஹ்ம ஸூத்ரத்தின் இறுதிச் சூத்திரத்திற்குச்செய்த பாஷ்யத்தில் ஈண்டுப் பிரமாணிக்கப் பட்ட பிருஹதாரண்யக ருக்வேத மந்திரங்களை யெடுத்துக்காட்டுபு, ஈண்டு வரைந்த வாறே பொருளுமெழுதுபு, மாயையினை மா மாயாசத்தியெனக் குறிப்பிட்டுச் சிவன் யாங்ஙனம் விசுத்தமாகிய அனேக சரீரங்களைக் கொள்கின்றனனோ அங்ஙனமே முத்தர்களுமாவர்" என்னுமொரு முடிபும் மொழிந்துளார். ஓங்காரம் மறை மூல மாகலின் அதுதானே சிவன்றிருமேனியென மதுரைத் திருவிளையாட லுழையும்—

"மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமா மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்."

எனவரு செய்யுட்கண் 'மறையே நமது வடிவாகும்' என்ற தொடர் வாயிலாக வுணர்த்தப்படுவதாயிற்றால். இச்செய்தி சிவபிரான் றிருவாக்கெனக் கொளவுளது. இங்ஙனம், மறை திருமேனி யெனப்பட்டாங்கு, காமிகாதி ஆகமங்களுந் திருமேனி யெனப்படூஉமென்பது அக் காமிகாகம தந்த்ராவதார படலத் தறியக்கிடக்கின்றது. சிவம், சத்தி, நாதம், விந்து என அருவத்திருமேனி ௪-ம், மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் என உருவத்திருமேனி ௪-ம், சதாசிவன் என உருவருவத்திருமேனி ௧-ந் தடத்தலக்கண மாகச் சிவனுக் குளவென் றெவரு முணருமாறு சிவஞான சித்தியார்—

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்றாம்
நவந்தரு பேத மாக நாதனே நடிப்ப னென்பர்."

என் றோதுதலையும், அம்மேனியாய "மூன்று கந்தங்—கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவுகாணே" என்றறிவித்திடலையும், மேலே போக்த சித்தாந்தப் பிரகாசிகை யென்பதன் றமிழ் மொழிபெயர்ப்பில்—

சதாசிவதத்துவம், சத்திதத்துவம், சிவதத்துவமாகிய "'மூன்றினும் பரமசிவனெழிய வேறே இருத்தியஞ் செய்யும் ஆன்மாக்களில்லை' 'மூலப்பிரமாங்கங்களாகிய பதிஞெரு மந்திரமும் மந்திராத்துவா' 'அத்துவாக்களாறுக்கும் மேலாகியகாரணம் சுத்த மாயை'"

எனவரு மொழிகளையு மூய்த்துணருஞான்று சிவனது திருமேனி சுத்தமாயை யென்பது சித்திக்கின்றது. ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத என்னும் பிரமமந்திரம் ஐந்தும், ஹ்ருதய, சிரோ, சிகா, கவச, நேத்ர, அஸ்த்ர என்னும் அங்கமந்திரம் ஆறுமே 'மூலப்பிரமாங்கங்களாகிய பதிஞெருமந்திரம்' எனப்பட்டன வென்க. இவற்றுள், ஈசானம் முதலிய பிரமமந்திரம் ஐந்துஞ் சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்கட் குபயோகப்படுஞ் சத்திமய ஈசுவரசரீரமாக வமைந்துள்ளனவென்னு நிச்சயத்தில்—

"தத்வபுः பஞ்சமிர்மந்த்ரைः பஞ்சக்ருத்யோபயோகிபिः ।
ஈசதத்புருஷாகோர வாமாஜைர்மன்தகாதிகம் ॥"

எனக் கிளக்கப்பட்ட மிருகேந்த்ராகம மொழிகளும் நங்குக் கருதிக்கொள்ளத்தக்கன. வபுः = சரீரம். 'அத்துவாமூர்த்தி' என்றும், 'மந்திரங்கள்வடிவு' என்றுங் கூறிக் கொண்ட மேலைச் சிவஞானசித்தியார்— "மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்—தந்திரஞ் சொன்னவாறு" என விளம்புமாற்றுனுந் திருமேனி சுத்தமாயை யென்றன் மதனுறுகின்றது. அங்ஙனமாயின், அச்சித்தியார்— "காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னல்" என்றோதுவ தென்கொல்? எனின்,—சோறும் (= சொல்லுதும்). "வித்தை, உயர்கலை யதனிற்றோன்றி யறிவினை யுதிக்கப்பண்ணும்" என அச்சித்தியாரே கூறுமாறு அசுத்தமாயாதத்துவங்களு ளொன்றுய வித்தை, ஆன்மவறிவை ஏகதேசத்தில் விளக்கி நிற்குமாகலிற் சடமான அம்மாயையே இறைவனது மேனி அன்றெனப்பட்டது; சுத்தமாயை அப்படிக் கூறப்படவில்லை யெனப் பொருள்கொள்வுழி விரோதமின்றும். சுத்தமாயையே அப்படிக் கூறப்பட்ட தெனின்,—மேலே காட்டப்பட்ட பிரமாணங்கட்கும், இச்சித்தியாரே, அத்துவா மூர்த்தி, மந்திரங்கள் வடிவு என்று கூறினமைக்கும் விரோதமுண்டாம். மேல், சுத்தமாயையும் அறிவில் பொருளாஞ் சடமன்றேவெனின்,—கேட்டி. சடமாயினுஞ் சிற்சத்திக்குச் சுதந்திரவடிவாயிருத்தலின் அது, சைதன்னியமெனவே கொளப்படு மென்பது அச்சித்தியாரே—

"தத்துவ மும்பத் தாருஞ் சைதன்னி யங்க ளொந்து
சித்தசித் தான்மா வொன்று மும்பது மசித்தே செப்பில்"

என்றியம்புதலி னறியக்கிடக்கின்றது. சுத்தவித்தை, ஈசம், சாதாக்கியம், சத்தி (= விந்து), சிவம் (= நாதம்) என்னுஞ் சுத்தமாயா தத்துவங்களே சைதன்னியங்கள் ஐந்து என்றறிக. சைதன்னியம் = ஞானம்.

"வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்க ளைந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்திர வடிவ மாகும்"

என அச்சித்தியார் நிகழ்த்தலுங் கருதிக்கொள்க. சடவிழி அறிவின் புணர்ப்பால் அறிபொருளாய்த் திகழ்ந்தாங்கு, இருப்பு நெருப்பின் சம்பந்தத்தா னெருப்பாகவே மிளிர்ந்தாங்கு சுத்தமாயையுஞ் சிற்சத்திக் குடம்பா யிருக்குஞ் சம்பந்தத்தால் அச்சத்தியாகவே மிளிருமாகலின் அதனைச் சைதன்னியமென்பது பொருந்துமென்க. இப்பொருத்தங் கருதியே இறைவனது திருமேனி சத்தியாகுமெனும் பொருள் பயக்கும்படி காயமோ "காண்பது சத்திதன்னால்" என அச்சித்தியார் தெரித்த தென்னலாம். இந்நிச்சயத்திலேயே பௌஷ்கராகம பதிபடலம்—

(அநந்யோந்யச்சதச்சக்தேஸ் ஸமவாயாத்ஸ்திதச்சிவ: ।)

"சிவதத்துவமாயுள்ள அம்மாயாசத்திக்கு அனன்னியமாகவும், சமவாய சம்பந்தமாகவு மிருக்கின்றனன் சிவன்" என்றறிவுறுத்தலும் பொருந்துகின்றது. சமவாயம் = நித்தியசம்பந்தம்; நீங்காதிருத்தல். இந்நிச்சயம் விடுத்து, சிவனை நீங்காச் சிற்சத்தியொன்றுமே திருமேனியெனக் கொளின் அது, சித்தியார்கூறிய மேலைக் கூற்றுக்களோடும் மற்றைப்பிரமாணங்களோடும் முரணும். அச்சிற்சத்தியைக் குணமாகவுஞ் சிவத்தைக் குணியாகவுங் கொள்ளும் ஏக சொரூப நிச்சயத்தினின்றும் அச்சத்தி பிரிக்கப்படா ஞானமாம். அஃ தொருபடித்தாகவே யுளதென்பது— "ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம" என ருக்வேத ஐதரேயம் ஆத்மபோதம் என்னும் உபநிஷதங்களில் வரு வாக்கியத்தினும், அவ்வாத்மபோதமே (நிரவயவோஹம் =) "நான் அவயவமில்லாதவன்" என ஞானி கூறுகின்றனனென்று கிளக்குமுரையினும்,

"உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்."

எனத் திருவருட்பயனில் வருசெய்யுளினும் பெறலாம். இன்னணம் பிரிப்பில் சத்தியினிடம் பரம்பொருடோன்றும்; அங்ஙனந் திருமேனியுஞ் சொல்லப்படும்; இந்நிச்சயத்தை 'அருட்சத்தியினிடந் தோன்றுவானன்றி வேறுதோன்றான்.' என்னும் பொருளிலே "முன்னருட் சத்தி தன்பான் முகிழ்க்கும் தான் முளையான்" எனவரு சித்தியார்க் கிளவிகளு மாதரிக்கின்றனவெனின், அஃதியாங்ஙனம் பொருந்துமெனக் கடாவி யொழிக்கப்படுமால். என்னை? பிரிப்பில் சத்தியைப்பிரித்து, அதனை ஓரிடமாக்கி யுரைத்தலின்; 'சத்திதன்பால்' என்ற துய்த்துணர்க. பால் = இடம். மேல், பொருந்து மாறுளதோ? எனக்கடாயின்,—சத்தியை நீங்காது சத்திசம்பந்தத்தாற் சைதன்னியமாயிராநின்ற பிரணவத்தினிடந் தோன்றுவானன்றி வேறு தோன்றா னென்பது பொருந்தலா மென்க. அத்துவா மூர்த்தி, மந்திரங்கள் வடிவு, சுத்ததத்துவஞ் சிவன்றன் சுதந்திரவடிவம் என்றமைக்கும் இது பொருந்து மென்க. இதுவேயுமன்றி,

(ஈசஸ்படிகவர்மத்யே பூர்வேகுங்குமவர்நர: ।
தக்ஷிணேஞ்ஜநவத்கோர: ஸௌம்யேவாமம்குஸும்பவத் ।
சந்த்ராம்சுநிர்மலம்ஸத்யம் வக்த்ரம்பச்சிமதிக்கதம் ॥)

"நடுவிடத்து ஈசானமுகம் படிகம்போன்றது : கிழக்குத் தற்புருடமுகங் குங்குமம் போன்றது : தெற்கு அகோரமுகம் அஞ்சனம் போன்றது : வடக்கு வாம தேவமுகங் குங்குமப்பூப் போன்றது. மேற்குச் சத்தியோசாதமுகம் நின்மல சந்திர வொளி போன்றது." என்று காமிகாகமம் அர்ச்சந விதி படலத்தோதுதலின், மேலே கூறிப்போந்த பஞ்சகிருத்திய ஈசுவரமுக மைந்தும் ஐவகை நிறப்பேதமுடையன வென்பது பெறப்பட்டமையின் இவை, சீவான்ம சொரூப வறிவைப்போலப் பரமான் மாவுக்கு அறிவுமாத்திரையா யொருபடித்தா யுளதென வோதப்படுஉஞ் சிற்சத்தியே யென்றற் கேலாதெனுந்துணிபும் பெறப்படும். படவே, இச்சத்தி சம்பந்தத்துள்ள பிரணவந் திருமேனியென ஈங்கெடுத்துரைக்குந் தீர்வையே நிலையுதலுறு மென்பாம். இச்சத்தி யொன்றே காரியவேறுபாட்டாற் பலதிறப்படுமென்றற்குத் தனது சம்பந்தத் தாற் பிரகாசிக்கும் பிரணவ சுத்தமாயையின் ஒளிக்கூறுகளையே திருமேனிகளாகக் கொள்ளுமென்பதும், சருவஞ்ஞதை முதலிய ஈசுரப்பிரபாவ குணமெட்டனுள் 'விசுத்ததேகம்' ஆவதுமிங்ஙனம் பெறப்படுமென்பதும், ஆணெனப் பெண்ணெனக் குறிக்கப்படு மம்மேனிகளுட் சத்தியை நீங்காச் சொரூப சிவம் பன்னிற மணிகளு ளொருநூல்போல நிர்விகாரமாய் நிற்குமென்பதும் இங்ஙனங் கொள்ளப்படும். இவ்வாறு கொள்ளாக்கால் அச்சிற்சத்தி, சிவனை நீங்கா அபின்னசத்தி யென்றல் வெற்றுரையாம். ஆகவே அக்கினியுஞ் சூடும்போலச் சிவமுஞ் சத்தியுந் தாதான்மியமென்னும் பிரமாண விரோதமுமுண்டாம். (தஸ்யை தத்லிங்கமலிங்கஸ்யாக்நேர் யதௌஷ்ண்யமாவிஷ்டம் =) "இலக்கணமிலானது இலக்கணம் அக்கினியிற் சூடுபோற் சேர்ந்திருக்கும்" என்று கூறும் ஸாமவேத மைத்ராயண்யுபநிஷத்தும், வேறு சிலவுமே அந்தப்பிரமாணமாம். இதுவேயுமன்றித் தாதான்மிய சத்தியைப் பலபேதப்படுத் துரைத்தல் சிவத்திற்கே பேதவிகாரங் கூறலாய் முடியும். இது, தண்டாபூப நியாயத்தாலுஞ் சாதிக்கப்படும். (தண்டிற் பூட்டப்பட்ட அபூபத்தை நாய் கவ்வியிழுக்குமேல்வை தண்டு மிழுவையுறல் போல்வதே அந்த நியாயம். அபூபம் = அப்பம்.) அன்றி, மண் குடமானாற்போலக் காசரணாதி அவயவங்களாய் அச்சத்தி பரிணமித்த தென்னுமொரு தோடமுமெய்தும். இத்தோடமுறாதவாறாகவே போந்த சிவதத்துவவிவேக நூலுடையாரும் "மாயை யினைத் தோய்தலால், அம்பகம் மூன்றுமா முருக்கொண்டு" எனக் கூறுவாராயினார். இப்பரிணாம சங்கையில்—

"எந்தைதா னின்ன னென்று மின்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே"

என்று சிவஞானசித்தியார் கூறுதல் அனாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் விருத்தி, பரிணாமம், விவர்த்தனமென்பவற்றுள் ஒன்றிற்படுவன் படானென்று மொழி யப்படான் : எவ்வாறுமாமென்னும்பொருள் பயத்தலின் உறுதியா யொரு முடிபு மேற்பட்டிலது. இங்ஙனமே, அனைத்திற்கும் பெரிய பொருளாய்ச் சருவாதாரமாய்

யாண்டு மெஞ்ஞான்றுமுள்ள பிரமம் சித்துமாம்; அசித்துமாம்; இப்படியாகா தென்று சொல்ல (வழக்கொடு மாற்றமின்று=) ஓராசங்கையுமின்று பரிகாரமு மின்றென ஏகப்பொருள்வாதக் தாபித்தற்கும் இடனுண்டாம். எவ்வாறுமாமென இவ்வாறு கூறுதலினுஞ் சிற்சிவம் பரிணமியாதென்ற லேற்புடைத்தாம். சிவான்ம ஞானசத்தி கரசரணாதி அவயவப் பகுப்பாகா திருத்தலே கன்குணர்வார், பரமான்ம சிற்சத்தி அவ்விதமாமென்பதை யெவ்வாற்று னேன்றுகொள்வ ரென்னுமொரு சங்கையு மிங்ஙனந் துண்ணென வெழுமன்றே? நிற்க. அருளெனப்படுஞ் சிற்சத்தியே பராசத்தியுமாம். இஃது ஆதிசத்தியென நின்று இச்சா ஞானக் கிரியையென மூத்திறப்படும். இச்சையுங் கிரியையு ஞான நிற்கும்வழி நிற்குமாகலின் இவைகள்,

"சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவு நாதமு மாயே விரிந்தனள்"

என்று திருமந்திரந் தெரித்தவாறு பிரணவமாயையி லூன்றிநின்று பஞ்சகிருத் தியத்தைச் சிற்சத்தி சங்கற்பிக்கும்போ தேற்படு விசேடங்களேயன்றி வேறல்ல. மந்திரயோனியாய சுத்தமாயையென்னுங் குண்டலினியை விட்டுயாதொரு கிருத்தியமு மின்றென்பதே சித்தாந்தம். சொரூப நிருணயத்திற் சத்திபேதம், நிறப்பாகுபாடு கூறல் ஆன்ற சுவானுபவ மெய்ஞ்ஞானிகளால் என்றுகொளப்படுவதன்று; பரஞானத் தாற் பரிபூரணமாயடை பாமுத்தியையு மில்லையென்றே அக்கூறன் முடிவுசெய்யு மாகலின் அஃதொழித்துச் சித்தாந்தப் படுத்துமாறெவ்வித மெனின்,—வியாபகத்தன்மை யினாற் சத்தி சம்பந்தப்பட்ட நிலைக்களங்களிலேயதன் றிருவுளப்பாட்டின்படி நிகழ்வன நிகழுமென்றும், அங்ஙனந் தேசபரிச்சேத ரகித சிவமாய் நிற்குநிலை கூக-தத்துவங்களை யுந் தாத்துவிகங்களையுங் கடந்துளதாகலின் அதுவே ஒரு படித்தாக ஞானிகளாற் றரிசிக்கப்படுவதாமுமை அடைவதாமுமாமென்றும், (நிஷ்கலம் நிஷ்கியம்) "நிஷ்கலம் நிஷ்க்ரியம்" என வேதம் (=சுவேதாச்வதரோபநிஷத்) விளம்பினதும் இங்ஙனமா மென்றுஞ் சித்தாந்தப்படுத்தலாம். "உள்ளும் புறப்பு மொருதன்மை" என்று திருவருட்பயன் றெரித்தலோர்க. நிஷ்கலம்=கலையோடு கூடாதிருப்பது. நிஷ்க்ரியம்= கிரியை செய்யாதிருப்பது. இறை சரீரமா யமைந்த அக்குண்டலினிக்குப் பரிணமங் கூறலாங்கொல்? எனின்,—சோறும். அதன்காரியம் படங்குடிலானற்போல விருத்தி யாமென்றும், இது சூக்கும பரிணம மெனப்படுமென்றுஞ் சொல்லுப. இப்படிக் கூறலினுலும் தோடமொன்றுமின்று; முன்விளக்கியபடி சுத்தவித்தையாதி ஐந்து தத்துவங்களுஞ் சத்தி சம்பந்தத்தாற் சைதன்னிய மெனப்படல் கருதுக. இவ்வாறு கருதுதலிற் பஞ்சபாசங்களு ளொன்றெனப்படு மிச்சுத்தமாயை, முதல்வனுக்குப் பந்தமாகமாட்டா தென்பதாமும் பெறுக. உயிர்களைப் பந்தப்படுத்தும் பான்மையி லுள்ள எந்தப்பாசமும் உப்புநீருறைமீன் உப்பேறுநிருக்குந் தன்மைபோலிருக்கு மவனதான்ற தன்மைக்கின்றுகலின், அவனுக்குப் பிருதிவியாதி பூதமைந்துஞ் சூரியனுஞ் சந்திரனு மான்மாவுமாகிய எட்டும் மூர்த்தங்களென்று நூல்க ளுவறலு நுதலிக்கொள்க. அந்நூல்களுட் சைவமஹாபுராண வாயுசங்கிதை—

(சர்வோபவஸ்ததாருத்ரஃ உக்ரோபிமஃ பசோஃ பதிஃ ।
ஈசாநச்சமஹாதேவோ மூர்த்தயச்சாஷ்டவிச்ருதாஃ ।
பூம்யம்போக்நிமருத்வ்யோம க்ஷேத்ரஜ்ஞார்க்கநிசாகராஃ ।
அதிஷ்டாதாமஹேசஸ்ய சர்வாத்யை ரஷ்டமூர்த்திபிஃ ॥)

"பிருதிவியிற் சருவன், அப்புவிற் பவன், தேயுவில் உருத்திரன், வாயுவில் உக்கிரன், ஆகாயத்திற் பீமன், ஆன்மாவிற் பசுபதி, சூரியனில் ஈசானன், சந்திரனின் மாதேவன்" எனச் சிவன் நிற்குநிரல் கூறுதலோர்க. மயக்கு மியல்பிலதாய் நித்தியமாய் ஆகாயமன்ன அருவமாய் வியாபகமாய்ப் பேரொளியாய் அந்தப்பிரணவமாயை யிருத்தலினன்றோ யஜுர்வேத பஞ்சப்ரஹ்மோபநிஷத் (சூகாசமயவிக்ரஹம்) "ஆகாசமய விக்ரஹம்" என்றும், தைத்திரீயோபநிஷத் (சூகாசசரீரம் ப்ரஹ்ம) "ஆகாச சரீரம் ப்ரஹ்ம" என்று மியம்புகின்றன. வியாபகத்தை வில்லடி பிரம்படி களும் விளக்கும். கோரக்கரெனும் பெயரியசித்தர், அல்லமதேவரது திருமேனியை வாள்கொடு வெட்டலும் அவ்வாள், ஆகாயத்திற் சென்று வரல்போல் ஊறு கூறு செய்யாது வருதல்கண்டு இஃதென்னேயென் றிறும்பூ துற்றமையு மீங்குக் கருதிக் கொள்ளத்தக்கதே. இங்ஙனம், அருவமான திருமேனி உருவமறி விழிக்கு யாங்ஙனம் புலப்படுமென்னுஞ் சங்கை யெழல்கூடும். தவத்தின் வழியே காணுந்தன்மை கைவந்தார் காண்பர்; இறை திருவுளப் பாட்டின்படியுங் காண்பரெனுமாற்றான் அச்சங்கை யொழியுமென்க. திருமேனி வாயிலாகவும் ஏற்புடைக் காரிய மிழைக்கப் படுமென்றல் கந்தபிரான் பிரமனைக் குட்டிய செய்தியிற் பெறப்படுதலின் அது, விண்ணிடை வெள்ளிடி தோன்றுதலொக்குமென்க. திருமேனி விசேடம்—

"அனக மானபர மூர்த்தி கட்குமறி வாள ருக்குமுட லுண்மையின்
சொனவ ணம்புலறி வுங்கொ ழிப்புமவர் கட்கு முள்ளனகொல் சொல்லெனு
வினவொ ணாதவர்கள் வெண்ப ளிங்குநடு வுள்ள தீபமென வொளிர்தலாற்
கனக மாமுரு விருந்து மின்மையது காண லானிழலி லாததால்."

"சடப்பொரு ளுள்ளு மிருக்கின்ற சாமி சடப்பொருட்குந்
திடப்பொரு ளாமுயி ரின்கண் விளங்கு திறமதிகந்
திடப்பொரு ளுக்குந் திடப்பொரு ளாமது சீகண்டனென்
நடப்பொருண் மூர்த்தியின் மின்ன லதிகநன் னட்பினரே."

என்று பரிபூரணானந்தபோதமும், திருத்தலதரிசன காலங்களிற் பாடியருளிய கட்டளைக்கலித்துறைகளு ளொன்றும்,

"ஓமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றாமவன் றன்மையார் வகுப்பார்."

என்று முதல்வன் புராணமும் மொழிதரலிற் காண்க. முதல்வன் முகங்கள் ஆறனுள் ஒன்றுதான் ஓமெனப்படுமோ? எனின்,—நவிறும். ஈசானாதி ஐம்முகங்களுஞ் சிவமுகங்களென வழங்கப்படுதலின் அவற்றினின்று மதிகமாகக் காணப்படு சத்தி முகமே அவ்வாறு கூறப்பட்டதென்க. உரிய பிரமாணம்—

"யான் படைத்தன்முதலிய ஐந்தொழிற்கதிபனும் ஐம்முகமுடையனுமாகிய சதாசிவன் : நீ பலவாருகவிருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி : குமாரன் உனது சுவரூபத்தையு மெனது சுவரூபத்தையுங் கொண்டுளோனதலின் ஆறுமுக னெனப்படுகின்றனன்."

என மேலே வந்துளது. பிரணவத்திற்குஞ் சத்திக்குமுள்ள சம்பந்தத்தால் அவ்விரண்டு மொருபெயரான் வழங்கப்படுமென்பது மிங்ஙனம் பெறுக. ஆகலினன்றே "உமையலா தருவமில்லை - - - - - - - - - - - - ஐயாறனுர்க்கே" என்று காவுக்கரையரது தமிழ்மறையு கவில்வதாயிற்று. பிறவுமன்ன. பிரணவமானது சத்தியின் பெயர்கள் கொண்டும் விளங்கு மகிமைத்தென்னு மிச்செய்தி—

(பராவாகீச்வரீ வித்யா மாயாவித்யா பராம்ருதா ।
பரமந்துः பராசக்திர் மஹாமாயாச குண்டலீ ।
- - - - - - - - - - - - தன்யாः பர்யாயவாசகாः ॥)

"பரை, வாகீசுவரி, வித்தை, மாயை, பராவித்தை, பரவிந்து, பராசத்தி, மாமாயை, குண்டலியென்பன அத்தப் பிரணவமாயையின் பரியாயப் பெயர்கள்" என்று சிந்திய விசுவசாதாக்கியங் கூறுதலிற் றெளியப்படும். மாயையுஞ் சத்தியுஞ் சம்பந்தப்பட்டு நிற்றலைக் காட்டுமொரு பெயர் மாயாசத்தி யெனவும்படும்.

(மூலாதாராதாரப்ய ப்ரஹ்மரந்த்ர பர்யந்தம்
ஸுஷும்நா ஸூர்யாபா ।
தம்மத்யே தடித்கோடிஸமா ம்ருணாளதந்து
ஸூக்ஷ்மா குண்டலிநீ ॥)

"மூலாதாரம் எழுவாயாகப் பிரமரந்திரம் இறுவாயாகச் சூரியப்பிரபையாய் நிற்பது சுழுமுனையாம். அதன் மத்தியிற் கோடிமின்னலுக் கொப்பான மிருணாளதந்து போன்றுளது சூக்கும குண்டலினியாம்" என்று மண்டலப்ராஹ்மணோபநிஷத் வழங்குமாற்றுற் சுழுமுனை நடுவட் பிராணரூபமாய் நின்று உயிரைப்பிரேரிப்பது குண்டலியேயென்பது மிங்குக் கருதிக்கொள்க. மேல், இறைவனுடைய வடிவெல்லாம் உபசாரத் திருமேனியெனப் படுமெனின்,—ஆண்டுப் பஞ்சகிருத்தியமும் உபசாரமென முடியும். என்னை? ஈசாநாதி பிரமமந்திர மைந்துஞ் சிருட்டியாதி பஞ்சகிருத்திய சத்திமய ஈசுவர சரீரமென்பதாக மிருகேந்திரம் மிழற்றன் முன்னமெடுத்துக் காட்டின மாகலின். கிருத்தியமைந்தனுள் அனுக்கிரகமு முபசாரமெனப்படல் நிதாங் கொல்லோ? சொரூப தாதான்மிய சத்திநிபுண்மையிவைநோக்க, ஏனை வடிவங்கள் உபசாரமெனப்படுமன்றி வேறுகூறல் பொருந்தாது. உபசாரம் = அமுக்கியம். இதனை, இலக்கணையென்றுங் கூறுப. ஒருதூலே பன்னிற மணிகளுள்ளும் புக்குநிற்றல்போலத் திருமேனிதோறு நிற்குஞ் சொரூபசிவத்திற்குச் சத்தி சூக்குமமெனப்படுஞான்று மந்திரந் தூலமாகலாம். அகாராதி பிரணவ மாத்திரை ஐந்தின் கண்ணவேயுந் தோன்றிய கலைகள் அறுபத்துநான்கனுள் விசயை சௌமியை முதலிய கo-ம் அகாரத்திலும், குகை மனோன்மை முதலிய கசு-ம் உகாரத்திலும், சிவணி சிவணி

முதலிய உகரம் மகாரத்திலும், கிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தியென்னு நகரம் விந்துவிலும், இச்சுகை தீபிகை ஊர்சிகை மோசிகை ஊர்த்துவகை வியாபினி வியோமரூபிணி அனந்தை அனுதை அனுசிரிதையென்னும் கரம் நாதத்திலும் தோன்றியுள்ளனவென்னும் விவரம் ஞானபாதத்தை முதற்கட்கொண்டுள்ள சித்தாந்தசாராவளியின் கிரியாபாத வியாக்கியானத்திற் கண்டுகொளலாம். பிரணவம் "தாரகம்" என்னுமொரு பெயருமுடைத்து; சிவான்மாக்களைப் பந்தத்தினின்று "கடக்கச்செய்வது" என்ப ததன்பொருள்.

இவ்வுண்மைப்பாடுகளை யெல்லா முய்த்துணராத் தன்மைத்தாலோ? சங்கார கருத்தா (=நாசத்தொழிலுடையான்) என்பது செவிக்கின்பம் பயவாச் சொல்லா யுளதே யென்றெண்ணி யிடைவார்கடுப்ப, இறை திருமேனி சுத்த மாயையென்பதைக் கேட்டன்மாத்திரையே அது மாயையா வென்றருவருப்புறூஉ மொருபெற்றிமைத் தாலோ? சிலர்கொள்கை மாறுகோ ளடைந்துளது; அடைகின்றது. அக்கொள்கை— யாடு கரும்புவிடுத் ததன்றழை தின்றலையும், தேளுக்கஞ்சிப் பாம்பின்வாய்ப் படுதலையு மொக்கும்: பிரணவ நிந்தை இகத்தும் பரத்தும் கேடுபயக்கும் எண்க.

வாசா மகோசரமும், இதன் ரூடார்மொழிகளும் "வாசா மகோசராகக்தோ வாங்மனோ கோசரஸ் ஸ்வயம்|" என்னும் யஜுர்வேத தேஜோபிந்தூபநிஷத்தின் மொழிகளாய்த் திகழ்கின்றன.

என்ன - உவம வுருபு.

செய்யுளாகலின் இன்றியென்னும் வினையெச்சக்குறிப்புச் சொல் "இன்று" என கிற்ப தாயிற்று; விதி "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம் — தொடர்மொழி ஞகர மாய்வரி னியல்பே." என்னுஞ் சூத்திரமாம்.

நின்றிடு — இடு - பகுதிப்பொருள் விகுதி; துணிவுப்பொரு ளுணர்த்துஞ் சொல்லென்றுஞ் சொல்லுப.

"வடிவா" என்றதிலுள்ள "ஆ" ஆகவென்பதன் விகாரம்.

சத்யசைதன்யபர - வடநூன் முடிபிற்று.

மானம் என்னும் வடவிளவி மாதமென வழங்கப்படுமாறு மநஸ் என்னும் வடவிளவி மகரை (மனசு) என விகாரப்பட்ட வழி "மனது" என வழங்கப்படுவதாயிற்று.

அத்துவிதம் - (சுவெஅதம்) அத்வைதம் என்பதன் விகாரம்.

"பரதெய்வத்தை" "மூலமுதலை" "முதற்கடவுளாயபொருளை" "வாசா மகோசரத்தை" "சுப்பிரமணியத்தை" என்பன ஒருபொருளின்மேல் வந்த பல பெயர்கள்; "ஒருபொருட் பல் பெயர் பிரிவில வரையார்." என்பது சூத்திரம்.

இம்மூன்று திருப்பாட்டாலும் பாயிரம் பகரப்பட்டது. கடவுள் வாழ்த்துத் தொகையின் பகுதிகளுள் இது தெய்வவணக்கத்தை கூறியபடி. (கூ)

கடவுள் வணக்க முற்றிற்று

க. கருணைக் குகப்பிரமம்

சுருதியின் றிறமான கருமாதி மூன்றினுந்
துகளற்ற சைவதந்த்ரஞ்
சொன்மிக்க சரியாதி நான்கினுங் கடையிற்
றுலக்குசன் மார்க்கமென்னும்
பொருவின்மெய்ஞ் ஞானவத ரொன்றுமே யேழையேன்
புந்திக் கியைந்தததிலே
புரையற நடந்தசி பதப்பொலிவை யெய்தாது
புன்செயலி னின்றவெற்குத்
திருவரு ளிலாதத்தை யுறுவதின் றென்றுனது
திவ்வியசமு கத்தைநாடச்
சிந்தைதந் திதுகாறு மாண்டநீ முற்றினுந்
திருவுள முவந்துநெய்தைக்
கருணைகூ ரென்னுட் கலந்தருள வேண்டுமே
கங்குல்பக னீத்தநிலையில்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 1

(ஆன்மாவினது) குற்றம் அற, ஞானம் நிகழ வெழுந்தருளுஞ் சின்மயானந்தமே! கருணைக் குகப்பிரமமே!

வேதத்தின் பாகுபாடான கருமம் உபாசனை ஞானமென்னு மூன்றனுள்ளும், குற்றமற்ற சைவாகமஞ் சொல்லுகின்ற மிகுத்த சரியை கிரியை யோகம் ஞானமென்னு நான்கனுள்ளும், ஈற்றிலே விளக்கப்படுஉஞ் சன்மார்க்கமென்னும் ஒப்பற்ற மெய்ஞ் ஞானவழி யொன்றுதான் எளியேனது கருத்திற்கு (இப்பொழுது) இயைந்தது. அவ்வழியிலே குற்றமற நடந்து (ஸாமவேத மஹா வாக்யத்திலுள்ள) 'அஸிபத' மாட்சியினை யடையாமல் அற்ப கருமங்களி னிலைத்து நின்ற வெனக்கு, அம்மாட்சியினைத் திருவருட்சகாயமின்றி (எவரும்) அடைவதில்லையென நிச்சயித்து உன்னுடைய திவ்விய சமுகத்தையே விரும்ப மனங்கொடுத்து இதுவரையிலும் ஆண்டுகொண்ட நீ, முடிவுவரையிலுந் திருவுள்ள மகிழ்ந்து பெரியகருணை கூர்ந்து எனதுள்ளிடத்தே இரவுபகலில்லாத நிலையிலே கலந்தருளல்வேண்டும்.

கங்குல் = இரவு = மறப்பு ; பகல் = நினைப்பு. இவை, முறையே கேவலம், சகல மெனப்படும். அஃபித விவரம் இத்நூலிடை வண்மையென்னுந் தொடக்கத்துப் பத்தி லினிதுவிளங்கும். (தந்த்ரம்) தந்திரமெனப்படும் ஆகமங்களில் வாமம் லாகுளம் முதலிய அவைதிக ஆகமங்களு மிருத்தலின் அவையற்றிற்கு வேறுய் வைதிகமாய் விளங்குங் காமிகாதி ஆகமங்களென அறிவுறுத்துவார் "துகளறு சைவதந்த்ரம்" என்று அடைகொடுத் தோதினரென்க. இதுபற்றிய நியாயங்கள் இத்நூலிடைப் 'பயின்றறிபவன்' என்றற்றொடக்கத்துப் பத்துழை நன்கு விளங்கும். குகப்பிரமம் என்பதன் பொருள், 'பன்மதத் தொறுவெலாம்' என்றற்றொடக்கத்துத் திருப்பாட் டுரைக்கட் பன்னியாயிற்று.

"தலக்கு சன்மார்க்கம்" என்னுந்தொடர் 'கூட்புகரம்' என்பது போல வந்தது. 'தலக்கு' என்பது ஹீனத்தொகையா யிருத்தலின் அதன்கணுள்ள வன்றொடர்க் குற்றுகரத்தின் முன் வந்த வல்லினம் மிகாநியல்பாயிற்று ; "இயல்பினும் விதியினும்" என்றற்றொடக்கத்துச் சூத்திரத்தில் 'விதவாதன சிறுபான்மை மிகா' எனக்கொள் பொருளில் இஃதமையும்.

அதனை எனற்பாலது "அத்தை" என மரீஇயிற்று ; (திருவாசக அதிசயப்பத்தில்) "இத்தை மெய்யெனக்கருதி" என்புழிப்போல.

நெய்தை = பெருமை.

கருணை கூர் = கருணை கூர்ந்து ; விகுதி குறைந்த ஹீனயெச்சம். இதன்கட் கூர் என்னும் உரிச்சொல்லே பருதி.

கருணை என்ற வடசொல் ஈறு திரிந்து "கருணை" எனவாயிற்று.

"வேண்டும்" என்பது ஒருவகை வியங்கோள் ; உம் - விகுதி.

கரிசு = குற்றம்.

தங்கைச்சடை யென்றுமொரு புணர்மொழி போன்றதே "கருணைக்குகப்பிரமம்." (க)

எழுமொரு குணக்கினு மிறங்கொரு குடக்கினு
மிலாதுச்சி தன்னிலொளிசெய்
இனனிற்கி னிழலற்ற நீர்மைபோன் முதனூ
லிரண்டினக டாகநிமிரும்
வழுவில்வே தாந்தசித் தாந்தசம ரசசாத
மார்க்கத்தி னிற்கிலுபய
வாதமுந் தோன்றற் கிலக்கற்ற தீர்வையா
மௌனமது தோன்றுமதுவே
முழுமுதற் பரமான நின்னகண் டாகார
மூலமெய்ஞ் ஞானமெனவே
மொழிசிதா காசதே சோமயா னந்தமாய்
முடிகின்ற வுண்மையுணராக்.

கழுதென்ன வின்னமுஞ் சுலவுகுண மெய்தினுன்
கருணைக்கு மாளாவனோ
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 2

உதயத்திற் குரியவொரு கீழ்த்திசையிலும், அத்தமயத்திற் குரியவொரு மேற்றிசையிலுமில்லாமல் உச்சியிலே ஒளியைச் செய்கின்ற ஞாயிறு (=சூரியன்) கின்றக்காற் (காணப்படுகின்ற எப்பொருளுக்கும்) சாயையில்லாத தன்மைபோல முதனூலாகிய வேதம் ஆகமமென்னும் இரண்டின் கடுவாகவோங்குங் குற்றமற்ற வேதாந்த சித்தாந்த சமரசமென்னும் உண்மைநெறியிலே நிற்கின், (வேதத்தின் அத்தமாகிய வேதாந்தமே மேல் ஆகமத்தின் அத்தமாகிய சித்தாந்தமே மேலென்னும்) வாதமிரண்டுந் தோன்றற் கிடனில்லாத முடிவாமொரு மௌனந் தோன்றும். தோன்று மதுவே முழுமுதற் பரம்பொருளான உனது அகண்டாகார சிரேட்ட மெய்ஞ்ஞான மென்று (பெரியோர்) பேசுஞ் சிதாகாச தேசோமயானந்தமாக முடிகின்ற வுண்மையை யுணராத பேயைப்போல இன்னமும் உழலுங்குணத்தை யானடைவ னேல் உன்னுடைய கிருபைக்கும் பாத்திரவா னுவேனே.

வேதாந்த சித்தாந்த சமரசசாத மார்க்கமாட்டே மௌனந்தோன்றுமென அறிவுறுத்த நியாயத்தைத் தாயுமான சுவாமிகள் சித்தர்கண மென்னும் பத்தில் "வேதாந்த சித்தாந்த சமரச கன்னிலே" என்றும், சின்மயானந்தகுருவென்னும் பத்தில் "மேற் சமயங்கடந்த மோன சமரசம்" என்றுமுரைத்தருளிய வாற்றை நினை மறியலாம். இங்ஙனம் 'வேதாந்த சித்தாந்த சமரசம்' எனத் தாயுமானசுவாமிகளது திருவாக்காகக் காட்டப்பட்டதிற்போந்த சித்தாந்தம் ஆகமாந்தமேயாம். இக்கிச்சயம், திருமூலரது திருமந்திரத்தே ஆறந்தமென்புழி—

"வேதத்தி னந்தமு மிக்கசித் தாந்தமும்
நாதத்தி னந்தமு நற்போத வந்தமும்
ஓதத் தகுமெட்டி யோகாந்த வந்தமும்
ஆதிக் கலாந்தமு மாறந்த மாமே."

என்று கூறப்பட்ட ஆறந்தத்தினையே தமதுபாடலில்—

"வீறியவே தாந்தமுதன் மிக்க கலாந்தம்வரை
ஆறுமுணர்ந் தோருணர்வுக் கன்புவைப்ப தெந்நாளோ."

என்று அச்சுவாமிகள் கூறிக்கொண்டமையானும், அவர் அத்திருமூலர் மரபிலே யெழுந்தருளிய மௌன தேசிகர்பால் வீடுபயக்கு மெய்ஞ்ஞானோபதேசம் பெற்றுளா ரென்பதனானும், அஃதும் "குருமௌனி மலர்த்தாளே யனுதினமும் வழுத்தல் செய்வாம்" "மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன குருவே" என்னுமவருடைய வாக்குக்களிற் பெறப்படலானும், திருமூலர்

கூறுமாறே யவருங் கூறுவரென்பது கொளக்கிடத்தலானும், மேலுமத் திருமூலர் வேதத்தின் அந்தமும் ஆகமத்தின் அந்தமுமாகிய இரண்டந்தமும் பெரியோர்க்கு அபேதமேயாம்; அவைகளே வேதாந்தமுஞ் சித்தாந்தமுமாமென்னும் பொருள் போதர—

"வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாத னுரையிவை காடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே." எனவும்,

"சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே"

எனவு மருளிச்செய்தமையானும் எறுழுறும். இஃதோராதார், தமிழ்ச் சிவஞானபோதமுதலிய பதினன்கு நூல்களுமே சித்தாந்த மெனப்பட்டனவென்ப. இந்நூல்க டோன்று முன்னரேயே வேதாந்த சித்தாந்த சமம் விளம்பு மத்திருமந்திர நூல் தோன்றியுளது; அது, திருஞானசம்பந்தப்பெருமானுலுங் கண்ணுறப்பட்ட தென்னுஞ் செய்தியையும் அவ ருணரகில்லார். போந்த மந்திரப்பாடலிற் "சிறப்பும் பொதுவும்" என்னுந் தொடரைப் "பொதுவுஞ் சிறப்பும்" என மாறிவரைகின்றனர் சிலர். அது, முறைகினிறைப் பொருள்கோட் கியையுமாயினும் பாடம் அப்படியன்று. பாடத்தை எதிர் நிரணிறையாகக் கொள்ளலாம். 'மூலனுரைசெய்த மூவாயிரத்தமிழ்' என்றபடி இம்மந்திரநூல் ஈ,000 - பாடல்களா யிராமே பலபாடல்களா அதிகங் கொண்டுளது. அவ்வதிகத்துட் சில, முன்வந்தவாறே சிறிது சிறிது பேதமாகப் பின்னும் வந்துள்ளன. அவையொழிந்த ஏனைப்பாடல்க ளெவ்வாறு புக்கன வென வறிதி லிக்காற் கூடுவதன்றுயினும் நூன்முற்றிய பின்னரும் அத்திறப் பாடல்களா ஆக்கியோரே பாடி அவையடக்கம், திருமூலர் வரலாறு, குரு பாரம்பரியம், ஆகமச் சிறப்பு, வேதச்சிறப்பு முதலியனவாகச் சேர்த்திருக்கலா மென்றுகோடல் பொருந்தும். அம்மூலர் மரபில் வந்த தேசிகரொருவர் தெரித்தருளியது—

"வேதாக மத்துணி பிரண்டில்லை யொன்றென்னவே
வந்த குருவே"

என்று தாயுமானூர் கூறியருளியதிற் பெறப்படுதலின், வேதச்சிறப்புப் பாடல் களா வேதத்துவேஷ புத்தியுடையார் இஞ்ஞான்று தள்ளிவிட நினைதல் நிரம்புவதன்று. இங்ஙனங் கொள்ளாக்கால், அவரவர் சம்மதப்படி கோடலு நீத்தலு மேற்பட்டுச் சுந்தோபசுந்த நியாயமாய் முறைமுற்று மொழிவடையும்; கூர்த்த புத்திகொண் டுணர்க. உபநிடத நூலுள் ஒன்றிற்போந்த சொல்லும் பொருளும் பலவற்றிலும் போந்து வலியுறுகின்றன. அப்போக்கினைக் கொண்ட இம்மந்திரநூலும், மற்றை நூல்களுங் கூறியது கூறலென்னுங் குற்றத்திற் குட்படா.

(வேதாந்தார்த்தமிதம்ஜ்ஞாகம் எித்தாந்தம்பரமம்சுபம் ।)

"வேதாந்தப் பொருளாகிய இஞ்ஞானம் பரமசுபமாகிய சித்தாந்தம்" என்று மகுடாகமம் வழங்கலும் ஈண்டுணரக் கிடப்பதொன்றும். வேதாந்தமென்றது வேதத் தின் ஞானகாண்டமாகிய உபநிடதங்களையே. அவைகளிற்முனே கருமத்தினும் மேலாய யோகமுங் கூறப்பட்டுளது. அவ்வாறுமின், ஆகமமும் மூன்று கூறுகளே யெண்ணப் படும். வேதாகமங்களின் நடுவே "இரண்டினகடு" எனப்பட்டது. அகடு = நடு. இந்நடு எவ்வாறறியத் தக்கதெனின்,—உதயக்கிழ்த்திசைக்கும் அத்தமய மேற்றிசைக் கும் இடைவாயுள்ள உச்சியிலே ஒளிசெய்கின்ற சூரியனைக் குறிக்கும்வழியே இரண்டத்தமுமொன்றுக வறியத்தக்கதென்க. விவரம் அடியிலுள்ள படத்திலுளது. இதுதான், வேதாந்த சித்தாந்த சமரசம். உலகிலே நடுவுநிலைமை, நடுவுநிலை நிற்றலென வழங்கப்படுவனவு மிதனையுணர்த்த வுள்ளனவென்க. உச்சியிற் காணப்படு ஞாயிற்றி னது பேரொளியில் உதயம் அத்தமயமென்னு மிருதிறத்துங் காணப்படு பலவகைச் சிற்றொளிகளு மடங்குதன்மானச் சரியையில் ஞானம், கிரியையில் ஞானம், யோகத் தில் ஞானமெனக் கூறப்படுவனவும் மேலாயவொரு ஞானத்தி லடங்கும். இதனை, ஞானத்தில் ஞானமென்றுங் கூறுப. இஞ்ஞானம் வாக்கு மனதீதமாகலின், இங்ஙனம் மௌனங் கூறப்பட்டது. இது சுவானுபூதிமான்கள் யாவரு மொப்புமுண்மையே யாம். உபநிடதங்கள் ஞானங்கூறுமென்பது பரிபூரணானந்த போதவுரையாய சிவசூரியப்பிரகாச எடுத்துக் காட்டுக்களுள்ளும் உணரலுறுவார் இனிதுணரக் கிடக் கின்றது. இத்தூலகத்தும் வந்துழிக்காணலாம். இருபத்தெட் டாகமங்களுள்ளுஞ் சில நவீனங்க ளுளவாயினு மவற்றுள் எற்புடைமையில் வருவனவெல்லாம் எம்மாலென்று கொள்ளப்படுவனவா மென்பது முணர்க.

தோற்றுவாய் பற்றியெழுஞ் சாத்திரதருக்கம் இறந்துபடற்கொரு முடிபாக முன்னர்த்தோன்றுவதும், மேலெய்தும் இறுவாய்ப் பூரணானந்த உரைக்கடங்கா தனைற்குப் பின்னர்த்தோன்றுவதும் 'மௌனம்' என்பது இத்திருப்பாட்டி னுணரக் கிடக்குமோ ருண்மையாம்.

வேத + அந்தம் = வேதாந்தம்; சித்த + அந்தம் = சித்தாந்தம்; வடமொழிப் புணர்ச்சி; தீர்க்க சந்தியென்ப.

மூழுது – "மூழு" எனுசாமைப் பொருளுணர்த்து முரிச்சொல்.

கழுது = பேய்.

இன்னம் – இதன்மேல் என்னும் பொருளோத்தரு மோரிடைச்சொல்.

(உ)

நடுவு நிலைமை



வேதாந்த சித்தாந்த சமரசம்

கற்றவர்கள் கற்றபடி யேநடை தராதீன
கருமவா தத்திலாடு
கறங்கெனச் சுலவவுங் கல்லார்க ணல்லநிட்
காமமுற் றுஞ்சிதடற்போற்
சிற்றறிவின் வேதாந்த சித்தாந்த சமரசந்
தேராத புன்மையதனாற்
சிந்தைபுடை கொண்டுநிச் சிந்தைநிலை கூடாது
திரிபுறவு மாடலுன்றன்
கொற்றவா ணைக்குளுள மாயையி னியற்கையோ
கொடுவினைத் தொடர்பின்வலியோ
குற்சித மலச்சீவ சுபாவமோ கற்றுமென்
கொள்கைநன் காகவிலையே
கற்றைச் சடாடவிக் கடவுள்கல் லாலகங்
கைவைத்த ரகசியத்தே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 3

ஞான சாத்திர வுணர்ச்சியுள்ளவர்கள் அவ்வுணர்ச்சி வழியே நடவாது தாழ்ந்த (இல்லற) கருமங்களி லீடுபட்டுச் சுழல்கின்ற காற்றாடிக்கு நிகராகச் சுழலவும், அச் சாத்திரவுணர்ச்சி யில்லாதார் நல்ல துறவறத்தைப் பொருந்தியுங் குருடர்போலச் சிற்றறிவினான் வேதாந்த சித்தாந்த சமரச நிலையையுணராச் சிறுமையினாற் சிந்தை யானது குழம்பி நிச்சிந்தையா யிருக்குஞ் சமாதிநிலை கூடாது ஒன்றைவிட்டொன்று பற்றுந்தன்மையைப் பொருந்தவுஞ் செய்தல் உன்னுடைய பராக்கிரம ஆணைக் குட்பட் டிருக்கின்ற மாயையினது இயற்கைக் குணந்தானோ? (அல்லது) கொடிய வினைத் தொடர்ச்சியின் வல்லமைதானோ? அல்லது பெரியார் அருவருக்கத்தக்க ஆணவத்தோடு முள்ள சீவவியல்பு தானோ? ஞானசாத்திர வுணர்ச்சியைப் பொருந்தியு மென்னுடைய கொள்கையானது, காடெனச்செறி யுரோமத் தொகுதியாய சடாபாரத்தினையுடைய பரமாசாரியன் (சனகாதி முனிவர்க்கு நிற்குநிலை யுணர்த்துமாறு) கல்லால விருக்கத்தி னடியிருந்து சின்முத்திரை பிடித்த வலக்கரம் வைக்கப்பட்ட தகராலயரகசியத்தின் கண்ணே நன்றாகப் பலிக்கவில்லையே.

தகராலயரகசியவிவரம் மாணப்பெரிதாகலின் அஃதிங்குக் கிளத்தற் கமையாது. தகராலயரகசிய முலத்தும் அதனுரையாஞ் சதானந்தசாகரத்தும் உணர்ந்து கோடலாம்.

கொற்றம் = பகையைக் கொல்லுகிறம். இங்கே காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியமென்னும் உட்பகையாறையும் அதன் மூலத்தையும் அடியார்மாட் டுறாது கொல்லுகிறமெனக் கோடல்வேண்டும்; தொழிற்பெயராகவிற் கொல் - பகுதி; அம் - விகுதி; து - சாரியை; ஏனையவை சந்தி.

குற்சிதம் - குத்ஸிதமென்னும் வடசொல்லின் விகாரம்.

ரகசியம் - 'ரஹஸ்யம்' என்பதன் விகாரம். (சு)

புன்மனப் புன்மையே பொதுளுமதி யீனவென்
புத்திக் கியைந்தவாறாப்
புகலவுள வோரத்து விதமார்க்க மொன்றையே
பூர்த்தியுர மென்னுமுடிபாய்
வன்மையொடு கொண்டிச்சை யாற்செய்யும் வழுவெலாம்
வத்துவா மெற்கிலையெனா
வாய்ப்பறை யறைந்துநின் றாலுமம் மட்டிலொர்
மனத்தெளிவு கூடுமதுவும்
இன்மையுற நல்லத்து விதமான வருண்ஞான
மில்லாது முத்தியிலையென்
றேசற விளக்குசித் தாந்தமுங் கற்றுநா
னிழிவாக வென்கண்விளையுங்
கன்மங்க ளுக்குட்கி யல்லலுவ ரமிழ்கிறேன்
காப்பதுனை யன்றியாவர்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 4

அற்ப மனத்தினது அற்பத்தன்மையே அடர் மதியீன முடைய எனது புத்தியின் றரத்திற்குத் தக்க வழியாகச் சொல்லவுள்ள ஒருவகை அத்துவைத மார்க்கமொன்றைத் தானே பரிபூரண ஞானமென்னு முடிபாக உறுதியுடன் பற்றிக்கொண்டு ஆசையா லியற்றுங் குற்றங்களெல்லாம் பரப்பிரம வத்துவாமெனக் கில்லையென்று வாய்ப்பறை முழக்கிகின்ருலும் அவ்வளவிலே எனக்கொரு மனத்தெளிவேனுஞ் சித்திக்கும். அத் தெளிவு மில்லாதொழிய, சுத்தாத்துவைதமாகிய திருவருண்ஞான மில்லாமன் மோக்க மின்றென்று களங்கமற விளக்காகின்ற சித்தாந்த சாத்திரத்தையும் யான் கற்று, (அச்செக்கெறி திடப்படாமே) இழிவாக என்பாற்ருேன்றுந் தொழில்களுக்கு அஞ்சித் துன்பக்கடலில் அமிழ்கின்றேன். இங்ஙனம் என்னைக் காத்தருள்பவர் உன்னையல்லாது யார்? [எவருமில்லையென்றபடி].

(க) "நல்லத்துவிதம்" எனப்பட்ட சுத்தாத்துவைதம்—இந்நூலுட் பலவிடத்தும் பிறங்கக் கூறியிருப்பினும் பரம்பரனென்றற் றொடக்கத்துப் பத்திலும், வேதமென்றற் றொடக்கத்துப் பத்திலும் விரித்துரைக்கப்பட்டது. இவற்றினின்றுஞ் சிவசூரியப்பிரகாசத்தே விளக்கிக் காட்டினமையே நனி பெரிது. 'சுத்தம்' அடைமொழியென்பதூஉம், அன்னணங் கோடலே சால்பிற்றென்பதூஉம், இவ்வத்துவைதத்திற்கு வேறாக—

(உ) அனாதியத்துவைதமென்னும் பெத்தாத்துவைதமும்,

(ங) உபாசனாத்துவைதமென்னும் பாவனாத்துவைதமும்

உரைக்கப்படு மென்பதூஉஞ் சுருதி, யுத்தி, அனுபவ வாயிலாக இனிது விளங்கக் கூறியிருத்தலைக் 'குமரகுருதாசசுவாமிகளது சுத்தாத்வைதநிர்ணயம்' என்னும் நூலிற் கண்டுகொள்க.

வழுவெலாம் - ஒருமை பன்மை மயக்கம்.

"அல்லலுவரமிழ்கிறேன்" என்றதிற் கண்ணுருபு தொக்கது.

உவர்=உப்பு; கடலுக் கிலக்கணை. இலக்கணையாவது உரியபொருளைவிட்டு அப்பொருளின் சம்பந்தியை யுணர்த்துவது.

அமிழ்கிறேன் என்பதிலுள்ள "கிறு" நிகழ்கால இடைநிலை; இது செய்யுட்கண்ணும் வரலாமெனற்கு ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளது திருவீழிமிழலையமகம் உ - ஆந் திருப்பாட்டிலே "பணிகிறேன் மிகுமாதையே" என வருதன் முதலிய இலக்கியங்களும், இலக்கண நியாயங்களுங் காசியாத்திரை யென்னுநூலில் "ஏகத்துமுன்" என்றற்றொடக்கத்து வெண்பாவி னடியிலே யினிது விளக்கப்பட்டன. (௪)

இதுகாறு நீயென் பொருட்டயர்ந் துள்ளசெய
லியாவுநன் குய்த்துநோக்கில்
எப்படியு நானுன் னடித்தொண்ட னென்பதூஉ
மென்கடவு ணீயென்பதூஉம்
விதியாகு மல்லாது பிசியாவ தின்றென்
விவேகசூ னியத்தினந்தும்
வியர்த்தவினை யசுசிகண் டென்னைநீ விடினுநான்
விடுவதின் றமிதப்பொலாச்
சுதனெனினு மன்னருட் டாதைதள வன்மையுந்
தோன்றநடு வுண்டுகொல்லோ
சூரற்கு மைத்திமிர நீக்கவொரு பிரயாசஞ்
சொல்லலா மோவெனாது

கதழ்வோவு மனமாசு நின்னருண்மு னிற்குமோ
கபடொன் றிலாதபெரியோய்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 5

இதுவரையிலும் நீ என்னிமித்தமாகச் செய்துள்ள செயலனைத்தையுஞ் செவ்வனே யுய்த்துநோக்கினால், எவ்வாற்றானும் யான் உன்னுடைய அடித் தொண்ட னென்பதும், நீ என்னுடைய கடவுளென்பதும் மெய்யாகுமன்றிப் பொய்யாவதின்று. எனது அறியாமையி லுதிக்கும் பயனற்ற கருமத்தையும், அசுத்தத்தையுங் கருதாது நீ என்னைக் கைவிட்டாலும் யான் உன்னை விடுவதில்லை. அளவற்ற (பொல்லாங்கு புரியும்) பொல்லாத மகனென்றாலும் அவனை, நிலைத்த கிருபையோடுங்கூடிய தந்தையாயுள்ளான் றன்னி விடற்கு அவன்மாட் டொரு வன்னெஞ்சமு முதிக்க நியாயமுண்டோ? இருண்ட இருளை நீக்குஞ் செய்தியிற் சூரியனுக்கு மொரு பிரயாசங் கூறலாமோ? வஞ்சக மொன்றுமில்லாத பெரியோனே! என்னுடைய அற்பமதியின்கட் பொருந் திய மாசானது உன்னுடைய திருவருளுக்கு முன்னைகவு நிற்குமோ? [நில்லாது என்றபடி.]

திமிரம் = இருள்; வடசொல். இவ்விருள், மக்கள்கண்ணிற்கும், இக்கண்ணினைய பிறகண்கட்கும் ஒளியிலாஞான்று காணப்படுவதே. இஃதடியிற் காட்டப்படுஉம் ஏதுக் களால் அவ்வொளி யிருளென வழங்கப்படுபவற்று ளொன்றுமல்லா வோரியல்பிற்று யுள்ள வெளியெனப்படுமேயன்றிப் பிறிதொரு பொருளெனப்படாது. செஞ்ஞாயிற் றின் ஒளியுள்காலமே பகலெனவும், அஃதில்காலமே இராவெனவும் வழங்கப்படு கின்றன. இப்பகல் இராவென்பனவற்றைப் பூஞையின்கண்ணும், அக்கண்ணினைய பிறகண்களும் ஒன்றுகவே காண்கின்றனவாகலின் அக்கண்கள் ஒளி வேண்டாமலே நோக்குந் தன்மையவாம். இக்கண்ணுடைப்பிராணி, இருளென்பதையே யறியாது; பானு வெப்ப முண்மையாற் பகலும், அஃதின்மையால் இராவு மறிந்து கொளத் தக்கது; மதி யுடுக்களின் றோற்றத்தானு மதனையறியுமென்றல் இங்ஙன நிச்சயிக்கப் படும். கூகை, எதனையும் பகற்காலத்தே பாராவியல்பும், இராக்காலத்தே பார்க்கு மியல்பு முடைத்தாகலின் அது, "பகற்குருடு" எனப்படும். விரியன்பாம்பும் இத்திறக் குருடே. இவ்வியல்புடைப் பிறவும் அன்ன. இத்திறவியல்பிற்குக் கண்ணமைப்பே காரணமாம். செஞ்ஞாயிற்றைப் பெரிதுநோக்கிய மக்கள்விழி சிறுபொழுதொன்று நோக்காது நிற்றல்போற் கூகைவிழியு மஞ்ஞாயிற்றொளிமுன் மாழ்கிநிற்கு மென்புழி யும் எத்துணைச் சிறிய வவ்வொளிமுன்னுங் கூகைவிழி குருடுபடு மியல்பிற்குக் கண்ணமைப்பே காரணமெனல் போதருமால். இக்கண்கள், ஞாயிற்றி னொளியினையே யிருளாகக்காண்பா னமைக்கப்பட்டபடி அவ்வோரியற்கை நிலைக்கள வெளியினையே யிருளாகக்காண்பா னமைக்கப்பட்டது மக்கள்கண்ணென நிச்சயிக்கலாம். மக்கள் கண்ணு மிதுபோல்வனவும் அவ்வியற்கை நிலைக்கள வெளியினை உள்ளபடியே யறியா

நீர்மைய வென்பதூஉம் இங்ஙனமுணரக் கிடப்பதென்க. ஈண்டிருளிற் காண்டலின்றி நிற்குநீர்மையுடைக்கண், இருளாகக்காணு மென்பதென்கொல்? எனின்,—ஒளியினின்றுகொண் டிருப்பானது விழி, தனக்கணித்தாயுள்ள யாதொரு விருக்கத்தின் சாயையாகக் காணப்படூஉ மிருளையுங் காண்டலின் அவ்வாறு கூறல் கூடுமென்க. கண்ணல்லாத மற்றையுறுப்புக்கள், ஒளியோடு கூடியஞான்றுங் காண்டலின்றி நிற்குந் தம் பெற்றிமையால் அங்ஙனங் கூடிக்கா ணுணர்ச்சியுடையது கண்ணேயென நிலை பெறுத்த வுளவென்க; கூறிப்போந்த வியற்கை நிலைக்கள வெளியே இருளெனநிற்கு மச்சாயையாகக் காணப்படுவதென்க. ஈண்டு, கண் காணாத்தன்மையே யிருளெனின்,—காணுந் தன்மையுடைக் காலத்தும் விருக்கத்தின் சாயை யெனப்படூஉ மிருள் காணப் படுகின்ற தெனுமாற்றான் அதற்கது வேறென்பது சிறக்கும். ஆவதேல், ஒளி தடையுண்ட மாத்திரையே அச்சாயை யுளதாகலின் ஒளியின்மையே யிருளென வுரைக்கலா மெனின்,—ஒளியிலா நிலைக்களம் சூனியமன்று; வெளியெனும் பூதமுண்மையின். அத்திறவுண்மைக்கு வேறாக ஒளியின்மை அல்லது இருள் இருக்குமென்பது சால்புடைத் தன்று. இதுவேயுமன்றி, கூகையினது விழிக்குக் கனலியொளியே யிருளாகக் காணப் படுகின்றதென்பது கொண்டும் அது மறுக்கப்படும். ஒளியிலாஞான்றும் பூஞையின் கண் நனிகாண்கின்ற தென்பதூஉம் இம்மறுப்பிற்குத் துணைநிற்கும். விழியிலார்க்கும், இமை சார்த்திக் கொண்டார்க்கும், மாலைக்கண்ணர்க்கு முறூஉ மிருணீர்மை 'ஒளியின்மையே யிருளெனக்கூறலாம்' என்பதிலடங்குமாகலின் மறுப்பு நிலையுதலுறும். இன்மையை வடநூலார் "அபாவம்" என்றுங்கூறுப. நீளிடைவிண், நீனிறமாகக் காணப்படலும் வெளிதானே யிருளாகக் காணப்படுகின்ற தென்பதை நிலைபெறுத்தும். ஒளி பெறீஇயும் பார்வை செயலற்று நின்றுவிட்ட நிலைக்கள வெளிமட்டுமே நீனிற மாகக் காணப்படுகின்றதெனக் கோடலாம். அந்நிலைக்களத்துட்பட்ட வெள்ளிடையும் பிறவுங் கண்கூடு (பிரத்தியக்ஷம்) என்றுங் கழறப்படலுண்டன்றோ; உய்த்துணர்க.

ஈண்டிருளே சாயையென்னும் பெயருடைப் பொருளாகவும், கானலே கான னீரென்னும் பெயருடைப் பொருளாகவும் வேறுவேறு வழங்கக்கிடந்தவாறு கூறிப் போந்த வோரியற்கை வெளிதானே யிருளென்னும் பெயருடைப் பொருளாகவும் வழங்கக்கிடப்ப தாயிற்றால். வெளியே யிருளாகக் காணப்படுதலினாற்றான் இது பூதவிரு ளெனவும் வழங்கப்படுகின்ற தென்பாம். ஆயினும், காண்டக்க பொருள்களைக் காணு மாறு மனுடர்விழிக்கு விளக்கத்தினை நல்கும் ஒளியினைப்போல மறைப்பினை நல்குமொரு பொருளன்று இவ்விருள். இமை சார்த்திக்கொண்டான் விழியினுட்புக்கு அது மறைத்ததின் றென்பது கொண்டும் இது மதனுறுத்தப்படும். 'புகூஉம் புக்கு மறைக்கும்' என்று புகறலுளதேல் அஃது எரிகின்ற விளக்கின் நாப்பட் காணப்படு களங்கம் திரி கரிதலினுறுவதென்றெண்ணாது, ஈண்டிருந்த விருள் இவ்விளக்கினடுவே புக்கதாமென்பான் கூற்றினையொக்கும். இப்படிக் கூறியதை எங்காது கேட்டது முண்டு. மறைத்தற்றொழிலுங் கரியநிறமும் இருண்மாட்டேற்றி வழங்கொரு வழக்க மானது அஃதொரு பொருளெனக் கொண்டேற்பக்கூறும் வியவகாரத் தெய்தியதாகும்.

ஒளிமுன் இருளடங்கி கிற்கூடங் கெடுடமென்பனவும் இவ்வியவகாரத்திற் கொளக் கிடப்பனவே. என்னை? இருளொரு தனிப்பொருளன்மையின். "பாசம் பகலோன் முனரே திமிரம்—நாசம் பெறல்போல்" என யாரும் (வியவகாரம்பற்றியே) கூறினும். இன்னன பல்ல; பல்ல. கிற்க. வெளியினின்றும் இருளை வேறுபடுத்தலும், வேறு படுத்தப்பட்ட அதனை விழிப்புடை விழிக்கட் சாரவைத்தலும், சாரவைக்குமவின் விழிதோக்காது கிற்றலை மெய்ப்பித்தலும் ஏவருஞ் செய்யாதிருக்குங் காறும் இருளொரு தனிப்பொருளென்றல் ஏற்புடைத்தாமோ? மேல், வெளிக்கு மிருட்குஞ் சம்பந்தமுள தாகவின் வேறுபடுத்தலாகாதெனின்,—அவ்வித சம்பந்தம் (வேறுபடுத்தற்காம்) சையோகமல்லாச் சமவாயமாதல்வேண்டும். அற்றேல், ஆதித்தனு மதன்கிரணமு மொன்றெனப்படுமாறு இரண்டு மொன்றெனப்படுமேயன்றி வேறுவேறெனப் படாவே. வெளியுமிருளும் வேறுவேறென்னும் வியவகாரத்தே யிஃதியையுமாறு யாங்ஙனம்? மனுடர்விழிக்கு வெளியே யிருளாகத் தோன்றுகின்றதென்னு மெமது தீர்வைக்கே யிஃதொருபுடை யியையுமாம். இதுகிடக்க. கரியெனும் பெயரிய பொருள், எக்கோக்கிற்குங் கரிதாகக் காணப்படல் கடுப்ப இருள் காணப்படாமையின் அஃதுமொரு (தனிப்) பொருளென்பது யாங்ஙனஞ் சிறக்கும்? என்னுங் கடாவுக்கு விடைதடைப்படல், கூகை முதலிய வுயிர்களின் நோக்குகட்கு இருளென்பது ஒரு படித்தாய்க் காணப்பட்டில தென்புழியாம். இங்ஙனம், அஃறிணையுயிர்களின்பார்வை பஃறிறப்பட்டு கிற்பினும் உயர்திணை மாந்தர்பார்வையி னுறுவதே கொளக்கிடப்ப தெனக் கோடுமெனின்,—இச்சமாதானஞ் சால்புடைத்தன்று: கூறிப்போந்த பலவுங் கவனிக்கத்தக்கன வாகலின். மாந்தர்க்கும் மேம்பட்டுள்ள தேவதைகளின் விழி பூஞைவிழிபோல்வது; இரவிலும் பகலிலும் பார்வையுடைத்தாகலின் இப் பார்வையி னுறுவதே கொளக்கிடக்கு மூண்மையாகலிற் 'சமாதானஞ் சால்புடைத்தன்று' என்பது மொய்ம்புறும். இவ்வதாரனே, தேவதைகட்கு வேறுகின்று இன்பமுந் துன்பமு நுகர்பாக்கு இறைவனாற் படைக்கப்பட்ட மாந்தருடையவிழி, வெளியிலையே யிருளாகக்காண்பா னமைக்கப்பட்டமையின், அவ்விருண் மேலிடாதடங்கு மேல்வை காட்டியுண்டாம்படி அக்கினி கோளமென்னுஞ் சூரியன், இராக்கதராய சந்திரன், விண்மீன் ஆகியவிவற்றுள் ஒளித்திறங்க ளமைக்கப்பட்டன வென்பதூஉம், இவ்வழி யான் இராப்பகல்கள் அனுபவமாமாறு மாந்தர்க்கே பிரதான வாசத்தானமா மிப்பூமி யும் படைக்கப்பட்ட தென்பதூஉம் ஏற்புடையனவென் றியம்புவாம்.

மஹோபநிஷத்—"யதாதாம்ரஸ்யகாவிமா கச்யதிக்ரியயாவிப்ர புருஷஸ்யததா மலம் - - - - மலம்ஸஹஜமப்யலம்" எனக்கிளக்குமதனானே செம்பிற்களிம்பு போல்வது சிவன்மாவின்கணுள்ள மலம், அது சகசமென்பது பெறப்படுதலின் அனாதிபந்த ஆணவமென்னு மலம் இருள்வடிவிற்றென்பது கொளக்கிடக்கின்றது. களிம்பு 'காளிமா' எனப்பட்டது; கரியநிறத்ததாகலின். இதனால், உலமேயத்துள்ள மலம் இருள்வடிவிற்றென்பது கோடற் பாற்றும். இது பொருந்தக் கைவல்யோபநிஷத்—"தமஸ: பரஸ்தாத்" எனமுடிக்கும் வசனத்திலே 'தமஸ்' (- தமசு) என்று சாற்றிற்று.

மிருகேந்த்ராகமம்—ஆணவத்தின் பெயர்களைப் பசுத்துவம், பசுநீகாரம், மிருத்தியு, மூர்ச்சை, மலம், அவித்தை, ஆவிருதி, ருக்கு, கிலானி, பாவமூலம், க்ஷயம் என்று கூறி "அஞ்ஜநம்" (- அஞ்சனம்) என்றுங் கூறிற்று. ஈண்டுத் தமஸ், அஞ்ஜநம் இருளெனும் பொருள. செம்பின் வெட்டுவாய் தோறுங் களிம்பு தோன்றிநிற்றல் காணப்படுமாறு ஆணவம் சீவான்மாவிற் கலந்துநிற்கும், அறிவை மறைக்குமென்பன விங்குக் கொளக் கிடத்தலின் இவ்விருள், கண்ணுட் கலந்துநில்லாப் பூதவிருள் போல்வதன்று; சுவானு பூதி ஞானவொளி பிறத்தலுந் தனது பிரபாவமடங்கியிட வுளதாம்.

(பரிணாமயதீதாச்ச ரோதாந்தம்கார்கசித்த்விஷா ।
யதோந்மீலநமாதத்தே ததாநுக்ராஹிகோச்யதே ॥)

"ஈசுரசத்தியானது திரோதானாதிகார பரியந்தம் அம் மலசத்தியினைப் பரிணமிக் குமாறு செய்துகொண்டு சிற்பிரகாசத்தினால் எஞ்ஞான் றான்மாக்கட்கு ஞானவிகாசத் தைச் செய்யுமோ அஞ்ஞான் றனுக்கிரகசத்தி யென்று சொல்லப்படும்" என்று அம் **மிருகேந்த்ராகமம்** விளம்புமாற்றானே ஆணவத்தோடுவிராய் மலங்களுளொன்றென நிற்கும் ஆதிசத்தியாகிய திரோதானம் ஈசனை நாடார்க்கிருளாகவும், நாடுநர்க் கருளொளியாகவு மிருக்குமெனல் பெறப்படுதலின் இச்செய்தி வலியுறுத்தப்படும். ஆகாசமயமாய் நிற்கும் அச்சத்தி பொய்யாகமாட்டா தன்றோ. இச்சத்தி வாயிலாக (ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, திரோதான மாகிய மலமைந்தனுள்) ஆணவமுந் திரோதானமு நிலைபேறுறுதலுங் கோடும். இது சகம், இது பரமென இயைபினின்று காட்டும் இத்திரோதான சத்தியே மோக்கமாகிய வீட்டிற்குக் கபாட மாகவுளதாகலின், ஈசுவரானுக்கிரகத்தான் இக்கபாடந் திறந்துகாண வறியா அகில மாக்களெல்லா மறியுமாறு—

"துரியத்திருந்து கதவைத்திறந்து சுடரிற்சிறந்த சுடராய்
விரியத்திடஞ்செய் தருணற்கடம்பு மிலைவெற்பின்விஞ்சு புயனே"

எனக் **குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதியில்** வரு பாவினப் பகுதியின்கண்ணும்,

"ஈராயிர மேர்நாவனும்
ஓராயிர மோங்குன்பெயர்
மாண்போதிடு வானோவவை
நான்பேசவு நண்ணுங்கொலை
ஏனற்பர ணேழைக்கினி
தாநட்புடை யாதீயளி — அருளாற்

கயிலைக் கபாடந் திறக்கச்
செயுமற் புதவருட் சிவசே யவனே."

எனத் **திருவலங்கற்றிரட்டின்** உ-ஆங் கண்டத்தே வரு குறளடி வஞ்சிப் பாவின்கண்ணும் யாங்கூறினும்.

ஒளியின்மையே இருள், அஃதொரு பொருளன்றெனத் தருக்க சாத்திரங்களும், பார்வையை மறைக்குமொரு தனிப்பொருளே இருளெனச் சைவ சாத்திரங்களுள் ஒருசாரனவும் புகறன் முறையே முழுதும் பொருந்துமாறுஞ் சிறிதும் பொருந்துமாறு மில்லையென்றற்காம் எமதபிப்பிராயமும், ஏதுக்களும் மேலே வக்துள்ளன. இவற்றினின்றும் பிறிதோருண்மை யொல்லும் வகையே கிடைக்குமாயின் மேற்றின் மேற்றென அஃதெம்மாலுமேன்றுகொள்ளப் படுவதே.

"செயலியாலும்" என்பதில் இ – சாரியை; "தன்னெழி மெய்ம்முன் யவ்வரி னிகரக் — துன்னு மென்று துணிகரு முளரே." என்பது விதி.

"என்பதாஉம்" என்றதிற் குறில் நெடிலாகி யளபெழுந்த தாகலின் இன்னிசை நிறைக்கும் அளபெடையாம்.

பிசி = பொய்.

பொல்லாமையென்னும் எதிர்மறைப் பண்புப்பெயர் ஈறுகெடிற் பொல்லா வெனநிற்கும்; பொலா – தொகுத்தல்.

யோகம் யோகு எனநிற்குமாறு கபடம் 'கபடு' என நின்றது. (இ)

துடவைமா டாடில்ல மனைமகா ருறவுபொன்
தொழில்குலப் பெருமைமேன்மைத்
தொடர்பாதி யோம்புவிவ காரத்தி லதிமுரண்
டோன்றுநெறி நின்றநானுன்
படர்தகவு வலியாலவ் விவகார நீத்துனது
பதவுத்தி பெறுதலூங்குப்
பவுள்சென வலித்துநிற் கின்றவிக் கானீ
பராமுகம் பண்ணிலுன்றன்
திடவருட் டிறமோது சட்டநன் னீதியுஞ்
செல்லுங்கொ லென்வழக்குந்
தேயுங்கொல் விவகார மோயுங்கொ லையவொரு
திட்டமில் லாதனந்தங்
கடவைக்கு நானிலக் காயினு மளப்பிலுடல்
கண்டாலு நின்னடிமைகாண்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 6

தோட்டம், மாடு, ஆடு, வீடு, மனைவி, மக்கள், சுற்றம், பொன், தொழில், குலப் பெருமை, மேன்மைச் சினேகம் முதலியவற்றைப்பேணும் வியவகாரத்தில் அதிகவுறுதி யுண்டாம் வழியிலேநின்ற யான், உனது வியாபக வியல்பின் வல்லமையால் அந்த வியவகாரத்தினை விலக்கி உன்னுடைய திருவடியெய்தும் உபாயத்தினைப் பெறுதலே பெரிய சம்பத்தென நினைத்துத் துறவு நெறியிலே நிற்கின்ற இக்காலத்தில், நீ பரா முகஞ் செய்வையேல் உன்னுடைய திருவருள் வல்லமையைக் கூறுகின்ற சட்டத்தி லுள்ள நல்ல நீதியானதும் நடைபெறத்தக்கதாமோ? உன்முன்பாக யான்கொண்டு வரலான இவ்வழக்கும் பயனற்றதாமோ? என்னுடைய வியவகாரமும் முடிவு பெறுமோ? ஐயனே! ஓரளவில்லாமல் அனேக குற்றங்களுக்கு யானேயிடமாயிருப் பினும், அளவில்லா வுடம்புகளை யெடுக்க நேரினும் (யான்) உன்னடிமையே. காண் பாயாக.

எமது பத்துப்பிரபந்தத்திலே சஷ்டிவகுப்பென்னும் ௩௨ - சந்தபேதத்தொரு பாட்டிலே—

"இகலுந ருக்கெம னாந்தனி மந்திர
வினியவ ருக்கினி தாங்குண பஞ்சர
விமையர் களிகொள வென்றுளே — யெணி
யவர்கள் புரிதரு மங்களா"

எனவரு பகுதிக்கட் 'செவ்வேட் பரமன், பகைவராய துட்டருக்கு இயமனாக வும், அப்பகையில்லா இனியவர்க் கினியவனாகவு முளன்' என்னும் பொருள் பெறப் படுகின்றபடி துட்டரைத் தண்டித்தலும், சிட்டரைக் காத்தலும் இறைவனது நீதியி லுள்ளனவாகலின் இனி, எண்ணில் பிறப்புடம்புகளை யானெடுக்க நேரினும் இப்பிறவி நினக்கடிமைப்பட்டு நிற்கின்ற நீர்மையினால் அப்பிறவிகடோறும் என்னைக் காத்தருள் காரியமு நின் கடன்மையேயாமென்பார் "அளப்பிலுடல் கண்டாலு நினனடிமை காண்" என்றாரென்க.

ஆடு = யாடு என்பதன் மரூஉ.

உத்தி - யுக்திஃ என்னும் வடசொல்லின் விகாரம்; உபாயமென்னும் பொருட்டு.

புஷ்யஃ என்னும் வடமொழி ஆதி விருத்திசந்தியிற் பௌஷ்யஃ எனவாம். இது, "பவுள்சு" என விகாரப்பட்டது. இதுதானே அருணகிரிநாத முனிந்திரரது 'சகசம்பக்குடைசூழ் சிவிகை' என்றற்றொடக்கத்துத் திருப்புகழ்ச் செய்யுளின் 'மறையும்பொய்ப் பவுஷோ டுழல்வது' என்னுந் தொடரிலே "பவுஷு" என்றும், தாயுமானாரது 'பதியுண்டு' 'நிதியுண்டு' என்றற்றொடக்கத்துச் செய்யுளிற் 'பவிசுண்டு தவிசுண்டு' என்னுந் தொடரிலே "பவிசு" என்றும் வருவதாயிற்று. புஷ்யஃ = 'மங்களம்' என நிகண்டு - விச்வப்ரகாசம் விளக்கு நெறியானே இது, சம்பத்தென்னும் பொருளுடைத்து.

கடவை = குற்றம்; பி - நிகண்டு காண்க.

'கொல்' மூன்றும் ஐயப்பொருளில் வந்தன.

"காண்" என்னும் ஏவலொருமைமுற்று, இடைச்சொற் றன்மைப்பட்டுத் தேற்றத்தில் வருமென்றும், கட்டுரைக்கண் அசைநிலையாய் வருமென்றுங் கூறுப; விரோதமின்று. (௬)

உயிர்களை யனாதிமல பந்தத்தி னின்றுள
முவந்துவிடு தலைசெய்வதுன்
உரவனுக் கிரகவரு ளுக்கே யுரித்தென்ப
துறுதிநா னுள்ளதடியாப்
பயிலுமிது தாறும்வன் பாசபந் தத்திடர்ப்
படுமென்னை விடுதலைக்காம்
பரமநெறி நேடும் படிக்கிந்த ஞான்றெனுட்
பதிவாய வருள்வல்லபஞ்
சயமுடைப் பூரணந் தாராது மந்தநடை
தருவதால் வலிகுறைந்த
தரமா யிருக்குமோ வலதென்க ணுளமலத்
தளைமட்டு மதிவன்மைசால்
கயமா யிருக்குமோ வுள்ளபடி யோதெனது
காதற் கியைந்தகண்ணே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 7

திருவுளத்திற் பிரியம்வைத்து ஆன்மாக்களை அனாதியான மலபந்தத்தினின்று விடுதலைசெய்யுங் காரியம், உன்னுடைய ஞானானுக்கிரக அருட்சத்திக்கே யுரியதென்று (நூல்கள்) கூறுதலுறுதியே. யான் என்று காணப்பட்டேனோ அன்று முதலாக இவ்வியவகாரத்தைப் பயிலாநின்ற இன்றுகாறும் வலிய பாசபந்தத்திற் சிக்கியிடர்ப்படுமென்னை, விடுதலைக்குரிய மேலான மார்க்கத்தைத் தேடும்படிக்கு இப்போதென்னுள்ளே பதிவாகிய அருட்சத்தியானது, பிரபஞ்ச வெற்றிப்பாடுடைப் பூரணத்தை (எனக்கு)க் கொடாமல் அதனிற் குறைந்த பாகமாகிய நடையைக் கொடுத்தலால், (அவ்வருளானது) மதுகை குறைந்த தரமாகத்தா னிருக்குமோ? அல்லது என்பாலுள்ள பந்தம் மாத்திரம் அதி பலஞ்சான்ற பெருமைத்தா யிருக்குமோ? என்னுடைய ஆசைக்கியைந்த கண்ணொப்பானே! உள்ளபடி சொல்லியருள்வாயாக.

"விடுதலைக்காம் பரமநெறி நேடும்படிக்கிந்த ஞான்றெனுட் பதிவாய வருள்வல்லபஞ் சயமுடைப் பூரணந் தாராது மந்தநடை தருவதால்" என்றதிற் சரியையிற் காற்கூறும், கிரியையில் அரைக்கூறும், யோகத்தின் முக்காற்கூறும், ஞானத்தின் முழுதும் பந்தவிடுதலைசெய் அருட்சத்தி நிற்றலின் முழுதுமல்லாத மற்றைக்கூறுகளினீக்கமே 'மந்தநடை' யிற்படு மென்றறிக. ஆன்மாக்களைப் பந்தத்தினின்று விடுதலை செய்யுங்காரியம் அனுக்கிரகவருட்சத்திக்கே யுரித்தென்றோது நூல்கள்—

(க) "யஇமாந்லோகாநீசத ஈசநீயுர்ஜநநீயு:।"

என்று பணிக்கும் அதர்வசிரோபநிஷத்தும்,

(ஊ) "தமக்ரதும்பச்யதி வீதசோகோதாதுஃ ப்ரஸாதாத் மஹிமாநமீசம்।"

என்று கிளத்துக் தைத்திரீயாருணசாகை நாராயணமும், சுவேதாச்வதரம் சரபம் நாரதபரிவ்ராஜகம் கடம் என்னு முபநிஷதங்களும் பிறவுமாம். முன்னியது "யாவன் இவ்வுலகனைத்தையும் ஈசனி சனனிகளான சத்திகளால் ஆளுகின்றனன்" எனவும், பின்னியது "கன்மானுபவ நீக்கமுள்ளோன் (இருதயகுகையி லிருக்கின்ற) அதனை ஈசனது பிரசாதத்தினுற் சோகமில்லாதவனுய்க் காண்கின்றனன்" எனவும் பொருள்படும். சிவஜ்ஞாநபோதத்தில்—

"சித்த்ருசாத்மநித்ருஷ்ட்வேசம் த்யக்த்வாவ்ருத்திம்மரீசிகாம்।
லப்த்வாசிவபதச்சாயாம் த்யாயேத்பஞ்சாக்ஷரீம்ஸுதீஃ॥"

என்னும் கூ-ஆம் ஸூத்ரமும் மேலைச் சுருதிகளின் முடிபாதல் காண்க. பொருள்:—"நற்புத்திமானுனவன் ஈசனைச் சிவஞானமாகிய கண்ணினுற் றன் கண்ணே கண்டு பிரபஞ்சவிருத்தியென்னுங் கானலிலிட்டுச் சிவனது திருவடி நீழலை யடைத்து பஞ்சாக்கரத்தைத் தியானிக்கக்கடவன்" எனவாம். திருநாவுக்கரசுகளது தேவாரத்தில்—

"அவனருளே கண்ணுகக்காணின தல்லால்
இப்படிய னிவ்வுருவ னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணுதே"

என வருவதூஉம், கந்தரனுபூதியில்—

"முருகன் றனிவேன் முனிகங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுக் தரமோ"

என வருவதூஉம், திருமந்திரத்தில்—

"இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமரன் ஞானத்திற் றன்செய லற்றுல்
நிருமலன் நீர்ந்து சிவனவ னுமே."

என வருவதூஉம் மேலைமுடிபாதல் காண்க.

இவ்வுலகனைத்தையுஞ் சத்திகளால் ஆளுகின்றனனென்று சுருதி கூறினமையால் இறைவனுக்கு எல்லாம் உடைப்பொரு ளென்பதும் பெற்றும். உடைப்பொருள், அடிமையும் உடைமையுமென இருவகைத்தாம். அடிமை யுயிரனைத்துமாம். உடைமை மாயையு மதன்காரியமு மாம். இவ்வடிமைத் தன்மையினையுணர்ந்து அவ்விறைவன் பால் உள்ளபடி. உடல், பொருள், உயிரென்னு மூப்பொருளு மொப்புவித்தடிமைப் பட்டு நிற்றலே விடுதலைப்படுவான் கடமையாதலின் மேலைச்செய்யுட்கண் "அளப்பி லுடல் கண்டாலு நின்னடிமைகாண்" என்பதுங் கூறப்பட்டதென்க.

உடலினுக்கத்திற்கு உணவு விடாது வேண்டப்படு பொருளென வறிந்தாங்கு உயிரினுக்கத்திற்கும் அங்ஙனம் வேண்டப்படுபொருள் இறை திருவருளாமென வறிதலே இங்ஙன முணரக்கிடக்கு முண்மையாகலின், "உன் உரவனுக்கிரகவரு ளுக்கே யுரித்தென்ப தறிந்து" என்றது ஏற்புடைப் பொருளில்லைத் தோதப்பட்ட தென்க. உவமையினை உரையிற்கோட லென்னும் உத்தியின்பாற் படுத்துக.

"அருளுக்கே" என்றதில் உகரம் சாரியை; ஏகாரம் தேற்றம்.

தாறு = அளவு, எல்லை; "தாறுவிற் குதையே யெல்லை" என்பது சூடாமணி நிகண்டு.

வல்லபம் = வல்லமை; பண்புப்பெயர்; வல் - பகுதி; பம் - விகுதி; அ - சாரியை. ஒப்ப மென்னு மொரு சொற்கண்ணும் 'பம்' விகுதி வருதல் காண்க. வல்லபமென்பதைப் பிரியமென் னும் பொருளுடை வடசொல்லாகக் கொளின் அதனை அருளின்பாற் படுத்துக.

கயம் = பெருமை, ஆழம்; யகரவெதுகை காண்க.

கயனம்பிரதான மென்றபடி கண்போலும் பிரதானமா யுள்ளாரினைக் கண்ணென்றது உவமையாகு பெயர். (எ)

முண்டமுண் டனமுமொண் கீளுடையு மிலகவென்
முன்வந்து சொற்றவொருசொன்
முடிவைநன் குய்த்துணர மூலநா டிச்செயலை
முன்னிடுத லல்லாததாய்த்
துண்டநுதி முதலாய காட்சிகளொ டக்கரஞ்
சொல்லுநெறி யல்லாததாய்ச்
சுகுர்தகன் மம்விரத மூர்த்திதல நீர்நிலைக
டொழறோய்த லில்வாரியாய்
எண்டிசையு மப்பாலு நிறையுமொரு நீர்மையா
யேசிலா மோனமுத்தை
என்றகை காட்டான தகராள யப்பே
ரிராசியச் சுகமார்க்கமாய்க்
கண்டேனவ் வணநிலாப் பேதைக்கு நின்னருட்
கலிதோயு மாக்கமுறுமோ
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 8

சிரசின் முண்டிதமும் (அரையில்) ஒள்ளிய கௌபீனமும் பிரகாசிக்க என் முன்னே வந்து சொன்ன ஒரு சொல்லின்முடிவைச் செவ்வையாக (யான்) உய்த் துணர்ந்த வளவிலே, மூலாதாரத்திருந்து முதுகெலும்பின் நடுவாக மேலே செல்லத் தக்கதும் இடை பிங்கலையென்னும் இரண்டு நாடிகட்கும் நடுவண் விளங்கத்தக்கதுமான பிரமநாடியின் செயலை முன்னுக்கிக்கொள்ளுங் கருமமல்லாததாகவும், மூக்குநுனி

பரர்த்தன் முதலிய காட்சிகளோடு அக்கரங்களை யுச்சரிக்கும் மார்க்கமும் அல்லாததாக வும், புண்ணியகருமம் புரிதல் விரதகோற்றன் மூர்த்தியுந் தலமுமாகிய இவற்றினைத் தொழுதல் தீர்த்தங்களின் மூழ்குதல் இல்லாத வழியாகவும், எட்டுத்திக்கும் அவற்றிற் கப்புறமு நிறையுமொரு தன்மையாகவும், (ஒன்று இரண்டு என்று வாதிக்குங்) குற்ற மற்ற மௌனமுத்திரை யெனப்பட்டதுங் கல்லால விருக்கத்தி னடிப்புடை வைகிய இறைவன் கைகாட்டாகவுள்ளதுமாகிய தகராலயப் பேரிகையிய சுகமார்க்கமாகவும் (அதனைத்) தெரிந்துகொண்டேன். அவ்வாருகவே கில்லாப் பேதையாகிய எனக்கும் உனது திருவருட்கடலிற்படியுஞ் செல்வங் கிட்டுமோ?

இத்திற இரகசியத்தை இறைவன் இந்நூலாசிரியர்க்கு எங்ஙனே யருளின னெனின்,—இராமநாதபுரத்தின் கீழ்த்திசைக்கண்ணதாய் இராமசேது மார்க்கத்துள தாய் விளங்காகின்ற பிரப்பையென்னுங் கேத்திரத்தொருசாராகிய காட்டின்கண் என்பது முதலிய விவரங்களைப் பரிபூரணனந்த போதத்தின் துறவறவிளக்கப்படலத்துத் கூறி-ஆஞ் செய்யுளுரையகத்தும், தகராலயரகசியத்தில் நூலாசிரியாதுரைப்பாயிரத்துங் கண்ணுறலாம். "முன்வந்து சொற்றவொருசொல்" யாதாய் விளங்கிற் றென்பதனையும் மேனிகழ்ந்ததனையும் "தொட்டதேபற்றுக" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுமாட் டறியலாம்.

"பாஷாண லோஹமணி ம்ருண்மய விக்ரஹேஷு
பூஜாபுரஸ்ஸர போககரீ முமுக்ஷோஃ।
தஸ்மாத்யதஸ்ஸ ஸ்வஹ்ருதயார்ச்சனமேவ குர்யாத்
பாஹ்யார்ச்சனம் பரிஹரேதபுரர்பவாய ॥"

என்னும் மைத்ரேயோபநிஷத்தின் வசனங்கள் "மோக்க வேட்கை யுள்ளோற் குப் பாடாணம், உலோகம், மணி, மண்ணென்பவற்றுலாய விக்கிரகங்களிற் பூசை மறுபிறப்பினையும், போகத்தினையுந் தரத்தக்கது. ஆதலின், யதியாயுள்ளோன் மறுபிறப்பெய்தா திருக்கும்பொருட்டுத் தனது இருதயார்ச்சனத்தையே செய்தல் வேண்டும். வெளியர்ச்சனத்தை விடல்வேண்டும்." என்று மைத்திரேயருக்கு மகா தேவனெனுங் கைலாசபதி திருவாய் மலர்ந்தருளின னென்னும் பொருளையும்,

"'நயதேர் தேவபூஜாதுத்வதர்சகம் தீர்த்தயாத்ராதிவ்ருத்திஃ'
'ஸ்வாத்மன்யேவகைவல்யம் ஸ்வரூபாது ஸந்தாநேந
ப்ரமரகீட ந்யாயவத்।'"

என்னும் நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் வசனங்கள் — "யதியானவனுக்குத் தேவபூசையின்று : உற்சவதரிசனமின்று : தீர்த்தயாத்திரையும் நிவிருத்திக்கத் தக்கது." "சுவரூப சந்தானத்தினாற் பிரமரகீட நியாயம் (=குளவி புழு நியாயம்) போலத் தனதான்மாவின் கண்ணேயே கைவல்லியம்." என்னும் பொருளையும்,

"யஜ்ஞவிரததபோதாந விதிவிதாநஜ்ஞாந ஸங்கல்போ பந்தஃ।"

என்னு நிராலம்போபநிஷத்தின் வசனங்கள் — "வேள்வி, விரதம், தவம், தானமென்னும் விதியையறிதலுஞ் செய்தலுமாகிய இவ்வித மனோவியாபாரம் பந்தம்" என்னும் பொருளையும்,

"'த்ரவ்யமந்த்ரக்ரியா காலயுக்த்யாப்நோதி முநீச்வர ।
நாத்மஜ்ஞஸ்யைஷ விஷய'

'யமாத்யாஸநஜாயாஸ ஹடாப்யாஸாத்புநஃ புநஃ ।
விக்நபாஹுள்யஸம்ஜாத அணிமாதிவசாதிஹ ।
அலப்த்வாபிபலம்ஸம்யக் புநர்பூத்வாமஹாகுலே ॥'"

என்னும் வராஹோபநிஷத்தின் வசனங்கள்—"'முனீசுரா! திரவியம், மந்திரம், கிரியையென்பவற்றால் (அந்த அணிமாதி சித்திகளை) அடைகின்றனன் : ஆன்மஞான முடையானுக்கு அவை விடயமல்ல' '(ஆன்ம சுவரூபத்தை யறியாதவன்) இயமம் முதலிய ஆசனங்களால் உண்டாம் 'ஆயாஸ ஹடயோக' அப்பியாசத்தினாற் பெயர்த்தும் பெயர்த்தும் பன்முறையெய்தும் இடையூறுகட் குட்பட்டவனாய் நறிய பலனை யடையாமே மேலு நற்குலத்திற் பிறப்பன்'" என்னும் பொருளையும் பயக்குமாற்றானே திருப்பாட்டு நிச்சயஞ் சுருதிமுடிபென் றோரத்தக்கதே. ஆன்மஞானத்தையும், அஃ தறிதற்குரிய வுபாயத்தையும், அறிந்தானது மாண்பினையும் விரீஇ விளம்புகின்ற ஸர்வஜ்ஞாநோத்தரமென்னுஞ் சிவாகமம்—"இதன்மேலியம்பற்பாலது சிறிதுமின்றாகலின் மனோவிகற்பங்களை விடுவாய்செய்து தனதுண்மையினை யுணர்ந்து உபாயங்களை யுஞற்றுவோன் சீவன்முத்தனாய் அகத்தும் புறத்தும் வியாபித்துச் சருவஞ்ஞதை, திருத்தி, அனாதிபோதம், சுவதந்திரத்துவம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயம், விசுத்ததேகமென்னும் எண்குணங்களாய தத்தர்மத்த தர்மியாய்ச் சிவத்துவத்தைப் பெறுவன். இவனுக்குச் செபம், அருச்சனை, நானம், ஓமம், பிண்டதானம், தருப்பணம், நியமம், உபவாசம், அக்கினிப்பிரவேசம் முதலியன வேண்டா. சத்தியம், சத்தியம், சத்தியம்; முக்காலுஞ் சத்தியம். இதற்குமேல் அறியற்பாலன ஒரு சாத்திரத்தினு மில." என்று சிவபெருமான் பெரிதும் வற்புறுத்திக் கூறியருளினனென்று சொல்லுதலும் மேற்போந்த முடிபாதல் காண்க. இப்பொருட்குரிய மேலை ஆகமவசனங்கள்—

"அஸ்மாத்பரந்நாந்யதிஹாஸ்தி கிஞ்சித்ஜ்ஞாத்வைவஸந்த்யஜ்ய
மநோவிகல்பம் । விஜ்ஞாநமேவம்ஸமுபாஸ்யவித்வாந்
நியம்யகாயம் ஸததம்நியுக்தஃ । ஸர்வத்ரகாமீபவதீஹ
முக்தஸ் தத்தர்ம தர்மீ பஹிரந்தரஸ்தஃ । ஸர்வஜ்ஞதாத்ருப்தி
ரநாதிபோதஃ ஸ்வதந்த்ரதாநித்யமலுப்தசக்திஃ । அநந்த
சக்திச்ச நிராமயாத்மா விசுத்ததேஹஃ ஸசிவத்வமேதி ॥
நஜபோநார்ச்சநம்ஸ்நாநம் நஹோமோ நைவஸாதநம் ।
தர்மாதர்மபலம்நாஸ்தி நபிண்டோநோதகக்ரியா ॥
நியமாநிநதஸ்யாஸ்தி நோபவாஸோவிதீயதே ।
அக்நிப்ரவேசநம்நாஸ்தி பதநம்ப்ருகுதோதகே ।
ஸத்யம்ஸத்யம்புநஃ ஸத்யம் த்ரிஃ ஸத்யம்சபதஃ க்ருதஃ ।
அதஃ பரதரம்நாஸ்தி விஜ்ஞேயம்குத்ரசித்குஹ ॥"

என்பனவே. இம்மூடிபிற்கே திருக்களிற்றுப்படியார் — "இங்குச்சொல்லும் பழம் (=சிவஞான சாயுச்சியம்) போதங்கரையும் அன்பன்றி, தீர்த்தமாடல் பகிர்முக சிந்தனை சிவார்ச்சனை முதலிய செய்கையன்றே" என்னும் பொருள்பொருந்த "அன்பன்றித்— தீர்த்தக் நியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை— சாற்றும் பழ மன்றே தான்" என்றேது மாற்று னிணங்குகின்றது.

"'துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் ஞஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.'

'காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புருதன் மிகவெளி தேவிழி காணிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார கோரண்ட மூச்சையுள்ளே
யோட்டிப் பிடித்தென்று மோடாமற் சாதிக்கும் யோகிகளே.'"

என்று அருணகிரிநாத முனிந்திரரும் பிராணபந்தன யோகாப்பியாசத்தையும், மூக்குநுனிபார்த்தன் முதலியவற்றையுங் கண்டித்து மேனெறியை யுணர்த்துவா ராயினர். உணர்த்தினமை, "சிறிட்டு லாவுகண்கள்" என்றற்றொடக்கத்துத் திருப் புகழில்—

"ஆகத்து ளேமகிழ்ந்த சோதிப்ர காசவின்பம்
ஆவிக்கு ளேதலங்க — அருள்வாயே"

எனவரு தொடர்க்கண்ணு மறியக்கிடக்கின்றது. தனது இருதயார்ச்சனத் தையே செய்தல்வேண்டும்; வெளியர்ச்சனத்தை விடல்வேண்டு மெனவிங்கேற்படுத் துனிபு, யேசுகிறிஸ்துவினுலும் வெளியிடப்பட்ட தென்பது மத்தேயு சு - ஆம் அதிகாரம்—

"'உன் அறைவீட்டுக்குட் பிரவேசித்து உன் கதவைப்பூட்டி அந்தரங்கத்தி லிருக்கிற வுன் பிதாவை நோக்கிச் செபம்பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்திற் பார்க்கிற வுன்பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.' 'உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரமுழுதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வொளி யிருளாயிருந்தால் அவ் விருள் எவ்வளவதிகமா யிருக்கும்.'"

என் றுரைக்கு மாற்றுற் பெறப்படுகின்றது. இவ்வுரைகளே யேன்றுகொண்டு நடக்குங் கிறிஸ்தவர்க ளிஞ்ஞான்றில்லை போலும், எண்குணங்கள் பற்றிய விசாரணை யைச் சதானந்தசாகரத்திற் காண்க.

ஆன்மாவானது சித்தாகலானும், அது சிவனுடைய அட்டமூர்த்தங்களுளொன் முகலானும், "சிவாயநமः | சிவலிங்காயநமः |" என்ற தைத்தீரியாருணசாகை நாராயணத்தானே.

" ஆத்மாயநமஃ । ஆத்மலிங்காயநமஃ ।"

என்றுங் கூறுமாற்றானே அவ்வான்மா சுயம்புலிங்கமாதலானும் அதன்கட் புரியும் அந்தரியாகபூசை ஏனைப்பூசை யெதனினுஞ் சிறப்புடைத்தென்பது திறம்பாத் தீர்வையாம். இதனையறிந்தனைவதற்காய உபாயமெல்லாம் இந்நூல் பெரிதும் விளக்கும் பெற்றிமைத்தன்றோ.

" துண்டநுதி முதலாய காட்சிகள் " எனக் கிளந்தமையின், மூக்குநுனியைப் புருவமத்தியை நோக்குதன்முதலிய பலதாரணைகளும் பூருவபக்கமாகக் கழிக்கப்பட்ட வாறு மாயிற்று. இது --

" அன்னிய பாவனைக ளன்னியஞ்செய் யும்மதனால்
தன்னிலை யிற்செயனற் சார்வே பரஞ்சோதீ."

எனக் காசியாத்திரையிற் கூறியதனாலும் வலியுறும்.

சுருதியிற்போந்த பிரமரகீட நியாயம்—செங்குளவி, தன்னால் வனையப்பட்ட மட்குகைக்கட் பைம்புழுவை வைத்து மூடித் தன்னையொத்த குளவியாய் வருமாறு செய்வதுபோன்ற வொருநெறியாம். இஃது அக்குகையின்கண்ணே குளவி, தன்னா லிடப்பட்ட நுண்ணிய பன்முட்டைகளி லுண்டாம் பிராணிக ளுண்பதற்காகவே புழுவை வைக்குமென்பதாக (Indian Insect Life) இண்டியன் இன்ஸெக்ட் லைவ் என்னும் ஆங்கிலமொழிப் புத்தகத்திற் பொறித்துளதை நம்பினாரான் மறுக்கப்படு கிறது. கருப்பகோளகைபோன்ற அக்குகையினுள் உண்டற்குரிய பிராணவியக்க மிருத்தற் கிடனின் றென்பதும், ஒரு குகையினுளிருப்பது ஒரு குளவிக்குஞ்சேயன்றிப் பலவிலவென்பதும், குகைகடோறும் அன்னணமிருக்கும் ஒரோவொன்றுந் தலை முற் புறம் வளைந்தபடியே பந்துபோ லிடைவெளியின்றிக் கிடக்கின்றன வென்பதும் அடுக்கடுக்காயுள்ள அம்மூடுண்ட குகைகள் சிதைவுற்றவழி மும்முறை யெம்மா லறியப்பட்டன வாகலின் அம்மறுப்பு நிலையுதலுறாது. ஆவதேல், அவ்வாங்கிலமொழிப் புத்தகத்தில் வரையப்பட்ட ஆய்வு ஈண்டுப் பொய்கொலோ ? எனின், – யாம் மும்முறை நன்கு சோதித்துக்கண்ட குளவிக்கு வேறாய வோரினத்தின் ஆய்தலாய் அஃதாயினுமா மாகலின் அது கடாவன்றென்க. எவ்வகைப் புழுவுங் குளவியாமென்பதும் பிரத்தி யக்ஷமாகலின் மறைமொழி பொய்யாகாதென்க. காகங் கண்ணைச் சாய்த்து நோக்கு மோரியற்கைத்தென்பதையும், இருவிழிக்கு மிடையில் ஒரெற்புத் தடை யுளதென்பதையு மறியாது அந்நோக்குடைமை ' இருவிழியிலுமொருமணியே ' உண்டென்பதைக் காட்டுகின்றதென்னும் முடிவினின்று கூறுவார் கூற்றின்வழியே கதானுகத நியாய மாகச் சென்று பலரும் வரைந்தமை பிடித்து அகராதிக்காரரும் " ஏகாக்ஷம் = காக்கை " என வெழுதினமை யெத்தன்மைத்தோ அத்தன்மைத்தையே குளவி புழு நியாயத்தினை மறுப்பார்க்குங் கூறல்கூடுமென் றெண்ணுகின்றேம். இராமாயணத்துங் காகத்திற் கொருவிழி யேற்பட்ட கதையுளதாம். ஏகாக்ஷம் = ஒருவிழி.

முண்டம் = சிரசு; "முண்டம் மத்தகமும் மூர்த்தமும் உவ்வியுக் தலையென மொழிப" என்பது பி - நிகண்டு.

ஆய் - ஆக; எச்சத்திரிபு.

"முதலாய" என்ற எச்சத்தில் ய் - இறந்தகால இடைநிலை.

"காட்சி" என்பது தொழிற்பெயராகலின் சி - விகுதியாம்.

வாரி = வழி.

முத்தை = வடதூன் முடிபு.

"கைகாட்டான" என்பதில் னகரம் - யகரத்திரிபாம்.

இராசியம் - ரஹஸ்யம் என்னும் வடமொழிச் சிதைவு.

பேதைக்கும் — உம் - இழிவு சிறப்பு; வருமொழியின் மெல்லின மிருத்தலின் மகர வொற்றுக் கெட்டது.

கடல் "கலி" எனப்படும்; "கலிவஞ்ச மொலியே வாரி" என்பது சூ - நிகண்டு. பி - நிகண்டினு முண்டு. (அ)

யாப்பூரி னின்றுனடி நாட்டமெனும் வங்கத்தி
லேயெக்கி யமுதநகர
யாத்திரையை நீப்பெனுஞ் சிந்தகஞ் செய்யிநாள்
யானென வெழும்புராண
மாப்போத மோகாதி கனவிண் டெழீஇயறை
வலிதனக் கஞ்சுதமியேன்
வந்தவதர் சென்றேறு துறைசெல்லி னக்கணும்
வழுத்துமோ காதிசுசன
மூப்பான கோரத்தி னாலல்ல லலைமிக்கு
மோதிமோ டேற்றிநைத்தே
முழுவின்ன றருமாக லாலென்ன புன்கணினி
மூசினும் பின்செலாதுன்
காப்பா லிறங்குதுறை காண்பதே சுகமிக்
கருத்தின் படிக்கருள்செயாய்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 9

(எனக்குப்) பக்தமாயிருக்தவராகிய (பாம்ப னென்னும்) ஏறுதுறையினின்று, உன்னுடைய திருவடி காட்டமென்னும் மரக்கலத்திடை யேறி, இறங்குதுறை யென்னும் முத்திநகர யாத்திரையைத் துறவறமென்னுங் கடலின் மீது செய்கின்ற இக்காலிலே, 'யான்' எனவெழுகின்ற பழமையான போத ஆகாயத்துப் பேராசை

முதலிய பெருங்காற்றுக்க ளெழுந்து வீசுகின்ற வலிமைக்குத் தனித்தவனுயிருந்து பயப்படுகின்ற யான் (இனி, இறங்குதுறை சேரொண்ணு தென்னுங் கருத்தால்) வந்தவழியே போந்து ஏறுதுறையினை யணுகினும் அவ்விடத்தும் மேலே சொல்லப் பட்ட ஆசை முதலிய காற்றுக்களின் வலிமையாகிய கொடுமையாற் றுன்பமென்னும் அலைகள் இங்குள்ள அலைகளினும் அதிகரித்து மரக்கலத்தையும் மோதி மோட்டிலேற்றி யுடைத்து, எனக்கும் முழுத்தன்பத்தினைக் கொடுக்குமாகலின் இனி, எத்திறத் துன்பங்க ளென்னை மொய்த்துக்கொண்டாலும் பின் செல்லாமல் உனது காப்பினுல் இறங்குதுறையினை யான் பார்ப்பதே சுகமாம். இந்த யோசனையின் படிக்கே நீயும் அருள்புரிதி.

'புராணபோத மாமோகாதி கனவிண்டு' எனவியையும். புராணம் = பழமை.

எழீஇ = எழுந்து; சொல் விகாரப்பட்டமையாற் சொல்லிசை நிறைக்கும் அளபெடை.

"அக்கனும்" என்பதில் உம்மை - இறந்தது தழீஇய எச்சம்.

"வழுத்தல்" என்பது துதித்தலென நிகண்டுகளிற் பொருள்படுமாயினும் இங்ஙனஞ் சொல்லலெனும் பொருட்டு; பெரிய புராணத்திற் சாக்கியநாயனர் புராணத்து முதற்செய்யுட்கண் "மறுவில்சரண் பெற்றதிற மறிந்தபடி வழுத்துவாம்" என வருதலுமது. வேறு பல விலக்கியங் களு முள; சீவயாதனுவியாசத்து சுகஉ-ன் உரைகாண்க. 'ச்வனம்' என்னும் வடமொழியின் விகாரமே 'சுசனம்'; காற்றெனும் பொருளுடைத்து; நிகண்டு - அமரஸிம்ஹங் காண்க.

இனி - எதிர்காலங் குறிப்பதோ நிடைச்சொல்.

"செய்" "எழும்" "அஞ்சு" "வழுத்து" என்பன காலங்காந்த பெயரெச்ச வினைத் தொகை. (கூ)

தோலென்பு நெய்த்தோர் புலான்மச்சை யெசமாய
தொக்கது தணந்தபின்னர்த்
தொல்லவா சிச்சூரின் வன்சிலதர் நோக்கியட
துப்பிலி சுசீலமில்லி
ஞாலமிசை யல்லவைச் சுமையா யிருந்துளோய்
ஞானப் படிற்றுநடையோய்
நன்னிலை யிலாதோ யெனச்சுளித் திருகவுளு
நையவெனை யறையினஞ்ஞான்
றோலமிடி னும்வாயி லறைவரெனு முருமுற்
றுளுக்குளே யுலைவதல்லால்
உத்தரம் பரவிவிடு தலைகொளற் கியலுமோ
வுன்றஞ்ச முன்றஞ்சமே

காலனதி காரங் கடந்தவிரு மருணகிரி
கண்டவொரு பெரியபொருளே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே.

நோலும், எலும்பும், இரத்தமும், மாமிசமும், மச்சையும், நரம்புமாயுள்ள தூலதேக நீங்கியபின்னே பழமையான தென்றிசைக் கடவுளென்னுங் காலனுடைய வலிய ஏவலாட்கள் என்னைப்பார்த்து அட! சுத்தமில்லாதவனே! நல்ல தருமமில்லாதவனே! பூமிக்குப் பாவச்சுமையா யிருந்தவனே! ஞானவான்களைப்போ னடிக்கும் பொய்ந்நடை யுடையானே! நன்னீர்மை யில்லாதவனே! என்று கோபித்து இரண்டு கன்னமுநையும்படி யென்னையடித்தக்கால் அப்பொழுது, எதிர்க்குங்காரிய மேதுமின்றி வாய் திறந்து கதறினும் வாயிலு மடிப்பார்களே யென்னும் அச்சமடைந்து உள்ளுக்குள்ளேயே வருத்தமுறுவதன்றி அவர்களுக்கு ஏற்புடை மறுமொழிகூறி விடுதலை பெறுதற்கும் என்னாலியலுமோ? அக்காலனுடைய அதிகாரத்தைக் கடந்து சுடரும் அருணகிரிநாத முனீந்திரர், தமது சுவானுபூதியிற் றரிசிக்கப்பெற்ற ஒப்பிலாப் பெரிய பொருளே! (அடியனேன்) உன்னுடைய தஞ்சமே, உன்னுடைய தஞ்சமே.

தூலதேக நீங்குமுன்னே சீவசுதந்திர அதிகாரமும், அது நீங்கலுங்கால சுதந்திர அதிகாரமுமா மென்பது ஈண்டுப்பெறுதல், காசியாத்திரையில்—

"ஆக்கையள வேயுன் னதிகார மாக்கைவிடின்
தாக்குநமன் றன்னதிகா ரங்கண்டாய்—சீக்கிரமே
என்னுடைய நாயகவே லீசுரனுக் காட்படுதி
அன்னமனார் தாக்க லற." [கஅகூ]

என இனிது கூறப்பட்டுளது. அருணகிரிநாத முனீந்திரர், தமது சுவானுபூதியிற் றரிசிக்கப்பெற்ற பெரியபொருள் எவ்விலக்கணத்ததா யிருந்ததெனக் கூறியருளினரெனின்,—அஃதவர் தமிழ்வேதத்தில்—

"உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே"

என வருதலா னறியக் கிடக்கின்ற தென்க.

இன்று காறும் உன்னையே விரும்பிநிற்கு மெனக்குச் சீவ சுபாவத்தால் இனி எவ்விதத்துக்க மெய்துமோ வென்னுங் கருத்தானே தம்மைப் பெரிதுந் தாழ்த்திக்கூறிய வர்ணனையோடுங் கூடிய தித்திருப்பாட்டென்க.

எசம் = 'ஸ்நஸா' என்னும் வடசொல்லின் விகாரம்; நரம்பென்னும் பொருளுடைத்து.

அவாசிச்சூர் = தென்றிசைத்தேவன்.

அல்லவை = தீயன.

"இயலுமோ" என்றதில் ஓ = எதிர்மறை. (க0)

உ. ஆனந்த பூர்த்தியுரம்

உலகாக மல்கசர சரமென் பவற்றுளோ
ரூழின் றனந்தமாக
உளசுகத மொடுசுசா திவிசாதி பேதங்க
ளோதிடற் கேதுவாய
மலபாச நீக்கமா யப்பாச விரிவெலா
மயிர்நுனையு நாட்டுதற்கு
வயினின் றளாவிநிறை வாயுற்ற வாற்றலில்
வழுத்துதமி யேன்புறம்பா
விலகேனு னன்பர்கா ரணமே யிகுக்குமோர்
வியனருளை யானும்வேண்டி
வெய்துறல் கொளும்பட ரொழிக்குமா றென்னுளே
வெளியாவ தெக்கால்கொலோ
அலகிலா மாக்கருணை யுள்ளுவந் தருளுமின்
னருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 1

ஆன்மாக்களின் இருதய குகையின்கண் வசிக்குங் காரணத்தாற் குகனென் னுந் திருப்பெயரைக்கொண்ட கடவுளாகிய பரிசுத்த ஏகசிவ சைதன்னிய ககனமே! ஆனந்தபூரண வல்லமையே!

அனந்தமாக விருக்கின்ற சுகதபேதம் சுசரநிபேதம் விசாநிபேதமென்பவற் றைக் கூறுதற்கு ஏதுவான மலமெனும் பந்த நீக்கமாய், அந்தப்பாசவிலாச மெங்கணும் மயிர்நுனியு நாட்டற்கிடமின்றி வியாபித்து உலகமாகப் பெருகியுள்ள அசரமுஞ் சரமுமெனப் படுபவற்றுள் ஒரு குணமுமின்றி நிறைவாய்ப் பொருந்திய வனது நிலை யுடைமையில் உன்னைத் தஞ்சுக் தமியனேன் வேறுக விலகமாட்டேன். உன்னுடைய பத்தர்க ளுய்யும்பொருட்டு நீ கொடுக்குமொரு மேலான திருவருளே யானும் விரும்பி, இங்ஙனே துன்புழக்கு நிலைப்பை யொழிக்கு நிமித்தம், எனதுள்ளிடத்தே நீ பிரசன்ன மாதல் எக்காலமோ? அளவிலாப் பெருங்கருணைத் திருவுளம் மகிழ்ந்து அருள்புரியா நிற்கும் ஓரின்னருள் கூர்வாயாக.

"முருகன் றனிவேன் முனிகுங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ"

என்று அருணகிரிநாதரது வேதம் விளம்புமாறு அருட்டுணையின்றித்தானிற்கு நிலை யறியொண்ணுதாகலின் "அருள்கூர்" என்றது சால்புடைத்தென்க. "சுகக் கடவுளாம் அமலஞ் சங்கரிவ சைதன்ய ககனமே யானந்த பூர்த்தியுரமே" என்றது, அடியிற் காட்டப்படுஉஞ் சுருதிகளி னிச்சயத்துளது. அச் சுருதிகளாவன :—

(ஸத்யம்ஜ்ஞாந மநந்தம்ப்ரஹ்ம । யோவேத நிஹிதம் குஹாயாம்
பரமேவ்யோமந் । "ஆநந்தம்ப்ரஹ்ம")

"பிரமம் எஞ்ஞான்று மொருபடித்தா யுள்ளது; அறிவாக வுள்ளது; முடி வில்லாதது; இருதய குகையின் பரமாகாசத்திலுள்ள அதனே யாவனறிகின்றனன்" "பிரமம் ஆனந்தம்" என்னுந் தைத்திரீயோபநிஷத்தின் ஆநந்தவல்லி வசனங்களும்,

(ய ஏஷோந்தர் ஹ்ருதய ஆகாசஸ்தஸ்மிஞ்சேதே ஸர்வஸ்ய
வசீ ஸர்வஸ்யேசாநஃ ஸர்வஸ்யாதிபதிஃ)

"அனைத்திற்கும் அதிபதியான ஈசானன் உள்ளிருக்கும் இருதயாகாசத்தில் அமர்ந்தனன்" என்னும் பிருஹதாரண்யகோபநிஷத்தின் சு-ஆம் அத்தியாய வசனமும்,

(தஹரம் விபாபம் பரவேசம பூதம்
யத்புண்டரீகம் புரமத்யக் ஸதம் ।
தத்ராதஹரம் ககநம் விசோகஸ்
தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம் ॥)

"புண்டரீகபுர மென்னுஞ் சரீரமாகிய ஹரத்திற் சிறிதாய்ப் பாவமிலதாய்ப் பரமாண்மாவுக்குச் சிறந்த வீடாயிருக்கின்ற யாதோரிருதய கமலத்திலே துக்கமற்ற தாய்ச் சிறிதாயிருக்கின்றதற் குள்ளே ககனமாயிருக்கும் வத்துவின்க ணுள்ள தெதுவோ அஃது உபாசிக்கத் தக்கது." என்னுந் தைத்திரீயாருணசாகை நாராயண வசனமும்,

(அதயதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரேதஹரம் புண்டரீகம்வேசம
தஹரோஸ்மிந் நந்தராகாசஸ்தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்
டவ்யம் தத்வாவிஜிஜ்ஞாஸிதவ்யமிதி ।)

"பிரமபுரமென்னும் இதன்கண்ணே தகரபுண்டரீக வீடுள்ளது; இதன் கண்ணே தகராகாசமுள்ளது; இவ்வாகாசத்திற் குள்ளேயுள்ளது காடற்பாற்று; அறியற்பாற்று." என்னுஞ் சாந்தோக்யோபநிஷத்தின் ஏ-ஆம் பிரபாடக வசன முமாம்.

(ப்ராஹ்மேமுஹூர்த்தேசோத்தாய ஹ்ருத்பங்கஜகதம்சிவம் ।
நிஷ்கம்பம்நிஷ்கலாகாரம் ப்ரணவாத்மகமவ்யயம் ॥ த்யாயேத் ॥)

" தியானிப்போன், சூரியோதயத்திற்கு முன்னே (= பிராமமுகூர்த்தம்) ஐந்து காழிகையி லெழுந்து, இதயகமலத்தினீ யடைந்துளதாய் அசைவில்தாய்த் தீபம்போன்ற வடிவிற்றாய்ப் பிரணவசொரூபமாய் அழிவிலதாயுள்ள சிவத்தைத் தியானித்து" என்று காமிகாகமமும் (ஸ்நாகவிதிபடலத்தே) கூறுவதாயிற்று. வேதோபப்பிருங்கண மென்னும் புராணங்களி லொன்றாய ஸ்ரீமத் - ஸ்காந்தாந்தர்க்கத ஸஹிதஸம்ஹிதா— (தமிழ் மொழிபெயர்ப்பு)

" பிரம புரமென் றெடுத்துரைக்கப் பிறங்கு ஞான வதிகார
வரமன் னியச நீரத்தில் வயங்கு தகர மெனச்சிறந்தா
தாமா ரிதய கமலத்திற் றோன்றும் தகராகாசமே
பரம சிவனென் றெம்மறையும் பகரா நிற்கும் பண்ணவர்காள்."

என்று கூறினதும் ஈண்டுக் கருதிக்கொள்ளத் தக்கதே. இவ்வாகாசம் சிதாகாச மெனப்படு ஞானவெளியே. குகையிலிருப்போன், இரகசியப் பொருளாயுள்ளோ னென்னும்பொருள்கணீக் குகனென்பது பயக்கும்.

' அனந்தமாக வுளகுகத மொடுசுசாதி விசாதி பேதங்க ளோதிடற் கேதுவாய மலபாச நீக்கமா யப்பாச விரிவெலா மயிர்நுனீயு நாட்டுதற்கு வயினின்றளாவி உலகாக மல்கசர சரமென்பவற்றுளோ சூழின்று நிறைவாயுற்ற வாற்றலில்' என வியைத்துக் கொள்க. ககனம் = ஆகாசம். அசரம் = மூச்சில்லது, அசையாப்பொருள் ; தாவர மெனவும், நிலைத்திணைப் பொருளென்றுங் கூறப்படும். சரம் = மூச்சுள்ளது, அசையும் பொருள் ; சங்கம மெனவும், இயங்குதிணைப்பொரு ளென்றுங் கூறப்படும். சுகத பேதம் = சுயபேதம் ; மரத்திற்கு இலை, பூ, காய் முதலிய வித்தியாசம் போல்வது. சுசாதிபேதம் = சுயசாதிக்குள்ளபேதம் ; தென்னைக்கும் பனைக்குமுள்ள வித்தியாசம் போல்வது. விசாதிபேதம் = அன்னிய சாதிபேதம் ; மரத்திற்குங் கல்லுக்குமுள்ள வித்தியாசம் போல்வது. சுகதம், சுசாதியென்பன - ஸ்வகதம், ஸ்வஜாதி யென்னும் வட சொற்களின் விகாரம். இச்சாதிபேத மற்றது சத்தியமென்று ஸர்வஸாரோபநிஷத் " ஸஜாதி விஜாதிபேத ரஹிதம் ஸத்யம்" என்று கூறுகின்றது.

' அன்பர்காரணமே யிருக்குமோர்வியனருள்' என்ற அருத்தாபத்தியால் அன்ப ரல்லாதார் அவ்வருள் பெறுதற்குரியா ரல்லரென்பது பெறப்பட்டது. பஞ்சவிஞ்சதியதி கசதபங்கி (= ஒரு பாட்டே கூடு - வண்ணப்பாட்டாக நிகழ் கவி) யில் —" தறுகணர் கருதலர் சார்பிலனே" என யாங்கூறியதும் இப்பொருள் பயக்துநிற்றல் காண்க. தறுகணர் = அஞ்சா வன்னெஞ்சர்.

நீக்கம் - நீங்கு என்ற பகுதியின் றொழிற்பெயர் ; அம் - விகுதி ; வலித்தல் விகாரம்.

இருத்தல் = கொடுத்தல் ; " இருத்தலே செருத்தல் விழுத்த லிரித்தலோடழைத்த லீதல்" என்பது சூ - நிகண்டு.

வெய்து - வெம்மை யென்னும் பண்பி னடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையா லணையும்பெயர்.

படர் = நினைப்பு.

இன்றியென்னும் வினையெச்சம் 'இன்று' என விரண்டிடங்களி னிற்பதாயிற்று.

சேதனசம்பந்தம் சைதன்யம்; தத்திதாந்த வடசொல் என்ப; அறிவெனும் பொருளது.

ஆகந்தம் என்னும் வடதிளவி தமிழ் வழக்கிற் இயைய "ஆனந்தம்" என வரையப்பட்டது; இதுவே யேற்புடைத்து. என்னை? (ஜ்ஞாகம் -) ஞாகம், மகன், மகம், வசகம், மாகம், உபமாகம், ப்ரதாகம் என்னும் வடதிளவிகள் ஞானம், மனம், வசனம், மானம், உவமானம், பிரதானமென வரையப்படுகின்றனவாகலின். பிறவுமன்ன.

உரம் = வலிமை; "உரமென்ப வலியே ஞானம்" என்று மேலே நிகண்டு நிகழ்த்துதலி னறிக. (க)

கருப்பாச யப்பிணிப் புக்குட் கிடந்தல்ல
கண்டமுறல் போலியற்கைக்
கருமலக் கட்டுளஞர் கொள்ளுயிர்க் கொவ்வுதனு
கரணாதி களைநல்கிநல்
உருப்பெற்ற வணுபக்ஷ மொடுசம்பு பக்ஷமெனு
முண்மைநிலை யோர்ந்தறிந்தின்
புறவெனத் தெண்ணூல் விரித்துநடை காட்டிமெய்
யுணர்த்தியுள வுன்றகைமைசால்

இரக்கமறி யாதார் பிறர்க்கிடர் விளைத்தபோ
திச்சையா லல்லலுறுபோ
தெய்யாமை யாற்செய்த கன்மபல நுகர்போ
தெமைப்பகவ னேன்பணினனென்
றரற்றுமட மென்கண்ணு மாருங்கொ லினியைய
வருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 2

(குழவியானது) கருப்பப் பையின் கட்டுக்குள்ளே கிடந்து துன்ப முறுதல் போல அனுதிகாரணமாயா கருப்பத்துள்ளே கிடந்து வருத்தமடையும் (அனுதி) உயிர் களுக்கு, அக்கருப்பத்தினின்று மீட்குதலான கன்மங்கட் கேற்புடைச் சூக்கும தனு கரணம் முதலியவற்றைக் கொடுத்து, (அவைகள், குறைவற்ற மானுடதேகமென்னும்) நல்லுருவத்தைப்பெற்ற அணுபக்ஷத்தோடு சம்புபக்ஷ மென்னுஞ் சத்தினது நிலையையு முணர்ந்து (சுவானுபூதிச் சித்தினுல் அந்நிலையை) அறிந்து ஆனந்தத்தை யடைய வேண்டுமென (ஆசாரிய மூர்த்தமாயிருந்து) ஞானசாத்திரங்களை விளக்கச்சொல்லி,

நடக்கு நடையினைக் காட்டி, உண்மையையு முணர்த்தியுள்ள வுனது மாண்புசான்ற கிருபையினை யறியாதார், தாங்கள் பிறருக்குத் துன்பம் விளைத்த செவ்வியும், ஆசையி னாலே அல்லலடை செவ்வியும், அறியாமையாற் செய்த வினைகளுக்குப் பலனனுபவிக் குஞ் செவ்வியும் எம்மை, பகவானானவன் எற்றிற்குண்டாக்கின னென்று சத்தமிடும் மடத்தன்மை இனி, என்பாலும் பொருந்துமோ? ஐயனே! அருள் செய்வாயாக.

சம்புவின் இலக்கணம் சத்து, சித்து, ஆனந்தமென முத்திறப்படும். ஸாமவேத சாந்தோக்யோபநிஷத்திற் (ஸத்) சத்தும், ருக்வேத ஐதரேயாரண்யகோபநிஷத்திற் (ப்ரஜ்ஞாநம்) சித்தும், யஜுர்வேத தைத்திரீயோபநிஷத்தில் ஆனந்தமுங் கிளக்கப் பட்டன வென்பது முதலிய வித்தாரம், பரிபூரணானந்தபோதப் பாயிர வுரைக்கண்ணும், தகராலயரகசியத்தின் உ - ஆங் காண்டத்து ௪௭, ௪௮, ௪௯ - ஆந் திருச்செய்யுள்களி னுரைக்கண்ணுமறியலாம். இம் முத்திறமுமே ஈசுரப்பிரபாவகுணம் எட்டாகவும், ஆறாகவும், ௩ - உ - க - ஆகவு நிற்கும்விவரம் மேலைக்காண்டத்து ௫௭ - ன் உரைக்கண் அறியலாம். இவ்வாற்றாற் சத்துமுதலிய மூன்றிலக்கணமும் மூன்று வேதங்களிலும் வெளிப்பட்ட வுண்மையே யாகின்றன. இம்மூன்றுஞ் சேர்ந்த மொழியே "சச்சி தானந்தம்" எனப்படுவது. இச் சச்சிதானந்தம் இத்திற அருமைப்பாடுடைப் பதியிலக் கண மென்பது நுதலியே அதனை, இந்நூன் முதற்றிருப்பாட்டின் கண்ணேயே யெடுத்துக்கொண்டு கடவுள் வணக்கங் கூறப்பட்டதென்க. ஈண்டுச் சத்தான பொருட்குச் சித்தான குணங்கூறி, மேல் ஆனந்தமென்பதொன்று கூறுதல் மிகையாம் பிறவெனின்,—அந்தச் சச்சித்தான குணி, சுவானுபூதியி லனுபவிப்பார்க்கு அனுபவப் பொருளாயிருத்தலின் அளவற்ற அவ்வனுபவமே ஆனந்தமெனப்படுவதாயிற்று; இஃது அக்குணியின்கணுள்ள ஞானச்சுவையென வறியக்கிடக்கின்றதன்றோ? இஃதில்லை யாயின் ஒருயிர்க்கு மின்ப மில்லாதொழியும் (அண்டக் காற்றில்லாவிடத்தே மூக்குக் காற் றொழிதல்போல): அந்தச் சித்தில்லையாயின் ஒருயிர்க்கு மறிவில்லாதொழியும்: அச் சித்தின்வழியாகவே சத்து மறியப்படும்: இந் நியாயங்கருதியே "சம்புபக்ஷமெனு முண்மை நிலை யோர்ந்தறிந்தின்புற" என்பதுங் கூறப்பட்டதாகலின் மிகையன்றென்க. முத்தியிலொழிவாகக் கூறப்படு பாசத்தையும் அவ்வானந்தம் இன்பமாகவே செய்திடு மாகலின் ஆண்டுப் பேரின்பமொன்றே கிளக்கப்படும். அதனால், அஃதளவிலா வானந்த மாம். இதுபற்றிய வித்தாரம், போந்த தகராலயரகசியத்து 'இனமும் பகிர்முகம்' என்றற் றொடக்கத்துத் திருச்செய்யு ளுரைபடித் தோரவுளது. சத்தே "உண்மை" எனப்பட்டது. அணுபக்ஷ சம்புபக்ஷ விவரங்கள் இந் நூலிடைத் "திருத்திமிரு மருட் சம்பு" என்றற் றொடக்கத்துப்பத்தி லுரைக்கப்பட்டன.

முற்பிறப்பிற் செய்த கன்மங்களின் பலன்களையே இப்பிறப்பிற் பிராரத்தமாக நாமனுபவிக்கின்றன மென்னு முண்மை யுணரப்பெறீஇத் துக்கசாந்தஞ் செய்து கொண்டு வீடுபயக்குங் கடவுளை விடாது விரும்பல் கடமை யாமென்பதூஉம் இத் திருப்பாட்டுழிக் குறிப்பாக வறியக்கிடக்கின்றது; என்னை? "கன்மபல நுகர்போது எம்மைப்பகவன் ஏன்பண்ணினனென்று அரற்றுமடம் என்கண்ணும் ஆருங்கொல்

இனி" என்றுங் கூறினமையின். இவ்வுண்மையாலன்றே ஆத்திகருள்ளும் பலர் மிடியராகவும், நோயராகவும், நாத்திகருள்ளும் பலர் செல்வராகவும், நோயிலராகவுங் காணப்படுகின்றனர். கருவிற்றானே அவரப்படி யமைக்கப்பட்டன ரென்னு நியாயம்—விருக்கம் முதலிய கிலத்திணைப் பொருள்களிலும், விலங்குமுதலிய இயங்கு திணைப் பொருள்களிலும் பெறப்படுமால். யாங்ஙனம் எனின்,—உற்பத்தியிலேயே உடன் வைக்கப்பட்ட இலை, பூ, காய், பழம், நிறம், மணம், சுவை முதலியனவும்; மயிர், இறகு, எழில், வண்ணம், வன்மை, மென்மை, சிறுமை, பெருமை முதலியனவும் ஈறெய்துங்காறும் இறந்துபடா திருக்கின்றன வென்புழி. ஆயின், இஞ்ஞான்றியற்று தெய்வவழிபா டிஞ்ஞான்றே பலனல்கு மென்றற்கு மிடனின்றென்பதேயுங்கொல்? எனின்,—நியாயமிருந்தவாறு சிலபலன்கள் அங்ஙனமும் பலிதமாம் உண்சொன்றி பயன்றருமாறென்றல் அதற்கு விடையாயுறு மென்க.

கருவிற்றானே அமைக்கப்பட்டனரென்னு நியாயத்தை, இன்னும் வற்புறுத்துவான் ஈங்கொரு காண்டலளவை காட்டுதும். தென்றிருமுல்லைவாயிற் கணித்தாய ஒரு கடவையிற் செல்லாநின்ற இரண்டு முகம்மதிய கனவான்கள், காலைப்போது ஐந்து கடிகைக்கு மேற்பட்டஞான்று, கண்டல் செறிந்த வோர்வயின், ஒரு பெரும் பணமுடைப் பாம்பும் ஒரு பெருங் கடமுடைக் கீரியு மெதிர்த்து நிற்றலைக் கண்ணுற்று, வெற்றி யாதன் பக்கமாமென்பது காண்டுமென ஆண்டு நிற்பாராயினர். இறுதியிற் கீரி பின்னிடைந்து விரைந்துசேறலைப் பாம்புபார்த்துக்கொண்டே நிற்றலைக்கிய வவர், இன்னும் அக்கீரி வருதல்கூடுமென்று மெண்ணினர். சிறு பொழுதாதலும் எண்ணிய வாறே அஃதொரு பெருங் கீரிக்கூட்டத்துடன் முற்பட்டு வருதலையும், அக்கூட்டத்தின் நடுவே பிறிதொரு பேருருவக் கீரியின்பிடர்மேல் ஒரு வெண்ணிறத்த சிறுருவக்கீரி யினிருந்து தன்றலையினைச் சற்றுயர்த்தி நோக்கும்போது அதன் விழிகள் பளபளெனப் பிரகாசித்தலையும் அவர் பார்த்தனர். மூன்றுவிற்கடை யளவினின்றுநோக்கும் அவ் விழிகளின் பார்வை பட்டதுணையே அப்பெரும்பாம்பு தன்பணத்தோடு பூமியிற்படிதல் காண்டலும் அக்கீரியனைத்தும் வந்தவழியே போந்தன. பின்றை, அவ்விருபெருமாந்தரும் அப்பாம்பினை நெருங்கிநின்று ஒருசிறு கோலால் அதனைத் தட்டினர்கள். அவ் வுடம்பு ஒரு சிறுவன்மையுமின்றிக் குழைசேறெனக் கிடத்தலை அவர்களேக்குபு இஃதென்னை? அவ்வெண்ணிற ஈராச கீரியின் பார்வை, இத்துணை மகிமை புரிவதாயிற் றென இறும்பூதடைந்து கடவுள் சிருட்டியினைப் புகழ்ந்துகொண்டு தாஞ் செல்வுழிச் சென்றனர். சென்ற அன்றே, தம்மூராகிய பாம்பன் நகரை யடைந்தவுடன் எம்மைக் கண்டு மேலே கூறிப்போந்த யாவுமுரைத்தார்கள். இவ்வாற்றான் மனுடரையாளு மரசரு முண்மையாகவே அமைக்கப்பட்ட தலைவராவரென்பதும், தேவர் தலைவனு யுள்ள சிவபிரானது நெற்றி விழிப்பார்வை பட்டதுணையே காமதேவன் கனற்றப் பட்டனனென்பதும், சிவயோக ஞானிவிழி செவ்வனேபடப் பாவம் பாறுமென்பதும் உறுதியாதல் காண்க. ஞாலமாக்களெல்லாம் நஞ்சொல்லின்படி வயப்படுத்திக் கொள்ளலாம், நாமோரரசனுமாகலாமெனப் பேராசையின்மூத்து முயல்வார்

கொள்கை முற்றுப்பெரு நிலைக்களத்தே சகதீச சத்தி நிற்கின்றதென்பதூஉம் இக்கீர் சருப்பகியாயத்தா லுணரக்கிடக்கின்றது மோர்க.

பிணிப்பு = கட்டு ; பு - விகுதிபெற்ற தொழிற்பெயர்.

அல்லகண்டம் = துன்பம்.

" எய்யாமை " என்னும் உரிச்சொல் அறிவின்மைப்பொருட்டு ; " எய்யாமையே யறியா மையே " என்றனர் தொல்காப்பியனாரும். (உ)

கண்டெரியு நீர்மையு நாவுருசி கணலுங்
கடந்திவளல் காணுடைமையுங்
காதுநற் புழனாசி கேட்டலு மணத்தலுங்
கால்கர நடந்துதொடலுந்
தொண்டைவாய் பயிறலும் பாயுமல நீக்கலுந்
தொள்ளையங் கத்துபத்தஞ்
சுகமதர்ப் புறலுமுள் ளளவுமார் வத்தின்மிகு
தோம்விளையு மன்றிமதிசால்
பண்டமதும் விளையுமோ பரமசுக மணையுமோ
படியிலவை யில்லையெனினும்
பயனற்ற முழுமூட மாமவைக ணல்வினைப்
பலனாளர் கட்கியாணர்
அண்டுதுணை யாநிற்கும் விதியிலே னென்செய்வே
னருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 3

கண்ணானது (யாதொன்றனை) அறியுந்தன்மையும், நாவானது உருசியை நாடு தலும், உடம்பானது பரிசத்தை அறியுந்தன்மையும், காது கேட்குதலும், கல்ல துவாரங்களோடு கூடிய நாசி வாசனையறிதலும், காலானது நடத்தலும், கையானது பற்றுதலும், மிடற்றோடுங்கூடிய வாய் பேசுதலும், பாயு மலத்தைக் கழித்தலும், துவாரங்களோடு கூடிய உறுப்பின்களுள்ள உபத்தமானது புணர்ச்சி யின்ப மதர்ப் பினைப் பொருந்துதலும் உள்ளவரையிலும் ஆசையினாலே பெருகுகின்ற குற்றங்கள் விருத்தியாகுமல்லால் அறிவுசான்ற பயனும் விருத்தியாகுமோ ! பேரின்பமுங் கிட்டு மோ !! உலகிலே (கண்முதலியனவாக மேலே கூறப்பட்ட) அவைகள் ஆன்மாவுக்கில்லா தொழியினும், எத்துணைப்பயனுமில்லா முழு மூடமேயாகும். (ஆகலின்), பூருவ புண் ணிய பலத்தை யனுபவிக்கப் பிறந்தவர்களுக்கே அவைகள், முத்திநெறிக்குப் புதுமை பொருந்திய துணையாக நிற்கும். அவ்விதியிலியாகிய எளியேனென்செய்வேன் ; அருள் செய்வாயாக.

இந்திரியங்கள், நன்று தீதென்னு மிரண்டற்கும் ஏதுவென்பதும் இங்ஙனங் காணப்படுகின்றதன்றோ. இது—

" சப்தஸ்பர்சரூபரஸகந்தாஸ் ஸுகதுஃகஸம்யோகஹேதவஃ ।"

என்று ஸர்வஸாரோபநிஷத்திற் கூறப்பட்ட நியாயமாக விருக்கின்றது. " அவைக ணல்வினைப் பலனாளர் கட்கியாணர் அண்டுதுணை யாநிற்கும் விதியிலே னென் செய்வேன் " என்றது—

(பஹுநிபுண்யாநி க்ருதாநியேந,
தேநைவலப்யஃ பரமேச்வரோ ஸௌயஸ்யாங்கஜோஹம்
ஹரிரிந்த்ரமுக்யாஃ । மோஹாந் நஜாநந்தி ஸுரேந்த்ர
முக்யாஃ ப்ரபும் வரேண்யம் பிதரம் மஹேசம் ॥)

" மிக்க புண்ணியம் புரிந்தவர்களால் அடையத் தக்கவரும், பரமேசுவரரும், (பிரமனாகிய) யானும் விட்டுணுவும் இந்திரனுந் தோன்றத் தோற்றுவாய்த் தானமான வரும், இந்திரன் முதலானவர்களால் மோகத்தா லடையப்படாதவரும், பிரபுவும், சிரேட்டரும், பிதாவுமான மகேசர்" எனச் சரபோபநிஷத்தில் வரு பிரமாணமா யிருக்கின்றது. " கண்தெரியுநீர்மையும் - - - - - - - - - - உள்ளளவும் ஆர்வத்தின் மிகு தோம்விளையுமன்றி மதிசால் பண்டமதும் விளையுமோ பரமசுக மணையுமோ " என்ற தொடர்களின் பொருளைப் " பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று—நிலையாமை காணப் படும்." என்னுந் திருக்குறளினும் பெறலாமன்றோ.

கண்ணல் = கருதல் = நாடுதல் ; கணல் – தொகுத்தல் விகாரம்.

கால் = பாதம் ; காலென்கிற எண்ணலளவைப்பெயர் அவ்வளவையைக்கொண்ட வுறுப்பிற் காயினமையின், இஃதெண்ணலளவை யாகுபெயர்.

உள்ளளவும் - உள்ள அளவும் என்பதன் விகாரம்.

பண்டம் = பொருள் = பயன்.

அண்டுதுணை = பொருந்தியதுணை ; அண்டுதல் = அண்ணுதல், சார்தல்.

' துணையா ' என்பதில் ஆ – ஆகவென்பதன் விகாரம்.

' நல்வினைப்பலனாளர்கட்கு அவைகள் யாணர் அண்டுதுணையாநிற்கும் ' என வியைக்க.
யாணர் = புதுமை. (௩)

உணர்வுவினை யாநிகழ் தசேந்திரிய முகையையு
முளத்தினையு முய்த்துநோக்கில்
உறுநன்று தீதெனு மிரண்டற்கு முபயோக
முள்ளபல வக்கரங்கள்

பணமொக்கு மெனுநடுத் தோன்றலி னவற்றின்
படர்ச்சியா மிருவினைக்கும்
பதியா யிருந்தபசு வேயலா னீயல்லை
பாத்திய பதார்த்தமென்று
தணவாத முடிவுசெய் திடலாம் விளக்கமுந்
தமசுநே ரவ்வினைகளே
சனனமர ணங்களென மேன்மேலு மாமென்றல்
சரதமிவை யோய்பொருட்டென்
அணுபக்ஷ முன்பக்ஷ மாகவே யுள்ளினே
னருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 4

ஞானமுங் கருமமுமாக நிகழும் பத்திந்திரியக் கூட்டங்களையும் உள்ளேயிருக்கும் மனத்தினையும் ஆராய்ந்து பார்க்குமிடத்து (அவைகள்), பொருந்துகின்ற நன்று தீதென்னு மிரண்டனுக்கும் உபயோகப்படவுள்ள பலதிற வெழுத்துக்களையும் பணத்தையும் ஒக்குமென்னு நியாயந் (தோன்றும். அவ்வாறு) தோன்றுதலால், (பத்திந்திரியமும் மனமுமாகிய) அவற்றின் விருத்தியாம் பாவ புண்ணிய மெனப்படு மிருவினைகளுக்கும் பொறுப்புப்பொருள் அவற்றினைச்செய்ய (ப் பதியாய் =) த் தலைவனாயிருந்த சீவான்மாவே யல்லாமற் பரமான்மாவாயுள்ள நீ யல்லையென்று உறுதியான முடிவைச் செய்யலாம். ஒளியும் இருளும்போன்ற அவ்விரண்டு வினைகளுமே பிறப்பும் இறப்பு மென்னும்படி மேலுமேலும் வினையுமென்று கூறுதலு முண்மை. இவ்வினைக ளொழியும்பொருட்டு எனது அணுபக்ஷம் உனது சம்புபக்ஷ மாம்படி சிந்திக்கின்றேன்; நீ அருள்செய்வா யாக.

சுவேதாச்வதரோபநிஷத்திலும், நாரதபரிவ்ராஜகோபநிஷத்திலும்—

"காலஸ்வபாவோநியதிர்யத்ருச்சா - - - - - - - - ஆத்மாஹ்
யநீசஸ் ஸுகதுஃக ஹேதோ ।
தேத்யாநயோ காநுகதா அபச்யந்
தேவாத்ம சக்திம் ஸ்வகுணைர் நிகூடாம் ।
யஃ காரணாநி நிகிலாநிதாநி
காலாத்மயுக்தாந் யதிதிஷ்டத்யேகஃ ॥"

எனவரு மந்திரவாக்கியங்கள்—"ஆன்மா (போக்தாவாக) இருத்தலாற் போக யுக்த மாயையாயிருக்கின்ற காலம் முதலியன பிரபஞ்சோற்பத்திக்குக் காரணம் அல்ல: சுகதுக்கங்களுக்குரிய ஏதுவின்பாற்பட்டு (ப் பராதீனனாய்) இருத்தலால்

ஆன்மாவும் அவ்வுற்பத்திக்குக் காரணம் அல்லன் : காலம் ஆன்மா முதலியவற்றோடு கூடியிருக்கும் யாவற்றையும் எவ்வொருவன் ஏவுகின்றனனோ அவ்வொரு தேவனுடைய சுவகுணத்தின் மறைந்திருக்கின்ற ஆன்மசத்தியைக் காரணமென்று தியானயோக வாயிலாக அம்முனிவ ரறிந்தனர்." என்னும் பொருள்பயத்தலின், பாவ புண்ணியங்கட்குப் பாத்தியப்பொருள் சீவான்மாவேயென்னும் முடிபு இப்பொருட்கு முரணாதோ ? எனின்,—ஆன்மாவாயுள்ளான் ஆணவமலத்தான் மறைக்கப்பட்டவனேயாயினும் அவன் சடப்பொருள் போல்வானல்லன் : கேவலாவத்தையின் மறைந்து கிடக்கும் அவனது ஞானம் சகலாவத்தையிற் சிற்றறிவாய் நிகழுந்தன்மைத்து : அதன் காரணம் சீவசுதந்திரபோத மெனப்படும் : அச்சுதந்திரங்கொடுஞற்றும் பாவ புண்ணியங்களென்னுங் கன்மங்கட்குரிய பலனை அரசனைப்போ னியாயாதிபதியாயுள்ள பரமேசுரனே கொடுப்பவன் : கொடுக்கும் பலனை யனுபவிக்குமாறு உடங்கியைந்து நிற்பவனுமவனே : இவ்வாறன்றிச் சடமாயுள்ள கன்மம், காலம் முதலியனவும், அற்ப சித்தாயுள்ள ஆன்மாவும் ஒன்றுபடுமாறின்று : அனுபவம் உண்டாமாறுமின்று : அவ்வனுபவ நிமித்தம் யாண்டும் நின்று ஏற்றதனு கரண புவனங்களை அவைகள் உண்டுசெய்து கோடலுமின்று : உண்டுசெய்யும் அகண்டசித்தாகிய பரமேசுரசத்தி (=வலிமை) அங்ஙனங் காரணமாதலுண்மையின் உபநிஷதங்கள் அவ்வாறு கூறுவவாயினவென்னு நியாயம் பெறப்படுமாற்றானே அது முரணாதென்க. சீவான்மா போக்தாவென்பதையும், (ஈசனுக்குஞ் சீவனுக்கும் வேறாய) ஒருத்தியெனப்படு மாயை போகயுக்தமாயுள்ளா ளென்பதையும் "ஏகாபோக்த்ரு போகார்த்த யுக்தா" என்னும் மேலைய உபநிஷதங்களின் வாக்கியத்தே பெறுக. சிவசத்தியென்னும் பராசத்தியிலே காரியவேறுபாட்டா லேற்புடை யமிசமாகி ஈசுரனுடைய இச்சை, ஞானம், கிரியையென்னும் முத்திறச் சத்திகட்கும் வியனதாய் விளங்காநின்ற ஆதிசத்தியே அந்தத் தேவனுடைய சுவகுண மெனப்பட்டதென்றும் : ஆன்மாவானது தன் கன்மபலனை அந்நிலைக் களத்திலேயே நின்று நுகருமாறு அவ்வாதிசத்தி தானே ஆணவமலத்தோடு விராய்நின்று கன்மம், மாயை, வைந்தவமென்னு மலங்களின் காரியங்களைப்பெருக்கி அறிவுக்கறிவாய சிவசத்தியையும் அவ்வான்மா அறியாதபடி மறைத்துக்கொண்டு கன்ம நுகர்ச்சியினையே இன்பமாக ஊட்டுநிலையில் அதனுழை மறைந்துள்ள அகண்ட சிவசைதன்னிய சத்தியே ஆன்மசத்தியெனப் பட்டதென்றும் மேலை உபநிஷதங்களினுரைக்குப் பொருள் கொள்க. இப்பொருள்—"சைதன்னியமென்பது முற்றுணர்வு முற்றுத்தொழிலாய சுவாதந்தரியமாம் : அதனைச் சுவபாவமாயுடையான் யாவனோ வவன் 'ஆன்மா' எனப்பட்டனன்." என்று சைவமஹாபுராண கைலாச சங்கிதையின் கo-ஆம் அத்தியாயத்தே பகரப்பட்ட பொருட்குரியதாய்ச் சிவஸூத்ர மென்னுநூலிற் பிரதமமாய்—

(சைதந்யம் சூத்ரா) "சைதந்யம் ஆத்மா"

எனவரு சூத்திரத்தானும் வலியுறும். இந்நூல், சிவபெருமான் செய்தருளியதெனவே மேலைப் கo-ஆம் அத்தியாயம் பகர்கின்றது. சிவத்தை நாடாக் கன்மான்மாக்

கட்கு இருளாக நிற்கின்ற அவ்வாதிசத்தியே சிவத்தை நாடுவார்க்கு ஒளியாகவு நிற்கு மோரருளாகலின் அதுகொடே பிரபஞ்சோற்பத்தியின் காரணத்தினை முனிவரறிந்தன ரென்பதூஉ மறிக. 'தியானயோக வாயிலாக அம்முனிவரறிந்தனர்' என்பது பெறப் பட்டமையின், அந்தயோக நிலைக்களத்தேதான் அவ்வாறறிவிக்கு மோரருள் வெளிப் படு மென்பதூஉம், அவ்வருள் பெறுதார் தம்மனத்தா னிச்சயித்தபடி ஒரு சுவடியைப் படித்துணர்ந்தபடி ஒருவர்பாற் கேட்டறிந்தபடி யாதொரு சுவடியிற் றீட்டியிருந்தபடி வரைந்து வைக்கப்பட்டவற்று ளொன்றாகவேனுஞ் சுவேதாச்வதர நாரதபரிவ்ராஜகச் சுருதிமந்திரங்கள் நிருணயிக்கப்படாதனவாய் அவ்வருளறிவிக்கவறிந்த வுண்மையவா யுளவென்பதூஉம் இங்ஙனம் பெறுதும். பெறுமாற்றானே, கோபுரத்தைக்காட்டி இதனைச் செய்தவனிருக்கவேண்டு மென்னும் வழி இவ்வுலகினைக் காட்டி இயற்றியா னிருக்கவேண்டுமென அனுமான வளவைகொண்டு கடவுட்டாபனஞ் செய்யவந்த நூல்களென விவையாகாமற் கண்டறிந்தவுண்மை கழறுவனவாதல் கண்ணுகவென்றும் யாங்கழறுவாம். தொல்லைநாள் யாதானுமொரு கோபுரங்கட்டினானை யாம் பாராவிடி னும் இவ்வெல்லைநாள் அது போல்வதொன்று கட்டுவானை யாம்பார்க்குமாற்றான் அத் தொல்லைநாட்செய்கை யுறுதிப்படுகின்றது. அவ்வா றுலகியற்றியான் பிறிதோருலகு செய்ய விச்செவ்வி கண்டிலமாகலின் இச்செய்கை யுறுதிப்படுதற் கிடனின்று. இதுவேயுமன்றி, கோபுரங்கட்டினா ரெல்லாங் காலவயப்பட் டொழிந்தன ரென்பதை அக்கோபுரமே நின்று காட்டுகின்றது; அவ்வாறுலகியற்றியானுங் காலவயப்பட் டொழிந்தவனாவ னென்பதை இவ்வுலகு நின்று காட்டுகின்றதோ? எனுங்கடாவுமெழு தரும். இவ்வாற்றான் அவ்வனுமான வுவமையும், அதுபோல்வன பிறவும் பொருந்தாப் போலியெனக் கண்டிக்கப்படும். தியானயோக வழியெய்து காண்டலளவை இங்ஙனங் கண்டிக்கப்படுவ தன்றே. இவ்வதரானே, யோக ஞானங்களை யிழித்துரைக்குங் கருமி கள்கொள்கையும், நாத்திகர்கொள்கையு நாசமாயினவெனல் நனிபெரிதென்பதுங் கோடும். நண்டுக் கிளத்தப்பட்ட சத்தி, மலம் முதலிய விவரமெல்லாம் இந்நூலிற் றானே நன்கு விளக்கப்பட்டுள; வந்துழிவந்துழிக் காணலாம். பாவ புண்ணியங்கட்குப் பொறுப்புப் பொருள் சீவான்மாவே யென்னுமொரு முடிபு—

"மமேதிபத்யதேஜந்துர் நிர்மமேதிவிமுச்யதே।"

என்னும் வராஹோபநிஷத்தின் உ-ஆம் அத்தியாய வசனத்தானும் வலியுறு கின்றது. பொருள்:—"எனதென்பதனாலே (ஜந்து=) சீவன் கட்டப்படுகின்றது: எனதன்றென்பதனாலே விடுதலைப்படுகின்றது." எனவாம். எனதென்பது ஒன்றன் பாற் குறிப்புவினையா லணையும்பெயர். இதனில், யான் என்னும் பகுதியே என் என விகாரப்பட்டுளது; இது—குணம் எனது, இவ்வுடம்பு எனது, இத்தொழில் எனது, அவ்வீடு எனது, அம்மாடு எனது, அந்நாள் எனதெனத் தற்கிழமையினும் பிறிதின் கிழமையினுமாக ஆன்ம சுதந்திரம் வியாபித்தவழியே ஆன்மாவின் அறமறங்கட்குரிய கன்மமுஞ் சன்மமுஞ் சாதிக்குமாறு முணர்க. இது—

(க) "கர்மாநுகாந்யநுக்ரமேணதேஹீ ஸ்தாநேஷுரூபாண்யபிஸம்ப்ரபத்யதே।"

என்னும் அந்தச் சுவேதாச்வதர மந்திரத்தினும்,

(உ) " ததேவஸக்தள்ஸஹகர்மணைதி லிங்கம்மநோயத்ரநிஷக்தமஸ்ய ।
ப்ராப்யாந்தம்கர்மணஸ்தஸ்ய யக்திஞ்சேஹகரோத்யயம் ।
தஸ்மால்லோகாத்புநரேத் யஸ்மைலோகாயகர்மண ॥ "

என்னும் பிருஹதாரண்யகோபநிஷத்தின் கூ-ஆம் அத்தியாயத்து ச-ஆம் பிராஹ்மண வசனங்களினும்,

(௩) " அந்யஸ்ஸந்வ்யாப்திதோநந்யா கர்த்தாகர்மாநுஸாரத: ।
கரோதிஸம்ஸ்ருதிம்பும்ஸாம் ஆஜ்ஞயாஸமவேதயா ॥ "

என்னுஞ் சிவஜ்ஞாநபோதத்து உ-ஆம் ஸூத்ரத்தினும் பெறப்படுகின்றது. பொருள் :—(க) " சீவன் தன் கன்மங்கட் கீடாகப் பலவேறு தானங்களிற் பலவேறு வடிவங்களை முறைமுறையே யடைகின்றது " எனவும், (உ) " இவன், தனது மனம் எப்பலனை யிச்சிக்கின்றதோ அப்பலனுக்குரிய கன்மத்தைச்செய்து அவ்வக் கன்மானு குணமாக அவ்வவ்வுலகங்களை யடைந்து மீண்டுங் கன்மசேட மனுபவிக்குமாறு இவ்வுலகத்தை யடைகின்றனன் " எனவும், (௩) " மேற்கூறப்பட்ட அரனென்னுஞ் சங்கார காரண கருத்தாவானவன் பொருட்டன்மையால் வேறானவனேயாயினும் வியாபகத்தினால் வேறல்லாதவனாய்த் தன்னைவிட்டு நீங்காத ஆணையென்னுஞ் சிற்சத்தி யினால் ஆன்மாக்களுடைய கன்மங்கட் கீடாகச் சிருட்டிமுதலியன வுஞற்று கின்றனன் " எனவுமாம்.

" த்வாஸுபர்ணாஸயுஜாஸகாயா
ஸமாநம்வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்யபிப்பலம் ஸ்வாத்வத்த்
யநச்நந்நந்யோ அபிசாகசீதி ॥ "

என முண்டகோபநிஷத்திலும், மேலைச் சுவேதாச்வதரத்திலும் வரு மந்திரம்— " (ஜீவான்மாவும் பரமான்மாவுமாகிய) இரண்டும் பறவைகள் (போலப்) பிரியாத வொற்றுமையாய்க் கூடியிருப்பன : விருக்கம்போன்ற (சரீரத்) தை யடைந்துள்ளன : அவற்றுள் ஒன்று கன்மமென்னுங் கனியைப் புசிக்கின்றது ; மற்றொன்று புசியாததாய் (சாக்ஷியாக) ப் பார்த்துக்கொண்டிருக்கின்றது " என்னும்பொருளைத் தருமாற்றானும் அறமறங்கட்குப் பொறுப்புப்பொருள் சீவனேயன்றிச் சிவமாகிய நீ யல்லையென்னுந் திருப்பாட்டு நியாயம் எறுழுறுவ தாயிற்று.

" இவை யோய்பொருட்டென் அணுபக்ஷ முன்பக்ஷ மாகவே யுள்ளினேன் " என்றது— ' எனதன்றென்பதனால் விடுதலைப்படுகின்றது ' என்னும் மேலை வராஹோப நிஷத் வசனப்பொருளாக முடிதலுங் காண்க. சன்மார்க்கங்களைத் தீட்டவுந் துன் மார்க்கங்களைத் தீட்டவும் எழுத்துக்க ளுபயோகப்படுகின்றமையாலும், அங்ஙனமே

பணமுமாகின்றமையாலும், இவ்வாறே பத்திந்திரியங்களு முபயோகப் படுகின்றமை யாலும் "நன்று தீதெனு மிரண்டற்கு முபயோகமுள்ள பலவக்கரங்கள் பணமொக் கும்" என்றனரென்க. பயசுக்கடையிற் பயசும், மதிரைக்கடையின் மதிரையும் ஏற்றருந்துதற்கு அப்பண முபயோகப்படுதலுங் காண்க.

"வினைகளே சனனமரணங்களென மேன்மேலுமாமென்றல் சரதம் இவை யோய்பொருட்டென் அணுபக்ஷம் உன்பக்ஷமாகவே யுள்ளினேன்" என்றமையின், அணுவானது பிறப்பிறப்புக்களைச் சிவணியுழிதரல் சம்புபக்ஷமாதற்கு முன்னரேயே என்பதறியப்படுவதாயிற்று. அது சம்புபக்ஷமாங் காலை, அணுபக்ஷ புருடதத்துவ மொழிவையுறும். நானென்னுஞ் சீவமுளையாயுள்ள அத்தத்துவ மொழியுஞான்று ஊனுடம்பும், பிராணவாயுவும், உணர்கருவியாகிய ஞானேந்திரியமும், அதன்றலைமைக் கருவியாயுள்ள மனமென்னு முள்ளமுங் கெடுமென்றல்—

"வான்கெட்டு மாருத மாய்ந்தமுனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

என்னுந் திருவாசகத்தா லறியக்கிடக்கின்றது. உணர்கருவி கெட்டெனவே தொழிற்கருவியுங் கெட்டென்பது போதரும். இன்னுங் கந்தானுபூதியில்—

"'குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுறைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.'

'யானாகி யவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே'"

எனவும், தாயுமானசுவாமிகள் பாடலில்—

"கூடுத லுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான
குறியற்று மலமுமற்று
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்றுவிந்து
நாதமற் றைவகைப் பூதபே தமுமற்று
ஞாதுருவின் ஞானமற்று
வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமுமற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்

தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே."

எனவும் வருவனவும் மேலே கிளக்துபோந்த நிலையினையுணர்த்தும். இங்ஙிலையிற் பிறப்பிறப்புக்க ளொழியுமென்பதை,

"மற்றுப் பற்றெனக் கின்றி கின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறக் தேனி னிப்பிற வாத தன்மைவக் தெய்தினேன்
கற்ற வர்தொழு நேத்துஞ் சீர்க்கறை பூரிற் பாண்டிக் கொடுமுடி
கற்ற வாவுனே கான்ம றக்கிலுஞ் சொல்லு காகமச் சிவாயவே."

என்னுக் தேவாரம் நிலைபெறுத்தும். இச் சுவானுபவங்களே ஒரு ஞான்று மோரிடத்து முள்ளபடி கேட்டுமறியாதாருட் சிலர், இப்புடவியிலுய்தற்குரிய நித்திய வுயிர்கள் இத்துணையவென வேற்பட்டுள ; இப்புடவி உள்ளவளவும் அவற்றுளொன்றுங் குறைக்தொழியாது ; இராசியொன்றனிற் றேன்றுயிர்கள் இத்துணையெனக் கணிக்கப் படுமாற்றுனே மேடமுதலிய பன்னிரண்டிராசியிலுக் தோன்றுயிர்த்தொழுதி கனி கணித்துக் கழறு சோதிடநூலு மிதனே மதகைப்படுத்துமாகலின் உயிர்களுளொன்றே னும் பிறவா முத்தி பெறுது ; இறத்தலும் பிறத்தலுமே அதன்கதிகள் ; பிறவாமை வீடு பேறு (=நித்தியானந்தம்) என்னுஞ் சுருதிவாக்கியங் கண்ணுறப்படின் அதற்கு, 'உவ்வுயி ருடனேபிறவாது சில ஊர்த்துவத்தானங்களிற் பல்போது தங்கியிருக்கும்' என்று பொருள் கோடலாம்; வேறுகோடல் பொருக்காதென்கின்றனர். இவர், ஓராசனிருக்த தானத்திற்கு மற்றோராசன் வருதன்மானப் பிறவாப்பேறடைக்தாரது தானத்திற்கு மொருவர் வரலாமென்பதூஉம், அன்னணம்வரல் இப்பூமிக்கு வேறுய் ஆகாயத்தின்கட் செறிவாய் மின்னிக்கொண்டிராமின்ற வுலகங்களிலிருக்கு முயிர்கட்கு முரிமையாகலா மென்பதூஉம், யாதானுமொரு வீடு வெறுமையாக்கப்படுதல் கடுப்ப ஒருலகு பல்லுலகு வெறுமையாக்கவும்படூஉ மென்பதூஉம், இறைவ னெண்ணத்தாகாத தொன்றிராதென்பதூஉம், வறுக்கப்பட்ட காழ்க்கண் முளையிருக்தும் அது முளையாது முளைகழற்றப்பட்ட காழும் முளையாது அஃதேய்ப்பச் சிவமூஉ, செவ்வன் நசுக்கப் பட்டுச் சிவத்தன்மை யுற்றுரும் பிறவாரென்பதூஉம், அனுபவச் சான்றினும் மிக்க சான் றின்றென்பதூஉம் அறியாவா றெவன் ? இது கிடக்க.

சாயுச்சியமேயன்றிப் பிறவா விறவாப் பெற்றியுடைச் சிவனது உருவபதவி யெய்தினுரும் இப்புடவிப்புலம் பிறவாரென்றல் பெறப்படும். இப் பதவியும், சாமீப சாலோக பதவிகளும் சிவபிராணவித்தருள் பதகதியென்பதி லடங்கும். இக்கதியும், கதிகாயகனும், துறக்கங்களும், அவற்றின் றலைவர்களாய விட்டுணு முதலிய தேவர்களு முளரென்பது—

" ' இந்திரன்மால்பிரமன்னெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவெண்ணீமத்தயானையருள் புரிந்து
மந்திரமாமுனிவரிவனுரென்னவெம்பெருமான்
கந்தமரூரனென்றருளெடுத்தான்மலியுத்தமனே.'

'ஊழிதொறூழிமுற்றுமுயர்பொன்னெடுத்தான்மலி' "

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேரிற்கண்டு கூறிய உண்மைத்திருவாக்கா லறியப்படுகின்றது. [கொடித்தான்மலி = ஊழிகாலந் தோறு மழியாது மேலோங்கி நிற்கத்தக்க கைலாயகிரி]

இவற்றையெல்லா முய்த்துணர ஆன்ற தமிழ்க்கல்வியும், ஆயறிவும், ஆகூழு மில்லா தொதுங்கிநின்று ஆங்கிலமே யொருகிறிது கற்றுக் களியாட்டயர்வாருட் பார்ப்பார் மரபினரெனப்படுவாரு ளொருவர், தம்போன்முரால் ஆங்கிலத்தில் வரையப் பட்ட இலிகிதம் பிடித்துச் சிவன் யாண்டுளன்! விட்டுணு யாண்டுளன்! பிரமன் முதலினோர் யாண்டுளர்! அவர் இரார்; பிரமமொன்றுதானே நிணப்பார் நிணப்பின் வண்ணம் அச்சிவனுகவும், விட்டுணுவாகவும், பிரமனுகவும், மற்றுமாகவுந் தோன்றலாம் மறையலாமென்று சென்னைத் திருவல்லிக்கேணிக் கடற்கரை வாலுகமமர்ந்து வசனித் ததை யெஞ்செவி கேட்டதோடு எம்மன்பிற் சிறந்தார் செவிகளுங் கேட்டன; கவன் றன. மாறுகண்ணுக்கு மூலே செவ்வென்பதேய இப்படி வசனித்தாரது ஆராய்ச்சி நிச்சயம், அத்தெய்வமூர்த்திகளுடைய வுலகங்களுள்ளன வென்னுஞ் செய்தி யொன்முலேயே சிதைவுண் டொழிதற்காம் உண்மைத் திருவாக்கும் மேலே போந்துள தன்றே. இது, கேவலம் எவரோ பரிவின் வரைந்துவைத்த பழங்கதையெனற் கொண்ணுததாய்ச் சுந்தரப்பெருமானது திருவாக்காகவே யிருத்தலே யெம்மனேர் கருதிக்கொள் புண்ணியமும் பெற்முரால். ஆண்டே அவர் புரிந்த துறவற நிற்தையு நியாயமாகமாட்டா தென்பதுணர்வான், இத்தூலுரைகளோடு பரிபூரணுனந்தபோதத் துறவற விளக்கப்படல விசாலமும் இனிது கண்ணுறத் தக்கதாம். இறத்தலும் பிறத்த லுமே உயிரின் கதிகளென நிச்சயித்தவழியே, இறந்தார் கன்மையின் பொருட் டியன்றவா றியற்றும் உத்தரகிரியைகளைத் தடுத்தலும் விவேகமரகமாட்டாது; என்னே? தங்கண்ணுக்குங் கருத்துக்கும் புலப்படா இவ்விடயத்தும் மேலே கூறிப்போந்த செய்தி களிலும் புத்திசாலிபோ லிருப்பாருள் ஒருவர் பலர் பிரவேசித்துப் பிரமாணவிரோத நிருணயம், தெய்வவிரோத நிருணயம் புரிவது தோத்துறுமுதொழிலாய் முடியுமாகலின். இருபத்தைத் தாட்டைகட்கு முன்னர்த் திருப்போரூ ரெய்துவான் ஒரு காவாயிலேறிச் சென்ற துறவியொருவர், காற்றின்வேகத்தான் அந்காவாய் கவிழ்தலும், நீரின்மூழ்கி மரணமாய் அலகையாகி, அக்கண்ணதாமொரு சிறு கிராமத்தின் கண்ணே திருவளரா யிருந்தாரொருவர்க்கு ஏகபுத்திரியாயிருந்த சிறுமியை மூன்முண்டுகாறும் பற்றிக் கொண்டலேப்பதை யின்னதெனவறியா அச்சிறுமியின் றந்தையார், துயருழந்து தாம்புரி பல பரிகாரங்களானுந் தம்புத்திரிக்குற்ற அல்லலகலாமைநுதலி நிற்குமேல்லை, சென்னை வாசியாயிருந்த அப்பாவு முதலியாரென்னும் பெயரிய அலகை யோட்டு வாரை அவரகமழைத்துவந்து புத்திரியெதிர் நிறுத்தலும் அவ்வலகை, புன்னகையாடி

அப்பாவுமுதலீ! நீ சுகமா? உன்னுடையொல்லுகருள் இன்னின்ன பெயருடையாருஞ் சௌக்கியமா? நுங்குருவாயிருந்த சன்னியாசியார் யாண்டுப்போந்தார்? நீயிர் அவர் சேமமறிந்தனிரா? என்று வினயபோது அம்முதலியார், கூறுவன கூறி மேல் அலகை யாயுள்ள தங்குருவுரைத்தவணீத்து முணர்க்து அவரை வந்திக்து நின்று எம் பெருமானே! இத்துன் பொழியுமாறு கூறியருளிய உத்தரகிரியையினீ யிஞ்ஞான்று யானே செய்வலென அதனீ நடாத்துஞான்று அவ்வலகை, யான் இப்பெண்ணினீ ஈண்டுவிட்டு நீங்குகின்றனன்; எனக்குற்ற அலகைத்தன்மையு மொழிவடைந்த தெனக் கூறிச் சென்றது. இன்னன பல. இவ்வுண்மையெல்லாம் அவ் வுத்தரகிரியையினைத் தடுப்பாரு முண ரூழுள்ளவ ராவர் கொலோ! போந்த சன்னியாசியார் சரிதம், சென்னையைச் சார்ந்த அருணாசலேசுரன்பேட்டையிலிருந்த நயனியப்ப சுவாமி களென்னு மொரு நல்லார் தாமறிந்தபடி யெமக்குரைத்ததாகும். இதன்மேலும், எல்லாவுயிரும் பிறவாப்பே றடைந்த பின்றை இறைவன் யாதிழைப்பனெனுங் கடா வொன் றெழுப்பப்படுமாயின், 'கடவுள் பெரியபொருள்; அது துக்காணுபவ மறியா தது' என்னுங் கட்டுரை கேட்டலும் அது பெரியபொருளாயின் அகல மெவ்வளவிற்று? நீள மெவ்வளவிற்று? கன மெவ்வளவிற்று? யாண்டுளது? எத்துணைப் பொன்பெறும்? அதன் மகிமையை அதுவும் முடிவுபடுத்தாதோ? யாதொன்றனீ யறியாத வொன்று கடவுளாதல் யாங்ஙனம்? என்பான் கடாக்களு ளொன்றனீயொக்கு மாகலின் அது, விடைபெறு கடாவாகா மடம்வரு மிடவையாமென மறுக்கப்படு மென்க.

ஆன்மா, பாசத்திற் கட்டுண்டமையிற் 'பசு' எனப்பட்டது. அஃது ஆணவ மலத்திற் கட்டுண்டமையின் அணுவெனப்பட்டது. அதன் சம்பந்தம் 'அணுபசுத்வம்' எனப்பட்டது. ஆன்மா அணுவெனப் படுமென்பது—"ஏஷோரணுராத்மா" என்னும் முண்டகோபநிஷத் வாக்கியத்திலும், பிற பிரமாண வாக்கியங்களிலும் பெறப்படு முறைவழி விளக்கியுள்ள நியாயங்களைப் பரிபூரணானந்தபோதத்தே "ஆணவமான தந்தகாரமாய்" எனவும், தகராலய ரகசியத்தே "சிட்டி திதி நாச மறைவு" எனவுந் தொடங்குறு திருச்செய்யுள்களின் உரைகளாற் கொள்ளும் வலியுறும்.

'இருவினைக்கும் பாத்திய பதார்த்தம் பதியாயிருந்த பசுவேயலா னீயல்லை என்று' என விையையும். (சு)

புவனமெவை யுஞ்செறிந் துயிர்தொறுங் காரண
புரத்துளே விரவிநிற்கும்
பொல்லாவல் லாணவத் திமிரமது தன்சத்தி
போய்க்கெடா மற்கெடற்கும்
இவர்போத விந்துவுங் கரணாதி பங்களு
மிலக்கம திழந்திடற்கும்
ஏசற்ற நுன்னருட் பானுத னியற்கையா
மெற்கற்றை பலபரப்பி

அவிர்பாணி யெனைநா னறிந்ததையு மஞனறிந்
தருள்யோக சுகபோகமாம்
அனுபவத் தின்மே லதீதத்தை யெய்துதற்
காகுநா ளாகுநாள்வே
றவதியுள நாளெலா மாகாத நாட்களே
யருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 5

எல்லாப் புவனங்களிலுமெருங்கிக் காரணசரீரத்திற் சூன்மே யிராநின்ற ஒவ் வொரு சீவான்மாவிடத்தும் புணர்ந்துநிற்கும் வலிவாய்ந்த பொல்லாத ஆணவமல இருளானது ஆன்மவறிவை மறைக்கத்தக்க தனது வலியொழிந்து அங்ஙனங் கெடாது கெட்டு நிற்கவும், (அவ்விருளுக்குள்ளேயே பிரகாசிக்கப்) பொருந்திய போதசந்திரனும் அத்தக்காரண முதலிய நக்ஷத்திரங்களும் ஒளிமங்கியிருக்கவுங் களங்கமற்ற உன்னுடைய திருவருளென்னுஞ் செஞ்ஞாயிறு தன்னுடைய கிரணக்கூட்டங்கள் பலவற்றையும் பரப்பிக்கொண்டு பிரகாசிக்கும்போது, ஆன்மாவாகிய என்னை யித்தன்மைப்பொரு ளெனக் காட்டிக்கொடுக்கும் அந்தப்பிரகாசத்தில் யான் என்னையறிந்து, அவ்வாறு காட்டும் அவ்வருட்சத்தியையுத் தரிசித்து, அதன் மேலுறும் அவ்வருட்சத்தியின் யோக மும் அதன் மேலுறும் போகமுமாம் அனுபவத்தின் மேலே பரமானந்த மேலீட்டினை யடைதற்குப் பொருந்துநாள் ஒன்றுதான் எனக்கு நட்புநாள்; மறப்பு நினைப்பென்னும் அளவைக்குட்பட்ட மற்றை நாளெல்லாம் எனக்குப் பகைநாட்களே. நீ அருள் செய்வாயாக.

பூதவிருளானது உலகெங்கணு நிரம்பியிருப்பினும் அஃதொவ்வோரில்லிலும் வெவ்வேறுகவும் எண்ணப்படல் புரைய ஆணவமல விருளுமெண்ணப் படுமாகலிற் "புவனமெவை யுஞ்செறிந் துயிர்தொறுங் காரண புரத்துளே விரவிநிற்கும் பொல்லா வல்லாணவத் திமிரம்" என்பது கூறப்பட்ட தென்க. இருளிலேயே சந்திரனும் நக்ஷத் திரங்களும் பிரகாசித்தாங்கு அஞ்ஞான இருளில் ஆன்மாவின் சிற்றறிவாகிய போதமும், மனம் முதலிய கரணங்களும் நிகழ்கின்றமையாலும், சூரியகாந்திக்குமுன் அச் சந்திரன் முதலிய சிற்பொளிகளும் இருளும் தங்கள் பிரபாவங்களை யொருங்கே யிழக் திருந்தாங்குப் பேரறிவாய ஞானத்திற்குமுன் அச்சிற்றறிவும் அஞ்ஞான இருளும் நிகழாமலிருக்கின்றமையாலும் அவ்விருள், சந்திரன், நக்ஷத்திரம், சூரியனென்பன உவமைசெய்யப்பட்டனவென்க. சிற்றறிவினிலக்கணமும், பேரறிவினிலக்கணமுந் தெற்றெனப் புலப்படுத்துமதரால் இத்திருப்பாட்டானது சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், விழுமியது பயத்தலென்னும் அழகுகள் வாய்ந்துளதா மென்க.

'காரணபுரத் துள்ளுயிர்தொறும் விரவிநிற்கும் பொல்லாவல் லாணவத்திமிரம்' என வியையும். புரம் = சரீரம்.

போத + இந்து = போதவிந்து ; தமிழ்தான் முடிபு.

பம் = நக்ஷத்திரம் ; வடசொல்.

பாணி = பொழுது ; சூ - நிகண்டு காண்க.

அவதி = அளவு ; சே - திவாகரங் காண்க.

இலக்கம் = ஒளி ; இலங்கு - பகுதி. விளக்கு என்னும் பகுதியின் மெழிற்பெயரே விளக்க மெனவாத லறியப்படுமாறு இதுவுமறியப்படும்.

"நுன்னருட்பானு" என்றதில் நுன் = உன் ; நின் எனும்பொருளது ; இது, சுந்தர மூர்த்தி களது தமிழ்மறையினே "கொக்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்" என வருதற் கண்ணுமுளது. "சலந்தரன் முதலா நுன்குலத் தலைவர்" எனத் தணிகைப்புராணத்துச் சிவரி பூரணப்படலத்து கஉக - ஆஞ் செய்யுளிலும் வந்துளது. வேறு சில நூற்கண்ணுங் காணலாம். இவ்வாறு வரு வழக்கறியா வுரையாசிரியரொருவர், "சொல்வழு வென்பது சொல்லிலக் கணத் தொடு—புல்லா தாகிய புகர்படு மொழியே." என்ற தண்டியலங்காரச் சூத்திரத்திற்கு இச்சொற் புக்க வொரு செய்யுளைத்தானே யுதாரணமாகக் காட்டி அதிலுள்ள "துனக்கு" என்பதை வழுஉச்சொற் புணர்க்கப்பட்டதாக வரைந்துவைத்தார் ; அது காட்டாகாதென மறுக்க. பன்மைக்கு நும்மெனுஞ்சொல் வருஉமென் றுணர்த்திய தொல்காப்பியனார் முதலிய இலக்கண நூலுடையாரும் ஒருமைக்கு நுன்னென்பது வருஉமென் றுணர்த்தாமைக்குக் காரணம் யாதா மெனின்,—மேலைத் தமிழ்மறையிற் போந்ததொத்த அடிப்பட்ட சான்றோர் வாக்கிய மவர்க்குக் கிடையாமையாகலா மென்க. (நி)

பாசமென் றோதுதத் துவகணத் துள்ளுயிர்ப்
பாங்காக நின்றுழிதரும்
பரிசுடைய மனதன்றி யப்பாச முளதென்று
பயிலவும் வளாகமுண்டோ
ஆசையே வடிவமா யுள்ளவது வேமாயை
யையவிது தன்வசத்தே
ஆகாத காலமே பெத்ததசை முத்திதசை
யாங்கால மெவ்வாறெனிற்

காசினின் னருடனைத் தேடிடற் குரியவக்
கனமனக் கதலிவிதைதான்
காமர்வதி யோடே கலந்தவணு வுணர்வுகம
லத்தைநனி தெளிவித்தமேல்
ஆசறுமவ் வதியோடு தாழுமம் மனதுதந்
தருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே.

பாசமென்று கூறப்படும் (உட்கருவிருகூ - ம், புறக்கருவி கூ0 - ம் ஆய) தத்துவக் கூட்டங்களுக்குள்ளே உயிரின் சார்பாக நின்று சுழலுந் தன்மையுடை மனத்தையன்றி அந்தப்பாசமுண்டென்று சொல்லவு மிடமுளதோ? அவாவடிவா யிராநின்ற அம் மனமே (அத்தத்துவங்கட்குக் காரணமான சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தமென்னும்) மாயையாகும். இது வசப்படாதகாலம் பெத்தமையும், வசப்பட்டகாலம் முத்திதசை யுமாம். எப்படியெனின்,—குற்றமற்ற வனது திருவருளைத் தேடுவதற்கு உரிய அம்மாண்புடைய மனமென்னுந் தேற்றுமா வித்துத்தான் அவாவென்னுஞ் சேற்றோடு விராய ஆன்மவுணர்வென்னு நீரை நனிபிரித்துத் தெளிவுபடுத்தின பின்றை நறிய அச்சேற்றோடு தாழ்ந்துவிடும். அத்தகைய மனத்தினை யெற்குக் கொடுத்தருள்வா யாக.

"உயிர்ப் பாங்காகின் றுழிதரும் பரிசுடைய மனது" என்றது—"சோமியனே! மனம் பிராணனிற் பந்திக்கப்பட்டுளது" என்னும்பொருள் பயக்குமாறு

"ப்ராணபத்தகலிஹி ஸோம்யமந இதி"

எனவரு சுருதிமுடிபாக விருக்கின்றது. இது, சாந்தோக்யோபநிஷத்தின் சு - ஆம் பிரபாடகத்து ஐ - ஆங் கண்டத்தது. மண், பெண், பொன்னென்னும் ஏடணை (= ஆசை) மூன்றும் பாசத்துட்படுதலினாலும், அம்மூன்றுமே சகமன வெழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஏதுவாய் நிற்றலினாலும் அம்மனத்தின் வடிவு ஆசையென்றும், அதுவே மாயையென்றுங் கூறினாரென்க. அவ்வேடணைப்பொருண் மூன்றும் நாட்டுமாறிழைக்குந் தொழில் பலவற்றுள்ளே, ஆன்மலாபமுணர்த்து மெய்ந்நூல்களைச் சிலர் படித்துக் காட்டலும், பொருள்செய்து காட்டலும், பலபிரதிசெய்து நீட்டலும், புதியன வரைதலுமாகிய இந்நான்குமடங்கும். இவையனைத்தும், இவ்வுலகுழைப் பெரும்புகழ் படைக்க வேண்டுமென்னும் பேராசையி னுழிதரு வேறுசிலரும் நம்பெய ராலியாமே நம்வடி வகிய விக்கிரகமொன்று இப்பொழுதே நாட்டியிட வேண்டுமென்னு மோர்நசையிற் படுவர்: விளிவுற்ற பின்னருந் தம்முடம்பு தரையடக்கஞ் செய்யப்பட்டுப் பூசனைபெற வேண்டுமென்னுங் கருத்தானே யேற்புடைக்காரியம் பல விழைப்பர்: இன்னும் பல்லாசைவழிப் பலவுமயர்வர். இவையெல்லாம், குமரகுருதாசசுவாமிகள் பாடற்கண்—

"தன்னைப் பொதிந்திருக்குஞ் சட்டகமு மித்தையெனின்
அன்னியப்பண் டங்களிலை யாமோ குருபரனே."

எனவரு செய்யுட்பொருள் இதயத்தே சாரும்புண்ணியஞ் சாரா ஆதலாலாவர். அவ்வன்னியப்பண்ட அழிவு—

(illegible)

அந்யாநாம்சோஷணம் மஹார்ணவாணாம்
சிகரிணாம்ப்ரபதநம் த்ருவஸ்யப்ரசலநம்
வ்ருச்சநம்வாதரஜ்ஜூநாம் நிமஜ்ஜநம்ப்ருதிவ்யாஃ
ஸ்தாநாதபஸரணம் ஸுராணாம் ।)

"ஆன்மாவுக்கு அன்னியமாயுள்ள மாகடல் வற்றிவிடுகிறது : மலைகள் வீழ்ந்து விடுகின்றன : துருவன் அசைவுற்று நழுவுகின்றனன் : காற்றாகிய கயிறுகள் அறுந்து விடுகின்றன : பூமி மூழ்கிவிடுகின்றது : தேவர்கள் உறைவிடம்விட் டோடிவிடுகின்றனர்." என்று சுருதி கூறுதலிற் பெறப்படும். இக் கூற்றுக்கள் சாம வேத மைத்ராயண்யுபநிஷத்தன. இவைகளையும், முற்பிறவிகளிற் செய்துகொண்ட காரியங்களு ளொன்றேனும் ஈண்டுத் தமது ஞாபகத்தில்லா தொழிந்ததையும் உய்த்துணர்வார், இப்பிறவியிற் செய்து கொள் காரியங்களை யாமெங்ஙனங் கண்டுகளிகூர்தல் கூடுமென்னும் ஒருண்மைத்துணிபானே ஆசா பாச விலாச மனந்தோன்றாவாறு ஆளுடையான் றிருவடி தஞ்சமென நிற்பாரென்ப திங்ஙனுணுரக்கிடக்கின்றதென்க. மனமானது "தன்வசத்தே யாகாத காலமே பெத்ததசை முத்திதசை யாங்காலம்" என்றது—

"மநஏவமநுஷ்யாணாம் காரணம்பந்தமோக்ஷயோஃ ।
பந்தாயவிஷயாஸக்தம் முக்த்யைநிர்விஷயம்ஸ்ம்ருதமிதி ॥"

என்னும் மைத்ராயண்யுபநிஷத் வசனப்பொருளை யுட்கொண்டுளது. தமிழ் :— "மனிதர்களுடைய பந்தமோக்கங்கட்குக் காரணம் மனமே : விடயப்பற்றுடைய மனம் பந்த ஏதுவாம் : அப்பற்றற்ற மனம் முத்தி ஏதுவாம்" என மிளிரும்.

"யதாஸர்வேப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹக்ரந்தயஃ ।
அதமர்த்யோம்ருதோபவத் யேதாவதநுசாஸநம் ॥"

என்னுங் கடோபநிஷத்தின் ௬ - ஆம் வல்லியில் வரு சுலோகத்தினும் அப்பொருளிருத்த லறிக. தமிழ் :—"மனத்தினுடைய எல்லா முடிச்சுக்களும் இங்கே யெஞ்ஞான்றவிழ்க்கப்படுகின்றனவோ அஞ்ஞான்றிற்குப் பின்றை மனிதன் அமிருதமாகின்றனன்: அனுசாசனமென்னு முபதேசமித்துணையே" எனவரும். அற்றாகலினன்றே—

"இணக்கிக் கொண்டாற் பிணக்கொன் றுமிலை."

என ஞானவாக்கியமு மெழுந்துளது. மூவித மாயைகளின் விவரம் "ஓங்காரம்" என்றற்றொடக்கத்துப் பத்திலுளது. மனம் நினைக்குந் தன்மைத்தாகலின் மனமெனப் பட்டது ; இதனை, "மந்வாநோமந :" என்னும் பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௩ - ஆம் அத்தியாயத்து ௪ - ஆம் பிராஹ்மண வசனத்தி னறிக.

வளாகம் = இடம்.

ஆசையே—ஏ - அசை.

காமர் = எழில் ; ஈண்டு நல்ல என்னும் பொருள்பட நின்றது.

"வதியோடே" "வதியோடு" என்பனவற்றுள்ள 'ஓடு' இரண்டும் மூன்றனுருபாகலின் முன்னையது உடனிகழ் கலப்புப்பொருளையும், பின்னையது உடனிகழ்ச்சிப்பொருளையுந் தருவ வாயின.

கமலம் = நீர்.

"பெத்ததசை" "முத்திதசை" என்னும் வடமொழித் தொடர்களைப் 'பெத்தநிசை' 'முத்திநிசை' எனச் சிலர் நீட்டியுளார். அவ்வாறு நீட்டல் வழுவாமென்பதை (ஜீவந்முக்த உபாயாம்) "ஜீவன்முக்ததசாயாம்" என்னும் மண்டலப்ராஹ்மணோபநிஷத் மொழிகள்கொண்டு மதியலாம். உடம்பென்னும் பொருளில்வரும் (தெஹம்) 'தேஹம்' என்னும் வடசொல்லையைத் தமிழிலே 'தேகம்' என வெழுதவறியாது 'நிரேகம்' எனவெழுதி இதுதான் வடமொழியென் றிறுமாந்திருக்கும் தமிழ்ப்பண்டிதரும் இது கருதுவரோ! (சு)

பார்வைகட் கெட்டாத தாயத்த மதுகொண்டு
பற்றிடற் கொண்ணாததாய்ப்
பவனமுந் தூமமும் புகுதா விடத்தினும்
பாடின்றி நுழைநுண்ணிதாய்க்
கார்விழிக் குப்புலப் பட்டவெலை மட்டுமொர்
கணத்துளே போய்மீள்வதாய்க்
கண்போலு மன்னிய பதார்த்தமன் றித்தனைக்
காணாத வுட்கண்ணதாய்ச்
சோர்வுமிங் கிதமுமுற் றொன்றைவிட் டொன்றனைத்
தொட்டுநிற் கும்பண்பியாய்ச்
சுசனமது போலவே சலனஞ் சுபாவமாச்
சுலவவுள நெஞ்சைவசமாய்
ஆர்வொடு செயாதாரு முனையறிய வல்லரோ
வருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 7

கண்களைக் கொண்டு பார்க்க முயல்வார் பார்வைகட்கு எட்டாததாகி, அவர் கைகொண்டு பற்றிடற்கு இயையாததாகி, காற்றும் புகையும் புகாவிடத்தும் எளிதாக நுழையு நுண்பொருளாகி, கருவிழியோடுங்கூடிய கண்ணிற்கு முன்னர்ப்புலப் பட்டுள்ள எல்லைவரையிலும் ஒரு கணப்போழ்தினுட் சென்று திரும்பத்தக்கதாகி, காண்டக்க பொருள்களைக் காண்டலிற் றனக்கு வேருயுள்ளன காண்பதன்றித் தன்னைக்காணுக் கண்ணினை யொக்கும் ஒருட் கண்ணுகி, மறப்பையு நினைப்பையும் பொருந்தி அவ்வழியே ஒன்றைவிட்டொன்றைப் பற்றிநிற்கும் பெற்றிமைத்தாகி,

காற்றைப்போலவே அசைதல் சுபாவமாகச் சுழலவுள்ள மனத்தினை முற்றும் வசப் படுத்திக் கொள்ளாதாரும் உன்னை உள்ளபடியறிய வல்லுநராவர் கொலோ? ஆகார். இங்ஙனம் அருள்புரிவா யாக.

கண்ணனது கடுவுறு கறுப்போடேய்ந்து பளபளப்பாயிராநின்ற தனது வடிவத் தினைத் தானே கண்டுகொளாது தனக் கெதிர்முகத்துள்ள பொருள்களையே காணுமது போல, மனமுந் தன்னிலைமையினைத் தெரிந்து கொள்ள மாட்டாமே பிறவிடயங்களையே ஆய்ந்தறிமாலித்தாகலின் அக்கண், உவமைக் கெடுத்துக்கொளப் படுவதாயிற்று. இது—

(பராஞ்சிகாநி வ்யத்ருணத்ஸ்வயம்பூஸ்
தஸ்மாத்பராங்பச்யதி நாந்தராத்மந் ।)

"சுயம்புவாயுளான், இந்திரியங்களை ஆன்மாவுக் கன்னியமானவற்றையே யறியுமாறு சிருட்டித்தனனுகலின் அவை, அன்னியமானவற்றையே காண்கின்றன: அந்தரான்மாவைக் காண்கின்றில." என்னுங் கடோபநிஷத்தின் ச - ஆம் வல்லி வாக்கியங்கொடு யாப்புறுத்தப்படும். மனம் உட்புலத்தே பிருப்பதாகலின், அஃது "உட்கண்" எனப்பட்டது. கண்கண்டதைத் தானே கருத்துங் கருதுமாகலிற் "கார் விழிக்குப்புலப் பட்டவெல்லை மட்டுமொர் கணத்துளே போய்மீள்வதாய்" என்று அதன் செயல் குறிக்கப்படுவதாயிற்று. இங்கே, "கனவின்கட் பார்த்ததும், பாராததும், கேட்டதும், கேளாததும், அனுபவித்ததும், அனுபவியாததுமாகிய யாவையும் பார்க் கின்றனன்" என்னும்பொருள் பயக்கத்தக்கதாய் "அத்ரைஷ தேவ: ஸ்வப்நே" என்றற் றொடக்கத்ததாயுள்ள பிரச்நோபநிஷத் வசனத்தின்படி, காணப்படாதன வற்றையுங் கனவிற் காண்கின்றதே மனமெனின்,— முன்னைப் பிறப்புக்களிற் கண்டு கேட்டனுபவிக்கப் பட்டனவும் உள்ளுறைவாகவிருத்தலின் அவைகளும், தூலபூதங் களாலாய தூலப்பிரபஞ்சம்போலவே சூக்குமபூதங்களாலாய சூக்குமப்பிரபஞ்சமு மிருத்தலின் அவைகளும் விஷமாத்திரையாக மன முதலிய சூக்குமக்கருவிகளா லனுபவிக்கப் படுவனவாகலின் அவை காணப்படாதனவாகா. அற்றுகலினன்றே—

"கனவின் பயனு நனவின் பயனும்
வினையின் பயனவை பெய்யென வேண்டா"

என்று சங்கற்ப நிராகரணத்தில் உமாபதி சிவாசாரியரு முரைத்தருளினர். இஃது — "இப்புருடற்குரிய தான மிவ்வுலகமும், பரலோகமுமென இரண்டாம்; மூன்றுவது தானம் சொப்பனமாம்: இதன் பெயர் சக்தியம்: என்னை? இதன்கணிருந்து கொண்டு இவ்வுலகமும் பரலோகமு மனுபவிக்கின்றனனுகலின்." என்னும்பொருளைத் தருதற்காய—

"தஸ்யவா ஏதஸ்ய புருஷஸ்யத்ரயே ஏவஸ்தாநேபவதிதஞ்ச
பரலோகஸ்தாநஞ்சஸந்த்யம் தருதீயத்ஸ்வப்நஸ்தாநம்
தஸ்மிந் ஸந்த்யேதாநேதிஷ்டந்நேதே உபேந்தாநே
பச்யதிதஞ்ச பரலோக ஸ்தாநஞ்ச ।"

என்னும் பிருஹதாரண்யகோபநிஷத்தின் கூ - ஆம் அத்தியாயத்து கூ - ஆம் பிராஹ்மணக் கிளவிகளினுல் நிரப்பற நிலைபெறுத்தப் படுகின்றதன்றே. அறியலுறுவார்க்கு இப்பொருள் பொருந்தவுணர்த்தல் இந்தூற்கண் "கனவுகோ" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டினுங் காணப்படுகின்றதால். முன்னர்ப் பொன்வண்ண மென்னுமொரு நிறத்தினை விழி வழியாயறிந்து கொண்ட மனமே பின்னரதனை நினைவு கூர்ந்தெடுத்து ஆசைவழியே பாவித்துப் பலவாறு செய்துகொள்ளுமாறு பலவுஞ்செய்தலே மனோசங்கற்ப மனோராச்சிய மாதலானும், பிறவிக்குருடனுடைய மனத்திற்குப் பிரபஞ்சம் முழுதும் இருள்வடிவாகக் கருதவியலுவதன்றி வேறுகருத வியலாமையானுங் கண் கண்டவழியே மனமுமா மென்பது தெள்ளிதென்க. குருடனுக்கு உலகம் இருளாகவேயுள தென்பதை,

"அந்தம் புவந மந்தஸ்ய"

என்னும் வராஹோபநிஷத் வசனங்காட்டுதலானே இது, சுருதி நிச்சயமுமாயிற்று. கனவின்கண்ணே தன்னை விசும்பிற் பறக்கப்பார்த்தல் சூக்கும வுடம்பிற் குரிய தொழில்களு ளொன்றுகலின் அது, கண்டதையே கருது மென்பதற் காவதன்று. பிறவும் இதுபோலும் மாலையவாம். இவ்விசாரணை, செக்கர்வேள் செம்மாப்பின் உ-ஆங் காண்டத்துக் கனவதிகாரத்தில் இனிதறியுமாறு யாங்கூறியுள்ளாம். "நெஞ்சை வசமாய் ஆர்வொடு செயாதாரு முணையறியவல்லரோ" என்பது கடோபநிஷத்தின் கூ - ஆம் வல்லியில்—

(யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநிமநஸாஸஹ ।
புத்திச்சநவிசேஷ்டதே தாமாஹுஃ பரமாம்கதிம் ॥)

"எவ்வாறு மனத்தோடு கூடிய ஞானேந்திரிய மைந்தும் நிலைத்து நிற்குமோ? புத்தியு மசையாது நிற்குமோ? அந்நிலையைச் சிறந்ததாக நூலுன்றனர்" எனவும், நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் கூ - ஆம் உபதேசத்தில்—

(நாசாந்தோ நாஸமாஹிதஃ,
நாசாந்தமாநஸோவாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத் ।)

"நீத்தொழில்களை விடாதவன் மனத்தினை யொருநிலை நிறுவாதவன் இங்கோதப் பட்ட 'ப்ரஜ்ஞாந' வத்துவை யடையமாட்டான் (அதாவது 'ஸ்வரூபதேஜோமய சாச்வதம் சிவம்' என்று மேலேசொல்லப்பட்ட வத்துவை யடையமாட்டான்)" எனவும் வருஉம் பிரமாணமா யிருக்கின்றது.

"ஸ்திரவாணீந்த்ரியவ்யாதைஃ த்வாம்நவேத்ஸீதிபோதிதஃ ।
முக்த்வைதாந்தருணஸ்தோ தத்யஃ ப்ராப்நோதிதத்பதம் ॥"

என்னுஞ் சிவஜ்ஞாநபோதத்து அ - ஆம் ஸூத்ரமானது "ஞானேந்திரியங் களாகிய வேடரோடு கூடியிருந்து நினது பெருமையை நீ யறிகின்றிலையென ஞான சாரியனுற் புண்ணியமுடைய ஆன்மா அறிவுறுக்கப்பட்டவனுய் இவ்விந்திரிய வேடர் கூட்டை விட்டு வேற்றுமை யில்லாதவனுய் அச்சிவபதத்தை யடைகின்றனன்" என்னும்

பொருள் பயந்துநிற்றலின் 'இஃது மப்பொருளுடைத்து' என மாட்டெறிந்துரைக்க. கண்ணெனைக் காதென மூக்கென நாக்கென உடலெனைக் காணப்படும் அறிகருவியைந்தும் புருடன துணர்வு போய்மீடற்குரிய துவாரங்களேயாம். தலைமை மனமுமங்ஙன மொன்றெனவே யெண்ணப்படுகிறது. இவ்வாற்றுற்

(க) காண்டலி ஞெருகூறும்,
(உ) கேட்டலி ஞெருகூறும்,
(ஈ) மோத்தலி ஞெருகூறும்,
(ஓ) உண்டலி ஞெருகூறும்,
(ஔ) ஊறறிதலி ஞெருகூறும்,
(ஃ) நினைத்தலி ஞெருகூறும்

.என அறுதிறங் கவர்த்துநின்று ஒன்றுபுரித லொன்றற்கிலாது கொடியினெடியின் மாறி இச்சித்தவாறெல்லாம் புக்குச் சிதறிநிற்கு முணர்ச்சி அதீத தேவவழிபாட்டினை முற்றுமுணற்ற வலியிலதாய் உலகத்தும் யாதானுமொரு காரியத்தைச் செவ்வனேசெய வலியற்றதாய் நிற்கும் மாலைத்தாம். அச் சிதறுதல் இல்லாப் பிழம்பெனத்திரண்டு பெருகொரு நிலைக்களனே அத்தேவ வழிபாட்டிற் குரிமைத்தாம். அறிகருவிகள் வெளிமுகத்த வாகலின் இவ்வழிபாடு வெளிமுகத்தேலாதென்னு முண்மையானும், உடற்குறுநிபயக்கு கறியஉணவு உடலின்மேற் பூசப்படலான் நறும்பயன் பயவா தொழிக்தாங்கு வெளிமுக வழிபாடு மொழியு நீர்த்தென நிச்சயிக்கப்படலானும், அத்திறவுணவு உட்கொளப்படலான் உள்ளுறுப்பு வெளியுறுப்பெனுமிரண்டற்கும் உறுதிபயந்தாங்கு உண்முக வழிபாடு மதுபயக்கு நீர்த்தென நிச்சயிக்கப்படலானுங் கண் காது முதலிய இந்திரியங்களின் வழியே செல்லா நீர்த்தால் உட்புலத் தொருங்குபட் டொருபரம் பொருளேயே யுன்னி நிற்குஞ் சிறந்தநிலையினை யெய்தகில்லான் சிவத்தையடையமாட்டா னென்னுமொரு தெருண் முடிபு இங்ஙனம் இனிது பெறப்படுதலின், இதுவே யனுபவமுமாதலின், அவ்விந்திரியங்களின் வழியே வெளிமுக ஆராதனை புரிதலும், 'பஹுஜந பரோபகாரம்' என்பது முதலிய கருமங்களைச் செய்தலுமே வீடுபேறென்னுங் கருமிகள் கொள்கை மதுகையுடைத்தன்று. இக்கொள்கையினரே யிக்காலத்தே பலதேயத்தும் பல்குராயினர். இன்னோர், வெளிமுகத்தே யெத்துணைநா ளிடைவிடா தெத்துணை யிரும்பாடு படினும் உண்முகத்தான்மாவையும் பரமான்மாவையுக் தரிசித்துய்தி பெறாஉஞ் சுவானுபூதிமான்களாவரோ? ஆகாவறிவோரென்பது சரதம். இவ்வறிவோர், ஊறுதபு முண்மைத்துறவிகளாய அவ்வனுபூதிமான்களைச் 'சுயநலப்பிரியர்' என்றிழித்துக் கூறுதலுங் காணப்படுகின்றது. இது, காமுகனுவான் கற்புநிலையை யிழித்துரைப்பது கடுக்குமென்பதினு மிழுக்கும். என்னை? சருவ பசுபுண்ணியமுஞ் சருவபதிபுண்ணியமு நிரம்பி விடுதலைக்குரிய பக்குவசத்தி பல்கப்பெறீஇ

"இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே"

என்று கந்தரலங்காரமாகிய வேதங் கழறுமாறு இரவுபகலில்லா விடத்திருக்கும் அனுபவசாலிகளை யிழிவின்பாற்படுத்துப் புகழ்வாய்ப்பு, அறுசுவையூணுகர்ச்சி, அரிவையர்புணர்க்கை யென்பன பேரின்ப மென்னுமாசையுள்ளுட் பிறங்கும்வழிச் சுயநலமே கருதுபு 'பரோபகாரம் யாஞ்செய்குதும்' என நடிக்குந்தன்மையிற் றம்மை யுயர்வின்பாற்படுத்து நிற்போராய் அவரிருத்தலின். உலக இன்பநுகர்ச்சி துன்ப நுகர்ச்சிகட்காம் புருடதத்துவமென்னுஞ் சீவகரணமடங்கிச் சிவகரணந்திகழ விருப் பாரல்லாத வெவருஞ் சுயநலங்கருதாது யாதொன்று முஞற்றுவதில்லை யென்பதுண்மை. இதற்கு, அவரவர்மனமே தகு சான்றாமன்றே. இந் நீரவரால் ஆங்கிலமொழி முதலிய வற்றில் வரையப்படு தந்திரமொழிகளுந் தடுமாற்றமொழிகளும் ஆசாபாச விலாசகரண நீப்பாம் ஏகாந்தத்தினின் றுண்மைகண் டுள்ளபடி யுணர்த்துஞ் சிவகரணர் திருவாக்குக் களா முபகார நூல்களாமோ? ஆகாவென்ப தைம்புலன் வெல்வார் துணிபாம். உலகம் எங்கிருந்து வருகின்றதென்பதையுந் திவ்வியயோக வாயிலாகவே கண்டுகூறும் ஆற்றல் வாய்ந்த நீத்தாராய அவ்வனுபவச் செல்வர்களுடைய அடிமலர்களைத் தொழுதுநிற்குஞ் சுபகாரிய மொன்றினாலேயே வேண்டுவார் வேண்டுவது பெறுவராகலின் அவர் சன்னி தியே சருவ பரோபகார நிலயமுமாமென்க. வெளிமுக கருமிகளாய விடயப்பிரியர் கள், அங்ஙனம் வீடுபேற்றினையும் விழைவோராயிருப்பின் அவர், ஏககாலத்தே யிருளுக்கும் வெயிலுக்கு மாசைப்படூஉங் கோணலான குறுமதியுடையோரை யொப்ப ரென்பது—

"வீணான விடயத்தை யும்பந்த மேவா
மாணாரு மமுதத்தை யுங்கருது மாந்தர்
நாணாதன் வெயிலுக்கு மிருளுக்கு நசைசெய்
கோணான புல்லுணர்வு கொண்டவரை யொப்பார்."

என்னும் பரிபூரணானந்தபோதச் செய்யுட்கட் பெறலாமன்றோ. இரத்தினக் கற்கள் சுமந்துவிற்போன், அம்மிக்கல் சுமந்துவில்லா னென்பதன் வழியுணரப்படு மோரறிவுடைமையும் அவ்விடயப்பிரியர் நெஞ்சினை மேவி நிற்குமோ!

"வேள்வி, விரதம், தவம், தானமென்னும் விதியையறிதலும்
புரிதலுமாகிய இவ்வித மனோவியாபாரம் பந்தம்."

என்னுஞ் சுருதிப்பிரமாணத்தையும் அவருணர்வர் கொல்லோ!! இதன் வட மொழி "முண்டமுண்டனமும்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கட் டீட்டப் பட்டுளது. அங்ஙனேயே இத்திறப்பிரமாணங்கள் பலவுங் கண்ணுறலாம். வேள்வி, தானம் முதலிய சற்கருமங்கள், இறப்பார் பிறப்பார்க்குரிய சுவர்க்கங்களை நல்குமாக லின் அவையற்றைச் சுருதி பந்தமென்று பணித்தது.

"மலர்க்கொன்றைத்—தொங்கலா னடியார்க்குச்
சுவர்க்கங்கள் பொருளலவே"

என்று திருஞானசம்பந்தனாரது தபிழ்மறை சாற்றுதலுங் காண்க. நீத்தார் யாவ ரென்பதை நன்குணரமாட்டா மலைவின்பாற்பட்ட இவ்விடயப்பிரியரும், பிறரு முணரு மா றீண்டொருதிற மெடுத்து விளங்கக் கூறுதும். உலகர், தம்மனஞ் சென்றவாறு

பற்று பல்கருமங்களுள்ளே கற்றலும், கேட்டலும், மேன்றெய்வ வழிபா டிஃதிஃதெனச் சில்கரும முஞற்றலும், மதசம்பந்தவாதம் புரிதலும், அதன் சார்பாகப் பல்குழாஞ் சேரச்செய்து ஓயாப்பிரசங்க நிகழ்த்தலுமாகிய உயர்தொழில்களையும் இம்மைப்பயன் கருதியே பற்றுவர். அன்னவருட் சிலர், இவ்வுலகந் தம்மைப் புகழ வேண்டுமென்னுங் கருத்தால் அவை யயர்வர். சிலர், மறுமைப்பயன் கருதி அவையிழைப்பர். இன்னோர்க்கு வேறாயுள்ள வொருசிலர், அன்பினால் அவை யாற்றுவர். இவ்வன்பரயர் காரியங் கைம்மாறு வேண்டாதுநிகழ் சிறப்பிற்றாகலின் இவர்பாற் கடவுணன்றியினைப் பாராட்டுதல் எம்மனோர்க்கு மொருகடனாம். பலப்பல தோற்றமாய் நண்டிய இந்நிலவுலகிலெய்துறு வாழ்வு உறுதியற்றதென்னு மொள்ளுணர்வு தம்முளுதித்தலும் அவ்வாழ்வு நீத்து ஆளுடையான் றிருவடி நிழலை நேடி அடைதற்கரிய துறவற முறுவோர் ஒருசிலரேயாவர். அவருள்ளுஞ் சிலர், உடற்பிணி முதலிய பஃறுன்பங்கட் காற்றா வியல்பினான் முன்னிருந்தநிலைமை நன்றென * இல்லமே நாடி வந்திடுவர். சிலர், அனைய துன்புகளைப் பொறுத்திருக்கு மாற்றல் பெறினும் உட்புலமிருந்தெழு பண்டை வாசனையினால் "உன்மனிபாவம்" உறாக் குறைகொண்டுழிதருவர். இக்குறையு நீத்திருப்பாரே நீத்தாரெனப்படுவர். இவற்றை,

"நல்வி வேகிகள் பெருமவிங் கதிகமு நாட்டார்
கல்வி கேள்விக ளுயர்தெய்வம் வழிபடு கருமம்
பல்வி வாதம்வி டாப்பிர சங்கமென் பவைகள்
தொல்வி னோதபு விப்பயன் கருதியே தொடர்வார்.

தொடரு மன்னவ ருட்சிலர் தொன்னிலம் புகழப்
படரு வார்சிலர் மறுமையிற் பலிக்கவென் றயர்வார்
இடரிலாச்சில ரன்பினா லீட்டுவ ரிவர்க்கே
கடவு ணன்றிபர ராட்டுத லெனக்குமொர் கடனே.

உலக வாழ்வினை நீத்தருந் துறவற முறுவோர்
சிலவ ரேயவ ருட்சிலர் தேகநொவ் வாதி
பலவு பாதிகள் சகிக்கவொல் லாப்பரி சான்முன்
நிலைமை நாடிவந் திடுவ ரெனாதரு ணிதியே.

துறவி லேசிலர் துன்புகள் சகித்திருந் தானும்
மறைவி னின்றெழு வாசனை யான்மன மடங்காக்
குறைவு கொண்டுழி தருவரிக் குறைவினு ளெதையும்
உறவெ னெஞ்சுள தோநவி லயிற்படை யுடையோய்."

என வெமது பாடற்புடையு மியம்பினேம்; காண்க.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு."

---

*இல்லமே நாடிப்போதலுந் துன்பமேயல்லாது சுகமில்லை யென்னுமொரு துணிபினால், நீப்பினிற்பவரே இந்நூலாசிரியரு மென்பதை க - ஆம் பத்தின் கூ - ஆந் திருப்பாட் டுணர்த்தி நிற்றல் காண்க.

என்று திருவள்ளுவனார் தெரித்ததுங் கருதுக. ஞானேந்திரியங்கட்குத் தலைமைப் பொருண் மனமேயென்பது இதனடுத்த திருப்பாட்டேயாதலின் உரிய பிரமாணமும் ஆண்டுக் காட்டுதும்.

"பார்வை" என்பதில் வை - தொழிற்பெயர்விகுதி. பார்க்குங் கருவியாய கண்ணும் பார்வையெனப்படுஉ மாகலின் ஐ - கருவிப் பொருள் விகுதி; வ் - எழுத்துப்பேறு என்றலுமாம்.

ஒண்ணாதது - ஒன்றாதது என்பதன் மரூஉ.

'தனைக்காணாத கண்போலும் உட்கண்ணதாய்' எனவியையும். (எ)

இந்திரிய முதலான நெஞ்சுவய மாயினரு
ளென்றபொருள் வயமாகுமன்
றெங்கணும் விகாதமென் பதுசிறிது மில்லா
தியாவுந்தன் வயமாமதைச்
சொந்தப் படுத்துமா றேயுபா யங்கள்பல
சோர்வற விதித்தவைகளைச்
சோபான முறைகொண்டு சரியைமுதன் மூன்றெனச்
சொல்லவுங் கைவந்ததைப்
பந்தகமில் சன்மார்க்க ஞானமென வும்பாகு
பாடுசெய் தவற்றுளடியேன்
பாழ்த்தநெஞ் சென்வயப் படவோ ருபாயவினை
பற்றவென் றாலுமவைகட்
கந்தமதை யேகருத வைத்ததா லினியொவா
தருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 8

ஞானேந்திரியங்களுக்குத் தலைமையிந்திரியமாகிய மனமானது வசப்படுமாயின் (ஞானநூல்களில்) அருளென்று சொல்லப்பட்ட பொருளும் வசப்படும். அப்பொழுதே எவ்விடத்தும் இடையூறென்ப தொருசிறிதுமில்லாமல் யாவுந் தன்வசமேயாம். அம் மனத்தினைச் சுவாதீனப்படுத்தும்படி பலவித உபாயங்களையுங் குறைவறவிதித்து அவற்றினை, (ஏறுபடியாகிய) சோபான வொழுங்கைக்கொண்டு சரியை கிரியை யோகமென்னு மூன்றெனக் கூறவும், சோபானமுடிவாக அடைந்ததைத் தடையற்ற சன்மார்க்க ஞானமென்றியம்பவும் பாகுபாடு செய்யப்பட்ட அவற்றுளடியேனுடைய பயனற்ற மனம் என் வசப்படுமாறு மேன்மிழற்றப்பட்ட உபாயங்களுள் யாதானுமொரு கருமத்தைப் பற்றவென்றாலும் அவைகளுக்கெல்லாம் ஈற்றிலிருக்கின்ற ஞானமொன்றனையே கருதும்படி என்னை நீ வைத்தமையால் இனி, அதுவும் பொருந்தாது. உன்சம்மதவழியே கிருபை கூர்வாயாக.

"இந்திரிய முதலான நெஞ்சு" என்றது அடியிற்காட்டப்படுஉஞ் சுருதிகளி னிச்சயமெனல் சாலும். அவை :—பிரச்நோபநிஷத்தின் ச - ஆம் பிரச்நத்தில் (பரேதே வேமநலி =) "இந்திரிய ஒரேட்டமான மனம்" எனவும், வராஹோபநிஷத்தின் உ - ஆம் அத்தியாயத்தில் (இந்த்ரியாணும் மநோநாதம் =) "இந்திரியங்களுக்குப் பிரபுவாகிய மனம்" எனவும், அதர்வசிகோபநிஷத்தில் (ஸர்வநாணி மநலி ஸம்ப்ரதிஷ்டாப்ய =) "எல்லாக்கரணங்களும் மனத்திற் பிரதிட்டிக்கப்பட்டுள" எனவும் வரும்

சரியையாவது—சிவப்பிரீதியாமாறு நந்தனவனம் வைத்தல், மலர் பறித்தல், மாலைகட்டல், சிவாநுக்ரஹ வரலாறுகளைப் படித்தல் உரைத்தல் கேட்டல், சிவாலய மலஜிடல், மெழுகல், விளக்கேற்றல், அடியார்க்குத் தொண்டுபுரிதன் முதலியன வென்பதாம்.

கிரியையாவது—கால்கள் கைகள் முகமென்பன கழுவலென்னும் பஞ்சசுத்தி செய்துகொண்டு, முன்னர்ச் சிவபிரானை அந்தரியாகமாக நினைந்து, பின்னர்த் திருமஞ்சனமுங் கந்தவர்க்கமும் நறுமணங்கமழ் தூபமும் தீபமும் மலருங்கொண்டு ஆன்மார்த்த மூர்த்தியினைப் பூசித்தன் முதலியன வென்பதாம்.

யோகமாவது—இமயம், நியமம், ஆசனம், பிராணயாமம், (ப்ரத்யாஹாரம்) பிரத்தியாகாரம், தாரணம், தியானம் (ஸமாதியென எட்டங்க முடைத்தாம். அவற்றுள்,

(க) இயமம்—பொய் புகலாமை, தீங்கிழையாமை, களவுசெய்யாமை, பிறர் பொருள் விழையாமை, மகடூஉ விரும்பாமை, பகையாமை யெனப்படும்.

(உ) நியமம்—சினமின்மை, பொறுமை, தயை, திருத்தி, தீராடல், பூசித்தல், ஆசிரியன் மொழிகளையும் அடியார் மொழிகளையும் பிரீதியுடன் கேட்ட லெனப்படும்.

(ங) ஆசனம்—மானுரி, புலியுரி முதலிய நல்லாசனங்களு ளொன்றன்மிசைச் செவ்வனிருத்தலாம்.

(ச) பிராணயாமமாவது - சுவாசத்தை யிடப்புற நாசிவழியாகப் பதினாறு மாத்திரை (பூரித்து =) உள்ளேவாங்கி அறுபத்துநான்கு மாத்திரா காலங்காறுங் கும்பித்து வலப்புற நாசிவழியாக மூப்பத்திரண்டு மாத்திரை (இரேசித்து =) வெளியில் விட்டுப் பெயர்த்துஞ் சுவாசத்தை வலப்புற நாசி வழியாக உள்ளே வாங்கிக் கும்பித்து இடப்புற நாசிவழியாக விடுதலாம். இப்பிராணயாமம், செபம் தியான மென்ப வற்றோடு கூடிற்றாயின் அது (மஹாபலம்) சகர்ப்பமெனப்படும். கூடாதாயின் அகர்ப்ப மெனப்படும்.

(ஞ) பிரத்தியாகாரமாவது — ஐம்புலன்களையும் வெல்லல்.

(ட) தாரணையாவது—சிவபெருமான் றிருவுரு அல்லது திருவடியை இதயத்திற் றங்கும்படி வைத்தல்.

(எ) தியானமாவது—தாரணை செய்யப்பட்டதைச் சிந்தித்தல்.

(அ) சமாதியாவது — எல்லா விடயங்களையும் விட்டுச் சச்சிதானந்த சிவன்றனக்கு வேறாயிருப்பானல்ல னென்னு மொருபாவனை.

(ஸமாயிஸ்ஸமதாவந்தா ஜீவாத்மபரமாத்மநோ:।
ஸமாதிஸ்ஸமதாவந்தா ஜீவாத்மபரமாத்மநோ:।)

"சீவான்ம பரமான்மாக்கள் சமப்பட்டநிலைமை சமாதியெனப்படும்" என யோகதத்வோபநிஷத் கூறுகின்றது. இயமம் முதலிய விவ்வெட்டும் அப்பியாசத்துள்ளனவேயாம். ஏழாமங்கமான தியானம், பிராணபந்தனாப்பியாச யோகத்தினின்றும் வேறுபிரிக்கப்படுமாற்றானே கேவலம் இதயதாரணையிற்புரி தியான யோகமாம். இஃதெமதுகொள்கையி லேன்றுகொளப்படூஉந் தகரோபாசனையேயாம். சமாதியுமிங்ஙனமாம். நிற்க.

சிவாக்கினிக்குத் தென்புறத்துள்ள மண்டபக்க ணிறுத்தப்பட்ட சீடற்குச் சூத்திரமயமாந் தேகஞ்செய்வான் ஆசாரியனானவன், சுழுமுனையென்னு நாடிமயமாக மூன்றாய்மடித்த மூன்றிழைப் பாசசூத்திரத்தை அஸ்திரத்தினாற் புரோக்ஷித்து, கவசத்தினால் அவகுண்டனஞ் செய்து, மூலத்தினாற் பூசித்து, சீடனது சிகைமுதல் வலக்காற் பெருவிரலீறாகத் தொங்கவிட்டுப் பொருந்துமாறு கட்டியபின்றை அவனதிதயத்தின்கண் அஸ்திரத்தினாலே தருப்பைநுனி நீர்கொடு புரோக்ஷணமும் ஹூம்பட் அந்தமான அஸ்திரமும் புட்பமுங்கொண்டு தாடனமுமிழைத்து, ஹூங்காரத்தினாலே தனது இரேசகமாய் வெளிப்போந்து சீடனது இடப்புறநாடிவழியே பூரகமாய் இதயத்துட்புக்கு, இருதயமந்திரத்தோடு விரவிய சத்தியோஜாதாஸ்திர ஹூம்பட் அந்தமான ஆன்ம மந்திரத்தினாலே சேட்டா சத்தியினாலே அவனது இதயகமலத்தில் வைகிச் சற்றசைந்து பேதனம்புரிந்து, இருதயமந்திரத்தோடு கலந்த சத்தியோஜாதத்தோடுங்கூடிய ஆன்ம மந்திரத்தினாலே அங்குச முத்திரையினாலே ஆத்மாக்ருஷ்டிசெய்து, சீடனது சிகாந்தமாகிய துவாத சாந்தத்துளி அவனதான்மாவைக் கொடுபோய்வைத்து, பெயர்த்தும் ஆன்ம மந்திரத்தினா லதனையெடுத் தவனது புருவமத்தியங்காறுங் கொணர்ந்து, பின்றை இடப்புறநாடி வழியே பூரக வாயுவினாலே தனதான்மாவின்கண் அதனைப் புகச்செய்து, கும்பகத்தினாலே இதயத்துள்ளே தன்னோடு சேரவைத்து, பின்னர் அச்சீடான்மாவை ஆன்ம மந்திரத்தினாலே தனது துவாத சாந்தங்காறும் மேலேகொடுபோய் ஆயிடைத்தன்னான்மாவைச் சாரச்செய்து, பின்பு சிருட்டிக்கிரமமாக ஆயிடையிருந்து தனது புருவமத்தியத்திற்கு அவ்வான்மாவைக் கொணர்ந்து, தனது வலப்புற நாடி வழியாக இரேசகத்தால் வெளிப்படுத்திப் பாசசூத்திரத்தில் வியாபித்துள்ள சிவசத்தியிலே நமோந்தமான ஆன்ம மந்திரத்தானே நியாசஞ் செய்யவேண்டும்; இது, நிருவாண தீக்கையிற்றென்ப. கலைமுதலிய ஆறத்துவாவும் பாவனையாற் சோதிக்கப்பட்டுள்ள சீடனது சைதன்னிய வியத்தியைக் குண்ட சிவாக்கினியிற் சேர்த் தாகுதிசெய்து சருவஞ்ஞதை, திருத்தி, அனாதிபோதம், சுவதந்திரத்துவம், அலுத்தசத்தி, அனந்தசத்தியென்னும் முதல்வனுடைய ஆறு குணங்களும் பிரகாசமாயுண்டாகவெடுத்துச் சிவனோடு சமமாயிருக்கும்படி சீடன்மாட்டே சேர்த்தலுமாமென்ப. இவ்வாறாகவும்,

இன்னும் பலவாருகவுமியம்புவோர் ஆகம கருமானுட்டான முடையாரென்க. இக் கருமங்களானு நிருவாணமென்னு மோக்க மடைந்துவிட்டோமெனச் சிலரிறுமாந்து உலகினிற்கின்றனர். அந்தோ! இக்கருமம்புரிந்த குருவும் அதனுட்பட்ட சீடர் பலரும் மேலெடுத் தோதப்பட்ட இரேசக பூரக கும்பகப் பிராணயாம சித்தியிலொன்றுமில்லா மிடியராயிருக்கின்றன ரென்பதை இச்சிலருணர்ந்து அந்தப் பிராணு யாமத்தை யுள்ளபடியனுட்டிக்கு நெறியிதீ இக்குரு அடையாவாறெவன்? பாவனைப் போலிப்பிராணயாமத்திற்கு மொருபலனெய்து மென்பதுளதாயின், உண்மைப் பிராணயாமத்திற்கு உண்மையா மெத்தனை பலன்க ளொருங்கெய்தலா மென்பதை யிவரறியாதிருத்த லெவன்? என வினவுமொரு புண்ணியமும் இனி யீட்டார்கொலோ?

அறுபான்மும்மை நாயன்மாருள்ளும் வேறு மேதாவிகளுள்ளும் ஒருவர்க் கேனும் இக்கருமம் நிகழ்ந்ததெனற்காஞ் சரிதங் காட்டுகரு மிவணுளரோ! உண்மைத் தீக்கைகள் இந்நூற் கடு - ஆம் பத்தின் அ - ற் பகரப்பட்டுள.

'கெஞ்சு' என்பது அம்முச்சாரியை பெறின் 'கெஞ்சம்' எனவாம்.

அன்று = அப்பொழுதே; சுட்டடியாப்பிறந்த இடைச்சொல்.

ஸ்வதந்த்ரம் என்னும் வடசொல்லின் விகாரமே "சொந்தம்"; சுதந்திரமெனவும் வரையப் படும். சுதந்தரமென வரைதல் கூடாது; என்னை? மந்த்ரம் - மந்திரமெனவும், தந்த்ரம் - தந்திர மெனவும், இந்த்ரன் - இந்திரனெனவும் வரையப்படுகின்றன வாகவின். (அ)

தாமச மிராசச மெனுந்திற விருத்தியைச்
சார்மனம் புலவுபழைய
சாதமதி யுண்டிமா டங்கரிய தேனுவின்
றதியிவை துறந்தருந்து
நேமநிறை வாலே தமோகுணமும் வெங்கார
நீத்துண்ணு நேர்மையதனால்
நிகழ்கின்ற விராசசமு நீங்குபண் பானுமுண்
ணீலைத் தடுப்பதானும்
ஓமுதல வரிகளை விடாதுச்ச ரித்திடு
முரப்பானு முன்னுநினைவை
ஒருசேர முத்ரைகளில் வைப்பதா னுஞ்சிறி
துரங்குறைந் தேமயக்கம்
ஆமன்றி யருள்வெளியி லடையுமோ வடையுமா
றருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 9

மாமிசம், பழஞ்சோறு, அதிகவுணவு, உளுத்து, எருமையின்றயி ரென்னு மிவற்றை யொழித்துண்ணுங் குறைவற்ற முறைமையினுலே, தாமசகுணமும், உட்டிணத்தன்மையுடைக் காரங்களை யொழித்துண்ணு மொழுங்கினுலே, நிகழ் இராசச குணமுந் தணக்குந்தன்மையினுலும், உள்ளேபிராகின்ற வாயுவை, (இரேசக பூரக கும்பகமென்னும் பிராணயாம வழியாகவேனும் நாக்கை மேற்புரையினுட் செலுத்தி யடைக்கும் இலம்பகாயோக வழியாகவேனும்) தடுக்குந் தொழில்களினுலும், ஓங் காராதி அக்காங்களை விடாதுச்சரிக்கும் வலிமையினுலும், பல்வேறு வகைப்பட்ட பிரபஞ்ச நினைப்புக்க ளொருங்கியைந்து நிற்குமா றவற்றினைச் சின்மூத்திரைக்கு அங்க மான முத்திரைகளில் வைக்குங் கருமங்களினுலுந் தாமசம் இராசசமென்னுங் குணங் களின் விருத்தியைச் சார்ந்த மனமானது தனது வலிமையிற் சிறிது குன்றி மயக்க முறுமேயன்றி உள்ளபடி அருள் வெளியிலொடுங்குமோ வொடுங்காதே. ஒடுங்கும் படி அருள்செய்வாயாக.

முத்திரைகள், கேசரியெனச் சாம்பவியெனக் கிளத்தப்படும். அவற்றுள், நாக்கை வளைத் துண்ணுளத்தேற்றிக் கொண்டு புருவமத்தியினைப் பார்த்திருப்பது கேசரி யென்று சுருதி - மண்டலப்ராஹ்மணமும், மூக்கு நுனியினை விடாது பார்த்திருக்கு ஞான்று நாக்குநுனி கடந்துள்ள தாலு மூலத்திற் காடதமம் (= காடாந்தகாரம்) பார்க்கப்படும்: அங்ஙனமே மனோலயமுறும்: அகம்புறனென்னும் ஈரிடத்தும் மூடல் விழித்தலில்லா இத்திருட்டிகள் சாம்பவிமுத்திரையாம்: இதனையே கேசரிமுத்திரை யெனவுஞ் சிலர் கிளத்துப: இதன் அப்பியாசத்தான் மனவிலப்புண்டாம், வாயுவிலப் புண்டாமென்று சுருதி - யோகதத்துவமுஞ் சொல்லுகின்றன.

சிதாகாசமே " அருள்வெளி " எனப்பட்டது. " அருள்வெளியினை யடைதற் காம் மனமானது நுண்ணிய சாத்துவிகமென்னும் பரமனமேயல்லாது தாமச இராசச விருத்திகளெனத் தடித்த சகமனமன்றே; மேலேகூறிப்போந்த சிவ கருமோபாயங் களாற் குன்றலுறுவதும் இச் சகமனமேயாம்; இது முற்றுமொடுங்கிய விடத்தே யன்றே அதன் உள்ளுறைவான பரமனமும் வெளிப்படும்; அத்திறவொடுக்கமும் உன தருளின்றி வாராதே " என்னுந் தொன்னெறி நிச்சயத்தின் இரங்குகின்று துதிப்பார் " அருள்வெளியிலடையுமோ வடையுமா றருள்கூர் " என்றுரென்று கூறிக்கொள்க. ஒடுக்கம், அருளின்றி வாராதென்பதனுற்றுன் இவ்வனுக்கிரகம் சிருட்டியாதி ஐந்தொ ழில்களு ளொன்றுய் முடிவிலுறுதொழிலாய் நிச்சயிக்கப்பட்டுளது; இது, இலருணர் விற்குப் புலப்படாது போவதாயிற்று. அருளின்றி வாராதென்பதற்காய பிரமாணங்கள் " உயிர்களை யநாதிமல பந்தத்தினின்றுள முவந்து " என்றற் றொடக்கத்துத் திருப் பாட்டுரைக்கண்ணேயே எடாக்காட்டினும். ஈண்டுமொன்று காட்டுதும்,—மாண்டூக் யோபநிஷத்தி னீற்றில்—

(ஸம்ஸிசத்யாத்மநாத்மாநம் யஏவம்வேத)

" இன்னவாறறிபவன் யாவன் அவன், பரமான்மாவினற் பரமான்மாவை யடை கின்றனன் " என வருதல் காண்க. சரபோபநிஷத்தில்—

"அதிமோஹகரீமாயா மமவிஷ்ணோச்சஸுவ்ரத ।
தஸ்யபாதாம்புஜத்யாநாத் துஸ்தராஸுதராபவேத் ॥"

என்றும், சுவேதாச்வதரோபநிஷத்தில் —

"யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்திமாநவாः ।
ததாசிவமவிஜ்ஞாய துः கஸ்யாந்தோபவிஷ்யதி ॥"

என்றும் வருபவைகண் முறையே — "கல்விரதமுடையாய்! (பிரமனுகிய) எனக்கும் விட்டுணுவுக்கும் மிக்க மோகத்தை யுண்டுபண்ணு மாயையானது அம் மகா தேவனுடைய பாதாரவிந்தத் தியானத்தினல் எளிதாகக் கடக்கப்படுவதாம்" எனவும், "எஞ்ஞான்று மனிதர்கள் ஆகாயத்தைச் சருமமாக வெடுத்துப் போர்த்துக் கொள்வார் களோ அஞ்ஞான்றுதான் சிவனேயுணரு முணர்வின்றித் துன்பமில்லாததை யடைவார் கள்" எனவும் பொருள்படுதலின் இவைகளும் மேனிச்சயத்தை நிலைபெறுத்துமென்க. உள்ளிருந்து வெளிவருஉம் அழுக்காறு முதலிய துர்க்குணங்கடாம் உயிரை யழுக்குப் படுத்தும்; வெளியிருந்து அகடுபுக்கு வெந்தழிந்து வெளிவருஉம் மாமிசாதியுணவு உயிரை யழுக்குப்படுத்துதல் யாங்ஙனம்? எனக் கடாவுவார் முன் ஈண்டோது தாமச குண நீக்கம், இராசசகுண நீக்கஞ் சாலுங்கொலோ? எனின்,— கஞ்சாமுதலிய வெறிப்பொருள்களே யுண்டவிடத்தறிவு மாழ்கல், உன்மத்தங் கோடலென்பன காண் புழி அடாச்செய்கைக டோன்றுமென்னு முண்மையான் அது சாலுமென்க. இவ் வாற்ருனு முயிர் சார்ந்ததன்வண்ணமாய்நிற்கு மாலேத்தென்ப தறிந்து கொள்ளலாம். குணவிவரம்—

"நிறைபே ருண்டி நீதிகே டுறக்கம்
மறவி பொய்சோம் பொழுக்கம் வழுவுதல்
கொலேயே வஞ்ச மிவைதா மதகுணம்.

தானந் தவமே தருமம் பேணல்
ஞானங் கல்வி கலனிலை தெரிதல்
ஈன மில்லா விராசத குணமே.

ஞானந்தவ மேன்மை கல்லருண் மோனம்
வாய்மை பொறைபுல னடக்கல் சாத்துவிகம்."

என்று பிங்கலநிகண்டார் கூறினர். மேலே பிரமாணிக்கப்பட்ட மாண்டூக் யோபநிஷத் அதர்வவேதத்தினைச் சார்ந்தது; தசோபநிஷத்துள்ளுமொன்றுயிருப்பது. இவ்வுபநிஷத்தினை, (உபநிஷதங்களின் பெயர்களேயுஞ் சாந்திகளேயு மெடுத்தோதி முத்தி தெரிகூறு) முக்திகோபநிஷத்—

(ஸாஸ்மிகஸ்ரீகெகெவாஸ்ரீம் ஜ்ஞாஸ்ரீஷ்மிணாம்விஜ்ஞாஸ்ரீயை ।
மாண்டுக்யமேகமேவாலம் முமுக்ஷூணம்விமுக்தயே ।)

"முமுக்ஷுக்களுக்கு முத்திநிமித்தம் மாண்டுக்கியமொன்றே சாலும்" என முதன்மைப் படுத்துகின்றது. இம்மாண்டுக்கியம், எஃதெஃதியம்பி முற்றுகின்றதென் பதை யறிதற் கவாவுரர் காண்பான் அது முழுதும் இம்பர்க் காட்டுதும்—

முதலாங் கண்டம்

(ஒமித்யேதத க்ஷரமிதம் ஸர்வம் தஸ்யோபவ்யாக்யானம் பூதம்பவத்
பவிஷ்யதிதிஸர்வ மோங்காரஏவ ।
யச்சான்யத்த்ரிகாலாதீதம் ததப்யோங்காரஏவ ।
ஸர்வம்ஹ்யேதத்ப்ரஹ்மாயமாத்மா ப்ரஹ்மஸோயமாத்மாசதுஷ்பாத் ॥)

"இந்த (உலகாயுள்ள) எல்லாம் ஒமென்னும் இவ்வெழுத்தாம். அவ்வெழுத்துக்குப் பொருள்.—செலவு நிகழ்வு வரவென்னுமெல்லாம் ஓங்காரமே (எனவாம். கூறிப்போந்த) மூக்காலங்களிலு மடங்காது அன்னியமாயுள்ளதெதுவோ அதுவு மோங்காரமே. இவ்வெல்லாப்பொருள்களும் பிரமமே. (அயமாத்மா ப்ரஹ்ம =) இந்த ஆன்மா பிரமம். அந்த இவ்வான்மா நான்கு பாதங்களை யுடைத்து."

இரண்டாங் கண்டம்

(ஜாகரிதஸ்தாநோபஹிஃ ப்ரஜ்ஞஸ்ஸப்தாங்க ஏகோநவிம்
ஸதிமுகஃ ஸ்தூலபுக்வைச்வாநரஃ ப்ரதமம்பாதஃ ।
வ்யவஹாரோ(அ)ஃபுஜ்யஹ்வாம் மநஸோ(அ)விம்ஸதிர்வாஃ ।
யத்ரைஷ ஏதத்ஸுப்தோ நநுகஞ்சந காமயதேநகஞ்சந
ஸ்வப்நம்பஸ்யதி தத்ஸுஷுப்தே ஸ்தாநம் ।
ஸுஷுப்தஸ்தாந ஏகீபூதஃ ப்ரஜ்ஞாநகநஏவாநந்தமயோ
ஹ்யாநந்தபுக்சேதோ(அ)ஃ ப்ராஜ்ஞ்ஸ்ரீதியம்பாதஃ ॥
மனஷ்யவெ-ழ்ஸ்ய மனஷ்யவ-ழ்ஜ மனஸோஜ்யாத்ஸ்ரீஷ்
யொநிஷ்வ-ழ்லுப்யஹ்யாவ்ய யளஹிஸ்ம்தாகாழி ।
நாம்தஃப்ரஜ்ஞம் நபஹிஃப்ரஜ்ஞம் நோபயதஃ
ப்ரஜ்ஞம்நப்ரஜ்ஞாநகநம் நப்ரஜ்ஞம்நாப்ரஜ்ஞம் ।
அத்ருஷ்டமவ்யவஹார்யம் அக்ராஹ்யமலக்ஷணமசிம்த
மவ்யபதேச்யமேகாத்ம்ய ப்ரத்யயஸாரம் ப்ரபம்சோபஸ
மஃசாம்தம் சிவமத்வைதம் அதுர்யம்மந்யம்தே
ஸபூதா ஸவிஜ்ஞேயஃ ॥
ஜாகரிதஸ்தாநோபஹிஃ ப்ரஜ்ஞஸ்ஸப்தாங்க ஏகோநவிம்ஸதிமுகஃ
ஸ்தூலபுக்வைச்வாநரஃ ப்ரதமம்பாதஃ ।

ஸ்வப்நஸ்தாநோந்தஃ ப்ரஜ்ஞஸ்ஸப்தாங்க ஏகோநவிம்ஸதிமுகஃ
ப்ரவிவிக்தபுக் தைஜஸோ த்விதியம்பாதஃ ।

யத்ரஸ்ஸப்தோகஞ்சகாமம் காமயதேகஞ்சக
ஸ்வப்நம்பச்யதி தத்ஸ்ஷஷ்டம் ।
ஸ்ஷஷ்டன்தாகஸ்திபூதஃ ப்ரஜ்ஞாகனஏவாகன்தமயோஹ்ய
யாமன்தபுக் சேதோமுகஃ ப்ராஜ்ஞஸ் த்ருதீயம்பாதஃ ।
ஏஷஸர்வேச்வர ஏஷஸர்வஜ்ஞ ஏஷோன்தர்யாம்யேஷ
யோநிஸ்ஸர்வஸ்ய ப்ரபவாப்ய யௌஹ்யபூதாநாம் ।
காந்தஃ ப்ரஜ்ஞும் நபஹ்யஃ ப்ரஜ்ஞும் நோபயதஃ
ப்ரஜ்ஞும்நப்ரஜ்ஞாகனம் நப்ரஜ்ஞும் நாப்ரஜ்ஞும் ।
அத்ருஷ்டமவ்யவஹார்ய மக்ராஹ்ய மலக்ஷணமசிந்த
மவ்யபதேச்யமைகாத்ம்ய ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோப
சமம்சான்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மன்யன்தே
ஸ ஆத்மா ஸவிஜ்ஞேயஃ ॥)

"விழிப்பிடத்திருப்பவனும், உருமாட்டுணர்வுடையவனும், ஏழங்கங்களோடு கூடினவனும், பத்தொன்பது முகங்களோடுகூடித் தூலவடிவமுதலியவற்றை யனுபவிப்பவனுமாகிய வைசுவாநரன் (= எல்லா நியமிக்கின்றவன்) முதற்பாதமாம். கனவிற்கதிகாரியும், மனத்நிலைறி யியல்பினனும், ஏழங்கங்களையும் பத்தொன்பது முகங்களையு முடையவனும், (ப்ரவிவிக்தபுக் =) பிறர்காணாது மறைந்துநின் றனுபவிப்பவனுமாகிய தைசசன் இரண்டாம்பாதமாம். தூங்கினவன் எந்நிலைக்களத்தே யாதொன்றனையும் இச்சிப்பதின்றே, யாதானுமொரு கனவையுங் காண்பதின்றே அவ்விடம் சுழுத்தம்: சுழுத்தத்தானத்திற் றனித்திருப்பவனும், பிரஞ்ஞானகன ரூபியாகவே ஆனந்தரூபியாய் ஆனந்தமனுபவிப்பவனும், மனத்நிலைறியத்தக்கவனுமாகிய பிராஞ்ஞன் மூன்றும்பாதமாம். இந்தப்பிராஞ்ஞன் சருவேசுவரன்: இவன் சருவஞ்ஞன் (= அனைத்துமறிவோன்): இவன் அந்தரியாமி (= உள்ளிருந்து நடாத்துவன்): இவன் அனைத்திற்கும் யோனி (= காரணம்): உயிர்களுக்குப் பிறப்பு மிறப்பு மிவனே. கனவுணர்ச்சி யிலதும், சாக்கிரவுணர்ச்சி யிலதும், இவ்விரண்டுணர்ச்சியு மிலதும், சுழுத்தியுணர்ச்சியிலதும் பிரஞ்ஞ சுவரூபத்தில் வேறுனதும், ஞானமாயிருப்பதும், கண்ணிற்குப் புலப்படாததும், வாக்கு வியவகாரத்திற் கெட்டாததும், கைக்கெட்டாததும், அனுமானவளவையா லளக்கப்படாததும், சிந்திப்புக்கெட்டாததும், இத்திறத்தனென நிச்சயிக்க வொண்ணுததும், ஏகான்மானந்தமா யிருப்பதும், பிரபஞ்ச லயத்தானமா யுளதும், சாந்தமா யிருப்பதும், அத்துவைதமாயுளதுமாகிய சிவத்தை நான்காவது பொருளாக எண்ணுகின்றனர்: அஃதான்மா: அவன் அறியத்தக்கவன்."

மூன்றுங் கண்டம்

(ஸொயஸாதூலஸூக்ஷ்ம ஸொகாஸொஉயிஸோ க்ரூவாஹ
ஸோ க்ரூஸோ க்ரூஸ்ஸவாஹ ஸகாஸ உகாஸொஸகோஸ ஊகி ।
ஜாஸ்மிந்தஸ்ஸாகொவெஸ்ஸாஸ்மஸொஸகாஸஃ வ்யஸோஸோ க்ராகூவொஸ்ஸ
ஸிஸ்வாஸாவொதிஸவெஸவ ஸாஸு சுஸோஸாஸிஸ்ஸாலயியஸவஸ்வெஹ ।
வ்வஸ்ஸாஸவெஸ்ஜவஸ உகாஸொஜிகியாஸோக்ரோக்ஷஸ்ஸ

ஓ॒ஹயஷ்வாஆ॒தஷ்டி॒ஹவை ஜ்ஞாதவ்ய॒ந்தி॑ ஸோதஷ்டவ்ய॑தி
காஷ்யாஷ்டவ்ய॑ஸ்தூ॒ஹவ்ய॑தி யஷவம்வேத ।
ஸ॒ஷ்டவ்ஷ்டா॒ரஃ ப்ராஜ்ஞோகாஸவ்ரதீயாஸ்தரா தி॑தஸ்டவீதை
வ॒ரதி॑தொதி॑ஹவா ஊ॒ம்ஹவ॒ ஸவீதி॑ஷ்டவ்ய॑தியஷவம்வேத ॥

ஸோயமாத்மாத்யக்ஷர மோங்காரோதிமாத்ரம்பாதா
மாத்ராமாத்ராச்சபாதா அகாரஉகாரோமகாரஇதி ।
ஜாகரிதஸ்தாநோவைச்வாநரோகாரஃ ப்ரதமாமாத்ரா ஆப்தேரா
திமத்வாத்வாப்நோதிஹவைஸர்வாந் காமாநாதிச்சபவதியஏவம்வேத ।
ஸ்வப்நஸ்தாநஸ்தைஜஸ உகாரோத்வி॑தியாமாத்ரோத்கர்ஷா
தபயத்வாத்வாஉத்கர்ஷதி॑ஹவை ஜ்ஞாநஸந்ததி॑ஸ்மாகச்சபவதி
நாஸ்யாப்ரஹ்மவித்குலேபவதி யஏவம்வேத ।
ஸு॒ஷ்ப்தஸ்தாநஃ ப்ராஜ்ஞோமகாரஸ்த்ருதியாமாத்ரா மிதேரபீதே
வாமிநோதி॑ஹவா இதம்ஸர்வ மபீதிச்சபவதியஏவம்வேத ॥)

"எழுத்துக்களிலும் மாத்திரைகளிலு மிராகின்ற அவ்வோங்காரம் இந்த (பரம) ஆன்மாவாம்: அகார உகார மகாரமென்னு மாத்திரைகளே பாதங்கள்: பாதங்களே மாத்திரைகள். சாக்கிர (=விழிப்பு) த் தானத்தையுடைய வைசுவாநரன் வியாபகமும் ஆதியாயிருக்குமியல்பு முடையானகலின் அகாரமாகிய முதன்மாத்திரையென்று கூறப் படுகின்றனன். இவ்வாறறிபவன் இச்சித்தவெல்லா மடைகின்றனன்: யாவரினும் முதன்மைப்படுகின்றனன். கனவுத்தானத்தையுடைய தைசசன் விசுவனினுஞ் சிறக் திருத்தலும் இரண்டற்கு காப்பணிருத்தலு முடையனகலின் அகாரத்தினுஞ் சிறந்த உகாரமாகிய இரண்டாவது மாத்திரையென்று கூறப்படுகின்றனன். இவ்வாறறிபவன் ஞானசந்ததி விருத்தியாகப்பெற்றுச் சிறந்தவனுவன்: உயர்ந்தாரோ டுயர்ந்தவனுவன்: இவனுடைய வமிசத்திற் பிரமஞான மில்லாதான் பிறத்தலின்று. சுழுத்தத் தானத்தை யுடைய பிராஞ்ஞன் அளக்குமளவையும், இலயப்படுத்து மில்யமுமுடையானகலின் மகாரமாகிய மூன்றுவது மாத்திரையென்று கூறப்படுகின்றனன். இவ்வாறறிபவன் இவையாவையுமளவிட்டறிகின்றனன்: பரமான்மாவில் இலயமடைகின்றனன்."

நான்காங் கண்டம்

(ஸோ॒தஷ்டவ்ய॒ஆ॒த்மாத்⁴யக்ஷர॒ப்ரவ॑ம்ஸோவஸ॒
ஸ்ரீவொ॒ஷெதஷவஸோங்கார சூஷெவஷம்ஸீஸதஷ்யா
தூ॒கா॒தூ॒மம்யஷவம்வேத யஷவம்வேத ॥

அமாத்ரச்சதுர்த்தோவ்யவஹார்யஃ ப்ரபஞ்சோபசமச்
சிவோத்வைதஷவமோங்கார ஆத்மைவஸம்விசத்யாத்
மகாத்மாகம்யஷவம்வேத யஷவம்வேத ॥)

"மேலேகூறிப்போந்த மாத்திரையளவுக ளிலனுய், வாக்குவியவகாரத்திற் கெட்டாதவனுய், பிரபஞ்சத்தை யொடுக்கிக்கொள்வோனுய் அத்துவைதனுய், சான்கா வது பொருளாய், (பரம) ஆன்மாவாயுள்ள சிவன் ஓங்காரமேயாகின்றனன். இன்ன வாறறிபவன் (பரம) ஆன்மாவி (னனுக்கிரகத்தி) னலே (பரம) ஆன்மாவை யடைகின் றனன்." **[மாண்டூக்யோபநிஷத் முற்றிற்று]**

முதலாங்கண்டத்தில் (எதத்ஸர்வம்ப்ரஹ்ம =) "இவ்வெல்லாப் பொருள்களும் பிரமமே" என்றது, சிவம் உலகோடுடங்கியைத்துள்ள அத்துவைத சம்பந்தத்தை யுணர்த்துகின்றது; சம்பந்தத்துத் தலைமைப்பொருள் சிவமாகலின் அன்னணங் கிளத்து கின்றதென்க. "அயமாத்மா ப்ரஹ்ம" என்னு மா வாக்கியம், இந்த ஆன்மாப் பிரம மென்னும் பொருண்மைத்து. இதன்கண், அயம் = 'இந்த' என்னும் அண்மைச் சுட்டாகலின் இவ்வுயிரிற் சூயிராய அந்தரியாமியே 'அயமாத்மா' எனப்பட்ட தென் னும் விவரம் இந்நூற்கண்ணேயே ஈகூ - ஆம் பத்தில் 'அதர்வணவேத மாவாக்கியார்த் தம்' என்னுமிடத்தே யியம்பப்பட்டுளது. ஸோயமாத்மா சதுஷ்பாத் = அந்த இவ் வான்மா நான்கு பாதங்களையுடைத்து என்பதும் பெறப்படுதலின் 'அயமாத்மாப்ரஹ்ம' என்பது அந்தப்பிரமம் ஆன்மாவென்றும் பொருள்படுத்தப்படும். அந்தப்பிரமம் = "ப்ரஜ்ஞானம்ப்ரஹ்ம" என்னும் இருக்குவேத மாவாக்கியத்திலுள்ள பிரமம்; "தத்த்வமஸி" என்னுஞ் சாமவேத மாவாக்கியத்திலே 'தத்' என்னும் பதப்பொருளாய் நிற்கும் பிரமமெனக்கோடலாம். ஸோயம் - 'அந்த இந்த' என்னும் பொருண்மைத்து. அயமாத்மா என்பதற்கு இந்தச் சீவான்மா வென்னும்பொருள் கொள்வுழியும் இருநிற ஆன்மாக்களின் வியாப்பிய வியாபக அனன்னியத்துவமே இம் மாவாக்கியப் பொரு ளென்பதேற்படும்; விரோதமின்று.

இரண்டாங்கண்டத்தி லியம்பப்பட்ட ஏழங்கங்கள் = துறக்கம், செஞ்ஞாயிறு, வெளி, வளி, நெருப்பு, நீர், மண்ணென்பனவற்றின் உருவாய தலையும், விழியும், நள்ளுடலும், பிராணனும், முகமும், உபத்தமும், பாதமுமாமென்றும், பத்தொன்பது முகங்கள் = ஞானங்கன்மமென்னும் இந்திரியங்கள் பத்தும், பிராணாதி வாயுவைந்தும், மனதிகரண நான்குமாமென்றுஞ் சங்கரபாஷ்யத்திற் கூறப்பட்டுள. அண்டம் போல்வது பிண்டமாகலின் வைசுவாகரனுடலும், தைசசனுடலுமாய பிண்டங்க ளிவ்வாறுள்ளன வென்க.

மூன்றுங்கண்டத்திற் படிகொண்டளக்கப்படு தானியம் அப்படியினுள் அடங்கிக்கிடந்து வெளிப்படல் கடுப்பப் பிராஞ்ஞனது தொழிலுமாதலின் அத்தொழில் 'அளவை' எனப்பட்டது. அது சங்காரமெனப்படுமும் இலயமே. ஈண்டளத்தற்குரிய அளவைப்படி மகாரமென்றே கோடற்பாற்று. இம்மகாரமும், போந்த அகாரமும், உகாரமும் ஒருங்கு உச்சரிக்கப்படு ஞான்று 'ஓம்' என்னும் பிரணவம் பிறத்தலி யறியலாம். இதனை உச்சரிக்கத்தொடங்குஞ்செவ்வி அகார உகாரங்கள் எய்ந்து 'ஓ' எனவெழுந்து மகாரத்திற் புக்கடங்கலையும், ஆவயினின்றே மீடலையுங் கருதியே மகாரம் அளவையெனப்பட்டது. அந்த அகாரம் உகாரமென்னும் இரண்டற்குமுரிய வைசு வாகரன், தைசசனென்னும் இருமூர்த்திகளும் மகார பிராஞ்ஞனது தொழிற்க ணடங்குகின்றனரென்பதும், அடங்கிய கிலேக்களத்தினின்றே தோற்றமுமாகலிற் சங்கார காரணனே சிருட்டி திதிகட்கு முரியானென்பதும், சிருட்டி வழியே உயிர் கண் மீளத்திரும்பாமல் அவற்றினை இலயப்படுத்தியருள் வீடுபேறுஞ் சங்காரகாரிய வழியேயாமென்பதும் பெறப்பட்டன.

காண்காங்கண்டத்திற் "புகன்றுபோந்த மாத்திரையளவுக ளிலனுய், பிர பஞ்சத்தை யொடுக்கிக்கொள்வோனுய், அத்துவைதனுய், காண்காவதுபொருளாய், பரமான்மாவா யுள்ள சிவன் ஒங்காரமேயாகின்றனன்" என்பன இலக்கப்பட்டமை யின், காண்காவது தெய்வரூபமாக விளங்காநின்ற சமட்டிப் பிரணவமென்னும் ஒங்கார நாதமே அகார உகார மகாரங்களென்னும் வியட்டிப்பிரணவ நாதங்கட்குந் தாரக மென்பதூஉம், அத்தெய்வம் சிவனென்பதூஉம், அவனே படைத்தற்றொழில் அகாரப் பிரமனையும், காத்தற்றொழில் உகாரவிண்டுவையும், அழித்தற்றொழின் மகார உருத் திரனையுந் தீஇ இீஇ ஆள்வோனும் உருத்திரன் வாயிலாக மற்றிருவரையு மடங்கச் செய்து அவ்வுருத்திரனையு மடக்கிக்கொள்வோனுமா யுளனென்பதூஉம் பெறப் பட்டன.

பிரமனும் விண்டுவும் உருத்திரனுமே மூவரென்றும், இவர்கட் கதிதமாயுள்ள சிவனே சதுர்த்தப்பொருளென்னு காண்காந்தெய்வமென்றும் யாமிங்குக் கொள்ளும் பொருள்—

(சுவெதம்அதயும் ஐவிஷ்ணு உருத்ர
கெகரமாவயும் மஹவஞ்சிவம்)

"அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதித
மேகமாசாஸ்யம் பகவந்தம்சிவம்."

என்னுஞ் சுருதியாகவே யுளது. இஃது அதர்வவேத பஸ்மஜாபாலோப நிஷத்தது. "அகாரம் ப்ரஹ்மாணம்" "உகாரம்விஷ்ணும்" "மகாரம் ருத்ரம்" என்னும் நிருஸிம்ஹோத்தரதாபிந்யுபநிஷத் வாக்கியங்களும்,

"அகாரோப்ரஹ்மதைவத்ய முகாரோவிஷ்ணுதைவதம்।
மகாரோருத்ரதைவத்ய மோங்காரஸ்துதாசிவஃ॥"

என்னும் வாதுளாகம சுத்தாக்யப் பிரணவபேதபடலச் சுலோகமும் ஈங்குக் கருதிக்கோடற் பாலன. பிரமனே வைசுவாநரனென்பதும், விண்டுவைத் தைசசனென் பதும், உருத்திரனைப் பிராஞ்ஞனென்பதும் இம் மாண்டுக்கியக் தோன்றிய தொல்லை நாள் வழக்குப்போலும். மூன்றுங் கண்டத்துழை 'இவ்வாறறிபவன் பரமான்மாவில் இலயமடைகின்றனன்' என்பதும், நான்காங்கண்டத்துழை 'இன்னவாறறிபவன் பரமான்மாவி னனுக்கிரகத்தினுற் பரமான்மாவை யடைகின்றனன்' என்பதுங் கூறப் பட்டமையின் ஆன்மலாப ஞானமும் இம்மாண்டுக்கியம் இயம்பியுளதே யாயிற்று. கூறிப்போந்த எவ்வதரானும் இவ்வுபநிஷத் சைவசித்தாந்த போதகத்ததே யென்பது தெள்ளிதன்றே. எல்லா வேதங்களின் முடிவாகவெண்ணத்தக்க அதர்வண வேதாந்தம் இங்ஙனமாக; போந்த சிவசத்தத்தை மங்களமெனக் கொண்டும், அநிருத்தன் பிரத்தி யும்நன் லங்கர்ஷணனென்னு மூவர்க்கு மேலாய விழுக வாசுதேவனுக்கும் பரவாசு தேவனுக்கும் அதிகபேதமின்றென வெண்ணி விழுக வாசுதேவனைப் பிரணவப் பொரு ளெனக்கொண்டு மெழுதலாய இராமாநுச பாடியமும், இம்மாண்டுக்கியம் நாராயணனைத் துதிப்பதாயுள்ளதென வெழுதலாய மத்துவ பாடியமும் யாங்ஙனம் மணம்

பெறும்! மத்துவ பாடியகாரர் தம்பாடியத்திற் காட்டிய புராணமேற்கோளும் எத் தண்மைத்தென்பது சதானந்தசாகரத் தறியற்பாற்று (தகராலயரகசியத்தின் முதலாங் காண்டத்து ஈ - ன் உரை). இப்பாடியங்களின் நிரூபணங்கள், இம்மாண்டுக்கியச் தழுவிப் பிறக்கியுள்ள கௌடபாதகாரிகையிலும் இல.

'தாமச மிராசச மெனுங்கிற விருத்தியைச் சார்மனம் சிறிதுரங்குறைந்தே மயக்கமாமன்றி யருள் வெளியில்லையுமோ' எனவியையும்.

பழைய—அ - பெயரெச்சவிகுதி; பழமையென்னும் பண்புப்பகுதி ஈறுபோய் இடைக் கணுள்ள அகரம் ஐகாரமாயிற்று; ய் - சந்தி.

"அதியுண்டி" என்பதில் அதி - மிகுதிப்பொருடருமொரு வடமொழி யிடைச்சொல். உண்ணப்படுவது "உண்டி" எனக்கொண்டக்கால் இ - செயப்படுபொருள்விகுதி; ட் - எழுத்துப் பேறெனல் பொருந்தும். தொழிற்பெயராகக் கொண்டக்கால் உண் - பகுதி; தி - விகுதி ஆம். உண் + தல் = உண்டல் எனப் புணருமாறு உண் + தி = உண்டி யெனப்புணர்ந்த தென்புழி ட் - சந்தி ஆம்.

கரிய—அ - பெயரெச்ச விகுதி.

நேமம் - நியமம் என்பதன் விகாரம்.

"நிறைவாலே" "பண்பாலும்" "உரப்பானும்" என்புழி இன் - சாரியையும்; "தடுப்ப தானும்" "வைப்பதானும்" என்புழி அன் சாரியையுங் கொக்கன.

உண்ணீல் = உள்ளேயிருக்குங் காற்று = பிராணவாயு; நீல் = காற்று; பி - மிகுண்டு காண்க.

முத்தை - வடதான்முடிபு தழீஇயிற்று.

"உரப்பு" "நிறைவு" "நிலவு" என்பனவற்றுண் முறையே பு, உ, உ - விகுதிகள்.

அடையுமோ—ஓ - எதிர்மறைகாட்டும். (கூ)

மானவ னுடற்குநிழ லன்னவா சாமூல
மலவுயிர்க் குள்ளபோத
வானிடை யெழும்புந்தி யானதுவு மப்போத
வானமு மொடுங்கவரிய
ஞானமய மானபே ரருளிலே தனதுசெய
னந்தநின் றிடல்கடனெனா
நவில்சரத சித்தாந்த நேரறிகி லார்க்கிந்த
ஞாயமோ துவதல்லவே
ஊனமில் லாதவிந் நிலையையுன் னடியனே
னுணருமா றருள்செய்தநீ
உற்றுய்ய வருளாது விடுவையோ நானும்விட்
டுழனெறி யினிச்சேர்வனோ

ஆனியறு மருணகிரி நாதனு ளுவந்தவோ
ரருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே. 10

மனிதனதுடம்பின் சாயையைப்போன்ற ஆசைக்கு மூலமாகிய கன்மமல வேனுக்குள்ளிடத்துள்ள போதாகாசத்தின் கண்ணே தோன்று மனமும், அந்தப் போதாகாசமு மொடுங்கும்படி அரிய ஞானமயமான பெரிய திருவருள் வெளியிலே தனது செயல்கெட நிற்றல் கடனென்று கூறுகின்ற உண்மைச்சித்தாந்த சாத்திர வொழுங்கினையறியும் ஆற்றலில்லாதார்க்கு இக்கியாய முரைக்கற்பாலதன்றே. குற்ற மற்ற இக்கிலையை உன்னடியனுகிய யான் (இன்னவாருக) உணரும்படி இருபை பாலித்த நீ அதன்கட் பொருந்திவாழ அனுக்கிரகஞ் செய்யாதும் விடுவையோ? இனி, யானும் அதனிலிட்டுழலு மார்க்கத்தினை யடைவேனே? இங்ஙனம், கேடற்ற அருணகிரிநாத சுவாமிகள் உவப்புற்ற ஒரு இருபையினைச் செய்வாயாக.

ஆன்மாவினை நீங்காப் போதாகாசத்திற்கே உடம்பினை நீங்காச் சாயை உவமான மாயிற்று. இப்போதந்தான், தற்போத மெனப்படுவது. இவ்வாகாசத்திலே மனம், வாயுவைப்போலச் சலனஞ் சுபாவமாகத் தோன்றவுள்ளது. "சரத சித்தாந்தம்" என்றமையின், போலிச் சித்தாந்தங்கள் கணியப்பட்டன வென்க. சரதம் = உண்மை.

"உடற்கு" என்புழி நான்கனுருபு ஆறனுருபாய் மயங்கிற்று.

அன்ன - அன் என்னும் உவமவுரு பிடைச்சொல்லடியாப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்.

"புந்தியானது" என்புழி ஆனது – பகுதிப்பொருள் விகுதி.

சிவச்செயலெனற்பாலது "தன்செயல்" எனச் சாற்றியவாறு.

சித்தாந்த சாத்திரம் "சித்தாந்தம்" எனப்பட்டது; இதனெழுங்கு "நேர்" எனப்பட்டது.

"இந்தஞாய மோதுவதல்லவே" என வொருமைமிற் பன்மை வந்தது வழுவமைதி.

இந்த - இகரச்சுட்டின் மரூஉ.

ஓகாரங்கள் எதிர்மறைப் பொருள. (கசு)

ங. திவ்விய சுப்பிரமணியம்

சீரா ரருட்குரவ னாயுமிறை யாயுநார்
செய்பவர்க் கெளிஞனாயுந்
திகழுன்னை முன்னிட்ட மார்க்கத்தி னிற்கின்முற்
றீயவினை யான்மடமையாற்
சாரூறு களையவ்வவ் வமையத்தி னூறிநெறி
தந்தருளி லேநடத்தித்
தன்மயம தாமாறு கூடிக் கலப்பையது
தவறிடினு மறநிலைச்சீர்
சோரா தளித்தருள்வை யிவ்வதர் விடுத்தருட்
டுணையின்றி நாம்பரமெனச்
சொல்பதக ரெண்ணமெவ் வண்ணநிறை வேறுமவர்
துஞ்சில்வீழ் கதியானதுஞ்
சேராது போகுமோ போகாதிந் நெறியைய
சேத்திலா முழுமோசமே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 1

சிற்ககனமென்னும் வெளியாகி, அவ்வெளியி னொளியாகி, யாங்கணும் பிறங்கிய இணையற்ற திவ்விய சுப்பிரமணியமே!

நலம்வாய்ந்த அருட்குருவாகியும், கடவுளாகியும், அன்புபாராட்டி நிற்பார்க்குத் தன்பெருமை பாராட்டியிராமல் அன்னோர் விரும்பியவாறெல்லா நிற்கத்தக்கவனாகியும் விளங்காநின்ற நின்னை முன்னிட்டுள்ள நெறியிலே நின்றக்கால், முற்காலத்துக் கொடிய கருமங்களாலும் (இக்காலத்து) அறிவின்மையாலுஞ் சாரத்தக்க இடையூறுகளை அவ்வக் காலங்களிற்றானே யருட்குருவாய் வந்தொழித்து, புண்ணியமார்க்கத்தைக் கொடுத்து, (அதன்மேலே) திருவருணெறியி னடாத்தி, கடவுளாயுள்ள நின்மயமேயாமாறு அங்ஙனம் வெளிப்பட்டு விரவிக்கொள்வை. (ஓராறு புண்ணியம் போதாமையால்) அத்தப்பரமுத்தி கிட்டாவிடினுஞ் செய்த புண்ணியத்திற்குரிய அபரமுத்திச் செல்வத் தையேனுங் குறைவறக் கொடுத்தருள்வை. இத்திறச்செந்நெறி நீத்துத் திருவருட் சகாய மொன்றுமின்றி நாமே கடவுளென்று கவிலும் பாதகர்களுடைய எண்ணமான

தெவ்வாற்ருன் முற்றுப்பெறும்! அவர்கண் மாணமடைத்தக்கால், நிரயமானது மெய்தாது கேங்குமோ? கேங்காதே. ஐயனே! இவ்வழி, நியான மென்பதில்லாத முழு மோசமே.

"நிவ்வியம்" என்றது மேலான தெய்விகத்தை யுணர்த்திநிற்பதாயிற்று. "நார்செய்பவர்க் கெளிஞனையும்" என்பதிலார்ந்த அருட்பெருங்குணத்தை,

"ஆரெப்படி மூனினும்மது போலத்திரு வருள்கூர்
நாரப்பெரு மானுயழ னைகப்பெய ராஞள்
தாரப்பொருள் வேலன்"

என கவவீரர் நவரத்தினக்கலிவிருத்தமும்,

"ஏலம் வைத்தபு யத்தில கீனத்தருள்
வேலை டுத்தசு மர்த்தையு ரைப்பவர்
ஏவ ருக்கும னத்தினி னீப்பவை — அருள்வோனே"

எனத் திருப்புகழும், விளக்கிக் கூறுவவாயின. கூடிக்கலப்பை - முன்னிலை யொருமை விகீனமுற்று; சிவானுபவ முருநிருத்த சீவனீ அவ்வனுபவமுறுமாறு செய்து கொள்வை யென்னும் பொருளே இதற்குக் கோடல் வேண்டும்; என்னீ? "உலகாக மல்கசரசர மென்பவற்றுள்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டி லறிவுறுத்தவாறு யாண்டுங்கலந்து நிறைந்துள்ளது சிவமாகலின். அற்றுகலினன்றே "தன்மயமதாமாறு" என்பதுங் கூறப்பட்டது. தன்மயமென்பது—

(யேபூர்வம் தேவாருஷயச்ச தத்வித்துஸ்தே
தன்மயா அம்ருதாவைபபூவுஃ।)

"அவனையறிந்த முன்னைத் தேவர்களும், இருடிகளும் அவன்மயமாய் விளங் கினர்: அமிருத ராயினர்." என்னுஞ் சுவேதாச்வதரோபநிஷத்தின் முடிபாயிருக் கின்றது. மயம் என்பது வியாபகத்துட்படு பொருளே விளக்குவதொன்றுகலின் அவன் மயமாய் விளங்கினரென்பதற்கு அவனுக்கு வேறுருது அவன் றன்மையராய் விளங்கினரென்னும் பொருளேகோடல் வேண்டும். "நாம்பரம்" எனக் கிளக்குகர் பாதகரெனின்,— பைங்கலோபநிஷத்—

(சுஹமஸ்மீத்யதம் மோகூஹேதாஃஹாதிநாழி।
அஹம்ப்ரஹ்மேதியதம் மோகூஹேதுர்மஹாத்மநாம்।)

"எஞ்ஞான்றும் கான்பிரமமென்றிருத்தன் மகான்மாக்களுக்கு முத்தி ஏதுவாம்." என்றுதுவ தெவன்? எனின்,—நவிறும். இம் மொழிகளைத் தொடர்ந்து—

(கெவகெஎபஜுகொகூஷாய நஃகெதிஃகெதிஅ।
உகெதிவய்யதெஜஞாநஃகெதிவிஃஅய்யதெ।
உதஹொஹம்யாநநீஹாவெ கெதம்கெவொவஜுஹ்யதெ।
யஷாயாதம்யாதநீஹாவ ஷ்ஷாதஷ்டுஃகெவஷிழ।

த்வேபதேபந்தமோக்ஷாய நமமேதிமமேதிச ।
மமேதிபத்யதேஜந்துர் நமமேதிவிமுச்யதே ।
மநஸோஹ்யுந்மநீபாவே த்வைதம்நைவோபலப்யதே ।
யதாயாத்யுந்மநீபாவஸ் ததாதத்பரமம்பதம் ॥)

"பந்தமுத்திகட்கு இரண்டேதுக்களுள: (அவை) எனதென்பதும், எனதன்றென்பதுமாம்: பிராணி, எனதென்பதனாற் பந்தப்படுகிறது: எனதன்றென்பதனால் விடுதலைப்படுகிறது: மனம், உன்மனிபாவம் (= அசைவற்ற நிலைமை) உறின், துவைதங் காணப்பட லின்று: எஞ்ஞான் றுன்மனிபாவமுறுமோ அஞ்ஞான்றதுவே பரம பதம்." என்பனவுமிருத்தலின் நான் எனதென்னு மபிபானமாஞ் சீவச்செய லடங்கற் பொருட்டுச் செய்யு முபாயங்களுள், எற்கொரு சுதந்திரமுமின்று எல்லாம்பிரமமே யெனச் சிவச்செயலைப் பாவித்தல் ஏற்புடைத்தாகலின், அத்திறவுபாயம் இப்பைங்கல மியம்பிற்றேயன்றி ஒருமனிதன் யான்பிரமமென வாளா பிதற்றிக்கொண்டிருத்தற் கேனும் அமரேச பத்திநாத்திக மாற்றற்கேனு மியம்பியதின்றெனல் வெள்ளிடை விலங்கலே யென்பதூஉம், இது சோகம்பாவனை யென்பதன்பாற்படு மென்பதூஉம், சுருதிமொழிகளுட் பெரும்பாலன விவ்வுபாயமே யுணர்த்தவுள்ளன வென்பதூஉம், இவ்வுண்மை யுணரப்பெறாச் சிலர் இத்திறச் சுருதிகளை ஏகான்ம வாதோபநிடதங்க ளெனப் புத்துரைபுகன்று கழித்தலை யெம்மனோ ரேன்றுகொளா ரென்பதூஉ மிங்ங னுணர்ந்துகொள்க. சுருதிகளை ஏகான்மவாதப்படுத் துரைக்கு மொருசார்ச்சைவர், தேவாரத்தில்—

"ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்"

எனவும், திருவாசகத்தில் —

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்"

எனவும் வருமாறு பல திருப்பதிகங்களிலும் வருவாக்கியங்களை நோக்கி இவை ஏகான்மவாதப் பதிகங்கள், ஏகான்மவாதப் பாட்டுக்கள், ஏகான்மவாதக் கூற்றுக்க ளென்றும் அவையற்றைக் கழிப்பரோ? எனவீங் கெழுதரு கடாவுக்கு, அப்படிக் கழித்தல்செய்யாது சைவசித்தாந்தத்திற் கியையப் பொருள்கொள்வரென்பது விடையா யெழின், அவ்வாறே உபநிடதவாக்கியங்கட்கும் பொருள்கொள்வோமென அவர் துணியாது வேறு பேசுவதென்? எனக் கடாய்க் கோடன்மரபு நிலைபெறுத்தப்படு மென்க. சோகம்பாவனை யுணர்வான் இந்நூன் ௩௯ - ஆம் பத்தும், வேறு சிலவு நோக்கவேண்டு மென்க. இந்த ௩ - ஆம் பத்தின் ௫ - ஆந் திருப்பாட்டுரை மாட்டே ஈங்குணர்த்தப்பட்ட நான் எனதென்னும் அகங்கார மமகாரங்கண் மேற்கோளோடு விரித்துக்கூறப்படும் ஆண்டவை கண்டுணரலாம்.

முருங்கைமரத்தை வடநூலார், (மொஅ:) 'மோசம்' என்று வழங்குப. அம்மரம், தன்னைப்பற்றினார் கைக்கு உறுதியாயிராது முறிந்து மேல்வீழ்ந் திடர்விளைக்குந் தன்மைத்தாகலின், அதனையொத்ததூஉம் மோசமெனப்படூஉமென்க. அவ்வியவை யானே தியானமில்லாத யாதொருநிலை, அபரமுத்தியினையுந் தாராத "முழுமோசம்" எனப்பட்டது சால்பிற்றேயாம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதியென்னும் யோகாங்கம் எட்டனுள் ஏழாவதாகவும்; சரியை, கிரியை, யோகம், ஞானமென்னு மார்க்கம் நான்கனுண் மூன்றாவதாகவும் அந்தத் தியானமிருக்கு மேம்பாட்டுண்மை புலங்கொளவறியா வெளிமுக கருமிகளும், பரமாசாரியனது திருவுருவல்லாத பிறிதொன்று பிடிக்கும் உண்முக நாட்ட முடையரும் இது விழையாது போவாராயினார். சுருதி—"நல் விரதமுடையாய்! பிரமனாகிய எனக்கும் விட்டுணுவுக்கும் மிக்க மோகத்தை யுண்டுபண்ணு மாயையானது அம்மகாதேவனது பாதாரவிந்தத் தியானத்தினால் எளிதாகக் கடக்கப்படுவதாம்" என்று பிரம னியம்பினனெனக் கூறியதூஉம், "அவ் வொரு தேவனுடைய சுவகுணத்தின் மறைந்திருக்கின்ற ஆன்மசத்தியைக் காரணமென்று தியானயோக வாயிலாக அம்முனிவரறிந்தனர்" என்று கூறியதூஉங் கவனிக்கத் தக்கன. இச் சுருதி வாக்கியங்கள் யாவையெனத் தெரியக்கூடிய விவரம் "தாமசமிராசசமெனுந்திறவிருத்தி" என்பதையும், "உணர்வுவினையாநிகழ்" என்ப தையுந் தொடக்கமாகக்கொண்டு நிகழ் திருப்பாட்டுக்களினுரையுழைக் காட்டப் பட்டுளவாகலின் ஈண்டுக் காட்டப்பட்டில. "முக்கண்ணனாய், நீலகண்டனாய், மிக்க சாந்தனாய், பூதகாரணனாய், சமஸ்த சாக்ஷியாயுள்ளானை முனிவன் றியானித்து இருளைக்கடந் தெய்துகின்றனன்." எனக் கைவல்யோபநிஷத் கழறெறுழுங் கருதாதுபோதல் இழுக்கமன்றோ. இச்சுருதிக்குரிய வடமொழி "தூர்த்தகுண முள்ள" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கட் பிரமாணிக்கப்பட்டுளது. நாத்திகராயுள்ளாரு ளொருவன், படைக்கலப் பயிற்சியினைச் சார்ந்த தேகாப்பியாசஞ் செய்து உடம்புவலிமை யுறல்போலவே அன்னோருளொருவன், பிராணாப்பியாசஞ் செய்து சில நோயின்மை முதலிய சிறுபயன்கள் பெறலுங் கூடுமாயினும் அவன், பரமார்த்தத் தியானயோகியெய்து பெரும்பயன் பெறுவானல்லன். அவ்வாற்றானவ னிழிந்த யோகியாய் நாத்திகனாயிருப்பான். இங்ஙனம்—

"முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ"

என வருஉம் அருணகிரிநாத முனீந்திரரது திருவாக்குப் பெரிதுங் கவனிக்கத் தக்கது. அருட்டுணையில்லாவவர்கண் மரணமடைந்தக்கால் நரகமுமெய்தாது நீங்கு மோ? என்னும் பொருளிலே "அவர் துஞ்சில் வீழ்கதியானதுஞ் சேராது போகுமோ" என்பது கூறப்பட்டது. அந் நரகானுபவம், எம்மால் வடசொற்புகாது பாடப்பட்ட சேந்தன் செந்தமிழில்—

"வழாத்தனையி னின்றென்றும் வாலுற்ற நின்ருள்
தழாச்செய்கை யெற்றென்று சாற்றின்—அழாக்கண்
அழவீழ்கலாவளற்றி ஞழ்தலே யென்ரும்
மழவான் றகரூர் மஞ."

என் ரேதப்பட்டதன்ரே. குவடுமுட்டிய குரீஇப்போலவுங் குறிச்சிபுக்க உழைபோலவுங் கற்போ ரிடர்ப்படாவாறு வேதத்தமிழால் கிகழு மிந்தூலுரைக் கண்ணே இங்கெடுத்துக்கொண்ட 'மோசம்' என்பது இனிது புலப்படுத்தப்பட்ட தென்க. குமரகுருதாசசுவாமிகள் பாட லெனுநூலுள்—

"அழுதபிள்ளை யேபா லருந்து மதுபோலத்
தொழுதபிள்ளைக் கன்ரே சுகமாங் குருபரனே."

என்வெழுந்த பாடலு மிம்ப ருய்த்தணரத் தக்கதென்க.

எளிஞன்—ஞ் - பெயரிடைநிலை.

தூறுதல்=பொடியாக்கல்; அழித்தலெனும் பொருளிற் பிரயோகிக்கப்படுவது.

'அருள்' என்றது ஆகுபெயராய் அதன் நெறியை யுணர்த்துவதாயிற்று.

தன்மயமது—அது - பகுதிப்பொருள் விகுதி.

தவறிடினும்—உம் - ஐயப்பொருட்டு.

பாதகரெனப்படுவது "பதகர்" என முதல் குறுகிற்று.

சேத்து=கருத்து. "உறுப்புங் கருத்து மையமுஞ் சேத்தெனல்" என்பது பிங்கல நிகண்டு. கருத்து, ஈண்டுத் தியானித்தன் மேற்று; இஃது 'இலா' என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சத்தோடு கூடிச் சேத்திலா என நிற்பதாயிற்று.

'இலா' என்றதிற் பகுதியாய இல் என்னும் பண்படியே எதிர்மறை குறித்தமையின் ஆ - சாரியை. (க)

நின்மல நிராகார பூரணசை தன்யமா
நின்றவொன் றாயநீயே
நினைவுமற தியுமலா காரகண் டிதமுமா
நிற்கின்ற வுயிர்களென்ன
வன்மலக் கொடுமாயை யாலான தாநுவல்
வழக்கிழுக் காமன்றியும்
வழுத்துமா நின்மலப் பொருளழுக் காகுமேன்
மாசற்ற ஞானமதனால்

தன்மயப் பட்டசீ வன்பின்னு முன்னெனத்
தண்ணிய வசுத்தமாகத்
தான்வரற் கோர்தடையு மின்றாக லாலீது
தகுதிசா றீர்வையன்று
சின்மயப் படுமுனே பசுவென்று பயிலுமோர்
தீர்வையே தக்கதீர்வை
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 2

அழுக்கில்லாத ஆகாரமில்லாத பூரண சைதன்னியமேயாக (ப் பிரளயாந்த மென்னு முடிவில்) நின்ற ஏகவத்துவாகிய நீயே வலிய மலமெனப்படு மாயையினுலே நிஜைப்பும், மறப்பும், அழுக்குவடிவ வரையறுப்புமாக நிற்கின்ற வுயிர்களென ஆனதாகச்சொல்கின்ற வழக்கானது இழுக்காகும். அன்றியும் மேலேகூறியபடி அழுக்கில்லாதபொருள் அழுக்காகுமாயின் (இப்பொழுது) குற்றமற்ற ஞானத்தாற் கடவுண்மயத்தை யடைந்த ஆன்மா அம்மாயையினுன் மறுபடியுங் கீழ்ப்பட்ட அசுத்த வுயிராகத் தோன்றற் கொருதடையுமில்லையே. ஆகலின், சுத்த வத்துவே அசுத்த வத்துக்க ளாயிற்றென்னும் இது தக்க முடிவன்று. சுத்த ஞானமயப்படுமுன்னே (சிவான்மாவைப் பதிப்பொருட்கு வேருன) பசுவென்று கூறுமொருமுடிவே தக்க முடிவாம்.

இத்திருப்பாட்டிற் கூறியொழிக்கப்பட்ட வழக்கானது கடவுளே மாயை யானவள் பலாற்காரமாய்ப் புல்லி, பிரபஞ்சத்திற்குரிய பிள்ளையைப் பெற்றன ளென்னும் பிரபோதசந்திரோதய வியவகாரத்தினு மறியவுள்ளது. இவ்வொழிப்புச் சால்புடைத்தென்பதற்காய பிரமாணங்கள் பலவும் இதன் மூற்பட்ட வுரைகளில் வந்துள. அன்றியும், * "நிரவத்யம் நிரஞ்ஜனம்" என்று கடவுளிலக்கணங் கழறுகின்ற சுவேதாச்வதரோபநிஷத்—

(அஸ்மாந் மாயீஸ்ருஜதேவிச்வமேதத்
தஸ்மிக்ச் சாந்யோமாயயாஸந்நிருத்
மாயாந்துப்ரக்ருதிம் விந்த்யாந்மாயிநந்து மஹேச்வரம் ॥)

"மாயையினே கடாத்துகின்ற அவன், மாயையின் உலகை யுண்டுபண்ணு கின்றனன்: பரமான்மாவுக்கு வேருன சிவான்மா மாயையிற் கட்டுப்பட்டுளன்: மாயையைப் பிரகிருதியென்றும் மாயைக்குடையாளே மகேசுரனென்றும் அறிக." என்றேதுரைகளும் ஈண்டுக் கண்ணுறத்தக்கன. பிறவும் வந்துழி வந்துழிக் காண்க.

மறதி—இ – தொழிற்பெயர் விருதி.

வழக்கிழுக்காம்—ஆம் - விணைப்பயனிலை.

---

* நிரவத்யம் = பாவமில்லாமை

"வழுத்துமா" என்றதில் ஆ - ஆறு என்பதன் விகாரம். வழுத்தல் = கூறல்.

தத் + மயம் = தன்மயம்; தத் - 'தத் த்வமஸி' என்னும் மாவாக்கியத்திலே தத்பதப் பொருளாயுள்ள கடவுள்.

இது என்ற சுட்டுப்பெயர் "ஈது" என நீண்டது.

தடை - தொழிற்பெயர்; தடு - பகுதி, ஐ - விகுதி.

அன்று - எதிர்மறைக் குறிப்புவினைமுற்று.

பயிலல் = ஒலித்தல். ஈண்டுச் சொல்லலெனும் பொருள்பட நின்றது. எழுத்திலா வோசைப் பெயரில் "மருளலும் பயிறலுங் குரைத்தலுங் கனைத்தலும்" எனச் சேந்தன் றிவாகரத்தாரும், எடுத்தலோசைப் பெயரில் "முரல்வு நரல்வு முக்கலும் பயிறலும்" எனப் பிங்கல நிகண்டினரும், "தெளிறலே முரலன் முக்கல் சிரற்றுதல் பயிலல்" எனச் சூடாமணிநிகண்டினருங் கூறினர். 'நடுவே நடுவே சொல்லிக் கிளியை ஓட்டுதலைச் செய்தும்' என்னும்பொருள் பயக்குமாறு "இடையிடை பயிற்றிக் கிள்ளை யோப்பியும்" எனக் கபிலர்கூறிய குறிஞ்சிப்பாட்டுத் தொடர்க்கட் 'பயிற்றி' என்பது சொல்லியென்னும் பொருள் பயந்து நிற்றலுங் காண்க. (உ)

உயிர்நிலை யடங்கலு மலிந்தவுணர் வான்மாவை
யுறழவெங் கணுநிறைந்தே
உள்ளபொரு ணீயெனவு மவ்வுடலி லறிவிக்க
வுணர்கருவி போலுயிர்களும்
பயிலந்த வுடலிலறி வித்தாலு மறியாத
பரிசுள்ள வென்பெசந்தோல்
பாடலச் செந்நீர் புலாலாதி போலவே
பாசமா கியமாயையும்
அயர்வின்றி யுளவென்று மறியலா முடலொப்ப
வழியுமோ பாசமென்னின்
ஆதவன் முன்றிமிர மழியா தழிந்தமுறை
யாமிந்த வாளிகொண்டே
செயிரற்ற முத்தியினு முப்பொருள்க ளுண்டென்று
சித்தாந்த நூன்முறையிடுஞ்
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 3

உடம்பெங்கும் பரவிய வுணர்வுடைய ஆன்மாவைப்போலவே உலகெங்கு நிறைந்துள்ள வொரு பதிப்பொருள் நீ யென்றும், அவ்வுடம்பிலே யொருவ ரறிவிக்க வறிகின்ற (விழி, செவி, மனமென்னுங்) கருவிகளைப்போலவே ஆன்மாக்களும்,

(கருமங்களிற்) பழக்கப்படு மவ்வுடம்பி லொருவாறிவித்தாலு மறியாத்தன்மையுடைய எலும்பு, சரம்பு, தோல், செங்கிறவிரத்தம், மாமிசம் முதலியவற்றைப் போலவே (ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதையென்னும் பஞ்ச) பாசங்களு லொன்றுயுள்ள மாயையும் உறுதியாக வுளவென்று மறியலாம். உடம்புபோலப் பாச மும்மழியுமோ? எனின்,— (அது), சூரியப்பிரகாசத்தின் முன்னே இருளான தழியா தழித்த முறையினையொக்கும். இவ்வொழுங்கு கொடே குற்றமற்ற முத்தியிலும் மும்பொருள்க ளுண்டென்று சித்தாந்த சாத்திரம் முறையிடும்.

முறையிடுதல்—

"பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மலுதி"

எனத் திருமந்திரமும், இதுபொருந்த வேறு பன்னூல்களுங் கூறுதல்கொண்ட றியப்படும். அழியாப்பொருட்கே அனுபவத்தன்மை கூறல்வேண்டுமாகலின், அஃதும் போந்த திருமந்திரச் செய்யுட்க ளிருத்தலின் முத்தியிலும் மும்பொருள்க ளுளவென்னுங் துணிபு மந்திரநூற்கு முடம்பாடேயாமென்க. ஈண்டுப் பாசமழியாதெனின், திருத்தல தரிசனகாலங்களிற் பாடிய கட்டளைக்கலித்துறைகளு ளொன்றில்—

"நூலாத்தர் பாசமெய் யென்பது கொண்டிந்த நோயுலகை
மேலாத்த முண்ணினை வோர்பரி பூரண மெய்யுணர்வு
சாலாத் தனைக்குட் டிடப்பரே"

என்றபடி பாசானுபவம் மேலானதாக வெண்ணப்படு மாற்றுனே இதன் விடுதலையாகிய முத்தி, யாண்டெய்துமெனுஞ் சங்கையெழு மதுதீர் பொருட்டே அப்பாச மழியாதழியு மென்னுமொரு நியாயம்—"ஆதவன் மூன்றிமிர மழியாதழிந்த முறையாம்" என வுவமான முகத்தானுணர்த்தப்படுவ தாயிற்று. இன்னண மழியாத் தன்மை யிருத்தலினாலும், பேரின்பநிலையில் யாவு மின்பமாகவே காணப்படுதலினாலும் பாசம் ஆனந்தமாய்விடுமென்பதே ஈண்டுய்த்துணரக் கிடப்பது. இக்கியாயம், இந்நூல் கின்மலானந்தபரத்துப் கo - ஆம் திருப்பாட்டினுஞ் சாதிக்கப்பட்டபடி பல்லிடத்துந் தெளிகின்பொருட்டுச் சாதிக்கப்படுதலே வந்துழி வந்துழிக் காணலாம்.

"சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிக் கிலனே"

என்னும் அனுபூதி வாக்கியங்களையும், 'பதிஞானத்தினைப் பசு வடைத்தக்காற் பாசங் கள் தம் பிரபாவத்தோடு நிற்கமாட்டா' என்னும் பொருளிலே "பதியணுகிற் பசு பாச நிலாவே" எனவரு திருமந்திர வாக்கியங்களையும் பிரமாணமாக கோக்கியுணர்க. இன்னுமுள்ள பிரபலப் பிரமாணங்களைத் தகராலயரகசியத்தே "இணமும் பகிர்முகம்" என்றற்றொடக்கத்துத் திருச்செய்யுளுரையிலே யோர்க. ஒருவனை வெயிலி னிருத்திய விடத்துக் காணப்படுஉஞ் சாயை யிருளேயாகலின் அதன்வழி யிருளான தழியா தழித்தவா றறியலாம்.

இவ்வனம், பாசமழியுமென்பதனாலும், அழியாதென்பதனாலும் பொருந்தமாறறி யாமாக்க ளயர் சாத்திரவாதத்தையு மொழிப்பான் ஆசிரியர் புகுந்தமை அடுத்த திருப்பாட்டுழை யறியக்கிடக்கின்ற தென்க.

இதுதொடுத்தியம்பப்படுஞ் சீவான்ம பரமான்மவுண்மை, இப்பத்தின் ஆ - ஆம் திருப்பாட்டுரைக்கண் இனிதுணர்ந்து கொள்ளலாம்.

நிறைந்தே—ஏ - அசை.

ஆதபனென்னும் வடசொல் "ஆதவன்" எனத்திரிந்தது; இதனைத் தற்பவமென்ப; ஆதபம் = ஒளி. அதனையுடைய சூரியன் ஆதவனெனப்பட்டனன்.

ஆவளி என்னும் வடமொழி 'ஆளி' என இடைக்குறையெய்திற்று; ஒழுங்கெனும் பொருட்டு.

'உண்டு' என்பது அஃறிணை யொருமைக்கேயன்றிப் பொதுவிணையாதல் புகியன புகுதல்.
(கூ)

ஆரணத் துபநிடத மகன்மாயை சத்தியமு
மன்றசத் தியமுமன்றென்
றறைமுடிவி லேசத்தி யமுமன் றெனச்சொற்ற
தாலதே பாசவிரிவின்
காரியக் கேடா மசத்தியமு மன்றெனக்
கழறினது வேயந்தமா
காரியக் காரண விருக்கையா மாகலிற்
கதிகூறு மிருபக்கமும்
நேரணவு சமரச சுபாவமே யாமிந்த
நிசமறி கிலாரிரண்டா
நிகழ்த்தியே பொய்மெய் பிதற்றிவா தித்தலைவர்
நிகமத்து முத்தியின்பந்
தீரமா நித்தமென் றறைதலா லனுபவ
சீவனுண் டெனலுமொப்பாஞ்
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 4

வேதோபநிடதம், (உலகமாக) அகன்ற மாயையானது சத்தியமும் அன்று அசத்தியமும் அன்று எனச்கூறு முடிவிலே "சத்தியமும் அன்று" என்று சொற்றலின் அந்த அன்மையே பாசவிலாசத்தின் காரியக்கேடாகும். "அசத்தியமும் அன்று"

என்று சொல்லப் பட்டதுதானே அப்பெரிய காரியத்தின் காரணமுண் டென்றற்குரிய தாகும். ஆகலின், அறிவுநடையையோதுகின்ற வேதாந்தமுஞ் சித்தாந்தமும் விரோத மற்ற சமரச சுபாவமேயாம். இவ்வுண்மை யறியமாட்டாதார், வேதமுடிவும் ஆகம முடிவும் வேறுவேறென விளம்பிக்கொண்டே பொய்யையும் மெய்யையும் பிதற்றித் தருக்கித்து அலைவர். (ஆகமத்திற் கூறப்படுதன்மான) வேதத்திலும் வீடுபேற்றானந்தம் நித்தியமென்று தீரமாகக் கூறப்படுதலின், அவ்வானந்தானுபவ ஆன்மாவும் நித்திய வத்துவாக வுண்டென்றுரைத்தலும் பொருத்தமேயாம்.

(மாயாநாமஅநாதீரந்தவதீ ப்ரமாணாப்ரமாண
ஸாதாரணாநஸதீநாஸதீ நஸதஸத்யநிர்வாச்யா)

"அனாதி: முடிவுடையவள்: பிரமாண அப்பிரமாணங்களுக்குப் பொதுவா யுள்ளாள்: இருக்கிறவளுமல்லள்: இல்லாதவளுமல்லள்: சத்தியமு மசத்தியமுமல்லள்: வாக்குக்கெட்டாதவள்." என்று கூறுகின்ற ஸர்வஸாரோபநிஷத்தே இங்கே குறிக்கப்பட்ட 'உபநிடதம்' எனல் வேண்டும். இக்கூற்றினடியில் "யாநவித்யதே வஸ்துத: ஸாமாயா" எனவரு வாக்கியங்கட்கு "யாவள், மெய்ப்பொரு ணிலையி லில்லையோ அவளே மாயை" என்னும் பொருள்கொள்க. இஃதும் முன்னைத் திருப் பாட்டிற் கூறியவாறு இருந்துமில்லாமையை நிச்சயித்துக் காரியக்கேட்டினை விளக்குவ தேயாம். இவ்வாறு பொருள்கொள்ளாக்கால் "அநாதி" முதலிய வாக்கியங்களோடு முரணுவதன்றி, அடியிற் காட்டப்படுஉஞ் சுவேதாச்வதர நாரதபரிவ்ராஜகோபநிஷத மந்திரங்களுக்கும் விரோதமாம். அவைகளாவன:—

"'ஸம்யுக்தமேதத் க்ஷரமக்ஷரஞ்ச
வ்யக்தாவ்யக்தம் பரதேவிச்வமீசஃ ।'

'ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜா வீசநேசாவஜாஹ்
யேகாபோக்த்ரு போகார்த்தயுக்தா ।
அநந்தச்சாத்மா விச்வரூபோஹ்யகர்த்தா
த்ரயம்யதாவிந்ததே ப்ரஹ்மமேதத் ।
க்ஷரம்ப்ரதாந மம்ருதாக்ஷரம்ஹரஃ
க்ஷராத்மாநா வீசதேதேவஏகஃ ॥'"

என்பனவாம். பொருள்:—"பிரிப்பில்லாது நிற்குஞான்று (க்ஷரமென) அழிவுளதாகவும், (அக்ஷரமென) அழிவிலதாகவும் (வியக்தமென) வெளிப்பட்டும், (அவ்வியக்தமென) வெளிப்படாதுமிருக்கு மிவ்வுலகினை யீசன், தாங்குகின்றனன்" "(அறிவுளானெனும்) ஞன்னும், (அறிவிலானெனும்) அஞனுமாமிருவரும் உற்பத்தி யில்லாதவர்களாகிய ஈசனும் அனீசனுமாவர்: உற்பத்தி யில்லாதவொருத்தி (=மாயை), (ஜீவர்களாகிய) போக்தாக்களுக்குப் போகத்தினிமித்தம் (தனு கரண புவனங்களாகக்) கூடுகின்றனள்: ஆன்மாக்கள்பல: அவை உலகவடிவுடைமையாற் கருத்தாவல்ல: (ஈசன், அனீசன், மாயையென்னும்) மூன்றையு மெஞ்ஞான்றறிவனோ வஞ்ஞான்று, இப்பிரமம் (=சிவம்) ஆவன்: பிரதானம் (=மாயை) அழிவுக்குரியது:

அமிருதஞ்கிய அரன் அழிவில்லான் : ஷுரத்தையும் (= மாயாகாரிய வுலகினையும்), ஆன்மாவையும் ஏகதேவனென்னும் ஈசனே ஆளுகின்றனன்" எனவாம். மாயை காரணமுங் காரியமுமாக வுளதென்பது (மாயாதத்கார்ய =) "மாயையும் அதன்காரியமும்" என வராஹோபநிஷத்தின் உ - ஆம் அத்தியாய மோதுமாற்ருனு மறியப்படுகின்றது. மாயையின் காரியங் கெடும்; அதன் காரணங் கெடாதென்னுஞ் சைவசித்தாந்த முடிபிற்கு வேதோபநிஷதமுடிபு விரோதப்பட வில்லையென்பது நுதலியே "இருபக்கமு நேரணவு சமரச சுபாவமேயாம்" என்பதியம்பப்பட்டது. 'இல்லது வாராது' என்னுஞ் சற்காரிய வாதத்தில் உள்ளது போகாதென்பது நிலைபேறுறற்கு எத்துணை யழிவுங் கூருண்ணுதென்பதே யேற்புடைமையாகும். ஆவதேல், சங்காரத்தொழி லொன்றுள தென்பதூஉம் வெற்றுரையாய்விடும். அவ்வாருதற்குக் கண்கூடா முடப்பு முதலிய அழிவும், யாதானுமொருபொருளே யுடனிருந்தரிக்கும் பிராணிகளின் செய்கை யும் இடங் கொடாவாகலிற் றூலவொழிபி லணுத்துவப்பட்டு நிற்கும்: அழியாதழியும் என்னுமுடிபே கோடற்பாலதாம். இம்முடிபு—பாவகன் மத்தோற்றமும், அதனழிவு முண்மையால் இல்லது வாராதென்பதும் உள்ளது போகாதென்பதும் ஏற்புடைமையில் வைத் தோதப்படல் வேண்டும்; இல்லையேல் அவை, பரிகாரமுமில்லா விதிவாதமாகி இறைவன் நீதியிலுளானல்ல னென்பதை நாட்டு பெருகவையா மெனுமாற்ருனும் உறுதியுறும். வீடுபேற்ருனந்தம் நித்தியமெனற்கு—

(க) (தமாத்மன்தம்யேநுபச்யன்தி தீராஃ
தேஷாம் ஸுகம்சாச்வதம் நேதரேஷாம் ।)

"(ஈசனனெனப்படும்) அவனே எந்தத்தீரர்கள் ஆன்மாவி லிருக்கின்றவனென வறிகின்ருர்களோ அவர்கட்கு நித்தியமானசுகமுண்டு, ஏனையோர்க்கின்று."

என்று தசோபநிஷதத்து லொன்ருன கடோபநிஷத்தானது டு - ஆம் வல்லியி லறைதலும்,

(உ) (ப்ரஷ்டாத்மாத்மனிஸ்தித்வா ஸுகமத்யந்தமச்நுதே ।)

"தெளிவுற்ற ஆன்மா ஆன்மாவிலிருந்துகொண்டு அழிவில் சுகத்தை யடை கின்றனன்"

என்று மைத்ராயண்யுபநிஷத்தானது ஈரிடங்களி லியம்புதலும் பிரமாணமாம்.

(ஊ) (கர்த்ருத்வாதிதுஃக நிவ்ருத்திர்வாரா
நித்யாநந்தாவாப்திஃ ப்ரயோஜநம்பவதி ।)

"கர்த்திருத்துவம் முதலிய துக்கநிவர்த்தி வாயிலாக நித்தியானந்தப் பிராத்தி தான் பிரயோசனம்" என்றேதும் முக்திகோபநிஷத் நித்தியானந்தம் என்பதன் வாயிலாக இதனையே வலியுறுத்தும். இப்பொருண்மைச்சுருதியின்னும் பலவுள. வடமொழிவேதம் இவ்வாறியம்புதலினுற்ருன் மாணிக்க வாசகனரது தென் மொழி வேதம்—

(ச) "அண்டமுத லாயினா னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்" என்றும்,

அருணகிரிநாதனாரது தென்மொழிவேதம் —

(ரு) "சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்" என்றும்,

(சு) ----------"எனைத்தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல்லொ ணாதிந்த வானந்தமே"

என்றுங் கூறுகின்றன. இவ்வருணகிரிநாதனார் திருவாய் மலர்ந்தருளிய மாநூல் பலவற்றுள்ளும் "பேசாவனுபூதி பிறந்ததுவே." என முடியுந் தூக்கினை யிறுதிக்கட் கொண்டு சரூ - திருவிருத்தங்களா யுள்ள கந்தரனுபூதி யென்பது அனுபவஞான போதக மா சாத்திரமாயுள்ளது. இதனகத்துற்ற தூக்குக்களுள் ஒன்றனையேனு மெடுத்துத் தஞ் சைவசித்தாந்தவுரைகளில் அவ்வுரைகாரர் காட்டியது கண்டிலம்; வேறு புத்தகங்களுட் சில பொறுக்கியெடுத்து அவர்காட்டினமை காண்கின்றனம். முன்னையதில் வெறுப்புப்போலும். சுவானுபூதிச்செல்வராயிருந்த தாயுமான சுவாமிகள் —

"கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
எந்தையரு ணாடி யிருக்குநா ளெந்நாளோ."

என்று பாடியருளியது, அனுபூதியை அனுபூதி அவாவு மென்பதைக் காட்டு வதாயிற்று.

"அதே" என்புழி ஆய்தம் விகாரத்தாற் றொக்கது; 'அதான்மா' என்புழிப்போல (சிவ ஞான சித்தியார் ௩ - ஆஞ் சூத்திரம்). "சத்தியமு மன்று அசத்தியமு மன்று"—உம்மைகள் - தெரிநிலை; தெரிநிலை = விளங்கி நிற்பது.

கேடு - கெடுதல் என்னுந் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டு முதனீண்ட கிளவி.

கார்ய காரணம் என்னும் வடமொழித்தொடர் "காரியக் காரணம்" என விகாரப்பட்டது; "பூதக்கணம்" என்புழிப்போல. (ச)

முன்னிலை யிருக்கிலே காகார மாயிலகு
மோனபர நிட்டைகூட
முடியா தெனுங்கட்டு நடுவைமுன் னிட்டுள்ள
முப்புடி பொடிந்துபோமா
றுன்னையல தொருவத்து வில்லையது நீயென்
றுரைத்தவே தத்தின்முடிவை
உணராத வெளிறருஞ் செடிவினைக் கஞ்சா
வுரங்கொண்ட வுள்ளுடையரும்

என்னைவிட வஃதில்லை யெந்நாளு நானிமல
னென்செய்கை யென்செய்கையன்
றென்றே தனித்தனி பிதற்றியா தொருநூலி
லேற்றகவி யும்படித்துச்
சென்னிவலி வந்தான் மருந்துதே டித்திரிவர்
செப்புமிவர் சூழ்ச்சியவமே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 5

முன்னிலைக்குறி யிருப்பின் அகண்டாகாரமாகப் பிரகாசிக்கும் மௌன சிரேட்ட நிட்டையைப்பொருந்த முடியாதென்னும் உறுதி நியாயத்தை முன்னிட்டுச் சீவன்மாட்டுள்ள திரிபுடி நாசமாம்படி உன்னையன்றி யொருபொருளின்று; அப்பொருள் நீயென்று நிகழ்த்தப்பட்ட வேதத்தின் முடிவையுணரா வெள்ளறி வினரும், பாவகருமத்திற்குப் பயப்படா வூக்கத்தைக் கொண்ட நெஞ்சுடையாரும் எனக்கு வேறாக அந்தப் பிரமமின்று: எஞ்ஞான்றும் யான் அழுக்கில்லாதவன்: (அன்னியர்) என்னுடையதாக நினைக்கவுள்ள கருமமானது கருமமிலியாய எனது கருமம் அன்றென்று தனித்தனியாகவேபிதற்றி (அப்பிதற்றிற்கு இவைகண் மேற் கோள்களென) ஏற்புடைப் பாட்டுக்களையும் படித்துக்காட்டித் தங்களுக்குத் தலைநோய் வரின் அதனை யொழிக்கவேண்டுமென்னுங் கருத்தானே மருந்து விசாரித்தலைவர். இவர்கள் போதிக்கும் பிரம ஆராய்ச்சி பயனற்றதே.

திரிபுடிவிவரம், நூன்முதற்றிருப்பாட் டுரைக்கண்ணேயே வந்துளது. சிவம் வெளிப்படூஉம் அனுபூதியில் அச்சிவமயமாய் நிற்பதன்றி யாதொன்றனைச் சுட்டியறியு நிகழ்ச்சிக்குரிய திரிபுடியின் றென்பதனையே—

"கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே"

என்றற் றொடக்கத்துத் திருப்படையாட்சித் திருப்பத்து வாயிலாகத் தமிழ் மறையுங் கூறிற்று. "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் —குயர்ந்த வுலகம் புகும்." என்னுந் திருக்குறளும் இக்கருத்தே பற்றி வந்ததென்னலாம். இக்குறளில் 'உலகம்' எனவும், மாணடிசேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார் என்றதில் 'நிலம்' எனவும் வருவனவற்றிற்கு ஞான பூமியென்றும் பொருள் கோடலாம். ஞான பூமி விவரஞ் சதானந்தசாகரத்திற் காட்டினாம். முன்னிலைக்குறியாவது திரிபுடியிற் காட்சிப்பொருளாம். அஃதிருந்தக்காற் காண்பானுங் காட்சியுமாகிய ஏனையவிரண்டு மிருக்குமென்றும், இவ்விரண்டனு ளொன்றிருப்பினும் ஏனையவிரண்டு மிருக்குமென் றுந் திறனறிந்துகொளல் வேண்டும். யாண்டுஞ் சத்தாய் நிறைந்துள்ள சருவாதார தெய்வம், அதிசூக்குமமாய் ஆன்மாவாய அணுவுக்கு அணுவாயிருக்கின்றதென்பதை "அணிமா" என்னும் வாக்கியத்தா லுணர்த்திக்கொண்டு வரூஉஞ் சாந்தோக்யோப நிஷத்தின் ௬-ஆம் பிரபாடகத்துப் கடு - ஆங் கண்டத்துழை உத்தாலகர், தம்முடைய

புத்திரனுடைய சுவேதகேதுவுக் குபதேசித்த வுபதேசமே இத்திருப்பாட்டின்கண் "முப்புடி பொடிந்துபோமா றுண்ணேயல தொருவத்து வில்லேயது நீயென் றுரைத்த வேதத்தின் முடிவு" என்றோதப்பட்டதாகும். அவ்வுபதேசம்—

(புருஷக்ஷோம்யோபதாஸிதம் ஜ்ஞாதயஃ பர்யுபாஸதேஜா
காஸிமாஞ்ஜா காஸிமாமிதி தஸ்யயாவவக்ஷவாங்மநஸி
ஸம்பத்யதேமநஃ ப்ராணேப்ராணஸ்தேஜஸி தேஜஃ பரஸ்
யாம் தேவதாயாம் தாவஜ்ஜாநாதி ॥

அதயதாஸ்யவாங்மநஸி ஸம்பத்யதேமநஃ
ப்ராணேப்ராணஸ் தேஜஸி தேஜஃ
பரஸ்யாம் தேவதாயாமதஜ்ஞாநாதி ॥

ஸயஷோணிமததாத்ம்யமித க் ஸர்வம் தத்ஸத்யக் ஸ ஆத்மா
தத்த்வமஸி ச்வேதகேதோ இதி)

"சோமியனே! சுரம் முதலிய நோயடைத்த புருடனைச் சுற்றத்தார் சூழ்ந் திருந்து கொண்டு, யாம் யாரெனல் புலப்படுகின்றதா? யாம் யாரெனல் புலப்படு கின்றதா? என்று வினவுகின்றனர். அஞ்ஞான்று அம்மரிக்கும் புருடனுடைய (க) வாக்கு (உ) மனத்திலும், மனம் (ரு) பிராணனிலும், பிராணன் (ற) தேஜஸிலும் தேஜஸ் (டு) பரதேவதையிலுமாக எதுவரையிலுமொடுங்கவில்லையோ அதுவரையிலும் (அவர்களை) அவனறிகிறான். எஞ்ஞான்று மரிக்கும் புருடனது வாக்கு மனத்திலும், மனம் பிராணனிலும், பிராணன் தேஜஸிலும், தேஜஸ் பரதேவதையிலுமாக வொடுங் குமோ அஞ்ஞான்று (எதிரிலிருக்கும் அவர்களை அவன்) அறிவதில்லை. அந்த இஃது (அணிமா =) அதி சூக்குமமாம்: இச்சத்தான ஆன்மாவையுடையதே இந்த (உலகு) யாவுமாம்: அது சத்தியமாம்: அஃதான்மாவாம். (ஆகலின்) சுவேத கேதுவே! அது நீ யாகின்றனை" எனவாம். வாக்கு எழுவராயாகப் பிராணன் இறுவாயாக இயம்பப் பட்டவை திரிபுடியில் அகங்கார மமகாரங்களிலடங்கும். இவையடங்கவும், தனக்காதாரமாய்த் தன்னை நீங்காது நிற்குந்தன்மைப்பொருளின் மயமாய் நிற்கவுமே அது நீ என்றுபதேசிக்கப்பட்டதென்றோர்க. இதனையும், அகங்கார மமகாரங்களே சருவலோக பந்தமாயிருக்கின்றன வெனும் பொருள் இச் சுருதிப்புல மறியக் கிடக் கின்றது புரைய —

"ஸர்வதர்மாந்பரித்யஜ்ய நிர்மமோநிரஹங்காரோ பூத்வா
ப்ரஹ்மைகம் சரணமுபகம்ய தத்த்வமஸி"

என்னு நிராலம்போபநிஷத் வசனத்து மறியக் கிடக்கின்றமையின் இதனையு நுதலியே "உன்னேயல தொருவத்து வில்லை" என்பதறிவுறுத்தப்பட்டதென்க. போந்த வசனப்பொருள்:—"சகல தருமங்களையும் விட்டு, மமகார அகங்காரங்க ளென்பன இல்லாதவனுய்ப் பிரமமொன்றனையே சரணமாக வடைந்துளனுய் அது நீ ஆகின்றனை" எனவாம். 'தத் த்வமஸி' என்னும் வாக்கியத்திலுள்ள தத்பதார்த்த பரதேவதையை எக்காலு நீங்காதிருக்கின்ற தவம் பதார்த்த 'சிவான்மா அழிவற்றது' என்பதை அச்சாந்தோக்யத்து சு - ஆம் பிரபாடகமே கக - ஆங் கண்டத்தில்—

(நஜீவொஜ்ரியத) "நஜீவோம்ரியத"

என்றியம்புதலினால், ஓரான்மவாதஞ் சாதித்தற்கு ஒத்திடங்கொடாதென்பது உம் போதருமால். உரிய பிரமாணங்கள் பலவும் போந்தவுரைகளின்கண்ணவே வந்துள்ளன. இன்னும் வந்துழி வந்துழிக் காணலாம். சாந்தோக்யத்திற் போந்த பிராணன் என்பதற்கு ஆன்மஞானமெனப்படுஞ் சீவபோதமென்றும், தேஜஸ் என்பதற்கு ஆன்மாவே யெனப்படும் அதன் குணமாகிய சித்தென்றும் பொருள் கோடல் பொருந்தும். மேலை யுபநிடதவுரையிற்போந்த வாக்கு, மனம், பிராணன், தேஜஸ், பரதேவதை யென்பனவே கடோபநிஷத் ௩-ஆம் வல்லியின் கஉ-ல் (க) வாக்கு, (உ) மனம், (௩) ஆன்மஞானம், (௪) ஆன்மா, (௫) சாந்தான்மாவென வருதலானும் இஃதெறுழுறும்.

பாவ கருமத்திற்குப் பயப்படா ஆக்கங்கொ ணெஞ்சுடையாரே "செடி வினைக்கஞ்சா வுரங்கொண்ட வுள்ளுடையர்" எனப்பட்டனர். எனவே, அந்நெஞ்சமிலரே பன்னரிய பரமாசாரியன் பொன்னடியை உள்ளபடி நம்பியுண்மைத் தொண்டராய் நின்றுய்வரென்பதும் அருத்தாபத்தியாற் பெறப்படுவதாயிற்று. இப்படிப் பெறுதலும், அவ்வுரங்கொண்ட வுள்ளுடையர் எப்படி யெப்படிக் கூறப்படவுளரெனலும் ஆசிரியர், பஞ்சாமிர்த வண்ணத்தில்—

"வஞ்சஞ்சூ தொன்றும்பேர் துன்பஞ் சங்கட மண்டும்பேர்
மங்கும்பேய் நம்பும்பேர் துஞ்சும் புன்சொல்வ ழங்கும்பேர்
மான் கணார் பெணார் தமா வினான்

மதியது கெட்டுத் திரிபவர் தித்திப்
பெனமது துய்த்துச் சுழல்டவ ரிச்சித்தே

மனமுயி ருட்கச் சிதைத்துமே
நுகர்தின துக்கக் குணத்தினோர்
வசையுறு துட்டச் சினத்தினோர்
மடிசொல மெத்தச் சுறுக்குளோர்

வலியே றியகூ ரமுளோ ருதவார்
நடுவே துமிலா ரிழிவார் களவோர்

மணமல ரடியிணை விடுபவர் தமையினு
நணுகிட வெனைவிடு வதுசரி யிலையே

—தொண்டர்கள் பதிசேராய்"

என்று கூறியுள்ளாரென்க. "எந்நாளு நான் நிமலன்" என்பாரது கொள்கை வெற்றுரையின்மேற் றென்பதை அவரதனுபவ வாயிலாகவே அறிவுறுத்தலாமென்பார் "சென்னிவலி வந்தால் மருந்து தேடித்திரிவர்" என்றாரென்க. இன்னோர், வேறோராற்றானும் விளக்கப்படுகிறாரெனல்—இந்நூல் ௬ - ஆம் பத்தின் முதற்றிருப்பாட்டகத்தே "தஞ்சத்தி கொண்டுழி தரும் படருளார்" என வருதலானு மறியப்படும்.

கேவலம் 'ஆன்மசத்தி' என்பதன் ஆற்றல் இவ்வாறுளதென்பதை அறியாராய் மேலே இளத்தப்பட்டாரினின்றும் வேறு பிரிக்கப்படுவாரா யுளருட்சிலர், தேவான்மசத்தியை முன்னிட் டுஞற்றுவதுஞற்றுது சில்வேறு பல்வேறு விணைபுரிகின்றனர். இவர் காரியம், அத்தேவான்மசத்தி யுடையார்பாற் பலித்து நில்லாது பிரமரிகொள்ளும்

"தேத்யாகயோகாநுகதா அபச்யந் தேவாத்மசக்தி"

என்னுஞ் சுருதிக்கூற்றில் அத்தேவான்மசத்தி கூறப்பட்டிருத்தல் காண்க. இது, முன்னமு மேற்புடைமை கருதி யெடுத்துக் காட்டப்பட்டதே. ஆன்மசத்தி யினையே வியந்துகொள்ளும் அவைதிக பௌத்தருஞ் சமணரும் இச்சுருதியை என்று கொள்வாரென்றலு மொல்லுமோ? ஒல்லாதே; எம்மனே ருய்த்துணர்ந் துய்தி பற்றுவாராக.

அலது - அன்றி யென்னும் விணையெச்ச வாய்பாடு.

இல் - இன்மைப்பொருள் பயக்குமொரு பண்புச்சொல்; ஐகாரச்சாரியை பெறீஇ "இல்லை" என நின்றது.

வெளிறர் - குணப்பெயர்.

அஞ்சா - ஈறு கெட்ட பெயரெச்சம்.

செய்கை—கை - தொழிற்பெயர் விகுதி. (டு)

தாம்புரண மாமுனே நாம்பிரம மெனுமுரண்
சாற்றுவெற் றுரையருன்னைத்
தாழ்ந்தறிந ரைப்பத்தி காண்டியென் றுந்தமைத்
தடஞான காண்டியென்றும்
மேம்பட மிழற்றுவா ரங்ஙனே யென்போல்வர்
மெய்யடிய ராயவப்பர்
மேதகச் சீகாழி வள்ளன்முத லாயினார்
மெய்யறிஞ ரலரோவெனின்
நாம்பகரு மாறவர்க ளும்பத்தி காண்டியென
நவிலுவா ரிந்தஞாயம்
நந்தும்விப சாரிபதி விரதையை விபசார
நாரியென் றெள்கலொக்கும்
தேம்பெருகு மின்னமுத வனுபவத் தடியவர்க
டேர்பரம நிட்டைமுதலே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 6

மதுரச்சுவை பெருகும் ஆனந்தமுத்தி யனுபவமுடைய அருளர்களறிந்து கொண்ட பரமநிட்டைக்குத் தகைமைப்பொருளே! தாங்கள் பூரணத்தன்மையை யடையு முன்னரே யாங்கள் பிரமமென்னும் மாறுபாட்டினை வழங்கும் வெற்றுரையர், உன்னை வணங்கி (உனதருளால்) உன்னையறிபவரைப் பத்திகாண்டிகளென்றும், தங்களைப் பெரிய ஞானகாண்டிகளென்றும் (தங்களுக்கே) உயர்வுறச் சொல்லிக் கொள்வார்கள். அங்ஙனமே என்னைப்போன்றூர் (அவரை நோக்கிச் சிவஞானப் பேற்றினின்று சிவனைப் பெரிதுந் துதித்துநின்ற) உண்மையடியவராகிய திருநாவுக்கரசு களும், மிக்க பேறிவோடுங்கூடிய வுளத்தினையுடைய திருஞானசம்பந்தப்பிள்ளையார் முதலினேரும் மெய்ஞ்ஞானிக ளல்லரோ? என்று வினவினால், யாங்கணவில்லிறபடி அவர்களும் பத்திகாண்டிகளே யென்று பகர்வார்கள். இக்கியாயமானது, கேடுடைய வியபிசாரியாவாள், பதிவிரதையை வியபிசாரத் தையலென்று நிந்திப்பதைப் பொருத்தும்.

வேதப் பாகுபாட்டில் உபாசனை தழுவுவாரைப் 'பக்திகாண்டி' என்பதூஉம், ஞானத்தழுவுவாரை 'ஞானகாண்டி' என்பதூஉஞ் சிலர் கொள்கையாம். பரம பத்திமையாளரைப் பத்திகாண்டியென இழித்துக் கூறுவாரெல்லாம்—"பத்தி வலியிற் படுவோன் காண்க" என்னுந் திருவாக்கின்படி ஆசிரியர் - அருணகிரிநாத ருடைய அன்பு வயப்பட் டவர்முன்வந்து நின்ற முதல்வனது அனுக்கிரகத்தால் எத்தனை விரைவில் அவர் அனுபூதிமானுயினு ரென்பதை யறிவுறுக்கின்ற—

"பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே"

என்னுந் தமிழ்வேதக் கினவிகளைப் பார்க்கக் கேட்கப் பொருளறியப் புண்ணி யம் படைத்தவராவரோ! போகூழ் யாதனை யாதனைப்புகன் றுழிதரனல்காது போம்!! 'அடி' அருளெனப்படு மாகலின் "மெய்யடியர்" என்பது உண்மையு மருளு முடையா ரென்பதை யுணர்த்துமென்க. "தேம் பெருகு மின்னமுத வனுபவத்தடியவர்கள் தேர் பரம நிட்டைமுதலே" என்றது—

(க) (ரஸம்ஸ்யேவாயம் லப்த்வாகந்தீபவதி।)

"இவன் அத்தச் சுவையையடைந்து ஆனந்தமுடையவ னுகின்றனன்" என வடமொழிமறை (தைத்திரீயோபநிஷத்தின் ஆநந்தவல்லி) யிலும்,

(உ) "'ஊணமிலார்பா—லுருர்சுவை யாயெ வும்பர் பெரு
மான் ..... அன்பி லாலந்துறை யாரே'

(கூ) 'தன்னடைந்தார்க் கின்பந் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனே'"

எனத் (திருஞானசம்பந்த சுவாமிகள்) தென்மொழிமறையிலும் வரூஉம் பிரமாணமா யிருத்தலுமறிக. மோக்கத்தையே அமிருதமென்று கூறுங் கடோபநிஷத் வசனத்தைப் "பாசமென்றோது தத்துவகணத்துள்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கட் காட்டினும். மோக்கம், பிறப்பிலுய்க்கு மிறப்பின்மை யாகலின் அஃது அமிருதமெனப் படுவதாயிற்று; (ஹேதுஃ) ம்ருதம்=இறப்பு. அமிருதத்தைக் கொடுப்பதாய் அமிருதத்துவமாயிருப்பது சிவமாகலின் அஃதும் அமிருதமெனப்படு மென்பதற்காய பிரமாணங்களைத் தகராலயரகசியத்து முதலாங்காண்டத்து ரூன் உரையகத்தே கண்டு கொளலாம். இந்நூ லுரையகத்தும் இயைபுவரின் எடுத்துக்காட்டுதும். "கருப்பாசயப் பிணிப்புக்குள்" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுரையின்கண் அளவற்ற ஆனந்தா னுபவமே ஞானச்சுவையென்று குறித்தாம்: அஃதுமிங்கே வேதநிச்சயமாதல் முன்மொழித்துகோட லென்னும் உத்தியாற் கொள்க.

அறிஞர்—க் = பெயரிடைநிலை; 'கு' என்னுஞ்சாரியை கூட்டப்படின் 'அறிகுநர்' எனவாம்.

நடம்=பெருமை.

மேதை அகமென்பது "மேதகம்" எனமருவிற்று. மேதை=மிக்க பேரறிவு; தகரவெதுகை காண்க.

ஞாயம்-'ந்யாயம்' என்பதன் விகாரம்; முறை=நிரலெனும் பொருண்மைத்து; நாயம் என்னும் வடமொழி விகாரமெனினுமாம். அங்ஙனமாயின், நய சம்பந்தமென்னும் பொருண் மைத்தாம்.

'அம்ருதம்' என்னும் வடமொழியை அமுதமென்பதும், அமிருதமென்பதுந் தென்மொழி வழக்கு. அமுதவறுபவம் - தமிழ்தான்முடிபு. (சு)

அத்துவித நூற்கருத் தோராது மோசமுற
வத்துவித மோதுவார்பால்
அருமறைச் சென்னியின் றுணிவாக வுளவாக
மாந்தநூல் பார்த்ததுண்டோ
புத்தியுடை யீரெனா வினவிலந் நூல்சொனார்
பூதலத் தேவர்துவிதப்
போக்கா யிருக்குமோ வெனவினவு வாரினோர்
போல்வரோ வொன்றிரண்டாக்
கத்துவள் ளரிசியுங் குழைதலும னற்பதக்
கதழ்வாய மௌனமுடிவைக்
காணுநர்சொ னாலுமுசு நேரவே தாமுனங்
கற்றமுரண் விடுவதரிதால்

சித்தசம ரசமுற்ற பக்குவர்கள் சமரசத்
தீர்வையில் விளங்குதெளிவே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 7

வேதாந்த சித்தாந்த சமரசபுத்தியைப் பொருந்திய பக்குவான்மாக்களின் சமத்தவமுடிவில் விளங்குந் தெள்ளிதாகிய பொருளே! அத்துவித சாத்திரத்தினது கருத்தை யாராய்ந்து கொள்ளாது தமக்கு மோசம் பொருந்த அத்துவிதப்பொருள் கிளப்பார் பக்கலில் அருமையான வேதாந்தத் தெளிவாகவுள்ள சைவாகமாந்த சாத்திரத்தைப் புத்தியுடையவர்களே! நீங்கள் பார்வை யிட்டதுண்டோ? என்று வினவினுல், பூமியிலுள்ளவர்களுள் அச்சாத்திரத்தைச் சொன்னவர் யாவர்? அது துவிதமார்க்கமாயிருக்குமோ? என்றும் வினவுவர். இவரைப்போன்ற தூலபுத்தியுள்ளவரோ, ஒன்றுகவும் இரண்டாகவும் பிதற்றப்படுகின்ற வளைய அரிசியுங் குழைகூழுமல்லாத நல்ல பதச்சோறுபோன்ற சிறப்புடை மௌன முடிவைக் காண்பவர்! காணுர். (அவர்க்கு) அம்முடிவை யெடுத்துரைக்கப் புகினும், தாங் கற்றுக்கொண்ட மூரணை மர்க்கடம் போலப் பற்றிக்கொள்வாரேயல்லால் விடுவதும் அரிதே.

இரண்டென்னுந் துவிதவாதத்திற்கு அரிசியும், ஒன்றென்னும் ஏக வாதத்திற்குக் குழைகூழும், இவ்வொன்று மிரண்டுமல்லாத சப்பத்தப் பொருளிலுறும் அத்துவிதத்திற்குப் பதமாகியசோறும் உவமானங்களாகக் கூறப்பட்டன. துவிதவாதமே பேதவாத மெனவும், ஏகவாதமே அபேதவாத மெனவும்படும். இவ்வபேதவாதம், பாலே தயிராதல் போலப் பிரமமே சீவனுயிற்றென்று பிரமவியல்பினைக் கெடுத்துப் பேசுவாரது பரிணமவாதமேயாம். இது பசுவாதமாகலின், அதற்குரிய புத்தகமும் பசுநூல் லெனப்படும். இவற்றினை,

.....“பேதவாதப்
பிசுக்கரைக் காணை கண்வாய் பேசாதப் பேய்க ளோடே” என்றும்,

.....“பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணை கண்டாய் பேசாதப் பேய்களோடே”

என்றுந் திருவிசைப்பாவிலே திருமாளிகைத்தேவருங் கண்டித்தனர். தாயுமானுருங் கண்டித்தன ரென்பதை இக்நூலின் “நாங்கடவுள்” என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டிலேயே அறியலாம். எவ்வகைப்பட்ட கற்போதகத்தானும் மனந்திரும்பாது தாங் தொடக்கத்தே கற்றுக்கொண்ட மூரணிலேயே நிற்றல் நிலையல்பாகலின் அவ்வியல்பிற்கு, தாய்க்குரங்கு மரக்கவடுகளிற் குவித் தாவிச் செல்கையினும் அதனை விடாது பற்றிக்கொண்டு அகடு கிடக்கு மதன்பிள்ளையி னியல்பினை யுவமைசெய்வார் “முசுகோவே” என்றரென்க. முசு = குரங்கு; ஆகுபெயராய் அதன்பிள்ளையை யுணர்த்திற்று.

முசுவென்பதற்குப் பொருள் இவ்வாறன்றி மா குரங்கெனக் கொளின், தாவுவியன் முயகத்தும் பற்றுவியன் அதன் பிள்ளையகத்து மாமென்னு கயங்கெடுமாகலின் அது பொருந்தாதென்க. இவ்வதாானே நல்லார் கன்னெறி முறைகளைத் தம் மக்கட்குத் தொடக்கத்திற்றானே கற்பிக்குமாறு முயறலு நலனென வுணரவேண்டும்.

புத்தியுடையீர் - புத்தியுடையாரென்னும் பெயரின் விளி; ஈற்றயல் ஆகாரம் ஈகார மாயிற்று.

சொலுர், இலுர், சொலலும், முனம் என்பன தொகுத்தல்.

'சமரச சித்த முற்ற' என வியைக்க.

ஆல் - அசை. (ள)

முந்தைநா ளிற்சாரு வாகனுல காயதன்
முதலியோர் சீவேசுரர்
முக்காலு மிலருலகு மெய்யென் றலிற்பொருண்
மூன்றனு ளிரண்டுகூறும்
இந்தநா ளிற்கலா மானது விளைத்தணங்
கின்றதே நாமென்பர்தாம்
இயமான னைப்பந்த பாசத்தை யுண்டென்
றிசைத்தலின் மூன்றுளொருகூ
றுந்துமன சுறுசுத்த நாத்திகர்க ளாவர்நா
னுள்ளபடி யோர்ந்தமட்டில்
ஓவாத வுன்னைமுன் னிட்டுளவெம் மார்க்கமு
முத்தமஞ் சாலுமென்றன்
சிந்தைகுடி கொண்டபர தெய்வமே யெங்குமொரு
தீர்வையா யுள்ளமுடிவே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 8

எனது சிந்தையின்கட் குடிகொண்ட பெரிய தெய்வமே! (எனக்கு) யாண்டும் விகற்பிலா நிச்சய மாகவுள்ள முடிவே! (பிரத்தியகூமாய்க் காணப்படாத) சீவன் ஈசுவரனென்னு மிருவரும் (இறப்பு, எதிர்வு, நிகழ்வென்னும்) மூன்றுகாலங்களிலு மிலர். (பிரத்தியகூமாய்க் காணப்பட்ட) உலகொன்றே யுண்மையென்று மூற் காலத்திற் சாருவாகனும், உலகாயதன் முதலினோருஞ் சொன்னமையால் அவர்கள், (பரமான்மா, சீவான்மா, சடமென்னும்) மூக்கூற்றுப் பொருள்களுள் இரண்டுகூறும்,

இக்காலத்தே (மத) கலகம் விளைத்து (எம்மின் வேருயொரு) தெய்வமில்லை : அது நாமே யென்பார் சிவான்மாவையும் அதனைப் பக்தித்துள்ள அஞ்ஞானத்தையும் உண்டென்று சொல்லுதலினால் (அந்த) மூக்கூற்றுப் பொருள்களுள் ஒருகூறும் கலப்பிலா சாத்திக மென்னுங் கொள்கையேறிய மனசுடையராவர். யான் உள்ளபடி யாராய்ந்த வளவிலே ஒழிவிலா வன்னை முன்னிட்டுள்ள (ஆதிகத்துள்) எந்த மார்க்கமும் உத்தமமேயாம்.

உலகாயதன் என்னுது "உலகாயதன் முதலியோர்" என்றமையின், சாங்கிய சாத்திரக் கபிலரையும் அவர் போன்றுரையும் உளப்படுத்திக்கொண்டது கொளக்கிடக் கின்றது; என்னை? மண்முதலன்கு பூதங்களாயுள்ள உலகொன்றேயுளது; சிவன் ஈசுவரனென்பாரில ரென்னும் உலகாயதனையொத்தே, சித்தப் பொருள்களாயுள்ள புருடன் பிரகிருதியென்னு மிரண்டனுட் பிரகிருதியின் காரியமாய்த் தோன்றிய புத்தி முதல் நிலமீறான உரு - தத்துவங்களுட் புத்தியாய அந்தக்கரணத்தை அனுதி யாகவே சார்ந்துளோன் புருடன்; இப்புருடனுக்கு வேறுக ஈசுவரனிலன்; ஈசுவர னுளனென்பது பொய்யென்று கபிலரும் புகலுமாற்றுனே அந்தக்கரணமின்றிப் புருடனில னென்பதே அவரது கருத்தாகப் பெறப்படுதலின்; கலை, நியதி, காலம், வித்தை, அராகம் ஆகியவைந்தும் உடங்கியைந்துழித் தோன்றுமொரு கருவியே இப் புருடனென்று நூல்களுணர்வறலின். இவ்விருநிறத்தார் நிச்சயங்கள் சிவப்பிராந்தியை ஆச்சரியித்தன வென்பதை,

"லோகாயதாதிஸாங்க்யாக்தா ஜீவஷிப்ராந்திமாச்ரிதாஃ।"

என்று வராஹோபநிஷத்திலும், மஹோபநிஷத்திலும் வருவசனங் காட்டு தலின், பணித்த சித்தாந்தம் பலப்படுவதாயிற்று. ஈசுவரனிலன், பிரகிருதி (மாயை) யே உலகமாயுளதென நிச்சயித்த இக்கிரீசுவர சாங்கியத்தை மாயாவாதமெனக் கூறலா மென்பதாமும், இக்கருத்தேபற்றி யிவ்வாதத்தினையும் உலகாயதத்தினையுஞ் சருதி யினைத்துக் கிளத்தியவாறே —

"மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி"

என்று மணிவாசகப்பெருமானது தமிழ்மறையும் வழங்கிற்றென்பதாமும் எம தபிப்பிராயத் தறுதின்றன. பிரத்தியக்ஷ அளவையொன்றே பிரமாணமாகலிற் பெண் விழைச் சின்பமே சுவர்க்கானுபவம்; அது பெருது பகை, நோய், வறுமை முதலிய வற்றுற் றுன்புழத்தலே நரகானுபவம்; இவற்றிற்கு வேறுகப் பாவ புண்ணியங்களின் பலனுக நரக சுவர்க்கங்களுள வென்பது பொய்; அவ்விழைச்சின்ப அனுபவத்திற்குரிய தும், மண் நீர் தீ காற்றென்னு நான்கு நித்தப்பொருள்களின் கூட்டரவாலாயதுமாகிய தூல தேகமே ஆன்மா; மஞ்சளுஞ் சுண்ணமும் விராயவழிச் செவ்வண்ணமொன்று

பிறக்குமாறு போல அம்மண் முதலிய நான்கின் கூட்டரவின் ஒருணர் வுண்டா மாகலிற் றேகத்திற்கு வேறாக ஆன்மா வுளதென்பதும் பரமான்மா வுளதென்பதும் பொய்; சாவே வீடுபேறென்னும் உலகாயத சமயபேதமே சாருவாகம். அப்பேதம்— இந்திரியங்களை ஆன்மா வென்பதூஉம், அந்தக்கரணங்களை ஆன்மாவென்பதூஉம், பிராணனை ஆன்மாவென்பதூஉ மெனப்பலதிறப்படும். இவ்வாறாமிதுவும், அவ்வுல காயதமுந் தேகான்மவாத மென்பதிலடங்கும். இதன்வரலாறு, சாந்தோக்யோபநிஷத் தின் அ-ஆம் பிரபாடகத்து எ, அ-ஆங் கண்டங்களில் "ஆன்மாவையறிய விரும்பிய தேவர்கட்காக இந்திரனும், அசுரர்கட்காக விரோசனனும் சமிற்பாணிகளாகிப் (பிரம தேவராகிய) பிரசாபதி பக்கலிற்போந்து பிரமசரிய விரதத்தினைச் சாதித்து நின்று ஆன்மா இற்றென வருளல் வேண்டு மென்றலும் அந்தப் பிரசாபதியானவர், கண்ணிற் றோன்று புருடசாயையையும், நீரிற்றோன்று புருடசாயையையும் அவ்வான்மாவென் றுபதேசித்துப் பின்றை உடம்பினை யலங்கரித்துக்கொண்டு பார்க்குமாறும் பகர்ந்தனர். ஆண்டலங்கரித்தவாறே தெரிவது கண்ணுற்ற இருவருள் விரோசன னென்பான், ஆன்மாவாய பிரமம் தேகமே, அதனையலங்கரித்தல் சிறப்பேயென நிச்சயித்து, அதனை யசுரர்கட் குபதேசித்தனன்" எனவாம். இவ்விவரத்தை,

"இந்த்ரோஹைவ தேவாநாமபிப்ரவ
வ்ராஜவிரோசநோ ஸுராணாந்தெள" என்றும்,

"அக்ஷிணி புருஷோத்ருச்யத" என்றும்,

"பகவோப்ஸுபரிக்யாயதே யச்சாயமாதர்சே" என்றும்,

"தெளஹப்ரஜாபதி ருவாசஸாத்
வலங்க்ருதெள ஸுவசநெள" என்றும்,

"ஆத்மேதி ஹோவாசைததம்ருத
மபயமேதத் ப்ரஹ்மேதி"

என்றும் வரூஉம் அவ்வுபநிஷத் வசனங்களைத் தொடர்ந்து படித்தறியலாம். இச்செய்தியே மைத்ராயண்யுபநிஷத்தின் எ - ஆம் பிரபாடகத்தும்—

(தேவாஸுராஹவை யஆத்மகாமாப்ரஹ்மணோந்திகம்
ப்ரயாதாஸ்தஸ்மை நமஸ்க்ருத்வோசுர்பகவந்வயமாத்ம
காமாஃ ஸத்வம்நோப்ருஹீத்யதச் சிரம்த்யாத்வாமந்
யதாந்யதாத்மாநோவைதேஸுரா அதோந்யதமமே
தேஷாமுக்தம்ததிமேமூடா உபஜீவம்த்யபிஷ்வம்
கிணஸ்தர்யாபிகாதி நோந்ருதாபிசம்ஸிநஃ)

"ஆன்மாவை யறிதற் காசையார்ந்த தேவர்களும் அசுரர்களும் பிரமதேவர் பாற் போந்து அவரை வணங்கிநின்று பகவன்! யாங்கள் ஆன்மாவையறிய ஆசை யுடையராயினும்; எங்கட்கதனைச் சொல்லி யருளல்வேண்டு மென்றனர். பின்னர்ப்

பிரமதேவர் தெடுநேரந் நியாணபரராயிருத்து, இவ்வசுரர்கள் ஆன்மாவிற்கு வேறு யுளதை ஆன்மாவென நினைக்கின்றன ரென்றுணர்ந்து, (தேகமாயுள்ள) அன்னியப் பொருளினை யவர்கட்குச் சொல்லினர். இத்தத்தவருண வெண்ணத்திற் பற்றுடைய மடவோ ரதனை யிப்பொழுது மனுட்டிக்கின்றனர்: (சமுசார சாகரத்தைத்) தாண்டு தற்குச் சாதனமாம் ஆன்மஞானத்தைக் கெடுக்கின்றனர்: பொய்புகல்கின்றனர்." என வருவதாயிற்று.

(ஸாத்யாத்மாபிமாநோயி விதுஷோப்யாஸுரத்வத: ।)

"ஞானமுடையானுக்கும் அசுர சுபாவத்தினுலே தேகாபிமான முண்டாதல் கூடும்" என மேலேய வராஹோபநிஷத்தின் கூ - ஆம் அத்தியாயம் மொழிவதூஉம் அஃதேயாம். "பொய்த்திருட்டாந்தங்களையும், வதுக்களையுமுடைய கபடமான நிராத் துமவாதங்களிற் பிரமைகொண்ட மனிதர்கள் வேத வித்தைக்கும், அதன் விரோத வித்தைக்குமுள்ள பேதமறிகின்றிலர். பிருகற்பதியானவர் இந்திரனுக்கு நயமும், அசுரர்க்கு நாசமு மாம்பொருட்டுச் சுக்கிரவேடக் தரிஇ கின்று இந்த அவித்தையை (= அஞ்ஞானத்தை) யுண்டுபண்ணினர். அதனற் சிவத்தை அசிவமென்றும், அசிவத்தைச் சிவமென்று முபதேசிக்கின்றனர்" என்னும் பொருளை,

"நைராத்ம்யவாதகுஹகைர் மித்யாத்ருஷ்டாந்தஹேதுபிஃ
ப்ராம்யல்லோகோஜாகரி வேதவித்யாந்தரந்துயத் ।
ப்ருஹஸ்பதிர்வை சுக்ரோபூத்வேந்த்ரஸ்யா
பயாயாஸுரேப்ய: கூயாயேமர
மவித்யாமஸ்ருஜத் தயாசிவமசிவ
மித்யுத்திசம்த்ய சிவம்சிவமிதி"

என்னும் மேலேய மைத்ராயண்யுபநிஷத்தின் எ-ஆம் பிரபாடக வசனங்களி லேயே பெறலாம். பிருகற்பதி யுண்டுபண்ணிய அவித்தை, கூறிப்போந்த உலகாயதமே யாமெனல் கொளக்கிடக்கின்றது. உலகாயத சமயக் கொள்கையானது, தேவேந்திர போகத்தி லுவர்ப்புற்றுத் துறவறம்புக்கு மோக்கம்பெற முயன்ற இந்திரனது நோக்கத் தினைத் திருப்புமாறு பிருகற்பதியினுல் அவ்விந்திரனுக்குப் போதிக்கப்பட்டதென்று கந்தபுராணத்துத் தேவகாண்டத்தின் இந்திரபுரிப்படல மியம்புகின்றது. இஃதொரு காலத்தேபோலும். என்னே? அசுரர்கள்பால் நல்லுள்ளம் பாலியாப் பிரமனுர், தேகமே யான்மாவாகிய பிரமென்றுபதேசித்தது இதற்கு வேறுபோற் காணப்படு தலின். உலகாயதசமய திருட்டாந்தம் இந்நூலிடைப் "பொன்மஞ்சள்" என்றற் றொடக்கத்துப் பத்திற் கண்டிக்கப்பட்டது. இச்சமயமுதலிய பல சமயத்தாரு மெய்து கதிகள், பண்டையார் விதித்தவாறே "பரம்" என்னும் பத்திற் பகரப்பட்டன. 'ஆஸ்திகம்' என்பது (பரமான்மா முதலிய மூப்பொருள்கள்) உண்டென்னு மார்க்கம். இதுவே "உன்னை முன்னிட்டுள்ள எம்மார்க்கமும்" எனப்பட்டது. 'நாஸ்திகம்' என்பது (அப்பொருள்களுட் கண்கூடாகாதன) இல்லியென்னு மார்க்கம்,

இம்மார்க்கர்—இருளகத்திருந்துகொண்டு சித்திரந் தீட்டியுள்ள சுவரினைக் கைகளாற் றடவுதலொன்றே செய்துவிட்டுச் சுவர்மட்டு மிருக்கின்ற தென்பானையும், என்றூ ழொளிமுன் னின்றுகொண்டு விண்ணிடை மதியுடுக்கள் இல பரிதிமட்டு முளதென் பானையும், மடவரல்கருப்பத் தொருமகவுள தென்பதையுணராது அம்மடவரன் மட்டு முளா ளென்பானையும், இரும்புள்வாங்கு காந்தத்தினைக் கண்டு நங் கட்புலனாகாச் சத்தி காந்தத்திற்கின் றாகலின் இரும்புதான் சலித்து இக்காந்தத்தினைக் கூடிற் றென்பானையு மொப்பர். நிராலம்போபநிஷத்—(அநாத்யவித்யா =) "அனாதியான அவித்தை" எனக் கிளக்குமாற்றானே ஆன்மாவிற்கு அஞ்ஞான மெய்தியவழி தெரியவில்லையென்பது பெறப்படும். இது, கடவுள் நாமே என்னும் ஏகபதார்த்தவாதிகளும் என்றுகொள் சுருதியாயிருத்தலின் அன்னோர், பாசப்பொருளையும் உள் பொருளாய்க் கொள்வோ ராவரென்பது நுதலி அவர்மாட்டே மூன்றுளொருகூறு நாத்திகங் கூறப்பட்டதென்க. இந்நூலிடைச் "சீர்த்தியுடைத் தெள்ளறிவு" என்றற் றொடக்கத்துப் பத்தின் உ-ஆந் திருப்பாட்டினும் இப்பொருளே விரிக்கப்பட்டுளது.

இத் திருப்பாட்டானது, எமக்குவேறாகத் தெய்வமின்று : அது நாமேயென்னும் ஏகபதார்த்த வாதிகளு நாத்திகவாதத்துட்படுகின்றன ரென்பதற்காமாறு மாட்டி நிகழ்த்தி, "உடன்படல்" என்னு மதம்பற்றி ஆத்திகமத மெவற்றினையும் உத்தமப்படுத்து மதரான் அந்நாத்திகம் அதமமென நாட்டுவதாயிற்றாகலின் இஃது எஞ்சியசொல்லி னெய்தக்கூற லென்னும் உத்தியாம். கந்தானுபூதியில்—

"பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே"

எனவும், பட்டினத்தடிகள் பாடலில்—

"வாதமுஞ் சமய பேதமுங் கடந்த
மனோலய வின்பசா கரமே
ஏதுமொன் றறியேன் யாதுநின் செயலே
யிறைவனே யேகநா யகனே"

எனவும் வரு திருவாக்குக்களின்படி, சுவானுபவத்தி லொன்றாகவே காணப் படூஉ முண்மை இவ்வேகபதார்த்த வாதத்துட்படாது. அனுபவிப்பார்க்கொன்றாகவும், அல்லாதார்க்குப் பலவாகவு மிருக்கு முண்மைக்கு மாறாக ஏகங்கூறுவாரது கொள்கையே அவ்வாதமாக இந்நூற்புல மெடுத்துக்கொள்ளப்பட்டு அவ்வாதம் பொருந்தா வியல்பிற் றென்பது பற்றிப் பலதிற நியாயமு மெடுத்தெடுத்துப் பகரப் படுவனவா மென்க. இக்கருத்து, இந்நூலிற்றானே "தாம்புரண மாமுனே நாம்பிரம மெனுமுரண்" என்று கூறியவாற்றானும் மதனுறும். நினைப்பு மறப்போடுள்ள வொரு வன் றன்னை நின்மல தெய்வமாகக் கூறிக்கோடல், ஆத்திகருள் எவர்க்குத்தான் அருவருப்புண்டுபண்ணா தொழியும்? ஒரு நாட்டிற்கேனும், ஒரு கிராமத்திற்கேனும்,

ஓரில்லிற்கேனுக் தலைமைபடையாதாரும், வறுமையால் இரந்துண்பாரும், இரப்பார் குழுப்பெருமை விழைக் திடுவார் மதம்போற்றி மடமிருந்துண்பாரும், எப்பாடையிலேனும் இரண்டுவரி செவ்வன்றீட்டக் கற்றுக்கொள்ளாதாரும், கிழக்கு மேற்குக் குறிப்பிடவறியா மக்தமதியரும், நோயான் ஞொள்கித்திரிவாருக் தங்கற்றல் கேட்டல் வாயிலாகத் தம்மைச் சருவாண்ட பிண்ட சராசர நாயகமான பிரமமென்று நாண மிலாது கூறலுங் கோடலும் வியக்கற்பாலனவேயாம். உய்த்துணர்க.

அனுபவத்தி லொன்றுகவே காணப்படல்கொண்டு எஞ்ஞான்று மொன் றெனவே மியம்பல் சாலாதோ? எனின்,—நன்று கடாயினுய்! ஒன்றுமவ்வனுபவம் ஒருவர்க்கெய்தியவுடன் பல்வேறுவகைப்பட்ட வுலகெலாம் இன்மை யெய்தாமை யானும், அவர்க்குற்ற அனுபவம் மற்றியாவர்க்கு முறுமையானும், ஈண்டியபொருள் கள் யாண்டொழிக்தன? என்னுங் கடாவுக்குத் தக்கவிடை கிடையாமையானும் அது சாலாதென்ப. இங்ஙனஞ் சாலாதேவென்று வினவி நிறுவுமொரு சமாதானம், டூகர்ந்த பல்லாற்றுனும் பயனுடைத்தன் றென்பது நூதலியே—

"தனதுரை தருக்கநில் லாஞான்
றனுபவ மேகமென் றவலம்
பனுமுயிர் பாழுயி ரதன்சொல்
எனையென செயுமயி லிறையே"

என்னுஞ் செய்யுளுக் திருவலங்கற்றிரட்டின் உ-ஆங் கண்டத்தே யெழுக்துள தால். மேல், அனுபவத்தொன்றுகவே காணப்படினூஉம் அனுபவஞ் செய்வோ ணெண்டிருத்தல்வேண்டு மாகலின், இரண்டான்மா வுளவெனல் கூடுமே யெனின்,—அனுபவ ஞானிக ளவ்வாறு கண்டு கூறுமையானும், அனுபவ வாயிலாகப் பரமுத்தி யடைக்தாரு ளெவரு மாங்குக் காணக்கிடையாமையானும், உண்மைநெறி விளக்கத்தே தத்துவதரிசனம், ஆன்மதரிசனம், சிவதரிசனமென்னுங் காட்சியின் மேலேயே 'சிவானந்தமேலீடு' தெரிக்கப்பட்டமையானும் அஃதுங் கூடாதென்ப. இக்காட்சி அனுபவமே, நிருப்பாவென்னு மிந்நூலின் ஈற்றுத் திருப்பாட்டுள்ளும் "அனுபவப்பொருளு மனுபவிப்பவனு மனுபவத் துண்டென வறிந்த—தினருமெய்ச் சீட கோடிகள்" என்பதன்கட் கூறப்பட்டுளது. இதுபோல வேறுவருவனவுளவேல் அவற்றிற்கு மிதுவே பொருளெனக் கொள்க. காணப்படாதுள்ள வோருண்மையினைக் கண்டுகொண்ணிலையி லுறுவதே அனுபவம். அந்தரியாமியாய சிவத்திற் கோருடம்பா யேய்த்துள்ள தனதான்ம நிலைக்களத்தே அழுந்திநிற்கு மேல்வையுறுதலின் அது, "சுவானுபவம்" என்றும் வழங்கப்படும். பிறிதொடு படாது தன்னிற்றுனே மகிழ்ந்து பூரிப்பது போன்றதே சுவானுபவமென்றுஞ் சொல்லுப. கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, கற்கண்டு, சருக்கரைக்கட்டி ஆகிய விப்பொருள்க ளொன்றுய் விரவியுளதாய சுவை, இத்தன்மைத்தெனப் பிரித்தறிய வாராமையேய்ப்ப முதல்வனும் அப் பரமுத்தி யினில் ஆனந்த சொரூபமாய் ஆன்மாவோடு கலந்திருப்பனுகலின் முத்தியடைந்தார்

பிரித்தறியப்படா ரெனின்,—பிரித்தறியக்கூடா வகையில் இரண்டும் பிரியாதிருக் கின்றன வென்பதை யொருவ ரெப்படி யறிந்துரைக்கலாம்? எனக் கடாவி அது மறுக்கப்படுமாகலின் அஃதனுபவ முடிபாகாது. கிற்க. மேற்கொள்ளாவா றனுபவிக்கையி லொன்றே காணப்படுதலின் ஏகமெனவும், அஃதல்வழியிற் பல காணப்படுதலிற் றுவைத மெனவும், வியாபக பரமான்மா வெப்பொருளிலுங் கலந்திருக்குந் தன்மையின் அத்துவைத மெனவும் பொருணிச்சய மேற்படுதலானும், அக்கலப்பும்—

(நிஜரூபவதேவ ஸ்ருதிஹ்ருதயாநாம்
தஜ்ஜாதீயஸ்ஸன் ஸரூபவதேதஸ்ய ।
சித்ரூபமேவ ப்ரதிபாகயுக்தம்
தன்மாதகண்டம் மமரூபமேதத் ।)

"சித்துரூபமே தோற்றியுள்ள பிரபஞ்சத்தோடு கிவணியுள தாதலின், எனது ரூபம் அகண்டமாயுளது." என்னும் வாஹோபநிஷத் வசனத்தும்,

(தெதெஷ்வபிணாம் வாஸ்துஷ்ணலவாம்
தேஜோதம்பூர்ணம் புருஷேணஸர்வம்)

"அத்தப்புருடனுல் இவையாவும் வியாபிக்கப்பட்டுள" என்னு முண்டகோப நிஷத் வசனத்தும்,

"கரியானே கான்முகனைக் கனலிக் காற்றைக்
கனைகடலிக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானே"

என்னுந் தமிழ்மறைப் பகுதியிலும் பெறப்படுதலானும் எல்லாம் ஒன்றெனற் கும், இரண்டெனற்கும், மூன்றெனற்கு மியையும். இவ்வியைபின் மாட்டேயே சித் தென்பதும், அசித்தென்பதும், சிதசித்தென்பதுங் கொளக்கிடத்தலிற் சித்து (= அறிவுள் பொருள்) அசித்து (= அறிவில் பொருள்) ஆகாது; அசித்துச் சித்து ஆகாதென்னும் வியவகார மேற்படுதலானும், அஃதும் அவ் வாஹோபநிஷத்தில்—

(நஹிதாஹ்யஸ்ய ஸ்வபாவோ தெகம்வஸ்துகதாசந ।
தஜ்ஜாதீயஸ்ஸன்
நஹிநாநாஸ்வரூபம்ஸ்யா தேகம்வஸ்துகதாசந ।
தன்மாதகண்டஸ்வாஸ்மி)

"ஒருபொரு ளொருஞான்றும் பல சுவரூபமாகாது; அதனால் (யான்) அகண்ட மாகவே யிருக்கிறேன்" என வொருஞானியின் கிளவி வருதலிற் பெறப்படுதலானும், சித்துத்தான் அகண்டமெனிற் காட்சியிலுள்ள அசித்தை விட்டு எச்சித்துந் தனியிருக்கு மெனற்கு மோரியைபின்மையானும்,

(ஸர்ப்பாதௌரஜ்ஜுஸத்தைவ ப்ரஹ்மஸத்தைவகேவலம் ।
ப்ரபஞ்சாதாரரூபேண வர்த்ததேதோஜகத்ஸதி ॥)

"கயிற்றினிடத்துண்டாம் பாம்புத்தோற்றம்போலுஞ் சகம் (ஆகலின்) அஃ தில்லை : பிரபஞ்சாதாரப் பிரமசத்து மாத்திர மிருக்கின்றது" என்று ஆத்மபோதோப தேஷத் வழங்கும்வழி நுவலும் விவர்த்தோபாதான காரணமுங் கயிற்றிலுள்ள நீட்சி வளைவுமுதலிய விகாரங்கள் அப் போலிப்பாம்பு தோன்றற்குக் காரணமாமாறு பல்வேறு வகைப்பட்ட விகாரசகந் தோன்றற்குப் பிரமமே காரணமெனு மாற்றுனே (= அந்தப் பிரமம் நிருவிகாரத்த தன்றென்பது சித்திக்கும் வழியாலே) மறுக்கப்படுமாகலானுங் கடவுள் விசாரணை எந்தமுடிவுக்கு மியைபுற (= முற்றும்) வந்துவிடாதென்பதே யேற் புடைத்தென்பதை மீண்டெஞ்சிந்தை யினிதவாவுகின்றது. இதற்கே—

(ஏஷபரமாத்மாபரிமிதோ ஜோதர்க்யோசிந்த்ய)

"இப்பரமான்மா அளவையுட்படாதவன் : பிறப்பிலி : தருக்கத்தினுல் இக்நீர் மையனென நிச்சயிக்கப் படாதவன் : சிந்திப்புக் கெட்டாதவன்." என்று மைத்ராயண யுபநிஷத்தின் கூ-ஆம் பிரபாடகம் வழங்கலும்,

(அவ்யவஹார்ய மக்ராஹ்ய மலக்ஷண மசிந்த
மவ்யபதேச்ய மைகாத்ம்ய ப்ரத்யயஸாரம்
ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம்)

"வாக்கு வியவகாரத்திற் கெட்டாததும், கைக்கெட்டாததும், அணுமான வளவையா லளக்கப்படாததும், சிந்திப்புக்கெட்டாததும், இத்திறத்ததென நிச்சயிக்க வொண்ணுததும், ஏகான்மானந்தமா யிருப்பதும், பிரபஞ்ச லயத்தானமா யுள்ளதும், சாந்தமாயிருப்பதுமாகிய சிவம்" என்று மாண்டூக்யோபநிஷத் வழுத்தலும்,

(அதிவாதாம்ஸ்த்யஜேத்தர்க்காந் பக்ஷகஞ்சகரோச்ரயேத் ।)

"அதிவாத தருக்கங்களை விடல்வேண்டும் : ஒருகக்ஷியிலுஞ் சார்தல் கூடாது." என்று நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் மு-ஆம் உபதேசம் அறைதலும்,

"ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி"

என்று ஞானசம்பந்தப்பெருமானது தமிழ்மறை கவிறலும்,

"'அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா ரெருவர்க் கிசைவிப் பதுவே'
'பேசா வனுபூ திபிறந் ததுவே'"

என்று அருணகிரிநாதப்பெருமானது தமிழ்வேதஞ் சாற்றலும், இன்னை பலவு மியைகின்றன. 'தருக்கத்தினுல் இக்நீர்மையனென நிச்சயிக்கப்படாதவன்' 'வாக்கு வியவகாரத்திற் கெட்டாதது' 'இத்திறத்ததென நிச்சயிக்கவொண்ணுதது' 'ஒரு கக்ஷி யிலுஞ் சார்தல் கூடாது' 'பேசாவனுபூதி பிறந்தது' என்பன கருதுக. இக்கிருணயம், குமரகுருதாசசுவாமிகள்பாட லென்னும்பெயரிய பனுவற்க ணுள்ள உள்ளூர்ச் சிவ சுப்பிரமணியர் சதகத்தில்—

" சரியையுங் கிரியையும் புதுமணக் கோலச்
சடங்கென நினைந்துகொளவுஞ்
சகயோக மணவறையுண் மணமகளு மகனுமுள
தரமென வறிந்துகொளவும்
அரியமெய்ஞ் ஞானமபி மானமச் சந்துறக்
தணைதலென வுய்த்துணரவும்
அங்கணுண் டாகுமின் பதையிருவ ருஞ்சொலா
வதிகுய்ய மெனவோரவும் "

என்பன கூறப்பட்டிருத்தலின் இஞ்ஞான்று புதுவதுபடைத் தோதப்பட்ட தென்றற் கிடனின்றென்ப துணர்தலோடு பத்துப்பிரபத்தத்துத் தங்க ஆனந்தக் களிப்பில்—

" வாதிகட் கெட்டாத தங்கம் — அன்பு
வறண்டலீல வோரறி யாவருந் தங்கம் "

எனவும், மேலிப்பாடலிலே திருகிறைத்தசிவமெனும் பகுதியிலே—

" தன்ன கந்தனிற் றன்னிசங் கண்டபின்
தன்னை வேறெனச் சாற்றவுங் காவிலா
உன்னைத் தானென வோதவு மொவ்வுமோ
இன்ன தென்றியம் பாததொன் றின்றரோ."

எனவும் யாம் ஒதியவாறு முணர்க. இங்ஙகழ்ச்சிபற்றி யின்னுமுணரவுள்ளன பலவுத் தகராலயரகசியத்து " இனமும் பங்ர்முகம் " என்றற் றொடக்கத்துச் செய்யுள் விரிவுரைக்கட் கடாவிடைகளாக விளக்கப்பட்டுள ; கனிபெரிய, விசாரணை யென்த முடிவுக்கு மியைபுற வந்துவிடாதென்னும் இத்தீர்வையே சித்தாந்தமாகலினன்றே கல்லால கிழற்க ணைழுந்தருளியிருந்த தென்முக பரமாசாரியனும் எல்லாமாய் அல்லது மாயிருக்கும் அக்கிலை வாக்கினைற் சொல்லிமுடிவதன்று ; அவ்வழி அது பெறப்படுவது மன்றென்னுங் கருத்திற் கின்முத்திரையாற் றெரித்தருளினன் சனகாதி முனிவர்க்கு. இம்முத்திரை—

---------- " உரத்திற் சீர்கொள்
காதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றன் "

எனக் கந்தபுராணங் கழறுமாறு மோனமுத்திரை யெனவும்படும். இது, மௌனமுத்திரை யெனத் தக்ஷிணமூர்த்யுபநிஷத்திலுங் கூறப்பட்டதே. பரமாசாரி யனே இப்படி மோனஞ் சாதித்துக் கரக்குறிகொடுணர்த்திய வுண்மையினை யுரிமையினை முசலக்கிசலரி னிமிர்ந்த முன்னமுடை யேனையோருட் பலரு மொருசிறிதுங் கருதாது தத்தம் புத்திவாதங்கட் கியையப் பலமுடிவுகளையும் தாமே கற்பனைசெய்துகொண்டும், புத்தகங்களிற் சில கண்டெடுத்துக்கொண்டும் அவற்றோடு சண்டையிடுங் கௌரவஞ் சால்புடைத்தாமோ ? அசப்பியமான கதைகளையும் நிவ்விய தெய்வ சரிதைகளாக

ஏன்றுகொண் மந்தமதிகள் கண்டுமகிழ்வான் சண்டை பலவிளைக்கும் புத்தகங்கடாந் தம்மோடு பழகுநரையுஞ் சண்டையிலுய்த்து இடர்ப்படுத்துமேயல்லாற் சாந்த வியோம இன்பநிலையி னிறுவுங்கொல்? நிறுவாவாகலின், தருக்கப்புத்தக வழியாயுஞ் சண்டைச் சுவடி வழியாயும் பிறக்கும் அகங்கார ஆவேச ஆட்டம், கூறிப்போந்த மோனமுடிவில் எத்துணையும் பயன்படாதென்பது தெள்ளிதென்க. முக்திகோபநிஷத்தின் மொழியப் பட்ட (ஹூதயக்ரந்தி) இருதயக்கிரந்தி, காடுகாள்வாழ் கடறுறை கொடுவரியினுங் கொடிதென்பது மிங்ங னுணரக்கிடப்பதே.

"சும்மாவிரு சொல்லற"

எனக் கந்தரனுபூதியிலும்,

"ஏகமிரண் டென்னாமற் சும்மாவிரு"

என ஒழிவிலொடுக்கத்திலும்,

"மோன மென்பது ஞான வரம்பு"

எனக் கொன்றைவேந்தனிலும் வரு மமுத மொழிகளும் இம்மோனமுடிவினை நிலைபெறுத்துமென்க. வித்து முற்பட்டதோ? மர முற்பட்டதோ? என்னுஞ்சங்கையில் யாதுங்கூற வியலாமை *'பீஜாங்குர நியாயம்' எனப்படும்; இதுபோல்வதே எம் முடிவுக்கு மியைபுற வந்துவிடாதென முடிக்கப்படு மிம்மோனம். இயைபுற வந்து விடாதென்பது அநிர்வசநமாகலின் இஃதேகான்மவாதி பிதற்றாய் நவையா மென்பாரது கொள்கை, ஈண்டுப் பயன்படாதொழிதலுங் காண்க. 'அநிர்வசநம்' நவையாமென்றல் சுருதி விரோதமுமாம். என்னை?

"அநிர்வசநீய ஜ்யோதிஸ் ஸர்வவ்யாபகம்
நிரதிசயாநந்தலக்ஷணம் பரமாகாசம்।"

என்று மண்டலப்ராஹ்மணோபநிஷத் வழங்குகின்றதாகலின். இன்னுமவர் கருத்தின்படி—

"இப்படிய னிவ்வுருவ னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே"

எனத் திருநாவுக்கரசுக ளருளிச் செய்ததும் அநிர்வசந மெனப்பட்டு நவையாங் கொல்லோ? உய்த்துணர்ந் துறுதி கடைப்பிடிக்க. எல்லாம்வல்ல இயவுளியல்பினை யுத்திவாதத்தா னளந்து முடிக்கமுயறல், நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கத் துணிதலை மானுமென்னாது மற்றியாது கூறலாம்! அவ்வியவு ளாக்கலிற் சேண் விசும் பிடை விண்மீன்களெனக் காணப்படூஉம் உலகங்க ளித்துணையவென்னுந் தொகையினை யேனும், அவற்றுளொன்றனையாயினுங் கண்ணுற்று அதன்கணுள்ள சடங்க ளித்துணைய, சித்துக்க ளித்துணைய, அவை யினைய வினைய வென்னும் வகையினையேனும்

*முக்திகோபநிஷத்தில் (பீஜாங்குரக்ரமஃ) "பீஜாங்குரக்ரமஃ" எனவும் வருகின்றது.

ஒருவரையறையிற் பொருந்தக்கணித்து, அதனே, யாதானுமொரு புத்தகவாயிலாகத் தருக்க யுத்தியிற் றலைப்பட்டாருள் எச்சித்த னீண்டிருந்தனன்! எக்கனசஞ்சாரி நல்கினன்! எப் புவனசஞ்சாரி வழங்கினன்! தம்மைப் பிரமமெனப் பிதற்றுவாருள் எவனுதவினன்! வெண்டிங்களிற் காணப்படு களங்கம் முயல்வடிவிற்றுயிருத்த னேக்குபு அதனே முயற்கறையென்றும், அத்திங்கணைக் களங்கனென்றும், முயற் கூடென்றும், சசியென்றுங் கூறிய கூற்றுக்கள் பண்டைப் புத்தகங்களி லுள்ளனவன்றி அக்களங்கங் கன்மலியென வுண்மைகண் டுரைத்தது முளதோ? கட்புலனகாவிடத் துலகம் பலவெனப் பலபெயர்கள் நீட்டியிருத்தன் மாத்திரையே யாவுங் கண்டறிந்தமை சாதிக்கப்படுமோ? பேதாய்! அமேரிக்காவிலுறை கூர்த்தபுத்தியுடையார், மலிமிசை யேற்றப்பட்ட 600-டன் எடையுடைத் தூரதிருட்டிப் படிமக்கல வாயிலாகப் பத்துக் கோடி சூரியகோளங்களையும், அங்காரகக்கிரகத்தி லுள்ள நீர்செல் பல கால்களையும் இஞ்ஞான்று கண்ணுற்றுரைக்கின்றபடி தொல்லோ ரிருந்தாருள் யாவரேனுங் கண்ணுற்றுரைத்த துண்டோ? உண்மைதான் யாது? கூறுதி. நவைதீர் நுனித்த புத்தியும், கடுவுகிலேமையு முடையார்க்கு அளவைநூல் புத்தகங்க ளெத்தனை வையுள்ளனவென்பது புலனும். செம்பின் கண்ணே தேய்க்கத் தேய்க்க மினுக்கந் தோன்றியாங்கு, உள்ளத்தே யோசிக்க யோசிக்க யுத்திவாதம் பிறக்குமாகலின், அஃதொரு முடிபிலேயே நின்றுவிடாது. உண்மையைக் காணுங்காறும் பல்லோரகத் தும் வன்மையு மென்மையுமாம் யுத்திமாத்திரையாக அது நிகழ்ந்து கொண்டிருக்கும். இது பற்றியன்றே "தீரா வழக்கே பாரா தளவும்." என்பது ஞானவாக்கியத்துங் கூறப்படுவ தாயிற்று. கன்மமலம் அறுதியெனப்படு நூல்வழக்கானே காத்திகமு நவிலத்தக்க மாபாதக கன்மமும் பெறப்படுமாற்றுற் கடவுளையெதிர்க்குமொரு கடவுள் அக்கன்மமாம்; அது வலிதாம்; அஃதக்கடவுள் சன்னிதியிலேயே உளதாமென்றல் சித்திக்குமென்பது அந்த யுத்திவாதிகள் கருத்திற்படுமேல் அவர் பொருந்தக் கூறுவது தான் யாதோ? இன்னனவும் பலவே.

(விஹாயஸாவஜ்ஜானுரி யத்தத்யந்தஜுவாலயுதாழ।
விஹாயசாஸ்த்ரஜாலாநி யத்ஸத்யம்ததுபாஸ்யதாம்।)

"சாத்திரக் குழுக்களே விட்டு, உண்மை யாதோ அஃதுபாசிக்கத் தக்கது." எனப் பைங்கலோபஷித் பகருமாறு புத்தக வியவகாரங்க ணீத்துத் தன்னைத் நியா னிப்பார் யாவரேயாயினும் அவரெதிரே அவசியந்தோன்றியருண் முழுதொருங்குணர் முதல்வற்குத் தெருக்களினிகழ் பலவேறு சண்டைகள் எங்ஙனம் விரும்பப்படாதன வாமோ அங்ஙனமே, அகங்காரப் பிரவர்த்தகர்களால் யுத்திவாதமாக வரையப்பட்ட புத்தகச்சண்டைகளுமா மென்பாம். சண்டைகளே யிறைவனே யெழுதிக்கொடுத்தனன், சொல்லைவைத்தன னென்றற்காஞ் செய்தியும் யாங் கோடற்பாலதன்று.

"'சன்மார்க்கம் போன்றிழிவு சாற்றுதூற் கேள்விகளுக்
துன்மார்க்க மாகுமன்றே தோமில் பரஞ்சோதீ' [சசுஎ]

'முன்னறத்தா னின்னன்பு முற்றப் பிறந்தார்க்குப்
புன்னுவற்றி மார்க்கம் பொருந்தா பரஞ்சோதி'" [சசுகூ]

என்று காசியாத்திரைக்கட் கூறியுள்ளன கண்ணுக இவ்விசாரத்தாற் பல்லதாணும் ஆன்மகோடிகளை மயக்கி நிற்குமாயை, பற்பல புத்தகவடிவாகவு நின்று கொன்னும் மயக்குமென்ப தறியக்கிடக்கின்றதன்றே. ஈசன், பிரபஞ்ச உபாதான காரணமா யிருப்பானல்லன்; நிமித்தகாரணனுயுளனென்னுஞ் சைவமுடிபிற்கு மாறு கோளாகச் சைவருளொருசாரார் மதமுமுளதென்பதுபற்றி—

(வதஞ்ஸவாஜ்ஞஸ்ஞாதித்தெதத்தஞ்நிரஸ்ஐ
வாபஸ்வதஹெஸ்வகெவஞ் நிமித்தெஸ்வராதி
ஸைவகதேசிகஸ்வவா நிராகரணம்)

பத்யுரஸாமஞ்ஜஸ்யாதித் யேதத்துநிருட
பர்சுபதஸ்யைவகேவல நிமித்தேச்வரவாதி
சைவைகதேசிகஸ்வவா நிராகரணம்)

"பத்யுரஸாமஞ்ஜஸ்யாத் என்னும் (பிரஹ்மஸூத்ரமாகிய) இதுவோ, நிருட பாசுபதத்தைத்தான் கேவலநிமித்தேசுரவாதிகளாகிய சைவருள் ஒருசாராரைத்தான் நிராகரித்தது" என்று ஸ்ரீமத் - சிவாக்கிரயோகிகள் சிவஜ்ஞாநபோத முதற்சூத்திர வியாக்கியானத்திலே கூறினமையும் இங்குச் சிந்திக்கற்பாலதே. இன்னனவும் பலவே. சண்டைப் புத்தகங்கள் இறைவன் வாக்காகவே யுள்ளனவென்பதைத் தென்முக பரமாசாரியனது மோனமுத்திரையு ணிமமறுக்கவுளதால். பேதாய்! ஆலமர்கடவுளது இம்முத்திரையினை மதியாதிகழ்ந்து யாதானுமொரு சீவனதுரையினை யபிமானத்தான் மதித்துப் புகழ்ந்து கவிகூருஞ் செய்கை கின்மாட்டுக் காணப்படின் அஃதிங்கே யொரு ஞான்று மொருபடியு மொருசிறிது மதிக்கொணவொரு செய்கையின்பாற்படுமன்றே. 'யுத்திவாதங்களும் மதபேதங்களுஞ் செல்லா நிலைக்களத்துளதே மனேலய இன்பக் கடல்' என்னும் பொருளினை யியாகின்ற "வாதமுஞ் சமயபேதமுங் கடந்த மனேலய வின்பசாகரமே" என்னும் பட்டினத்தடிகளது நிருவாக்கும் இம்மோன முடிவாகவே நிற்கின்றதன்றே. மனேலயம் = பரமேசுர சிந்தனையொன்றேயுள்ள கரணமோனம்; இதன்கண் வாக்குமோனம், காயமோனமென்னு மிரண்டு மடங்கும். சும்மாவிருத்தல் என்பதுமிதுவே. எவ்வாற்றானு முடிவுபேறில்லாப் பதார்த்தநிருணயச் சண்டைகளை யொழித் துய்தி பெறற்குரிய சாதனம் மோனமன்றி வேறுகூற லேற்புடைத்தன் றென்பது எமதொருபெருந் துணிபாகலின், அஃதீண்டு விரித்துரைக்கப் படுவதாயிற்றில். இத்துணிபு—

"இம்மூக வர்த்த மல்லா நிசைக்கு மெல்லா மவத்தம்"

எனப் பரிபூரணனந்தபோதத்தும் எம்மாற் குறிப்பாக வெடுத்துரைக்கப்பட்ட தேயாம். இங்ஙனம், மோனமே முடிபாயிற் கற்றல் கேட்டல்கள் யாங்ஙன நிகழும்? எனின்,—நுவலும். "பாடும் பணியே பணியா யருள்வாய்" என் றருளிச்செய்தபடி

ரத்திகமும், ஆத்திகமாமாறு பாடுகம் பாடுகமெனக் கதிக்குங் கலைஞர், பரம்பொருளது திருவருண்மகிமை, அடியவரதருட்டிறம், பாவ புண்ணிய வியல்புக ளென்பன முதலிய பலவுமெடுத்துரைக்குஞான்று, ஆன்மகோடிகள் பெத்தத்தினின்று விடுதலை யடைதற் குரிய கல்லாசாரங்களையும், வழிபாடுகளையும், பிரார்த்தனைகளையும் விளக்குமதரிற் கண்ணுஞ் செவியுங் கருத்துங் கழிபெருங் காதல்கூர இனிது நிகழுமென்க. இம்முடிபு 'அத்வைதம்' என்பதற் கியையாதோ? எனின்,—இயையுமாயிற் பரமாசாரியன் அதனைத் தனது பவளத்திருவாயாற் பகர்ந்திருத்தல் வேண்டும்: அங்ஙனம் பகர்ந்தா னல்லன். வாக்கு வடிவாய வேதத்திலுள்ளது அத்வைதமாகலின் அது, கரக்குறியா னுணர்த்தப்பட்டதெனற்கு மியைபுண்மை வாயாது. அச்சொல்லைச் சொல்லினும் பலபொருள் கொளப்பட்டு வாக்கு வியவகார முண்டாமென்பது நுதலி அதனை நீத்தன னென்பது பொருந்தும்போலும்;

"எங்ஙனே அந்தப்பிரமாணம் பிரமேயமென்னு மிரண்டு மூள்ளனவோ அங்ஙனே இவைகளும், பிரமாதாவும், பிரமிதியும் ஆகிய நான்கும் அவசியமிருத்தல் வேண்டும். இருந்தக்கால் அத்வைத ஹாநி (= அத்வைதக்கேடு) எய்தும்: அல்லது பிரமாணமில்லாது போம்." என்னும் பதப்பொருள்பயக்கும்—

யதை₂தத₂ஸ்யம்தத்₂ அத₂ஷ்யஸ்விஷ்டிதி₄ ।
ஸதை₂தத₂ஹாநிரேவம்ஸ்யாத் நிஷ்ப்ரமாணகதாப்யதா ।)

"யத்ரைததுபயம்தத்ர சதுஷ்டயமபேக்ஷிதம் ।
அத்வைதஹாநிரேவம்ஸ்யாந் நிஷ்ப்ரமாணகதாப்யதா ॥"

என்னு மிருகேந்த்ராகமச் சுலோகத்துழை அத்வைதத்தை ஒன்றெனும் பொரு ளில்வைத் தோதியதும் பெறப்படுகின்றதே. ஆண்டுப் 'பிரமாணம் = அறிவுக்குக் கருவி, பிரமேயம் = அறியப்படும் விடயம், பிரமாதா = அறிகிறவன், பிரமிதி = அறிவு' எனப் பொருள்கொள்ளுமாறு உரையும் வரையப்பட்டுளதால்.

"அறிவுடைப்பொரு ளிரண்டெனற்கும் அவ்விரண்டும் அனுதியே கலந்துள வெனற்கும் விசார மியையுமாயினுந் தகரோபாசனை வழியே யுண்டாமொரு மோன சுவானுபவம், ஏகான்மானந்தமா யிருத்தலின் ஒன்றென்பதும் பெறப்படுமாற்றுனே அநவஸ்தை (= முடிவு பேறின்மை) ஆய பல தருக்கங்களுந் தலைப்படல்கூடும், அவையொழித் தனுபவத்திற் றலைப்பட்டிருத்தல் வேண்டும்."

என்பதனையே யிறைவனது மோனமுத்திரை யுணர்த்துமெனத் துணிதலை கல்ல முடிபென யாங்கோடும். அளியுளாய்! அனுதியாயுள்ள இரண்டு பொருள்களின் கலப்பினை யுணர்த்த வுளதே 'அத்வைதம்' என்னுமொரு நிச்சயமானது சரியை கிரியை யோகமென்னு மூன்றற்குமுரிய பதமுத்தியந்தம் பொருந்தி நிற்றல் போலச் சுவானுபவ ஞான பரமுத்தியிலு நிற்குமெனற்கு ஏகானந்த ஞானிகண்மொழிக ளிடங் கொடா; மண்டலப்ராஹ்மணோபநிஷத்தில் வழங்கப்படு (ஸுரேஶ்வராசார்யதம்) சுத்தாத் வைதம் அனுபவசம்பந்தவளவிற் பொருந்தலாம். போந்த திருவலங்கற்றிரட்டின் உ-ஆங் கண்டத்தில்—

"இருபொரு ளொருபொரு ளெனவே
பிரிவினே பேசுஉ ரெவரும்
அருணிலே யத்துவி தமெனத்
தெரியனு பவமிலர் சேயே."

எனவரு செய்யுளும் இவ்வளவிற் பொருந்தவே கூறப்பட்டுளது; இனைய பிறவு மன்ன.

(க) சுவானுபூதி நீத்துத் தன்னையே பெரிய தெய்வமாகக் கூறிக்கொள்ளும் ஏகவாத மிழிந்ததாம்.

(உ) உருவங் கருதுபு ஆண்டானடிமையாகக் கூறிக்கொள்ளுந் துவைதஞ் சிறந்ததாம்.

(ஊ) இதினுஞ் சிறந்தது ஏகானந்தமேயுங்காறும் வியாபக வியாப்பியங்களாக விரவியுள்ளவென்னும் பொருளில்வைத் தோதப்படுஉம் அத்துவைதமாம். இதனருமை கருதியன்றே போந்த காசியாத்திரையில்—

"எத்தனே சாத்திரத்தை யெத்தனேகா லோர்ந்தாலும்
அத்துவிதங் காண்ட லரிது பராஞ்சோதி." [சசுஙு.]

என்பதனுஉங் கிளத்தப்பட்டுளது.

(ஙு) இந்த அத்துவைதத்தினுஞ் சிறந்தது, விசாரணை என்ற முடிவுக்குமியையுற வந்துவிடாதென மோனத்தினிறுத்து முடிவாம். இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம்.

இங்கு விகழ்த்தப்பட்ட நான்கினுள்ளுஞ் சிறந்த முத்திறமுமே குறிப்பாக வறியக்கிடப்பன. இவ்வண்ண மறியினும் முதிர்ந்த சுவானுபவ முடையார்தம் பூரணநிட்டையில் யாதுகண்டனரோ அதனையே சாக்கிரப்பிரபஞ்சத்துங் கண்டுவப்பர்; அங்ஙனம் பிரபஞ்சமின்று; ஆகலின், அந்நிட்டை அவாம் பெற்றியினர் யாண்டும் திருவிகார சிதாகாசமொன்றே யுளதென நிச்சயித்து அவ்வித பாவனையினிற்றல் கடப் பாடாகும். இது, திருத்தல தரிசன காலங்களிற் பாடிய கட்டளைக்கலித்துறைகளுள்—

"நாலாத்தர் பாசமெய் யென்பது கொண்டிந்த நோயுலகை
மேலாத்த முண்ணினே வோர்பரி பூரண மெய்யுணர்வு
சாலாத்த னேக்குட் கிடப்பரே யெங்குஞ் சதாசிவமாம்
வேலாத்த னென்றுள்ளு வோர்ஞான வீட்டின்ப மேவுவரே."

எனவரு தூக்கினுங் காண்க; நாரதபரிவ்ராஜகோபநிஷத்—

(ஸ்வரூபாநு ஸந்தாநம்சூர்வம் ஸர்வமந்ய
புத்யாஸ்வம்மிந்நேவ முக்தோபவதி)

"யாவும் அன்னியமென்ப தொழித்துச் சொரூபானுசந்தான முஞற்றிக் கொண்டு தன்கண்ணேயே முத்தியடைகின்றனன்." என் றிறுதியுபதேசத்தோத தினும், அதர்வசிரோபநிஷத்—

(வவெடுவோவேசேமொவெடி
வவஷவடூறுவெடி
ஸர்வேச மாமேவமாம்யோவேத
ஸைர்வாக் வேத)

"(உருத்திரப்பெயரினைஙிய) என்னே யெல்லாமாக வறிபவ னெவனே அவன் எல்லா மறிகிருன்." என் றுருத்திரவாக்கியமா யியம்பலினும், ஸ்ரீமத் - அருணகிரிநாத வள்ளலார் தமிழ்வேதம்—

"ஐந்து பூதமு மாறு சமயமு மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான விதிகளும் — வெகுரூப
அண்ட ராதிச ராச ரமுமுயர் புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு — வெயில்காலுஞ்
சந்த்ர சூரியர் தாரு மசனபயும் விந்து நாதமு மேது வடிவுமொர்
தன்சொ ரூபம தாகி நிகழ்வது — சிவயோகம்"

என்று கூறலினுங் காண்க. திருப்பாட்டில் "எங்குமொரு தீர்வையாயுள்ள முடிவே" என வருதலு மிம்முடிபி லுறுதலோர்க. இங்குச் சொற்ற பாவனே, அருவ மன மார்ந்தார்க்கே அருளாலணைந் தருகலம் பயக்கும். முற்போந்த வெடுத்துக் காட்டுக் களுட் "சும்மாவிரு சொல்லற" என்பதூஉம், "வாதமுஞ் சமயபேதமுங் கடந்த மனோலயம்" என்பதூஉம் ஒரு பொருளவே. இங்ஙனம், "அம்மா பொருளொன்று மறிந்திலனே" என்பது—யாண்டும் பரசொரூபமே காணப்படுகின்றதே, இஃதாச்சரி யம் என்னும் பொருளையும், "எதுமொன் றறியேன் யாதும் நின்செயலே இறைவனே வகராயகனே" என்பது—இறைவனே! ஒன்முகவுள்ள தலைவனே! இவ்வனுபவத்தில் எதையு நீயாகவே காண்கின்றேனே; (தலைமைத் தன்மையால்) எஃதும் நின்செயலாக விருக்கின்றதே என்னும் பொருளையும் பயக்குமாற்முனே இரண்டு மொருபொருள வென்க.

மூன்தைகான் = மூன்கான்; மூந்து என்ற இடைச்சொல்லின் மீது ஐகாரச் சாரியை புணர்ந் துளது.

அணங்கு = தெய்வம்.

"மூன்று னொருகூறு" என்பதனோடு நின்று உம்மை கூட்டுக.

இயமானன் = சிவன்.

உண்டென்பதனைத் தனித்தனி கூட்டுக.

உந்துதல் = ஏறுதல்.

காத்திகர்கள்—ர், கள் - விகுதிமேல் விகுதி.

ஓவாத - எதிர்மறைப் பெயரெச்சம்; ஓவு - பகுதி. (அ)

நூலெனும் பெயர்கொண்ட முறைகள்பல வுளுநன்
னுவற்சிகொண் முதனூல்களா
நுவல்சைவ தந்திரமு மறையுமே பிரதான
நூல்களா மறையினுட்பஞ்
சாலவெளி யாமாறு சாற்றுபிர சன்னமே
சைவசித் தாந்தமாகுஞ்
சற்சனர்க ளிதையொப்பி யுய்வதற் கைந்துவய
தாகும்வரை மூரிமூங்கை
போலவாய் பேசா திருந்துளோ னுன்னருட்
பொலிவினல் வாய்மலர்ந்தே
புகன்றசெந் தூர்க்கந்தர் கலிவெண் டிருச்செயுட்
பொருளாக மாந்தமுடிவின்
சீலமல் லாதுபிற ரத்துவித மன்றெனத்
திகழல்கிழ மைக்கரியரோ
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 9

நூலென்னும் பெயரினைக்கொண்ட புத்தகங்கள் பலவற்றுள்ளு நல்ல சொற்களைக் கொண்ட முதனூல்களாக மொழியப்படுகின்ற வேதமுஞ் சைவாகமமுமே பிரதான சாத்திரங்களாகும். வேதத்தினது ஞானகாண்டத்தி னுட்பப்பொருள்க ணன்கு வெளிப்படுமாறு கூறுகின்ற தெளிவே சைவசித்தாந்தமாம். இத்திறத்தவிதனை நல்லார் யாவருமொப்பி யவ்வழியினின்று வாழ்வதற்கு ஐயாட்டைப் பிராயங்காறும் வலிய மூமைப்பிள்ளைபோல வாய்பேசாதிருந்த காசிக் குமரகுருபரசுவாமிகள் உனது திருவருட்பொலிவினன் மலர்போன்ற தமது திருவாயைத்திறந்து பாடிய திருச்செந் தூர்க் கந்தர்கலிவெண்பாவின் பொருளானது ஆகமாந்த முடிப்பின் மங்களமே யல்லாது கடவுளுமே யென்னும் அன்னியருடைய அத்துவைதவழி யன்றென விளங் கிக்கொண் டிருத்தலுக் தக்கசான்றே.

ஈங்கெடுத் தோதப்பட்ட இருபெருநூல்களின் அந்தமாம் ஞானப்பகுதிகள் தத்துவத்தைப்பற்றிக் கூறுவனவாதலின் அவைகளே 'முதனூல்' என இந்நூலாசிரி யரா லென்று மேன்றுகொள்ளப்படுவன வென்க. இது பற்றி, முதற்பத்தின் முதற் றிருப்பாட்டிற் றனே "சுருதியின் றிறமான கருமாதி மூன்றினும், சைவதந்த்ரஞ் சொன்மிக்க சரியாதி நான்கினும், மெய்ஞ்ஞான வதரொன்றுமே யேழையேன் புந்திக்கியைந்தது" என்று கூறினமைகாண்க. தகாலயரகசிய வுரைக்கண் நூலாசிரியர துரைப்பாயிரம் எக்கியாயம் பற்றி யெழுந்ததோ அஃதுமிங்குக் கருதிக்கொளத் தக்கதே. "முதனூல்களா நுவல் சைவதந்திரமு மறையுமே பிரதான நூல்களாம்" என்றும்,

"மறையினுட்பஞ் சாலவெளியாமாறு சாற்று பிரசன்னமே சைவசித்தாந்த மாகும்" என்றுங் கூறியமுடிபு—'முதனூலான வேதப்பொருண் முழுதுமே ஆகமமாக வருளிச் செய்யப்பட்ட வுண்மையாம்' என்னும் பொருள் பயக்கத்தக்க—

"முதலாகும் வேத முழுதா கமமாகப்
பதியான வீசன் பகர்ந்த திரண்டும்"

என்னுந் திருமந்திரமொழிகளினும் பெறப்படும். "தந்த்ரம்" என்னும் வடகிளவி அடைந்தவரைக் காப்பது, பொருளைவிரித்துக் கூறுவதென்னு மருத்தங்கள் பயக்குமென்று காமிகாகமங் கழறுகின்றமையிற் சைவாகமமே "சைவ தந்திரம்" எனப்பட்டதென்க. இங்ஙனம், சூத்திரமும் பாடியமும்போல வேதாந்தமுஞ் சைவ சித்தாந்தமு முளவென்பது பெறப்படுதலின், அவ்விரண்டும் முறையே பொதுவென வுஞ் சிறப்பெனவும் புகலப்படு மென்பதை "வேதமொ டாகம மெய்யா மிறைவனூல்—ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன" என்று மேலைத் திருமந்திரமே யுணர்த்துதலி னுணர்க. இச்சிறப்பே "பிரசன்னம்" எனப்பட்டது. இதனை, 'வேதாந்ததரம்' என்பதுமுண்டு. தரம் = சிறப்பு. இது, மேலுரைத்தவாறு விளக்கத்தைக் குறிக்குமன்றி வேதம் அப்பிரமாணம், ஆகமம் பிரமாணமென்பது குறியாது; வேதத்தைக் கீழ்ப் படுத்தவுமாட்டாது. ஈங்கு நிகழ்த்தலான தீர்வைகள், இந்நூற்கண் "கருத்து" "பயின்றறிபவன்" "குருமணி" என்னும் பத்துக்களிலும் விளக்கப்பட்டன. தேர்ச்சி யான முடிவென்னும் பொருள்பயக்கத்தக்க சித்தாந்த மென்பது ஆகமாந்தத்திற் குரியது. வைணவ சித்தாந்த முதலிய பல சித்தாந்தங்க ளிருக்கின்றமையின், "சைவம்" என்னும் விசேடணமொழி சேர்த்துச் "சைவசித்தாந்தம்" எனக் கூறினரென்க. இன்னவாறு உமாபதிசிவாசாரியரு முரைத்தருளினரென்பது "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்" என்னுஞ் சிவப்பிரகாச மாற்றங்களிற் பெறுதும்.

'முதனூல்களா' என்பதில் ஆ - ஆகவென்பதன் விகாரம்.

"ளித்தாந்தம்" என்பது வடசொல். இதன்பொருள் விவரம், சிவசூரியப் பிரகாசத்திற் காணலாம்.

தூல் - உவமையாகுபெயர்.

வாய்மலர்ந்தே—ஏ - அசை. (௬)

ஒன்றெனு மபேதமு மிரண்டெனும் பேதமு
முறாமெளன சாந்தவோய்வை
ஓதொண்மை யத்துவித மோதாது முரணோதி
யுலகைக் கெடுக்கும்வினைஞர்
நன்றுசொல் சித்தாந்த மார்க்கத்தை யுள்ளுக்கு
ணாடிநா நிற்குநிலையின்
நமனாணை செல்லா தெனுந்துணிபு கொண்ணடையை
ஞாலத்தி னன்குநோக்கின்

வென்றியை விரும்பரவ கேதனன் சூழ்ச்சியையும்
வேட்கையையு மொக்குமிந்த
வீணாய புள்ளுவ மகம்புறனு மொத்துள்ள
மெய்யர்கணு முண்டுகொல்லோ
சென்றுவர லில்லெந்தை யருணகிரி யடிகளே
திளைகருணை யின்பநிலையே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 10

இறந்து பிறத்த லில்லாத என் பரமபிதாவே! ஆசிரியர்-அருணகிரிநாத வள்ள லாரின் கடவுளே! பரிபூரண கருணையின்பத்திற் கிருப்பிடமே! அனுபூதி நிலைநீத்து வத்து ஒன்றென்னும் அபேதவாதமும், வத்து இரண்டென்னும் பேதவாதமும் பொருந்தாத மோனசாந்த முடிவை மொழிகின்ற சுத்தாத்துவைத சித்தாந்தத்தைச் சொல்லாமே அதற்கு முரணான வொன்றைச்சொல்லி யுலகத்தைக் கெடுக்குங் கருமமுடையார், சுத்தாத்துவைதஞ் சொல் சித்தாந்த மார்க்கத்தை நாம் (நம்மையடுத்தார்க்குச் சொல்லா மல்) நமதுள்ளுக்குள்ளே நாடி நிற்கின்ற தன்மையினாலே நம்முழை நமனதிகாரஞ் செல்லமாட்டா தென்னுந் துணிவுகொள்ளொரு நடையையும் இங்கே நன்றாக வுணர்ந் தக்கால் (அது), வெற்றிப்பாட்டினை விரும்பிய துரியோதனனுடைய வஞ்சக ஆலோ சனையையும், ஆசையையுமொக்கும். இவ்வீணான வஞ்சகமானது உள்ளும் புறனு மொத்துள்ள உண்மையாளர்பாலுமுண்டோ? [இல்லை; என்றபடி.]

சுத்தம் "ஒண்மை" எனப்பட்டது. இச்சுத்தாத்துவைத சத்தமானது யஜுர் வேத மண்டலப்ராஹ்மணோபநிஷத்தில்—

"தந்மநோவிலயம்யாதி தத்விஷ்ணோபரமம்பதம் ।
தல்லயாச் சுத்தாத்வைதஸித்திஃ । பேதாபாவாத் ।
ஏததேவ பரமதத்வம் ॥"

என்று வருதலின் இது, வேதோக்தமும், இதரரறியாவோரிரகசியமுமா யிருந்த பிரமாணமேயாயிற்று. பொருள்:—"அம்மனோலயம் விட்டுணுவின் பரமபத மாம். அப்பரமபத லயத்தினாற் 'சுத்தாத்வைதஸித்தி'; பேதமின்மையால். அதுவே பரமதத்துவம்" எனவாம். (ஹெதாஹாவாசி - பேதாபாவாத் =) பேதமின்மையால் என்றமையின் (ஶுஜஃ) சுத்தம் அடைமொழியாம். இஃதெங்ஙனங் கொளக்கிடப்ப தென்பது இப்பத்தின் அ-ஆந் திருப்பாட்டுரையிலும், அபேதவாத பேதவாதங்க ளின்னனவென்பது இப்பத்தின் எ-ஆந் திருப்பாட்டுரையிலும் வந்துள. உபநிஷத்தி லுள்ள 'ஏதத்' என்னும்பதம் 'முன்னுரைத்தபடி' என்னும் பொருளும், 'இந்த' என்னும் பொருளுந் தருமாகலின் ஏததேவ - என்பதற்கு 'அதுவே' என்னும்பொரு ளேற்புடைமையிற் கொள்ளப்பட்டது. துரியோதனனுடைய சூழ்ச்சியும், வெற்றி விருப்பமுந் தனாது ஆளுகையிற் பாண்டவர்கட்கு யாதுங் கொடுப்பதில்லையென்னும்

பிடிவாதத்தனவேயாம். அப்பிடிவாதத்திற்கு ஆதாரம் ஒருதிற ஆசையாகலின் அஃதிங்கே "வேட்கை" எனப்பட்டது. அகம்புறனெத்துகிற்றல், வீடுபேற்றருள் இனிதுபெறற் கேதுவா மொரு பருவமாம். அஃன், நிகழ்நிகழ்ச்சி எட்டுவகைத் தென்பது—

"நின்மெய் யடியர்க் கம்மெய் விதிர்ப்பு
நிரைமயிர்ப் புளகஞ் செறிதரு வியர்ப்பு
களிகெழு பாட்ப மொழிகழு வியற்கை
இளருள நடுக்கம் பொழியினீ கடுப்ப
உள்ளுட் குழறி யுயிர்நிலை யுயங்கல்
உணர்த்தத் தன்றனீ யுள்ளித்தீ விரமுறல்
எனுமெண் டிறனு நனிவந் தெழுபோழ்
தீடின் முதுக்குறை விசைத்தே யருளுன்
பெருந்தக வினையிப் பேயேன்
பொருத்துவா னீண்டுப் போற்றுமா றென்னே"

என வருஉங் கந்தரொலியலந்தாதித் தொடர்பிற் கண்டுகொள்க.

"அடுத்து முயன்ருலு மாகுகா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா — தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரக்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா."

என்னு மூதுரைச் செய்யுளி லுறு காலமும் பலனு மிங்கெடுத்துக்கொண்ட பருவத்தின்பாற் படல்வேண்டும். அன்றெனின் முரணும். என்னே? உயர்மரங்கள், கல்வி கேள்வி வாயிலாகத் திருத்தமுறற்குரிய இதயமும் விழியுஞ் செவியு மில்லனவாய் நிற்குமாறு மக்களில்லாது அவையுடையவராய் நடைதருபவரா யிருக்கின்றனராகலின். 'முயன்ருலும்' என்பதற்குப் போலியாகப் பற்றினுலுமென்னும் பொருள் கோடலாம். உறுதியாகப் பற்றுழியன்றே அம் 'மெய்விதிர்ப்பு' முதலிய எண்டிறனுமேய அகம்புற னெத்துகிற்பது. ஈசன், இறத்தல் பிறத்தலில்லாதா னென்பதற் கேற்புடைச் சுருதிப் பிரமாணங்களே இந்நூலே கூறுமாகலின் ஆண்டெடுத்துக்காட்டுவன காட்டி யுரைப்பன வுரைப்பாம். கடவுள்வணக்கத்து நூன் உரையினையுங் கருதுக.

நன்று - நன்மையென்னும் பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்.

"நடையை" என்றதில் உம்மை தொக்கது.

வெற்றியை "வென்றி" என்றது மெலித்தல் விகாரம்.

புறமென்பது "புறன்" எனப் போலியாயிற்று; மகரவீற்றஃறிணைப்பெயராகலின்.

புன்ருவம் = வஞ்சகம்.

எந்தை - அண்மைவினி யாதலின், இயல்பாய் நின்றது. (கo)

ச. பரிபூரணானந்தம்

உததிவளை மண்டலியின் மாவளங் கிளர்சண்பை
யுறையுளி லுதித்துநல்ல
உபநிடத வேதாந்த சித்தாந்த சமரசத்
துண்மையிற் றெனவிளக்கா
மிதமிலற் புதவருட் பாமாலை யாலருகர்
மிடல்வீய வடியர்வாழ
மிகையற்ற வபரசுப் பிரமணிய நிலைநின்றும்
வெளிவந்த பிள்ளையாராய்
முதமல்கு பரசுப்பிர மணியமாய் முழுமைக்கு
மூலமா யுள்ள நின்பால்
முறையிட்ட வெனதுவிண் ணப்பங்க ளிக்கால
முடிவுக்கு வாராவிடின்
பதநம்பு மடியனே னுய்யும்வகை யுண்டோ
பரிந்துதயை செய்தல்கடன்மை
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே 1

பகலும் இரவு மில்லாத நடுவில் (= நிட்டையில்) ஒளிருங் குகப் பிரமமே ! பரிபூரணானந்தமே !

கடல்சூழ்ந்த நிலவுலகிற் பெருவளனெலாம் பிரகாசிக்கின்ற சிகாழிப்பதியின் கண்ணே தோன்றி, நல்ல உபநிடதவேதாந்த சித்தாந்த சமரச ஞானத்தின் உண்மையானது இத்தன்மைத்தெனக் குறைவில்லா அற்புத வருட்பா மாலைகளால் விளக்கி, சமணர்களுடைய ஆற்றலழியவும் அடியவர்கள் வாழவுங் குற்றமற்ற அபர சுப்பிரமணிய நிலையினின்றும் வெளிப்பட்ட திருஞான சம்பந்தப் பிள்ளையாராயும் ; ஆனந்த சுவரூபஞ் சிறந்து விளங்காநின்ற பர சுப்பிரமணிய மூர்த்தியாயும் ; (அமூர்த்த நிலையில்) யாவற்றுக்குங் காரணக் கடவுளாயு மிருக்கின்ற உன்பக்கலின் முறையிடப் பட்ட எனது விண்ணப்பங்கள் இக்கால முடிவுக்கு வராமற் போமாயின் உன்னுடைய திருவடிகளையே நம்பிய அடியவனுகிய யான் வாழ்க்கைப்படுமாறு மூளதாமோ? இரக்கமுற்றுக் கிருபைபுரியுங் காரியம் உன் கடன்மையே.

பகலுமிரவுமில்லா கடுகிலே கிட்டையென்னுஞ் சுத்தாவத்தையி லொளிர்வது பரம்பொருளாகலிற் "பகல் கிசா இல் கடுவில் அவிர்குகப் பிரமம்" என்று பகர்ந்தன ரென்க. இது, கந்தரலங்காரத்தில் – "இராப்பக லற்றவிடத்தே யிருக்கை யெளி தல்லவே" எனவும், திருவாசகத்தில் — "எஞ்ஞானனென்ப தறியேன்பக லிரவாவது மறியேன்" எனவும் வருதல் கொண்டு மறியப்படு மோருண்மையென்க. (கிஸா) கிசா = இரவு. பர சுப்பிரமணிய மூர்த்தியின் றிருவுருவத்தைப் பெற்றவர்களே அபர சுப்பிரமணிய மூர்த்திகள். அவர்களனேக ரென்பதை,

"ஓரெழு கோடி யைக்கர் கோடி வயிரவ ரென்பது கோடி
சீர்கெழு மெண்டோ ணீவிகண் மயின்மேற் செல்லும்வே லுழவரெண் கோடி
ஏர்பெறு மியக்க ரொன்றரைக் கோடி யிசைகவில் இன்னரர் கோடி
கூர்துதிப் பிறைப்பற் புயங்கமோர் மூன்று கோடிதா னவரிரு கோடி"

என்னும் ஸ்காந்த மஹாபுராணத்தின் காசிகாண்டத்து கூஉ - ஆம் அத்தியாயத் தூக்கில் "மயில்மேற் செல்லும் வேலுழவர் எண்கோடி" என வருமொழிகளாலு முணர்க. கூ - ஆக் திருமுறையில் "மதியார் கச்சி — கதியே கம்பம் — விதியா லேத்தப் — பதியா வாரே." எனவும், உ - ஆக் திருமுறையிற் "படுபொரு ளாறு காலு முளதாக வைத்த பதியான ஞான முனிவன்" எனவு மிகழ்கின்ற திருவாக்குக்களின் படி பதித்தன்மையினையுற்ற திருஞானசம்பந்த சுவாமிகள், அபர சுப்பிரமணிய மூர்த்தி களுட் சிவசாயுச்சியத்தை அவாவுங் காரணத்தால் அச் சுப்பிரமணிய சாரூப்பியம் உறுதிப்படா நிலையினின்று கல்லார் ஆக்கத்தின்பொருட்டும், தியார் ஆக்க நீக்கத்தின் பொருட்டும் வெளிப்பட்டவ ரென்பது —

"கனிலுங் கனவிலு நம்பா வுன்னை
மனதிலும் வழிபடன் மறவே னம்மான்" எனவும்,

"சிந்தை யேபுகுந் தான்றிரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ" எனவும்,

"பெருகெ றியபரி மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
யொருகெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருகெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே" எனவும்,

"துறக்கு மாசொ லப்படாய் துருத்தி யாய்நி ருந்தடி
மறக்கு மாறி லாதவென்னை மையல் செய்திம் மண்ணின்மேற்
பிறக்கு மாறு காட்டி னாய்நி னிப்படு முடம்புவிட்
டிறக்கு மாறு காட்டினாய்க் கிழுக்கு கின்ற தென்னையே" எனவும்,

"'பால னுக்கருள் செய்தவெம் மடிகள் பாம்புர நன்னக ராரே'
'பண்டு தான்செய்த பாவங்க டீர்ப்பார் பாம்புர நன்னக ராரே'" எனவும்,

"ஓதி நாளு முன்னை யேத்து மென்னை வினையவலம்
வாதி யாமே வந்து கல்காய் வலிவல மேயவனே" எனவும்,

"தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையு
மஞ்ச லென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வஞ்சுடர்
பஞ்ச வன்றென்னன் பாண்டியற் காகவே" எனவும்,

"கொங்கரர் கொன்றை சூடி யெனுள்ளங் குளிர்வித்தார்
தங்கா தலியுந் தாமும் வாழு மூர்போலும்
பைங்கரன் முல்லி பல்லரும் பினும் பாருரே" எனவும்,

"கக்கிருக் நீரின்று கல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே"

எனவும் வரூஉம் அச்சுவாமிகளின் திருவாக்குக்களான் மதுகையுறுதல் காண்க. இன்னன பல்ல. ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்து சூஉ - ஆம் லீலையில் — பிரமபுரத்துச் 'சிவபாதாப்ஜஹ்ருதயர்' என்னும் பெயரிய ஒரு வேதி யனுர்க்குச் 'சரஜங்மர்' என்பார் கல்லார் ஆக்கத்தின் பொருட்டுத் தீயார் ஆக்கமின்மையின் பொருட்டுஞ் சிவபெருமானது ஆணையினைப் புத்திரத்தன்மையினை யடைந்தனர் என்னும்பொருளுற வரூஉஞ் சுலோகங்களும், இவைபிடித்துப் "பண்பறு பீலியோடு வெங்கழு வேறவோது பண்டித ஞானநீறு தருவோனே" எனத் திருப்புகழிற் கூறப்பட்டுளதுங் கூறிப் போந்த நியாயத்தையே கொடுக்குமன்றி வேறுகொடா வென்பதை எஞ்ஞான்றை கம்பு கின்றது. என்னை? சரிதைத் தலைவனுர் திருவாக்கு மேலே காட்டப்பட்டவாறிருத்தலின்; அவர் தம்மை முருகக்கடவுளென்று கூறிக்கொண்ட செய்தி அவ்வாக்குக்களில் யாண்டும் பெறப்பட வில்லையாகலின்; "பானல் வாயொரு பால னீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்" என்று பாடியருளிய விடத்தே தாம் முருகக்கடவுளாயிருப்பின் அவ்விவரங்கூற லவசியமே, அது கூறினுரல்லராகலின். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமென்னுஞ் சீவாவத்தை ஐந்தனுட் சொப்பனமாகிய கனவு சம்பந்த சுவாமிகள்பாலு மிருந்தென்பதை அவர்து திருவாக்கும், புராணமுங் காட்டி நிற்றலு மிங்குணரக் கிடக்கின்றது. வேறு கூறுவார் கூறிக்கொள்க; நியாயங் கிடைப்பின். "சரஜங்மன்" என்பது சுப்பிரமணியப் பெருமானுடைய திருப்பெயர் களுளொன்று. பிறப்பு, இறப்பு, அறியாமை, அவதி யென்பவற் றொன்றுமில்லாப் பெருந்தகைப் பதிப்பொருள் பரசுப்பிரமணியமாகலின் அப்பொருட்டன்மையினைப் பல்லாற்றானு மெடுத்தெடுத் நியம்ப வந்த நித்திருப்பா வென்னு நூலாகலின் அஃதிங் ஙனம் விரிவுறக் கூறப்படுவ தில்லையாயிற்று. கடவுள் வணக்கத்து ங-ன் உரையுங் கருதுக. வைணவ ஆழ்வார்கள் செய்யுள் நாலாயிரத்துள் ஓரற்புதமேனும் விளைத்த செய்யுளுள தென்பதற்காய செய்தி, அவற்றில் யாண்டும் வாராமை நோக்கியும்; "சண்பையுறையுளி லுதித்து" என்றபடி சோழிப்பதியிற் பிராமண குலோத்தமராய சிவபாத இருதய ருக்கும் அவருடைய வாழ்க்கைத் துணேவியாய பகவதியாருக்கும் பிள்ளையாய்த் தோன்றி, ங - வயதிலே உமாதேவியாரது திருமுகைப்பய சருந்தி, அஞ்ஞான்றே விண்ணும் மண்ணும் வியப்புறத் "தோடுடைய செவியன்" என்றற்றொடக்கத்துப் பிரமபுரத் திருப்பதிகம்பாடி., திருஞான சம்பந்தமூர்த்தி யென்னுந் திருப்பெயர் விளங்க

வெழுத்தருளியிருந்த அச்சுவாமிகள்—" மடையில்வாளை " என்றற்றொடக்கத்துத் திருக்கோலக்காத் திருப்பதிகம் பாடியருளும்போது திருவைங்தெழுத்தும் வரையப்பட்ட சீர்த்த பொற்றூளத்தினைத் திருவருளளிக்கப் பெற்று, மேல், பலதலம்புக்குப் பல திருப்பதிகங்கள் பாடியருளித் திருநெல்வாயிலாத்துறை யீசனளித்த முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச்சின்ன மென்பனவற்றையேற்று, அச்சிவிகையூர்ந்து போந்து, " எந்தையீச னெம்பெருமான் " என்றற்றொடக்கத்துத் திருப்பதிகம் பாடிச் சிகாழியை மீளவுமெய்தி, உபநயன வயதில் உபவீததாரணஞ் செய்யப்பெற்று, வேதமந்திரங்கட்கெல்லாம் வித்துத் திருவைங்தெழுத்தே யென்று வேதியரும் பிறருமுணருமாறு " துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும் " என்றற்றொடக்கத்துத் திருப்பதிகம் பாடியருளிய பின்றைப் பலதலம்புக்குப் பலபதிகம் பாடிக்கொண்டு காவிரியின் வடகரையே சென்று கொல்லிமழவ னென்னும் ஓரரையன் மகளுக்குற்ற முயலகனென்னும் ஒருதிற வலிநோயைத் " துணிவளர்திங்கள் " என்றற்றொடக்கத்துத் திருப்பாச்சிலாச்சிராமத் திருப்பதிகம்பாடித் தீர்த்தருளிய செய்தி அப்பதிகத்திற் " செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச் சிதை செய்வதோ விவர்சீரே " என வருதலேக்கியும்; மேல், திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்கட்குண்டாய களிர்ச்சுரப்பிணியை " அவ்வினைக் கிவ்வினை " என்றற்றொடக்கத்துத் திருநீலகண்டத் திருப்பதிகம்பாடித் தீர்த்தருளிய செய்தி அப்பதிகத்திலே " நிக்குழித்தீவினை தீண்டப்பெரு திருநீலகண்டம் " எனவருதலேக்கியும்; மேல், வெயில்வெப்பத்தினைத் தணித்துக் கொண்டு வருமாறு திருப்பட்டீச்சரமென்னுந்தலத்து ஈசனருளித்த திதுவென ஒருபூதங் கொணர்ந்து பிடித்த முத்துப்பந்தரைப் பெறீஇப் போந்து திருப்பதிகம்பாடித் திருவாவடுதுறையையடைந்த ஞான்று தந்தை - சிவபாதவிருதயர் சிகாழியில் யாகஞ்செய் செலவிற்கு அவாம் பொருளை இஞ்ஞான்று நீ மீக்தருளாயேல் அஃதனது இன்னருளாங்கொலோ வென்னுங் கருத்தானே " இடரினுந்தளரினும் " என்றற்றொடக்கத்துத் திருப்பதிகம் பாடிப் பொன்முப் பொற்கிழியொன்று பெற்றனரென்னுஞ் செய்தி அப்பதிகத்தில் " இதுவோ வெமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்—அதுவோவுன தின்னருளாவடு துறையாளனே " எனவருதலேக்கியும்; மேல், திருமருகலென்னுந் தலத்திற் பாம்பு கறித்தவனை ஆயிர்துறந்த வொருவணிகனை நினைந்து அழுது அழுது சிவனை நினைந்து தொழுது தொழுது உயிர்வாடு மொரு பெண்மணியின் றுயரொழிப்பான் " சடையா யெனுமால் " என்றற் றொடக்கத்துத் திருப்பதிகம்பாடி அவனை யுயிர்ப்பித்தருளின னென்னுஞ் செய்தி அங்ஙனமே " உடையாய் தகுமோ விவளுண் மெலிவே " எனவருதலேக்கியும்; மேல், குறுவிலிக்காலத்தில் அடியார்கட் கன்னமளிப்பான் நிருவீழி மிழலைச் சிவாலயத்தின் கிழக்கு வாயிற்படிக்கட் சிவபிரானல்கும் படிக்காசு வாசி தீருமாறு பாடியருளிய செய்தி " வாசி தீரவே—காசு நல்குவீர் " என்றற் றொடக்கத்துத் திருப்பதிகத்தில் வருதலேக்கியும்; மேல், *வேததெய்வம் திருமறைக்காட்டிற்

*வேததெய்வம்=வேதத்திற்கு அதிதெய்வம். கான்கு வேதங்களு கான்கு காய்களாக வந்தன; திரிபுரதகனன் இரதத்திற்குக் குதிரைகளாகப் பூட்டப்பட்டனவென்னும் வரலாறுகளாலும் இஃதுணரப்படும்.

சிவாராதனைசெய்து யானையைக் கட்டியிழுத்தன் முதலிய பன்முயற்சிகளை யுஞற்று ஞான்றுந் திறவாதிருக்குமாறு அதனாலடைக்கப்பட்ட திருக்கதவத்தைத் திருநாவுக்கரசுக டிறக்கும்படி பாடியருளிய பின்னர் அதனையடைக்கவுந் திறக்கவும் பாடியருளிய செய்தி "சதுரம் மறைதான்" என்றற்றொடக்கத்துப் பதிகத்திற் "கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே" எனவருதனோக்கியும்; மேல், திருமறைக்காட்டி லிருந்தவாறே மதுரையம்பதி புக்குத் தாம் வதிதரு திருமடத்திற் சமணசமயத்துப் பாண்டியதேசாதி பதியினது சம்மதத்தின் மீது சமணர்களா னிரவிற் கொளுவப்பட்ட தீயினைத் தம்முடைய கண்கள் காண்டலும் இது, சிவனடியவரை வருத்தாமே போந்து அப் பாண்டியனையே வருத்துகவெனப் பாடியருளிய செய்தி "செய்யனே திருவாலவாய்" என்றற்றொடக்கத்துப் பதிகத்திலே "துட்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர் — பட்டி மன்றென்னன் பாண்டியற்காகவே" என வருதனோக்கியும்; அவ்வண்ணமே வருத்து மாறு பாண்டியற்குற்ற அவ்வெப்புநோயினைச் சமணதாபதர்கள் தீர்க்குதுமெனத் தொடுத்த கக்ஷியிற் றீராது மிக்குற்ற அந்நோயினை "மந்திர மாவது நீறு" என்றற் றொடக்கத்துத் திருப்பதிகம் பாடியருளித் திருநீறிட்டுத் தீர்த்தசெய்தி அப்பதிகத்தே "தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச் — சாற்றிய பாடல்கள்" எனவருதனோக்கியும்; மேல், அப்பாண்டியனாகிய அரசன் முன்னிலைக்கட் சமணர் சைவரென்னு மிருதிறத்தவருமாகிய யாங்கள் இனித் தத்தஞ் சமயக்கருத்து வரையப் பட்ட ஏடுகளை யெரியிலிட்டுப் பழுதுபடாதிருக்க வெடுப்பதே வெற்றியென்ற அன்னோர் வாதத்திலே தீயிலிடுதற் குதயமான இத் திருநள்ளாற்றுப்பதிகப் பாட்டுக்கள் தீயிலிடிற் பழுதுபடா வென்னுந் துணிபுகொண்டு "தளிரிள வளரொளி" என்றற் றொடக்கத்துத் திருப்பதிகம் பாடியருளிய செய்தி அப்பதிகத்துழை "நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே — மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே" என வருதனோக்கியும்; அவ்வாறே தீயி லிடப்பட்டதும், "போகமார்த்த பூண்முலையாள்" என்றற் றொடக்கத்ததுமான அந்நள்ளாற்றுத் திருப்பதிகம் வெந்தொழியா தின்றுமிருத்த னோக்கியும்; மேல், இனித் தத்தஞ் சமயவுண்மை தீட்டப்பட்ட வேடுகளை யோடுகின்ற வைகையாற்றிலிடா வெதிரேறிச் செல்வதையே மெய்ப்பொருளுடைத்தெனக் கோடல் வேண்டுமென்ற அச் சமட்டலைவர் வாதத்தில் "வாழ்க வந்தணர் வானவரானினம் — வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக" என்றற் றொடக்கத்துத் திருப்பதிகத்தைப் பாடித்தீட்டி அந்தயாற்றில் விட்டனரென்னுஞ் செய்தி அப்பதிகத்துழைத் "தெற் றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப் — பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும் பண்பு நோக்கில்" என வருதனோக்கியும்; அங்ஙனம் "வேந்தனுமோங்குக" என்னுந் திருவாக்கெழுந்தமையால் அப்பொழுதே பாண்டிய தேசாதிபதி தனது பண்டையுடற் கூனு நிமிரப்பெறீஇ நின்றசீர் நெடுமாற நாயனாராய பின்றை அவ்வேடு நீரெதிர் சேறல் காண்டலும் அது கரையினை யணையும்பொருட்டும், யாற்றின் வடகரையான அத்தலந் திருவேடகமென்னும்பெய ருறும்பொருட்டும் "வன்னியு மத்தமும்" என்றற் றொடக்கத்துத் திருவேடகத் திருப்பதிகம் பாடியருளிய செய்தி அப்பதிகத்திற் "கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீ — ரேடுசென் றணைதரு

மேடகத் தொருவனே" என வருதலேக்கியும்; திருக்கழுமலத் திருவியமகத்திற் "பரும தின் மதுரைமன் னவையெதிரே பதிகமதெழுதிலே யவையெதிரே — வருகதி யிடை மிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே" என வருதலேக்கியும்; மேல், ஓடக்காரனில்லாம லோடம் யாற்றிற்சென்று கரைசேரும்படி "கொட்டமே கமழும்" என்றற் றொடக்கத்துத் திருப்பதிகம் பாடியருளிய செய்தி அப்பதிகத்திடை "ஓடம் வந்தணை யுங்கொள்ளம் பூதூர் — ஆடல் பேணிய வடிகனே யுள்கச் — செல்லவுந்துக சிந்தை யார்தொழ — கல்கு மாறரு ணம்பனே." என வருதலேக்கியும்; மேல், நுங்கள் சம்பந்த ரென்பாருடைய சின்னங்களே இங்கூதுதல் கூடாதென்று தடைபுரிகின்ற இப் புத்தனதுதலே "புத்தர் சமண்கழுக்கையர் பொய்கொளாச் — சித்தத் தவர்க டெளித்து தேறின — வித்தக நீரணி வார்வி னேப்பகைக் — கத்திர மாவன வஞ்செ ழுத்துமே." என்னும் அத்தச் சம்பந்தரது திருவாக்கின்படி யிடியினு மிற்றுவீழ்க வென்று தேவாரத்திருமுறை தீட்டுவார் கூறுதலும் அவ்வாறே போதிமங்கைப் புத்த சக்தி யென்பான்றலே விழக்கண்ட பின்றைத் திருவோத்தூரை யடைந்த செவ்வி ஒரு சிவனடி யாரது வேண்டுகோளின்படி ஆண்பனேகளேப் "பூத்தேர்ந் தாயன கொண்டு" என்றற் றொடக்கத்துத் திருப்பதிகம்பாடிப் பெண் பனேக ளாக்கியருளிய செய்தி அப்பதிகத்துட் "குரும்பை யாண்பனே யின்குலே யோத்தூர்" என வருதலேக்கியும்; மேல், திரு மயிலேயிற் பெதும்பைப் பருவத்தின்மேலே பாம்பு கறித்தலினுன் மரணமடைந்த பூம்பாவையென்னும் ஒரு வைசியப்பெண்மணியின் எரிந்து மீந்த வெண்புஞ் சாம்பருமே நிறைத்துள்ள வொருகுடத்தினேக் கண்ணுற்று, அருணேக்காற் பூம்பாவாய்! என்று விளித்து, அன்புடனே சிவனடியார்கட் காகாரமிடுதலும் விதிவழாது செயப்படுக் கிருவிழாவைத் தரிசித் தானந்த மடைதலுமே மானுடப்பிறவியின் பயனென்பது சத்தியமாயின் நீ யிவ்வுலகினர்முன் இச்செவ்வி வருவாயென்னுங் கருத்தானே,

"மட்டிட்ட புன்னேயங் கானன் மடமயிலேக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தா
னெட்டிட்ட பண்டி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்."

என்னுந் திருப்பாடலே முதற்கட்கொண்ட திருப்பதிகத்திடைப் 'போதியோ' என்னும் வாக்கியாமிருதம் பத்துமுறை அவ்வென்பினுஞ் சாம்பரினு முறப்பாடிப் பெண்ணுக்கியருளிய பெருஞ்செய்தி காணப்படுதலேக்கியும் "அற்புத வருட்பாமாலே" எனக் கூறவந்த ஆசிரியர்—

இறந்தானெருவனே யுயிர்த்தெழுமாறு செய்த இருந்திருவரு ளற்புதத்தையும், எரிந்து பசையற்ற வென்பையுஞ் சாம்பரையும் முன்னேய பெண்ணுக்கிச் சின்னளின்றிப் பன்னளிருக்க வருளிய பெருந்திருவருட் பேரற்புதத்தையும், அவ்வருளாளர் திருவாக் குக்கள் சீர்த்த தெய்வத்தன்மையின் அதி கோமளமாகிய இளமையிற்குனே நிகழ்ந்தன வென்பதையு நன்கு நுதலியே "மிதமி லற்புதவருட் பாமாலே" என விசேடித் துரைத்தன ரென்க. அவரது வயது அதி கோமளமென்பதை—

"மானி னேர்விழி மாத ராய்வழு திக்கு மாபெருக் தேவிகேள்
பானல் வாயொரு பால னீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலி யாதி யாயவி டங்க ளித்பல வல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன லேன்றிரு வால வாயர ளிற்கவே."

என்னும் அவரது திருவாக்கே திடப்படுத்தும். இது, ஞானசம்பந்தப் பெருமான், பாண்டியதேசாதிபதிக் குற்ற தீப்பிணிதீர்ப்பான் அவரருகிலே யிரத்தினசனத்திலே யெழுந்தருளியிருந்த செவ்வி, சரீரதிடம் படைத்த சமணமுனிக் குழாங்கள் சூழ்ந்து கொண் டழுக்காற்முற் கதிபலபற்றி மதவாதம்புரியக் கழறுங்கால், பாண்டிமாதேவி யாகிய மங்கையர்க்கரசியார் பொருராகிச் சுவாமிகளது திருமேனி அதி கோமளமா யிருப்பதுமன்றித் தனிமையுமாகின்றதேயென்று உட்பரிவுறுங் குறிப்பினை அந்தச் சம்பந்தப்பெருமான் றிருவுள்ளத் துணர்ந்துகொண்டு ஈண்டுத் திருவாலவாய் அரன் கிற்க யான் சமணர்கட் கெளியேனல்லேன்: என்னைப்பாலனென்று நீ அஞ்சவேண்டா வென்று கட்டளையிட்டருளிய திருப்பதிகத்துளது.

இத்தகைய சம்பந்தப் பெருமானைத் திருமங்கையாழ்வா ரென்பார், கல்வியில் வென்று கரத்திருந்த வேலினையும் பறித்துக்கொண்டு சென்றனரென்று வைணவர் கூறுங்கூற்றை மதியுடையார் கொள்ளா ரென்பதையும், கொள்ளொண்ணு தென்ப தற்காரு கியாயமே அந்த ஆழ்வார் செய்யுண்முதலிய வைணவச்சுவடிகளிலு முளதென் பதையும், இருவரு மொருகாலத்தவரல்ல ரென்பதையு நாலாயிரப்பிரபந்தவிசாரம், சைவசமயசரப மென்னு மெற்நூல்களிற் பரக்கக் காணலாம். இன்னுமொரு விசாரணை யானும் இங்கிச்சயம் யாப்புறுத்தப்படும். அது வருமாறு:—

காருடபுராண உத்தரகாண்டமென்னும் பெயரால் (சௌனகாதி மூனிகண சூதசம்வாதமாக) யாக்கப்பட்ட வொருபுத்தகத்தினைச் சார்ந்ததெனவுள்ள வில்வா ரண்யமாஹாத்ம்ய மென்பதிலே அந்த ஆழ்வா ருடைய பிறப்புக்க ளொருசாண்கெனத் தொகைப்படுத்து வகைவழங்கலிற் கர்த்தமப் பிரசாபதியென்னும் பிரமணப்பிறவி யினைப்பற்றி ஈ - அத்தியாயமும், உபரி சரவசுவென்னும் க்ஷத்திரியப்பிறவியினைப்பற்றி உ - அத்தியாயமும், சங்கபாலன் மகனை வைரமேகனென்னும் வைசியப்பிறவியினைப் பற்றி உ - அத்தியாயமும், நீலன்புத்திரரான திருமங்கையாழ்வாரென்னுஞ் சூத்திரப் பிறவியினைப்பற்றி உ - அத்தியாயமும், இந்த ஆழ்வார் பகவானைப் பாக்களாற்றுதித்தல், திருவரங்கமே முதலிய தலங்களிற் றிருப்பணிசெய்தல், பொன்னுலாய பௌத்த விக்கிர கத்தையெடுத்து வெட்டி விலைப்படுத்து அப்பொருள் கொண்டு திருப்பணியயர்தல், முடிவடைதன் முதலியனபற்றி க - அத்தியாயமுமாகப் க0 - அத்தியாயங்கள் காணப் படுகின்றன. அவற்று ளொன்றுழையேனுஞ் சம்பந்தப்பெருமான் செய்தியாக வொன்றுங் கூறப்படவில்லை என்பதாம். இவ்வாற்றான், அந்த ஆழ்வார் சரிதங் கூறுதலிற் பெரிதாயுள்ள இத்தலபுராணேற்பத்திக்குப் பிற்றைஞான்று சைவாசாரிய ரூடணமாக வைணவர்களால் உண்டுபண்ணப்பட்ட சுவடியே ஆழ்வார் சரிதை

யென்பதூஉம், அப்படி யுண்டுபண்ணற்குச் சம்பந்தமூர்த்திக ளருளிய திருப்பதிகங்க டோறும் வைணவ கண்டன மிருத்தலே முக்கியகாரண மாகலாமென்பதூஉம் உணரு முணர்வுடையார்க்கு எமது விசார முடிபு கறிய செவியறிவுறூஉ ஆமன்றே. போந்த வில்வாரணியம், இக்காலத்தே இலக்குமிபுரியென்னுங் திருநகரியென வழங்கப்படுகின்ற தென்ப. வரம்பின்றி யெவரெவ ரெவ்வாறு கூறிக்கொள்வரோ அக் கூற்றுக்கட்கியைய ஆக்கியோர் பெயர்களமைத்துச் சேர்க்கப்பட்ட சில செய்யுள்களையு மூட்கொண்டுள்ள தனிப்பாடற்றிரட் டென்பதனுழை —

"வருக்கைகறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
வழிக்கரையின் குழிக்கரையின் மதகி லோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
பிள்ளையார் சம்பக்தப் பெருமாள் கேண்மோ
அருட்குலவு மயிலிதனி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையும்பெண் ணாக்கலுமக் கியல்பு தானே."

என்னுஞ் செய்யுள் திருமங்கையாழ்வார் பாடியதென்றும்,

"கடியுண்ட நெடுவானே காவிற் றப்பிக்
கபத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்ட வுயர்தெங்கின் பழத்தாற் பூகம்
அலியுண்டு குலைசிதறு மாலி காடா
படியுண்ட பெருமானைப் பரிந்து பாடிப்
பரிசுபெற்ற பெருமானே தமியேன் பெற்ற
கொடியொன்று நின்பவளிக் கெதிரே சென்று
கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவந் தாளே."

என்னுஞ்செய்யுள் திருஞானசம்பந்தர் பாடியதென்றுக் தீட்டி வைக்கப் பட்டமை யாங்ஙன மணம்பெறும்! ஆழ்வார் சரிதைக்கு இவைகளும் ஆதாரமென ஆழ்வாராசாரியர்கள்வைபவ மெனும்புத்தகத்தி லெடுத்துக் காட்டப்பட்ட இச்செய்யுள் களுள் வெற்றியுந் தோல்வியுங் காண்பதுதான் எவ்வாற்றூன்! இதுகிடக்க, சம்பந்தப் பிள்ளையார் முதலிய சைவாசாரியர்களுடைய திருவாக்குக்கள் அதியற்புதச் செய்திகளை யுட்கொண்டிருத்தல் போல எத்த ஆழ்வார்பாட்டுங் கொண்டிருக்கவில்லை யென்பதூ உம், அருளாளராகிய அத்தச் சம்பந்தப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதி கங்களின் கo - ஆம் பாடல்களோடுஞ் சைவ விரோதிகளான சமணர் பௌத்தரென்பார் கொள்கைகள் இழிவின்பாற் படுத்தப்பட்ட வாறே கூ - ஆம் பாடல்களோடும் —

(யத்வாஹாஹொரா ஹஇம்ஹ ரூமயூதெவி ஷ்ணாயுநா
வாசுவாஹ்ரு தயஃஹொமாத உவாஹூதவஹொமாஸழி।
யத்பாநாம்போருஹத்வந்த்வம் ம்ருக்யதேவிஷ்ணுநாதுநா
ஸ்துத்வாஸ்துத்யம்மஹேசாந மவாங்மாநஸகோசரம் ।)

"எவருடைய பாதாரவிந்தங்கள் விட்டுணுவினுற் றேடப்பட்டனவோ அவ் விட்டுணுவோடு தேவர்கள் குழுமிநின்று வாக்குக்கும் மனத்துக்கு மெட்டாதவருந் துதிக்கத்தக்கவருமான மகேசானரைத் துதித்து வணங்கினர்கள்" என்னும் வேத வாக்கிய பரிபாலனமாய் வைணவம், ஐணிய கருப்பமென்னும் இருசமயக்கடவுளரும் அறியாமையின்பாற் படுத்தப்பட்டுச் சிவபரத்துவமே சிறந்து கமழுகிருக்குஞ் செய்தி யானது —

"அண்ணலாகா வண்ணவிழ லாரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்ளினையென் றெள்க வவித்திருவர்
கண்ணலாகா நம்பெருமான்"

என எரியிலிட்டுக் கரியாதெடுக்கப்பட்ட பதிகத்துள்ளும்,

"நான்முக னரியறி வரியகள் ளாறர்தம் நாமமே"

என்று 'இப் பதிகப்பாடல்கள் எரியிலிடப்படுமாயிற் பழுதுபடா: இது சத்தியம்' என்னுந் துணிபுகொண்டு பாடிய பதிகத்துள்ளும் வருதலின், அவர் திருவாக்கே, சத்தியமென்பதூஉம் ஈண்டறிந்துகோடல் வேண்டும். என்னை? சமண ரேடு கரிந்தொழிந்தவாறே யாகாது அஃதிருக்குள தாகலின்.

'சமரசத்துண்மையிற்றென மிதமிலற்புதவருட் பாமாலையால் விளக்கா' எனவியையும். "விளக்கா" என்றதில் ஆ - இறந்தகால வினையெச்சம்.

அடியர் = அடிமையென்னும் பண்மினடியாப் பிறந்த பலர்பாற்பெயர்.

"அடியனேன்" என்றதில் அடியன் - ஆண்பாற்பெயர்; ஏன் - தன்மை யொருமை விகுதி.

(உஃஏ) முத் - என்னும் வடசொல் "முதம்" எனப்பட்டது; ஆனந்தமென்னும்பொரு ளுடைத்து.

பதல் நிசா - உம்மைத்தொகை.

இல் + நடு = இன்னடு; இல் - ஆகாரச் சாரியையோடு ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம்.

ஆரும்வேற்றுமையில் அஃறிணை யொருமையிலுறும் அது வென்னு முருபை "விண்ணப் பங்கள்" என்னும் பன்மை யேற்றவாறு எனதுகைகள், கினதடியரென்பன புரையும். (க)

புரிவுநனி தூண்டவே பாடெனது பாடலின்
பொருடெரிந் தருண்முதலியாய்ப்
பூரணம் பெறுவா னழுங்குமடி யேனரும்
புரிவிற் கியைந்தகண்ணாய்

அரியதிரு வருளையே நாடுமென தன்பாயெ
னறிவா யுளும்புறத்தும்
ஆமெனது நாட்டமாய் நாட்டமது மோயுநிலை
யாயுள்ள வெந்தையேநின்
பெரியதிரு வருளொடுங் கூடியுனை நீங்காவொர்
பேறுற விலந்துறந்துன்
பிள்ளையா நிற்குமெனை விடுதியே லினியாவர்
பேணியருள் புரிவரன்னோ
பரிவுடன் பெரியதிரு வுளமது கனிந்துசொன
படிகருணை புரியவேண்டும்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 2

அருள் விருப்பமானது என்னை நன்கு தூண்டும்படி யாகவே பாடுகின்ற என் பாடலின் கருத்தைத்தெரிந்து அவ்வாறனுக்கிரகிக்குந் தலைவனையும், முத்தியைப் பெறுமாறு தன்பமுறுகின்ற அடியேனுடைய அரிய விருப்பத்திற்கிணைந்த கண்ணையும், அருமையான திருவருளையே விரும்புகின்ற எனதன்பாயும், எனதறிவாயும், உள்ளிலும் வெளியிலும் பொருந்துகின்ற எனது நாட்டமாயும், அந்நாட்டமும் ஓயவுள்ள நிலைக் களமாயு மிராகின்ற என்பரம பிதாவே! உன்னுடைய பெரியதிருவருளோடுங் கூடி யுன்னைநீங்காத வொரு பேற்றினை யடையும்பொருட்டு (மனை மக்கண் முதலிய) இல் வாழ்க்கையைவிட்டு, உன்மகனாக நிற்கின்ற என்னைக் காத்தருளாது விடுவையேல் ஐயோ! இனி, எவர் காத்தருளுவர். அன்புடன் பெரிய திருவுளங்கனிந்து நீ யெனக் குபதேசித் தருளியவாறு திருபைசெய்தல் வேண்டும்.

பரமசுவரியம் முழுதுஞ் சுதந்திரமாக வனுபவிக்குஞ் சித்தென ஆன்மா விளங்கத்தக்கதொன் முகலின் அப்பரமனை "எந்தையே" என்று விளித்ததூஉம், தன்னைப் "பிள்ளை" என்று கூறிக்கொண்டதூஉம் எற்புடையனவேயாம்.

"எந்தை யாயெம்மி ராண்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம்மி ராண்றனக் கொன்றிலான்"

என்முர் ஸ்ரீமந் மாணிக்கவாசகரும். இல்லத்துறத்தல் அவசியமென்பது, பரிபூரணானந்தபோதத்துத் துறவறவிளக்கப்படலத்தாலும், அதனுரையாலும் இனிது விளங்கும். விளங்குமாயினுங் குமரகுருதாசசுவாமிகள்பாட லெனுமொரு கோசத்தே—

"ஆளு நின்னடி யன்றிமண் ணுசைபொன் முசை
மீளு மென்குழன் மங்கைய ராசையி னீங்காக்
கோளு ளோர்களு ஞானிக ளோபுகழ் குயின்றேன்
நாளு நாடிய தெய்வமே யெனைவஞ் சகமே."

எனவரு தொடர்பு நுட்பமாக நுதலிக்கொள்ளத் தக்கது.

புரிவு = விருப்பம்; "புரிதல் விரும்பலுஞ் செய்தலு மாகும்" என்பது சே - திவாகரம்; தொழிற்பெயராகலின் உ - விகுதி; வ் - எழுத்துப்பேறு; வு - விகுதி யென்பாரு மூளர்.

புரிவு – அன்பென்பதாகவும் அந்நிவாகரங் கூறுதலிற் "பரிவு மார்வமு மீரமும் பற்று — மளியு மாரும் புரிவு மன்பே" என்பதனு லறியலாம். அற்றேல், அது பொருந்தப் பொருள் கொள்க. அன்பும் விருப்பின்பாற்படும்.

பெறுவான் — வான் – எதிர்கால விணையெச்சவிகுதி.

பேறுற — உற - செயவெனெச்சம். பெறப்படுவது பேறு; ஈண்டுப் பரமசுவரியம்.

அன்னே = இரக்கச் சொல்.

எந்தை - என்தக்தை, எம்தந்தை என்பனவற்றுளொன்றன் மரூஉவாம். (உ)

வஞ்சவினை கண்டஞ்சி டாநெஞ்ச னாகவிம்
மகிமிசை யிருப்பினரிலார்
மாபாத கங்கள்பல புரியினுங் கருமாமை
மகிடமுது கின்றூவல்போற்
கிஞ்சிலே னுஞ்சஞ்ச லத்தினை விளைக்காத
கிழமையைச் சிவணுமாணார்
கிருபைபெரி தென்றக வினைக்கஞ்சு நான்பவ
கிருத்திய மெதேனும்வனையிற்
கஞ்சநய னத்துளொரு நுண்மண் கிடப்பினுங்
கனவாதை கோடன்மானக்
கைதவங் கோடற் கியாதுதடை யாகலிற்
கறையற்ற நெஞ்சமருளிப்
பஞ்சம கதிக்குநற் பாங்காகு மாறுகண்
பாராய் சதாகாலமும்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 3

வஞ்சக கருமங்களைக்கண்டு பயப்படாத நெஞ்சையுடையவனுக இப்பூமிமிசை யானிருந்தக்கால், குற்றமார்ந்த பல்பெரும் பாதகங்களே யான் செய்யினும் அவைகள், கருகிற வெருமையின் முதுகிற்படிந்த மழைத்துவலைகள் அவ் வெருமைக்குக் குளிரைச் செய்யாம லொழிதல் போலச் சிறுவரையு மெனக்குச் சஞ்சலத்தினை யுண்டுபண்ணுத் தன்மையினைப் பொருந்தும். (அங்ஙனமின்றி) மாட்சிமையார்ந்த கினதருளே மா

சம்பத்தென்று பாவ கருமங்களுக்குப் பயப்படுகின்ற யான், (அந்த) வஞ்சக கருமங் களுள் யாதனேயேனுஞ் செய்தக்கால் (அதனுனே) கமலமலர் போன்ற கண்ணுழை யொருசிறுமண் கிடந்தானும் உயிர் மிக்கவருத்தங் கொளல்போலத் துன்பத்தைக் கொளற்குத் தடையாகவுளது யாது? ஒன்றுமின்றே. ஆகலால், எனக்குக் குற்றமற்ற மனத்தைக் கொடுத்தருளி மோக்கத்திற்கு நல்லுரிமைப்படுமாறு எப்போது மென்மீது கின் கடைக் கண்ணேக்கத்தைச் செய்வாயாக.

பாவகரும பந்தங்கட்கு ஏது, கறையுடையகெஞ்ச மாகலின், அதற்கு வேருய் முந்திக்கு ஏதுவாமொரு கெஞ்சமே "கறையற்ற கெஞ்சம்" எனப்பட்டது. 'பாசமென் ரோதுதத்துவ கணத்துள்' என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டையும், அதனுரையிலுற்ற சுருதிப்பிரமாணத்தையும் ஈண்டுக் கவனிக்க. பஞ்சமகதி = மோக்கம்; சே - திவாகரங் காண்க. நரககதி, மிருககதி, மனுடகதி, தேவகதியென்னு நான்கிற்கும் வேருய் மேம்பட்டு கிற்பது மோக்கமாகலின் அது பஞ்சமகதி யெனப்பட்டது. மிருகதிக்கும், மனுடகதிக்கும், தேவகதிக்கும் வேருக நரகதி நவிலப்பட்டமையின் அந்நரகம் புகுமுயிர்கள் யாவை? என்பதுபற்றி யிங்ஙனம் விசாரிப்ப தேற்புடைத்தாதலின் அவ்வாறு செய்வாம். இது மறம் இஃதறமென வுணர்தற்குரிய கருவி விலங்குகட் கின்மையால் அவைகளும், அறமேபுரிக் தடைதல் தேவகதியாகலின் அத்தேவர்களும் மறத்தின் வழிவரு நரகதியடைத லின்றென்பதும், இருவினையும் புரியத்தக்க மனுடரா யுள்ளாருண் மறம்புரிவார் பொருட்டே அந்நரகம் படைக்கப்பட்டதென்பதும், அதனை அவரேயடைவ ரென்பதும் நிரப்பற நிலைபெறுத்தப்படும். ஆதலின், மனுடப்பிறப் பெய்தினேர், யாம் உயர்நினை மாந்தரன்றே வென இறுமாந்திராது மறமெனும் புலிவருகட றியாது? புரையெனும் புலிவருகட றியாது? எனப் பன்முறையும் விஞ் விழித்திருந் துய்தியெறத் தக்கவரேயாவர். அசுரர், அரக்கர், நாகரென்பார் கதிகள் கூறப்படாமையின் அவற்றிற்கே 'நரககதி' என்னுமொரு பெயர் பொதுமையிற் புகலப்பட்டது கொலோ? என்று சிலர் ஐயுறுகின்றனர். (அவ்வசுரர் முதலிய முத் திறத்தாரும் பாதாளலோகவாசிக ளெனவும், அப்பாதாளத்தினடிப்புடையே நரகலோக முளதெனவு நவிறலினால்) அங்ஙனமாயினும் நரகலோகத்திருப்பார்க்கே நரகரென்றல் சிறந்து நிற்கத் தடையின்றன்றே. அந்நரகம், உஉ - எனக் கந்தபுராணமுஞ் சிவதரு மோத்தராகமமுங் கூற; ஙஉ - என மிருகேந்த்ராகமம் விளம்புகின்றது.

மாமரப்போலி இருப்பையும், வில்வப்போலி விளாவும், கவுதாரிப்போலி காடையும், புரவிப்போலி வேசரியுமாக வெண்ணப்படுமாறு மனிதப்போலி சூரங் கெனப்படும். மனிதனே 'நரः' என்றுரைக்கும் வடநூலார் சூரங்கினே "வாநரः" என்பதும் இக்காரணங் கருதியேயாம். வா = ஒப்பு. மனிதர் தேவப்போலியாவர். சிவன்மா பரமான்மப்போலியாம். தேவர்களுடைய வடிவு முதலிய கதியினையடைதல் அத்தேவர்கட்கு உகப்பான அன்னதானுதி தருமங்களைப் புரிதலினுலேயாம். அன்ன ணம்புரி மனிதர், இம்மையிற்ருனே மனிதத்தன்மையோடு தேவத்தன்மையுஞ் சிவணியவ ராகின்ரு ராகலின் அவர், எக்குடிப் பிறந்தாராயினு நற்குடிப் பிறந்தாராய்ப் 'பூதேவர்'

'பூசுரர்' எனப்படுவர். அவரிருக்கையும் பூசுராலயமெனப்படும். இங்ஙன மாகாதார், மனிதப்போலியாம் வானரத்தோ டொருங்குவைத் தெண்ணப்படுவர்; பாரிசேட வளவையால். அவரிருக்கையு மங்ஙனமே யாதற்பாலது. முக்கியமாக வடமொழி தென்மொழி நூல்களுள் வைக்கப்பட்ட வைதிகசைவ தருமங்களே யிகழுர்தன்மையானே எதிர்க்குந் தன்மையானே மக்களும் (மனிதாகிய) குரங்கெனத் திரிபவராவ ரெனும் பொருள் போதர—

"மந்தி போற்றிரிந் தாரி யத்தொடு செந்த மிழ்ப்பய னறிகிலா
அந்தகர்"

எனவெழுந்த திருஞானசம்பந்தனுர் திருவாக்கும் இதனை மதுகைப்படுத்தும். மந்தி = வானரம். இவ் வானரமொப்பாரை மனித சமுதாயத்தினின்றும் பிரித்தறிதல் யாங்ஙனம்? எனின்,—

"வானர மழைதனி னணையத் தூக்கணம்
தானெரு மதிசொலத் தாவிப் பியத்திடும்"

என்றபடி உயிர்க்குறுதி பயக்கும் பகவான்வடிவ வழிபாட்டினையும், அதன் சார்பாய்நிகழ் தருமங்களையுந் தமக்கெடுத்துப் போதிக்கும் புண்ணியர்களை நோக்கி, எம் போன்ற வொருவடிவனைத்தொழு கீவிரோ எம்மனேர்க்குப் புத்திபுகட்டும் பொறியாள ராவீரெனச் செருக்கின் மூத்துச் சேட்டையின் மூத்துச் சீற்றத்தினின்மூத்துக் கொடுமை பல வயர்தலா னறியலாமென்க. திருவலங்கற்றிரட்டின் முதலாங்கண்டத்தில்—

"பரந்த மாயையின் பாசமுட் கிடந்து பதைத்து நொந்தரு ணடிடு பகுக்கள்
தரங்கண் டருள்செய நீதனி கொள்ளுந் தாவில் பதியுரு வைப்பழி பகரத்
திரங்கொள் வோரெனை யாண்முரு காகற் றிருவி லாதுச தாமுகஞ் சுரித்த
குரங்குக் குன்கடை யாகுவ ரவர்சொல் கூற்றை நான்மதி யேன்மதி யேனே."

என யாங்கூறியதும் இங்ஙனெடுத்து விரித்துக்கூறற் குரியதே. தூக்கணத் திற்குத் தீங்கிழைத்த வானரம் மனிதர்க்கு மீங்கிழைக்க வழியறியாது, இறைதிருவுரு வைப் பழிபகரவு மறியா தாகலின், அவை யறிந்தார் அவ்வானரத்தினுங் கேடுடை வானரமாவராகலின் அவர், 'குரங்குக்குங்கடையாகுவர்' என இழித் துரைக்கப்பட்டா ரென்க. மனிதத்தன்மை தமோகுண வீக்கத்தாற் கேடடையின் இழி வானரத்தன்மை, இழி யிராக்கதத் தன்மை, இழி யலகைத்தன்மை, இவை யொற்றுமைப்பட்ட தன்மை விளக்கப்படுமென்பன மறுக்கற்பாலன வல்ல. மூக்கவாம் மணமணை கருணை முதலிய வற்றேடு வல்லி மாந்தி மழகளிறெனக் கொழுத்திருக்கின்ற தாமுஞ் சாதன்மெய் யென்பது நனி தெரியவந்த பின்னரும் மாளா வொருவன் முனே தொழாது வாளா சாமா றுள்ள விணையரை மதியாதிடைந்து போந்து தமதறிவே வழாது பேணிநிற்றன் மஹாதேஜோமண்டலத்தார்க்குங் கடன்மையே யென்பதை மீண்டினிது காட்டுதும். தமிழ்மறைப் போற்றித்திருவகவற்கண்—

" ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைக டொடங்கின
ஆத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாக வேதியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிக டத்த மதங்களே
அமைவ தாக வரற்றி மலைந்தனர் "

எனவரு பகுதியான் அக்கடன்மை யுணர்ந்துகொளப்படும். மாயையின் வழியெல்லாம் ஆய்ந்திகந்து நிற்கும் மணிவாசகப் பெருமானுக்கு அம்மாயையின் வளப்பத்துட்பட்ட உலகினர் போதித்தவாறெல்லா மெடுத்துணர்த்தாநின்ற இப்பகுதியினுட்கிடை —

(பிறநீஸாஅடிநஜ்ஜ - திகநீசார்ச்சநம்ஜந்ம)

" ஈசுவரவழிபா டில்லாதான் சன்மத்திலே தீயை வை " என்று சுருதி-பிருஹஜ்ஜாபாலங் கட்டளையிடுதலினும் பெறப்படும். நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய் நிற்பன நீறீஇ யருளொரு தொல்லோற்றொழ லெனும் ஈசுவரவழிபா டில்லி பிறப்புப் பயனுடைத்தன்றாகலின், நீ அவனை நேசிக்க வேண்டாவென்னுங் கருத்தானே ' அவன் சன்மத்திலே தீயைவை ' எனத் திருவருட்சுருதி தெரித்ததென்க. ஈண்டவனைத் திருத்துகவெனாது நேசிக்க வேண்டா வென்னுங் கட்டளை பிறப்பித்தலென் ? எனின்,— அறியாது கடாயினாய் !

" நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம் "

என்னுங் கருணையம்பறை பிடித்து அவ்வாறுபுரிய முயன்றுங் கூடாதாயின், " கிட்டா தாயின் வெட்டெனமற." என்றபடி அவனை விட்டு நீங்குதலே நலனுடைத்தென்றல் அதற்கு விடையாமென்க.

ஆகலினன்றே மூதுரையில் —

" தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே — தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது."

என்னும் வெண்பாவும், சித்தாந்தசிகாமணியில் —

" ஈண்டொளி யமல பத்த னிருஞ்சிவ பத்தி நீத்துக்
கோண்டரு மனத்து வெய்ய கொடியவன் றன்னை நோக்கல்
தீண்டுதல் புரித லாகா சேர்ந்தவ னுடனி ருத்தல்
வேண்டுவ தன்றெங் கேனும் விடுவதே யியல்பு மாதோ."

என்னும் விருத்தமும், சிவஞானபோத வார்த்திகமென்னும் பொழிப்பகத்தே—

"அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர்"

என்னும் இவைகளும், ஞானவாக்கியத்தில் —

"பிடை தருமே மூட ருறவு."

என்பது மெழுந்தன. இன்னனபல்ல.

"நிலநிசை யாகம நெறியி லேனும்
கலிமலி நான்மறைக் கடைபி லேனும்
இறைதா லாயவவ் விரண்டினு மேனுஞ்
சிறிது படனஞ் செய்தற் கடவை
திடப்படா துலக மரையயிற் சிக்குபு
விடப்படா தலிவோர் விரதமுள் ளோரைக்
கண்ணுறு காலவ ரில்லத் திருந்திடிற்
கண்ணக லில்லியேன் கருதி னென்பர்
துறவிருந் திடினேன் முறந்தன ரென்பர்
இறையா லயம்புக் கிருந்து வழிபடின்
இவர்க்கே லுலய வழிபா டென்பர்
அவணமாற் ருவிடி னற்றிலென் னென்பர்
சடைமுண்ட மிலியேற் றவமின் றென்பர்
சடைமுண்ட முளவேற் *சால்புக்கோ வென்பர்
ஓரிடத் திருப்பி னுழிப்பற் றென்பர்
பாரிடத் துலாவிற் பசுவலி வென்பர்
உண்டுடுத் திடினமை யொத்தவ ரென்பர்
உண்டுடுக் காவிடி னுஞற்றிலென் னென்பர்
பேசி விளக்கிடிற் பிதற்றலே னென்பர்
பேசா திருந்திடிற் பிறர்க்கென் னென்பர்
விழித்து நோக்கிடின் வெளிமுக மென்பர்
விழியா திருந்திடின் விழிக்கிலென் னென்பர்
அற்புத மிலதே லருளின் றென்பர்
அற்புத முளதே லணிவித்தை யென்பர்
ஆதலின் மனனே யவனியர் பலவா
றேதிழி வுக்குநீ யுள்ளுலி வேதும்
உறலொழிந் தெம்மா னுரைத்தசன் மார்க்க
முறையி லுனக்கெது பிடித்தமு முயல்வும்
உள்ளதோ வவ்வா றுற்றெங் கடவுளாய்
உள்ள குகேசனே யுலப்பி லுண்மையை
அகண்ட பூரண வருட்பெருஞ் சோதியை
அகண்ட பூரண வானந்த வாரியைச்

* சால்பு = மாட்சிமை = பெருமை.

சொல்லற நிற்குந் தூய வெளியைச்
சொல்லின் மதுரஞ் சொரியருட் கனியை
நினைக்கி னினைந்து நெகழ்ந்து பற்றுபு
நினையா தேனீங் கிடுமோ ரியற்கையைத்
நிருவரு ணெகிரி சித்தித்த தேவை
உருவரு வின்றி யொளியிரு ளின்றிச்
சுத்தசித் தாகச் சூழ்ந்து
சுத்திய முத்தி தானடை வாயே."

என்னு மிவ்வகவற்பா, குமரகுருதாசசுவாமிகள் பாட லென்னுமொரு கோசத்துளது. இதன்கண் 'நிலமிசை யாகம நெறியி லேனும்' என்னுமடி முதல் 'அற்புத முளதே லணிவித்தை யென்பர்' என்னுமடி யிறுவாய்க்கிடந்துள்ள இருபத்து நான்கடிகளுட் கொக்கப்பட்டவாறு பிதற்றித் திரிதருவார்முன் எக் நறும்போதனீ பயன் படுமால்! படாதென்னுஞ் செம்மைத் துணிபானே இத்திருப்பா கூ-ஆம் பத்தின் எ-ஆந் திருப்பாட்டுழை —

"சொலலுமுசு நேரவே தாமுனங் கற்றமுரண் விடுவதரிதால்"

என்பதுங் கூறப்பட்டுளது. இனி, இங்குக் கூறியவாறெல்லாம் ஒரு படி முடித்துக் காட்டுதும்.

வருமாறு.—பண்டமாற்றுக்கடை பலவற்றுள்ளும் வேட்ட நறும்பண்டங் காண்புழி அது கொள்வோனைப் போலிருப்பாற்குப் போதிக்கும் அப் புலனெறிப் போதனீ பயன்படுமென்பதூஉம், கேடார்ந்த பண்டத்தையு நறிதென நவின்று விற் போனைப் போலிருப்பாற்குப் போதிக்கும் அப்போதனீ பயன்படா தென்பதூஉமாம்.

இவையனைத்து நன்குநோக்கியுணர் நன்மக்களாயுள்ளார், தேவப்போலியாய தம்பெருந்தன்மை மனிதப்போலி யாகாமே அத் தேவத்தன்மையே ஆமாறு செய்து கோடல் ஒல்லுமாதலின் அதற்குரிய தருமங்களனீ அவர் ஒல்லையிற்பற்றக் கடன்மைப் பட்டவரேயாவர். இந்தச்சாத்திய காரியமே மேலெடுத்துக்கொளக்த தேவகதியாம். ஒருதேவ வழிபாட்டினீயே பெற்று அவ்வொருதேவனுகிய இறைவனது திருநாமத் தினைச் செபமாகச் செபித்தலும், நியாணயோகமாக அவனது திருவுருவினைத் தியா னித்தலு மாகிய இரண்டுமே முக்கியமெனமதித் தவைபற்றிநிற்குக் தகைமை வாய்ந்த மஹாதேஜோமண்டலத்தார், பரமான்மப்போலியாக் தஞ் சிவவியல்பொழிந்து சிவ வியல்பாதற்குக் கடன்மைப்பட்டவரேயாவர். இத்தச் சாத்திய காரியமே மேலெடுத்துக் கொளக்த மோக்கமெனும் பஞ்சமகதியாம். இக்கதி, அனேக ஐசுவரிய வாய்ப்பான சிவ சாரூப்பியத்திற்கும், மேலுறு சொரூப சிவ சாயுச்சியத்திற்குங் கொளப்படும். சாயுச்சி யத்தினுண்மை இந்நூல் கoசு-ஆம் பத்தில் —

"இன்ன படியென் குய்க்கிடவு மிழிபோ தத்தா லேதொடவுஞ்
சின்ன வரையு மமையாதாய்த் திகழும் பதிமுற் றறிவெனவே
இன்ன லறுதா லியம்புமது வெந்த வணமோ வந்தவணம்
மன்னு வதுதா னதைமருவு மார்க்க மிதையும் பெறுவேனே."

என்னுந் திருப்பாட்டா னுணரக்கிடக்கின்றது. இதன் சம்பந்தமா யுணர்த்தப் படுவனவெல்லாம் ஆண்டுப் பின்னரு முன்னருமாகக் கண்டுகொளலாம். இம்மானுட வுடம்பி லுவர்ப்பெய்துழி அத்தேவவுடம்பும், தேவவுடம்பி லுவர்ப்பெய்துழி ஈசுரவுடம்பு முண்டாம். ஈசுரவுடம்பு, எண்ணறுகோடி காலத்துங் கேடடையா மாலைத்தாயினும் வயிரூர நுகர்ந்தான் பெற்றிமைபோல் இவ்வுடம்பாம் பேறும் போதுமென்னுந் திருத்தியினை அல்லது வேண்டாமையை யெய்தினேர், அஃனைத்தடங்கிடற்காகவே அச் சாயுச்சிய மென்பதொன் றேற்பட்டுளது. இவ்விருநிறமும் ஈசுரனதனுக்கிரக காரியத்துள்ளனவாகலின் அவ்விசுரன்,

"வேண்டுவார் வேண்டுவதே யீவான்" எனவும்,

"ஏவ ருக்கு மனத்தி னினிதாப்பவை அருள்வோன்"

எனவுங் கூறப்பட்டனன். இவை, முறையே நாவுக்கரையனுர் திருவாக்கும், அருணகிரிநாதனுர் திருவாக்குமாம். ஈசுரவுடம்பு கல்ல யோகானுபவ பலனுக வெய்தத்தக்கதாகலின் அவ்வுடம்புடையார் அனலும், சிதமும், வாதமும், அசனியும், புனலும், ஆயுதமும், விடமும், மருத்தும், பகியும், தாகமும், பிணியும், முனிவருமையு மாகிய உபிர்வேதனை பன்னிரண்டுங் கடந்து அத்த யோகானுபவ சாலிகளாகவே அப்பிராகிருத ஈசுரசன்னிதியில் வேண்டுமளவும் விரும்பியிருக்கும் பேறுடையரே யாவர். இக்கதியினையும், இதன்கீழுள்ள ஈசுரசாமீப்பியம் ஈசுரசாலோக்கிய மென்னுங் கதிகளையும் இழுக்கத்துட்படுத்துச் 'சொரூபசாயுச்சியமென்ப தொன்றுமே யாம் விரும்புவது' எனக்கிளப்பார் பலரையும் யாம் இஞ்ஞான் றிக்காட்டகத்தே காண்கின் றனம். இவையர்விருப்ப நிலைபற்றியும் ஈங்கொரு விசாரணை செய்குதும். கூறிப்போந்த சாரூப்பியாந்தமுள்ள பேறுகளை மதியாது வேறு பேசற்கும், அச் சொரூப சாயுச்சி யத்தையே பெறற்கு முரிபார் — இம்மானுடவுலகின்கண்ணவாய வனப்புவாய்ந்த மாடகூடங்களுட் சிறந்த கட்டிடங்களைக் காண்டொறுங் காண்டொறும் வாயினு ஆவெனத் திறந்து பார்வையினைப் புறம்போகவிடா தூன்றி நோக்கியவாறே சலிப்பில் பதுமையென நின்று அவற்றைக் காமுறலினும், தண்டிகை கொடிஞ்சி முதலிய வாகனங்களையுங் கவிகை ஆலவட்ட முதலிய விருதுகளையுங் கவி வசனந் தற்புகழ்ச்சி களையுங் காலாண் முதலிய படைப்பெருக்கங்களையுங் காணுந்தோறும் அவற்றிற்காசைப் படலினும், இன்சுவை முதலிய சுவைப்பொருள்களுண்டல் இன்னிசைகள் கேட்டல் நறுநாற்றங்க ளுடல் கல்வித்திறமை முதலிய வித்தைபல விரும்பலென்பனவற்றை விழைதலினுந் தலைப்படல் உடையரா? தலைப்படலிற் சிறுவரை குன்றிய நீரரா? குருடர் செவிடர் மூடவர் மெளட்டியருறழச் சிற்சில நீத்துயிற்குரா? என்னுங் கடாக்கட் கேற்புடை விடை, அன்னேரு ளொருவருமல்ல ரென்பது சித்திக்குமாகலின் அவர், தம் விழைதல்பிடித் தெழுதுமெழுத்தும் பேசும்பேச்சும் எத்திறவுண்மையி லுள்ளன? இவை படிற்றொழுக்கத்துட் படாவோ? என வினுய்க்கொண்டுய்த்து

நோக்குழி, ஈசுரத்துவேஷ புத்தியுடையார் செய்கை யிங்ஙனமாகின்றதென முடிவு மொழியவுள்ளார், விவேகிகளேயன்றி மற்றைய ரல்லரால். இத் துவேஷபுத்தியுடை யாரை, ஈசுரனடியவரென ஈசுரபத்தியுடையார் மதித்து அன்ன பானுதிக ளளிக்கவு நியாயமுண்டோ?

ஆறுகோடி மாயா சத்திகளும் வேறு வேறு தம் மாயைக டொடங்கற்கு நிலைக்களனுயுள்ள இப்பூவுலகினே யினி யடையொண்ணுதென்னும் விரத்தி மேயினர், ஈங்குள்ள பொருள்களு ளெதனேயும் இச்சியாதிருத்தல் வேண்டும். தம்மாலேனும் பிறராலேனும் அமைக்கப்பட்ட கல்விக்கழகம், அறவளாகம், மடாலயம், தேவாலய மென்பவற்றிலும் இச்சையிருத்தலாகாது. இருப்பின் மீளவும் அவ்விடனடைதனேரு மாதலிற் றமது பரலோக யாத்திரையிற் சில்பொழுது தாக் தங்குமிடனுக விப்புடவியினை நினேத்தல் வேண்டும். தங்குமிடனுந் தேள், செய்யான், உண்ணி, எறும்பு, ஈ, கொதுகு, குருதிப்பூச்சி முதலிய கடியுயிர்கள் செறிந்துள்ள இல்லொக்குமென்றே துணிதல் கடப்பாடாம். மைத்ராயண்யுபநிஷத்—

(அகுவதி-உகஃகெதிகி - வை-ஏ-ஸ்ஹிரிடி-ஸ்ஹிம்ரு
ஏ-ஸ்ஹ-ஸுவனுயாஸ்ரு யளவதாஸ்ரவயு ஸ்ரவஸ்ரவதிஃ
ஸஸ்ரவிம்ஸு ஊ-ஸ்ரிஸ்ரஞ்ரு-ஸ்ரீஷநதத்ரு
வயு-ஸாதிய-ஸ்யாதயு-ஸ்ரணை-ஸ்ஹொகாயஃ ।
ஸ்ரயுஸ்ர-ஸ்தஸ்ரதவு-ஸ்ரூதயொஸாஜாநஃ ।
விஷதோவம்ஸ்ரவமஸ்ரே ஏஷ மீம்ஸ்ரீயம்தயீகூ
ஸ்ரோஞ்ரொகாஉஸ்ரம்ஞ்ரொகும்ரெயாதாஉதி ।

சக்ரவர்த்திநஃ கேசித் - ஸ்ரத்யும்நபூரித்யும்நேக்ஷ
த்யும்நருவலயாச்வ யௌவநாச்வவத்ர்யச்வாச்வபதிஃ
சசபிந்துர்ஹரிச்சந்த்ரோம்பரீஷ நகக்து
ஸர்யாதிர்யயாத்யநரண்யோக்ஷோநாதயஃ ।
அதமருத்தபரதப்ரப்ருதயோ ராஜாநஃ ।
மிஷதோபந்துவர்க்கஸ்ய மஹதீம்ஸ்ரீயம்த்யக்த்வா
ஸ்மால்லோகாதம்லோகம் ப்ரயாதா இதி ।)

"சக்கரவர்த்திகளா யிருந்தார் சிலருட் சுத்தியும்நன், பூரித்தியும்நன், இந்திரத்நியும்நன், குவலயாசுவன், யௌவனுசுவன், வத்திரியசுவன், அசுவபதி, சசபிந்து, அரிச்சந்திரன், அம்பரீடன், நகத்தன், சரியாதி, யயாதி, அனரண்ணியன், உக்ஷசேனனென்னும் பெயருடையார்களும், மற்றும் அரசர்களாயிருந்தாருண் மருத்தன், பரதன்முதலிய பேரரசர்களுந் தத்தம் பந்துவருக்கங்கள் கண்முன்பாகவே தம் மகத்தான ஐசுவரியங்களே யிவ்வுலகோடு விட்டுப் பரலோகமடைந்தனர்." என்று கூறும் வாய்மையையு நினேவில் வைத்து நடைதரல் கடன்மையாம்.

அரில் = குற்றம்.

கிஞ்சில் - கிஞ்சித் என்னும் வடஇளவியின் விகாரம்.

கஞ்சுகயனம் - உவமத்தொகை; கஞ்சமென்னும் முதற்பொருளின்பெயர் அதன் பூவாகிய சினைப்பொருட்காயிற்ருகலிற் பொருளாகுபெயர்.

"யாது தடை" என்னுங் கடாவிற் றடையொன்றுமின்றே யென்னுக் தேற்றப்பொருள் குறிப்பாகக் காணப்படுகின்றது; இது, கேட்போ ரிடர்ப்படாது வெளிப்படையிற் கூறுதன் மரபாகலின் இது மரபுவழுவமைப் பாகும்; விதி — "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ் சூத்திரமாம்.

தடை - தொழிற்பெயர்; தடு - பகுதி.

கைதவம் = வஞ்சகம்; இது, வடசொல்; நிகண்டு - அமரஸிம்ஹரும் காண்க. பாவங்களு ளொன்ருய கைதவமென்னும் முதற்காரணப் பெயர் அதன் காரியமாகிய துன்பத்திற்கும் வழங்கப் படுவதாயிற்ருகலிற் காரணவாகு பெயர். காரணங் கருவியெனப்படுமாற்ருனே கருவியாகு பெயருமாம்.

கண்பாராய் - ஏவலொருமை முற்று. (ங)

பூவுழி விசேடகப டங்கூறு மாசாட
பூதிகுண மென்கணில்லை
பொல்லா னெனும்பே ரெடுக்கமன மிலையுன்
பொருட்டுவா தங்கணேரின்
தாவற விரிக்குமோ ரன்புண்டு கண்ணீர்
ததும்பநின் றேங்கலுண்டு
சகசநிலை நாடியொரு நாட்டமுற லுண்டருட்
டகவினைப் புகழ்வதுண்டு
கூவுமறை யிற்பொய் யெழாமற் புரக்குமொரு
கொள்கைக்கும் விழைவதுண்டு
கூறுமிக் குணமெலா முளவேனு முன்னோடு
கூடாம லின்பமுறுமோ
பாவனத் திருவுள மகிழ்ந்திந்த வமையமருள்
பாலிக்க வேண்டுமெந்தாய்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 4

நிலவுலகில் விசேடகபட வசனங்களை நிகழ்த்திய 'ஆஷாடபூதி' யின் குண மானது என்மாட்டின்று. பொல்லாதவ னென்னும் பெயரைப்பெறாகாதென்பதும் என தெண்ணமே. உன்பொருட்டு மத தருக்கங்கள் சம்பவித்தால் (எதிர்த்தோர் தருக்கமாகிய) கேடு அறும்படி விரித்துக்கூறும் ஓரன்புமுளதே. (உனது பூரணத்தை யெஞ்ஞான் றடைவே னென்னுங் கருத்தானே) கண்ணீரானது பெருக்கெடுக்க நின்று எங்குதலு முளதே. உண்மைநிலையை நாடி யொருநோக்க முறுதலுமுளதே. திருவருட் கருணையைப் புகழ்வதுமுளதே. (என்னைக் காத்தருளுமாறு அவ்வருளை) யான் அழைக்குங் கூற்றுக்களுட் பொய் தலைப்படாது காத்துக்கொள்ளு மொரு கொள்கைக்குப் பேராசைப்படுதலு முளதே. (இங்கே) கூறப்பட்ட குணங்களெல்லா மென்மாட் டுள்ளனவேனும் பேரின்பமானது உன்னோடு கூடாமலெய்துமோ? என்னுடைய பரமதந்தையே! உனது தூய திருவுள்ளத்திற் பிரியம்வைத்து (எனக்கு) இத்தருணம் திருவருளைக் கொடுத்தருளல் வேண்டும்.

பொன் சேமித்துள்ள உட்டொளையோடுங் கூடியவொரு முருக்கந் தடியினைப் பிடித்துக்கொண்டு ஐயமேற்றுண்டு திரியுமொரு வேதியன்பாற் பொன்விருப்பினை னெருவன், யான் உலகப்பொருள்களை னொன்றையேனு மொரு சிறிதேனு மோரிடத்து மொருஞான்றும் விரும்பேனென்பது முதலிய விசேடவார்த்தை பலவும் பகர்ந்து, நம்பும்படி நடந்து, அத்தடி தன் கைவசத்தவுடன் அந்தப் பிராமணனைவிட் டோடினன். அவனே 'ஆஷாடபூதி' யெனப்படுவா னென்னுமொரு பழஞ்சரிதையே இங்குக் கொளக்கிடப்பது. ஆஷாடம் = முருக்கு. பூதி = பொன். இப்பொன்விருப்பு ஈங்குச்சொற்ற வஞ்சகமொன்றுதா னிழைக்க வல்லது கொல்? என்னுங் கடாவெரன் றெழுதருமாயின், அது, வரைசெய் தோதற்கரிய எத்துணை யின்னது மெத்துணை யிழிதொழிலும் புரிய வல்லதாமென்ப தற்கு விடையாய் ஏயுமென்பதைக் குமரகுருதாசசுவாமிகள் பாட லென்னும் பெயரிய ஒரு புத்தகத்தே—

" பணமென் றுற்றிணை முற்றுவண் டெழுமெனப் பாரிற்
குணமு ளார்தரு மொழியுமொன் றுண்டது குறிக்கின்
உணர்வி லாவதி லுன்பெருக் திருவரு ளுணர்வு
மணமி லாரெலா மயங்குவ ரென்குரு மணியே. [க]

பொருள வாவினர்க் கிருவகைப் பந்தமும் போமோ
அருளு மேவிடு மோபொரு ளாசையு ளுலே
கருது பாவமுஞ் செய்கிற பாவமுங் கணிக்க
ஒருவ ராலிவ ணுகுமோ மாமயி லுகைப்போய். [உ]

இரவி னித்திரை யின்மையும் பகலெலா மிளைப்புந்
தரவி ருப்பது மீனரை மூடரைச் சார்ந்து
பரவிப் பஃறொழில் பார்த்திடப் பழிதொழி லெல்லாம்
புரியச் செய்வதும் பொருணசை யேபரம் பொருளே." [ச]

எனவருக் தூக்குக்களானும், குகப்பிரமவருட்பத்தில்—

"பணம்பண மெனுங்கொடி யவன்பிணி யடைக்தனர்
படுந்தொழி லினுந்தொடர்வனே
பதம்பத மெனும்பெரு மிதக்தின மடைந்தருள்
பதிக்தெனை யறிந்தவிர்வனே" [சு]

எனவரு மொழித்தொடர்களானும் யாமுணர்த்தினேம். "வாதங்கள் கேரின்" னன்றதில் வாதங்கள் = தத்தஞ் சமயநூல் பிடித்துத் தருக்கித்துப் பேசு மதவாதங்கள். அவை :—

(க) நாத்திகமாகிய உலகாயதம்,
(உ) நீசுர சாங்கியம்,
(ங) கன்ம மீமாஞ்சை,
(ச) ஏகான்மவாதம்,
(ஞ) பௌத்தம்,
(சு) ஆருகதம்,
(எ) நியாயமென்னுந் தருக்கம்,
(அ) பாஞ்சராத்திர விசிட்டாத்துவைத வைணவம்,
(கூ) மத்துவ துவைதவைணவம்,
(கo) பேத சைவம்,
(கக) கிறிஸ்தவம்,
(கஉ) முகம்மதியம்,
(கங) பிரமசமாசம்

முதலியனவாம். இவற்றுண் மத்துவ துவைதவைணவமும், கிறிஸ்தவமும், முகம்மதியமும், பிரமசமாசமுமாகிய இக்சான்கு நீங்கலாக மற்றைவாதிகளே இந்நூல் உசு - ஆம் பத்திற் கண்டுகொளலாம்.

ஈங்கியம்பப்பட்ட உத்தமகுணங்களில்லாமே பேரின்பமெறி கூடாதென்பதும், அங்ஙனங் கூடினுஞ் சுவானுபவ ஞக்கியமில்லாது அவ்வின்பமெய்தா தென்பதும், அது திருவருளா லாதற்பால தென்பதும் இத் திருப்பாட்டிற் போதருங் கருத்தென்பது உணரலுறுவா ருணாக்கிடக்கின்றது.

பொல்லான் - பொல்லாமையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர்.

பேர் — பெயர் என்பதன் மரூஉ.

தகவு = கருணை ; "தகவுங் கருணையு மிரக்கமுந் தயவும்" என்பது பி - நிகண்டு.

"அறை" என்பது சொல்லென்னு மொருகுணந்தழீஇய உரிச்சொல் என்பதை "மாற்ற றுவற்சி" என்றற்றொடக்கத்து நன்னூற் சூத்திரத்தி னறிக. ஒருகுணம் பலகுண முணர்த்து வனவாய் ஏனைப்பெயர் வினைகளைவிட்டு நீங்காவாய்ச் செய்யுட்குரியனவாய்ப் பொருட்குரிமை பூண்டு வருவன உரிச்சொற்களாம்.

"கொள்ளைக்கும்" என்பதிற்போந்த 'உம்' கூட்டுமிடத்தோறுங் கூட்டப்பட்டது.

இன்பமுறுமோ—ஓ - எதிர்மறைப் பொருளது. [சி]

நீயெமது மேனம்பல் வைத்ததற் காகவே
நீணிலந் தனிலுனக்கால்
நித்தமூ ணுடையாதி யருள்கிறோ மாகலா
னீயெனக் கருளருளெனாப்
பேயென வலட்டுவ தியாதென்பை யேலுனைப்
பேணாத பேர்க்கும்வெண்மைப்
பிணியாலொர் தெய்வமிலை யென்பவர்க் குஞ்சொன்ன
பிரகார மிகசௌக்கியம்
ஆயுளள வும்பகுக் கின்றனை யலாமலு
மனந்தபே தங்களாய
அஃறிணைப் பூதங்க ளுக்குமருள் கின்றியத
னாலடிமை யறிவிப்புவீண்
பாயுமென் றற்குவழி யில்லையென் கண்ணே
பகுக்குதி விசேடவருளைப்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 5

எமதிடத்தே நீ விருப்பம் வைத்ததற் காகவே நெடிய பூமியின்கண் உனக்கு நித்தமும் உணவு உடை முதலியவற்றைக் கொடுக்கின்றோமாகலின், நீ எனக்கு அருளருளென்று பேயைப்போல (ஒல்லை ஒல்லை) அலட்டுவது என்கொலோ? என்று என்னைக்கேட்பையேல், உன்னை விரும்பாதார்க்கும், வெள்ளறிவென்னு நோயுற்ற தன்மையினாலே தெய்வமென ஒருபொருளின்றென்பார்க்கும் மேலேகூறியபடி (உணவு உடை முதலியனவாம்) இவ்வுலக சௌக்கியத்தை ஆயுள்பரியந்தம் கொடுக்கின்றனை. இஃதேயுமன்றி, அனந்த பேதமாகிய இழிதிணை யுயிர்களுக்கும் (அத்தச்) சௌக்கி யத்தைக் கொடுக்கின்றனை. அதனால், உன் அடிமையாயுள்ள எனது விஞ்ஞாபனம் வீண்போமென்றற்கு மார்க்கமின்று. (ஆகலின்) என்கண்ணே விசேடவருளைக் கொடுத்தருள்வாயாக.

தெய்வமென்பது யாங்ஙனம் வயங்கிநிற்பது, யாதாயிருப்பதென்னும் விவரம் உ0 - ஆம் பத்தகத் தறியக்கிடக்கின்றது.

அஃறிணைப் பூதங்கள் = தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னு மெழுவகைப் பிறப்பினுள்ளே தேவரு மக்களுமொழித்த ஐக்குமாம். இவை யிழிதிணையெனவும் படும். பூதம் = உயிர்.

இகசுக மளிக்கும் அருள் சாமானியவரு ளாகலின், பரசுக மளிக்கும் அருள் "விசேடவருள்" எனப்பட்டது.

வைத்ததற்காகவே — ஏகாரம் = பிரிநிலை.

தன், ஆல் என்பன அசை.

உண்ணப்படுவது, ஊண்; மூதலீண்டது.

உடுக்கப்படுவது, உடை; ஐ - செயப்படுபொருள் விகுதி.

ஒன்று என்னும் எண்ணுப்பெயர் ஈறுகெட்டு னகரம் ரகரமாய் உகரம் பெறுது "ஒர்" எனநின்றது; மூதலீவின் "ஓர்" எனவாம்.

பகுக்குதி - முன்னிலை யேவலொருமை யெதிர்கால வினைமுற்று; "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொல் — செய்யென் கிளவி யாகிட னுடைத்தே" என்று தொல்காப்பியனார் கூறியவாற்றாற் பகுவெனும் பகுதியும் ஆயெனும் விகுதியும் பெறீஇப் பகாய் எனவாஞ்சொல், விகுதி குன்றிப் பகுவென நிற்கும்; க் - சக்தி; கு - சாரியை; த் - எழுத்துப்பேறு; இ - விகுதி. இவ்விகுதியே காலங்காட்டினது "றவ்வொ டுகர" என்றற்றொடக்கத்து நன்னூற் சூத்திரத்தே "வியங்கோ ளிம்மர பெதிர்வும்" என வருதலிற் பெறலாம். (ஞ)

இழுதையா கியவெற்கு நீதந்த வித்தையா
லிணையிலுன் னருளொன்றையே
ஏற்கும்வண நான்பாடு பாவெலாம் வெண்மடலி
லெழுதியா னந்தமெய்தாத்
தொழுதொண்டர் முன்னம் படித்துறழ்வு பேசிச்
சுகோதயந் தன்னைநினைவேன்
சுத்தநிலை கிட்டாது பற்றியங னுள்ளுலைவு
தோன்றவே தேம்பிநிற்பேன்
வழுவுள்ள செயல்களைக் கண்ணிமுகம் வாடுவேன்
மதியையும் வைதுகொள்வேன்
மாசிலா வெந்தையே யாளென் றரற்றுவேன்
வாயையு மடக்குவேனுன்

பழுதற்ற திருவரு ளிரங்கிடா தேலென்ன
பண்ணுவே னையவருளே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 6

அறிவிலியாகிய வெனக்கு நீ கொடுத்த வித்தையின் வலியால், ஒப்பில்லா வுனது திருவரு ளொன்றினையே பெறுமாறு யான்பாடு பாக்கள் யாவையும் வெள்ளேட்டிலெழுதி மகிழ்ச்சியடைந்து, அவற்றை (உன்னே) வணங்கு தொண்டர் முன்னிலைக் கண்ணும் படித்து ஞானம்பேசி, (தனியிடத்தே) சுகோதயத்தையுஞ் சிந்தித்திருப்பேன். (ஆண்டுத்) தூய சமாதி கூடாது நிற்பதுபற்றி அக்கிலேயு மசைவு கொள்ள மனவாட்டமுற்று நிற்பேன். (இத்திற விடையூற்றிற்கு ஏது, நம்பரம லிருக்குஞ் செய்கைகளே யாக வேண்டுமென்று) அக்குற்றமுடைச் செய்கைகளே யெல்லாங் கருதி முகமும் வாடநிற்பேன். (அச்செய்கைகட்குக் காரணமான) எனது புத்தியையும் வைதுகொள்வேன். இயல்பாகவே பாசமில் பொருளான என் பரம பிதாவே! என்னே ஆண்டுகொள்ளென்று மழுவேன். அவ்வாறழும் வாயினையடக்கி மௌனமு முறுவேன். (இனையவாறெல்லாம் யான் செய்யினும்) உனது குற்றமற்ற திருவருளானது என்மீ திரக்கமுற் றருள்புரியாவிடின் யாது செய்ய மாட்டுவேன்: ஐய! அருள்புரிவாயாக.

இந்நூ லுரையாசிரியர்க்கு உற்ற கல்வியறிவு — சுப்பிரமணியப் பெருமானது அனுக்கிரகமென்பதை "நீதந்த வித்தையால்" என்பது காட்டுகின்றதென்க. இச் செய்தி, ஆசிரியரது * ஞானவாக்கிய மென்னு மொருநூன் முடிந்தவிடத்தே —

"குஹப்ரஹ்மத்தினது திருவருட் டேண்டுதலானே அதி யிளமைப் பருவத்திற்றானே குஹசினே நாம் பாடித்துதிக்க வேண்டுமென நினைத்தவளவிலே தம்மையறியாமற் றமது வாக்கில், "கங்கையைச் சடையிற் பரித்து" எனவெழுந்த மங்கலமொழித் தொடரைத் தொடக்கமாகக் கொண்டுளதும், குமரகுருதாச சுவாமிகள்பாட லெனு மொருநூலிலே தெய்வவணக்கத்திற்குப் பின்னர் வைக்கப்பட்டுளதுமான "அமரர் கோ" என்னுந் திருப்பதிகம் பாடியருளியபின் அறிவுதெறிக்குரிய பல சாத்திரங் களையுந் தோத்திர சாத்திரங்களையும் உலோகோபகாரமாக விரிவிலருளிச்செய்த சுவாமிகள் அங்ஙனம், பெரிதுஞ் சுருங்கி நின்று பெரும்பொரு டருமாறு பொதுமையி லருளிச்செய்த ஞானவாக்கிய முற்றிற்று."

என வரையப்பட்ட வாற்றானு முறுதிப்படுத லோர்க வென்க.

அறிவில் பொருட்கெல்லாம் யாதானுமொரு வலிமை காணக்கிடக்கையில், அறிவுள்பொருளா முயிர்க்கொரு வலிமையுமின்றெனல் யாண்டுமெஞ்ஞான்றுஞ் சாலாதாகலின் ஆன்மாவுக்கு ஆன்மசத்தியுளதெனுந் துணிபு ஒல்லுவதேயாம். அச்

* இந்நூல்சேர்ந்த புத்தகம் — 1905 - ஆம் ஆண்டிலேயே அச்சிடப்பட்டது.

சத்தி, வாக்கினை யடக்குங்காறுஞ் செல்லத்தக்கதாயினுஞ் செம்பிற் களிம்பு போலுள்ள மலத்தி னீக்கமென்னும் பாச மோசனத்தைச் செய்துகொள்ள மாட்டாதே; அங்ஙனஞ் செய்யொரு வலிமை நின்றிருவருட் சத்திக்கன்றோவுளது; அஃதென்மாட்டிரங்கி யருளாவிடின் யாதுபுரியவல்லே னென்பார் — "ஆளென் றாற்றுவேன் வாயையு மடக்குவேன் உன்பழுதற்ற திருவரு ளிரங்கிடாதே லென்ன பண்ணுவேன் ஐய" என்று விவகரித் தினைவுகூறினாரென்க. இங்ஙனம் ஆன்மசத்தி, தன்னளவிலுள்ள மாயை கன்மங்களை யெவ்வாற்றான் வெல்லினும் ஆணவாந்த காரத்தை யிறையருளின்றி வெல்லாதென்பதும், அப்படி வெல்லுமொரு தொழிலே 'அனுக்கிரகம்' எனப்படுமென்பதும், அஃதீசனுடைய மா பெருந்தொழில் ஐந்தனுள் ஒன்றென வொண்ணுல்க ளெடுத்தோதுமென்பதும் பெறப்படுமென்க. இவ்வனுக் கிரக காரியந் திரோதானத்திற்குப் பின்னர்க் கூறப்படுவதேயாயினுந் திரோதான நீக்கமே அனுக்கிரகமாயும் அனுக்கிரகமே திரோதான நீக்கமாயு மிருத்தலின் இருளாகவு மொளியாகவு நிற்கின்ற திரோதை யென்னும் அருட்சத்தி ஏக காலத்திற்றானே அவ்விரண்டு காரியமுமிழைக்க வல்லதாகவு மெண்ணப்படுகிறது. ஆன்மாவென்னு முயிர்க்குரிய ஞானவியாபகம், பதிஞானம்போலப் பரிபூரண வியாபகத்ததன்று; சிறிதேயாம். இச்சிறிது, முகக்கண் வியாபகத்தினின்றும் பெரிதாக வெண்ணத்தக்க அகக்கண் வியாபகமாம். ஐம்புல வடக்கத்தான் இது கைவந்தார், முகக்கண்ணானே இத்தூலப் பிரபஞ்சத்திற் சில பொருள்களைக்காண்டல் போற் சூக்குமப் பிரபஞ்சத்துஞ் சில பொருள்களைக் காண்பராயினுந் தகுதவமுடை யராற் றரிசிக்கத்தக்க ஈசனைக் கண்டுகொளமாட்டார். ஈசுவரநாத்திக கபிலர் ஈண்டைக்குத் தகுசான்றாவர். அம் மாட்டாமையின் அவனதனுக்கிரகம் பெறலு மாராது. அனுக்கிரக வழியேதான் பதிநிட்டையிலெய்து மனுபவஞானமுண்டாம். இஃதிந்தூ லகத்தும் —

"மூடி னானும் விழித்தானு மூவா முதலை யொருபடித்தாய்க்
கூடி யிருக்கக் காண்பதுவே குறையில் பதியி னிட்டையெனாக்
கோடித் திடுநற் பனுவலெலாங் கொற்றத் தனியே குயின்றவிதில்
ஆடி யடங்கத் திருவுளத்தெண் ணாயோ பேயா யலைவேனை." [க0சு - ௩]

என்னுந் திருப்பாட்டிற் கூறப்பட்டுளதே. இவ்வனுக்கிரக பதிஞானந்தானே ஆசிரியர் - அருணகிரிநாதரு மெய்தப்பெற்றன ரென்பதை,

"பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே"

என்னுந் தமிழ்வேத மொழிகளிற் பெறலாம். இவ்வனுக்கிரகம் — ஆரன்பு செய்யார்மாட் டாராதென்பதூஉம், அன்னோர்புரி தருமமும், தவமும், செபமும், சமாதிஞானமும் பயன்படாவென் றிறைவனாகிய உமாபதி யோதியருளின னென்பதூ உம் வாயுசங்கிதையின் உத்தரகாண்டம் —

" கருமமா தவஞ்செ பஞ்சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர் வசம தாகிப் பொருந்திடேம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்பேம்
உரைசெய்வே மவர்மு னெய்தி யவருளத் துறைவே மென்றும்."

என வோதுதலின் இனிது பெறவுள்ளன. இவ்வாய்மைத் திறத்தானன்றே சுருதி - கைவல்யம் —

(திரொமுகம் நீலகண்டம் ப்ரசாந்தம்।
யஸ்மாந்நாந்யத்பரமஸ்தி கிஞ்சித்
வாக்ஷ்வரோக்ஷிண்தவ்யவாஸ்தாஸி।
ஜூஷ்வாதம் ரேதியுஷைஷி
நாதஸ்வம்யோவிஷ்தயெ।

த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம்।
த்யாத்வாமுநிர்கச்சதி பூதயோநிம்
ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்।
ஜ்ஞாத்வாதம் ம்ருத்யுமத்யேதி
நான்ய: பந்தா விமுக்தயே।)

" முக்கண்ணனும், நீலகண்டனும், மிக்கசாந்தனும், பூதகாரணனும், சமத்த சாக்ஷியாயுள்ளானே முனிவன் றியானித்து இருகோக்கடக் தெய்துகின்றனன்: விடுதலைக்கு வேறு வழியின்று." என அறிவுறுப்பதாயிற்று. இவ்வதாரணும், சுருதி - பிருஹஜ்ஜாபாலம் —

(நமஸ்தே ருத்ரமன்யவ உதோத இஷவே நம:।
பாஹுப்யாமுத தே நம:॥
நமஸ்தேஸ்துபகவன்விஸ்வேஸ்வராயமஹாதேவாயத்ர்யம்பகாயத்ரிபுராந்தகாய
த்ரிகாலாக்னிகாலாயகாலாக்னிருத்ராயநீலகண்டாயம்ருத்யுஞ்ஜயாயஸர்வேஸ்வராயஸதாசிவாயஸ்ரீமன்மஹாதேவாயநம:।
தத்புருஷாயவித்மஹேமஹாதேவாயதீமஹி।
தன்னோருத்ரப்ரசோதயாத்॥)

" நமற்காரம், நமற்காரம்: யான் உன்னைச் சரணமடைந்தேன்: சம்புவே! உன்னுடைய நிருவடியிரண்டிலும் எனக்கெஞ்ஞான்றும் பத்தியிருத்தல் வேண்டும்" என விட்டுணுமூர்த்தி வேண்டுதல் செய்தனரென்னு மொரு நயமெடுத்துரைத்தலே கோக்குமாற்றானும் பரமேசுர பத்திருசியறியாப் பதடிகளான், அவனே யெவ்வாற் றானுங் காணப்பெறுச் சிதடர்களான், அடை வடை யுடை யவரும் படியர்களான், மடியர்களான் மெய்ஞ்ஞானம்போலச் சில நிகழ்த்தி வரையப்பட்ட வெழுத்துக்களும் எப்பெற்றிய? எனக் கடாவுங் கடாச்சு ணுறுஉமுண்மை தெள்ளியோ ருணாக் கிடக்கின்றதன்றே. நுண்மா ணுணர்வுடையீர்!

" உலப்புதிப்பி லாவுனடி யடைதலன்றிக் கதியிறிதொன் றுண்டே யென்று
பலத்துழல்வ தேபெருத்த வஞ்ஞான மஞ்ஞானம் பரமார்த் தத்தைத்
தலத்திலுறை பசுக்கடரத் தளவாக வருளவருத் தானே காட்டு
நலக்கடவு ளேயெனது நவைநீர்க்க வொகரமதி னடியா யன்றே."

எனத் திருத்தொடையற்கண் யாங் கூறியதூஉம் எத்திறவுண்மையினை காட்டுகின்றது; உய்த்துணர்மின்கள்.

"பாச ஞானம் பசுஞானம் பாதி யொழியப் பதிஞான
தேச முடையோ னல்லாக்கா னிகழும் பவமா யிரங்கோடி
பேச வெடுத்தா னேயெனினும் பெயர்ந்து மாயு மோசெம்மின்
வாச மான காளிதம்போ லதனி தொடுத்து வருபாசம்."

எனச் சூதசங்கிதையிலே தேகோற்பத்தியத்தியாயத்திலே நிகழொரு செய்யுளு மிங்குச் சிக்கிக்கற்பாற்றே. பரமேசுர பத்திமைவழி ஞானம்விழையார் இதயமு மில்லமும் பிசாசுவாழ் கடறும், படுகாடுமாம். இவரை யெதிர் முகம் வரக் காண்ட லும், இவரிருக்கையுட்புகலும், இவருடம்பு தீண்டிய காற்று கோக்கென்பன மேனியிற்படப் பெறலும், இவரைக் கனவிலேனுங் கண்ணுறலும், இவர்சொல்வழி நிற்போரை யெதிர்வரக் காண்டலும், இவர் கடைதரு நடவையி னடத்தலும் ஆகாதன வெனவும், இவருறையுண் முகடியினுறையுளாம்: இவரிருத்தவிடனுக் கருகிருத்தலும் எரிதிரய விருக்கையாம்: இவர் மனைத்தெருவழியிற் போதலும் அறக்கொடிதா மெனவும் எண்ணுகல்லார், அவற்றென்றனையுஞ் சாராது நீங்கிநிற்பரெனுந் தருமத்தினை யிக்நூல் அஅ - ஆம் பத்து நிகழ்த்துமன்றே. இன்னும், பரமேசுரபத்தியின் மா மாட்சியைப் பல்லாற்றானும் விவகரித்து மதனுறுத் தறிவுபோதித்தருளே இந்நூலுழை ஆங்காங்குக் காண்பதாகும்; உய்த்துணர்க.

இழுதை = அறிவிலான்.

வணாகான் - வருமொழி முதற்கண் நகரமிருத்தலின் நிலைமொழியிற்று மகரம் கெட்டது; வணம் - வண்ணமென்பதன் றொகுத்தல்.

வெண்மடல் — வெள் - இயற்கை அடைமொழி; இனம் விலக்க வந்ததன்று; என்னை? கரும்மடல், செம்மடல் இலவாகலின்; மடல் = பனையேடு.

எய்தா — ஆ - இறந்தகால வினையெச்சம்.

முன்னென்னும் இடப்பொருட்சொல் அம்முச்சாரியை பெறீஇ "முன்னம்" எனவாயது.

வைது கொள்வேன் — கொள் - தற்செயலுணர்த்தும் விகுதி.

சுக + உதயம் = சுகோதயம்; குணசந்தி; வடமாற்றம்.

என்ன - வினைவடியாகப்பிறந்த எவனென்னும் அஃறிணைப் பொதுக்குறிப்பு முற்று 'என்' என விகாரப்பட்டு அகரச்சாரியை பெற்றது. என்னென்பதூஉம், என்னவென்பதூஉம் எவனென்பதன் மரூஉ என்பாருமுளர். (சு)

எம்பேரி லேபாட வெம்முண்மை கூறவிதி
யென்னுமொர் பிராரத்தமே
இந்நாளி லுள்ளதது தீர்தாறு மருள்செயோ
மென்றமுடி வேதுமுண்டோ

கம்பீர வுறழ்விலே னறிகிலே னன்னணங்
கடவுளா முனைவியக்குங்
கதழ்வாய பிராரத்த மதுகுறுகி லமிழ்திலே
கனிநழுவி வீழ்தல்பொருவுஞ்
செம்பாய யானுநற் றங்கமா வேன்வேறு
திறமாய தீயவிதியால்
தெள்ளரு ளகன்றுநின் றாலென்ன செய்குவேன்
சிந்திக்கி லிதனைவெந்நோய்
பம்பாது போமோ பரானந்த வெள்ளமே
பக்ஷமெப் படியும்வேண்டும்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 7

எம்முடையபெயரிற் பாட்டுக்கலைப் பாடவே யெமது தத்துவத்தை வகுத்துச் சொல்லவே விதியென்னுமொரு பிராரத்தம் இக்காளி லுனக்குள்ளது: அதுநீருந் தீணியும் யாம் அருள்புரியோமென்ற சித்தாந்தம் யாதேனுமுளதோ? ஆழ்ந்த வுணர் வில்லாத யான் அறிகிலேன். அவ்வாறு கடவுளாகிய உன்றெழில்கலை வியப்பினுட் படுத்துக் கூறும் பெருமையான பிராரத்தம் என்னைக் கிட்டுமாயின் (அது), பாலிலே பழகழுவி வீழ்தலையொக்கும்; செம்பைப்போன்ற யானு கல்ல தங்கமாய் விடுவேன். அவ்வாறின்றி வேறு திறப்பட்ட தீய விதியிலுலே (தினது) ஞானத்திருவருள் என்னைத் தீண்டாது கிற்குமாயின் யாது செய்வேன்! இதனைச் சிந்தித்தாற் கொடிய துன்பம் பெருகாமலு மொழியுமோ? மேலான இன்பப் பிரவாகமாக வுள்ள தெய்வமே! தினது பகூம் எனக்கெவ்வாற்றுனும் வேண்டும்.

அனுதியே கலந்த களிம்புடைச் செம்பு போன்றது சகசமலத்தோடு முள்ள சிவான்மா; அனுதியே தூய தங்கம்போன்றது பரமான்மா; களிம்பொரீஇயவழிச் சுத்தமுறு செம்பு தங்கம்போலிலகுமாறு மல மொரீஇயவழிச் சீவான்மாவுஞ் சிவமென விளங்கத்தக்க தென்பார் "செம்பாயயானுநற் றங்கமாவேன்" என்றனரென்க. சீவான்மாவின் சகசமலம், தாமிரமென்னுஞ் செம்பிற் களிம்புபோல்வ தென்பது—

(தண்டுலஸ்யயதாசர்ம யதாதாம்ரஸ்யகாளிமா।
நச்யதிக்ரியயாவிப்ர புருஷஸ்யததாமலம்।
ஜீவஸ்யதண்டுலஸ்யேவ மலம்ஸஹஜமப்யலம்॥)

"தண்டுலஸ்யயதாசர்ம யதாதாம்ரஸ்யகாளிமா।
நச்யதிக்ரியயாவிப்ர புருஷஸ்யததாமலம்।
ஜீவஸ்யதண்டுலஸ்யேவ மலம்ஸஹஜமப்யலம்॥"

எனச் சாமவேத மஹோபநிஷத்தின் ரு-ஆம் அத்தியாயத்தில் வரு பிரமாணமா யிருக்கின்றது. காளிமா = களிம்பு. ஆன்மாவுக்கு மலம் சகசமென்றும், அது முத்தியிற் றன்மகிமையை யிழந்திடுமென்றும் எடுத்துக் காட்டப்படுமுவமை

பலவற்றுள்ளும் இச்செம்பே மிக்க பொருத்தமுடைத்தென்க. 'ஸஹஜம்' என்னும் வடமாற்றம் உடன்பிறப்பு; உள்ளது என்னும் பொருண்மைத்து.

பிராரத்தம் - (ப்ராரப்ஸம்) 'ப்ராரப்தம்' என்னும் வடமொழியின் விகாரம்.

கம்பீரம் = ஆழம்; நிகண்டு - அமரஸிம்ஹத்து வாரிவர்க்கங் காண்க.

உறழ்வு = உணர்வு.

"அறிகிலேன்" என்றதிலே கில் = ஆற்றலுணர்த்தும் இடைகிலேயாயின் எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டதாகும்: இல் = எதிர்மறை யிடைநிலேயாயின் கு - சாரியையாகும்.

அன்னணம் = அவ்வாறு; அன்னவண்ண மென்பதன் மரூஉ.

உணை - னகரவொற்றுத் தொக்கது.

பழுத்தது, பழம்; அம் - விணைமுதற்பொருள் விகுதி.

தங்கம் = மாற்றுயர்ந்த பொன்; 'தங்கச்சினகரம்' என்று திருச்செந்தி னிரோட்ட கத்தாருங் கூறினர்.

செய்குவேன் — கு - சாரியை.

கோய் - 'கொ' என்னும் பகுதியடியாப்பிறந்த தொழிற்பெயர். (ஈ)

தொட்டதே பற்றாக நிற்குமன மாய்த்தருட்
டூவெளியை யெவ்விதத்துஞ்
சொந்தப் படுத்தவென வீரமுற் றேயொரு
சுரத்தே தனித்திருந்து
நிட்டைசா தித்தகா னிற்குநிலை காட்டுமா
நிறைகருணை மேனிகொண்டந்
நின்மலப் பொருளையுன் னெஞ்சினிற் றங்கவொரு
நிலைமைசெய் தாய்கொலென்று
சுட்டிவின விப்போய பின்னரடி யேனச்
சுரத்திடை யிருந்துன்கணே
சுகமௌன நாட்டமா நின்றது பொறாமலோர்
சூழ்ச்சிகொண் டெழவிதித்தாய்
பட்டபா டெல்லாம் வியர்த்தமா மோவெங்கள்
பக்ஷமுள பரதெய்வமே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 8

(அபிமானத்தாலே) தான் பிடித்ததே பிடியாக நிற்கின்ற சக மனத்நிணச் சாம்படிசெய்து எவ்வழியாலேனுந் தூய அருள்வெளியைச் சுவாதீனப் படுத்த வென்று (அதற்குரிய) வீரப் பாண்மையையு கானடைத்து ஒருகாட்டிலே தனித்திருந்து கிட்டைசாதித்தகாலையில், யான் நிற்கவேண்டிய நிலையை யெனக்குக் காட்டியருளு மாறு ஆர்த்த அருட்டிருமேனி கொண்டுவந்து "அந்த கின்மலப்பொருளே யுனது நெஞ்சகத்தே தங்கும்படி யொரு நிலைமை செய்தாயோ?" என்று நீ சுட்டி வினவிச் சென்ற பின்றை அடியேன், அக்காட்டகத் திருந்துகொடே உன்மீது சுகமௌன நாட்டமாக நின்றதை யாதோவொரு சூழ்ச்சியால் என்றுகொள்ளாம லெழுந்துவிடும் படி விதித்தனே. எங்கள் பஷமுள்ள பரமதெய்வமே! இன்றுகாறும் பட்ட பாடெல்லாம் வீணாய்ப்போமோ?

இத் திருப்பாட்டகத்தே 'ஒரு சுரம்' எனப்பட்ட காடு யாண்டுளதென்பது பற்றி 'முண்டமுண்டனமும்' என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கட் கூறி யாயிற்றுகலின் ஈண்டுக் கூறவில்லை யென்க.

'மனம்' என்றவிடத்து இரண்டனுருபு விரித்துரைக்க.

பூதவெளி முதலிய பல விகாரவெளிகளிருத்தலின் அருள்வெளிக்குத் 'தூ' என்னும் அடைகொடுத்தோதினை ரென்க; தூ = சுத்தம்; தூய்மை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் இடை யகரவொற்றுக்கெட்டுத் து - என நின்றது.

சுரம் = காடு.

கொண்டுவந்து என்பது 'கொண்டு' என நின்றது.

காட்டுமா — ஆ - ஆறு என்பதன் விகாரம்.

'செய்தாய்கொல்' என்றது செய்தாயோ? என்னும் பொருள்பட வருதலிற் கொல் - ஐயமாம்.

'என்று' என்னுமிடைச்சொல் வினைப்பொருளில் வந்தது.

சூழ்ச்சி = ஆலோசனை.

எங்கள் - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை; நெஞ்சை அல்லது தம்மையொத்த அடியவரை யுளப்படுத் துரைத்ததென்க. (அ)

அவிவேக மாயைக் கரூபநுவ லின்விடய
மண்ணுமன மென்பதேயாம்
அங்ஙனே யுருவஞ் சொலிற்குரங் கக்கண்
ணமைந்தபைந் தொடியரேயாந்
துவிதமுங் கொண்டமிசி ரங்கூறி னத்தொடியர்
சொல்லிதச் சொல்லுமவர்கள்

சூடுசும வாசமுந் திமிர்களப மோதமுஞ்
சுரதவச னங்கண்மலிய
விவிதமா கப்பாடு சங்கீத சல்லாப
மெல்லுரையு மேயாகுமால்
மேதினியி லிம்மாயை வலிவெலக் கருதினுன்
மேன்மைப்பிர தாபவருளாம்
பவிடிய மிலாதுவன் பேச்சினா லாவதோ
பற்றிப் பிடிக்கவுளதோ
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 9

நடப்பொருளாயுள்ள மாயைக்கு அருவஞ்சொல்லுமிடத்து விடயங்கள் சேரும் மனமென்று சொல்லப்படுவதேயாம். உருவஞ்சொல்லுமிடத்து மானின் பார்வை பொருந்திய பெண்களேயாம். உருவமும் அருவமுமாகிய இரண்டினையுங் கொண்ட உருவருவஞ் சொல்லுமிடத்து அப்பெண்களுரைக்கும் இதவசனங்களும், அவர்கள் சூடிக்கொள்ளு மலர்களின் மணமும், பூசிக்கொள்ளுங் களபமும், நெடுங் தூரம் பரிமளிக்குங் கலவையும், காமரசம் பெருகப் பல்வகையாகப் பாடுஞ் சங்கீத சல்லாப மிருது பாடணங்களுமேயாம். பூமியுழை இத்திறத்த மாயையின் மதுகையை வெல்ல வொருவன் முயன்றால் (அது மூற்றுப்பெறல்) உனது மாண்புடை யருணல மில்லாமல் வென்று விடுவேனென்னும் வலிய சொன்மாத்திரையாலாவதோ? கையினைற் பற்றிப் பிடித்துக் கொளத்தான் இயைந்ததோ? [ஆகாது; இயையாது என்றபடி.]

மாயை அறிவில்பொருளாகிய சடமாகலின் அதனை, "அவிவேகமாயை" என்றனர் சென்க.

(அகாத்மமூலம்மாயா। - - - - தத்ஸ்வரூபமஜ்ஞானம்।
ததேவமூலப்ரக்ருதி: குணசாம்யமவித்யேத்யாத்
யநேகாகாரா ஜகதாகாரேண பரிணதா॥)

"ஆன்மாவல்லாத பொருள்களின் காரணமே மாயை' 'அவளது சுவரூபம் அஜ்ஞானம்: அதுதான் மூலப்பிரகிருதி: குணசாமியம், அவித்தை இவைமுதலிய அனேகாகாரமுடையாள்: சகதாகாரமாகப் பரிணமித்துளாள்'" என்று ஸர்வ ஸாரோபநிஷத் உரைத்தலும் இம்முடிபென்க. மாயை, முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தி யாகலிற் பெண்பாலாகக் கரையப்படல் பண்டைப் பெருவழக்காம்.

விடயம் = பற்றப்படுபொருள்.

பைந்தொடிபர் = பசியவளையல்களையணிந்த பெண்கள்.

களபம் = கலவை.

மோதம் = நெடுந்தூரம் பரிமளிக்கும் கலவை; இஃது 'ஆமோதம்' எனப்படுதலே நிகண்டு - அமரஸிம்ஹுத்துத் தீவர்க்கத்தே காண்க.

"விஞ்வொடு விடையும் விளம்பல் சல்லாபம்" என்று பிங்கலநிகண்டு கூறுதலிற் "சல்லாபம்" என்பது விஞ்வும் விடையுஞ் சிவணிய பொருட்சொல்லாகும். "ஸல்லாபோ பாஷணம் மிதஃ" என்று மேலே அமரஸிம்ஹரும் கூறுதலின் அஃதொருவருக்கொருவர் பிரீதியிற் பேசிக்கொள்ளும் வார்த்தையென வறியக் கிடக்கின்றது.

விண்டுவினுற் கோறல்புரியப்பட்ட மது கைடபரென்னும் அசுரர்களுடைய மேதஸினுல் நிரம்பிய பூமி 'மேதினீ' என்னும் பெயர் பெற்றதென்றும், அவ்வடசொல் தமிழில் 'மேதினி' எனத் திரிந்ததென்றும் கூறுப. மேதஸ் = கொழுப்பு.

பௌஷ்யமென்னும் வடசொல் 'பவிடியம்' என விகாரப்பட்டது. புஷ்யம் - பௌஷ்ய மெனவாதலே ஆதிவிருத்திசந்தி யென்பர். இச்சந்தி யுறுமொழியைத் தத்திதாந்த வடமொழி யென்றும் கூறுவர். புஷ்யம் = மங்களமென்னும் பொருட்டாதல் விச்வப்ரகாசத்திற் காண்க.

பற்றிப்பிடித்தல் - செவிக்குச் சொல்லின்பம் தோன்றச் சிறந்துநிற்கு மொரு பொருட் பன்மொழி; 'உயர்ந்தோங்கு பெருவரை' என்பதொக்கும். (கூ)

குத்திமிசை வாழுநன் மைந்தர்களு ளேசிலவர்
கூருறு கருக்குமட்டை
கொண்டுமலை வெட்டமுயல் கின்றதொப் பத்தமது
குற்சிதப் புன்மதிகொடே
முத்திற வகங்கார மாயையை மடித்தரிய
முல்லைபெற் றுய்குவமெனா
மூச்சைப் பிடித்துமல மூத்திர மருந்தியுனை
முன்னா துழன்றுசாவார்
அத்தன்மை யாவுமென் புத்திக் கொவாதேக
வருணெறியை நேடவைத்த
அப்பனே யென்னெண்ண மவலமா தற்கிடனு
மாமோ சொலாய்நலஞ்சால்
பத்திமைக் காரர்க்கு மருளருண கிரிபரா
பரமேயெ னன்பினிறைவே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே. 10

யோக விவேகிகளுக்கே யன்றி கலம்பெருகிய பத்தியுடையவர்களுக்கும் அணுக்கிரகப் புரி அருணகிரிநாத முனீந்திரரின் பராபரவத்துவே! எனதன்பின் பரிபூரணமே! மண்ணுலகின்கண் வாழாகின்ற மனிதர்களுட் சிலர், கூரிய கருக்கு மட்டையினைக்கொண்டு மலையினைவெட்ட முயல்கின்றதுபோலத் தமது பொலிவில்லாத அற்ப புத்தியினைக்கொண்டே [பூதாதி, வைகாரிகம், (தைஜஸம்) தைசசமென] மூவகைப் பட்ட அகங்கார மாயையைக் கொன்று அரிய வெற்றியைப்பெற்று வாழ்வோமென்று சுவாச பந்தனம் பண்ணி (மூலப்புரியென்று) மலத்தையும், (அமுரியென்று) மூத்திரத் தையும் அருந்தி உன்னைத்தியானியாமே உழிதக் தலைப்புறுவர். அவர்களுடைய பெற்றி யெல்லாம் எனது புத்தியிற் பொருந்தாதொழிவான் திருவருட்செப்பத்தை நாடவைத்த என்னுடைய அப்பனே! (நின்றிருவடி நீழலையடைய வேண்டுமென்னும்) என தெண்ணம் இங்ஙனம் அலைப்படற்கு மிடமுளதோ? கூறியருள்வாயாக.

"முன்று தமுன்று சாவார்" என்னுக் தொடருமை முன்னல் = நியானம். இஃதியாண்டு மெஞ்ஞான்றும் புரியத்தக்க 'இலயயோகம்' எனப்படும். இதனை,

(மஹாநிஷ்டவஸுவாஜ்ஞாயாயெநிஷஞ்சீஷஸி।
வஸவ இயயோமஃ)

(கச்சந்திஷ்டம்த்ஸ்வப்நம்புஞ்ஜந் த்யாயேந்நிஷ்களமீச்வரம்।
ஸதவ லயயோகஃ)

"கடக்குஞான்றும், நிற்குஞான்றும், உறங்குஞான்றும், உண்ணுஞான்றும் நிட்களமான (= நிட்களத் திருமேனியுடைய) ஈசுவரனைத் நியானிக்க வேண்டும். இதுவே இலயயோகமாம்" என யோகதத்வோபநிஷத் வழங்குதலினறிக. இவ்வுபநிஷத்தே —

(இயயோமஸ்தாயஃ கொஷிஸஃவரிகீதிஷ்டதஃ।)
லயயோகச்சித்தலயஃ கோடிசஃ பரிகீர்த்திதஃ॥)

"இலயயோகமென்பது சித்தலயமென்றே கோடிமுறை கூறப்பட்டுளது." என்று மியம்புதலினும் பிரமாணங்களுண் மனோலயமென வருதற்கு ஈசுவரசிந்தனை யென்னும்பொருள் கோடலேயன்றி வேறுகோடல் பொருந்தாது.

(அதிமோஹகரீமாயா மமவிஷ்ணோச்சஸுவ்ரத।
தஸ்யபாதாம்புஜத்யாநாத் துஸ்தராஸுதராபவேத்॥)

"(பிரமனுடைய) எனக்கும் விட்டுணுவுக்கும் மிக்க மோகத்தை யுண்டுபண்ணு மாயையானது அம் மகாதேவனுடைய பாதாரவிந்தத் நியானத்தினால் எளிதாகக் கடக்கப்படுவதாம்."

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறக் தேனி னிப்பிற வாத தன்மைவக் தெய்தினேன்"

"காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
விட்டிற் புகுதன் மிகவெளிதே"

என்று வடமொழிமறையுந் தென்மொழிமறையுங் கூறுதலு மீங்குக் கருதிக் கொள்வ தோடு—

"அருணை நாத னறிவினான்
மருவு தேவ மணியருண்
முருக வேளை முழுவதுங்
கருதும் யோகு கமழுமே."

என எம்பெயர்ப்பாடற்க ணெழுந்தளதுங் கருதிக்கோடல்வேண்டும். ஈசுவரனது திருமேனி, அல்லது திருவடியே அத்தியானத்திற் பாவிக்கத்தக்க தென்பது பற்றிக் கடவுள்வணக்கத்து ௩-ன் உரைக்கண் 'அன்னியபாவனை' என்பது கூறிச்செல்வுழி— "நிர்க்குண உபாசனை செய்கின்றாஞ் சொரூபத்தைத் தியானிக்கின்றாமெனக் கண்டதையே கருது முருவமனத்தைக்கொண்டு கண்கூடாயுள்ள பூதாகாசத்தைப் பாவிப்பார் கதியுமாம்" என்று பணித்தவிடத்தே பகர்ந்தனமால். அவ்விவர மீண்டுங் கருதிக் கோடற்பாற்றே. "கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே" என மறைமொழி பிறந்திருப்ப; இங்குக் கழலாய திருவடியினைப் பாவிக்குமாறு பணிப்ப தெவன்? என்னும் ஐயவினா வெழுதரின், "ஆஅ! இயைபறியாது கடாய பேதாய்! 'சிவம் வெளிப்படூஉம் அனுபூதியில் அச் சிவமயமாய் நிற்பதன்றி யாதொன்றனைச் சுட்டியறியு நிகழ்ச்சிக் குரிய திரிபுடியின்று' என்பதனையே அம்மறைமொழி யுணர்த்துமென்று ௩-ஆம் பத்தின் ௫-ஆந் திருப்பாட் டுரையிலேயே சொற்றதுண் டதுபொச்சாந்த நிலைநின் றிது கடாவலுற்றனை! என்பதூஉம், திரிபுடிரகிதம் பாவனை கடந்த நிருவிகற்ப சமாதி நிலையிற்றா மஃதிந்நூ லகத்தும் (௧௦௩-ஆம் பத்து ௮-ஆந் திருப்பாட்டு)—

'பாவனை யிலட்சிய மிழந்துசும்மா பதைப்பற விருந்திடு மொருநிலைக்கே
தூவருட் சிவசுக ரூபமது தோன்றிடும்'

எனக் கூறப்பட்டதும் (௩ - ஆம் பத்து ௫ - ஆந் திருப்பாட்டில்)

'முன்னிலை யிருக்கி லேகாகார மாயிலகு மோனபர நிட்டைகூட
முடியாது'

எனப் புகலப்பட்டதுமா மென்பதூஉம், இச் சமாதி அருவ மன மார்ந்ததன் பின்னே யிறையருளா னெய்தத்தக்கதாகலின் இஃதவ்வருளிறைவனது திருமேனி பாவிப்பார் முன்னம் அவன் இனிது வெளிப்பட்டுநின்றனுக்கிரகிக்க வவர் பெறும் பேறேயா மென்பதூஉம்,

'தையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே'

என அம்மறையு மறிவுறுத்திற் றென்பதூஉம்" விடையாயுறும். மேலே கூறிப்போந்த யோகமில்லாது ஞானமின்று, மோக்கமின்று என முறையும், முடிவும் மேலே யோகதத்வோபநிஷத் —

(யொமஹீ மகயஂஹூ மஂஸொகூஂஹவதியூவழி ।
யொமொவிஹூ மஹீ மஷ்டூ மகூஂஸொஸொகூஂகஷ்ணி ॥
யோகஹீநம்கதம்ஜ்ஞாகம் மோகூதம்பவதித்ருவம் ।
யோகோயிஜ்ஞாகஹீநஸ்து மகூமோமோகூகர்மணி ॥)

"யோகமில்லா ஞானம் யாங்ஙனம் வீடுபேற்றினை நல்கும் [நல்காது]. அவ்வாறே ஞானமில்லா யோகமும் வீடுபேற்றினை நல்கற்கு யோக்கிய முடைத் தன்று." என்றேதுழிப் பெறப்படுகின்றன. இவ்வுபநிஷத்தும், இதுபோற் சாதகெறி தழீஇவரு மேனைப்பிரமாணங்களும் இஞ்ஞான் றெளிதாகக்கிடைக்கின்றபடி முன்னை ஞான்று கிடையா வறுமையின்கட் பட்டாரான் இடைக்காலத்தே வரையப்பட்ட சுவடிகள், மேலை மெய்க்கெறி போதியாதனவே யாயின. இஞ்ஞான் றிம்மெய்க்கெறி, ஒல்லை யுய்திபெறுவார் யாவரும் பற்றத்தக்கதேயாயினும் சுசுவர பத்தியில்லா இலம் பாட்டு வெளிறர்க்கே முயற்கோடா யொழியும். அஃதொழிதலும் யானெனு மகங்தை மேலிடும். அது மேலிடலுஞ் சாகாதிருத்தல் இவற்றுலாமெனும் பேராசை பிறங்குழி மூச்சைப்பிடித்தன் மூத்திரங்குடித்தன் முதலிய காரியம்புரிய கேரும். அவை கேர் தலும் வாணாள் வாளாகழியும். அது கழியவே மரணமு மெய்துமாகலின், "உன்னை முன்னுதுழன்று சாவார்" என முடிவிடங் கூறினரென்க. இவ்விலய யோகத்தினை யோரிடத்திருந்துகொண்டே யுஞற்ற நினைவார் செய்யுமுறைமை யெவ்வாறெனின், — நுவறும். சீதோஷ்ண சமசய ஏகாந்தத்தானம தெய்தி, இசைவு, எழிலுடைய ஓராசனத் தினிதமர்ந்து, குகபிராணகவே மதிக்கத்தக்க தங்குருவின் றிருவடிமலர் சிந்தித்தபின்றை மனத்தினை ஐம்புலநுகர்ச்சியாம் விடயங்களிற் செல்லாது தடுத்தல் வேண்டும். அச்செவ்வி பிராண வாயுவும் அம்மனவலவா யடங்கும். அந்நிலை கூடலும் இதயதாமரை நடுவணை இறை திருமேனியைச் செவ்வே நியானித்தல் வேண்டும். அசையாது நிமிர்ந்திருந்து இரண்டரைக் கடிகைக்குக் குறையாமே காடோறும் இது பயிலத்தக்கது. இரவு பகல் சேர்ந்த ஆறுகால் இடையறுது நிற்கு நிலை யெய்திற் காரியஞ் சித்தியாம்; பாவங்கள் பாறும். இறைவன் ஞானசாரியனாக வெளிப்பட்டனுக்கிரகிப்பதூஉம் அங்ஙனமேயாம். மேல், அவனது கட்டளையின்படி நடப்பதூஉங் கடப்பாடாம். வீடு பேறல்லாத வேறு வரங்களை நல்கியருளுமாறு வெளிப்படுமவன், இவ்வாசாரிய மூர்த்திக்கு வேருமொரு மூர்த்தியாய் நிற்பன். இவ் வாசாரிய பரமனது திருவாய் மலரினின்று "யாமுன்னை யேன்றுகொண்டாம்" என்னுமொரு திவ்வியத் திருமொழி தோன்றினும் உபாசகனது சனன மரண பயந் தீர்ந்து விட்டதெனுந் துணிவுமே கோடற்பாற்று. இக்கியலின் மாதவப்பேறுண்ட யாரது மனவருத்தமாக யாதுந் தேடிக்கோடல் கூடாது. இறை திருநாமத்தையுந் தியானத்தையு முபதேசித்த சற்குருபத்தி கேடடையின் அவை பயன்படாதுபோ

மாகலின் அப்பத்தி பேணற்பாலது. சாத்தியமாங்காறும் எவ்வகைப்பட்ட கூட்டத் தொடர்பு மிருத்தலாகாது. சொற்ற வொருநியானம் புரியுஞான்று நுகூப்பு, பிடர் முதலிய வுறுப்புக்களிலே கோவுண்டாயிற் பொறுத்திருந்து விடாது பயிறலான் அது சில தினங்களுளொருவும். உறக்கத்தோன்றிச் சித்தமே கெடுமாயின், "கற்கு நூற் சொல்லிப் பல்பொழுதும் பயின்றுங்கு, வன்னறைப் படமாங் கலிங்கத்தினே மாறி மாறி யொலித்தென" என்று இந்நூல் கoள - ஆம் பத்தி னுவன்றவாறு ஆண்டும் விடாது பெயர்த்தும் பெயர்த்தும் முயறல்வேண்டும். முயறலிற் சாக்கிராவத்தையாகிய விழிப்பெய்தின்,

"விழிப்புண்டா மாயின் விளங்குமயிற் கையன்
பழிப்பில்பூவ் கோயிறனேப் பார்த்து — விழிப்புனல்
ஊற்றெடுப்ப மேல்வலம்வந் தோகையுடன் வீழ்ந்தெழீஇ
நீற்றினேயிட் டுள்ளடக்க னோர்." [கசுஉ]

என்னுங் காசியாத்திரைத் தொடர்பில் யாங்கூறியவா றயர்ந்து கோ கண்டு கொளல் வேண்டும். மனமும் பிராணனு மடங்கிய இவ் வுட்கும்பக நிலைகின்று செபிக்கும் மானசசெப மந்திரமும், நியானமுமே இனிது பலிக்கும்; அருளே ரூவாகத் திருமந்திரஞ் செபித்தலும், அருளே நிலைவாகத் திருமேனி நியானித்தலு மெனப்படுஉம் இச்செய்கை,

முழுமனத்தோ டொருங்குபற்ற லெனவும்,
எகாக்கிரசித்த வழிபா டெனவும்,
நினையாதுநினைத்த லெனவும்,
சித்தத்தைச் சிவன்பாலேவைத்த லெனவும்,
அபாவயோக மெனவும்,
பிரமாண்டதான மெனவும்,
தைலதாரையுறழ் சிந்தனே யெனவுஞ்

சாற்றப்படலோடு வேறு பலநிறப்படவும் விளம்பப்படுஉ மாகலின் ஆண் பெண்ணென்னு மிருபாலார் விடுதலேக்கும் இத்தயோகந் தெள்ளிதிற் றெள்ளிது, தீவிதிற்றீவிதென அஃதள்ளுவாசெல்லாம் விழையோ ருபாயமாம். இம்பர், கoள - ஆம் பத்தின் கூ - ஆந் திருப்பாட்டு முதலியனவு முய்த்துணர்ந்து மேலுறுவனவெல்லாம் ஐயந் திரிபறக் கண்டுகொளலாம்; கண்டுசொண் முன்னமே, சரியையின் பயனை வெய்து சாலோக்கிய கதியினே முதல்வனது திவ்விய திருரூமோச்சாரண மொன்றி னுலேயே பெறலாம், கிரியையின் பயனைவெய்து சாமீப்பிய கதியினே எதிர்முகமாக அவனது செய்யதிருமேனி நியானிக்குங்காரிய மொன்றினுலேயே பெறலாமென்னு நுட்பமும், யோகத்தின் பயனைவெய்து சாரூப்பிய கதியினே இதயதாமரை நாப்பண் அவனது செய்யதிருமேனி நியானிப்பதாய அத்துவைதோபாசனே யொன்றினுலேயே பெறலாமென்னு மதிநுட்பமு மயர்வற வுணர்ந்துகொண்டு, இவற்றுள் யாதனேயேனு மனுட்டிப்பார்க்கு அனுட்டான கால இறுதியளவை எத்தனேயாமென்னு மாசங்கை யொழிதற்பொருட்டு —

(யூரமாஹு - த்யாகாச்ச)

"நியானத்தினலும்" என்றும்,

(யதெதகாமரதா தக்ரதுவிமொஷாஸ்
யத்ரைகாக்ரதா தத்ராவிசேஷாத்)

"ஏகாக்கிரம் எவ்வுழி, அவ்வுழியே தியானமுங் கூடும்; பேதமின்மையால்" என்றுங் கூறுகின்ற பிரஹ்மஸூத்ரத்தின் ச-ஆம் அத்தியாயமாகிய ஈற்றுக்கூறு—

(ஆப்ராயணாத் தத்ரபிதிருஷ்டம்
ஆப்ராயணத் தத்ராபிதிருஷ்டம்)

"சாங்காறும் (அனுட்டித்தல் வேண்டும்); எதனலெனின், — அங்கும் அது பார்க்கப்பட்டுளது." என்று மிழற்றலையும், சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடகம் —

(ஸலலு ஹவ ஏவம் வித்வாம்ஸ்ச ஏதே
அதோ அரண்யா ஏவம் வித் ஸ்வர்க்கம்லோகமேதி)

"இவ்வாறு தினந்தோறும் தியானிப்பவன் சுவர்க்கலோக மடைகின்றனன்" என்றும்,

(ஸவஷ்வேவம் வதுர்யதர்யாவதாயுஷம்
ப்ரஹ்மலோகமபி ஸம்பத்யதே)

"தன்னுடைய வாணாளெல்லாம் இவ்வாறு கடைதருவோன் பிரமலோக மெய்துகின்றனன்" என்று முரைத்தலையு மோருமாற்றானே அவ்வொவ் வொன்றும் மரணபரியந்த காடோறுஞ் செய்யத்தக்கன வென்னும் விவரமு முணர்ந்து கோடல் வேண்டும். கோடலின், எம்பெயர்ப்பாடற்கண் *உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகத்தில் —

"சளசள வெனப்பேசு நரவினை யடக்கிச்
சவம்போ லொடுங்கிடற்கும்
சகலகே வலம்வந்து தாக்காம லங்கனே
சாகாது செத்திடற்கும்
மளமள வெனக்கருணை மழையினை பொழிடேக
மதிமகன் செய்திடற்கும்
மாசற்ற சுடலைதனி லுடன்முழுது மொருஞான
வன்னியா னீற்றிடற்கும்
இளவலெம் பிரா முனைடெனை யிணைப்பதற்
கேசில்பிண் டம்போடவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே

*உள்ளூர் = அறிவிருக்கும் பிண்டத்தலம்.

தெளிவுள சுகானந்த வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே. [மரண முடிவு]

சரியையுங் கிரியையும் புதுமணக் கோலச்
சடங்கென நினைந்துகொளவுஞ்
சகயோக மணவறையுண் மணமகளு மகனுமுள
தரமென வறிந்துகொளவும்
அரியமெய்ஞ் ஞானமபி மானமச் சந்துறந்
தணைதலென வுய்த்துணரவும்
அங்கணுண் டாகுமின் பதையிருவ ருஞ்சொலா
வதிகுய்ய மெனவோரவும்
எரிநிரய யாதனையை நூறருண கிரிநிலையு
மிதுவே யெனத்தெளியவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
திரிபுகே டில்லினிய வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே." [விவாகமுடிவு]

எனவெழுந்துள்ள ௯௯, ௧௦௦ - ஆந் திருவிருத்தங்களுட் பரதகண்டத்தாருடைய மகாசம்பிரதாய கப்பீர மரணகன்ம முடிவும், விவாககன்ம முடிவு மொன்றுபட்ட பேரின்பமாய் முடியு முண்மைப்பொருளு முணரலாமாகலிற் பூவெலாம் போற்றொரு பொருளாய், பொதுவெலா மிலங்கொரு தெருளாய், தேவெலா மேத்தொரு தேவாய், சிவமெனும் பெரும்பெயரியவுளாய், தாவெலாந் தபுத்தரு ளிறையாய், தனிச்சுக மிசைத்தருள் விபுவாய், இதரமே யாது மிலதாய், யாதினு முடங்கியைந் துளதாய், விதரணப்புத்தேட் புணரியாய், விகிருத வினைக்கட் டிலாததாய், உதரமுற் றுதியா நலத்ததாய், ஒளிவெளி யென்ன விருப்பதாய், மோனமா டுடையர்காண் டிருவாய், மோகமா லுடையர்காண் பரிதாய், வானநா டுடையார் மாண்பிற்றாய், மனதுரைக் கடங்கா மகிமைத்தாய், ஞானமே தனாது வடிவிற்றாய், நடுவெளிக் குகையி லவிர்முத் தாய், நாகுமூப் பணவா வாழ்விற்றாய், நசையுநர்ப் புரந்தருணேர்மைத்தாய், பாகினு மினிதா யுளதாய், பரசெம தாசையின் னமுதாய், யோகிகள் குரங்கவுட் படுவதாய், யுகளமன் றொன்றெனப் படுவதாய், ஆமய மில்லோ ரணங்காய், அறிவினுக் காரோ ரறிவாய், ஓமெனு மொருசொற் பொருளாய், உயிரினுக் காரோ ருயிராய், பாமரஞ் செகுக்கும் பரமாய், பவக்கடல் கடத்துங் கலமாய், நனவின ரறியா நிலையிற்றாய், நாதநா தாந்தத் தகைமைத்தாய், கனவினர் காணாக் கரையிற்றாய், கருணிலைக் கெட்டாக் கதழ்விற்றாய், சினவு நீரே யில்லதாய், சிவாக்கிர மெனவே யுள்ளதாய், அன்பருக் கருளு மன்பிற்றாய், அளப்பி லியற்கை நிறைவிற்றாய், தன்பணை யறியாத் தனியாய்,

சகசசித் தாக்தக் கனியாய், இன்பரு ளியற்கை யின்பாய், எமைக்கொள் விழுப்ப வன்பாய், அண்ணியா யமணத்தருள் செயற்கைத்தாய், அளிவஃலப் படுமோ ரியற்கைத் தாய், கன்னலி னினிக்கு மாகண்டாய், கருத்நிணைக் கவரு மாகன்காய், யாதினு மேயொரு வன்மைத்தாய், யாதினு மேயொரு பெருமைத்தாய், யாதினு மேயொரு நுண்மைத்தாய், என்றுமோர்படித்தெனப் படுவதாய், இரண்டினு மேம்பட்டிடுவதாய், மன்றிடை யியங்கி யியக்குவதாய், வரதசா கரமா யிருப்பதாய் நன்றினு நலஞ்சா லொன்றாய், நகுமொளிப் பிழம்பா கன்றாய், மாதவர் மாமகத்துவமாய், மறைமுடி வோதுதத் துவமாய், ஆகர வாம்பரப் பிரமமாய், ஆபத்திற்குதவோம் பிரமமாய், நிதெலாஞ் சித்தருண் முதலாய், நிருப்புகழ் தெரித்தான் றெய்வ மாய் வயங்கும் அவ் வொருதிருமுருகனெனிய செவ்வேட்பரமன் றிருவருட் டுணைகொண்டு ஒல்லுமாறு கடைப்பிடித்துய்க. ஓம்.

"குத்நிமண் ணடக்க மென்ப" என்று தகரவெதுகை கூறுமாற்றுனே குத்தி = மண்; இது, மண்ணுலகுக்கு இலக்கணை.

மைந்தர் = மாந்தர். 'கன்மைந்தர்' என்றதற்கு அவயவப் பழுதிலாது பிறந்த மாந்த ரென்று பொருள்கொள்க.

கொண்டு - மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு.

'கொடே' என்பதிற் கொடு - மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபின் றொகுத்தல்.

முல்லை = வெற்றி.

'புத்திக்கு' என்பதிலுள்ள நான்கனுருபு ஏழனுருபாய் மயங்கிற்று; "யாதனுருபிற் கூறிற் றியினும் பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்." என்பது விதி.

இடம், இடன் எனப் போலியாயிற்று.

சால - மிகுதியென்னு மொரு குணப்பொரு ளுணர்த்தும் உரிச்சொல்; சால் - வினைத் தொகை. (கo)

கடவுள் வணக்கமுட்பட

ஆகத் திருப்பா - நகூ.

இந் நாற்பத்து மூன்றற்கு முரிய

திட்ப மென்னுமுரை முற்றிற்று.

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
25	16	ஸுஹெதி	ஸுஹெதி
30	7	சுநஞாதி	சுநஞாதி
60	27	கூஷ்ணாண்ட - க்ருச்மாண்ட	கூஷ்மாண்ட - கூச்மாண்ட
96	9	விக்ரஹம்	விப்ரஹம்